சத்திய முழக்கத்தின் தினதியானம்

# விடியலுக்கு முன்பே...



சத்திய முழக்கம் ஊழியங்கள்

**Rev.S.A.சுந்தரராஜ்**

வேலூர் - 632 006.

சத்திய முழுக்கம் வெளியீடு

# விடியலுக்கு முன்பே...

(அதிகாலை தியானவேளை)

வசனம் இருக்கும் வேதப்பகுதியை
முழுமையாக வாசிக்கவும்.
மிக ஆழமாகச் சிந்திக்கவும்.
இது பிரசங்கக் குறிப்பல்ல.
ஆண்டவரின் பிரசன்னத்திற்குள்
இழுக்கும் ஓர் முயற்சி.

Rev. **S.A. SUNDARARAJ**

A.G.Church, Vellore 6

## பொழுது விடியபோகிறது...



*பறவைகளின் சத்தம்...*

*குளிர்ந்த தென்றல்...*

*தெருவில் காலை பணிக்குச்*
*செல்வோரின் இரு சக்கர*
*வண்டிச் சத்தம்...*

*சந்தைக்குச் செல்லும்*
*பெண்களின் வேக நடை....*

இவையெல்லாம் ஒரு புதுநாள் வருகைக்கு வரவேற்பு கூறுகின்றன.

ஏன்தான் பொழுது விடியுதோ என்று
கவலையோடு படுக்கையில் புரளும் சிலர்...

இன்று என்ன நடக்குமோ என்ற
கலக்கத்தோடு படுக்கையை விட்டு எழும் சிலர்...

இன்னும் கொஞ்ச நேரம் தூங்கலாம் என்று
போர்வைக்குள் மறையும் சிலர்...

இவர்களுக்கு மத்தியில்....

**காலமே தேவனைத் தேடு,**
**ஜீவக் காருண்யர் பாதம் பணிந்து மன்றாடு**

என்ற துதியோடு எழுந்திருக்கும் தேவப்பிள்ளைகளுக்கு எங்கள் அன்பின் அர்ப்பணம்...

உங்கள் சகோதரன்
**Rev. S.A. Sundararaj**

---

(குறிப்பு : தியானித்த வேத வசனம் இருக்கும் வேதப்பகுதி முழுவதையும் வாசிக்கவும்).

முதல் பதிப்பு : 2018

பிரதிகள் : 1000

Published by : **SATHTHIYA MULAKKAM MINISTRIES**
#58, II West Cross, West Gandhi Nagar,
Vellore - 632 006.

Printed by : Christian Print Media
Sivakasi.

Price : 150/-

இந்தப் புத்தகத்தின் எந்தப்பகுதியையும்
ஆசிரியரின் முன் அனுமதியின்றி
மறுபதிப்பு செய்யக்கூடாது.

# முன்னுரை

கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும் தகப்பன்மார் அநேகர் உங்களுக்குள் இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன். (1 கொரிந்தியர் 4:15)

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு கனமும் மகிமையும் உண்டாவதாக. நமது ஆவிக்குரிய தகப்பன், போதகர், **சங்கை S.A. சுந்தரராஜ்** அவர்களை நினைத்து உங்கள் யாவோரோடும் தேவாதி தேவனுக்கு துதியும், கனமும், மகிமையும் செலுத்துகிறேன்.

அதிகாலையில் பலி செலுத்த எழுந்த ஆபிரகாம் விசுவாசத்தை ஆசீராய் பெற்றார். அதிகாலையில் ஜெபம் செய்ய எழுந்த அன்னாள் தீர்க்கதரிசியை பிள்ளையாக பெற்றாள். அதிகாலையில் கர்த்தரை ஆராதிக்க எழுந்த தாவீது ஊழியத்தைக் கிருபையாக பெற்றார். இதோ நமது கரத்தில் வரும் இந்த தின தியான பொக்கிஷம் நமக்கு நமது தகப்பன் வழியாக தரப்பட்ட பரலோக ஆசீர்வாதம்.

இந்த தின தியானம், கர்த்தரின் கிருபாசனத்திலிருந்து, சிங்காசனத்துக்குரிய அதிகாரத்துடன், நமது ஆவிக்குரிய தகப்பனின் வேத உலைக்களத்திலிருந்து புறப்பட்ட பரலோக வெளிப்பாடுகள். தாறுமாறான மாறுபாடான பிழையான, நூதன, கள்ள, மாம்சீக கருத்துக்களால் நிலை தவறும் கிறிஸ்தவ திருச்சபை உலகைத் தூக்கி நிறுத்தும் நங்கூரம்.

பார்க்கும் திசையெல்லாம் பச்சைப்புல் என்று காணாமல் போகும் ஆடுகளையும், மாய உலகில் உள்ள செல்வமே உண்மை ஐஸ்வர்யம் என்று நம்பி காணாமல் போன கெட்ட குமாரனையும், எப்போதும் கற்றாலும் இன்னும் மனம் திருந்தாத மூத்த குமாரனையும் சரியான விசுவாச பாதையில் வழி நடத்தும் கர்த்தரின் கோலும் தடியும்.

பொய்யான ஒளியை நம்பி, பல்வேறு நம்பிக்கைகளில் நடக்கும் விசுவாச விழி இல்லாத இருளின் ஜனங்களை மெய்யான வழியில் நடக்க வீசும் மெய்யான ஒளி. கடவுள் நம்பிக்கை இல்லா நாத்திகனையும், கடவுளை அறிந்தும் அறிய மனதில்லா ஆத்திகனையும் சத்தியத்தை எதிர்த்து நிற்கும் விரோதியையும், இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்கு முன் முழங்காலிட வைக்கும் சத்திய முழக்கம்.

கருகலான வேத பகுதிகளுக்கு வெளிச்சம் காண முடியாமல் தவிக்கும் ஊழியர்களுக்கு நமது ஆவிக்குரிய தகப்பன் போதகர் சங்கை S.A. சுந்தரராஜ் அவர்கள் வழியாக தரப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்தும் அபிஷேகம்.

. உங்கள் யாவரோடும், இணைந்து நமது அன்பு போதகருக்காக கர்த்தரைத் துதித்து மகிழ்கிறேன். கர்த்தருடைய இருதயத்துக்கு ஏற்ற நமது மேய்ப்பன் போதகர் சங்கை S.A. சுந்தரராஜ் அவர்கள் நம்முடன் இல்லை. ஆனால் அவரைத் தந்த கர்த்தரும் அவரின் ஜீவனுள்ள வார்த்தையும் நமக்கு என்றும் உண்டு. அதனுடன் பகுத்தறிவு பாசறையிலிருந்து இரட்சிக்கப்பட்டு நமக்குப் பகுத்து போதித்த நமது ஆவிக்குரிய தகப்பனின் வேத விளக்க எழுத்துக்களும் உண்டு. தினமும் எழுவோம், வேதத்தை தியானிப்போம், கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்வோம்.

இந்த தின தியானம் எழுத்து வடிவில் நமது கரத்தில் தவழ எல்லா பிரயாசங்களை எடுத்த நமது போதகரின் பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினரை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

அன்புடன்

**ஜான் டி பிரிட்டோ**

தலைமைப் போதகர்

பெத்தேல் புதுவாழ்வு கிறிஸ்தவ ஐக்கியம்

மெல்போர்ன், ஆஸ்திரேலியா.

# நன்றி கூறுகிறோம்

விடியலுக்கு முன்பே....

இந்த தின தியான நூலைப்படைக்க, நம்முடைய போதகருக்கு ஆர்வமும் ஞானமும் தந்த கர்த்தருக்கு நன்றி கூறுகிறோம்.

இந்த நூலுக்கான எழுத்துப்படிவங்களை உருவாக்கவும், இந்த நூலுக்கு வடிவம் கொடுக்க மிகவும் உதவியாக இருந்த பாஸ்டர் சாம் நப்தலி அவர்களுக்கும் பாஸ்டர் சாத்ராக் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

இந்த நூலுக்கான எழுத்துப் படிவங்களை பிழை திருத்த மிக உதவியாக இருந்த சகோதரி அன்னாள் காமாட்சி, சகோதரி ரெஜி அமர்நாத், சகோதரி சாந்தி தேவி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

இந்நூலை மிக நேர்த்தியாக அச்சடித்துக் கொடுத்த சிவகாசி ஓசன்னா பிரிண்டர்ஸ்க்கும் பாராட்டும் நன்றியையும் தெரிவிக்கிறோம்.

இங்ஙனம்
சகோதரி **சுமதி கால்வெல்**
பதிப்பாசிரியர் : சத்திய முழக்கம்

**01**
**ஜனவரி**

# வெளியே ஓடாதே, உள்ளே நில்

"நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள்... இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும்." (2 இரா.3:17)

தேவ தண்டனையால் தேசம் மழையில்லாமல் பாழாயிற்று. மிருக ஜீவன்களுக்குக் குடிக்கக்கூட தண்ணீர் இல்லை. மனித இனமே மரணத்தை எதிர்நோக்கியிருந்த வேளை. எலிசா தேசம் தண்ணீரால் நிரம்பும் என்று கூறினான்.

தண்ணீர் வருவதற்கு எந்தச் சாத்தியக் கூறும் இல்லை. மனிதர்களும், மிருக ஜீவன்களும் ஒவ்வொன்றாய்ச் சாகும் நிலையில் இருந்தனர். ஆனாலும் தேவ மனிதன் மரணக் காட்சியின் மத்தியில் ஜீவத் தோற்றத்தைக் கண்டான். தேசம் தண்ணீரால் நிரம்புவதை அவனுடைய ஆவிக்குரிய கண்கள் கண்டன!

அவன் மழையையும், காற்றையும் காணவில்லை. ஆம்! மழை வருவதற்கான அடையாளங்களை அவன் காணவேயில்லை. ஆனாலும் விசுவாசக் கண்ணால் மழையைக் கண்டான். மழை பெய்யும் என்பது எலிசாவின் நம்பிக்கை மாத்திரம் அல்ல, கர்த்தரின் வெளிப்பாடு. அவன் மனம் விரும்பியதைச் சொல்லாமல், கர்த்தரின் வெளிப்பாட்டையே அவன் பிரகடனப்படுத்தினான்.

"வாய்க்கால்களை வெட்டுங்கள்" என்று விசுவாசக் கிரியைகளை எலிசா உற்சாகப்படுத்தினான். நாமும் அற்புதத்தை எதிர்பார்த்தால், நடக்கப் போகும் அற்புதத்திற்கு ஆயத்தமாக வேண்டும். மழை இல்லாத நாள்களில் வாய்க் கால்களை வெட்டுவது அறிவுக்குப் பொருந்தாது; தேவ ஞானத்திற்கு ஏற்றது.

எதை நாம் அற்புதம், பெரிய காரியம் என்று சொல்கிறோமோ அது கர்த்தரின் பார்வைக்கு அற்ப காரியம். ஆகவே ஜெபித்து தேவன் தரும் பதிலைப் பெற்று, விசுவாசத்தோடு ஆயத்தமாவோம். இந்தப் புதிய ஆண்டு, ஆசீர்வாதம் நிறைந்த ஆண்டாக இருக்க ஜெபிப்போம்! இதோ ஆசீர்வாத மழை பெய்யப் போகிறது.

**மழை வருமா என்று வானத்தை நோக்கிப் பார்க்காதே, கதவை அடைத்து உள்ளே நின்று தேவ சமுகத்தைப் பார்.**

# 02 ஜனவரி

## இருக்க வேண்டிய இடத்தில் இரு

"நிலத்தினுடைய சகலவிதச் செடிகளும் பூமியின்மேல் இன்னும் உண்டாகவில்லை,... ஏனெனில் தேவனாகிய கர்த்தர் பூமியின்மேல் இன்னும் மழையைப் பெய்யப்பண்ணவில்லை. நிலத்தைப் பண்படுத்த மனுஷனும் இருந்ததில்லை." (ஆதி.2:5)

ஆண்டவர் படைத்த உலகில் இன்னும் தாவரவர்க்கம் தோன்றாத ஓர் காலமும் இருந்தது. ஏனெனில் செடி, கொடி வளர மழை இன்னும் பெய்யவில்லை. ஏன் கடவுள் மழையைப் பெய்யப் பண்ணவில்லை? மழை பெய்தால் நிலம் சேறும் சகதியுமாக மாறிவிடும். இதனைத் தடுக்க நிலத்தைப் பண்படுத்த வேண்டும். ஆனால் நிலத்தைப் பண்படுத்த மனிதனில்லையே! மனிதன் இல்லாதபடியால், மழை பெய்யவில்லை.

உலகத்தில் கடவுளின் நோக்கம் நிறைவேறாததிற்கு மனிதனே காரணம். இருக்கவேண்டிய இடத்தில் இன்று மனிதன் இல்லையே. ஆகவே குடும்பத்தில், சமூகத்தில் ஆசீர்வாதமான மழைபெய்யவில்லை.

லோத்து இருக்க வேண்டிய இடம் கானான். ஆனால் அவன் இருந்த இடம் சோதோம். ஆகவே அவன் பிரச்சனைகளுக்குள் சிக்கிக் கொண்டான். தன் சுய இஷ்டக் கூடாரத்தை விட்டுப் பரதேசியாய் ஓட வேண்டியதாயிற்று. அவமானம், தனிமை, நஷ்டம் என்ற பெருவெள்ளத்தில் மூழ்கினான்.

தேவபிள்ளையே! தேவ சித்தம் உன்னை எங்கு நிலைவரப்படுத்தினதோ அங்கேயே தங்கியிரு. மாம்சீகம் உன் முன் காட்டும் வண்ணக் காட்சிகளை நம்பி, இடம் மாறிவிடாதே. அங்கேயே தங்கியிரு. கர்த்தர் காட்டிய இடம் உனக்கு வேதனைதரும் அலையாய் இருந்தால் நீ உன் மனவிருப்பப்படி தேடும் இடம் அக்கினி சூளையாய் மாறிவிடும்.

நீ இருக்க வேண்டிய இடத்தில் இல்லாதபடியால் உன்னிமித்தம் பெய்ய வேண்டிய ஆசீர்வாத மழை இன்னும் பெய்யவில்லை.

**தேவசித்தத்தில் தங்கியிரு**

03
ஜனவரி

# மூடுபனியில் திருப்தி அடையாதே

"அப்பொழுது மூடுபனி பூமியிலிருந்து எழும்பி, பூமியையெல்லாம் நனைத்தது." (ஆதி.2:6)

ஆதியில் மழை இல்லாதக் காலத்தில் மூடுபனி பூமியையெல்லாம் நனைத்தது. இந்த மூடுபனியினால் பூமியானது ஈரப்பதம் அடைந்தது. ஆனால் தாவரங்கள் வளரக்கூடிய அளவுக்கு மூடுபனியினால் பலனில்லை. செடி, கொடிகள் வளர்ந்து பூ பூத்து, காய்க் காய்க்க வேண்டுமெனில் நல்ல மழைப் பெய்ய வேண்டும். ஆனால் ஆதியிலே பூமியானது மூடுபனியினால் நனைந்தது. மழை பூமியில் பெய்யவில்லை பூமியானது வறண்டு போகாத ஒரு நிலைமையை மூடுபனி காத்தது என்பது உண்மைதான். ஆனால் இந்த மூடுபனி பூமியின் செழிப்புக்கும் வளத்துக்கும் போதுமானது அல்ல.

நம்முடைய ஆத்துமாவில் ஆவிக்குரிய மழை பெய்ய வேண்டும். அதாவது வேத வார்த்தைகளினாலே நம் ஆத்துமா நிறைந்திருக்க வேண்டும். தெய்வ பயம் என்ற உணர்வு மாத்திரம் மனிதனுடைய ஆத்துமாவை நிரப்புமானால் ஒருவேளை அவன் தீமைச் செய்யாமல் இருப்பான். ஆனால் தேவன் விரும்பும் நன்மைகளை அவன் செய்யமாட்டான். அதாவது கர்த்தருக்குள் அவன் வளராத மனிதனாகவே இருப்பான். இதுதான் மூடுபனியின் அனுபவம். வசன மழைக்கு பதிலாக தெய்வ பயம் என்ற உணர்வு மாத்திரம் ஒரு மனிதனுடைய ஆத்துமாவில் இருக்குமெனில் அந்த ஆத்துமா மூடுபனியினால் நனைந்திருக்கும். இந்த மூடுபனி அனுபவத்திலிருக்கிற ஆத்துமாக்கள் பிரச்சனை என்ற அனல் காற்று வீசும்போது வாடி வதங்கிவிடும்.

அர்ப்பணிப்பில்லாத வேத வாசிப்பு மூடுபனி அனுபவம். தேவ சித்தத்துக்கு ஒப்புக்கொடுக்காத சடங்காச்சார ஆராதனை, பழக்கத்தினாலே உண்டாகும் ஜெபம் இவையெல்லாம் மூடுபனியே.

சகோதரனே! சகோதரியே! மேலோட்டமான வேத வாசிப்பு, உன்னை ஒப்புக்கொடுக்காத ஆராதனைகள், இந்த மூடுபனியிலேயே உன் காலத்தைக் கழித்து விடாதே. ஆவியின் அபிஷேகத்தில் நிலைத்திருங்கள்.

**மூடுபனியல்ல, ஆவிக்குரிய மழை பெய்யட்டும்.**

04

ஜனவரி

# உலகம் உண்டாவதற்கு முன்பே நீ பிதாவின் தெரிந்தெடுப்பு!

"…. ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு…" (1 பேதுரு 1:2)

நாம் வாழும் பூமியும் நிலையானதல்ல; நாமும் இங்கே நிலையானவர்கள் அல்ல. நம் எல்லா மகிமையும், புகழும் கல்லறையோடு மறைந்துவிடும். உலகில் நினைவில் நிற்கும் மனிதர்களின் பெயர்களைத் தாங்கிவரும் புத்தகம் உண்மையில் மனிதர்களால் மறக்கப்பட்டவர்களின் வரலாறுகளின் தொகுப்பே.

இந்த உலகம் நமக்குச் சொந்தமானதல்ல; நாமும் இந்த உலகிற்குச் சொந்தமானவர்களல்ல. உலகிற்கு நாம் அன்னியர் என்பதை மறக்கவே கூடாது. நாம் பரதேசிகள் என்பதுதான் உண்மை.

ஆனால் நாம் காலத்தினாலே வாடிப்போகும் மலர்களோ, உடைந்து கலைந்து போகும் நீர்க்குமிழ்களோ அல்ல. கர்த்தருக்குள் நாம் நித்திய மலர்கள். பரலோகப் பூங்காவிற்குச் சொந்தமானவர்கள்.

இந்த உலகம் உண்டாவதற்கு முன்பே, நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் பிதாவின் அன்பினால் தெரிந்துக் கொள்ளப்பட்டிருக்கிறோம் (எபே.1:4). நாம் தற்செயலாய் கிறிஸ்துவுக்குள் வரவில்லை. உலகம் உண்டாவதற்கு முன்பே பிதாவின் உள்ளத்தில் நித்தியத்தில் இயேசு கிறிஸ்து சிலுவையலறையப்பட்டார். அவருடைய இரத்தம் உலகம் உருவாகு முன்பே சிந்தப்பட்டது. அந்தச் சிந்தப்பட்ட இரத்தத்திற்குள் நம்மைப் பிதாவானவர் தெரிந்துக் கொண்டார்.

இயேசு சிந்திய பாவப் பலியான இரத்தத்தை நாம் விசுவாசிக்க ஆவியானவர் உதவினார். தமது பரிசுத்த இரத்தத்தைச் சிந்தி இயேசு நம்மை மீட்டார். இயேசு மீட்டுக் கொண்ட அனைவரையும் பிதா ஆதியிலே தெரிந்துக் கொண்டார்.

**இந்த உலகில் நீ பரதேசி. உலகப் பிடிப்பிலே பரம தரிசனத்தை இழந்து விடாதே.**

**05**
**ஜனவரி**

# ஆவிக்குரிய பாதையில் முடமாக அமர்ந்துவிடாதே!

"முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்"
(எபிரேயர் 12:13)

வாழ்க்கையின் நெருக்கத்தினாலே மனம் சோரும்போது மனிதன் ஜெபத்தை நிறுத்திவிடுகிறான். அதாவது அவன் முழங்கால்களை முடக்கத் தவறிவிடுகிறான். கைகளை உயர்த்தி தேவனைத் துதிக்க மறந்துவிடுகிறான். இப்படி தேவ சமூகத்தில் சலனமின்றி அமர்ந்திருப்பவனே முடமான விசுவாசி. இவன் மேலும் மேலும் பெலவீனமடைந்து எழுந்து நடமாட முடியாதபடி அதாவது கிறிஸ்துவுக்குள் வாழ முடியாதபடி முழு முடமாதற்கு முன்பு அவன் குணமடைந்துவிட வேண்டும். அதற்கு என்ன வழி?

திடீரென்று நீ சந்தித்த தோல்வியோ, ஏமாற்றமோ, இழப்போ உன்னைத் துதிக்கவிடாமல் ஜெபிக்கவிடாமல் உன்னைச் சோர்வுறச் செய்திருக்கலாம். வழக்கமாக ஆரவாரமாக கைகளை உயர்த்தி துதிக்கும் நீ, உன் கைகளைத் தளரவிட்டிருப்பாய். ஜெபிக்காமல் அமர்ந்துவிட்ட உன் முழங்கால்கள் முடங்கிப் போயிருக்கும். சபையில் ஏற்கெனவே முடங்கிப்போனவர் உன்னைக் கண்டு மேலும் முடமாகிப் போவார். உன் பின்மாற்றம் அவனை முழு பெலவீனத்தில் தள்ளிவிடும். இந்த முடக்குவாதம் சீக்கிரத்தில் சபை முழுவதும் பரவிவிடும். ஆகவே நீ ஒன்று செய்யவேண்டும். அது என்னவெனில், "நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்த வேண்டும்" (எபி.12:12). இப்படி நீ உன் பின்மாற்றத்திலிருந்து விடுதலைப் பெறுவாயானால், அதாவது நீ திரும்பவும் துதிக்கவும் ஜெபிக்கவும் ஆரம்பிப்பாயானால் ஏற்கெனவே முடமாயிருக்கிறவன் உன்னிமித்தம் தைரியமடைந்து மீண்டும் தேவனை ஸ்தோத்தரிக்க ஜெபிக்க ஆரம்பிப்பான். முடமாயிருக்கிறவன் முற்றிலும் சொஸ்தமடைவான். தேவனும் உன் மேல் பிரியமாயிருப்பார்.

ஆகவே எந்தவிதத்திலும் எவருக்கும் இடறலாயிராதே. உன் பாதங்கள் கிறிஸ்துவுக்குள் முன்னேறிச் செல்லுமானால் மற்றவர்களுக்கு கிறிஸ்துவைப் பின்தொடர வழியை உண்டுபண்ணுகிறாய். நீ மீண்டும் கிறிஸ்துவுக்குள் எழுந்து உன் இலக்கை நோக்கி தொடர்ந்து போ.

**உன்னிமித்தம் கிறிஸ்துவுக்குள் அநேகர் வீரநடைப் போடுவார்கள்.**

06
ஜனவரி

# ஜெபத்தை உன் மனம் தூண்டக்கூடாது!

"பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத்தேயு 18:18)

நாம் ஜெபித்து பூமியிலே எவைகளைக் கட்டுகிறோமோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்படும். வியாதியை, வறுமையை, நஷ்டத்தை நாம் இயேசுவின் நாமத்தில் கட்டினால் பரலோகத்திலும் இவைகள் கட்டப்படும். ஆகவே உடனே நாம் வியாதியிலிருந்து வறுமையிலிருந்து நஷ்டத்திலிருந்து விடுதலைப் பெறுகிறோம் என்று, சிலர் பிரசங்கிக்கிறார்கள். கட்டவிழ்க்கும் முகாம் என்றும் பெரிய முகாமை நடத்துகின்றனர். முகாமை விட்டு வெளியே வருகிறவர்கள் தாங்கள் பெரிய விடுதலையைப் பெற்றவர்களைப் போல நம்பிக்கையோடு வருகிறார்கள். இந்த உபதேசம் சரிதானா?

நாம் பூமியில் எதைக் கட்டுகிறோமோ அதைப் பரலோகமும் கட்டினால் நம்முடைய சித்தம் பரலோகத்தில் நிறைவேற்றப்படுகிறது. ஆனால் ஆண்டவர் நமக்கு என்னக் கற்றுக்கொடுத்திருக்கிறார். "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று ஜெபிக்கும்படியே இயேசு நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறார். ஆகவே பூமிதான் பரலோகத்தைப் பின்பற்ற வேண்டுமே தவிர, பரலோகம் பூமியைப் பின்பற்றாது.

மேலும் வசனத்தை நன்றாக கவனிப்போமானால், கட்டப்படும் என்று அல்ல, கட்டப்பட்டிருக்கும் என்றே வேதம் சொல்லுகிறது (will be found bound). பிதா எதைச் செய்ய குமாரன் காண்கிறாரோ அதையே அவர் செய்கிறார். பரலோகத்தில் இயேசு எதைக் கட்டியிருக்கிறாரோ அதையே நாம் கட்டுகிறோம்.

ஆகவே நாம் ஜெபிக்கும்போது இயேசு எவைகளைக் கட்டினார் என்பதை அறிந்து அவைகளை நாம் பூமியிலே கட்ட வேண்டும். நம்முடைய இஷ்டம்போல கட்டவோ அவிழ்க்கவோ முடியாது. இயேசு எவைகளைக் கட்டுகிறார் என்பதை அறிய பிரகாசமுள்ள மனக் கண்களைத் தருவாராக. மாம்சீக உந்துதலினாலே ஜெப அறைக்குள் பிரவேசிக்காதே. ஆவியானவர் உன்னை ஜெப அறைக்குள் அழைத்துச் செல்லட்டும். அவரே உனக்கு ஜெப பாரத்தைத் தருவாராக.

**பிரச்சனைகள் உனக்கு ஜெப பாரத்தைத் தருமானால்**
**வீண் கவலைகள் உள்ளத்தில் குடியேறிவிடும்;**
**விசுவாசம் விடைபெற்றுக் கொள்ளும்.**

07

ஜனவரி

# ஆதியிலே தேவன்

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்." (ஆதி.1:1)

வேதத்தின் துவக்கமே, "ஆதியிலே தேவன்" என்பதே. இவ்வுலகின் துவக்கமே தேவனின் கரம் என்று வேதம் சொல்கிறது. காற்று, மழை, புயல், வெப்பம் இவைகளால் உலகம் நாளடைவில் மாற்றம் அடைந்தாலும், ஆதியில் உலகின் தோற்றத்திற்குக் காரணம் கடவுளே.

ஆதியிலே – துவக்கத்திலேயே கடவுளைத் தேடாவிட்டால் பாதியிலே பிரச்சனைகள் பூதகரமாக உருவாகிவிடும். ஆபத்து வரும்பொழுது மாத்திரம் ஆண்டவனை அலறி அடித்துக் கொண்டு தேடாதே. ஆரம்பத்திலே ஆண்டவரின் சித்தத்தைத் தேடியவர்கள், பிரச்சனைகள் எழுந்தால், ஆறஅமர சிந்தித்துச் செயற்படுவார்கள். கர்த்தரைத் தேடாதவர்கள், சூழ்நிலை மாற்றத்தில் கலங்கிப் போவார்கள்.

"ஆதியிலே தேவன்" என்பது வாழ்வின் இலக்கணமாய் இலக்காக இருக்கட்டும் எரிகோவின் வெற்றியின் ஆர்ப்பரிப்பில், ஆய் பட்டணத்தின் மீது படையெடுக்குமுன், "ஆதியிலே தேவன்" என்ற அனுபவத்தைத் தள்ளிவிட்டு, போர்க்களம் சென்ற யோசுவா தோல்விப் புழுதியில் விழுந்து அழுதான்; அரற்றினான். ஆதியிலே தேவனைத் தேடியிருந்தால் ஆகானின் வஞ்சகத்தை ஆண்டவர் வெளிப்படுத்தியிருப்பார், சாபத்தீட்டும் நீங்கியிருக்கும். இப்படி ஓர் தோல்வியைத் தேவமக்கள் சந்தித்திருக்கமாட்டார்கள், அவர்களின் இருதயம் கரைந்து தண்ணீராய்ப் போயிருக்காது.

ஆதியிலே ஆண்டவரின் ஆலோசனையை நாடு. கானாவூரின் கல்யாணவீட்டின் முதற் அழைப்பு இயேசுவுக்கு. இயேசுவை அழைத்த பின்னரும் பிரச்சனை வந்தது. ஆனால் ஆதியிலே அவர்கள் அழைத்த இயேசு பிரச்சனையில் புகலிடமானார். ஆகவே ஆதியிலே தேவன் என்பதே உங்கள் வாழ்க்கையின் அனுபவமாக இருக்கட்டும். ஆதியிலே மகிமையின் தேவன் ஆபிரகாமைச் சந்தித்தார். ஆகவே பின்நாள்களில் அவர் தேவனது மகிமையைக் கண்டார்.

பிரச்சனைகள் எழுந்தவுடன் மட்டும் கர்த்தரை நினைக்காதே. அமைதியான நேரமும், அவரிலே தொடங்கட்டும், கொந்தளிக்கும் சூழ்நிலைகள் அவருக்குள் அடங்கிவிடும்.

**துவக்கும் முன்பே தெய்வம் துணையாக இருக்கட்டும்!**

**08**
**ஜனவரி**

# ஆவிக்குள்ளானப் பார்வை

"ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான். ஏனெனில் அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்." (ஆதி.3:20)

பாவத்தில் விழுந்துபோன ஆதாமிற்கு கர்த்தர் மரண தண்டனை விதித்தார். "நீ மண்ணிலிருந்து எடுக்கப்பட்டாய், நீ மண்ணுக்கே திரும்புவாய்" என்று கர்த்தர் ஆதாமிற்குக் கட்டளையிட்டார். இந்தத் தீர்ப்பின்படி, ஆதாமின் வாரிசாகிய பின்வரும் மனுக்குலம் முழுவதும் மரணமடைந்து, முழு உலகமே கல்லறையாக மாறிவிடும் பரிதாபமான நிலையை ஆதாம் உணர்ந்தான். இந்தப் பரிதாபநிலையை உருவாக்கிய சாத்தானை அவன் எண்ணிப்பார்த்தான். உலகத்தை கல்லறையாக மாற்றிப் போட்ட அவனைக் குறித்து கடவுள் சொன்ன வார்த்தையை அவன் நினைவு கூர்ந்தான். "அவர் (ஸ்தீரியின் வித்து) உன் தலையை நசுக்குவார்; நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்று சாத்தானின் முடிவையும், ஸ்தீரியின் வித்தான கிறிஸ்துவின் வெற்றியையும் ஆதாம் கண்டான்.

கிறிஸ்துவுக்கு வெளியே முழு உலகத்தையும் ஆதாம் கல்லறைத் தோட்டமாகவே கண்டான். அவன் மனைவியை மரித்தோர்க்கெல்லாம் தாயாக – மரணத்தின் தாயாகவே அவன் கண்டிருக்க வேண்டும். ஆனால் ஆதாமாகிய தனக்குள் அனைவரும் மரித்தவர்களாயிருக்கக் காணவேண்டிய அவன், அவர்களெல்லாரையும் கிறிஸ்துவுக்குள் ஜீவனுள்ளவர்களாகக் கண்டான். ஆதாமுக்குள் மரிக்கிற யாவரும் கிறிஸ்துவுக்குள் உயிரோடே எழுந்திருப்பார்கள் என்ற மேன்மையான சத்தியத்தை ஏதேன் தோட்டத்திலேயே அவன் கற்றுக் கொண்டான். ஆகவே தன் மனைவியை ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயாகக் கண்டான்.

சகோதரனே! பிரச்சனையை உன் அனுபவக் கண்களால் நோக்காதே. கிறிஸ்துவுக்குள்ளாக அவைகளைப் பார். ஆதாம் தன் மாம்சீகக் கண்ணால் ஏவாளை மரித்தோருக்கெல்லாம் தாயாகக் கண்டிருக்க வேண்டும். ஆனால் ஸ்திரியின் வித்தான – சாத்தானின் தலையை நசுக்கும் கிறிஸ்துவுக்குள் அவளை ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயாகக் கண்டான். இந்த ஆவிக்குரிய பார்வை நமக்கு வேண்டும். கிறிஸ்துவுக்கு வெளியே உலாவும் கண்களை ஆவியானவர் சிறைபிடித்து, கிறிஸ்துவுக்குள் பார்க்கும்படி செய்வாராக! பிரகாசமான மனக்கண்களைத் தருவாராக!

**உன் ஆவிக்குரிய கண்கள் திறக்கும்படி ஜெபம்பண்ணு, அப்பொழுதுதான் திரைவிலகும்! சத்தியத்தை நீ காண்பாய்.**

**09**
**ஜனவரி**

# நீ எங்கே இருக்கிறாய்?

"அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார்." (ஆதி.3:9)

பாவம் செய்த ஆதாமைக் கர்த்தர் தேடினார். கீழ்ப்படியாத அவன் தன் வழியிலே போகட்டும் என்று கர்த்தர் அவனை விட்டுவிடவில்லை. ஆதாமே நீ என்ன செய்தாய்? ஏன் பழத்தைப் பறித்தாய்? என்ற ஆத்திரமானக் கேள்விகளோடு கர்த்தர் அவனைத் தேடவில்லை. மாறாக, "மகனே நீ எங்கே இருக்கிறாய்" என்று பாசமுள்ள ஓர் தகப்பனாகவே கடவுள் ஆதாமைத் தேடினார்.

பணத்தைத் திருடிவிட்டு தொலைதூரம் ஓடிப்போன மகனை எண்ணிப் பதறும் தகப்பன், "ஐயோ! என் பணத்தை அவன் என்ன செய்தானோ" என்றுக் கலங்குவதைப் பார்த்திருக்கிறோம். "ஐயோ என் மகனுக்கு என்ன நேர்ந்தது, அவன் எங்கே இருக்கிறான்" என்று பரிவுடன் தேடும் தகப்பனின் உள்ளத்தில் எழும் கேள்வியானது, "ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்" என்பது.

நீ என்ன செய்கிறாய்? நீ ஏன் இப்படி செய்தாய்? என்ற குற்ற விசாரணையில் ஆண்டவர் தன் ஆர்வத்தைக் காட்டவில்லை. ஆதாமே நீ எங்கேயிருக்கிறாய் என்று அவனைப் பற்றிய கரிசனையில் அவனைக் கர்த்தர் தேடுகிறார்.

சகோதரனே! நீ எங்கே இருக்கிறாய்? வீட்டிலே சிறைவைக்கப்பட்ட நிலையில், பவுல் சொல்கிறார், "நான் மனரம்மியத்தில் இருக்கிறேன்." நல்ல கனியும், மலர்களும் நிறைந்த தோட்டத்தில் வாழும் ஆதாம் சொல்கிறான், "நான் பயத்தில் இருக்கிறேன்; நிர்வாணத்தில் இருக்கிறேன்."

வெளிப்படையான சூழ்நிலைகள், சிறையாகவோ அல்லது மலர்ப் பூங்காவாகவோ எதுவாக இருக்கட்டும், உன் ஆத்துமா எங்கே இருக்கிறது?

**என் ஆத்துமா தேவசித்தத்தில் இருக்கிறது.**
**இதுவே உங்கள் நம்பிக்கையாகவும்,**
**அனுபவமாகவும் இருக்க வேண்டும்.**

10
ஜனவரி

# பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடு

"உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளப் போகிறதற்கு, நீங்கள் எந்த மட்டும் அசதியாயிருப்பீர்கள்."
(யோசு.18:3)

கடவுள் தந்த – கொடுத்துவிட்ட தேசத்தைச் சுதந்தரித்து தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள இஸ்ரவேலர் மனமற்றிருந்தனர். கடவுள் கொடுப்பார்; நாம்தான் கை நீட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். "தெய்வம் காட்டும் ஆனால் ஊட்டாது" என்று ஓர் பழமொழிகூட உண்டு. அதாவது ஆகாரம் எங்கே கிடைக்கும் என்றுதான் கடவுள் காட்டுவாரே தவிர, உணவைக் கையிலெடுத்து வாயில் ஊட்ட மாட்டார் என்பதே இந்தப் பழமொழியின் கருத்து.

இஸ்ரவேலரின் ஒரு கோத்திரத்தார் தேசத்தைச் சுதந்தரிக்காமல் அசதியாயிருந்து விட்டார்கள். முதலாவது இந்த அசதி யூதா, எப்பிராயீம் என்ற இரு கோத்திரங்களைப் பிடித்திருந்தது. அசதி என்ற இந்தத் தொத்து வியாதி மற்றக் கோத்திரங்களையும் பற்றிக் கொண்டது. ஆகவே யோசுவா அவர்களை எச்சரிக்கின்றார். இன்றும்கூட கர்த்தரின் வாக்குத்தத்தங்களை சுதந்தரிக்க நாம் அசதியாய் சோம்பலாய் இருக்கின்றோம். ஆகவே தேவனது வாக்குத்தத்தங்கள் நம்மில் நிறைவேறாமலிருக்கிறது. நாமும் நம் தப்பிதத்தை உணராது கடவுள் மீதே கசப்பு கொள்கிறோம்.

இஸ்ரவேலர் அசதியாயிருந்தபடியால், அன்னியர்களின் படையெடுப்புக்குள் அகப்பட்டு வேதனையடைந்தார்கள். விக்கிரக ஆராதனைக்காரரோடு ஐக்கியப்பட்டு, நாடு கேவலமான நிலையை அடைந்தது. வாக்குத்தத்தத்தைச் சுதந்தரிக்காத நம்மையும் எதிர் வல்லமைகள் கடுமையாகப் பட்சிக்கின்றன. நம் விசுவாசமும், பரிசுத்தமும் கேள்விக்குறியாக மாறிவிடுகின்றன.

ஆகவே வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொண்டு "கர்த்தாவே! இயேசுவே!! என்னை நீர் ஆசீர்வதித்தாலொழிய உம்மை போகவிடேன்" என்று யாக்கோபைப் போல, ஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்க வேண்டும். இல்லையெனில் பெறவேண்டிய ஆசீர்வாதத்தையும் பெறாமல், உள்ள விசுவாசத்தையும், தேவ சமாதானத்தையும் இழந்துவிடுவோம். ஆகவே அசதியாயிராதீர்கள். நிற்காதீர்கள்! பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்.

**அசமந்தம் அழிவுக்கு தலைவாசல், தரித்திரத்திற்குப் படிக்கட்டு, சஞ்சலப்பள்ளத்தாக்கின் சரிவுப்பாதை.**

11
ஜனவரி

# உன் ஆத்துமா அமர்ந்திருக்கட்டும்

"இரண்டு பொதிமண் உமது அடியேனுக்குக் கட்டளையிட வேண்டும் இனி கர்த்தருக்கே அல்லாமல் அந்நிய தேவர்களுக்கு.... பலி செலுத்துவதில்லை...." (2 இரா.5:17)

சீரியா தேசத்து நாகமான் தான் சுகமானவுடன் ஒரு ஆழமான தீர்மானத்துக்குள் வருகிறான். இஸ்ரவேலின் தேவனைத் தவிர வேறு தேவனே இல்லையென்று விசுவாச அறிக்கை செய்கிறான். இதுவரைக்கும் தான் ஆராதித்து வந்த ரிம்மோனை தன் இருதயத்தை விட்டு தூக்கியெறிந்தான். இனி அந்த தெய்வத்துக்கு பலியிடப் போவது இல்லை என்ற தீர்மானத்துக்கு வந்தான். இரட்சிக்கப்பட்டவுடன் விக்கிரகத்தைவிட்டு விலகுவது மேன்மையானக் காரியமாயிருந்தாலும் அப்படி விலகுவது மட்டும் போதாது, தான் புதிதாக அறிந்த ஜீவனுள்ள தேவனிடத்தில் உள்ள நம்பிக்கையில் வளர வேண்டும்.

நாகமான் எலிசாவிடம் யோர்தான் நதிக்கரையிலுள்ள மணலில் இரண்டு கழுதைகள் சுமக்கத்தக்கதை – அதாவது இரண்டு பொதி மண்ணை சீரியாவுக்கு எடுத்துச் செல்ல விரும்பினான். சீரியாவிலுள்ள ரிம்மோன் வழிபாடு மற்றுமுள்ள திருவிழாக்கள், சமய கொண்டாட்டங்கள் இஸ்ரவேலின் தேவனை வணங்குவதற்கு தடையாயிருக்கும். ஏனெனில் சீரியாவின் மத நம்பிக்கைகள் நாகமானுடைய மன அமைதியை கெடுத்துவிடும். தான் கொண்டு போகும் இந்த மண்ணினாலே ஒரு பலிபீடம் கட்டி மீதி மணலைத் தரையிலே பரப்பி அந்த மணல்மேல் முழங்காலில் நிற்கும்போது தான் இஸ்ரவேலில் இருப்பதாக உணருவான். இந்த மனநிலை அல்லது உணர்வு அவன் கர்த்தரை வழிபட உதவியாயிருக்கும்.

வியாதி, வறுமை, போராட்டங்கள், எதிர்ப்புகள் இப்படிப்பட்ட சத்தத்தின் மத்தியில் கர்த்தரை தொழுதுகொள்வது கஷ்டமான காரியம். பல்வேறு சத்தத்தால் மனம் அலக்கழிக்கப்பட்டு விடும். ஆனால் ஒருவன் தன் ஆத்துமாவில் வாக்குத்தத்தங்களையும், வேதவார்த்தைகளையும் பரப்பி இந்த மனரம்மியமான நிலையில் ஜெபம் பண்ணினால் அது வெற்றியுள்ள ஜெபமாய் முடியும். நாகமான் பரப்பிய யோர்தான் மணல் சீரியா தேசத்தை மறக்கச் செய்ததுபோல, நம் ஆத்துமாவில் நாம் பரப்பி வைக்கும் வேத எழுத்துக்கள் கடும் பிரச்சனைகளை மறக்கச் செய்யும். நம் மனதை ரம்மியமாக வைத்துக்கொள்ள வேண்டும். உலகில் ஆரவாரமான சத்தங்களின் மத்தியில் உன் இதயம் சமாதானம் அடையாவிட்டால் உன்னால் ஜெபிக்கவே முடியாது.

**ஜெபம் பண்ணுவதற்கு முன்பு உன் ஆத்துமாவை அமைதிப்படுத்து. இதயத்தை தேவ வார்த்தையால் நிரப்பு.**

12

ஜனவரி

# கர்த்தருக்கு பயந்து உலகில் தைரியமாயிரு!

"...இப்படி ரிம்மோன் கோவிலில் நான் பணியவேண்டிய இந்தக் காரியத்தைக் கர்த்தர் உமது அடியேனுக்கு மன்னிப்பாராக என்றான்." (2 இரா.5:18)

கர்த்தரின் வல்லமையினால் சுகமான நாகமான் இஸ்ரவேலின் தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை பறைசாற்றி தன் தாய் நாட்டுக்குத் திரும்பும் நிலையிலிருக்கிறான். தன் தாய் நாட்டில் தன்னுடைய புதிய விசுவாசத்துக்கு ஒரு கடும் சோதனை இருப்பதை உணருகிறான். அதாவது தளபதியான நாகமான், சீரியாவின் ராஜா ரிம்மோன் கோயிலில் பணியும் பொழுது அவருக்கு கைலாகு கொடுக்க வேண்டும். அந்தச் சமயத்தில் ராஜாவோடு சேர்ந்து நாகமானும் ரிம்மோனுக்கு முன்பு பணிய வேண்டியதிருக்கும். இது இஸ்ரவேலின் தேவனுக்கு விரோதமான செயல் அல்லவா என்று உணர்ந்தான். ரிம்மோன் கோயிலில் பணிய மறுத்தால் ராஜாவின் கோபத்தைச் சந்திக்க நேரிடும் ஒருவேளை வேலைவாய்ப்பையும் இழந்துவிடலாம். இந்த நெருக்கடியான நிலையில் எலிசாவை நோக்கி தான் பணிய வேண்டிய இந்தக் காரியத்தில் கர்த்தர் மன்னிக்க வேண்டும் என்று வேண்டுகிறான்.

இரட்சிக்கப்பட்ட புது விசுவாசியும் இப்படிப்பட்ட பிரச்சனைகளைச் சந்திக்கிறார். இந்து குடும்பத்திலிருந்து இரட்சிக்கப்பட்டால் குடும்பத்தின் விக்கிரக வழிபாட்டில் பங்கெடுக்க வேண்டுமே என்று சிந்திக்கிறார். விசுவாசி இந்து மதத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட பெண்ணாக இருந்தால், குடும்பத்தோடு கோயில் குளம் போக வேண்டுமே, பொட்டு வைக்க வேண்டுமே என்று சஞ்சலப்படுகிறாள். கர்த்தருக்கு உண்மையாயிருப்பதா, குடும்பத்துக்கு உண்மையாயிருப்பதா என்ற இந்தப் போராட்டத்தில் விசுவாசிகள் இருக்கிறார்கள். தான் பொட்டு வைக்க வேண்டுமே என்பதற்காக ஞானஸ்நானம் எடுக்க தயங்குகிறார்கள். இதே மனநிலையில்தான் நாகமான் இருந்தான். ஒரு சரியான பதிலைப் பெற எலிசாவை அணுகினான். எலிசா அவனுக்கு சொன்ன பதில்: "சமாதானத்தோடே போ" என்பதே. இதன் அர்த்தம் என்ன? இவ்விஷயத்திலே எந்த மனக்குழப்பமும் அடைய வேண்டாம். நீ சமாதானமாகவே உன் தாய் நாட்டுக்குப்போ. உன் சமாதானம் காக்கப்படும். நீ கலங்கி தவிக்க வேண்டிய சூழ்நிலையை கர்த்தர் தவிர்ப்பார் என்பதே. புதிய விசுவாசிகள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய வார்த்தைகளை நிறைவேற்றிய பிறகு வீட்டில் என்ன நடக்குமோ என்று பயப்படாமல் கர்த்தரை நம்பி வீட்டுக்குத் திரும்ப வேண்டும். நாகமானின் சமாதானத்தைக் காத்த தேவன் இவர்களுடைய சமாதானத்தையும் காப்பார். உனக்கு எதிராக எழும்பும் சூழ்நிலைகள் வலுவிழந்துப் போகும். தைரியமாயிரு!

**கர்த்தருக்கு பயப்படும் பயம்**
**உன்னை எந்தச் சூழ்நிலையிலும் வீரனாக்கும்.**

13
ஜனவரி

# குறையும்பொழுதே அவரிடம் வா

"திராட்சரசங் குறைவுபட்ட போது, இயேசுவின் தாய் அவரை நோக்கி, அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள்." (யோவான் 2:3)

நமது ஆண்டவராகிய இயேசு ஓர் திருமணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். அவர் அந்த வீட்டிற்கு வந்திருந்தபோதிலும், அங்கு ஓர் பிரச்சனை ஏற்பட்டது. திராட்சரசம் குறைவுபட்டு, மணமகனுக்கு அவப்பெயர் ஏற்படும் சூழ்நிலை இருந்தது. கிறிஸ்தவ வாழ்க்கை பிரச்சனை இல்லாத எளிய வாழ்க்கை இல்லை. ஆனால் அந்தப் பிரச்சனையைத் தீர்க்க வல்லவர் நம்மோடு இருக்கிறார். அந்தப் பிரச்சனை உடனடியாக இயேசுவுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆம் எந்தக் குறைபாட்டையும், நெருக்கத்தையும் நாம் உடனே, காலம் தாழ்த்தாமல் இயேசுவிடம் கொண்டுவரவேண்டும்.

திராட்சரசம் இல்லை என்பது உண்மை. ஆனால் மரியாள் அந்தக் குறைபாட்டை வேறுயாருக்கும் சொல்லாமல், இயேசுவிடம் மட்டும் சொன்னாள். இன்று பலர் மற்றவர்களிடத்தில் ஓர் குறையைக் கண்டால் எல்லோரிடமும் அந்தக் குறையைச் சொல்கிறார்கள். தாங்கள் பொய்யொன்றும் சொல்லவில்லையே, உண்மையைத் தானே சொன்னோம் என்று தங்கள் செயலை நியாயப்படுத்துகிறார்கள். இன்னும் சிலர் ஜெபத்துக்காகச் சொன்னோம் என்று ஜெபப் போர்வைக்குள் மற்றவர்களைத் தூற்றித் திரிகிறார்கள். மரியாளோ வேறு எவரிடமும் அதைப்பற்றிப் பேசாமல் இயேசுவிடம் மாத்திரம் சொன்னாள்.

திராட்சரசங் குறைவுப்பட்டபொழுது, மரியாள் இயேசுவை நோக்கி வந்தாள். ஆனால் இயேசுவிடம் வந்த பொழுது, அங்கு திராட்சரசம் இல்லை என்ற நிலைமை உண்டாயிருந்தது. ஆகவே குடும்பத்தில் சமாதானம் குறைவுபடும் பொழுதே அதைச் சரி செய்ய வேண்டும். இல்லையெனில், சீக்கிரம் சமாதானமே இல்லை என்ற பரிதாபமான நிலை உண்டாகிவிடும். ஆகவே நாம் துரிதமாய்ச் செயற்பட வேண்டும்.

மரியாள் வேறு ஒருவரிடம், "ரசம் இல்லை" என்று சொல்லி அனுப்பவில்லை. இயேசுவிடம் நேரிடையாகவே மரியாள் சொன்னார். நீங்களும் ஜெபக்குறிப்புகளை மற்றவர்களுக்கு அனுப்பிவிட்டு, நீங்கள் அமைதியாயிருந்து விடாதீர்கள். ஜெபம் பண்ணுங்கள். இயேசுவுக்கு நீங்களே தெரியப்படுத்துங்கள். எந்தக் குறையையும் உடனே நமது ஆண்டவருக்குத் தெரியப்படுத்துங்கள்.

**கிள்ளி எறியவேண்டிய எளிய காரியத்தை கோடாரி கொண்டு வெட்ட வேண்டியக் காரியமாக மாற்றிவிடாதீர்கள்.**

**14**
**ஜனவரி**

# அவர் வேளை

"அதற்கு இயேசு: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார்."

(யோவான் 2:4)

தாயையும், தகப்பனையும் கனம் பண்ணுவாயாக என்று நமக்குக் கற்பித்த நமது ஆண்டவர், தன் தாயாரைப் பார்த்து ஸ்திரீயே என்று அந்நியப் பெண்ணைக் கூப்பிடுவதுபோல், கூப்பிட்டது ஆச்சரியமாக இருக்கிறதா? ஸ்திரீயே (பெண்ணே) என்பது கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பு. இது மரியாதைக் குறைவான சொல் அல்ல. "அம்மா" என்று பொதுவாக எந்தப் பெண்ணையும் அழைக்கும் சொல்லினாலேயே இயேசு தம் அம்மாவை அழைத்தார்.

தாயே என்ற உறவுச் சொல்லை அவர் தவிர்த்தது காரணத்தோடுதான். இந்தத் திருமணவீட்டில் இயேசு செய்ய விரும்பியது அற்புதம். அற்புதம் செய்வது மேசியாவின் அழைப்பு. இந்த அழைப்பை நிறைவேற்றுவதில், எந்த மாம்சீக உறவுக்கும் இடமில்லை. தாய், மகன் என்ற உறவில் எந்த அற்புதத்தையும் செய்வது மேசியாவான இயேசுவுக்கு ஏற்றதல்ல. பிதாவின் கட்டளையின்படிதான் இயேசு செயற்பட வேண்டுமே தவிர, தன் தாய் சொன்னதிற்காகத் தெய்வீகக் காரியங்களை இயேசு நடப்பிக்க முடியாது. ஆகவே, "ஸ்திரீயே" என்று அழைத்தார்.

இதை மனதில் வைத்துக் கொண்டுதான் "உனக்கும் எனக்கும் என்ன" என்று இயேசு தன் தாயிடம் கேட்டார். அந்தத் திருமண வீடு மரியாளை இயேசுவின் தாயார் என்றே அங்கீகரித்திருந்தது. ஆகவே இயேசு தான் மரியாளின் மகனாக செயற்படும் காலம் முடிந்து, பிதாவின் மைந்தனாக செயற்படும் வேளைக்கு அவர் ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். ஆகவே அற்புதம் செய்யும் வேளை இன்னும் வரவில்லை என்று சொன்னார்.

அற்புதத்தை எதிர்பார்க்கும் நாமும், இயேசுவின் வேளைக்காகக் காத்திருக்க வேண்டும். நமது வேளையிலே எல்லாம் நடக்க வேண்டும் என்ற பிடிவாதம் பிடிக்கக் கூடாது. அவரது சித்தத்தின்படி, அவரது வேளையில் அற்புதம் நடப்பதுதான் நமக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருக்கும். கர்த்தரின் வேளையில் ஆனால் மனித எதிர்ப்பார்ப்பின்படி மிக பிந்திய வேளையாயிருந்தாலும், அன்னாள் ஓர் ஆண்மகனைப் பெற்றதால்தான் இஸ்ரவேலுக்கு சரியான நேரத்தில் ஓர் தீர்க்கதரிசி கிடைத்தார். தேவபிள்ளையே! ஆத்திரப்படாதே அவர் வேளைக்குக் காத்திரு.

**உன் வேளை கதவைத் திறக்கும்,**
**அவர் வேளையில் வழி பிறக்கும்.**

15
ஜனவரி

## அமர்ந்திரு

"அமரிக்கையும், நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும்." (ஏசா.30:15)

நம்மில் நம்பிக்கையில்லாதவர் ஒருவருமில்லை. இயேசுவின் சிலுவைப் பலி, அதனால் ஏற்படும் நமது இரட்சிப்பு, கிறிஸ்து இயேசுவின் இரண்டாம் வருகை - இவையெல்லாவற்றையும் உறுதியாக நம்புகிறோம். இன்று கர்த்தர் வரவில்லையாகையால், இனி அவர் வரவேமாட்டார் என்று நம்பிக்கையை இழக்க மாட்டோம், வரவில்லையே என்று பதறிவிடமாட்டோம்.

ஆனால் நம் சொந்த வாழ்க்கையில் கர்த்தர் ஓர் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று காத்திருக்கும்பொழுது, நாம் நம்பிக்கையை இழக்காவிட்டாலும் நாம் பதறிவிடுகிறோம். ஆம்! அமரிக்கையாயிருக்கத் தவறிவிடுகிறோம். விசுவாசி பதறான் என்று வேதம் சொல்கிறது. ஆகவே நாம் அமரிக்கையாய் இராவிட்டால் நம்முடைய நம்பிக்கைக்கு அர்த்தமே இல்லை.

காலையில் ஜெபித்து நம் பிள்ளைகளைக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கிறோம். சாலை விபத்துக்கள் மிகுந்த உலகில், நமது பிள்ளைகள் பத்திரமாக வீடு வந்து சேரவேண்டுமே என்று பாரம் அடைகிறோம். நியாயமான பாரம். உடனே நாம் என்ன செய்யவேண்டும்? அவர்களை ஜெபத்தோடு வெளியே அனுப்பவேண்டும். அதைத்தான் காலையில் செய்தோம். மாலை மணி 6-க்கு மேல் கடந்து போகிறது; மகள் இன்னும் வீட்டிற்கு வரவில்லை. அவள் வருவாள் என்ற நம்பிக்கையை நாம் இழக்கவில்லை. ஆனாலும் இருதயம் பதறுகிறது. "வழியில் ஏதேனும் ஆபத்து... இல்லை இல்லை அப்படியெல்லாம் நடந்திருக்காது... ஐயோ ஏன் இன்னும் வரவில்லை" இப்படி இதயம் அமரிக்கையாயிராமல் பதறி துடிக்கிறது. இது நல்லது அல்ல.

காலையில் ஜெபிக்கும் பொழுது நமக்குள் ஏற்பட்ட நம்பிக்கையை ஏன் தளரவிட்டீர்கள்? ஜெபித்தபின் ஏன் கலங்கித் தவிக்கிறீர்கள்? இப்படி அமரிக்கையாயிராதபடியால் உங்கள் ஆத்துமா கர்த்தரின் சமுகத்து ஆறுதலை இழந்துவிடும். உங்கள் சரீரம் வியாதிப்பட்டு, இரத்த அழுத்தம், மனஉளைச்சல் போன்ற பல்வேறு வியாதிகளால், காலம் வருமுன் உலகத்தைவிட்டு விடை பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். எல்லா சூழ்நிலைகளிலும் அசையாமல் நம்பிக்கையோடிருங்கள்.

**எதிர் காற்று வீசட்டும், ஆனால் ஆத்துமா கர்த்தருக்கு விரோதமாக எதிர்த்து எழக்கூடாது.**

16
ஜனவரி

# இதயத்தைக் கவனி

"நீ என்னத்தைக் காண்கிறாய் என்று கேட்டார்; வாதுமை மரத்தின் கிளையைக் காண்கிறேன் என்றேன்... கர்த்தர்: என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன் என்றார்."
(எரே.1:11,12)

வாதுமை என்ற வார்த்தைக்கு எபிரேய மொழியில் துளிர் அல்லது விழித்தெழு என்று அர்த்தம். இஸ்ரவேலில் குளிர்காலம் முடிந்தவுடன் மரங்கள் துளிர்க்க ஆரம்பிக்கும். எரேமியா தான் வாதுமை மரத்தின் கிளையைக் காண்கிறேன் என்று சொல்வதிலிருந்து, வாதுமை மரம் துளிர்விட ஆரம்பிக்கிறது என்று அறிந்துக் கொள்கிறோம். இஸ்ரவேலில் குளிர்காலத்திற்குப் பிறகு முதலாவது துளிர்ப்பது வாதுமை மரம். இது செழுமையான காலம் ஆரம்பிக்கிறதற்கு அடையாளம். ஜனவரி மாதம் வாதுமை மரம் பூக்கும், பிப்ரவரி மாதம் கனி தரும்! வளமான வாழ்க்கையின் ஆரம்ப அடையாளம் தான் துளிர்க்கும் வாதுமைகிளை.

எரேமியா வாதுமை மரம் துளிர்விடுவதை, பூப்பதை கவனித்த பொழுது சீக்கிரம் மரம் கனி கொடுக்கப்போகிறது என்று தெரிவிப்பது போன்று, கர்த்தரும் இஸ்ரவேல் மக்களின் மனம்திரும்புதல், கனி கொடுத்தல் இவற்றைக் கவனித்துதான் தன் வார்த்தையைத் துளிர்க்கப் பண்ணுவார். இஸ்ரவேல் கர்த்தரை நோக்கித் துளிர்விடுமானால், தன் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார். பாவத்தை நோக்கி இஸ்ரவேல் துளிர்க்குமானால் தன் எச்சரிப்பின் வார்த்தைகளை கடவுள் நிறைவேற்றுவார்.

உங்கள் வாழ்க்கையில் கர்த்தர் தன் வார்த்தைகளை நிறைவேற்றுகிறாரா? நிறைவேற்ற வாஞ்சையுடன் இருக்கும் கர்த்தர் உன் ஆத்துமா துளிர்க்கிறதைக் கவனிக்கிறார். இந்த ஆரம்பத்தைக் கண்ட கர்த்தர் ஆசீர்வாதமான வார்த்தைகளை உன் வாழ்க்கையில் நிறைவேற்றுவார். வாதுமை மரம் துளிர்த்தால் இஸ்ரவேலின் ஆசீர்வாதமானக் காலம் துவங்குகிறது என்று அர்த்தம். உங்கள் ஆத்துமா துளிர்த்தால் எல்லாவற்றிலும் நீங்கள் வாழ்ந்து சுகமாயிருப்பீர்கள். ஆகவே எரேமியா மரங்களைக் கவனித்தது போல நீங்களும் உங்கள் சிந்தனைகளை, செயல்களைக் கவனியுங்கள். அவற்றில் இரட்சிப்பின் துளிரைக் காண்கிறீர்களா? விசுவாசம் உங்கள் ஆத்துமாவில் அரும்புகிறதா? நம்பிக்கை மலர்கிறதா? ஆசீர்வாதத்தின் காலம் துவங்கிவிட்டது என்ற அர்த்தம். ஆசீர்வாதம் வரவேண்டும் என்று வழிமேல் விழிவைத்துக் காத்திராதே. உன் விழி திறந்து உன் இதயத்தைக் கவனி.

**நற்சிந்தனைகள் துளிர்விடுவதாக;**
**சீக்கிரம் வெற்றிக்கனி உருவாகும்.**

**17**
**ஜனவரி**

# சமமாக நேசி

"அந்த அங்கியை இரத்தத்திலே தோய்த்து, பலவருணமான அந்த அங்கியைத் தங்கள் தகப்பனிடத்துக்கு அனுப்பி..." (ஆதி.37:31,32)

யாக்கோபிற்கு பன்னிரெண்டு குமாரர்கள் இருந்தனர். ஆனாலும் அவன் மிகவும் நேசித்த ராகேலின் மகனான யோசேப்பை மிகவும் நேசித்தான். இந்த நேசத்தை வெளிப்படுத்தும் பொருட்டு ஓர் பலவருணமான அங்கியைத் தரிப்பித்திருந்தான். பெற்றோர்கள் தங்களுடைய எல்லா பிள்ளைகளையும் சமமாகவே நேசிக்க வேண்டும். பெற்றோரின் பாரபட்சம் பிள்ளைகளுக்குக் கண்ணியாக மாறிவிடும்.

யோசேப்பின் பலவருணமான அங்கி, "நான் என் தகப்பனுக்கு அருமையானவன்" என்ற செய்தியைப் பரப்பிக் கொண்டிருந்தது. "அப்பாவின் கண்மணி" என்றே யோசேப்பு வீட்டில், தெருக்களில், வயல்வெளிகளில் நடமாடிக் கொண்டிருந்தான். யோசேப்பைத் தங்கள் தகப்பன் அதிகமாக நேசிக்கிறதை, அவன் சகோதரர்கள் கண்டு அவனைப் பகைத்தார்கள். தகப்பனின் பாரபட்சம் பிள்ளைகளின் இதயத்தில் பொறாமைத் தீயை வளர்த்தது.

பாரபட்சமாயிருந்தது யாக்கோபின் தவறு. தமது பன்னிரெண்டு சீடர்களுக்கு வித்தியாசமானப் பொறுப்புகளை இயேசு கிறிஸ்து கொடுத்தாலும், மூன்று பேருக்கு மிகமுக்கிய இடங்களை அவர் கொடுத்தாலும், அனைவரையும் அவர் ஒரே அளவில்தான் நேசித்தார். தன்னைக் காட்டிக் கொடுக்கப்போகும் யூதாசையும், சிநேகிதனே என்றுதான் அழைத்தார்; நேசித்தார். அவரிடம் பட்சபாதமே இல்லை.

இன்று குடும்பங்களில் அப்பா செல்லம், அம்மா செல்லம் என்று வேறுபடுத்தி, பட்சபாதமாய் நடத்துகின்றனர். இதனால் பிள்ளைகளுக்கிடையே சண்டை, சச்சரவுகள் ஏற்பட பெற்றோர்களே காரணமாகிவிடுகின்றனர். ஈசாக்கு ஏசாவையும், ரெபெக்காள் யாக்கோபையும் நேசித்தபடியால், பிள்ளைகள் இருவருமே பகைவர்களாக மாறிவிட்டனர்.

யாக்கோபின் தவறுதான் இந்த பலவருணமான அங்கி. தன் மாம்சீக அன்பினால் அதனை யோசேப்பிற்குத் தரிப்பித்தான். அந்த அங்கி, இப்பொழுது கிழிந்து, இரத்தக் கறையோடு யாக்கோபின் மடியில் வந்து விழுந்தது!

**அனைவரையும் சமமாக நேசி.**

18
ஜனவரி

## காட்சி அல்ல, தேவனது சாட்சியே

"நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன்." (ஆதி.37:35)

இரத்தம் தோய்ந்த தன் மகனின் அங்கியைக் கண்ட யாக்கோபு மிக சீக்கிரமாய், தன் மகன் யோசேப்பு பீறுண்டு போனான் என்ற முடிவுக்கு வந்தான். எதிரிடையான சூழ்நிலை யாக்கோபை அலைக்கழித்தது. தன் மகன் துஷ்ட மிருகங்களினால் கொல்லப்பட்டிருப்பான் என்ற தவறான முடிவுக்கு யாக்கோபு வந்தான்.

இந்த முடிவு அவனுடைய சந்தோஷத்தைச் சிதைத்தது. தான் சாகுமட்டும் ஆறுதல் அடையப் போவதுமில்லை என்று சொல்லி கதறி அழுதுக் கொண்டேயிருந்தான். மகனின் இரத்தம் தோய்ந்த அங்கியைப் பார்த்து தன் மகனின் சரீரம் கிழிக்கப்பட்டு மரித்துப் போனான் என்று அவன் நம்பினான். தன் மகன் யோசேப்பைக் குறித்து தேவனுடைய திட்டத்தை அறிந்திருந்தும், அந்த அங்கியைப் பார்த்ததும் தனக்குக் கிடைத்த வெளிப்பாட்டை மறந்துபோனான்.

தன்னுடைய பன்னிரெண்டு பிள்ளைகளிலும் யோசேப்பு மிகவும் ஆசீர்வாதமாக இருப்பான் என்ற வெளிப்பாட்டை யாக்கோபு பெற்றிருந்தான். யோசேப்பு மிகவும் உயர்ந்த நிலையில் வைக்கப்படுவதை அறிந்த யாக்கோபு, அந்தத் தரிசனத்தை, சொப்பனத்தை தன் மனதிலே வைத்துக்கொண்டான் (ஆதி.37:11) தன் மனதில் வைத்த தேவ தரிசனத்தை வாக்குத்தத்தத்தை அவனால் தக்க வைக்க முடியாததற்குக் காரணம், அவன் கண்ட அங்கியே!

அந்த அங்கி யோசேப்பின் அங்கிதான்; ஆனால் இரத்தம் வெள்ளாட்டுக் கடாவின் இரத்தம்; யோசேப்பின் இரத்தம் அல்ல. தோற்றத்தைக் கண்டு யாக்கோபு ஏமாந்து போனான். இந்தத் தோற்றம் அவன் மனதில் பதித்திருந்த தரிசனத்தை மறைத்தது! உண்மையில் யோசேப்பு மரிக்கவில்லையே! அவன் பீறுண்டுப் போகவில்லை, தன் தரிசனத்தின்படி நாட்டை ஆளும்படி உயர்த்தப்பட்டான். யாக்கோபு கண்ணீரோடே பாதாளத்தில் இறங்கவில்லை. மாறாக இரதத்தில் ஏறிவரும் தன் அன்பு மகனான யோசேப்பை அவன் சந்தித்தான்.

மருத்துவர் அறிக்கையின்படி உன் இரத்தத்தைக் குறித்து கவலைப்படாதே! Blood Report எப்படியும் இருக்கட்டும். கர்த்தர் என்ன சொல்கிறார் என்று கவனி. அவர் வார்த்தையே ஜெயிக்கும்.

**தரிசித்து நடவாமல் விசுவாசித்து நட.**

**19**
**ஜனவரி**

# உன் இருளை வெளிச்சமாக்குவார்

"உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினாலே இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்திருக்கக்கடவன்." (ஏசா.50:10)

கர்த்தருக்குப் பயப்படுகிறவன் ஞானத்தின் ஆரம்பநிலையிலிருந்து வளரவளர அவருடைய சொற்களுக்குக் கீழ்ப்படிகிறவனாய் கர்த்தரின் பிள்ளையாக விளங்குகிறான். தன்னுடைய இருளைக் கர்த்தர் வெளிச்சமாக மாற்றுவார் என்று அவன் எதிர்பார்ப்பது நியாயமானது. ஆனால் அவனுடைய எதிர்பார்ப்பிற்கு மாறாக, வெளிச்சமே உண்டாகாமல் இருந்தால், உடனே கர்த்தர் மேல் கோபமோ, வருத்தமோ ஏற்படக்கூடாது.

அந்த இருட்டு தேவனாலே தனக்கு அனுமதிக்கப்பட்டவொன்று என்று அவன் நம்பவேண்டும். வெளிச்சம் ஏற்படவில்லையே என்று முறுமுறுக்கவோ, குழப்பமடையவோ அல்லது கலவரப்படவோ கூடாது. அந்த இருட்டிலேயும் அவன் நடக்க வேண்டும். ஜெபம் பண்ணவேண்டும். பிரயாசம் எடுக்க வேண்டும். இருளிலேயும் அவன் கர்த்தரையே சார்ந்துக்கொள்ள வேண்டும். உலகம் காட்டும் வெளிச்சத்திலோ மாம்சீகம் தரும் ஒளியிலோ அவன் நடக்கவே கூடாது.

வேலைக்காக ஜெபம் பண்ணி காத்திருக்கும் பொழுது வேலைவாய்ப்பு இல்லை என்ற செய்தி, சூழ்நிலையை இருட்டாக்கினால் அந்த இருளிலும் கர்த்தரையே நம்பி, அவரையே சார்ந்துக் கொள்ள வேண்டும். பரிதான விளக்கை ஏற்றி இருளை நீக்கப் பிரயாசப்படக்கூடாது. கர்த்தருக்கு வெளியே நமக்கு உண்டாகும் வெளிச்சத்தைவிட, கர்த்தர் அனுமதிக்கும் இருளே நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும். கடவுளற்ற காலைப்பொழுது தரும் வெளிச்சத்தைவிட கர்த்தரோடு நாம் பிரவேசிக்கும் இரவின் இருட்டு ஆசீர்வாதமுள்ளது.

**சாத்தானோடு நண்பகல் விருந்து உண்பதைவிட நள்ளிரவிலும் கர்த்தரோடு பசியாயிருப்பதே நலம்.**

**20**
**ஜனவரி**

# மாம்சீகம் விளக்கு அல்ல; தீ பந்தம்

"இதோ, நெருப்பைக் கொளுத்தி, அக்கினிப்பொறிகளால் சூழப்பட்டிருக்கிற நீங்கள் அனைவரும், உங்கள் அக்கினி தீபத்திலும், நீங்கள் மூட்டின அக்கினி ஜுவாலையிலும் நடவுங்கள்; வேதனையில் கிடப்பீர்கள்." (ஏசா.50:11)

கர்த்தரை நம்பி, அவரிடம் ஜெபித்து, அவருடைய பதிலுக்காக காத்திருந்தும் அவரிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லையெனில் நாமாக ஒரு பதிலைத் தேடிக்கொள்ளக்கூடாது. மாம்சீகமான வழியில் நாம் பெற்றுக்கொள்ளும் பதில்கள், சீக்கிரத்தில் பெரிய கேள்விகளாக நம்மைச் சந்திக்கும். நாமோ திகைத்து நிற்போம்.

கடவுள் நம் வாழ்வில் விளக்கை ஏற்றாவிட்டால் "தேவரீர் என் விளக்கை ஏற்றுவீராக" என்று ஜெபித்து, கர்த்தரின் வெளிச்சத்திற்குக் காத்திருக்க வேண்டுமே அன்றி, மாம்சீகத்தில் ஓர் விளக்கை நாம் ஏற்றக்கூடாது. மாம்சீகமாக ஓர் விளக்கை நாம் ஏற்றினால் அது தீ பந்தமாக மாறி, நம்மை அக்கினி சூழ்ந்துவிடும். நாமோ நெருப்புத் தழலில் துடிப்போம்.

ஆபிரகாம் வாக்குத்தத்த மகனாகிய ஈசாக்கின் பிறப்பு எனும் வெளிச்சத்திற்குக் காத்திருந்தான். சூழ்நிலைகள் எதிரிடையாக மாறி, இருள் சூழும் வேளையில் சாராள் ஓர் நெருப்பைக் கொளுத்தினாள். "கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்" – ஆம் அவரே எனக்கு ஓர் சந்ததி தோன்றாதபடி இருட்டை அனுமதித்திருக்கிறார் என்று ஆபிரகாமிற்கு தன் இருட்டை விளக்கிக் கூறுகிறாள். "என் அடிமைப் பெண்ணோடு சேரும்" என்று ஓர் விளக்கை ஏற்றினாள் அவளால் தன் வீடு கட்டப்படும் என்று புதிய வெளிச்சத்தை சாராள் எதிர்பார்த்தாள்'.

ஆனால் மாம்சீக நெருப்பு பற்றியெரிய ஆரம்பித்தது. வேதனையின் சரித்திரம் துவங்கிற்று. ஆம் ஆகார் பெற்றெடுத்த இஸ்மவேல் தீ பந்தமாய் மாறினான். வீட்டின் சமாதானம் கெட்டது. இன்றுவரை உலகச் சமாதானத்திற்கே ஒரு அறைகூவலாக – அக்கினி ஜுவாலையாக இருப்பது, சாராள் உண்டாக்கிய நெருப்பான இஸ்மவேலின் பிறப்பு. அன்று சாராள் கொளுத்திய தீபத்தால், வெளிச்சம் அல்ல, அனல் சூழ்ந்துக் கொண்டது! வேதனை, கண்ணீர் இவைதான் கிடைத்த பரிசுகள்.

**மாம்சீகம் வீட்டிற்கு விளக்கு அல்ல,**
**வீட்டை எரித்து சாம்பலாக்கும் தீ நாக்குகள்.**

21
ஜனவரி

# உண்மையெல்லாம் பேசாதே

"அவன் சகோதரர்கள் அவன் மேல் பொறாமை கொண்டார்கள்; அவன் தகப்பனோ அவன் சொன்னதை மனதிலே வைத்துக் கொண்டான்." (ஆதி.37:11)

யோசேப்பு தன்னைக் கர்த்தர் தன் சகோதரரெல்லாருக்கும் மேலாக உயர்த்தப்போகிறார் என்பதைச் சொப்பனங்கள் மூலமாய் அறிந்துக்கொண்டான். நிமிர்ந்த அரிக்கட்டாக, சூரிய சந்திர நட்சத்திரக் கூட்டங்களுக்கு மேலாக தன்னைக் கர்த்தர் கனமுள்ள ஒருவனாக மாற்றப் போகிறார் என்பதை யோசேப்பு அறிந்தான். இஸ்ரவேல் குடும்பத்தினர் அனைவருக்கும் அவனே அடைக்கலமாகப் போகிறான் என்பது யோசேப்புக்கு தேவன் அறிவித்த இரகசியம்.

இந்த இரகசியம் இருதயத் தோட்டத்தில் காக்கப்பட வேண்டிய வித்து. இதை உலகமாகிய நிலத்தில் விதைக்கக் கூடாது. சிறுபிள்ளைத்தனமாக யோசேப்பு இந்த இரகசியத்தைத் தன் சகோதரர்களுக்கு அறிவித்தது, அறிவீனமான செயல். தன் சகோதரர்களின் எரிச்சல் குணத்தை யோசேப்பு அறிந்திருந்தும், தனக்குத் தேவன் கொடுத்த ரகசியத்தை அவர்களோடு பகிர்ந்துக் கொண்டது மாம்சீகமான செயல்.

யோசேப்பு சொன்ன செய்தி உண்மையான செய்திதான். ஆனால் அந்தத் தேவசெய்தியைத் தன் சகோதரர்களிடத்தில் பகிர்ந்துக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன? தேவ உத்தரவில்லாமல், தன் இஷ்டப்படி அவன் பேச ஆரம்பித்தான். அது அவனுக்கே கண்ணியாயிற்று.

கர்த்தரின் வார்த்தைகளையே நீங்கள் பேசினாலும், நீங்கள் ஆவியில் பேசுங்கள். மாம்சீகத்தில் நீங்கள் பேசினால், நீங்களே கடும் பிரச்சனைகளுக்குள் அகப்படுவீர்கள். நான் உண்மையைத் தானே பேசினேன் என்று தர்க்கம் செய்யாதீர்கள். பேசினதின் நோக்கம் என்ன? கர்த்தர் பேசச் சொன்னாரா? இதயப் பெட்டியில் வைத்துப் பாதுகாக்க வேண்டிய தேவ தரிசனங்களை மற்றவர்களிடம் பகிர்ந்துக் கொள்வது உங்களுக்கு கண்ணியை வரவழைக்கும்.

கர்த்தருக்குக் காத்திராமல் தமது இஷ்டப்படி யோசேப்பு செயற்பட்டதால் வீட்டைவிட்டே நீங்க வேண்டியதாயிற்று. ஆகவே பேச்சில் எச்சரிக்கையாயிருங்கள். அறிவிக்க வேண்டியது எது, உள்ளத்தில் தக்கவைக்க வேண்டியது எது என்பதைத் தெளிவாக அறிந்து செயற்படுங்கள்.

**பேசுவதெல்லாம் உண்மையாயிருக்கட்டும்,**
**உண்மையெல்லாவற்றையும் பேச வேண்டாம்.**

| 22<br>ஜனவரி |
| --- |

# சிக்கிவிடாதே

"பார்வோனுடைய பெலன் உங்களுக்கு வெட்கமாகவும், எகிப்தினுடைய நிழலொதுக்கு உங்களுக்கு இலச்சையாகவும் இருக்கும்" (ஏசா.30:3)

நம்முடைய நெருக்கங்களில் கர்த்தருக்குக் காத்திராமல் உலகில் அடைக்கலம் தேடுகிறோம். இது நம்முடைய ஆத்தும இளைப்பாறுதலைக் கெடுத்துவிடும்.

பண நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல், கர்த்தரின் சித்தத்தை மீறி, சிலரிடம் உதவி கேட்கிறோம். அவர்களும் மிக எளிதாக நமக்குப் பணம் கொடுக்கிறார்கள். நம்முடைய நெருக்கங்களின்று நம்மை விடுதலை செய்த இந்த உதவியை – பெலனை எண்ணி மகிழ்கிறோம். நம் நெருக்கத்தின் பாதை கடும் வெயிலின் வழியாக நமக்கு இருந்தது. விடாய்த்து அலைந்த நமக்கு இந்த உதவி அருமையான நிழலாயிருந்தது.

காலச் சக்கரம் சுழல்கிறது. உதவி செய்தவர்கள் பணத்தைத் திருப்பிக் கேட்கும் தோரணையே வித்தியாசமாகிறது. பழைய அன்பு, உறவு, பழக்கம் இவற்றின் அடையாளமே தெரியவில்லை. முரட்டுத்தனம், கோபம், வைராக்கியம் இவற்றை வெளிப்படுத்தும் வார்த்தைகள் நம் இதயத்தைக் கிழிக்கின்றன.

வாசலில் நின்று இழிவாகப் பேசுகிறார்கள். பார் முழுவதும் தேடியும் கிடைக்காத நண்பனாக உதவியவர் பார்வோனைப் போல சீறி விழுகின்றார். எந்த உதவி நமக்கு நிழலாக இருந்ததோ, அந்த நிழல் எகிப்து தேசமாக, அவமானம், அடிமைத்தன இடமாகி விட்டது! ஆம்! தேவ சித்தம் இல்லாமல் நாம் மாம்சீகமாக நீட்டிய கரங்களில் காலம் சூடுபோடுகிறது.

சவுலுக்குப் பயந்து பெலிஸ்தியரோடு நடந்த தாவீதுக்கு ஆரம்ப நாள்கள் பெலிஸ்தியர் உறவு ஆதரவாகவும், நல்ல நிழலொதுக்காக இருந்தது. ஆனால் அவனுடைய சிக்லாக் பட்டணம் எரிய அதுவே காரணமாயிற்று! அழுவதற்குப் பெலன் இல்லாமற் போகும் மட்டும் அவன் தேடிய பெலன், அவனை அழவைத்தது; அவன் அவமானப்பட்டான்.

எந்த நெருக்கத்திலும் கர்த்தரின் சித்தத்திற்கு வெளியே வழியைத் தேடாதே. ஆரம்பத்தில் அது கண்ணிற்கு இன்பமாயிருக்கும் முடிவில் கண்ணுக்கு முள்ளாயிருக்கும்.

**பூனைக்குப் பயந்து புலியிடம் சிக்கிவிடாதே.**
**நெருக்கங்களில் கர்த்தரோடு நெருக்கமாயிரு.**

23
ஜனவரி

# ஆலயம் கட்டாதே

"கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட நான் என் மனதிலே நினைத்து கட்டுகிறதற்கு ஆயத்தமும் பண்ணினேன். ஆனாலும் தேவன்: நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம்; நீ யுத்த மனுஷனாயிருந்து இரத்தத்தைச் சிந்தினாய் என்றார்" (1 நாளா. 28:2,3).

தாவீது தான் நல்ல மாளிகையில் வாழும் பொழுது, கர்த்தரின் பெட்டியோ திரைகளின் கீழ் இருக்கிறதே என்று வருந்தினான். ஆகவே கர்த்தருக்கு ஓர் ஆலயம் கட்ட வேண்டும் என்று தாவீது தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணினான். ஆனால் கர்த்தரோ தாவீதை ஆலயத்தைக்கட்ட சம்மதிக்கவில்லை. ஆனால் தாவீதின் மகனான சாலொமோனை ஆலயத்தைக் கட்டும்படி கர்த்தர் அனுமதித்தார். ஏன்? "நீ யுத்த மனுஷனாயிருந்து இரத்தத்தைச் சிந்தினபடியால் நீ தேவாலயத்தைக் கட்ட வேண்டாம்" என்று கர்த்தர் தாவீதைத் தடுத்துவிட்டார்.

தாவீது யுத்தத்தில் ஏராளமான இரத்தத்தைச் சிந்தினதைக் கர்த்தர் குற்றமாக எடுத்தாரா? இல்லை. யுத்த மனுஷனான தாவீது அரசன் என்ற முறையில் பல யுத்தங்களை நடத்த வேண்டியது அவனது அழைப்பு. யுத்தத்தில் எதிராளிகளின் ரத்தம் சிந்தப்படுவது இயல்பு. அழைப்பின்படி தாவீது போர்வீரன் (David was a battler).

சாலொமோன் அழைப்பின்படி கட்டுகிறவன். (He was a builder.) ஆகவே சாலொமோன் தன் அழைப்பின்படி, ஆலயத்தைக் கட்டட்டும் என்று கர்த்தர் கூறினார். ஆகவே இங்கே நாம் அறிந்துக் கொள்வது தாவீது, சாலொமோன் இருவரில் எவர் தகுதியானவர் என்பதல்ல இருவருமே தகுதியானவர்கள்தான். அழைப்பின்படி ஒருவர் போராளி, அடுத்தவர் படைப்பாளி.

நாம் எதைச் செய்தாலும் நம் மனவிருப்பப்படி செய்யாமல், தேவ அழைப்பின்படியே செய்ய வேண்டும். அழைப்பின்படி செய்யப்படுவதே கர்த்தரால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

**அழைப்பின்படி ஆண்டவருக்கு ஊழியம் செய்**

24
ஜனவரி

# ரோஜாவில் மகிழ்ந்திரு

"அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான்." (2 சாமு.7:13)

ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது தாவீதின் உள்ளத்தில்தான். ஆலயம் கட்ட இடத்தை வாங்கியது தாவீது. கட்டடத்திற்கான மரம், கல், பொன், வெள்ளி இவற்றையெல்லாம் சேகரித்தது தாவீதுதான். இவற்றையெல்லாம் அவன் ஆயத்தம் பண்ணினபொழுது கர்த்தர் அவனைத் தடுக்கவில்லை. எல்லாவற்றையும் ஆயத்தம் பண்ணி முடித்து, ஆலயத்தைக் கட்ட முற்படும்பொழுது, "கட்டாதே" என்று கர்த்தர் தடையுத்தரவைப் பிறப்பித்தார். தன் வாஞ்சை, விருப்பத்தை கர்த்தர் அனுமதிக்கவில்லையே என்று துக்கத்தில் அவன் மனம் மூழ்கிவிடவில்லை. எதிரிடையான சிந்தனைகளில் அவன் மூழ்கிவிடவில்லை.

மாறாக தனக்குக் கர்த்தர் ஓர் வீட்டைக் கட்டப் போவதை அறிந்து, அவன் மனம் கர்த்தரைத் துதிக்க ஆரம்பித்தது. துக்கப்படுவதற்குப் பதிலாகத் தேவனை அவன் மனம் துதிக்க ஆரம்பித்தது. தேவரீர் உம்முடைய அடியானுடைய வீட்டைக் குறித்து வெகு தூரமாயிருக்கும் காலத்துச் செய்தியை... சொன்னீரே" என்றும், "நீர் என்னை இதுவரைக்கும் கொண்டு வந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடு எம்மாத்திரம்?" என்று கர்த்தரை அவன் உள்ளம் புகழ ஆரம்பித்தது.

ஆலயத்தைக் கட்ட மறுத்துவிட்டாரே என்று துக்கப்படுவதற்குப் பதிலாக தனக்குக் கர்த்தர் ஓர் வீட்டைக் கட்டப் போகிறார் என்று தன் மனதைத் தேவன் பக்கம் திருப்பினான். சகோதரனே! கர்த்தர் உன் ஜெபத்தைக் கேட்காததினால், நீ இன்று மனதுக்கத்தில் இருந்தால், கர்த்தர் இதுவரை செய்த நன்மைகளை நினைத்து கர்த்தரைத் துதிக்க உன் மனதை மறுரூபப்படுத்து. உன் சிந்தனைகள் மாறட்டும்.

பிறர் உனக்குச் செய்த தீமைகள், பொல்லாப்புகள் இவற்றையே எண்ணி மனம் கலங்குவதில் ஓர் பயனும் இல்லை. இருளைச் சபிப்பதைவிட வெளிச்சத்தை ஏற்றுவது நல்லதில்லையா? கடந்து போன நாட்களை எண்ணிக் கலங்குவதைவிட இனி நடக்கப் போகிற நிகழ்வுகளை எண்ணி மகிழ்ந்திருப்பது நல்லதில்லையா? எதிர் சிந்தனை நம் மனசாட்சியை இருளாக்கிவிடும். நம் தரிசனத்தைக் கெடுத்துவிடும்.

**முள்ளை நொந்துக் கொள்வதைவிட**
**ரோஜாவில் மகிழ்வது ஞானமில்லையா?**

25
ஜனவரி

# எந்தப் போராட்டம் பெரியது?

"அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான் உடனே தேவதூதர்கள் வந்து, அவருக்குப் பணிவிடை செய்தார்கள்." (மத்.4:11)

"அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி அவரைப் பலப்படுத்தினான். அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தது." (லூக்.23:43-44)

நமது கர்த்தராகிய இயேசுவின் வாழ்க்கையில் நடைபெற்ற இரு நிகழ்வுகளை இந்த வசனங்கள் குறிப்பிடுகின்றன. முதல் நிகழ்வில் நமது ஆண்டவர் பிசாசோடு வனாந்தரத்தில் போராடினார். இந்தப் போராட்டத்தின் முடிவில் தேவதூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள். இந்தப் போராட்டம் எளிதானதல்ல. பிசாசுக்கு No என்று சொல்வது போராட்டமே! இந்தப் போராட்டத்தில் இயேசு மிகவும் களைத்துப் போனார். தேவதூதர்கள் வந்து அவரைத் தேற்ற வேண்டியதாயிற்று.

நீங்களும், நானும் பிசாசை எதிர்த்துப் போராட வேண்டியதாயிருக்கும். நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் இவை மூன்றும் அந்தப் போராட்டத்தில் மிகவும் களைப்படைய வேண்டியதிருக்கும். பிதாவோடு, குமாரன் வைத்திருக்கும் அந்த உறவை உடைக்கவே பிசாசு இந்தப் போராட்டத்தை விரும்பினான். அப்பா, பிதாவே என்றழைக்கும் புத்திர சுவிகாரத்தைப் பறிக்க அல்லது இழந்துப் போகும்படி பிசாசு இயேசுவோடு போராடியது போல, நம்மோடும் போராடுவான்.

இரண்டாம் நிகழ்வில் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்படி இயேசு அர்ப்பணிப்பின் போராட்டத்தில் இருக்கிறார். பிதாவுக்கு Yes என்று சொல்ல வேண்டியதே ஓர் போராட்டம்தான். அப்பொழுது அவர் தன் இரத்தத்தையே பெருந்துளிகளாகச் சிந்த வேண்டியிருந்தது. ஆம் பிதாவோடு நமக்குக் கடுமையானப் பிரச்சனை உண்டு. பிசாசை எதிர்க்க இயேசு இரத்தம் சிந்தவில்லை. பிதாவுக்கு ஆம் என்று சொல்லவே இயேசு இரத்தம் சிந்தினார்.

எந்தப் போராட்டம் உங்கள் மனதை, மிகவும் பாதிக்கிறது? கானானை மற, தாய்நாட்டுக்குத் திரும்பு என்ற சாத்தானின் உபதேசமா? நீ பெற்ற உன் மகனை மோரியா மலையில் தகனப்பலியிடு என்ற கர்த்தரின் உத்தரவா?

**ஆம் இயேசுவே என்று கீழ்ப்படியும்பொழுது இதயம் அழும், கலங்கும். இல்லை சாத்தானே என்று எதிர்க்கும்பொழுது இதயம் கல்லாயிருக்கும்.**

| 26 ஜனவரி |
| --- |

# எழும்பட்டும் கேள்விகள்

"எல்லோரும் ஆச்சரியப்பட்டு இது என்ன?... இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்குக் கட்டளையிடுகிறார் அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகிறதே..." (மாற்கு 1:27)

"அவர்கள் மிகவும் பயந்து இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே..." (மாற்கு 4:41)

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனுவுருவில் இந்தப் பூமியில் நடமாடிக் கொண்டிருந்த நாள்களில் நடைபெற்ற இரண்டு நிகழ்வுகளை இவ்வசனங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

முதல் நிகழ்வில் மக்கள் ஆச்சரியப்பட்டு "இது என்ன?" என்று கேட்கிறார்கள். இரண்டாம் நிகழ்வில் மக்கள் பயத்தினால் "இவர் யாரோ?" என்று கேட்கிறார்கள். நம்மைச் சுற்றியிருக்கும் மக்கள் நம் வாழ்வில் வெளிப்படும் தேவ வல்லமையைக் கண்டு, "இது என்ன?" என்று ஆச்சரியப்படத்தக்க விதத்தில் நாம் வாழவேண்டும். அன்று பிசாசுகள் அவர் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்திருந்ததினால் அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். இன்றும் நம் வாழ்வில் பிசாசின் கிரியைகள் தோற்று, நமது பிரச்சனைகள் தீருமென்றால், இயேசுவின் வார்த்தையின் வல்லமையைக் கண்டு, "இது என்ன?" என்று அன்று கேட்டதுபோல், நம் வாழ்க்கையைப் பற்றியும் இந்தக் கேள்வி எழவேண்டும்.

"இவர் யாரோ?" என்ற கேள்வி காற்றையும், கடலையும் கர்த்தர் அதட்டியவுடன், எழுந்த கேள்வி. ஆம்! இங்கே அற்புதத்தின் நாயகர் இயேசு வெளிப்பட்டார். முந்திய நிகழ்வில் அவர் வல்லமை வெளிப்பட்டது. பிந்திய நிகழ்வில் இயேசுவே வெளிப்பட்டார்.

நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை நம்மைச் சுற்றிலுமாய் வாழும் மக்களின் இதயங்களில் இவ்விரு கேள்விகளையும் எழுப்ப வேண்டும். இதென்ன? இவர் யாரோ? என்ற கேள்விக்குப் பதிலாய் தேவ வல்லமை, தேவகுமாரன் நம் வாழ்க்கையில் வெளிப்பட வேண்டும். சலனமில்லா தண்ணீர்க் குட்டையல்ல நமது வாழ்க்கை, ஆர்ப்பரித்து ஓடும் நதியே நமது கிறிஸ்தவ வாழ்க்கை.

**உன் வாழ்க்கை மற்றவர்களின் இதயங்களில்**
**நானும் இரட்சிப்படைய வேண்டுமே**
**என்ற கேள்வியை எழுப்பட்டும்!**

27
ஜனவரி

# அதிகாரத்தை மதி

"அவர் அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்திவிசாரிப்புக் காரனிடத்தில் கொண்டு போங்கள் என்றார்." (யோ.2:8)

தண்ணீரைத் திராட்சை ரசமாக மாற்றியது சர்வவல்ல தேவகுமாரன். அந்த ரசத்தைப் பந்திவிசாரிப்புக்காரனிடம் கொண்டு போகும்படி இயேசு கட்டளையிட்டார். பந்திவிசாரிப்புக்காரன் தான் விருந்துசாலைக்குப் பொறுப்பான அதிகாரி. பந்திக்குத் தகுதியானது என்று அவன் நற்சான்றினை அவன் கொடுத்தால் மாத்திரமே, அந்த ரசம் பந்திக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

ரசத்தை உருவாக்கியவர் நித்திய தேவன். அதனைப் பந்திக்குத் தகுதியுள்ளதென்று சோதித்துப் பார்க்க இரண்டு அல்லது மூன்று மணி நேரம் மாத்திரமே பந்திவிசாரிப்புக்கார அதிகாரம் உடைய அவனிடம் இயேசு அனுப்பினார். ஏனென்றால், இயேசு அதிகாரத்தை மதிக்கிறவர். வானத்திலேயும், பூமியிலேயும் சகல அதிகாரம் படைத்த இயேசுவே அதிகாரங்களை மதித்தார் என்றால், நாம் எவ்வளவாய் அதிகாரங்களை மதிக்கவேண்டும். ஊழியக்காரர்கள் கர்த்தர் ஏற்படுத்திய அதிகாரங்கள். அவர்களை மதிக்கிறீர்களா?

உங்களை நடத்துகிறவர்கள் துக்கத்தோடல்ல சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள். அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே. ஆகையால் ஆவிக்குரிய அதிகாரங்களுக்கு முழு மனதோடுக் கீழ்ப்படியுங்கள்.

ஆராதனை ஆவிக்குரிய ஓர் விருந்து சாலை. அங்கு பந்தி விசாரிப்புக்காரர் உங்கள் போதகர்தான். பல இடங்களுக்குச் சென்று வரும் நீங்கள் பல்வேறு உபதேசங்களுடன் சபைக்கு வருவீர்கள். உங்கள் போதகர் அவற்றைப் பரிசோதித்துப் பார்க்காமல், உங்கள் அனுபவங்களை மற்ற விசுவாசிகளோடு பகிர்ந்துக் கொண்டால், ஆராதனை விருந்து சாலையாக இயங்குவதற்குப் பதிலாக தெருமுனை கடையாகிவிடும்! அங்கு தருவதைத்தான் சாப்பிடமுடியும், தரமானதைச் சாப்பிடமுடியாது.

சாமுவேலின் அதிகாரத்தை அசட்டை பண்ணின சவுல் கர்த்தருக்குச் சத்துருவாய் மாறிப்போனான். தேவனது அதிகாரத்திற்குக் கீழ்ப்படிகிறவன் சுதந்தரவாளி. அதனை எதிர்த்து மீறிநடக்கிறவன் அடிமையாகுகிறான்!

**சிலுவையைச் சுமக்கின்ற அடிமையா?**
**அல்லது அவரது சரீரத்தில் ஆணிகளடிக்கும் அதிகாரியா?**

28
ஜனவரி

# உறவின் குரல்

"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" (லூக்.11:2)

ஒரு கடிதத்தை எவ்வளவு தெளிவாக எழுதியும், முகவரியை (address) சரியாய் எழுதாவிட்டால், அக்கடிதத்தினால் ஒருபயனும் இல்லை. நம்முடைய ஜெபமும் சரியான முகவரியில் ஏற்றெடுக்கப்பட வேண்டும். "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" என்பதே சரியான முகவரி. பிதாவே என்று கர்த்தரை நாம் அழைக்க வேண்டுமெனில் அவருடைய மகன், மகள் என்ற உறவினை நாம் தக்க வைத்துக் கொள்ள வேணடும். இந்த உறவு முறிந்து போனால், முகவரி எழுதப்படாத கடிதம் போல் நம் ஜெபம் அமைந்துவிடும்.

அப்பாவோடு சரியான உறவை நாம் வைத்துக்கொள்ளாமல் கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணுவதில் பயனில்லை. சாத்தானின் மிகப்பெரிய உபாயம், கர்த்தருக்கும், நமக்கும் உள்ள உறவைத் துண்டிப்பதே. வனாந்தரத்தில் இயேசுவை சாத்தான் சோதிக்கும் பொழுது, அவனது தந்திரமெல்லாம், பிதாவோடு அவர் வைத்திருக்கும் உறவை முறிப்பதே. "நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்" என்று சாத்தானின் வார்த்தையில் பிதாவின் உறவையே அவன் குறிவைத்துத் தாக்குகிறான்.

ஜெபம் என்பது உரிமைக்குரல் அல்ல, உறவின்குரல். அப்பா, மகன் என்ற உறவுக்கு வெளியே, கர்த்தருக்கும் நமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆகவே எப்பொழுதும் இந்த உறவை நாம் தக்க வைத்துக்கொள்ள வேண்டும்.

தாவீதைப் பார்த்து நான் உனக்கு ஓர் வீட்டைக் கட்டுவேன் என்று கர்த்தர் சொன்னார். வீடு என்பது தாவீதின் சந்ததி – அல்லது குடும்பம். அந்தக் குடும்பத்தில்தான் இயேசு பிறந்தார். பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு எரிகோ பட்டணத்தின் தெருவில் அமர்ந்து பிச்சைக் கேட்டுக் கொண்டிருந்த பர்திமேயு தாவீதின் குமாரனே என்ற உறவில் இயேசுவை அழைத்ததும், தன் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று அந்த ஏழை மனிதனுக்குக் கர்த்தர் இரங்கினார். அப்படியாயின் அவரது பரிசுத்த இரத்தத்தினால் அவருடைய சந்ததியாயிருக்கும் நமது குரலுக்கு அவர் செவிகொடுக்க மாட்டாரா?

ஜெப அறையை, ஜெப வேளையை, ஜெபத்தின் வார்த்தைகள் அவற்றிற்குக் கவனம் செலுத்துவதைவிட, ஜெபத்தைக் கேட்கிறவரோடு நாம் வைத்திருக்கும் உறவில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

**எனக்குத் தாரும் என்ற உரிமையைவிட**
**என்னோடு வாரும் என்ற உறவு மேலானது**

**29**
**ஜனவரி**

# நல்ல நாள்

"நான் பயப்படும் நாளில் உம்மை நம்புவேன்" (சங்.56:3)

தாவீது சவுலினால் வேட்டையாடப்படும் பொழுது, அடைக்கலம் தேடி பெலிஸ்தியரிடம் ஓடினான். அங்கும் பிரச்சனை அவனைவிட்ட பாடில்லை. காத்தூரில் அவன் கலங்கி நின்றான். பிறந்த தேசத்தில் அரசு அவனை விரட்டியது, போய்ச் சேர்ந்தயிடத்திலும் பிரச்சனை புதுவடிவம் பெற்றது. மனுஷன் தன்னை விழுங்கப் பார்க்கிறான் என்று தாவீது மிகவும் கவலைப்படுகிறான்.

சகோதரியே! பிறந்த வீட்டிலும் நெருக்கம், போய்ச் சேர்ந்த இடத்திலும் நெருக்கம் என்று மிகவும் கலங்கி இருக்கிறீர்களா? எல்லா சூழ்நிலைகளிலும் நெருக்கப்படுகிறீர்களா? அம்மாவின் உத்தரவு, அத்தையின் கேள்வி, கணவனின் எதிர்ப்பு இப்படி பல்வேறு நெருக்கங்களில் சிக்கித் தவிக்கிறீர்களா? தாவீதும் பல சூழ்நிலைகளால் மிகவும் நெருக்கப்பட்டான்.

சுகமாயிருக்கிறீர்களா என்று கேட்டால், 'எனக்குச் சுகமில்லையென்று உனக்குச் சொன்னது யார்? என்னை வியாதிக்காரி என்று மறைமுகமாகச் சொல்கிறாயா?' என்று பதில் சொல்லுகிறார்களே என்று வேதனைப்படுகிறீர்களா? வார்த்தைக்கு வார்த்தை வித்தியாசமாகப் பொருள் கொள்கிறார்களே என்று கலங்குகிறீர்களா?

"நித்தமும் என் வார்த்தைகளைப் புரட்டுகிறார்கள்" (சங்.56:5) என்று தாவீதும் மனமுடைந்து போகிறான். வாழ்க்கையை இன்பநாள், துக்கநாள், ஆரவாரநாள், வளமானநாள் என்றெல்லாம் குறிப்பிடலாம். தாவீதோ தன் வாழ்க்கையை "பயப்படும் நாள்" என்றழைக்கும் ஓர் காலத்தைக் கடந்துக் கொண்டிருந்தான். நீங்களும் ஒவ்வொரு நாளையும் பயப்படும் நாளாகக் கழித்துக்கொண்டிருக்கிறீர்களா? என்ன நடக்குமோ, என்ன சம்பவிக்குமோ என்று ஒவ்வொரு நாளும் கலங்கித் தவிக்கிறீர்களா? தாவீது அந்த நாளில் என்ன செய்தார் தெரியுமா?

"நான் பயப்படும் நாளில் உம்மை நம்புவேன்" என்று தன் பயத்தை அவன் கர்த்தர் மேல் வைத்தான். கர்த்தர் அந்தப் பயத்தை நம்பிக்கையாக மாற்றினார்.

**காலத்தை உலகத்திடம் கொடு, வீணாய்ச் செலவழித்து சீரழிக்கும், காலத்தை கர்த்தரிடம் கொடு, சேமித்து சீராக்குவார்.**

**30**
**ஜனவரி**

# உங்கள் கண்ணீர் கர்த்தரின் கணக்கில்

"என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர், என் கண்ணீர்... உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது."
(சங்.56:8)

மனமுடைந்து தாவீது அங்குமிங்கும் துயரத்தோடு அலைந்தான். கண்களில் கண்ணீர் தாரை தாரையாக ஓடின. சில சமயங்களில் அவன் அழுவதற்குப் பெலன் இல்லாமற் போகுமட்டும் அழுதிருக்கிறான். ஆனாலும் அவன் கண்ணீர்த் துளிகள் கன்னங்களின் வழியாக வழிந்தோடி தரையில் விழுந்து, உலர்ந்துப் போவதில்லை. அவை பிதாவின் பாத்திரத்தில் விழுவதாக அவன் விசுவாசித்தான். இராக்காலத்தில் படுக்கையை நனைத்த உங்கள் கண்ணீர்த் துளிகளுக்கு கர்த்தர் கணக்கு வைத்து, ஏற்ற காலத்தில் கர்த்தர் நல்ல பதிலைத் தருவார். கர்த்தர் என் கண்ணீரைத் துடைக்கவில்லை என்று கவலைப்படுகிறீர்களா? உங்கள் கண்ணீர் துடைத்து எறிய வேண்டிய கண்ணீர்த்துளிகள் அல்ல. பத்திரமாக சேமித்து, கணக்கு வைக்க வேண்டியவைகள்.

நீ செய்த பாவத்தை எண்ணி நீ அழுதால் கர்த்தர் உன் கண்ணீரைத் துடைப்பார். உனக்கு செய்யப்பட்ட அநியாயத்தை எண்ணி நீ அழுதால், உன் கண்ணீர் கணக்கில் வைக்கப்பட்டு, உனக்கு நியாயம் செய்யப்படும். தாவீது மன உளைச்சலில் நடந்த நடைகளைக் கர்த்தர் எண்ணியிருக்கிறார். ஒன்று, இரண்டு என்று நீங்கள் மனபாரத்தோடு வீட்டிலும் வீட்டிற்கு வெளியேயும் அலைந்த அலைச்சல்களைத் தன் கணக்கில் கர்த்தர் வைத்திருக்கிறார். அது ஓர் அளவை எட்டியதும், கர்த்தர் நிச்சயமாகவே உன் பிரச்சனைக்குப் பதில் தருவார்.

ஆனாலும் ஓர் எச்சரிக்கை! ஏசாவின் கண்ணீர் கர்த்தரின் கணக்கில் இல்லை. ஆகாதவன் என்று கர்த்தரால் தள்ளப்பட்ட ஏசா கண்ணீர்விட்டு கவலையோடே தேடியும் கர்த்தரிடம் மன மாறுதலைக் காணாமற்போனான். அவன் கண்ணீரைக் கண்டு கர்த்தரும் மனமாறவேயில்லை. அவன் கவலையோடு ஆசீர்வாதத்தை இழந்துவிட்டோமே என்று கண்ணீர்விட்ட போதிலும், தன் தவறை உணர்ந்து தன்னைத் திருத்திக்கொள்ளாமல் தனக்குள் எந்த மனமாறுதலையும் காணாமற்போனான். ஆகவே அவன் கண்ணீர் கர்த்தரின் கணக்கில் இல்லை.

கண்ணீர் வருவதால் மாத்திரமே தேவ இரக்கத்தைப் பெற்றுவிட முடியாது. யூதாஸின் கண்ணீர் கர்த்தரின் கணக்கில் இல்லை. பேதுருவின் கண்ணீர் அவர் கணக்கில் உண்டு.

**மனக்கிலேசத்தின் கண்ணீருக்கு கர்த்தரிடம் கணக்கு கேட்கமுடியாது. மனந்திரும்புதலின் கண்ணீருக்கு கணக்கு கேட்கலாம். உங்கள் கண்ணீர் எப்படியிருக்கிறது?**

31
ஜனவரி

# அவரால் முடியும்

"அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்று என்றார்." (மாற்கு 4:40)

பலத்த சுழல்காற்றும், கடலில் பேரலைகளும் எழும்பினபொழுது ஏன் சீஷர்களுக்கு விசுவாசமில்லாமற் போயிற்று என்று கர்த்தர் கேட்டது நமக்கும் ஆச்சரியமாக இருக்கிறது. இந்தக் கேள்வி நமது பயந்த சுபாவத்திற்கும் இயற்கையாகத் தோன்றவில்லை. இந்தச் சூழ்நிலையில் எல்லோரும் பயப்படத்தான் செய்வார்கள்.

கொந்தளிக்கும் கடலைப் பார்த்து அவர்கள் பயந்த அந்தச் சுபாவத்தைக் கர்த்தர் கண்டிக்கவில்லை. பாம்பு, தீ, ஆபத்து இவற்றிற்கு நாம் பயப்படுவது இயற்கை. ஆனால் நமது பயவுணர்வு, நம்முடைய கர்த்தர் நம்மைக் குறித்து கவலையற்றுப் போய்விட்டார் என்ற அவிசுவாசத்திற்கு நம்மைத் தள்ளிவிடுவதைத்தான் இயேசு கண்டிக்கிறார். தான் கூட இருந்தும், ஏன் அவர்களுக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்று என்பதே இயேசுவின் கேள்வி. சீஷர்கள் எழும்பி நின்று, காற்றே அமைதியாயிரு, கடலே இரையாதே என்று ஏன் சொல்லவில்லை? அப்படிச் சொல்லியிருந்தால் அமைதியுண்டாயிருக்குமே. இந்த விசுவாசம் அவர்களுக்கு ஏன் இல்லை என்று இயேசு கேட்கவில்லை. இந்த விசுவாசத்தை அவர் எதிர்பார்க்கவும் இல்லை. அந்தச் சூழ்நிலையில் படகில் அமைதியாய், நம்பிக்கையோடு காத்திருக்கும் விசுவாசத்தையே இயேசு எதிர்பார்த்தார்.

நமக்கு நம் நோயைக் குணமாக்கும் விசுவாசம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இந்த நோய் குணமாகும் என்ற விசுவாசம் நிச்சயம் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் நாமே செய்து முடித்துவிடுவோம் என்ற விசுவாசம் நமக்கு இல்லாவிட்டால், அதற்காகக் கர்த்தர் நம்மைக் கடிந்துக் கொள்ளமாட்டார். ஆனால் கர்த்தர் நமக்காக இவற்றைச் செய்து முடிப்பார் என்ற விசுவாசம் நமக்கு நிச்சயம் தேவை. இந்த விசுவாசம் நமக்கு இல்லாவிட்டால், நிச்சயமாகவே கர்த்தர் நம்மை அற்பவிசுவாசிகளே என்றுதான் அழைப்பார்; நம் பயத்தை அவர் கண்டிக்கவே செய்வார்.

காற்றும், கடலும் அமைதி அடைந்தால்தான் பாதுகாப்பு என்பதல்ல கர்த்தர் கூட இருப்பதே பாதுகாப்பு என்பதே உண்மையான விசுவாசம்.

**என்னால் செய்ய முடியும் என்பதைவிட**
**கர்த்தர் செய்வார் என்பதே விசுவாசம்.**

1

பிப்ரவரி

# உரிமையை இழந்துவிடு

"... இப்போதும் கர்த்தர் உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவார் என்பதை உனக்கு அறிவிக்கிறேன்." (1 நாளா.17:10)

கர்த்தருக்கு ஓர் ஆலயம் கட்ட வேண்டும் என்பது தாவீதின் திட்டம். தாவீதுக்கு ஓர் வீட்டைக் கட்ட வேண்டும் என்பது கர்த்தரின் திட்டம். கர்த்தரின் திட்டத்தை – அவரது சித்தத்தை ஏற்றுக் கொண்டு, தாவீது தன் திட்டத்தை – தன் சித்தத்தை விட்டுவிட்டான். ஆகவே கர்த்தர் அவன் மீது பிரியமுள்ளவராக இருந்தார்.

ஆலயம் கட்டுவது தீமையானத் திட்டம், ஆகவே தாவீது அதைச் செய்யக்கூடாது என்று கர்த்தர் கூறவில்லை. ஆலயம் கட்டுவது நல்லது என்று கர்த்தர் அங்கீகரித்தும், அந்த நல்ல காரியத்தைத் தாவீது செய்ய கர்த்தர் அனுமதிக்கவில்லை. இதனைச் சந்தோஷமாகத் தாவீது ஏற்றுக் கொண்டான்.

நம்மால் நம் உரிமைகளை, விருப்பங்களை விட்டுவிட முடியுமா? நல்ல காரியம் என்று ஒத்துக் கொண்டபிறகு அதனை ஏன் நாம் செய்யாதபடி கர்த்தர் நம்மைத் தடை பண்ணவேண்டும் என்று போராடுவோமே. தாவீது மிக அமைதியாய் தன் சிலாக்கியத்தை விட்டுக் கொடுத்தான். நாமும் கர்த்தருக்காக நம் உரிமைகளை, உடைமைகளை விட்டுவிட ஆயத்தமாயிருக்கிறோமா?

தாவீதின் சந்ததிதான் தேவன் கட்டிய வீடு. அந்தச் சந்ததியில் மேசியாவாக இயேசு பிறந்தார். தாவீதின் சிங்காசனத்தில் நிரந்தர ராஜாவாக இயேசுவே இருப்பார். ஆகவே இது நித்திய வீடு.

சாலொமோன் கர்த்தருக்காக கட்டிய வீடான, ஆலயம் கல்லின் மேல் கல்லிராதபடிக்கு நொறுக்கப்பட்டுவிட்டது. ஆனால் கர்த்தர் தாவீதுக்காகக் கட்டியவீடு என்றும் நிலைத்திருக்கும். வெள்ளியும், பொன்னும் மற்றும் மரமும் கல்லும் இணைத்து சாலொமோன் கட்டிய ஆலயம் தரைமட்டமானது.

துதியும், ஸ்தோத்திரமும் மற்றும் ஜெபமும், தியானமும் கலந்து தாவீது எழுதிய சங்கீதங்கள் இன்றும் ஆத்மீக ஆறுதல் கோவில்களாக நிற்கின்றன.

**காலம் வேதப் புத்தகத்தை எரித்துவிடலாம்.
வேதமோ என்றும் அழியாது.**

**2**
**பிப்ரவரி**

# அந்த அங்கி இனி வேண்டாம்

"உடனே அவன் தன் மேல் வஸ்திரத்தை எறிந்துவிட்டு, எழுந்து, இயேசுவினிடத்தில் வந்தான்." (மாற்கு 10:50)

பர்திமேயு என்கிற குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் பார்வையற்றவன் என்பது அவனது பரிதாபச் சரித்திரத்தின் பாதி; அவன் ஒன்றுமில்லாதவன் என்பது அவனது சரித்திரத்தின் மீதி. எதிர்காலம் இருண்டிருக்க யாதொரு நம்பிக்கையும் அற்ற இந்த மனிதன் ஓர் நாள் இயேசுவைச் சந்தித்தான். இயேசுவோடு தெருவில் எத்தனையோ பேர் நடந்துச் சென்றுக் கொண்டிருந்தார்கள். அவரை யாரென்று பலருக்கும் தெரியாது. இயேசுவை யாரென்று தெரியாதவர்கள் ஆன்மீகக் குருடர்கள்.

தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று இவன் இயேசுவைக் கூப்பிடத் தொடங்கினான். அவனது ஆன்மீகக் கண் திறந்து இயேசு யாரென்று தெரிந்துக் கொண்டு, அவருடைய இரக்கத்தை வேண்டி நின்றான். வழிப்போக்கரிடம், காசு, பணம் என்று பிச்சை கேட்டான். ஆனால் இயேசுவிடம் அவன் பிச்சை கேட்கவில்லை. இரக்கத்தை நாடினான். ஆம்! நான் பார்வையடையவேண்டும் என்பதே அவன் வாஞ்சை, விருப்பம். வழிபோக்கரிடம் பார்வை வேண்டும் என்று கேட்க முடியுமா? பார்வையற்ற விழிகளைக் காட்டி, வாழ்க்கைக்கு வழி தேடிக் கொண்டிருந்தவன். இப்பொழுதோ விழிதிறக்க வழியொன்றைக் கண்டு, இயேசுவிடம் வருகிறான்.

"நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?" என்று இயேசு உங்களிடம் கேட்டால், நீங்கள் என்ன கேட்பீர்கள். உலகம் தரக் கூடாததைக் கேட்பீர்களா? அல்லது அன்றன்று வேண்டிய ஆகாரத்தைத் தாரும் என்பதே நமது ஜெபமாக இருக்குமா? "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்பதே உங்களது ஜெபக்குறிப்புகளில் முதன்மையானதாக இருப்பதாக.

தான் கேட்டதை இயேசு தருவார் என்று அவன் உறுதியாக நம்பினான். அந்நாள்களில் குருடர்கள் பிச்சைக்காரர்களாயிருந்தால் வழியில் தன் மீது மற்றவர்கள் மோதிவிடாதபடி இரக்கம் பாராட்டும்படி, தான் குருடன் என்பதற்கு அடையாளமாக மஞ்சள் நிற அங்கியை மேலாடையாக அணிந்திருப்பார்கள். இவனும் அந்த மேலாடையை அணிந்திருந்தான். இனி மனித இரக்கம் தேவையில்லை, கர்த்தர் தனக்குப் பார்வை அளிப்பார் என்ற நம்பிக்கையில் குருடனுக்குரிய மேலாடையைத் தூக்கி எறிந்துவிட்டு விசுவாசத்தோடு இயேசுவிடம் வந்தான். அவனுடைய அந்த மேலாடை அவனுக்கு இனி தேவையில்லை. அது நடுத்தெருவில் அவன் அமர்ந்திருந்த இடத்தருகே விழுந்து கிடந்தது!

**உன் மேலாடை இன்னும் உன் மேலிருக்கிறதா?**

3
பிப்ரவரி

# நீ கனப்படுத்தப்படுவாய்

"அவர்கள் எங்களுக்கு மரியாதை செய்து; ...எங்களுக்குத் தேவையானவைகளை ஏற்றினார்கள்." (அப்.28:10)

தப்பித்தோம், பிழைத்தோம் என்றநிலை ஆபத்தைக் கடந்த நிலைதான். என்றாலும், ஆர்ப்பரிக்கும் நிலை அல்ல. நமது பாவங்களை மன்னித்த கர்த்தரும் பாவம் மன்னிக்கப்பட்டவன் என்ற நிலையில் விட்டுவிடாது, நம்மை நீதிமானாக்கியே உலகிற்கு வெளிப்படுத்துகிறார். நம்மைக் கௌரவமான நிலையில் வைப்பதுதான் கர்த்தருடைய வாஞ்சைகளில் ஒன்று.

அவருடைய பிள்ளைகளான நாம் தலைகுனிந்து உலகில் நிற்பது அவருக்குப் பிரியமான செயல் அல்ல. "உன்னைக் கீர்த்தியும், புகழ்ச்சியுமாக வைப்பேன்" என்பதே அவருடைய வாக்குத்தத்தம். இன்று நீங்கள் அநியாயமாகக் குற்றம் சாட்டப்பட்டு, தலைகுனிந்து நிற்கிறீர்களா? யோசேப்பின் தலையை நிமிர்த்திய தேவன் உங்கள் தலையையும் உயர்த்துவார். நீயோ உத்தமத்தை உறுதியாய்ப் பற்றிக்கொள்.

மெலித்தா தீவில் தப்பிக் கரை சேர்ந்தக் கூட்டத்தில் தேவ மனிதனானப் பவுலும் இருந்தான். ஒரு விரியன் பாம்பு அவனுடைய கையைக் கவ்விக்கொண்டபடியால், அந்தத் தீவார் தங்களுடைய தெய்வம் அவனைத் தண்டித்துவிட்டது என்று பவுலை மனுஷகொலைபாதகன் என்று அவமானப்படுத்தினார்கள். கர்த்தரோ அவனுக்கு ஒரு தீங்கும் வராமல் காத்தார். உடனே அவர்கள் வேறு சிந்தையாகி "இவன் தேவன்" என்று சொன்னார்கள்.

தேவ மனிதன் பாடுகள், வேதனைகள் அனுபவிப்பதை அனுமதிக்கும் தேவன், அவர்கள் அவனை அவமானப்படுத்துவதைச் சகித்துக் கொள்கிறதில்லை. தவறாக பாலியல் குற்றத்திற்காக சிறையில் தள்ளப்பட்ட யோசேப்பை எகிப்தின் அமைச்சராக உயர்த்தி கௌரவப்படுத்தினார் நம் கர்த்தர்.

மெலித்தா தீவில் பல்வேறு விமர்சனங்களுக்குள்ளான பவுலைக் கர்த்தர் கனப்படுத்தினார். சாதாரணமானக் கைதியாகத் தோற்றமளித்த அவன் மூலம் மெலித்தா தீவில் தேவவல்லமை வெளிப்பட்டது. தீவின் தலைவன் உட்பட பலரும் பவுலினால் குணமாக்கப்பட்டனர். பரிதாபமாகத் தீவில் நுழைந்த பவுல் பாராட்டோடு வெளியே அனுப்பப்பட்டான். எல்லாவற்றையும் இழந்து தீவிற்குள் நுழைந்த பவுல் தேவையானவைகளோடு வெளியே வந்தான். கனவீனமாக வந்தவன் கனப்படுத்தப்பட்டவனாகப் புறப்பட்டான். பயப்படாதீர்கள்!

**தலைவாயிலில் உங்களை அநியாயமாய்த் தலைகுனிய நிற்கவைத்தால் வீட்டின் உள்ளறையில் உனக்குமுன் கர்த்தர் அவர்களை பணிந்து நிற்கச் செய்வார்.**

4
பிப்ரவரி

# எந்த அபிஷேகம்?

"அப்பொழுது சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து (சவுலின்) அவன் தலையில் வார்த்து... அபிஷேகம் பண்ணினான்." (I சாமு.10:1)

"அப்பொழுது சாமுவேல் தைலக் கொம்பை எடுத்து (தாவீதை) அவனை அபிஷேகம் பண்ணினான்." (I சாமு.16:13)

சவுல், தாவீது - இருவருமே கர்த்தரால் அபிஷேகம் பண்ணிப்பட்டவர்கள். இருவரையுமே சாமுவேல் தீர்க்கத்தரிசிதான் அபிஷேகம் பண்ணினார். ஆனால் இருவரின் அபிஷேகங்களும் வித்தியாசமானவை.

சவுல் தைலக்குப்பியினால் அபிஷேகம் பண்ணப்பட்டான். தாவீதோ தைலக் கொம்பினால், அபிஷேகம் பண்ணப்பட்டான். அபிஷேகத் தைலத்தைத் தைலக்குப்பியில் சேகரிப்பது எளிதானது. ஆனால் கொம்பில் சேகரிக்க, மிகுந்த பிரயாசம் எடுக்க வேண்டும். கொம்பினைப் பெற ஒரு மிருகத்தைக் கொல்ல வேண்டும். ஆகவே கொம்புத் தைலம், பலிகள், உபத்திரவம், இரத்தம் சிந்துதல் எல்லாவற்றையும் குறிப்பிடுகிறது.

சவுலுக்கு இராஜ்ஜியபாரம் மிகவும் எளிதாக, எவ்விதமான பாடுகளும், வேதனையுமின்றி கிடைத்தது. தாவீதோ பாடு, உபத்திரவங்கள், மரணக் கண்ணிகள் இவற்றையெல்லாம் கடந்துதான், ராஜாவானான். சவுலின் அபிஷேகம், பாடு, உபத்திரவம் இல்லாத எளிய வாழ்க்கைக்குப் போதுமானது. ஆனால் தாவீதுக்கோ மிகுந்த பாடுகள் உண்டாகையால், அவனுக்குள் கொம்புத்தைல அபிஷேகம் தேவைப்படுகிறது.

சகோதரனே! சகோதரியே! நீ பெற்ற அபிஷேகத்தின் பின்னணி என்ன? கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் எந்தப் பாடுகளும் உனக்கு இல்லையா? இல்லையெனில் உன் அபிஷேகம் சாதாரணமானது. நீ வசதியானச் சூழ்நிலையில் இருக்கிறாய். உன்னைக் கொண்டு கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்ய மாட்டார். இது சொகுசு வாழ்க்கை அபிஷேகம். (Comfort zone anointment)

உலகில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்று நம்மை அழைத்த தேவன் கொம்புத் தைல அபிஷேகத்தையே தருகிறார். அந்நிய பாஷைப் பேசி மகிழ்வதற்கு மாத்திரமல்ல, அந்நியருக்கும் நற்செய்தி சொல்லி, பாடுகள் அனுபவிக்கவே கர்த்தர் நம்மை அழைத்துமிருக்கிறார்.

**பரலோகத்திற்குப் பாதை பளபளப்பான பளிங்குப் பாதை அல்ல, வனாந்தரமானப் பாலைவனப் பாதையே.**

**5**
**பிப்ரவரி**

# சாத்தானைத் துரத்து

"அப்பொழுது பிசாசானவன் அவரைவிட்டு விலகிப் போனான், உடனே தேவ தூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள்." (மத்.4:11)

பிசாசுகளோடு நமக்குப் போராட்டம் உண்டு என்று வேதம் நமக்குத் தொடர்ந்து பேசிவருகிறது. நாம் கர்த்தருடைய பிள்ளைகளாக மாறிவிட்டபடியால், இனி சாத்தான் நம்மைச் சோதிக்கமாட்டான் என்று எண்ணுவது தவறு. யோபுவைச் சோதிக்க ஆண்டவரிடம் உத்தரவு பெற்ற சாத்தான் பேதுருவையும் சோதிக்க ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் உத்தரவு பெற்றுக் கொண்டான்.

வனாந்தரத்தில் உபவாச நாள்கள் முடிந்து, இயேசு கிறிஸ்து தனிமையாக இருக்கும் பொழுது, அவரைச் சோதிக்கும்படி பிசாசு அவரிடம், வந்தான். பிசாசு இயேசுவையே சுற்றிச் சுற்றி வருகிறான். கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவியத்தின் பெருமை இவை மூன்றினாலும் அவன் இயேசுவைச் சோதித்தான். அவனது சோதனையின் நோக்கம், பிதாவுக்கும் இயேசுவிற்கும் இடையில் உள்ள உறவு முறிய வேண்டும் என்பதே.

இந்தப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது தேவதூதர்கள் இறங்கி வந்து, இயேசுவிற்கு உதவி செய்யவில்லை. போராட்டத்தில் பிசாசு தோற்கடிக்கப்பட்டு, அவன் அவ்விடத்தை விட்டு விலகிப் போனான். பிசாசு விலகிப் போன பின்புதான் தேவதூதர்கள் வந்தனர், வந்து உதவி செய்யத் தொடங்கினர்.

எந்தச் சூழ்நிலையிலும் பிசாசுகளின் ஐக்கியத்தில் தேவதூதர்கள் நிற்கமாட்டார்கள். நம்முடைய வாழ்க்கையில் பிசாசுக்கு இடம் கொடுத்து, ஜீவிப்போமானால், நம்மைக் காக்கும் தேவதூதர்கள் நமக்கு உதவியாக வரமாட்டார்கள். ஆகவே நமக்காகத் தேவதூதர்கள் இறங்கி வரவேண்டுமானால், நம் வாழ்வில் பிசாசுக்கு இறங்குதளம் இருக்கவே கூடாது.

நம்முடைய வாழ்க்கையின் ஓடுதளத்தில் பிசாசுகள் அணிவகுத்து, ஆரவாரம் செய்தால், இறங்குதளத்தில் தேவதூதர் இறங்கவே மாட்டார்கள். ஒளிக்கும், இருளுக்கும் ஐக்கியமேது?

**இரும்புக் கதவைத் தேவதூதன் திறக்கவேண்டுமெனில்**
**வாசற்படியில் பிசாசை நிற்க விடாதே.**

6
பிப்ரவரி

# எதற்காக ஜெபிக்கிறாய்?

"இப்போதும் நான் இந்த ஜனத்திற்கு முன்பாக போக்கும் வரத்துமாயிருக்கத்தக்க ஞானத்தையும், அறிவையும் எனக்குத் தந்தருளும்." (2நாளா.1:10)

நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று சாலொமோனிடம் கர்த்தர் கேட்டதுபோல், நம்மிடம் கேட்டால் நம்முடைய பதில் எப்படியிருக்கும். நம்முடைய நீண்ட தேவைப் பட்டியலை அவரிடம் நீட்டியிருப்போமல்லவா? வேடிக்கையான ஓர் சம்பவத்தைச் சொல்லவிரும்புகிறேன்.

ஓர் ஆசிரியர் தன் மாணாக்கர்களிடம், "கடவுள் உங்கள் முன் தரிசனமாகி உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டால், நீங்கள் அவரிடம் என்ன கேட்பீர்கள்?" என்று கேட்டார். ஒரு மாணவன் தான் கடவுளிடம் ஏராளமானப் பணத்தைக் கேட்பதாகக் கூறினான். உடனே ஆசிரியர், "ஏன்? கடவுளிடம் நிறைய அறிவைக் கேட்பதுதானே? நானாயிருந்தால், நிறைய அறிவைத்தான் கேட்டிருப்பேன்" என்றார். மாணவன், "ஐயா, என்னிடம் இல்லாததை நான் கேட்கிறேன்; உங்களிடம் இல்லாததை நீங்கள் கேட்கிறீர்கள்." என்று மாணவன் பதில் சொன்னான்!

சாலொமோன் அறிவைக் கேட்டது மிகவும் மெச்சத் தகுந்த காரியம். அரசன் பொதுவாகப் பொன்னையும், பொருளையும், யுத்தத்தில் வெற்றியையுமே கேட்பான். அப்படி கேட்பது தவறாகாது. ஆனால் அறிவையும், ஞானத்தையும் கேட்டதில் மேலான ஓர் நோக்கம் இருந்தது. அவனை அரசானாக்கியது கர்த்தர். ஆகவே அவனது ஆட்சியில் தேவ நோக்கம் நிறைவேற வேண்டும். தேவனது நோக்கம் நிறைவேறும்படி அவன் நல்லாட்சி செய்ய வேண்டுமெனில் கடவுளருளும் ஞானமும், அறிவும் இருந்தால் மட்டுமே முடியும். தன் விருப்பம், வாஞ்சை இவற்றைப் பின்னுக்குத்தள்ளி, தேவ நோக்கத்தையே அவன் முதன்மையாக வைத்தபடியால், கர்த்தர் அவன் வேண்டுதலில் மகிழ்ந்தார்.

சகோதரனே! சகோதரியே! உங்கள் வேண்டுதல் தேவனுக்குப் பிரியமாயிருக்கிறதா? கர்த்தரின் நோக்கம் நிறைவேற சாலொமோன் ஜெபம் பண்ணினதால், அவன் கேட்ட ஞானத்தையும், விவேகத்தையும் கர்த்தர் அவனுக்குக் கொடுத்ததல்லாமல், அவன் கேட்காத ஐஸ்வரியத்தையும், சம்பத்தையும் கொடுத்தார். தேவசித்தம் அறிந்து ஜெபம் பண்ணு. மனோவாஞ்சையின் அஸ்திபாரத்தின் மீது உன் ஜெப வாழ்க்கையைக் கட்டாதே.

**நீ தேவசித்தத்தையே நாடினால்,**
**உன் விருப்பமும் நிறைவேற கர்த்தர் ஆசீர்வதிப்பார்.**

**7**
**பிப்ரவரி**

# ஊட்ட மாட்டார்

"...தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளப்போவதற்கு நீங்கள் எந்தமட்டும் அசதியாயிருப்பீர்கள்" (யோசுவா 18:3)

பொதுவாக கிறித்தவ வாழ்க்கையைச் செயலற்ற வாழ்க்கையாக நாம் கருதுகிறோம். கர்த்தர் எல்லாவற்றையும் செய்வார்; நாம் எதையும் செய்யவேண்டியதில்லை; கர்த்தர் செய்வார் என்று நாம் விசுவாசித்தால் போதும் எல்லாமே நன்மையாகவே முடிந்துவிடும் என்பது சராசரி விசுவாசியின் நம்பிக்கை.

இரட்சிப்பைப் பொறுத்தவரையிலும், நாம் ஒன்றுமே செய்ய வேண்டாம். இருக்கிற வண்ணமாகவே, நாம் கர்த்தரிடம் போனால் போதும், கர்த்தர் நம்மை இரட்சிப்பார் என்று கூறப்படுகிறது. பாவ அறிக்கைகூட தேவையில்லை கர்த்தராகிய இயேசுவை இருதயத்தில் விசுவாசித்து, வாயினால் அறிக்கையிட்டால் போதும், நாம் இரட்சிக்கப்பட்டுவிடுகிறோம் என்று போதிக்கின்றனர்.

இரட்சிப்பு இலவசமே. ஆனால் அதைப் பெறுவதற்கு நாம் விசுவாசிக்க வேண்டாமா? விசுவாசம் என்பது வெறும் சிந்தனையின் ஆழம் அல்ல. அர்ப்பணிப்பு அவசியமில்லையா? வசனத்திற்கு நம்மை அர்ப்பணிக்கும் பொழுது, உற்றார் உறவினரின் எதிர்ப்பு, பகை இவற்றையெல்லாம் நாம் சந்திக்க வேண்டுமே. லாபமானவற்றை நாம் நஷ்டம் என்று கருத வேண்டும். ஆகவே இரட்சிப்புக்கு நம்முடைய பிரயாசமும் தேவை.

இரட்சிப்பு இலவசமாக நமக்காக வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கர்த்தர் அதனை இலவசமாகச் சம்பாதிக்கவில்லை. இரத்தம் சிந்தி தன் மரணத்தினால் இரட்சிப்பை நமக்காகச் சம்பாதித்தார். இந்த இரட்சிப்பை நமக்குள் தக்க வைக்க நாம் பிரயாசப்பட வேண்டும்.

தேசம் வாக்குத்தத்தத்தின்படி இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் தேசத்தைச் சுதந்தரிக்க அவர்கள் அசதியாயிராமல் பிரயாசப்பட வேண்டும். அவர்கள் அசதியாயிருப்பதால், யோசுவா அவர்களைக் கண்டித்து உணர்த்துகிறான்.

நீ இழந்துபோன இரும்பை கர்த்தர் மிதக்கப் பண்ணுவார்; கரம் நீட்டி நீ தான் எடுத்துக்கொள்ள வேண்டும். அசதியாயிராதே. வாக்குத்தத்தத்தைப் பெற்றவுடன், நீ ஓட வேண்டியது படுக்கை அறைக்கு அல்ல, ஜெப அறைக்கு.

**கடவுள் கொடுப்பார்; ஊட்ட மாட்டார்.**

# உணர்வை இழக்காதே

8
பிப்ரவரி

"கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார்; அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான்." (ஆதி.4:9)

ஆதாம் பாவம் செய்தவுடன் பாவ உணர்வடைந்து தேவனை விட்டு விலகியோடி தன்னை மறைத்துக் கொண்டான். குற்ற உணர்வு அவனுக்குள் பலமாக இருந்தது. ஆகவே கர்த்தரோடு உறவாடுகிற ஆத்துமாவின் குளிர்ச்சியான காலத்தை அவன் இழந்துவிட்டான். தேவ சமுகத்தின் மீதுள்ள வாஞ்சைக்குப் பதிலாக தேவ சமுகத்தை வெறுக்கின்ற பயமே அவனுக்குள் அதிகரித்தது. ஆதாம் தன் பாவத்தை முழுவதுமாக அறிக்கை செய்தான் என்று வேதம் சொல்லாவிட்டாலும் அவனுக்கு பாவ உணர்வு அதிகமாகவே இருந்தது. இந்தப் பாவ உணர்வைக் கண்ட கர்த்தர் "ஆதாமே நீ என்ன செய்தாய்" என்றோ, "நீ ஏன் இதை செய்தாய்" என்றோ கேட்கவில்லை. ஆதாமே நீ எங்கே இருக்கிறாய் என்று தகப்பன் பிள்ளையைத் தேடி வருவது போல வந்தார்.

ஆதாமின் மகனான காயீன் துணிகரமான கொலைக் குற்றத்தைச் செய்தான். ஆனால் ஆதாமைப் போல இவன் பயந்து ஒளிந்துகொள்ளவில்லை. அவன் துணிந்தே நடந்து கொண்டிருந்தான். ஆபேல் எங்கே என்று அவனிடத்தில் கேட்ட போது பாவ உணர்வடைந்து தேவ சமுகத்தில் காயீன் நடுங்கவில்லை. நான் அவனுக்கு காவலாளியோ என்று கர்த்தரையே எதிர்த்து நின்றான். தான் செய்தது குற்றமென்று உணரவேயில்லை. ஒரு ஆட்டைப் பலியிடுவது அவன் மனதிற்கு அநாகரீகம். ஆனால் தன் சொந்தச் சகோதரனைக் கொலை செய்வது அவனுக்குப் பாவமாகவே தெரியவில்லை. கர்த்தர் அவனுக்கு அவன் பாவத்தைச் சுட்டிக்காட்டிய போதிலும் அவன் பாவ உணர்வே அடையவில்லை. முதல் தலைமுறையிலான ஆதாம் பாவ உணர்வடைந்து தேவனுக்குப் பயந்தான். ஆகவே அவனுக்கு கர்த்தர் இரட்சிப்பின் வழியை காட்டினார். இரண்டாம் தலைமுறையிலான காயீன் பாவ உணர்வே இல்லாது போனான். வர வர மனிதனது மனம் தேவனை விட்டு விலகியே செல்கிறது. காயீனுக்கு கர்த்தர் இரட்சிப்பின் வழியை காட்டவில்லை.

அருமையானவர்களே, ஆதாமைப் போல நீங்கள் உடனே பாவ உணர்வடையாமல் காயீனைப் போல உணர்வற்றுப் போனால் மனந்திரும்பாத யூதாஸைப் போல மாறிவிட நேரிடும். ஆகவே உங்கள் பாவங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். இன்று பாவத்தை சாதாரண பலவீனம் என்று விட்டுவிட்டால், அல்லது பாவத்தை மனித இயல்புதானே என்று சாதாரணமாக எண்ணிவிட்டால் நாளடைவில் பாவங்கள் நடைமுறைப் பழக்கங்களாகிவிடும். பாவம் ஒரு மனிதனுக்கு பழக்கமானால் பாதாளம் அவன் குடியிருப்பாகும்.

**உணர்வு இழந்ததை கவனிக்காவிட்டால்**
**சீக்கிரம் உயிரிழந்து போய்விடுவாய்.**

9
பிப்ரவரி

# ஆண்டவரின் சத்தத்திற்குச் செவிகொடு

"ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடை பண்ணப்பட்டு..." (அப்.16:6)

உலகமெங்கும் போய் சகல தேசங்களுக்கும் போய் நற்செய்தியை அறிவியுங்கள் என்பது நமது ஆண்டவரின் கடைசியான, பொதுவானக் கட்டளை. இந்தக் கட்டளையை நாம் நிச்சயம் நிறைவேற்ற வேண்டும். ஆனால் பவுலை ஆசியாவிற்குப் போகாதபடி கர்த்தர் தடைபண்ணிவிட்டார்.

தன்னுடைய பொது கட்டளைக்கு மாறாக கர்த்தர் பேசவில்லை. பவுலுக்கு கர்த்தர் ஒரு தனிக் கட்டளை கொடுத்திருக்கிறார். அது தேவனது பொது கட்டளைக்கு விதிவிலக்காக இருக்கிறது. விதிவிலக்குகளெல்லாம் விதிகளாகாது. பவுலுக்கு ஆசியாவிற்கு போகத் தடை ஏற்படுத்தியது வருத்தமாகவே இருந்தது. தேவன் தமது சித்தத்தின்படி பவுலை ஐரோப்பாவிற்கு அதாவது பிலிப்பு பட்டணத்திற்கு அனுப்ப விரும்பினார். பவுல் போக விரும்பியது ஆசியாவிற்கு. ஆசியா பிரயாணத்தை ஆவியானவர் தடை செய்தபடியால் அவர் தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிந்து பிலிப்பு பட்டணத்திற்கு போனார். பிலிப்புவிலே இரட்சிக்கப்பட்டது ஆசியா நாட்டுக்காரியாகிய லீதியாள். கர்த்தருடைய வார்த்தைக்கு பவுல் கீழ்ப்படிந்ததினாலே ஆசியாவிற்கு போகாமலேயே ஆசியாவைச் சேர்ந்த ஒரு வல்லமையானப் பெண்ணை இரட்சிப்பிற்குள் நடத்த முடிந்தது.

தேவன் சொல்லுகிறபடி நான் நடக்கிறேன் என்று நீ பயணிக்கும் பொழுது கடவுளுடைய துணை, வெளிப்பாடுகள் உன் பயணத்தைத் தடை செய்யும். வேத வார்த்தையின்படி நீ விரும்புகிற உன் திருமணம் தவறே இல்லாமல் இருக்கலாம். தேவனது தனி வெளிப்பாடு வித்தியாசமாக இருந்தால் நான் வேதத்தின்படிதானே நடக்கிறேன் என்று பிடிவாதம் பண்ணாமல் தேவனது தனி வெளிப்பாட்டில் நட. ஆவியானவர் வேத வசனத்தை மீறி பேசமாட்டார். ஆனால் அதற்கு மேலாக பேசுவார். கர்த்தர் ஒருவருக்கே செவி கொடுப்பாயாக என்பது கர்த்தரின் பொது வெளிப்பாடு. தாயையும் தகப்பனையும் கனம் பண்ணு, அவர்களின் சொல்லைத் தட்டாதே என்பது மற்றொரு வெளிப்பாடு. நான் கர்த்தருக்கு கீழ்ப்படிகிறேன் என்று பெற்றோரின் இதயங்களை வேதனைப்படுத்துவது அழகல்ல. பெற்றோருக்கு அடங்கியிருங்கள், சீக்கிரத்தில் கர்த்தர் தன் நோக்கத்தை நிறைவேற்றுவார். வேதம் சட்டப் புத்தகம் மாத்திரமல்ல, அவரது அன்பின் கடிதமும்கூட. எப்பொழுதும் கர்த்தரின் தனிப்பட்ட குரலுக்குச் செவி சாய்ப்பதே உத்தமம்.

**உன் மனோ வாஞ்சையில் உலகம் சுற்றுவதைவிட தேவ கட்டளையின்படி தெருவிலே நடப்பது உனக்கு நல்லது.**

10
பிப்ரவரி

# சுதந்தரமாக இரு

"அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி: எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்க முடியாது." (ஆதி.4:13)

தன் சகோதரனாகிய ஆபேலைக் கொன்று போட்டதிற்காகக் காயீன் வருத்தப் படவேயில்லை. ஆனால் தேவ தண்டனையைக் குறித்து மிகவும் கவலைப்பட்டான். தான் செய்தப் பாவம் பெரியது என்று அவன் அறிக்கையிடவே இல்லை. கடவுள் கொடுத்தத் தண்டனை பெரியது என்றுதான் அவன் புலம்பினான்.

பாவத்திற்குப் பயப்படுவதைவிட பாவத்தின் விளைவிற்கே மனிதன் அதிகம் பயப்படுகிறான். பாவத்திற்குப் பயப்பட சுத்த மனசாட்சி வேண்டும். பாவத்தின் விளைவிற்குப் பயப்பட நடுங்கும் மனம் போதும். பாவம் செய்தால் நாம் தேவனைத் துக்கப்படுத்துகிறோம் என்று கர்த்தருக்குப் பயப்படும் ஞானத்தில் மனம் வளருகிறதில்லை. மாறாகப் பாவத்தின் சம்பளமான நித்திய மரணமான நரகத்திற்குப் பயப்படும் மனம், கர்த்தரை நோக்கித் திரும்புகிறதில்லை. நரகப்பயம் தேவஅன்பை வெளிப்படுத்தாது.

திருடினால் கைகள் கறைபட்டுப் போகுமே என்று பயப்படுவது ஞானம்; திருடினால் கைகளில் விலங்கிடுவார்களே என்று அஞ்சுவது ஞானமுள்ள பயமல்ல. நீங்கள் என்னில் அன்பாயிருந்தால், என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்பதே கர்த்தரின் கட்டளை. கடவுள் மீது நமக்கு அன்பிருந்தால், நிச்சயம் பாவம் செய்யத் தயங்குவோம். ஆனால் பாவத்தின் தண்டனையான நரகத்திற்குப் பயப்படுவது ஒரு மனிதனை நீதிமானாக மாற்றாது.

யாக்கோபு தன் தாயினால் தன் தகப்பனை ஏமாற்றும்படி தூண்டப்படும் பொழுது, "நான் துன்மார்க்கனாக மாறிவிடுவேனே!" என்று வருத்தப்படவில்லை. "நான் எத்தனாகக் காணப்படுவேனே" என்றுதான் வருத்தப்பட்டான். எத்தனாக மாறுவதற்கு அவன் வருத்தப்படவில்லை. எத்தனாக காணபடுவேன் என்ற விளைவிற்கே அவன் பயப்பட்டான். தண்டனைக்குப் பயந்து தவறு செய்யாமல் இருப்பது உயர்ந்த வாழ்க்கை அல்ல. பாவத்தை வெறுத்து வாழ்வதே உன்னத அனுபவம்.

**மனிதர் பார்த்துவிடுவார்களே என்று பயந்து தவறு செய்யாமை தந்திரம். யார் பார்க்காவிட்டாலும், கர்த்தர் பார்க்கிறார் என்று வாழ்வது சுதந்திரம்.**

**11**
**பிப்ரவரி**

# நடந்தது எல்லாம் தேவசித்தம் அல்ல

"சாராயின் அடிமைப் பெண்ணாகிய ஆகாரே... நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப் போ." (ஆதி.16:8,9)

ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தின்படி இன்னும் குழந்தை பிறக்கவில்லை. வருடங்கள் ஓடிக்கொண்டிருந்தன. கர்த்தருக்கும் காலத்திற்கும் தன் பிரச்சனையை ஒப்புக்கொடுக்க சாராள் தவறிவிட்டாள். வாக்குத்தத்தம் செய்தவர் தன் வாக்கை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையும் தெளிவும் சாராளுக்கு இல்லை. ஆகவே சாராள் ஆபிரகாமிற்கு ஒரு குறுக்கு வழியைக் காட்டினாள். தன் கணவனை அடிமைப் பெண்ணாகிய ஆகாரிடம் அனுப்பினாள். இது தேவனுடைய சித்தம் அல்ல; மாம்சீகத்தின் முடிவு.

ஆனால் பாவத்தின் சினேகமும், பழக்கமும் ஆரம்பத்தில் நல்லதாகத் தோன்றினாலும், விரைவில் பிரச்சனைகளை உருவாக்கிவிடும். கர்ப்பமான ஆகார், சாராளை அற்பமாய் எண்ணினாள். ஆகவே ஆகார் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டாள். பாவத்தினால் உண்டான உறவு நீடிக்காது. ஆரம்பத்தில் அணைத்த கரங்கள், விரைவில் துரத்த ஆரம்பிக்கும்.

வீட்டை விட்டு ஓடிப் போன ஆகாரை ஓர் நீரூற்றண்டையில் கர்த்தர் கண்டு, "சாராயின் அடிமைப் பெண்ணே" என்று கூப்பிட்டார். சூழ்நிலை, மாம்சீகம் ஆகாரை ஆபிரகாமின் மறுமனையாட்டி, மனைவி என்று அழைத்தன. கர்த்தரோ ஆகாரை ஆபிரகாமின் மனைவி என்று ஒத்துக்கொள்ளவில்லை. பாவத்தின் விளைவாக நிர்ப்பந்த சூழ்நிலையில் நடைபெற்ற திருமணங்களை கர்த்தர் அங்கீகரிக்கவே மாட்டார். நடந்து முடிந்துவிட்டது, என்ற காரணத்தைக் கர்த்தர் ஏற்றுக்கொள்ளவே மாட்டார்.

அப்படி ஏற்றிருந்தால், "சாராயின் சகோதரியே, ஆபிரகாமின் இரண்டாம் மனைவியே" என்றல்லவா கடவுள் ஆகாரை அழைத்திருக்க வேண்டும். மாறாக சாராயின் அடிமைப் பெண்ணே என்றுதான் அழைத்தார். தேவசித்தமில்லா திருமணத்தை நடத்தி முடித்துவிட்டால், நடந்துவிட்டதே என்று கர்த்தர் நிச்சயம் அங்கீகரிப்பார் என்பது மதிகெட்ட எதிர்பார்ப்பு.

**எப்படியோ நடந்தால் சரி என்பதல்ல,**
**இப்படித்தான் நடக்க வேண்டுமென்பதே சரி.**

12
பிப்ரவரி

# உன் இரக்கம் தேவநீதியை எதிர்க்கக் கூடாது

"நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன்"
(ஆதி.13:9)

ஆபிரகாமின் மந்தை மேய்ப்பருக்கும், லோத்தின் மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. இது ஆபிரகாமிற்கு மிகவும் வருத்தமாக இருந்தது. "நாம் சகோதரர்கள்" நமக்குள் சண்டை வேண்டாம் என்று ஆபிரகாம் லோத்தைச் சமாதானப்படுத்தினார். அப்பொழுது ஆபிரகாம் தன்முன் இருக்கும் தேசத்தை லோத்தோடு பகிர்ந்துக்கொள்ளும் பெருந்தன்மையோடு, லோத்து எந்தப் பகுதியையேனும் முதலாவது தெரிந்துக் கொள்ளட்டும், மீதிப் பகுதியைத் தான் எடுத்துக் கொள்வதாகத் தன் முடிவைத் தெரிவிக்கிறான்.

நாமெல்லாருமே ஆபிரகாமின் மனதை மெச்சிக் கொள்கிறோம். ஆபிரகாம், லோத்து இருவருமே ஐசுவரியவான்கள். ஒருவரின் சொத்து, சுகம் மற்றவருக்குத் தேவையில்லை. ஆகையால் அது வீண்சண்டை என்ற முடிவு சரிதான்.

எகிப்தில் அவர்கள் இருவருக்கும் இடையே எந்தப் பிரச்சனையும் இல்லை. பாவ வாழ்க்கையில் மனிதர்கள் பிரிவினை இன்றி இணைந்தே வாழ்கிறார்கள். எகிப்தை விட்டுப் பிரிந்தவுடன்தான் பிரச்சனை.

சினிமா, குடி, ஆட்டம், பாட்டம் என்ற வாழ்க்கையில் கடும் பிரச்சனை எழாமல் சமாதானமாக ஓட முடிகிறது. ஆனால் கிறிஸ்துவுக்குள் இருவரில் ஒருவர் வந்துவிட்டால், உடனே சண்டைகளும், பிரிவினைகளும் உண்டாகின்றன.

ஆபிரகாம் தான் மூத்தவனாயிருந்தும் தன் உடைமைகளை விட்டுக் கொடுக்க முன்வந்தான். ஆனால் அது ஆபிரகாமின் உடைமையா? அவன் சம்பாதித்ததா அவன் இஷ்டம் போல பங்கிட்டுக் கொடுக்க? அந்தத் தேசம், கர்த்தர் அவனுக்கு வாக்களித்த தேசம். அதைப் பங்கிட ஆபிரகாமிற்கு அதிகாரம் இல்லை. ஆகவே கர்த்தரின் சுதந்தரத்தை ஆபிரகாம் பங்கிட்டது சரி அல்ல.

**உன் இரக்கக் குணத்தில்,**
**தேவநீதியைத் தியாகம் செய்து விடாதே.**

| 13 |
|---|
| பிப்ரவரி |

# தேவன் சொன்னது உண்டோ?

நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது" (ஆதி.3:1)

தேவன் சொன்னது உண்டோ என்ற கேள்வி நம் உள்ளத்தில் எழும்போதெல்லாம் அது தேவனின் சத்தம் அல்ல என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். சொன்னது உண்டோ என்பது சந்தேகத்தை எழுப்பும் கேள்வி. கர்த்தரைக் குறித்த சந்தேகத்தை எழுப்புவதே பிசாசின் வேலை. இந்தக் கேள்விக்கு நாம் பதில் தேடிக்கொண்டிருக்கக் கூடாது. இந்தக் கேள்வியையும், கேள்வி கேட்டவனையும் நாம் தள்ள வேண்டும். கர்த்தரைக் குறித்த கேள்வியே எழக்கூடாது என்பதல்ல தேவனது நோக்கம். தேவசித்தத்தை அறியும் நோக்கத்தோடுதான் கேள்விகள் எழவேண்டுமே தவிர, தேவனையே சந்தேகிக்கும் கேள்விகள் எழக்கூடாது.

இந்தக் கேள்வியை ஏவாளிடம் எழுப்பியது சாத்தான். சாத்தானை ஏவாளுக்குத் தெரியாது. சகல விருட்சங்களின் கனியை புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்று அவன் கேட்ட உடனேயே தன்னோடு பேசுகிறவன் பொய் சொல்லுகிறான் என்று அவள் அறிந்திருக்க வேண்டும். சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கலாம் ஆனால்... என்பதே தேவனது வார்த்தைகள். தன்னிடம் பொய் பேசுகிறவனை ஏவாள் எதிர்த்திருக்க வேண்டும். தேவன் அப்படி சொல்லவில்லை என்று சத்தியத்திற்கு ஆதரவாக அவள் நின்றிருக்க வேண்டும். அவளோ சாத்தானோடு உரையாடிக் கொண்டிருந்தாள். நடு மரத்தின் கனியை புசிக்க வேண்டாம் என்று தடுத்துவிட்டாரே தவிர, தொடக்கூடாது என்று கர்த்தர் சொல்லவில்லை. சாத்தானோடு பேசியதின் விளைவு கர்த்தர் சொன்ன வார்த்தையோடு ஒரு வார்த்தையைச் சேர்த்துச் சொல்கிறாள். சாத்தான் கர்த்தருடைய வார்த்தைக்கு மாறாக பேசுகிறான். அவன் சொல்லுக்கு செவிகொடுத்த ஏவாள், தேவன் சொன்னதோடு தன் வார்த்தையையும் சேர்த்து சொல்கிறாள்.

இன்றும் மனிதன் கர்த்தருடைய வார்த்தையோடு தன் வார்த்தையையும் சேர்த்தே சொல்லுகிறான். இந்தக் கலப்படத்தால் தேவசெய்தி கெட்டுப்போயிற்று. இன்று சபைகளில் செய்திகள் கெட்டுப்போவதற்குக் காரணம் பகுத்தறிவு என்ற போர்வையில் சாத்தானின் சிந்தனைக்கு தங்களை ஒப்புக்கொடுப்பதே. இந்தச் சிந்தனையின் முடிவினால் ஆதாமும், ஏவாளும் மீறிநடந்தார்கள். தேவன் சொன்னது உண்டோ என்று சாத்தான் ஆதியில் சிந்தனையைத் தொட்டான். சிந்தனையைச் சாத்தானிடம் பறிகொடுத்ததினால் ஆதாமும், ஏவாளும் தங்கள் ஜீவனையே பறிகொடுத்தார்கள். ஆயிரமாயிரம் கேள்விகள் எழலாம் அவைகள் சிந்தனையை ஊடுருவி செல்ல வேண்டுமே தவிர, அவைகள் அங்கேயே தங்கிவிடக் கூடாது.

**ஆயிரமாயிரம் எண்ணப் பறவைகள் உங்கள் தலைமேல்
பறக்கலாம்; ஆனால் உங்கள் சிந்தனையில்
அவைகள் கூடுகட்ட அனுமதிக்காதீர்கள்.**

14
பிப்ரவரி

# மன்னிக்கப்படாத பாவம்

"ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை." (மத்தேயு 12:31)

எல்லா பாவங்களும் மன்னிக்கப்படும் என்று வேதம் சொல்லுகிறது. கொடிய பாவம், பெரிய பாவம் என்று மனிதன் பாவங்களை வேறு பிரிக்கின்றான். கொலையைப் பெரிய பாவமென்று கருதுகிற மனிதன் பொய் சொல்லுகிற பாவத்தைக் கடுமையாக எதிர்க்கிறதில்லை. பாவத்தைக் குறித்து மனிதருக்குள் வித்தியாசமான மனநிலைமைகள் இருக்கின்றன.

கர்த்தருக்கு முன்பு பிரமாணத்தை மீறுகிற எல்லாமே பாவம்தான். மீறுதல்களில் பெரிய பாவம், சிறிய பாவம் என்ற வேறுபாடே கிடையாது. ஒரு பாவம் செய்தாலும் சரி, பத்து பாவம் செய்தாலும் சரி அவன் பாவியே. ஆகவே தேவனுக்கு முன்பு நாமெல்லாருமே பாவிகளாயிருக்கிறோம். நம்முடைய பாவத்தின் விளைவு எவ்வளவு கொடிதாயிருந்தாலும், நம்முடைய பாவங்களை மன்னிக்க கர்த்தர் வல்லவர். நிச்சயமாகவே நம்மை மன்னிப்பார். நம்முடைய பாவங்கள் எதனையும் அவராலே மன்னிக்க முடியாது என்ற நிலையே கிடையாது. ஆகவே கர்த்தர் பாவங்களை மன்னிக்க மாட்டாரோ என்று எதைக் குறித்தும் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் ஒரே ஒரு பாவத்தை மாத்திரம் கர்த்தர் வேறுபடுத்திக் காட்டுகிறார். அது என்ன? பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான பாவம். இந்தப் பாவத்தை மன்னிக்க முடியாது என்று சொல்லவில்லை. மன்னிக்க மாட்டார் என்றே சொல்லுகிறார். ஆகவே இந்த ஒரு பாவத்தை மாத்திரம் இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை என்று வேதம் சொல்லுகிறது. அது என்ன பாவம்?

இந்தப் பாவம் ஒரு செயல் அல்ல. எந்தப் பாவத்தையும் உணர்த்துவது பரிசுத்த ஆவியானவர். பாவத்தைத் திரும்பத் திரும்ப செய்துக் கொண்டே வரும் ஒரு மனிதன் நாளடைவில் பாவ உணர்வையே இழந்துவிடுவான். அதனை பாவம் என்று அவன் மனம் ஒத்துக்கொள்ளாமல் மனித இயல்பு என்று ஏற்றுக்கொள்வான். இந்த நிலையில் அந்த மனிதன் பாவமன்னிப்புக்கென்று கடவுளிடம் வருவதே இல்லை. ஏனெனில் ஆவியானவர் அவனுக்குள் கிரியைச் செய்வதை நிறுத்திவிட்டார். இந்த நிலைமையில் ஒரு மனிதன் தன் பாவத்தின் விளைவுக்காக மனங்கலங்கி அழுதாலும், பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டாலும் அவன் மனந்திரும்புகிறதில்லை. ஏனெனில் மனந்திரும்புதல் ஆவியானவரின் கிரியை. இந்த மனநிலை ஆவியானவருக்கு விரோதமான பாவம் ஆகவே இது மன்னிக்கப்படமாட்டாது. ஆகவே பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம் ஒரு செயல் அல்ல, அது ஒரு மனநிலை.

**மனந்திரும்பிய பேதுருவுக்கு பாவமன்னிப்பு உண்டு; மனக்கிலேசமடைந்த யூதாசுக்கு மன்னிப்பு இல்லை.**

15
பிப்ரவரி

# வீட்டிலே ஊழியம் செய்

"இயேசு அவனுக்கு உத்தரவு கொடாமல்: நீ உன் வீட்டிற்குப் போய்... கர்த்தர் உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவி என்றார்." (மாற்கு 5:19)

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிரதான நோக்கம் அவருடைய ஊழியம் தொய்வில்லாமல், தொடர்ந்து நடக்க வேண்டும் என்பதே. இந்த உன்னத நோக்கத்திற்காகவே பன்னிரெண்டு பேர்களைப் பயிற்சித்தார். பல இடங்களில், அவருடைய அற்புதத்திற்கு பலத்த ஆதரவு இருந்த போதிலும். அவருடைய ஊழியத்திற்கு எதிர்ப்பு வலுவாகிக் கொண்டே இருந்தது.

கதரேனருடைய நாட்டில் அசுத்த ஆவி பிடித்த ஓர் மனிதன் வருவோர், போவோருக்கு ஓர் அச்சுறுத்தலாக இருந்தான். அவனும் தனக்குத் தீமையை வருவித்துக் கொண்டு மிகவும் பரிதாபமானச் சூழ்நிலையில் இருந்தான். ஆனால் நமது ஆண்டவர் அவன்மேல் இரங்கி, அவனை முற்றிலும் விடுவித்து, அவனைப் பிடித்திருந்த ஆபத்து எத்தனை பயங்கரமானது என்று காட்ட ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளுக்குள் அவனிடமிருந்த அசுத்த ஆவிகளை விரட்டினார். அவை கடலில் பாய்ந்து மாண்டன.

பிசாசுப்பிடித்தவன் விடுதலை பெற்று, புத்தி தெளிந்தவனாக மாறியதைக் குறித்து அவர்களுக்கு மகிழ்ச்சியில்லை. இரண்டாயிரம் பன்றிகளை இழந்து விட்டோமே என்றுதான் கவலைப் பட்டார்களே தவிர, ஓர் ஆத்துமா பிசாசின் பிடியிலிருந்து இரட்சிக்கப்பட்டதைக் குறித்து அவர்கள் மகிழ்ச்சி அடையவில்லை. தங்கள் எல்லைகளை விட்டுப் போகும்படி அவரை அவர்கள் வேண்டிக்கொண்டார்கள். அவர் தம்மோடு இருந்தால் பிசாசின் வல்லமைகள் அழிந்துப் போகுமே என்று மகிழ்ச்சியடையாது, இன்னும் பொருள் நஷ்டம் வந்துவிடுமோ என்று பயந்து, அவரையே வேண்டாம் என்று தள்ளினார்கள்.

நமக்குத் தெரியாமல் பாலில் விஷமிருந்து அதனைக் குடித்த பூனை சுருண்டு விழுந்து போனால், நாம் உயிர்தப்பிவிட்டோமே என்ற மகிழ்ச்சியை இழந்துவிட்டு, பூனை செத்துவிட்டதே என்று அழுவோருக்கு நாம் என்ன பதில் சொல்வது? இயேசுவைத் தங்கள் ஊரைவிட்டுப் போகச் சொல்லும் பொழுது குணமடைந்த அந்த மனிதனும், அந்த ஊரைவிட்டு விட்டு, இயேசுவோடு வரத் துடித்தான். இயேசுவோ அவனை அந்த ஊரிலே இருக்கச் செய்தார். ஏனெனில், அவன் அங்கிருந்தால்தான் ஊழியத்தை அவன் செய்து, இயேசுவின் நோக்கத்தை நிறைவேற்ற முடியும்.

**கிறிஸ்தவ ஜீவியம், கிறிஸ்தவ ஊழியம்**
**இவை இரண்டுமே இரு கண்கள்.**

16
பிப்ரவரி

# யாருடைய சத்தம்?

"சத்தமோ யாக்கோபின் சத்தம்; கைகளோ ஏசாவின் கைகள்" (ஆதி.27:22)

ஈசாக்கு தன் மகனான ஏசாவைத் தேவ திட்டத்திற்கு மாறாக ஆசீர்வதிக்க விரும்பி தன் குமாரன் கையில் ஓர் உணவை அருந்த மிகவும் விருப்பப்பட்டான். இதனை அறிந்த யாக்கோபு தன் தாயின் ஆலோசனையின்படி, (தேவ ஆசீர்வாதம் அவன் மீது வந்துக் கொண்டிருப்பதை நம்பாமல்) குறுக்கு வழியில் அதனை அடைய முற்பட்டு, தன் தகப்பனுக்காக ஓர் ஆகாரத்தை ஆயத்தம் பண்ணினான். யாக்கோபு தன் தகப்பனை நோக்கி: நான் உமது மூத்த குமாரனாகிய ஏசா... என்னை ஆசீர்வதியும் என்றான்.

"என் மகனே, நீ என் குமாரனாகிய ஏசாதானோ அல்லவோ என்று நான் உன்னைத் தடவிப் பார்க்கும்படி கிட்ட வா" என்று ஈசாக்கு யாக்கோபை அழைத்தான். தன்முன் நிற்பது யார் என்று தெரியாமல் ஈசாக்கு ஏமாந்து போனான். பல சமயங்களில், நாமும் நம் வாழ்க்கையில் ஏமாற்றப்பட்டு மனவேதனையில் இருக்கிறோம். இந்த ஏமாற்றத்திலிருந்து கடவுள் ஏன் நம்மை விடுவிக்க வில்லையென்று மிகவும் வேதனை அடைகிறோம். ஈசாக்கும் தான் ஏமாற்றப்பட்டதை அறிந்து நடுங்கிப்போனான். (யாக்கோபின் வாழ்க்கையில் தேவசித்தப்படி ஆசீர்வாதம் கிடைத்தது) ஈசாக்கு ஏமாந்துப் போக வேண்டும், யாக்கோபின் சூழ்ச்சி வெற்றி பெற வேண்டும் என்பது தேவ நோக்கமல்ல.

ஏமாறாமலிருக்க கர்த்தர் ஈசாக்கிற்கு ஓர் அநுகூலத்தை உண்டாக்கியிருந்தார். யாக்கோபைத் தடவிப் பார்த்து, தொடு உணர்ச்சியினால் அது ஏசா என்று ஏமாந்து போனான். அப்படியே அவன் முகர்ந்து பார்த்து மோப்ப உணர்விலும் ஏமாந்து போனான். அவன் கொண்டு வந்த உணவை ருசிபார்த்தும், தன் நாவின் உணர்விலும் ஏமாந்து போனான். கண் ஏற்கெனவே இருளடைந்து விட்டது! ஆகவே ஐம்புலன்களில், நான்கு அவனை ஏமாற்றிவிட்டன. ஆனாலும் அவனுடைய செவியுணர்வு அவனை ஏமாற்றவில்லை.

சத்தமோ யாக்கோபின் சத்தம் என்று அறிந்தும், அவன் அலட்சியமாயிருந்து விட்டான். வாழ்க்கையில் உங்கள் புலன்கள் உங்களுக்கு உதவிச் செய்யாத வேளையில், நீங்கள் கேட்ட தேவ வார்த்தைகள் உங்களுக்கு உதவி செய்யும். உங்கள் காதுகள் தேவ வார்த்தைகளைக் கேட்டுப் பழகுவதாக.

**அவருடைய ஆடுகள் அவருடைய சத்தத்தை அறியும்.**

**17**
**பிப்ரவரி**

# சபையை வளர்; வீடு வளரும்

"அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய எலியாசீபும் எழுந்து ஆட்டு வாசலைக் கட்டினார்கள்; அதைக் கட்டி அவர்கள் பிரதிஷ்டை பண்ணினார்கள்." (நெகே.3:1)

எருசலேமின் அலங்கங்கள் இடிபட்டும், அதன் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடந்ததையறிந்து நெகேமியா மிகவும் மனத்துயரமடைந்தான். தன் பிதாக்களின் நகரம் பாழாய்க்கிடப்பதையறிந்து அவன் மிகவும் துக்கப்பட்டான். அப்படியே துக்கச் சாகரத்துக்குள் மூழ்கிவிடாமல், நகரத்தைத் திரும்ப எடுத்துக் கட்டும் பணியில் அவன் ஈடுபட்டான்.

நம் சபைகள் பாழாய்க்கிடப்பதையும், உபதேசங்கள் சுட்டெரிக்கப்படுவதையும் கண்டு நாம் சோர்ந்துவிடக் கூடாது. சபைகளின் அவல நிலையை எண்ணி நாம் துக்கத்தில் அமிழ்ந்துவிடக் கூடாது, நாம் எழுந்து சபையை மீண்டும் கட்டுவோம்.

இன்று பலர் ஆலயம், ஊழியம் இவற்றை மறந்து, தன் வீடு தன் பெண்டு, தன் பிள்ளைகள் என்று குறுகிய வட்டத்திலேயே வளைய வந்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் நெகேமியா பாரத்தோடு எருசலேம் சென்று, அலங்கங்களைத் திரும்ப எடுத்துக் கட்டும் பணியில் ஏற்பட்டான். அப்பொழுது பிரதான ஆசாரியன் இடிந்து கிடக்கும் தன் வாசற்படியை மறந்து விட்டு, ஆட்டு வாசலைக் கட்டி முடித்தான். கர்த்தரின் வீட்டைக் குறித்த பக்தி வைராக்கியம் அவனுக்கு மிகவும் அதிகம்.

பிரதான ஆசாரியன் கர்த்தருக்காக வேலை செய்தபடியால் பாருக் என்ற மனிதனைக் கர்த்தர் எழுப்பினார். அவன் பிரதான ஆசரியன் எலியாசிபின் வாசற்படி மட்டும் இன்னொரு பங்கைக் கட்டினான். பிரதான ஆசாரியன் கர்த்தரின் நகரத்தைக் கட்டினான், கர்த்தரோ அவனுடைய வீட்டைக் கட்டினார்.

ஆகவே, சொந்தக் குடும்பப் பொறுப்புகளுக்காக கடவுளின் வேலையைச் செய்யத் தவறிவிடாதே!

**ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்**
**தன் பிள்ளை தானாய் வளரும்.**

18
பிப்ரவரி

# இளைப்பாறுதல்

"அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்." (சங்.127:3)

நித்திரை என்பது இளைப்பாறுதல். நித்திரையற்ற நாள்கள் மனிதனை மிகவும் பலவீனப்படுத்திவிடும். தொடர்ந்து நித்திரையில்லாமல் இருந்தால் மீளா நித்திரையில் மனிதன் உறங்கிவிடுகிறான்! ஆம் அவன் சரித்திரம் முடிந்துவிடுகிறது. ஆகவே நித்திரை மனிதனுக்கு ஓர் ஆசீர்வாதம்.

துயரமான வேளையில் தாவீது தன்னை நித்திரையில்லாமல் வீட்டின் மேல் தனித்திருக்கும் குருவிக்கு ஒப்பிடுகிறான். நித்திரையில்லா குருவி, பறக்கப் பெலனற்று, மெலிந்து, பலவீனமாக இருக்கும்.

சாலொமோன் கூறுகிறான், "கர்த்தரோ தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்." யார் மீது கர்த்தர் பிரியமாயிருப்பார்? இந்தக் கேள்விக்கு விடை காண, நித்திரை என்றால் என்ன என்பதைக் காண்போம்.

நித்திரை என்பது இளைப்பாறுதல். யாருக்கு இளைப்பாறுதல் இல்லை. சரீரத்தில் வியாதியின் வேதனையோடு இருப்போருக்கு இளைப்பாறுதல் இல்லை. ஆகவே நித்திரை அளிக்கிறார் என்றால், நல்ல சுகத்தோடு காத்துக் கொள்வார் என்று அர்த்தம். கடும் பிரச்சனைகள் எழும்பி ஆத்துமாவின் அமைதியைக் கெடுத்து விடாதபடி கர்த்தர் பார்த்துக்கொள்கிறார். தவறு செய்து, மனசாட்சியின் கடிந்துக் கொள்ளுதலினால், ஆவி கலக்கம் அடைகிறது. அதனாலும் மனிதன் இளைப்பாறுதலாகிய நித்திரையை இழந்துவிடுகிறான்.

இந்த மூன்று நிலைகளாகிய ஆத்துமா, ஆவி, சரீரம் இவைகளில் இளைப்பாறுதலை இழந்துவிடுகிறவன் பரிதாபமான மனிதன். ஆனால் கர்த்தருக்குள் பிரியமாயிருந்து, அவர் வசனங்களைக் கைக்கொள்கிறவன் மேல் அவர் பிரியமாயிருந்து, நித்திரை அளிக்கிறார். ஆகவே, நித்திரையில்லாமல் நீங்கள் படுக்கையின் மேல் புரண்டுக் கொண்டிருந்தால், தூக்க மாத்திரையைத் தேடாதீர்கள். விழித்திருந்து வேத வசனங்களைத் தேடுங்கள்.

**திறந்த மனசாட்சி, விழிகளைமூடி இளைப்பாறச் செய்யும்.**

19
பிப்ரவரி

# தேவ வார்த்தையில் நட

"அவர்களை அவர் பார்த்து நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள்."

(லூக்.17:14)

ஒரு கிராமத்தில் இயேசு நுழைந்த பொழுது பத்து குஷ்டரோகிகள் இயேசுவுக்கு எதிரே வந்து, "இயேசு ஐயரே எங்களுக்கு இரங்கும்" என்று சத்தமிட்டார்கள். இயேசு அவர்களை நோக்கி, "ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார்."

வியாதியைச் சுகமாக்குவது ஆசாரியர்களின் வேலை அல்ல. வியாதியினின்று ஒருவர் சுகமடைந்தால், அவர் சுகமாக இருக்கிறார் என்று நற்சான்றிதழ் கொடுப்பதே ஆசாரியனின் வேலை. வியாதியோடு அவர்கள் ஆசாரியனிடம் வரக்கூடாது.

ஆண்டவர் அந்தப் பத்துக் குஷ்டரோகிகளைச் சுகப்படுத்துமுன் ஆசாரியர்களிடம் போகும்படி சொல்கிறார். அதன் பொருள் என்ன? "நீங்கள் ஆசாரியர்முன் நிற்கும் பொழுது, நீங்கள் குஷ்டரோகிகளாக நிற்கமாட்டீர்கள்" என்பதே அதன் பொருள்.

தங்களை இயேசு சுகமாக்காமல், அப்படியே குஷ்டரோகத்தோடு ஆசாரியர்களிடம் எப்படி போகமுடியும் என்று எதிர்கேள்வி கேட்காமல், ஆசாரியர்களை நோக்கி அடியெடுத்து வைத்தனர். இது விசுவாச நடை, போகாதீர்கள், சுகமான பிறகுதான் ஆசாரியர்களிடம் உங்களைக் காட்ட வேண்டும் என்பது அனுபவத்தின் குரல். ஆனால் இயேசுவோ நமது அனுபவத்திற்கு மாறாக, நடத்துகிறார். அவர்கள் கீழ்ப்படிந்து போகையில் அவர்கள் குணம் அடைந்தனர். தரிசித்து நடவாமல் அவர்கள் விசுவாசித்து நடந்தார்கள். சுகமானப் பிறகு ஆசாரியர்களிடம் போகலாம் என்றிருந்தால், அவர்கள் ஒரு போதும் சுகம் அடைந்திருக்கமாட்டார்கள். ஆனால் அவர்கள் கீழ்ப்படிந்து போகையில் அவர்கள் வழியில் சுத்தமானார்கள்.

சூழ்நிலை, பாரம்பரியம் இவற்றிற்கு மாறாக இயேசுவின் கட்டளை இருப்பினும், இயேசுவிற்கே கீழ்ப்படியுங்கள்.

**உலகச் சத்தம் வெளிச்சத்தையும் தேவ சத்தம் இருளையும் காட்டினால், இருளில் நடங்கள் கர்த்தரோடு.**

**20**
**பிப்ரவரி**

# ஆவியில் ஆராதி

"கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காள சத்தம் போன்ற பெரிதான சத்தத்தைக் கேட்டேன்." (வெளி.1:10)

இங்கு கர்த்தருடைய நாளென்று யோவான் குறிப்பிடுவது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நாளல்ல. கர்த்தருடைய நாள் என்றால் வாரத்தின் முதல் நாளாகிய ஆராதனை நாள் - ஞாயிற்றுக் கிழமை. ஓய்வு நாளல்ல.

கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் சபை ஸ்தாபிக்கப்பட்ட நாள் ஓய்வுநாளுக்கு மறுநாளான, வாரத்தின் முதல் நாள். அந்த நாளே கர்த்தரின் நாள். ஆகவே கர்த்தரின் நாளில் அப்போஸ்தலர் காலம் துவக்கி இன்றுவரை ஆராதனை நடந்து வருகிறது. ஞாயிற்றுக் கிழமை என்று உணர்த்த ஆலய மணி உதவி செய்கிறது. ஆலய மணி உபயோகிக்காத சபைகள், பழக்கம் காரணமாக கர்த்தரின் நாளைக் கண்டு கொள்கின்றனர்.

ஆனால் நாள் காட்டியோ, கடிகாரமோ, சபையோ எதுவும் இல்லாத பத்மு தீவில், யோவானை ஆவியானவர் ஆள்கொண்டபடியால் அவர் ஆவிக்குள்ளாகி கர்த்தரின் சமுகத்தை உணர்ந்தான். ஆவிக்குள்ளாக அவருக்கு வெளியே இருந்து எவரும், எதுவும் தூண்டவில்லை. ஆவியானவரே அவரைத் தூண்டினார்.

இன்று வேகமாகப் பாட்டுப்பாடுவதினால் ஆத்துமா பரவசம் அடைகிறது. இசைக் கருவிகள் மனக்கிளர்ச்சியை உண்டு பண்ணுகின்றன. உடனே கைகளை ஆட்டி, கரவொலி எழுப்பி சபை மக்கள் ஆரவாரம் செய்கின்றனர். பெரும்பாலும் இது மனக்கிளர்ச்சியான மாம்சீகச் செயலே!

சத்தியமும், ஆவியும் நம்மைத் தொடும் பொழுதுதான் நாம் ஆவிக்குள்ளாகிறோம். ஆவிக்குள்ளான யோவான் சத்தமிடவில்லை, தேவனது சத்தத்தைக் கேட்டான். ஆவிக்குள்ளாகும் தேவபிள்ளையே! நீ காண்கிற தரிசனம் என்ன? நீ கேட்கும் தேவ சமுகத்து செய்தி என்ன?

செய்தியும், தரிசனமும் இல்லா ஆரவாரம் ஆவிக்குள்ளாகுதல் அல்ல, மாம்சீக விளையாட்டு.

**ஆவிக்குள்ளாகுதல் விளையாட்டுக் களமல்ல, போர்க்களம்.**

| |
|---|
| **21**<br>பிப்ரவரி |

## எது காரணம்?

"அவர் அப்புறம் போகையில் பிறவிக்குருடனான ஒரு மனுஷனைக் கண்டார்." (யோவான் 9:1)

தன் ஊழியப் பாதையில் இயேசு ஒரு பிறவிக் குருடனைக் கண்டார். அவனைக் கண்டதும், அந்தப் பரிதாபமான மனிதனின் வழியாக பிதா தன் நாமத்தை மகிமைப்படுத்துவதை இயேசு கண்டார். அவர் சந்திக்கும் மனிதர்களிடத்தில் தேவ நோக்கம் என்ன என்பதை இயேசு தெளிவாய் அறிந்திருந்தார்.

நம்மைக் குறித்த தேவ நோக்கம் என்னவென்று அறிந்துக்கொள்ளும் உள்ளுணர்வு நமக்கு உண்டா? இயேசு அந்தப் பிறவிக் குருடனை தேவ மகிமை வெளிப்படும் பாத்திரமாகக் கண்டார். சீஷர்கள் அவனைப் பாவத்தின் விளைவு என்று கண்டனர். இரட்சகரோ தேவ மகிமையின் வாசலாக அவனைக் கண்டார். நாம் மற்றவர்களை எப்படி காண்கிறோம்? தேவ அழைப்பு, தேவ கிருபை, தேவ அன்பு இவற்றை மற்றவர்களிடத்தில் காண்கிறோமா?

இவன் குருடனாய்ப் பிறந்தது இவன் செய்த பாவமா என்று அவர்கள் கேட்டனர். இது ஓர் மதிகெட்ட கேள்வி! அவனோ பிறவிக் குருடன். அவன் குருடனானது அவன் செய்த பாவமென்றால், பிறப்பிற்கு முன்பே அவன் பாவஞ் செய்திருக்க வேண்டுமே! இது சாத்தியமா? இல்லையே.

இவன் செய்த பாவமா? பாவத்தினால் சரீரம் சீர்கெடுகிறது என்றாலும், இவன் பாவம் செய்ததினால் குருடனானான் என்பதற்கு எந்தச் சான்றும் இல்லை. அப்படியே அவன் பெற்றோர் செய்த பாவமா என்பதுவும் யூகத்தின் கேள்வி. அவனுடைய குருட்டுத் தன்மைக்கு யாரைக் குற்றவாளியாக்கலாம் என்பது நல்ல சிந்தனையல்ல, அவன் பிரச்சனைக்கு என்ன பரிகாரம் செய்யலாம் என்பதே சரியான சிந்தனை. அவனுடைய கண்களைத் திறந்து, தேவனை மகிமைப்படுத்தவே இயேசு சித்தம் கொண்டார். நாமும் மற்றவர்களின் குற்றங்களைத் தேடி அலையாமல், பிரச்சனைக்குரியவர்களுக்கு விடுதலையைத் தேடிக் கொடுப்போம்.

ஏன்? ஏன்?... எனக்கு ஏன்? என்ற இந்தக் கேள்விகளை விட்டு விட்டு இனி என்னவென்று சிந்திப்போம்.

**எல்லா நெருக்கடிகளுக்கும் காரணம் பாவமே என்று சொல்வோமானல், ஐயோ பாவம் என்று மற்றவர்களின் பரிதாபத்திற்குள் தள்ளப்படுவோம்.**

**22**
**பிப்ரவரி**

# உங்களை அறிவாரா?

"சாமுவேல் கர்த்தரை இன்னும் அறியாதிருந்தான்; கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு இன்னும் வெளிப்படவில்லை." (1சாமு.3:7)

இன்னும் அறியாதிருந்தான் என்று வேதம் சொல்லுவதிலிருந்து கர்த்தரை அறியும் பல சிலாக்கியங்கள் ஏற்கெனவே சாமுவேலுக்கு இருந்தன என்பது தெளிவாகிறது. சாமுவேல் ஜெபிக்கும் தாயைப் பெற்றிருந்தான். சொத்துக்களில் மிகப் பெரிய சொத்து ஜெபிக்கும் தாய். சாமுவேலின் தாயாகிய அன்னாளின் ஜெபத்தில் பிறந்தவனே சாமுவேல். அப்படியிருந்தும் அவன் இன்னும் கர்த்தரை அறியவில்லை. சாமுவேலின் மற்றொரு சிலாக்கியம் அவன் சிறுபிராயத்திலிருந்தே தேவாலயத்தில் வளர்ந்தது. அவனுடைய இன்னொரு சிலாக்கியம் பெரிய ஊழியக்காரனாகிய ஏலியினிடத்தில் வளர்ந்தது. சிறு பிள்ளையிலிருந்து கர்த்தருக்காக ஒப்புவிக்கப்பட்டது, மற்றொரு சிலாக்கியம். இத்தனை சிலாக்கியங்களைப் பெற்ற அவனைக் குறித்து வேதம் சொல்கிறது, "சாமுவேல் கர்த்தரை இன்னும் அறியாதிருந்தான்."

நீங்களும் சாமுவேலை போல எல்லா அல்லது சில சிலாக்கியங்களைப் பெற்றிருக்கலாம். நீங்கள் நல்லதொரு ஆலயத்திற்குப் போகலாம், உங்கள் போதகர் ஒரு வேதப் பண்டிதராக இருக்கலாம், இவையெல்லாம் உங்களை கர்த்தரை அறிந்தவனாய் மாற்றாது. சாமுவேல் கர்த்தரிடம் நேரடி தொடர்பு கொண்டு கர்த்தரின் வார்த்தைகளை தனக்கென்று பெற்ற பிறகே அவன் தேவனை அறிந்தவனானான். கர்த்தரின் வார்த்தையைப் பெற்று அந்த வார்த்தைக்கு தன்னை அர்ப்பணித்தவனே கர்த்தரை அறிந்தவன்.

கர்த்தரை அறிந்த மனிதன் தேவ சமுகத்தில் வளருபவன். அவனுக்குக் கர்த்தர் சொன்ன வார்த்தை ஒன்றாகிலும் தரையிலே விழுவதில்லை. கர்த்தரை இன்னும் அறியாதவன் என்று அவனை அறிமுகப்படுத்திய வேதம், சாமுவேலை கர்த்தருடைய தீர்க்கதரிசி என்று விளங்கப்பண்ணியது. கர்த்தரை அறியாத சாமுவேல் இஸ்ரவேல் தேசம் கர்த்தரை அறியும்படி தீர்க்கதரிசனம் உரைத்தான். கர்த்தரை அறியாத சாமுவேல் கர்த்தரை அறிவிக்கிறவனாய் மாறினான். அவன் இருதயத்தில் சேகரித்த கர்த்தரின் வார்த்தையினால் உண்டான மகிமை இது.

நீங்கள் வேதத்தை வாசிக்கும்போது உங்கள் இதயப் பெட்டகத்தில் அவருடைய வார்த்தையை சேகரிக்கிறீர்களா? அப்படி சேகரித்த வார்த்தைகள் உங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டிட உதவுகின்றனவா? அப்படி வாழாவிட்டால் நீங்கள் இன்னும் கர்த்தரை அறியவில்லை.

**வாரந்தோறும் அவர் வார்த்தையைக் கேட்டு அதின்படி வாழாதவனைப் பார்த்து கர்த்தர் சொல்வார், "உங்களை நான் அறியேன்."**

23
பிப்ரவரி

# கடவுள் காட்சிப்பொருளல்ல

"அவர்கள் கலிலேயா நாட்டுப் பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்புவினிடத்தில் வந்து: ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று அவனைக் கேட்டுக்கொண்டார்கள்."
(யோவான் 12:21)

பஸ்கா பண்டிகையின் காலத்தில் பல்வேறு நாடுகளிலிருந்து ஜனங்கள் எருசலேமுக்கு வருவார்கள். அப்படி வந்தவர்களில் கிரேக்கர்களும் இருந்தார்கள். உண்மையான பஸ்கா ஆட்டுக் குட்டியை மறந்து பஸ்கா பண்டிகையைச் சடங்காச்சாரமாக கொண்டாடும் யூதர்களுக்கு மத்தியில் அந்த கிரேக்கர்கள் இயேசுவைக் காண வேண்டுமென்று விரும்பினார்கள். இயேசுவை ஒரு காட்சி பொருளாக எண்ணி காண விரும்பினார்களே தவிர, இயேசுவை தேவகுமாரன் என்று காண வரவில்லை. கிரேக்கர்கள் தங்கள் தெய்வங்களைத் தரிசித்து வருவது போல இயேசுவையும் தரிசிக்க விரும்பினார்கள். தெய்வ தரிசனம் என்பது அவர்களைப் பொறுத்தவரையில் ஒரு காட்சி. எந்த ஒரு அர்ப்பணிப்பும் அவர்களுக்கு கிடையாது. ஆலயத்தில் போய் ஒரு சிலையைக் கண்டு வந்தவர்களுக்கு தெய்வத்தைக் கண்டதாக ஒரு திருப்தி அவர்களுக்கு. அதே மனோபாவத்தோடு இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று அந்த கிரேக்கர்கள் சொன்னார்கள்.

கிரேக்கர்கள் தங்கள் தெய்வத்தைத் தரிசிக்கும் பொழுது அவர்கள் கண்ட தெய்வத்துக்கும், அவர்கள் தரிசித்த தெய்வத்துக்கும் உறவோ உடன்படிக்கையோ இல்லை. நீங்கள் வேதம் வாசிக்கும் பொழுது வேதம் உங்களோடு பேசுகிறதா? வேதம் உங்களோடு பேசாவிட்டால் வேதம் உங்களுக்கு ஒரு தரிசனமே. நாம் இயேசுவை தரிசிக்கப் போகவில்லை, இயேசுவோடு உறவு வைக்கப் போகிறோம். தெய்வத்தைத் தரிசிக்கிறவர்களுக்கு பக்தி ஒரு பொழுதுபோக்கு, தெய்வத்தோடு உறவு வைக்கிறவர்களுக்கு பக்தி ஒரு அர்ப்பணம்.

தன்னிடத்தில் வந்த கிரேக்கர்களைக் கண்ட இயேசு, அவர்களுடைய உள்நோக்கத்தை அறிந்திருந்தார். நூதனமானக் காரியங்களை நாள்தோறும் பேசி பொழுதுபோக்குவது கிரேக்கர்களின் வேலை என்பது இயேசுவுக்குத் தெரியும். அந்தப் பொழுதுபோக்கு கிரேக்கர்களுக்கு இயேசு ஒரு பெரிய பாடத்தைக் கற்றுக்கொடுத்தார்: "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் அது மிகுந்த பலனைத் தரும்."

தம்மிடம் வந்த கிரேக்கர்களுக்கு இயேசுவின் செய்தி: உங்களை அர்ப்பணித்து விடுங்கள்.

**தேவனுக்காக நீங்கள் வளைந்துக் கொடுக்காவிட்டால், முறிந்து விழுவீர்கள்.**

24
பிப்ரவரி

# யார் சகோதரன்?

"ஆபிரகாம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம். நாம் சகோதரர்" (ஆதி.15:8).

"அதற்கு அவன், இன்னும் அவன் (பெனாதாத்) உயிரோடே இருக்கிறானா அவன் என் சகோதரன் என்றான்." (1 இரா.20:32) ஊர் பட்டணத்தை விட்டு புறப்பட்டபோது எவ்விதமான கருத்து வேற்றுமைகளின்றி ஆபிரகாமும், லோத்தும் அவ்விதமான பிரயாணத்தைத் துவக்கினார்கள். வழியிலும் எவ்வித சண்டையும் சச்சரவும் இல்லை. ஆனால் எகிப்துக்கு போய் வந்த பிறகு நிலைமை மாறிவிட்டது. எகிப்தின் பொக்கிஷங்கள் அவர்களுடைய சமாதானத்துக்கு எதிர் சவாலாய் மாறியது. ஆபிரகாம் லோத்து இவர்களுடைய மந்தை மேய்ப்பர்களுக்கிடையே சண்டை உண்டாயிற்று. இந்தச் சண்டையை ஓயப் பண்ணுவதற்கு ஆபிரகாம் எடுத்த ஆயுதம் சகோதரத்துவம். நமக்குள் சண்டை வேண்டாம் நாம் சகோதரர் என்று ஆபிரகாம் வலியுறுத்தினான்.

இன்று கர்த்தருடைய பிள்ளைகளுக்குள் மறக்கப்பட்ட உறவு இந்தச் சகோதரத்துவம். இயேசு கிறிஸ்து நமக்கு மூத்த சகோதரராய் இருக்கிறபடியினால் அவருக்குள் நாம் எல்லாருமே சகோதரர்கள். இரத்த சம்மந்தமான உறவினாலே நம்மோடு பிறந்த சகோதரர்கள் நித்தியமானவர்கள் அல்ல. மாம்சத்தின்படியான சகோதர உறவு இவ்வுலகத்தோடு முடிந்துவிடும். ஆனால் இந்த மாம்சீக உறவை நேசிக்கின்ற நாம் அந்த அளவிற்கு ஆவிக்குரிய உறவை மதிப்பதில்லை. சபைகளில் ஸ்தோத்திரம் சகோதரனே என்று சொல்லுவது வெறும் பழக்கச் சொல்லாகிவிட்டது, பாசச் சொல்லல்ல. தன் குடிகார தம்பியைச் சொந்தமென உரிமைப் பாராட்டும் விசுவாசி, விசுவாச சகோதரனை அடுத்த வீட்டு மனிதனாகவே எண்ணுகிறான். இது மிகவும் பரிதாபத்துக்குரியது.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் தோற்கடித்த சீரிய நாட்டு ராஜாவாகிய பெனாதாத் பயந்து உள்ளறையில் பதுங்கினான். ஆகாபிடம் ஆளனுப்பி உயிர் பிச்சைக் கேட்டான். ஆகாப், பெனாதாத் என் சகோதரன் என்று சொல்லி அவனைக் காப்பாற்றினான். சகோதரன் என்ற ஆகாபுடைய வார்த்தையை பெனாதாத்தின் ஆட்கள் பிடித்துக் கொண்டு உயிருக்கு மன்றாடினார்கள். தேவனுக்கு விரோதமான பெனாதாத்தை சகோதரன் என்று ஆகாப் சொன்னது மதிகேடு. தேவனுக்கு விரோதமானவர்களோடு சகோதரர் என்று சொந்தம் பாராட்டுவது நமக்கு ஆபத்தாகிவிடும். ஆகவே யார் நம் சகோதரன் என்று அறிவதில் எச்சரிக்கையாக இருங்கள். பேதுருவும் அந்திரேயாவும் கொண்டிருந்த தொப்புள்கொடி உறவைவிட கிறிஸ்துவுக்குள் இணைந்த உண்மையான உறவே அவர்களது சகோதரத்துவம். சகோதரனே! உனக்கு எத்தனை சகோதரர்? ஒன்று, இரண்டு என்று எண்ண ஆரம்பிக்காதே. கிறிஸ்துவுக்குள் அனைவருமே சகோதரர்தான் என்று எண்ண ஆரம்பியுங்கள்!

**தொப்புள்கொடி உறவைவிட கிறிஸ்துவுக்குள் இணைந்த உண்மையான உறவே சகோதரத்துவம்.**

25
பிப்ரவரி

# யாரை அனுப்புவார்?

"இஸ்ரவேல் புத்திரர் மீதியானியர் நிமித்தம் கர்த்தரை நோக்கி முறையிட்ட போது, கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியை அவர்களிடத்துக்கு அனுப்பினார்." (நியா.6:7,8)

"அதற்கு பின்பு கர்த்தருடைய தூதனானவர் வந்து கர்வாலி மரத்தின் கீழ் அமர்ந்தார்." (நியா.6:11)

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால் கர்த்தர் அவர்களை மீதியானியர் கைகளில் ஏழு வருஷம் ஒப்புக்கொடுத்தார். மீதியானியர் தேசத்தைக் கொள்ளையிட்டபடியால் ஜனங்கள் கடும் வேதனைக்குள்ளானார்கள். மிகவும் சிறுமைப்பட்ட அவர்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். தங்களை விடுவிக்க கர்த்தர் ஒரு தேவதூதனை அனுப்புவார் என்று எதிர்பார்த்தார்கள். கர்த்தரோ தேவதூதனை அனுப்பவில்லை. அவர்களது எதிர்பார்ப்புக்கு மாறாக கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார். கர்த்தருக்கு விரோதமாக பொல்லாப்பு செய்த அவர்களை விடுவிக்க தேவன் விரும்பவில்லை. தாங்கள் செய்த பாவங்களை, பொல்லாப்புகளை அவர்கள் உணரவேண்டுமென தேவன் விரும்பினார். ஆகவே ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி அவர்களை எச்சரித்தார். அவர்களுடைய கீழ்ப்படியாமையைச் சுட்டிக்காட்டி தீர்க்கதரிசி அவர்களைக் கடிந்துக் கொண்டான். இப்படி கர்த்தரால் கடிந்துக்கொள்ளப்பட்டு தங்கள் பாவங்களை அவர்கள் உணர்ந்த பொழுது கர்த்தருடைய தூதனானவர் அங்கே வந்தார். மீதியானியரை முறியடிக்கும் யுத்தத்தில் கர்த்தருடைய தூதனானவர் இஸ்ரவேலுக்கு அநுகூலமாய் மாறினார். மீதியானியர் முறியடிக்கப்பட்டனர்.

சகோதரனே, சகோதரியே, ஆபத்து நாளில் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்ட உடனே, கர்த்தர் உடனே வந்துவிட மாட்டார். ஆபத்தில் சிக்கிக் கொண்ட நீ கர்த்தரோடு சரியான உறவிலிருக்கிறாயா? உன்னை விடுவிப்பதினாலே தேவனுடைய எந்த நோக்கம் உன் மூலமாய் நிறைவேறும்? உன் குற்றங்களை உனக்கு உணர்த்தாமல், நீ மனந்திரும்பாமல் கர்த்தர் உன்னை விடுவிக்க மாட்டார். உன்னை விடுவிப்பதற்கு பதிலாக உனக்கு அறிவை உணர்த்த உன் போதகரை உன்னிடத்திற்கு அனுப்புவார். போதனையை நீ கேட்ட பிறகு நீ மனந்திரும்பினால் உன்னை விடுவிக்க தேவதூதன் வருவான். பாவத்திலிருக்கும் எந்த மனிதனின் பரிதாப சத்தமும் பரலோகத்துக்கு எட்டாது. தண்ணீரில் மூழ்கி கொண்டிருக்கும் பேதுருவை கர்த்தர் உடனே தூக்கியெடுக்கவில்லை. அற்ப விசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய்? என்று அவனுக்கு விசுவாசத்தைக் கற்பித்த பிறகே அவனைத் தூக்கியெடுத்தார்.

**தேவகரம் உன்னை சிட்சித்தப் பிறகே**
**உன் சிறைக் கதவுத் திறக்கும்.**

**26**
**பிப்ரவரி**

# இரண்டாம் காளை

"... உன் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, அந்த இரண்டாம் காளையை... சர்வாங்க தகனமாகப் பலியிடக்கடவாய் என்றார்." (நியா.6:26)

இஸ்ரவேலை விடுவிக்க விரும்பின கிதியோன் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான். அதற்கு 'யெகோவா ஷாலோம்' என்று பெயர். 'கர்த்தர் என் சமாதானம்' என்று பலிபீடத்துக்குப் பெயரிட்ட கிதியோன், தேவனோடு சமாதானமாயிருந்தான். ஆகையால் அவன் ஆத்துமாவில் தேவ சமாதானம் நிரம்பியது. வெளியரங்கமாக தேவனோடு சமாதானத்தையும் உள்ளான ஜீவியத்தில் தேவ சமாதானத்தையும் காத்துக் கொள்ளுகிறவனே தேவனுடைய யுத்தத்தை நடத்த முடியும்.

மீதியானியரை வென்று வெற்றி பெறவோ அல்லது அவர்களைக் கொன்று அழித்துப் போடவோ கிதியோனுக்கு பலம் வேண்டுமெனில், முதலாவது அவன் பாகாலின் பலிபீடத்தைத் தகர்க்க வேண்டும். சகோதரனே, நீ பிரச்சனையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென்றால் உன் இதய மேடையிலிருக்கும் தவறான நம்பிக்கைகளை அழித்துப்போடு. இதுதான் தகர்க்கப்பட வேண்டிய பாகாலின் பலிபீடம். அடுத்து நீ செய்ய வேண்டியது உன் இரண்டாம் காளையைப் பலியிடு.

கிதியோனின் தகப்பனுடைய முதலாம் காளை பாகாலுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. எந்த அந்நிய தெய்வத்துக்கும் அர்ப்பணிக்காத இரண்டாம் காளையைக் கிதியோன் தெரிந்துக் கொண்டான். எந்த விக்கிரகத்துக்கும் பலியிடாத இரண்டாம் காளையையே தேவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். இரட்சிக்கப்படுவதற்கு முன்பு ஒரு மனிதனுடைய வாழ்க்கை பிசாசுக்கு அர்ப்பணிக்கப்பட்ட முதலாம் காளை. இதனைக் கர்த்தருக்கு பலியிடக் கூடாது. நீ இரட்சிக்கப்படாதிருப்பாயானால் உன் தாலந்துகளெல்லாம் முதலாம் காளைகள். இவற்றின்மீது தேவன் பிரியம் கொள்ள மாட்டார். இரட்சிக்கப்பட்ட பிறகு உன்னுடைய தாலந்துகள் இரண்டாம் காளையாக மாறுகின்றன. முதலாம் காளை அவன் தகப்பனுக்குச் சொந்தம். இரண்டாம் காளை தேவமனிதனாகிய கிதியோனுக்குச் சொந்தம்.

உன்னை ஊழியத்திற்கென்று ஒப்புக்கொடுக்க துடி துடிக்கிறாயே நீ கர்த்தருக்காக பலியாகப் போகும் இரண்டாம் காளையா? அல்லது உலகம் என்ற பாகாலுக்கென்று வளருகின்ற கொழுத்த முதலாம் காளையா? உன் முதலாம் காளை உலகத்தின் முதன்மையாயிருக்கலாம் ஆனால் தேவ சமூகத்தில் அது ஏற்றுக்கொள்ளப்படாது. தேவ அழைப்பில் பிறந்த காளை இரண்டாம் காளை. மனோ வாஞ்சையில் பிறந்தது முதலாம் காளை.

**இரட்சிக்கப்படாதவன் குயிலைப் போல பாடினாலும் கர்த்தருக்கு அது அருவெறுப்பு. இரட்சிக்கப்பட்டவன் காகம் போல் கரைந்தாலும் கர்த்தருக்கு அது இனிமை.**

27
பிப்ரவரி

# இருக்க வேண்டிய இடத்தில் இரு

"மறுவருஷம் ராஜாக்கள், யுத்தத்திற்குப் புறப்படும் காலம் வந்த போது தாவீதோ எருசலேமில் இருந்துவிட்டார்." (2சாமு.11:1)

ஒருவன் தான் இருக்க வேண்டிய இடத்தில் இல்லாமல், போனால் அது கடும் விளைவுகளை உண்டாக்கும். கர்த்தர் நம்மை அவரது சித்தத்தின்படி சில இடங்களில், சில பொறுப்புகளில் வைக்கிறார். நாம் அந்த இடங்களில் இல்லாமற் போவதைக் குறித்து கருத்தற்றுப் போகிறோம். நமது மனவிருப்பப்படி செயற்பட்டு, கடவுள் குறித்த வேளையை, இடத்தைத் தவறவிடுகிறோம்.

தாவீது யுத்த நாள்களில் தளபதி யோவாபையும், அவனோடு தன் படையையும் அனுப்பி வைத்தான். ஆனால் அவனோ எருசலேமில், தன் அரண்மனையில் தங்கிவிட்டான். அரசன் என்ற முறையில், அவன் தன் கடமையைச் செய்யத் தவறிப் போனான்.

ஓர் நாள் மாலைப்பொழுது, படுக்கையிலிருந்து எழுந்து, அரண்மனை உப்பரிகையின் மேல் உலாத்திக் கொண்டிருந்தான். படுக்கையை விட்டு எழுந்ததும், அவன் செய்ய வேண்டிய வேலை, தேவ சமுகத்தில் கர்த்தரைக் குறித்துத் தியானம் பண்ண வேண்டும். ஈசாக்கு சாயங்கால வேளையில் தியானம் பண்ண வெளியே போயிருந்தான் என்று வேதம் சொல்கிறது. ஆகவே சாயங்கால வேளை தியானவேளை. ஆனால் அந்த வேளையில் உலகத்தாரைப் போல, பொழுது போக்கில் ஈடுபடக் கூடாது.

தாவீது தேவ சமுகத்தைத் தள்ளிவிட்டு, நடைப் பயிற்சியில் நேரத்தைச் செலவிட்டபடியால், தன் மனதை அதன் இஷ்டப்படி அலைய விட்டான். அப்பொழுது குளித்துக் கொண்டிருந்த ஓர் பெண்ணை அவன் பார்த்தான். உடனே மாடியை விட்டு கீழே இறங்கியிருக்க வேண்டிய தாவீது, அவள் மீதுள்ள தவறான ஆசையால், மாடியிலே நின்று விட்டான்.

தேசத்தில் யுத்தம் நடந்துக் கொண்டிருக்கிறது. ராஜாவாகிய அவன் யுத்தக் களத்திற்குப் போகாததால், இப்பொழுது அவன் இதயமே யுத்தக் களமாக மாறியது. சிந்தனை அலைகளை எதிர்த்து நிற்க வேண்டிய அவன், தவறான சிந்தனை அலைகளால் அடித்துச் செல்லப்பட்டு, இச்சையின் கடலில் மூழ்கிப் போனான். அதன் விளைவாக அவன் பொய்க்காரனாக, கொலைகாரனாக, விபசாரக்காரனாக மாறிப் போனான்! இருக்க வேண்டிய இடத்தில் அவன் இல்லாதபடியால் சாத்தான் கண்ணியில் அவன் அகப்பட்டான்.

**உன் மனோவாஞ்சையில் அரண்மனையில் இருப்பதைவிட தேவ சித்தப்படி பட்டயங்களுக்கு மத்தியில் இருப்பது உனக்கு மிகுந்த பாதுகாப்பு.**

28
பிப்ரவரி

# மேன்மையான மகிமை

"காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்... என்றாலும் சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை." (மத்.6:28,29)

நமதாண்டவர் நம்மைக் காட்டிற்கும், அரண்மனைக்கும் என்று இரு இடங்களுக்கு அழைத்துச் செல்கிறார். காட்டிலே அழகான, வாசனையான பூக்களை நமக்குக் காண்பிக்கிறார். பல வண்ணங்களில் காட்டில் காற்றினிலே ஆடி நம்மை மகிழ்விக்கின்றன. அவைகளைப் படைத்த கர்த்தரின் புகழை அவை அறிவிக்கின்றன.

அடுத்து கர்த்தர் நம்மை ஓர் அரண்மனைக்கு அழைத்துச் செல்கிறார். அங்கே சாலொமோனின் கம்பீர உடைகளையும், அதன் மகிமையையும் நாம் பார்க்கிறோம்.

காட்டுப் புல்லின் பூவின் மகிமை, அரண்மனை உடைகளின் மகிமை இவையிரண்டுமே வித்தியாசமானவைகள். நாம் இயல்பாகவே அரண்மனை உடைகளாலே ஈர்க்கப்படுகிறோம். காட்டுப் பூவின் மகிமை நம் கண்ணைக் கவர்ந்தாலும், நம் இதயத்தைக் கவருவதில்லை.

ஆனால் நமது கர்த்தராகிய இயேசு காட்டுப் புல்லின் மகிமையையே மிகவும் மேன்மைப் படுத்துகிறார். இந்த மகிமையை சாலொமோன் முதலாய் உடுத்தவில்லை என்றே இயேசு சொல்கிறார். காட்டுப் பூ எப்படி இவ்வளவு மேன்மை பெற்றது?

சாலொமோனின் உடைகளின் அழகு, நிறம், மென்மை பலரின் முயற்சி. அனேகரின் பிரயாசத்தால் அரசனின் உடைகள் மேன்மையடைந்தன. இது வெளியே இருந்து வந்த மகிமை. ஆனால் காட்டுப் புல்லின் அழகு, நிறம், மென்மை புல்லின் உள்ளேயிருந்து வெளியே வரும் மேன்மை.

உலகக் கல்வி, நாகரீகம், பழக்க வழக்கங்கள், இவைமூலம் மனிதனுக்கு வெளியுலகிலிருந்து கிடைக்கும் மேன்மையைவிட, பரிசுத்த ஆவியின் கிரியைகளினால், உள்ளான மனுஷனிடத்தில் உருவாகும் புதுசிருஷ்டியே உன்னத மேன்மை.

நம் மேன்மை உள்ளேயிருந்து, உலகிற்கு வருகிறதா? அல்லது உலகிலிருந்து நமக்குள்ளே வருகிறதா?

**சித்திரப் பூ மனித அறிவு, சிருஷ்டிப்பு தேவ ஞானம்.**

**1**
**மார்ச்**

# காட்டாறு அல்ல

"என் மணவாளியே! உன் உதடுகளிலிருந்து தேன் ஒழுகுகிறது." (உன்.4:11)

மணவாளன் தன் மணவாளியை மிகவும் பாராட்டுகிறார்; மெச்சிக்கொள்கிறார். அவருடைய பாராட்டுகளில் ஒன்று, அவள் உதடுகளிலிருந்து தேன் ஒழுகுகிறது என்பது.

உதடுகளினின்று பிறக்கும் சொல் தேனைப் போன்று இனிமையாயிருக்கிறது. யாருடைய உதடுகளினின்று? மணவாளியின் உதடுகளினின்று. யார் மணவாளி? சற்று சிந்திப்போம்.

தேன் ஒரே நாளில் உருவாகிறதில்லை. நூற்றுக்கணக்கான தேனீக்கள் பல்வேறு திசைகளில் பறந்து, பல மலர்களிலிருந்து, சேகரிப்பதுதான் தேன். தேன் உருவாக காலமும், உழைப்பும் அவசியம். அதுபோல தேனிலும் இனிமையான தேவ வார்த்தைகள் நம் இதயத்தில் உருவாக நாம் தேவ சமுகத்தில் காத்திருக்க வேண்டும். நீண்ட நேரம் ஜெபம் பண்ண வேண்டும்; வேதத்தைத் தியானிக்க வேண்டும். இந்தப் பிரயாசத்தின் பலனால் நம் இதயத்தில் தேன் போன்ற வேத எழுத்துக்கள் உண்டாகின்றன. இப்படி உண்டாகும் வேத வசனமே, நம் உதடுகளின் வழியாக உலகிற்குக் கொடுக்கப்படுகிறது.

தேன் கண்களைத் தெளிவிக்கும். நம் இனிய வேத வார்த்தைகள் தடுமாறுவோருக்குத் தெளிவான தரிசனத்தைக் கொடுக்கும். மிகவும் பலவீனமான யோனத்தானுக்குத் தேன் பலத்தையும், ஜீவனையும் கொடுத்தது போல், நம்மிடமிருந்து புறப்படும் வேதவார்த்தையும், விசுவாசத்தில் பலவீனமாக இருப்போருக்கு நல்ல பலத்தைக் கொடுத்து, விசுவாசத்தைப் பலப்படுத்துகிறது.

தேன் காட்டாறுபோல் பாய்ந்து ஓடாது. வேத வாக்கியங்கள் மடை திறந்த வெள்ளம் போல் பாய்ந்து வராது. தேனைப் போல சொட்டுச் சொட்டாகவே கிடைக்கும். பொறுமையாய்க் காத்திருந்து இந்தத் தேன் துளிகளை நம் இதயப் பெட்டகத்தில் சேகரிக்க வேண்டும். இதற்குப் பொறுமையான காத்திருப்பும், ஆவிக்குரியப் பிரயாசையும் தேவை.

நாம் கர்த்தரின் மணவாளியாவதற்கு இந்தக் காத்திருப்பும், பிரயாசையும் தேவை.

**உலகத்தின் உரைநடை கரையை உடைக்கும் காட்டாறு.**
**பரலோகத்தின் செய்திஉரை இதயத்தில்விழும் ஞானத்துளிகள்.**

2
மார்ச்

# உறவின் சத்தம்

"... ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின் செல்கின்றன. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அவனை விட்டோடிப்போம்."
(யோவான் 10:4,5)

மேய்ப்பனது சத்தத்தை ஆடுகள் அறியும். ஆகவே அவனை அவை பின்தொடர்கின்றன. அவருடைய சத்தம் என்ன? வேதப் புத்தகமே அவருடைய சத்தம். கர்த்தரின் குரலைக் கேட்க வேண்டுமெனில், வேதத்தை நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

அப்பாதான் பேசுகிறார் என்று பிள்ளைகளுக்கு நிச்சயமாய்த் தெரிந்திருந்தாலும், என்ன பேசுகிறார் என்று சில சமயம் தெரியாமற் போய்விடும். அப்பொழுதெல்லாம் நாம் அப்பாவின் எதிர்பார்ப்பிற்கு எதிராக செயற்பட்டுவிடும் ஆபத்து ஏற்படுகிறது. அதுபோலவே கர்த்தரின் வார்த்தை – சத்தம் என்று தெளிவாய் அறிந்திருந்தும், அவரது செய்தியை நாம் சரியாய் விளங்கிக் கொள்ளாவிட்டால், நாம் வித்தியாசமான வழிகளில் செயற்பட ஆரம்பிப்போம். அதன் விளைவே பலவிதமான வேற்று உபதேசங்களின் தோற்றமும், வளர்ச்சியும். இன்று திருச்சபையில் நிலவும் உபதேசக் குழப்பத்திற்குக் காரணம், அவரது சத்தத்தை சரியாய்ப் புரிந்துக் கொள்ளாமையே.

சர்வ வல்லமையுள்ள தேவன் தன்னை ஒரு புத்தகத்திற்குள் அடக்கி வைக்கவில்லை. தேவனது திட்டம், நோக்கம், சித்தம் இவையெல்லாமே இந்த வேதப் புத்தகத்தில் அடங்கியிருந்தாலும், நம்மோடு உள்ள தனிப்பட்ட உறவுக்காக, ஆலோசனைக்காக வேதப் புத்தகத்திற்கு மேலாகப் பேசுவார். அந்தச் சத்தம் வேதப் புத்தகத்தின் சத்தத்திற்கு மாறாக இருக்காது, மேலாக இருக்கும். (கூடுதலாக இருக்கும்) இந்தச் சத்தத்தை நாம் தெளிவாய்க் கேட்க வேண்டும்.

நம்முடைய சில பிரச்சனைகளுக்கு வேதப் புத்தகத்தில் பதில் இல்லாமையால், நம் இஷ்டப்படி நடக்கக் கூடாது. நாம் கர்த்தரை நோக்கிக் கூப்பிடும் பொழுது, அவர் தம் சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துவதே, வேதத்திற்கு மேலான வெளிப்பாடு. வேதத்திற்கு வெளியே தேவ வெளிப்பாடு இல்லை; ஆனால் வேதத்திற்கு மேலாக நமக்கு வெளிப்பாடு உண்டு. ஆகவே வெளிப்படுத்தப்பட்ட சத்தமாகிய வேதத்தையும், அனுதினம் நம்மோடு தேவன் கொள்ளும் உறவின் சத்தத்தையும் நாம் கேட்க வேண்டும்.

**வேத வார்த்தையின் சத்தத்தையும், வார்த்தையைத் தரும் ஆவியானவரின் சத்தத்தையும் நாம் கேட்க வேண்டும்.**

3
மார்ச்

# உன் செயலில் எச்சரிக்கையாயிரு

"கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்; அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும் என்றார். அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: கலகக்காரரே கேளுங்கள் உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப் பண்ணுவோமா என்று சொல்லி கன்மலையைக் கோலினால் இரண்டு தரம் அடித்தான்." (எண்.20:8,10-11)

வனாந்தரப் பாதையில் இஸ்ரவேலர் தாகத்தினால் சோர்ந்து தங்களுக்குத் தாகம் தீர்க்க தண்ணீர் வேண்டும் என்று கேட்டது நியாயமான கோரிக்கை. கர்த்தரும் அந்தக் கோரிக்கையை நியாயமானது என்று ஏற்றுக் கொண்டு அவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கச் சம்மதித்தார். அவர்கள் தண்ணீர் கேட்டதினால் கர்த்தர் கோபப்படவில்லை. அவர்கள் கண்களுக்கு முன்னே கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள், அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும் என்று மோசேயிடமும் ஆரோனிடமும் கர்த்தர் சொன்னார். மோசேயோ மிக ஆத்திரமடைந்து ஜனங்களைப் பார்த்து; கலக்கக்காரர்களே நாங்கள் உங்களுக்குத் தண்ணீர் புறப்படப் பண்ணுவோமோ என்று உரத்த சத்தமிட்டார். கர்த்தர் அமைதியாயிருந்தபோது மோசே அமைதியாய் இருக்க தவறிவிட்டார். ஜனங்களுக்கு தண்ணீர் கொடுக்க கர்த்தர் மனவிருப்பத்தோடு இருந்தபோது மோசே மன எரிச்சலோடு இருந்தார். இது தேவனுடைய ஊழியக்காரனுக்கு அழகல்ல. மேலும் கர்த்தரின் கட்டளைக்கு மாறாக மோசே கன்மலையை இரண்டு முறை அடித்தார். இதனால் கர்த்தர் மிகுந்த கோபங்கொண்டு வாக்குத்தத்த நாட்டில் அவர் பிரவேசிக்க தடை பண்ணினார். இது கடுமையான தண்டனை என்று நாம் எண்ணக் கூடும். இது ஊழியக்காரனுக்கு தகுதியான தண்டனைதான். ஏன்?

கடவுள் மோசே கன்மலையின் முன்னே நின்று பேசுவதின் மூலம் இஸ்ரவேலருக்கு ஓர் பாடத்தைக் கற்றுக் கொடுக்க விரும்பினார். அந்தக் கன்மலை நமது கர்த்தராகிய இயேசு. மோசே முன்னொரு தடவை கன்மலையை அடித்தார்; தண்ணீர் சுரந்துவந்தது. இது இயேசு சிலுவையில் அடிக்கப்பட்டதும் அதனால் உண்டான இரட்சிப்பும். மீண்டும் கர்த்தரின் மீட்பு அவர்களுக்குத் தேவைப்பட்டால் கன்மலையாகிய கிறிஸ்துவிடம் பேசினால் ஜெபித்தால் போதும். மோசேயோ தேவ திட்டத்திற்கு மாறாக மீண்டும் கன்மலையை அடித்ததால், கிறிஸ்து மீண்டும் மீண்டும் பலியாக வேண்டும் என்ற தவறான செய்தியை அவரது செயல் கொடுத்துவிட்டது. மோசேயின் செயல் சிறியதேயாயினும், அதன் விளைவு கடுமையானது. ஆகவே கர்த்தர் அவனைத் தண்டித்தார்.

**பல மணிநேர உபதேசத்தின் பலனை**
**ஒரு நிமிட தவறான செயல் கெடுத்துப் போடும்.**

4
மார்ச்

# இடறலாயிராதே

"நாங்களும் எங்கள் மிருகங்களும் இங்கே சாகும்படி, நீங்கள் கர்த்தரின் சபையை இந்த வனாந்தரத்திலே கொண்டு வந்தது என்ன." (எண்.20:4)

கர்த்தருடைய அற்புதங்களையும் அதிசயங்களையும் வழிநடத்துதல்களையும் அனுபவித்த இஸ்ரவேலர் வாழ்க்கையில் நெருக்கங்களை சந்திக்கும் போதெல்லாம் நிலை தடுமாறி போயினர். விசுவாசி பதறான் என்பதற்கு மாறாக மிகவும் பதறிப் போனார்கள். அப்படி அவர்கள் பதறிச் சொன்ன வார்த்தைகள்தான் நீங்கள் மேலே வாசித்த வார்த்தைகள். எங்களைச் சாகும்படி இங்கே கொண்டு வந்தது என்ன என்று தேவனை எதிர்த்தனர். ஏன் தங்களை இந்தக் கெட்ட இடத்திற்கு கொண்டு வந்தார் என்று கர்த்தரை குறை கூறினார்கள்.

அவர்களுடைய பிரச்சனை நியாயமானது. அவர்களுக்கும் மிருகஜீவன்களுக்கும் குடிக்கத் தண்ணீர் இல்லை. இது கடுமையான பிரச்சனைதான். ஆனால் அவர்கள் முறையிட்ட விதம் சரியல்ல. தேவனை எதிர்த்து அவர்கள் கலகம் பண்ணியது தவறு. ஆனாலும் கர்த்தர் அவர்களைக் கடிந்துக் கொள்ளவில்லை. அவர்களது கோரிக்கையை நிறைவேற்றவே கர்த்தர் விரும்பினார்.

ஆனால் மோசேயோ ஜனங்கள் மீது கடுங்கோபம் கொண்டு உங்களுக்கு தண்ணீர் தரவேண்டுமோ என்று கேட்டார். கர்த்தர் அமைதியாயிருக்கும் பொழுது மோசே ஆத்திரப்பட்டது தவறு. அவனுடைய ஆத்திரத்தில் கர்த்தருடைய கட்டளையைச் சரியாய் விளங்கிக்கொள்ள முடியாமல் போனான். கன்மலையைப் பார்த்து பேசு என்று கர்த்தர் சொல்லியிருந்தும் அவன் கன்மலையை இரண்டுமுறை அடித்தான். ஆகவே கர்த்தர் மோசே மீது கோபங் கொண்டார்.

மோசே தவறு செய்தாலும் கர்த்தர் சரியானக் காரியத்தையே செய்தார். கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப் பண்ணினார். ஜனங்களுடைய தவறானச் செயல் தேவனுடைய நோக்கத்தைத் தடுத்து நிறுத்த முடியாது. வாக்குத்தத்த நாட்டுக்குப் போகமுடியாதபடி அவன் தவறு அவனைத்தான் தடுத்தது. அவனுடைய தவறு தேவனையோ தேவ நோக்கத்தையோ பாதிக்காது. மோசே அந்தத் தேசத்துக்குள் போகவே முடியவில்லை. மோசே தண்டிக்கப்படாதிருந்தால் மோசேயின் செயல் தவறான முன்னுதாரணமாகிவிடும். அவன் ஆசையாய் நடத்தி வந்த தன் ஜனங்களோடு தன் இலட்சிய நாட்டை அடைய முடியவில்லை. மிருக ஜீவன்கூட கானானுக்குள் நுழைந்தது, ஆனால் மோசே நுழைய முடியவில்லை. ஏனெனில் மூத்த விசுவாசியின் தடுமாற்றம் அநேகரை இடறப் பண்ணும். ஆத்திரத்தில் மோசே தேவனது செய்தியைச் சரியாய்க் கேட்கத் தவறினான்.

**ஆடு, மேய்ப்பனது சத்தத்தைக் கேட்கும்;**
**ஆட்டுக்குட்டி தாய் ஆட்டின் சத்தத்தையே கேட்கும்.**
**தாய் ஆடு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.**

**5**
**மார்ச்**

# சூழ்நிலைகளுக்குத் தப்புவாய்

"அப்பொழுது அவன் உற்றுப்பார்த்தான்; முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமல் இருந்தது." (யாத்.3:2)

முட்செடி எளிதில் தீப்பற்றி எரிந்து முழுதும் சாம்பலாய்ப் போய்விடும். ஆனால் ஓரேப் பகுதியில் மோசே கண்ட முட்செடி பற்றி எரிந்தும் அது அழிந்துபோகவில்லை. இது ஒரு ஆச்சரியமானக் காட்சி. மோசே கிட்டப்போய் பார்க்கும் பொழுது இன்னொரு அதிசயத்தைக் கண்டான். சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவனை அவன் முட்செடியில் கண்டான். வாழ்வும், வசதியும் நிறைந்த ஒரு சூழ்நிலையில்தான் கர்த்தர் ஒருவரோடு இருக்கிறார் என்று நம்புவது நம்முடைய வழக்கம். துன்பங்கள், துயரங்கள், வேதனைகள் ஒருவனை நெருக்கும் போதெல்லாம் ஒருவனோடு கர்த்தர் இல்லை என்ற முடிவுக்கு வந்துவிடுகிறோம். இது நல்ல முடிவல்ல. முட்செடியில் மோசேக்குத் தோன்றின தேவன் நமக்குச் சொல்லும் செய்தி என்னவெனில், அக்கினிப் போன்று பற்றியெரியும் உபத்திரவங்களிலும் நான் உன்னோடிருப்பேன்.

வெந்துபோகாமலிருந்த முட்செடி மற்றொரு செய்தியையும் அறிவிக்கிறது. பார்வோனின் கோபம் இஸ்ரவேலருக்கு விரோதமாக எவ்வளவு பற்றி எரிந்தாலும் இஸ்ரவேலர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். எபிரேய வாலிபர்களை பாபிலோனிய அக்கினிச்சூளை எவ்வளவு பற்றியெரிந்தாலும் பாதிக்காததுபோல கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக சாத்தான் கொண்டுவருகிற எந்த அக்கினி சோதனையும் ஒன்றுஞ் செய்யாது. எபிரேய வாலிபர்கள் சூளையின் வாய்க்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள். ஆனால் அதன் அக்கினி நாவுகளுக்குத் தப்பிவிக்கப்பட்டார்கள். தானியேல் சிங்கக் கெபிக்குள் தள்ளப்பட்டார், சிங்கங்களின் பற்களுக்குத் தப்புவிக்கப்பட்டார்.

கடுமையானச் சோதனைகள் உன்னைச் சந்திக்கலாம். ஆனால் சோதனைகள் உன்னை மேற்கொள்ளாது. சத்துருவின் அம்புகள் உன்னை நோக்கி வரும்; உன்னைக் காயப்படுத்தாது. பார்வோனின் கோபம் இஸ்ரவேலருக்கு விரோதமாக பற்றி எரிந்தது. எகிப்தியர் குதிரைகளோடும் இரதங்களோடும் இஸ்ரவேலரை சிறைபிடிக்கத் தீவிரித்து ஓடினார்கள். ஆனால் அலைகடலில் அமிழ்ந்து மாண்டார்கள்.

உனக்கெதிராக ஆயுதங்கள் உருவாக்கப்படும், அதைக் கண்டு பயப்படாதே. அது உன்னை நோக்கிப் பாய்ந்து வரும், பயப்படாதே. அந்த அம்பு வாய்க்காதே போகும். அக்கினி பற்றியெரியும். உன்னையோ காயப்படுத்தாது.

**பெருவெள்ளம் உன் மீது பொங்கியெழுந்தால்**
**நீ நீர்மூழ்கிக் கப்பல் ஆவாய்.**

**6**
**மார்ச்**

# முடிவை எண்ணிப்பார்

"நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக என்றான்." (எண்.23:10)

ஒரு காரியத்தின் ஆரம்பத்தைவிட அதன் முடிவு நன்றாயிருக்க வேண்டும். அப்படியில்லையெனில், நன்றாய் ஆரம்பித்து கேவலமாய் முடிந்ததுபோலிருக்கும். இந்த முடிவைக் கண்டு உலகம் பரிகாசம் பண்ணும். ஆகையால் ஒரு காரியத்தின் முடிவைக் குறித்து நாம் கருத்தாய் இருக்க வேண்டும். பிலேயாம் தன் வாழ்க்கையின் முடிவைக் குறித்து சிந்தித்தான். அவனுடைய வாழ்க்கையின் முடிவு ஒரு நீதிமானுடைய வாழ்க்கையின் முடிவுபோல் இருக்க வேண்டுமென்று விரும்பினான். ஆனால் வாழ்க்கையின் முடிவு மரணமல்ல. மரணத்துக்குப்பின் வாழ்க்கைத் தொடருகிறது. பரிசுத்தவான்களுக்கு மரணத்துக்குப்பின் நித்திய ஜீவன் தொடருகிறது. துன்மார்க்கருக்கு நித்திய மரணம் தொடருகிறது. ஆகவே மரணம் வாழ்க்கையின் முடிவு அல்ல. மரணம் வாழ்க்கையின் முடிவாயிருந்தால் மனிதன் எப்படியும் வாழலாம். ஆங்கில கவிஞன் ஷெலில் கூறுகிறான்: மரணம் வாழ்க்கையின் முடிவானால் ஏன் இந்தப் போராட்டம்? (If death is an end of life, why should man struggle?)

ஆனாலும் அவன் தன் மரணத்தைக் குறித்து எண்ணியது நல்லது. நாம் எல்லாரும் கடைசியில் முடிக்க வேண்டியது மரணத்தையே. ஆகவே நாம் ஜாக்கிரதையாய் நடத்தி முடிக்க வேண்டியது மரணத்தையே. வேதனையில்லாமல் சாகவேண்டும், படுக்கையில் விழுந்து மற்றவர்களைக் கஷ்டப்படுத்தாமல் போய்விட வேண்டும் என்று சராசரி மனிதன் விரும்புகிறான். ஆனால் ஒரு கிறிஸ்தவன் பரிசுத்தவானாக, விசுவாசியாக மரிக்க வேண்டும். எந்த நிலையில் மரிக்கிறானோ அந்த நிலையில்தான் எழுந்திருப்பான். பிலேயாம் நீதிமானைப்போல மரிக்க வேண்டும் என்று எண்ணியது நல்லது. ஆனால் அவன் துன்மார்க்கனாய் மடிந்துபோனானே. வெறும் வாஞ்சை மாத்திரம் நீதிமானாய் வாழ்க்கையை முடிக்காது. நீதிமானாய் மரிப்பதற்கு ஒரு ஆயத்தம் தேவை. அது என்ன? நீதிமானாய் வாழ்வதே நீதிமானாய் மரிப்பதற்கு ஆயத்தம். எப்படி நீதிமானாவது? எந்தக் கிரியையும் ஒரு மனிதனை நீதிமானாக்காது. விசுவாசமே ஒரு மனிதனை நீதிமானாக்குகிறது. அதாவது இயேசு கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்து பரிசுத்தமாய் வாழ்வதே நீதிமானுக்குரிய வாழ்க்கை.

பிலேயாம் நீதிமானாய் வாழவில்லை. பிலேயாம் கூலிக்காக வஞ்சகம் செய்தான் என்று யூதா நிருபம் அவனைக் கண்டிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பை முன்னறிவித்தவன் பிலேயாம். கர்த்தரின் வார்த்தைகளையே பேச விரும்பினவன் பிலேயாம். நீதிமானாய் மரிக்க விரும்பினவன் பிலேயாம். ஆனால் துன்மார்க்கனாய் அவன் மடிந்து நித்திய மரணத்தை தழுவிக்கொண்டான். ஏன்? அவனுக்குள்ளிருந்த வஞ்சனையும், பண ஆசையும்.

**சிந்தனையில் ஆத்துமா மலை உச்சியிலும், அன்றாட வாழ்க்கையில் ஆத்துமா பள்ளத்தாக்கிலும் சஞ்சரித்தால் முடிவு பரிதாபமே.**

7
மார்ச்

# சோதனைக்குப் பிறகு

"பின்னும் கர்த்தர்: சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுப்போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான்." (லூக்.22:31)

பக்தன் யோபுவைச் சோதிக்கிறதற்கு சாத்தான் தேவனிடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டான் என்று வேதம் சொல்லுகிறது. சாத்தான் நம்மைச் சோதிப்பதற்கு தேவனிடத்தில் உத்தரவு கேட்கும்போதெல்லாம் தேவன் சாத்தானுக்கு உத்தரவு கொடுப்பார் என்ற எண்ணம் விசுவாசிகள் மத்தியிலிருக்கிறது. யோபுவினுடைய காலத்திற்குப் பிறகு இந்த உத்தரவு பெறும் உரிமை முடிந்துவிட்டது என்று சொல்வோரும் உண்டு. சீஷர்களைச் சோதிக்க இயேசு சாத்தானுக்கு உத்தரவு கொடுத்தார் என்பதிலிருந்து இப்பொழுதும் அந்த உரிமை நீடிக்கிறது என்று அறிகிறோம்.

சாத்தானுக்கு உத்தரவு கொடுப்பது என்றால் என்ன? ஒரு தேவப் பிள்ளையின் மீது அதிகாரம் செலுத்த சாத்தானுக்கு ஒருபோதும் உத்தரவு கொடுக்கமாட்டார். ஓர் தேவப் பிள்ளையின் பக்திக்கும் விசுவாசத்திற்கும் எதிராக சாத்தான் அறைகூவல் விடுக்கும்போது தம்முடைய பிள்ளை இடறிப் போகமாட்டான் என்ற நம்பிக்கையில் அந்தச் சோதனைகளைத் தேவன் தடுக்கிறதில்லை. இதைத்தான் தேவனுடைய உத்தரவு என்று சொல்லுகிறோம். தடுக்கவில்லையென்றால், "விசுவாசி எப்படியும் போகட்டும். விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் நின்றால் நிற்கட்டும் இல்லாவிட்டால் விழட்டும் என்று அலட்சியமாயிருப்பதில்லை. சாத்தானுக்கு உத்தரவு கொடுத்த இயேசு தன் பிள்ளை இடறிப் போகாதிருக்க ஊக்கமாக ஜெபம் பண்ணினார். சாத்தானிடம் நம்மை தேவன் ஒப்படைக்கவில்லை. உண்மையில் சாத்தானைத்தான் நம்மிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். நம்மிடத்தில் அவன் தோற்றுப் போகவேண்டும் என்பது அவர் விருப்பம். ஏற்கெனவே கர்த்தரிடத்தில் தோற்றுப்போன அவனுக்கு நம்மைச் சோதிக்க ஒரு சந்தர்ப்பத்தை இயேசு கொடுக்கமால் இருந்திருக்கலாமே என்ற கேள்வி எழலாம். தேவன் அனுமதிக்கும் சோதனைகள் நமக்கு நன்மையே தவிர தீமையல்ல. கர்த்தர் சாத்தானுக்கு கொடுத்த உத்தரவு சுளகினாலே சீஷர்களைப் புடைப்பதற்கு. அப்படி புடைப்பதினால் உமிகள் பறந்துவிடும், மணிகள் தங்கிவிடும்.

கர்த்தருக்குள் நாம் சோதனையில் நின்றுபிடிக்கும் பொழுது நம்முடைய தீய சுபாவங்கள் நீங்கிவிடும், திவ்விய சுபாவங்கள் தங்கிவிடும். இந்தச் சோதனைக்கு முன்பு பேதுரு 'இவர்களெல்லாரும் உம்மை மறுதலித்தாலும்' என்று பதினோரு பேரைத் தள்ளிவிட்டு பெருமையோடு தன்னைத் தனிமைப்படுத்தினான். இந்தச் சோதனைக்குப் பிறகு இந்தப் பெருமை என்ற உமி நீங்கி பதினோரு பேரோடுகூட எழுந்து தாழ்மையாய் நின்றான். இந்தத் தாழ்மைதான் அவனுக்குக் கிடைத்த கோதுமை மணி. சோதனைக்கு முன்பு இயேசுவை அறியேன் என்று மறுதலித்த பேதுரு சோதனைக்குப் பிறகு 'இயேசுவே கிறிஸ்து' என்று தைரியமாய் பிரசங்கித்தான். சாத்தான் அவனைப் புடைத்த பிறகு அவன் அருமையானக் கோதுமை மணியாய் விளங்கினான். பக்தன் யோபு சொல்வது போல் 'நான் சோதிக்கப்பட்ட பின் பொன்னாக விளங்குவேன்' என்பதே நம் அனுபவமாக இருக்கட்டும்.

**கடுங்காற்றுக்கு வளைந்து வளரும் செடி, நிமிர்ந்து நிற்கும் மரமாகும்.**

8
மார்ச்

# நீ கறுப்பா அல்லது அழகா?

"நான் கறுப்பாயிருந்தாலும் அழகாயிருக்கிறேன்." (உன்.1:5)

கறுப்பு நிறத்தைப் பொதுவாக நாம் விரும்புகிறதில்லை. ஆனால் தலை முடி கறுப்பாக இருக்கவே விரும்புகிறோம். ஆகையால் கறுப்பு வெறுப்பிற்கு இடமானதொன்று என்று முழுமையாக சொல்ல முடியாது. ஆனால் பெண் பார்க்கும் பொழுது, பெண் சிகப்பாக அழகாக இருக்க வேண்டும் என்று கறுப்பு மாப்பிள்ளையும் விரும்புகிறான். சூலமித்தியாளோ தான் கறுப்பாக இருந்தாலும் அழகாக இருக்கிறதாகவே கூறுகிறாள்.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஜென்ம சுபாவம் உண்டு. இந்தச் சுபாவம் மனிதனைப் பாவத்திற்கே தூண்டுகிறது. இப்படி பாவத்தைத் தூண்டும் சுபாவம் கறுப்பாக இருக்கிறது. இது விரும்பத்தக்க சுபாவம் அல்ல. நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன்... நான் அல்ல எனக்குள் வாசமாயிருக்கும் பாவமே அப்படிச் செய்கிறது என்று பவுல் கூறுகிறார். சுபாவத்தின்படி இதுதான் மனிதனின் நிலை. இதுதான் உள்ளான கறுப்பு. ஆம் ஜென்ம சுபாவத்தின்படி நாமெல்லாரும் கறுப்புதான். ஆனால் கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தினால் நான் மீட்கப்பட்டிருக்கிறபடியால், என் செயல்களில் அழகாயிருக்கிறேன் என்பதே நம் அனுபவமாயிருக்க வேண்டும்.

நான் கறுப்புதான் என்று ஒதுங்குவது சரி அல்ல. அதற்கு மாறாக இப்பொழுது மிகவும் துணிகரமாக நான் பரிசுத்தவான் என்று மற்றவர்களை அற்பமாய் எண்ணுவது, மிகவும் தவறு. நாம் ஜென்ம சுபாவத்தின்படி கறுப்பாக இருந்தாலும், இந்தக் கறுப்பு நிறத்திலேயே நம் காலத்தை ஓட்ட வேண்டியதில்லை. நாம் இயேசு கிறிஸ்துவின் புண்ணிய ரத்தத்தால் கழுவப்பட்டு, நாளுக்கு நாள் அழகாய் மாறிவருகிறோம்.

ஆகவே நமது முதற் பிறப்பினால் நமக்குக் கிடைத்த இருளின் நிறமாகிய கறுப்பு நிறத்தை, மறுபிறப்பினால் உண்டாகும் இரட்சண்ய சந்தோஷம் நம்மை அழகான மலராகச் சுட்டிக்காட்டுகிறது. ஆகவே ஜென்ம சுபாவப்படி "நாம் கறுப்பு" என்ற தாழ்வு மனப்பான்மையிலிருந்து இறங்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் நாம் புதுசிருஷ்டி எனும் மேலான இடத்தையே நாடுவோம்.

**பிறப்பினால் நீ கரித்துண்டு; மறுபிறப்பினால் நீ வைரம்.**

9
மார்ச்

# அமைதியாயிரு

"இயேசு அவர்களை நோக்கி; அவளை விட்டுவிடுங்கள்; ஏன் அவளைத் தொந்தரவு செய்கிறீர்கள்?" (மாற்கு 14:6)

ஒரு பெண் தன் ஆண்டு வருமானம் முழுவதையும் (ரூ.18,000) செலவிட்டு ஓர் விலையேறப் பெற்ற தைலத்தை இயேசுவுக்கு அர்ப்பணித்தாள். சீமோன் வீட்டிற்கு வந்த இயேசுவுக்கு அந்நாள்களில் முறைமையின்படி நெற்றியில் ஓர் சொட்டு ஒலிவ எண்ணெயைத் தடவி வரவேற்பது வழக்கம். இயேசுவை அழைத்த சீமோனோ அப்படிச் செய்யத் தவறிப் போனான். ஆனால் இந்தப் பெண்ணோ, மிக அதிகமாக ஒரு பரணி நிறைய தைலத்தை அவருக்கு அர்ப்பணித்தாள்.

இயேசுவுக்கு இவ்வளவு கொடுக்க வேண்டும் என்பது பிரமாணம். அவருக்கு எவ்வளவு கொடுக்கலாம் என்பது அன்பின் எல்லை. அந்தப் பெண் ஆண்டு முழுவதற்குமானத் தன் உழைப்பு, தியாகம், சேமிப்பு எல்லாவற்றையும் இயேசுவுக்கே கொடுத்தாள். இந்த அன்பின் கொடையை இயேசுவைச் சுற்றியிருப்போர் விளங்கிக் கொள்ளாமல் அவளுக்கு விரோதமாகப் பேசினார்கள்.

நீங்கள் செய்யும் ஆயிரம் செயல்களைக் குறித்து உலகம் அமைதியாயிருக்கும். ஆனால் கடவுளுக்குக்கென்று ஏதேனும் செய்தால் மட்டும், உலகம் உங்களைக் கடுமையாக விமர்சிக்கும். கர்த்தருடைய ஊழியத்திற்கு நீங்கள் நேரத்தைச் செலவழித்தால், வீட்டுக் கடமையைச் செய்யவில்லை என்று குறை சொல்வார்கள். ஊழியத்திற்குப் பணம் கொடுத்தால், அது வீண் செலவு என்று ஆத்திரப்படுவார்கள். அப்பொழுது உங்கள் மனம் வருத்தம் அடைகிறதா? கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் நல்நடக்கையை விமர்சிக்கிறார்களா? மனமடியச் செய்கிறார்களா?

அந்தப் பெண்ணை சீஷர்கள் கடுமையாக விமர்சிக்கும் பொழுது அவள் மௌனமாக இருந்தாள். ஆகவே அவளுடைய பிரச்சனையில் கர்த்தர் தலையிட்டார். எல்லோரும் அவள் செயலை, வீண் காரியம் என்று சொன்ன பொழுது, இயேசு அதனை நற்கிரியை என்று பாராட்டினார். ஆகவே உலகம் உன்னை விமர்சிப்பதைப் பற்றிக் கவலைப்படாதே; கர்த்தர் என்ன சொல்கிறார் என்று மாத்திரம் கவனி.

**உன் கிறிஸ்தவ தியாகத்தின்மேல் உலகம் சுமத்துவது பழி. உன் தியாக வாழ்க்கைக்கு இயேசு தரும் முத்திரை 'பலி'.**

10
மார்ச்

# நெருக்கடியில்

"அத்தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருந்தபடியால், ஆபிரகாம் எகிப்து தேசத்திலே தங்கும்படி அவ்விடத்துக்குப் போனான்." (ஆதி.12:10)

மாடு முட்டவரும் பொழுது அண்மையில் இருக்கும் வீட்டிற்குள் ஓடி ஒளிந்துக் கொள்வது இயல்பான ஒன்று. ஆனால் வாழ்க்கையில் நெருக்கடி ஏற்படும் பொழுதெல்லாம் இப்படி அவசரமாய் ஓடி ஒளிவது சரியல்ல. கர்த்தரின் பாதத்தில் அமர்ந்து, இந்த நெருக்கடியில் நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்பதே சரி.

கர்த்தரின் வழியில் கீழ்ப்படிதலோடு ஆபிரகாம் சென்று கொண்டிருக்கும்பொழுது, ஓர் தேசத்தில் தங்கியிருக்கும் பொழுது கடும் பஞ்சம் ஏற்பட்டது. உண்மையில் இது பெரிய பிரச்சனைதான். ஆனால் ஆபிரகாம் என்ன செய்திருக்க வேண்டும்? தன்னை அழைத்து, நடத்திக் கொண்டிருக்கும் அன்பானத் தேவனை நோக்கி வேண்டுதல் செய்து, அவர் சித்தத்தை அறிய வேண்டாமா?

எகிப்து நாட்டின் கோதுமைக் களஞ்சியம், அவனுடைய அறிவுக்குச் சரியான வழியாய்த் தெரிந்தது. ஆனால் அவனுடைய விசுவாசத்திற்கு அது சரியான வழியாய்த் தெரிந்திருக்காதே. தன் சுயசிந்தனை சுட்டிக் காட்டிய எகிப்தை நோக்கி அவன் சென்றது தவறானது.

தேவனுடைய வழியை விட்டு விலகினவுடனே, ஆபிரகாமிற்குப் பொய் சொல்லும் சுபாவம் உண்டாயிற்று. தன் மனைவியையே தன் சகோதரி என்று பொய் சொன்னான். தன் சொந்த நாட்டை விட்டுத் தைரியமாய்ப் புறப்பட்ட ஆபிரகாம், கடவுளின் சித்தத்திற்கு மாறாக எகிப்து தேசத்தில் நுழைந்தவுடன், தன்னைக் கொன்று போடுவார்களே என்று பயந்தான்.

எகிப்தை விட்டுப் புறப்படும் பொழுது, எகிப்து தந்த பொக்கிஷத்தோடு ஆபிரகாம் திரும்பிவந்தான். எகிப்துக்கு வந்தது நல்லது என்று ஆபிரகாம் நினைத்திருப்பான். ஆனால் தேவனைவிட்டு விலகுவது ஆசீர்வாதமாயிருக்கவில்லை. எகிப்தின் பொக்கிஷங்களுக்கு மத்தியில், ஆகார் என்ற பிரச்சனைக்குரியவளும் வந்தாள். அவளுடைய வருகை பஞ்சத்தைவிட அதிகக் கடுமையான விளைவுகளை உண்டாக்கியது.

**கொதிக்கும் பானைக்குப் பயந்து**
**எரியும் அடுப்பில் குதித்துவிடாதே.**

11
மார்ச்

# தெளிந்த புத்தி

ஆகையால் நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். (1பேது.1:13)

மனிதன் தன் சிந்தனைகளினால் அலைக்கழிக்கப்படுகிறான். மேலும் அவன் காதில் விழும் பல்வேறு செய்திகளைக் கேட்டுக் கலங்கிப் போகிறான். பலருடைய வார்த்தைகள் அவனது சிந்தனையைப் பல்வேறு திசைகளில் அலையவிட்டு, அவனை நிலை தடுமாறிப் போகப் பண்ணுகின்றன. அதனால் அவனால் சத்தியப் பாதையில் தொடர்ந்து நடக்க முடியாதபடி அவனுடைய சிந்தனையில் தெளிவற்றவனாகப் போய்விடுகிறான். சிந்தனையில் தெளிவில்லாதவன் எந்த வழியிலும் நடக்க ஆரம்பித்து, தேவசித்தத்திற்கு வெகுதொலைவில் சஞ்சரிக்க ஆரம்பிக்கிறான். இது பரிதாபமே.

பரிசுத்த பேதுரு, நம் சிந்தனையைக் காத்துக் கொள்ள அருமையான ஆலோசனையைக் கூறுகிறார், உங்கள் மனதின் அரையைக் கட்டுங்கள் என்பதே. அரை என்றால் பாதி என்று அர்த்தம். மனதைப் பேதுரு ஓர் ஆளாகப் பாவித்து, அந்த ஆளின் அரையை அதாவது இடுப்பைக் கட்டிக் கொள்ள வேண்டும் என்கிறார். இதனைச் சற்று விபரமாகப் பார்ப்போம்.

யூதர்கள் நீண்ட வஸ்திரங்களை அணிந்திருப்பார்கள். காற்றில் அவர்களுடைய வஸ்திரங்கள் நாற்றிசையிலும் பறக்க அவர்களால், நிதானமாக நடக்க முடியாததால் ஓர் கச்சையினால் இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொள்வார்கள். மனிதனின் சிந்தனைகள் மனதில் பல்வேறு திசைகளில் பறக்கும் பொழுது மனதின் இடுப்பை, வசனம் என்ற கச்சையால் கட்டினால், சிந்தனை வஸ்திரம் ஒழுங்காகக் கட்டப்படும். அப்படிக் கட்டப்பட்டிருந்தால், ஆவிக்குரிய வாழ்க்கையில் தடுமாறாமல் நடக்கலாம்.

யார் யார் என்ன சொன்னாலும், வேதவசனத்தினால் கட்டப்பட்ட மனிதன் கலங்கிப் போகாமல் உறுதியாயிருப்பான். வசனம் என்ற கச்சையில்லாவிட்டால், சிந்தனை சிதைந்து மனிதனே உருக்குலைந்து போய்விடுவான்.

நம்மைச் சுற்றிலும் ஆயிரமாயிரம் செய்திகள் கேட்கின்றன. மனம் வேதவசனத்தால், கட்டப்பட்டிருந்தால் தெளிவானப் பார்வையும் கம்பீர நடையும் நமக்கு உண்டு.

**ஊரார் வார்த்தைக்கெல்லாம் செவிசாய்த்தால் உனக்கு விசனம்.**
**எச்சூழ்நிலையிலும் உன் இதயத்திற்கு உறுதி தேவ வசனம்.**

| 12<br>மார்ச் | ## அவருடைய வழி, அவருடைய நேரம்<br>இரவில் நாலாம் ஜாமத்திலே இயேசு கடலின்மேல் நடந்து அவர்களிடத்திற்கு வந்தார். (மத்.14:25) |
|---|---|

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து துரிதப்படுத்தினபடியால் சீஷர்கள் படகில் புறப்பட்டு, மறுகரையை நோக்கிச் சென்றுக் கொண்டிருந்தார்கள். வழியில் திடீரென்று சூழ்நிலை மாறிவிட்டது. எதிர்க்காற்று பலமாக வீசி, கடலலைகள் உயர எழுந்து படகையே மூழ்கடித்துவிடும்போல் இருந்தது.

கர்த்தர் வந்திருந்த திருமணவீட்டில், பற்றாக்குறை என்னும் பிரச்சனை இருந்ததுபோல், கர்த்தரே வழியனுப்பி வைத்த பிரயாணத்தில் எதிர்பாரா நெருக்கங்கள் வரலாம். திடீர் நெருக்கங்களைக் கண்டு நாம் பதறிவிடக்கூடாது. நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர், நம்மை அனுப்பியவர் நம்மைக் கைவிடாதவர். நம் ஆபத்துநாளில் நம் கதறலைக் கேட்பார். நெருக்கமான நேரத்தில், கர்த்தர் நம்மோடு இல்லாததுபோல் காணப்படும். அது பொய்த் தோற்றம், அவர் நம்மோடுதான் இருக்கிறார்.

ஒருவர் தன் மகன் கொடிய வேதனைப்படும் பொழுது ஆண்டவரை நோக்கி, என் மகன் கொடிய வேதனைப்படுகிறானே. அவன் அப்படி வேதனையில் துடிக்கும் பொழுது ஆண்டவரே! நீர் எங்கே போய் வீட்டீர்? என்று சொல்லி அவன் கதறி அழுதான். உடனே பிதாவாகிய தேவன் அந்த மனிதனைப் பார்த்து, என் நேசகுமாரன் சிலுவையில் தொங்கும்பொழுது நான் எங்கேயிருந்தேனோ, அந்த இடத்தில்தான் உன் மகன் வேதனைப்படும் பொழுதும் நான் இருக்கிறேன் என்று பதில் கூறினார்.

ஆகவே கடல் கொந்தளித்தாலும், காற்று எதிர் காற்றாக மாறினாலும், தேவ சமுகம் அவர்களைவிட்டு நீங்கவே இல்லை. ஆனாலும் இயேசு தன் கண்களுக்குத் தெரியாதபடியால், அவர்கள் பதை பதைத்து துடித்துப் போனார்கள்.

மற்றொரு படகில் அவர் வருவார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். அவரோ கடல் மீது நடந்து வந்தார். தங்கள் ஆபத்தை அறிந்து உடனே இயேசு வருவார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவரோ நாலாம் ஜாமத்தில் வந்தார். நாம் எண்ணிய வழியும் அல்ல, நாம் சிந்திக்கிற பாதையும் அல்ல; அவர் விருப்பப்படியே வருவார்.

**செல்லும் வழியும், நமக்கு காரியம் கைகூடிவரும் நேரமும் அவரது கரத்தில் மாத்திரமே.**

13
மார்ச்

# உறவா? உதவியா?

பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார். (மத்.15:26)

இந்த வசனத்தை மேலோட்டமாகப் பார்த்தால், இயேசு அந்தக் கானானியப் பெண்ணை நாய் என்று விரட்டுகிறார் என்று தவறாகப் பொருள் கொண்டுவிடுவோம். நாய் என்று சொல்வதினால் அந்தச் சொல் எப்பொழுதுமே மிக மோசமான சொல் என்று நாம் நினைக்கக் கூடாது.

தன்னை ஓர் காவல்நாய் என்று பொறுப்புள்ள வீட்டுக் காவல்காரன் சொல்வதுண்டு. செல்ல நாய் என்று குழந்தையைத் தாய் கொஞ்சுவதுண்டு. இங்கு இயேசு அந்தப் பெண்ணை நாயென்று அழைக்கவில்லை. மகளாக வந்து, தன்னிடம் கேட்கும் உரிமையைப் பெறாமல் ஒரு நாயைப் போல நிற்கவேண்டிய தென்ன என்பதுதான் இயேசுவின் கேள்வி.

மேஜையின் மீதுள்ள முழு அப்பம் பிள்ளைகளுக்குரியது. மேஜையிலிருந்து கீழே விழும் துணிக்கைகள், நாய்க்குரியது. கானானியப் பெண் என் தேவனே, என் இரட்சகரே என்று அழைக்காமல், தாவீதின் குமாரனே என்று தனக்குச் சொந்தமில்லாத உறவில் இயேசுவை அழைத்தாள். தாவீதின் குமாரனே என்று இஸ்ரவேலர்தான் இயேசுவைக் கூப்பிடமுடியும். இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பான இந்தப் பெண், தாவீதின் குமாரனே என்று கூப்பிட அதிகாரம் கிடையாது. ஆகவே, அவள் பிள்ளை ஸ்தானத்தில் இயேசுவைக் கூப்பிடவில்லை. என் மகள் என்று தன்மகளை உரிமைப் பாராட்டும், இவள் என் இயேசுவே என்று சொந்தம் பாராட்டவில்லையே.

பிள்ளை என்ற உறவு இல்லாமல் அப்பம் கிடைக்காது. தெய்வீக சுகம் பிள்ளைகளின் அப்பம். ஆகவே இயேசு அவளுக்கு மறைமுகமாகச் சொல்கிறார், பெண்ணே! நீ பிள்ளை ஸ்தானத்திற்கு வந்துவிடு. ஏனெனில் நாய்க்குட்டிக்களுக்குத் துணிக்கைதான் கிடைக்கும். கீழே விழும் துணிக்கைகளை அல்ல முழு அப்பத்தையே இயேசு அவளுக்குக் கொடுக்க விரும்பினார்.

இயேசு அவளிடம் எதிர்பார்த்தது அவளுடைய உறவை. அவள் இயேசுவிடம் எதிர்பார்த்தது உதவி.

**உறவில் கிடைக்கும் உதவி, நம் உரிமை.**
**உறவுக்கு வெளியே கிடைப்பது பிச்சை.**

14
மார்ச்

# யாருக்கு அக்கினி அபிஷேகம்?

அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். (லூக்.3:16)

மிகவும் தவறாக விளங்கிக் கொள்ளப்படும் வசனங்களில் மேற்கூறப்படும் வசனமும் ஒன்றாகும். அக்கினியினால் அபிஷேகம் என்பது இன்னொரு வகையான மேலான அபிஷேகம் என்று, இன்று போதிக்கப்படுகிறது. அதனால் அக்கினி அபிஷேக முகாம் என்று சிறப்பு கூட்டங்கள் நடைபெறுகின்றன. அக்கினி அபிஷேகம் என்றால், பரிசுத்த ஆவியைத் தண்ணீருக்கு ஒப்பிடும் பொழுது என்ன சொல்ல? பாரம்பரியக் கிறிஸ்தவப் பாடல்களில், ஆவியை மழைபோல் ஊற்றும் என்று குறிப்பிடப்படுவதால் மழை அபிஷேகம் என்று கூறமுடியுமா?

இயேசு இரண்டு வகை ஞானஸ்நானங்களை இங்கு குறிப்பிடுகிறார். இரட்சிக்கப்பட்ட தேவப் பிள்ளைகளுக்குப் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் (ஞானஸ்நானம்) இரட்சிக்கப்படாதவர்களுக்கு அக்கினியினால் ஞானஸ்நானம்.

இந்த அக்கினி ஸ்நானம் விசுவாசியைச் சுத்திகரிக்கும். பரிசுத்த அக்கினி என்று கூறுகிறார்கள். கோதுமையைத் தூற்றுக் கூடையினால் தமது களத்தை நன்றாய் இயேசு விளக்குவதால், கோதுமை வேறு, பதர் வேறு என்று பிரிந்துவிடுவதுதான் ஆவியின் அபிஷேகம். இப்படி பதராகிய தீயக்குணங்கள் சுட்டெரிக்கப்பட்டு, கோதுமையையே களஞ்சியத்தில் சேர்ப்பார் என்று கற்பிக்கின்றனர். இவர்கள் சொல்வது சரியான விளக்கமெனில் ஒரு அபிஷேகம் ஒருவனைக் கோதுமை என்றும் பதரென்றும் இரண்டாய்ப் பிரிக்கிறது என்று அர்த்தப்படுகிறது.

தனி ஒரு மனிதன் அல்ல, ஜனக்கூட்டம் தூற்றுக் கூடையினால் இரண்டு வகையாக பிரிக்கப்படுகின்றது. ஒரு கூட்டம் கோதுமை மணி. ஒரு அபிஷேகம் இந்தக் கோதுமை மணிகளான மக்களைக் களஞ்சியத்தில் சேர்க்கிறது. மற்றொரு கூட்டம் பதர். இவர்கள் தேவனது நியாயத்தீர்ப்பில் சுட்டெரிக்கப்படுவர். இதுதான் இன்னொரு அபிஷேகமான அக்கினி அபிஷேகம்.

அக்கினி அபிஷேகம் என்று வேதத்தில் நமக்கு வாக்களிப்படாத ஓர் அனுபவத்தைத் தேடாதீர்கள்.

**ஆவிக்குரிய அனுபங்களையே ஆவிக்குரிய சட்டங்களாக்காதீர்.**

15
மார்ச்

# எது உன் வழி?

உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். (சங்.91:11)

இந்த வசனத்தை நமது போக்குவரத்து உரிமமாக (License) நாம் எடுத்துக் கொள்கிறோம். நமது மனம்போனபடி நாம் அலையும் வழிகளிலெல்லாம் நம்மைக் கர்த்தர் காப்பார் என்று இந்த வசனம் சொல்லவில்லை.

வழியிலே தங்கும் இடத்தில் கர்த்தர் அவனுக்கு (மோசேக்கு) எதிர்ப்பட்டு, அவனைக் கொல்லப் பார்த்தார். (யாத்.4:24) என்று வேதம் சொல்கிறது. கர்த்தர் மோசேயின் பாதுகாப்புக் காவலைத் தாண்டி ஏன் தனது கரத்தை நீட்டினார்? கர்த்தரின் சொல்லைக் கேட்டுத்தானே அவன் எகிப்துக்குச் செல்கிறான்? அவனைக் காக்க வேண்டியக் கர்த்தர் அவனை ஏன் கொல்லப் பார்த்தார்? மோசேயின் கீழ்ப்படியாமையினால்தான். எதில் மோசே கீழ்ப்படியவில்லை? அவனுடைய மகனுக்கு அவன் விருத்தசேதனம் செய்யாததே (யாத்.4:25). ஆகவே கர்த்தர் சொன்னபடி அவன் எகிப்துக்கு வழி என்பதில் சென்றானே தவிர உன் வழி என்று தேவன் குறிப்பிடும் வழியில் மோசே செல்லவில்லை.

நமது ஆண்டவராகிய இயேசுவைத் தேவாலய உப்பரிகையின் மீது கண்ட சாத்தான், நீர் தேவனுடைய குமாரனேயானால், தாழக்குதியும். ஏனெனில் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார் உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள் என்று எழுதியிருக்கிறதே என்றான். உப்பரிகையில் அவரை நிறுத்தி தாழக்குதியும் என்பது சாத்தானின் வழி! தேவன் இயேசுவுக்கு வகுத்த வழி அல்ல. ஆகவே சாத்தானும், உன் வழிகளிலெல்லாம் என்ற வார்த்தைகளை நீக்கிவிட்டு, வசனத்தை தன் இஷ்டம் போல் திரித்துக் கூறுகிறான்.

Text out of context is pretext - பொருத்தமில்லா வசனம், துர்உபதேச வசனம்! வசனங்களின் சூழ்நிலைகளின்று வசனத்தைப் பிரித்து, நம் இஷ்டம் போல் நம் வாழ்க்கையில் பயன்படுத்துவது விபரீத விளைவுகளை உண்டாக்கும்.

**ஆவியானவரின் கட்டுக்குள் அது தேவ வார்த்தை.**
**கட்டுக்கு வெளியே அது மனிதக் கருத்து.**

16
மார்ச்

# கர்த்தரின் எல்லை

அவன் நித்திரை விட்டு விழித்து, கர்த்தர் தன்னைவிட்டு விலகினதை அறியாமல், எப்பொழுதும் போல உதறிப்போட்டு வெளியே போவேன் என்றான். (நியா.16:20)

மனிதன் தன் வாழ்நாள்களில் இழப்புகளுக்குள்ளாகிறான். விலையேறப்பெற்ற அருமையான பொருள்களை இழந்துவிடுகிறான். நல்ல தருணங்களை இழக்கிறான். ஆனால் இழக்கக் கூடாததொன்று தேவசமுகம். தேவசமுகத்தை இழந்துவிடுவது மிகவும் பரிதாபமான நிலை. அதிலும் பரிதாபமானது தேவசமுகத்தை இழந்திருந்தும், அந்த இழப்பை அறியாதிருப்பது.

பாவச் செயல்களைத் தொடர்ந்து செய்த சிம்சோன் உடனே தேவதண்டனை அடையவில்லை. ஆகையால் கடவுளைப் பற்றிய சிந்தனையின்றி வாழ ஆரம்பித்தான். கடவுள் மீது அவனுக்குக் கோபமோ, வருத்தமோ கிடையாது. ஆனால் தன் அலட்சியமான, சிற்றின்ப வாழ்க்கையினால், கர்த்தரையே அவன் இழந்துவிட்டான்.

கப்பலின் மேல்தட்டில் நின்றுக் கொண்டு ஓர் வாலிபன் விலையேறப் பெற்ற ஓர் மாணிக்கக் கல்லைத் தூக்கி மேலே எறிந்து விளையாடிக் கொண்டிருந்தான். அருகே நின்றிருந்த ஒரு பெரியவர், தம்பி! அப்படி விளையாடாதே! விலையேறப்பெற்ற அந்தக்கல் கடலில் விழுந்துவிடும் என்று எச்சரித்தார். அதெல்லாம் விழாது, நான் விழாமல் தடுத்துவிடுவேன் என்று சொல்லிக் கொண்டே அந்த மாணிக்கத்தை உயரே தூக்கிப் போட்டான், அது கடலில் விழுந்துவிட்டது! ஐயோ என்று அவன் அழுதான்.

பராக்கிரமசாலியான சிம்சோன் இச்சையின் பாவத்தில் பெண்களோடு விளையாட ஆரம்பித்தான். ஒருநாள் தெலீலாளின் மடியில் அவன் படுத்திருக்கும் பொழுது, பெலிஸ்தியர்கள், அவனைப் பிடித்து அவன் கண்களைப் பிடுங்கிவிட்டனர்! அவனோ இப்படியெல்லாம் நடக்காது, எப்போதும் போல உதறிப் போட்டுப் போவேன் என்று அலட்சியமாயிருந்தான். ஏனெனில் கர்த்தர் தன்னை உதறிவிட்டுப் போய்விட்டார் என்பதை அவன் அறியாமற்போனான்.

கர்த்தர் தன்னைவிட்டு விலகப் போகிறார் என்பதை அறிந்த தாவீது, தேவரீர் உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும் உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாதிரும் என்று கர்த்தரிடம் கெஞ்சினான்.

**கர்த்தரின் மன்னிப்புக்கு எல்லையே இல்லை;**
**அவர் பொறுமைக்கு எல்லை உண்டு.**

17
மார்ச்

# தனிமரமா? தோட்டமா?

என் ஆத்துமநேசரைக் கண்டேன், அவரை என் தாய் வீட்டிலும் என்னைப் பெற்றவளின் அறையிலும் கொண்டு வந்து விடுமட்டும் விடாமல் பற்றிக் கொள்வேன்.

(உன். 3:4b)

ஒரு சகோதரர் என்னிடம் விசிட்டிங் கார்டு ஒன்றினைத் தந்தார். நான் அதனை உற்று நோக்கும்பொழுது, ஓர் வாக்கியம் என் இதயத்தைத் தொட்டது, நீங்கள் என்னை வழியில் சந்தித்தபின், என்னை மறந்துவிட்டால், உங்களுக்கு ஒரு நஷ்டமும் இல்லை; இயேசுவைச் சந்தித்தபின் அவரை மறந்துவிட்டால் அது பெரிய நஷ்டம் என்பதே அந்த வாக்கியம். மறதிகூட ஓர் ஆசீர்வாதம் தான்! ஆனால் மறக்க வேண்டியது பின்னானவைகளையே.

இங்கே, ஆத்தும நேசரைக் கண்டவள், அவரைவிட்டு பிரியவே மனமற்றவளாக இருக்கிறாள். அதுமட்டுமல்ல தன் தாய் வீட்டிற்கு அவரைக் கொண்டுவர விரும்புகிறாள். அவரைக் கண்டது அவளுடைய சொந்த இரட்சிப்பின் அனுபவம். அதோடு அவள் திருப்தியாக வில்லை. தன் தாய் வீட்டிற்கு இயேசுவைக் கொண்டுவர அவள் விரும்புகிறாள். கர்த்தராகிய இயேசுவை விசுவாசி அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய் என்பது இவளுடைய வாழ்க்கையில் நிறைவேறிவிட்டது. இது ஓர் அருமையான அனுபவம். ஆனால் அதோடு அவள் திருப்தியடையவில்லை.

உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்ற வாக்குத்தத்தத்தை உறுதியாய் நம்பினாள். ஆகவே தன் நேசரை (இயேசுவை) தன் தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்லத் துடிக்கிறாள். அதாவது தன்னுடைய இன, ஜனம் யாவரையும் இரட்சிப்பிற்குள் கொண்டுவரப் பிரயாசப்படுகிறாள். இது மணவாட்டியின் இலட்சியம். பாராட்டப்படவேண்டிய தரிசனம். முக்கியமாக தன் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் இரட்சிக்கப்பட வேண்டும் என்று மிகவும் பாரப்படுகிறாள். ஆகையால், என்னைப் பெற்றவளின் அறையில் கொண்டு வந்து விடுமட்டும் விடாமல் பற்றிக்கொள்வேன் என்று அவள் கூறுகிறாள்.

உங்களுக்கு இந்த ஆத்தும பாரம் உண்டா? நியாயத்தீர்ப்பு நாளில் ஆபேலை எங்கே? பென்யமீனை எங்கே? என்று கர்த்தர் கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள்? இரட்சிக்கப்பட்ட குடும்பம் இயேசு விரும்பும் தோட்டம். நீ மாத்திரம் இரட்சிக்கப்பட்டால், நீ ஓர் தனிமரம்.

**தனிமரம், தோட்டமாகாது.**

18
மார்ச்

# ஆவிக்குரிய பார்வை

மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல எல்லாம் மாயையே எல்லாம் ஒரே இடத்திற்குப் போகிறது. எல்லாம் மண்ணிலே உண்டாகிறது. எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது. (பிர.3:19,20)

மனிதனுக்கும், மிருகத்திற்கும் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் வித்தியாசம் இருந்தாலும் அவைகளின் முடிவில் ஒரு வித்தியாசமும் இல்லை. மிருகமும் மனிதனும் மண்ணிற்கே திரும்புகின்றனர். மனுஷனுடைய ஆவி மேலே போகிறது என்று கண்டவன் யார்? (பிர.8:21) என பிரசங்கி நமது சிந்தனையைத் தட்டி எழுப்புகிறார்.

மனிதனும், மிருகமும் ஒன்றே; இரண்டுமே மரித்தப் பிறகு மண்ணோடு, மண்ணாய்க் கலந்துவிடுகின்றன என்பதுதான் கடவுள் இல்லை என்று சொல்வோரின் நம்பிக்கை. பரலோகம், நித்தியம், நியாயத்தீர்ப்பு இவையெல்லாம் சுவையான கற்பனை என்றே பகுத்தறிவாளன் கூறுகிறான். ஆனால் வேதப்புத்தகமும் இதே கருத்தைச் சொல்கிறதா? மண்ணிலிருந்து எடுக்கப்பட்டதெல்லாம் மண்ணுக்குத்தான் திரும்பும் என்பதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை.

ஆனால் மனிதனுடைய சரீரம் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டது போல், அவனுடைய ஆத்துமாவும், ஆவியும் மண்ணிலிருந்து உண்டாகவில்லை. கர்த்தரின் ஜீவ சுவாசத்தினாலே இவை உண்டாயின. ஆகவே மனிதனுடைய ஆவி மண்ணுக்குத் திரும்பாது. ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகும் (பிர.12:7) என்று பிரசங்கி தெளிவாய்க் கூறுவதினால், மிருகத்தைவிட மனிதன் மேலானவன். இப்படிச் சொன்ன பிரசங்கி, உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும் தாழ பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்? (பிர.3:21) என்று ஏன் கேட்கிறான் என்ற சந்தேகம் சிலருக்கு எழும்புகிறது. நித்தியத்தின் மேலுள்ள நம்பிக்கை குறைகிறது.

ஏன் வேதம் இந்தக் குழப்பமானக் கருத்தைச் சொல்கிறது என்று கேட்கிறீர்களா? வேதத்தில் எந்தக் குழப்பமே இல்லை. மனுஷனையும், மிருகத்தையும் ஒன்றாகப் பார்க்கும் பார்வை, சூரியனுக்குக் கீழே மனிதன் பார்க்கும் பார்வை. அதாவது மனிதனுடைய மாம்சீகமான தவறான எண்ணத்தையே பிரசங்கி சுட்டிக்காட்டிவிட்டு, கடைசியில், அவனுடைய ஆவிக்குரிய பார்வையில், ஒவ்வொரு கிரியையையும் நன்மையானாலும், தீமையானாலும் கர்த்தர் நியாயத்திலே கொண்டு வருவார் (பிர.12:14) என்று நித்தியத்தை நமக்குக் காட்டுகிறார்.

**மரணம் மிருகங்களுக்கு அழிவு;**
**நமக்கோ அழியாமையின் வாசல்.**

**19**
**மார்ச்**

# இராக்காலம் வருகிறது

இராக்காலங்களில் என் படுக்கையிலே என் ஆத்தும நேசரைத் தேடினேன்; தேடியும் நான் அவரைக் காணவில்லை. (உன்.3:1)

ஆத்துமநேசரைத் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டுமெனில் அந்த உறவில் தொய்வு ஏற்பட்டிருக்கிறது என்று பொருள். ஏதோ வருத்தத்தில் கணவன் வீட்டை விடுப் போய்விட்டால், மனைவி கவலையோடு கருத்தாய்த் தேடுவாள். கருத்தாய்த் தேடுதல் என்றால் அவர் எங்கே போயிருப்பார் என்றல்ல, ஏன் போனார் என்று சிந்திப்பதே.

அப்படியே நமக்குத் தேவசமுகம் கிடைக்காவிட்டால் கர்த்தரை கருத்தாய் தேட வேண்டும். பொதுவாக எல்லாம் நன்மையாக நடக்கும் பொழுது மனிதன் கர்த்தரைத் தேடுகிறதில்லை. தன் மனம் போல நடக்கிறான். தேவசித்தம், தேவ ஆலோசனை, தேவநடத்துதல் இவை பற்றி கொஞ்சமேனும் சிந்திக்காமல் மனிதன் இஷ்டம் போல நடக்கிறான். ஆனால் வியாதி, வறுமை, எதிர்ப்பு என்று காரிருள் சூழ்ந்து, வாழ்வில் இராக்காலம் வரும் பொழுது மனிதன் ஆத்தும நேசரைத் தேட ஆரம்பிக்கிறான். இப்படித் தேடுவோர் கர்த்தரைக் காண்பதில்லை.

பகல் காலத்தில் ஏன் சும்மா இருக்கிறீர்கள் என்று ஆண்டவர் நம்மை நோக்கிக் கேட்கிறார்? ஜெபித்தும், ஆராதித்தும், ஊழியம் செய்தும் கர்த்தரை மகிமைப்படுத்தும் பகல் காலத்தை வீணாக்கியபின், திடீரென்று ராக்காலத்தில் என் இயேசுவே, என் இரட்சகா என்று தேடுவதில் என்ன பயன்?

கண்களில் பகல் காலம் இருக்கும்பொழுது, வேதத்தை வாசித்துத் தியானிக்காமல், வயது சென்று கண்கள் ஒளி இழந்து கண்களில் ராக்காலம் வந்தபின், ஐயோ, வேதம் வாசிக்க முடியவில்லையே? என்று புலம்புவதில் அர்த்தம் உண்டா? காலில் பகல் காலம் இருக்குமட்டும் சப்பாணியாய் அமர்ந்து, காலத்தைச் செலவிட்டபின் திடீரென்று கால் நடக்க முடியாத ராக்காலம் வந்தபின், ஐயோ! ஊழியம் செய்ய முடியவில்லையே என்று புலம்புவதில் ஒரு பயனும் இல்லை.

வியாதிப் படுக்கையில், வறுமையின் பிடியில், தோல்விப் பள்ளத்தாக்கில் கர்த்தரைத் தேடினால், கர்த்தரைக் காணமுடியாத இராக்காலம் வந்துவிடும்.

**நீதியின் சூரியன் பிரகாசிக்கும் வேளையில்**
**சோம்பேறியாய் கண்ணுறங்கினால் இராக்காலத்தில்**
**இமைமூடாமல் வெறுமையை நோக்குவாய்.**

| 20 மார்ச் |
| --- |

# அவர் நினைவில் நீ

நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய் அவர்களுக்குச் சொல்லுங்கள். (மாற்கு 16:17)

அந்த வீட்டிற்குப் போய் வீட்டிலுள்ள அனைவரையும், ஜானையும் இங்கு வரச் சொல்லுங்கள் என்று சொல்லப்படுமானால், அந்த வீட்டில் ஜான் முக்கியமானவர் என்று புலப்படுகிறது. அப்படியெனில் மற்ற எல்லோரையும் விட, அவர் வரவேண்டும் என்பதில் இந்த அழைப்பு கவனமாயிருக்கிறது என்பது தெளிவு.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, தான் உயிர்த்தெழுந்த பிறகு கல்லறைக்கு வந்த பெண்களிடம் தான் கலிலேயாவிற்குப் போகும் செய்தியை சீஷர்களுக்கும், பேதுருவுக்கும் அறிவிக்கச் சொன்னார். சீஷர்கள் என்று சொன்னாலே, அதில் பேதுருவும் அடங்கும். தனித்து பேதுரு என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் இயேசு, பேதுருவுக்கும் என்று தனிச் செய்தி அனுப்பினார். ஏன்? கடைசியாக இயேசு பேதுருவைப் பார்த்தது அவன் மனஸ்தாபப்பட்டு அழும்பொழுது (மத்.26:75). அவரை அறியேன் என்று மூன்று முறை மறுதலித்து, சபித்து, சத்தியம் பண்ணி, இயேசுவுக்கு வெகுதூரம் போய்விட்டான் பேதுரு.

அவனுடைய துரோகத்தை இயேசு நினைவில் வைத்துக் கொள்ளவில்லை. அவனது மனந்திரும்புதலையே தன் மனதில் நிறுத்திக் கொண்டார். அவனுடைய கண்ணீர்த் துளிகளுக்கு அவர் கணக்கு வைத்துக் கொண்டார். அந்தக் கண்ணீருக்குத்தான் இந்தப் பரிவான அன்பின் தனிச் செய்தி.

சகோதரனே! உன் கண்ணீருக்கு கர்த்தரின் கணக்கில் இடமிருந்தால், அவருடைய இதயத்தில் உனக்கென்று தனி இடம் உண்டு. விசுவாசக் கண்ணீர்; பொறுமையின் கண்ணீர் இவற்றை இயேசு மறப்பதில்லை. பேதுருவின் ஆத்திரம், பயம், மறுதலிப்பு, பெருமை இவையெல்லாவற்றையும் மறந்த இயேசுவால் அவனது மனஸ்தாபக் கண்ணீரை மறக்க முடியவில்லை.

உன்னைக் குறித்து, கர்த்தர் எதை நினைவில் வைத்துக் கொள்ள முடியும்? யோசித்துப்பார்.

**வெள்ளைக்கல் பரணி உடைக்கப்பட்டது நினைவுகூரப்படும். அந்த வீட்டின் போஜனபந்தி நினைவிலிருக்காது.**

21
மார்ச்

# வருந்துகிறேன் அல்ல வருத்துகிறேன்

நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துக் கொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு. (வெளி.3:19)

பாவம் செய்வது மனித இயல்பு. அதுபோல செய்த பாவங்களுக்கு மனிதன் மனஸ்தாபப்படுவதும் இயல்பானதே. ஆனால் அது மனஸ்தாப எல்லைக் கோட்டைத் தாண்டி, மனந்திரும்புதல் என்ற எல்லைக்குள் பிரவேசிக்க வேண்டும். இன்று மனந்திரும்புதல்கூட கள்ளத்தனமான மனந்திரும்புதலாகவே இருக்கிறது. பாவத்தின் விளைவான தண்டனைக்குப் பயந்தே மனிதன் மனஸ்தாபப்படுகிறான். நான் பாவியாகக் கண்டுபிடிக்கப்பட்டுவிடுவேனே என்ற பயத்தால் மனிதன் மனந்திரும்புகிறான். பாவம் செய்யத் தூண்டப்பட்ட யாக்கோபு, அவ்வாறு தூண்டிய தன் தாயிடம், நான் எத்தனாய்க் காணப்பட்டு சாபத்தை வரப்பண்ணிக் கொள்வேனே (ஆதி.27:12) என்று வருத்தப்பட்டானே தவிர, தன் தகப்பனையும், தன் சகோதரனையும் ஏமாற்றப்போகிறோமே என்று வருத்தப்படவில்லை. ஆகவே இது மெய் மனஸ்தாபமல்ல.

லவோதிக்கேயா சபை பல மீறுதல்களுக்குள்பட்டும், இயேசுவும் சபையை விட்டு விலகியும், ஆவிக்குரிய பெருமையுடன் இருக்கிறது. ஆகவே ஜாக்கிரதையாய் மிக ஆழமாக மனந்திரும்பும்படி அந்தச் சபைக்கு இயேசு கட்டளையிட்டார். ஜாக்கிரதையாக மனந்திரும்புதல் என்றால் என்ன? தாவீது பத்சேபாளிடத்தில் பாவஞ் செய்தான். இதனை நாம் எல்லோரும் கண்டிக்கிறோம்; தாவீதின் பாவத்தை வெறுக்கிறோம். ஆனால் தாவீதின் பாவம் என்ன? பத்சேபாளிடத்தில் பாவம் செய்தது மாத்திரமல்ல. இன்னும் கொஞ்சம் ஆழமாக யோசிக்க வேண்டும்.

கர்த்தரால் அனுப்பட்ட நாத்தான் இந்தப் பாவத்தைச் சுட்டிக் காட்டி ஓர் கதையைச் சொல்கிறான். (2சாமு.12:1-7). அவன் தீமை செய்தது அந்தத் தரித்திரன் மடியில் மகளைப் போன்று படுத்திருந்த ஆட்டுக்குட்டிக்கு மட்டுமல்ல. அந்தத் தரித்திரனுக்கு விரோதமாகவும் பாவஞ்செய்தான். ஆம்! உரியாவிற்கு விரோதமாகப் பாவம் செய்தான். உரியாவைக் கொலை செய்ய யோவாபைத் தூண்டினான். ஆகவே யோவாபுக்கு விரோதமாகவும் பாவஞ் செய்தான். உரியாவைக் கொன்றதினால் பத்சேபாள் விதவையாக்கப்பட்டது மட்டுமல்ல, உரியாவின் தாயைப் பிள்ளையற்றவளாக்கினான். இப்படி சங்கிலித் தொடர்பான பாவங்களுக்கு அவன் மனம் திரும்புவதே ஜாக்கிரதையாய் மனந்திரும்புவது.

தாவீது இந்தப் பாவங்களையெல்லாம் நினைத்து, ஆழமாக மனந்திரும்பி அறிக்கையிடுகிறான். தேவனே! இரத்தப் பழிகளுக்கு என்னை நீங்கலாக்கிவிடும். (சங்.51:14)

**மனந்திரும்புதல் என்பது வருந்துகிறேன் என்ற வார்த்தை அல்ல; என்னை வருத்துகிறேன் என்ற அர்ப்பணிப்பே.**

22
மார்ச்

# சத்திரமா?

அந்த ஐசுவரியவானிடத்தில் வழிப்போக்கன் ஒருவன் வந்தான். அவன் தன்னிடத்தில் வந்த வழிப்போக்கனுக்குச் சமையல் பண்ணுவிக்க அந்தத் தரித்திரனுடைய ஆட்டுக்குட்டியைப் பிடித்து... சமையல் பண்ணுவித்தான். (2சாமு.12:4)

நிறைய ஆடுகளையுடைய ஐசுவரியவான் தாவீது. அதாவது அவனுக்கு பல மனைவிகளும், மறுமனையாட்டிகளும் இருந்தனர். நிறைய ஆடுகளை உடைய ஐசுவரியவான் தன் ஆடுகளில் ஒன்றினைப் பிடித்து சமைக்காமல், பக்கத்துவீட்டு தரித்திரனின் ஒரே ஆட்டைப் பிடித்து சமைத்தான். அதாவது தனக்குப் பல மனைவிகள் இருந்தும், உரியாவின் மனைவியான பத்சேபாளை விருந்து பொருளாக்கினான்.

என்ன விருந்து? இச்சையின் விருந்து. குடும்பத்தில் கணவன், மனைவி உறவுகூட கண்ணியமான விருந்து போன்றிருக்கும். திருடிச் சாப்பிடுவது விருந்து அல்ல. ஓர் வீட்டில் திடீரென்று நுழைந்து சாப்பாடுகொடு என்பது விருந்தல்ல. விருந்துக்கு அழைப்பும், உற்சாக வரவேற்பும் தேவை.

யாரை விருந்துக்கு அழைப்போம்? திருடர்களை, தீவிரவாதிகளை, சமூக விரோதிகளை விருந்துக்கு அழைக்கவே மாட்டோம். தாவீது யாருக்கு விருந்து வைத்தான்? வழிப்போக்கனுக்கு. யார் வழிப்போக்கன்? அவன் நண்பன் அல்ல, வழிப்பிரயாணி அல்ல, சொந்தக்காரன் அல்ல, யாரோ ஒருவன். அவனுக்குப் போகவேண்டிய இலக்கு கிடையாது, பிரயாண நோக்கம் கிடையாது. ஊர்விட்டு ஊர் அலைகிறவன்.

யார் இந்த வழிப்போக்கன். இச்சையின் சுபாவம்! திடீரென்று இந்த வழிப்போக்கன் நம் இதயக் கதவைத் தட்டுவான். அவனுக்குக் கதவைத் திறக்காதே! பசிக்கிறது என்பான்; இரக்கம் காட்டாதே! இவன் துரத்தப்பட வேண்டிய துன்மார்க்கன். அவனை வீட்டில் ஏற்றுக் கொள்ளாதே. ஏற்றுக் கொண்டால், உன்னில் புதிதாய்ப் பிறந்த புதுசிருஷ்டி கெட்டுப்போகும்.

**உன் வீடு விருந்துசாலையாக இருக்கட்டும்;**
**அழைப்பு பெற்றவர்கள் மட்டும் வருவார்கள்.**
**கண்டவரெல்லாம் வரும் சத்திரம் அல்ல உன் வீடு.**

23
மார்ச்

# அவிசுவாசம் ஊமையாக்கிவிடும்

இதோ, தகுந்த காலத்திலே நிறைவேறப் போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால் இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையனாயிருப்பாய் என்றான். (லூக்.1:20)

சகரியா நீண்ட காலமாக ஓர் ஆண் பிள்ளைக்காக ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான். தனக்குப் பிள்ளையில்லாதது அவனுக்கும், அவனது மனைவிக்கும் பெரும் குறையாக இருந்தது. தினந் தோறும் கர்த்தரின் சமுகத்தில் உறுதியாக ஜெபித்து வந்தனர். நாளடைவில் சகரியாவும் அவன் மனைவி எலிசபெத்தும் வயது சென்றவர்களாகி, இனி தங்களுக்கு குழந்தையே பிறக்க வழி இல்லை என்ற நிலையை அடைந்தாலும், சகரியா தன் ஊழியத்தையோ, பிள்ளைக்கான ஜெபத்தையோ நிறுத்தவே இல்லை. தொடர்ந்து விசுவாசத்தோடு ஜெபித்துக் கொண்டிருந்தனர்.

ஒருநாள் கர்த்தர் திடீரென்று சகரியாவிற்கு அனுகூலமான பதிலை அனுப்பினார். அவன் ஊழியம் செய்து கொண்டிருக்கையில், சகரியாவே, பயப்படாதே. உன் வேண்டுதல் கேட்கப்பட்டது. உன் மனைவி உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள் என்று கர்த்தரின் தூதன் சொன்னான். இதுவரை விசுவாசத்தோடு ஜெபித்து வந்த சகரியா, இந்தச் செய்தியைக் கேட்டு மேலும் விசுவாசத்தில் பலப்படுவதற்குப் பதிலாக, விசுவாசத்தில் பின்னடைவு அடைந்தான்.

இதை நான் எதினால் அறிவேன்; நான் கிழவனாயிருக்கிறேன், என் மனைவியும் வயது சென்றவளாயிருக்கிறாளே என்றான். ஜெபிக்கும் பொழுது இவை எல்லாம் அவனுக்குத் தெரியாதா? அவன் சொன்னது உண்மையான வார்த்தைகள்தான். ஆனாலும் அவனது நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும் மாறான வார்த்தைகள். மூத்த ஊழியக்காரனான சகரியா இப்படி அவிசுவாச வார்த்தைகளைப் பேசியதால் கர்த்தர் அவன்மேல் கோபம் கொண்டு, நீ ஊமையனாயிருப்பாய் என்றார். ஊமை என்றால், அதோடு அவன் செவிடனாகவும் இருப்பான். அவனால் கேட்கவோ, பேசவோ முடியாது. ஆம்! கர்த்தர் இனி கொஞ்சக்காலம் அவனிடம் பேசமாட்டார்; அவனும் கர்த்தருக்காகப் பேசமுடியாது. ஆகவே அவன் ஊமையான ஆசாரியனானான்!

சகரியா செவிடும், ஊமையுமானான். ஆம். He was deaf and dumb. சகரியா, Rev. சகரியா, D.D. ஆனான்.

**பேச முடியாத பிரசங்கி, வறண்ட நீரோடை.**

24
மார்ச்

# கழுகைப் போல எழும்பு

வனாந்தர நாரைக்கு ஒப்பானேன்; பாழான இடங்களில் தங்கும் ஆந்தையைப்போலானேன். நான் நித்திரையில்லாமல் வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவியைப்போல இருக்கிறேன். (சங்.102:6-7)

துயரத்தில் மூழ்கியிருந்த தாவீது மிகவும் மனச்சோர்வடைந்தான். மனச்சோர்வில் அவன் கடவுளையே மறந்துவிடவில்லை. அவன் தன் துக்க சரித்திரப் பக்கங்களைக் கர்த்தருக்கு முன் விரித்தான். வனாந்தர நாரைக்கு ஒப்பானேன் என்று அவன் புலம்புகிறான். நாரை ஜனசந்தடி, மக்கள் நெரிசல் இல்லாத அவாந்தரவெளியில் தங்கும். அதுபோலவே மனச்சோர்வில் தாவீது நெருக்கமானவர்களை விட்டு விலகி, தனித்து ஓர் இடத்தில் ஒதுங்கிவிட்டான். இந்த அவாந்தரவெளி அவனுக்குச் சமாதானத்தைத் தரவில்லை.

பாழான இடங்களில் தங்கும் ஆந்தையைப் போலானேன் என்றும் தாவீது சொல்கிறான். ஆந்தை இடிந்ததும், நொறுங்கியதுமான பாழான இடங்களையே வெறித்து நோக்கும். ஆந்தைக்கு அழிவுக்கு அம்மா என்ற பெயரும் உண்டு. தாவீதும் தனக்கு ஏற்பட்ட கஷ்டங்கள், நஷ்டங்கள், எதிர்ப்புகள், அவமானங்களையே எண்ணிக் கலங்கிப்போனான். நம் வாழ்வில் நடந்து முடிந்த, தோல்விகள், நஷ்டங்கள் இவைகளை நம் மனம் நோக்கிக் கொண்டிருக்கக் கூடாது.

நித்திரையில்லாமல் வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவியைப் போலிருக்கிறேன் என்றும் தாவீது அங்கலாய்க்கிறான். நித்திரை இளைப்பாறுதல். கர்த்தர் தமக்குப் பிரியமானவர்களுக்கு நித்திரை அளிக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. வியாதியஸ்தர்கள், மனசாட்சியில் குற்ற உணர்வு உடையவர்கள் தூங்கமாட்டார்கள். கவலையோடு தனித்து ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிடுவார்கள்.

கிறிஸ்தவனும் வனாந்தர நாரை, ஆந்தை, குருவி என்று பல அனுபவங்களைக் கடந்து மிகச் சோர்வுடையவனாகிவிடுகிறான். இப்படியே ஒரு மனிதனின் வாழ்க்கை முடிந்துவிடக் கூடாது. தாவீது தேவசமுகத்தில் திரும்பவும் ஜெபித்தான். தன் அவநம்பிக்கையினின்று எழுந்தான். கண்ணீரைத் துடைத்தான். என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே (சங்.103:1-2) என்று கர்த்தரைத் தன் துயரங்களுக்கு மத்தியில் துதிக்க ஆரம்பித்தான். கழுகுக்குச் சமானமாய் அவன் வயது வாலவயதாகிறது என்று முடித்தான்.

**கன்னத்தில் கைவைத்து சோர்ந்திருந்தால் நீ வனாந்தர நாரை. கரங்களை உயர்த்தி கர்த்தரைத் தொழுதால் நீ பறக்கும் கழுகு.**

**25**
**மார்ச்**

# சூழ்நிலையில் மாறாதே

தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை அவன் செப்பனிட்டு உனக்கு இஸ்ரவேல் என்னும் பேர் இருப்பதாக என்று சொல்லி, கர்த்தருடைய வார்த்தையைப்பெற்ற யாக்கோபுடைய குமாரரால் உண்டான கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே, பன்னிரெண்டு கற்களை எடுத்து... (1 இரா.18:31)

இஸ்ரவேலர்கள் ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகி அந்நிய தெய்வ வழிபாட்டில் மூழ்கிப்போனார்கள். இருமனம் கொண்டவர்களாய் குந்திக் குந்தி நடந்தார்கள். கர்த்தரையும் பாகாலையும் இணைந்து வழிபட ஆரம்பித்தனர். கர்த்தர் மழையை நிறுத்தி தேசத்தை வறுமையில் தண்டித்தார். ஆனாலும் ஜனங்கள் திருந்தவில்லை. எப்படியாவது ஜனங்களைத் திருத்த வேண்டும், ஜனங்களைக் கர்த்தரிடம் திருப்ப வேண்டும் என்று எலியா பிரயாசப்பட்டான்.

வறுமை அவர்களைத் திருத்தவில்லையென்று எலியா கண்டப்பொழுது தேவ வல்லமையைப் பயன்படுத்தியாவது அவர்களைத் திருத்த வேண்டுமென்று அவன் எண்ணினான். பரத்திலிருந்து அக்கினியைக் கொண்டுவருவதே தேவ வல்லமை என்று ஜனங்கள் எதிர்ப்பார்த்தனர். பாகால் அக்கினியைக் கொண்டு வருமா? யேகோவா கொண்டு வருவாரா? என்பதுதான் அங்குள்ள போட்டி.

வானத்திலிருந்து அக்கினியை இறக்க எலியா தேசத்தைப் பரிசுத்தமாக்க வேண்டியிருந்தது. ஆகவே முதலாவது பலிபீடத்தைச் செப்பனிட விரும்பினான். அதாவது தொழுகையைச் சரியாக்க விரும்பினான். அன்றைய இஸ்ரவேல் பத்து கோத்திரங்கள் அடங்கியது. மீதி இரண்டு கோத்திரம் யூதா தேசமாயிற்று. பலிபீடத்தைச் செப்பனிட இஸ்ரவேலின் கோத்திரங்களின்படி பத்து கற்களை எடுக்க வேண்டிய எலியா பன்னிரெண்டு கற்களை எடுத்தான். பன்னிரெண்டு கோத்திரமுள்ள இஸ்ரவேலே தேவனால் அங்கீகரிக்கப்பட்ட தேசம். அரசியலினால் ஏற்பட்ட பிரிவுகளைத் தேவன் அங்கீகரிக்க மாட்டார். ஆபிரகாமுக்கு வாக்களித்தத் தேசத்தை எந்தச் சூழ்நிலையிலும் தேவன் அதன் எல்லைகளைக் குறைக்க மாட்டார். இன்றுங்கூட இஸ்ரவேலில் ஒரு அங்குலம்கூட மற்றவர்களுக்குக் கொடுக்கப்படக் கூடாது என்பது தேவ சித்தம்.

கர்த்தரின் ஆரம்பகால நியமங்களைக் காலத்தின் மாறுதலினால் மாற்றிக்கொள்ளவே மாட்டார். சூழ்நிலைக்குத் தக்கப்படி உபதேசங்களை வளைப்பதை தேவன் ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. இந்த நவநாகரீகமான உலகத்தில் விஞ்ஞானம் வளர்ச்சிபெறாத காலத்தில் எழுதப்பட்ட வேதப் புத்தகம் பிரச்சனைகளுக்கு எந்தப் பதிலும் தரமுடியாது என்பது மனிதனின் எண்ணம். ஆனால் எந்தக் காலத்திலும் தேவனுடைய வார்த்தை பிரச்சனையைத் தீர்க்கும். காலத்துக்குத் தக்கப்படி அது மாறாது.

**கால்கள் பாதரட்சையின்றி வெறுமையாய் நடந்தாலும்,**
**தலையில் ஊற்றப்பட்ட அபிஷேகத் தைலம் அவனை**
**ராஜாவாகவே காட்டும்.**

26
மார்ச்

# இலக்கை நோக்கி

அங்கேயிருந்து பெயர்சேபாவுக்குப் போனான். (ஆதி.26:23)

ஓர் இடத்தில் பிரச்சனையே இல்லாமல், எல்லாமே நன்றாக நடந்தால், அந்த இடம் தேவ சித்தமான இடமென்று நாம் எண்ணிவிடக் கூடாது. கேராரூரிலே ஈசாக்கைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். அந்த வருஷம் நூறுமடங்கு பலன் அடைந்தான். அவன் ஐசுவரியவனாகி வரவர விருத்தியடைந்து மகாபெரியவனானான் என்று வேதம் சொல்கிறது. ஆனாலும் இது கடவுளின் பரிபூரணமான ஆசீர்வாதமல்ல. இந்த இடத்தில் ஓர் துரவுக்கு ரெகொபோத் என்று பெயரிட்டு, விசாலம் என்று ஈசாக்கு அழைத்தாலும், அந்த இடத்தைவிட்டு விலகி, தேவன் குறிப்பிடும் இடத்திற்கு அவன் செல்ல வேண்டியதிருந்தது. ஆகவே அவன் பெயர்செபாவுக்குப் போனான். அங்கே கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி, நான் உன்னை ஆசீர்வதித்து உன் சந்ததியைப் பெருகப் பண்ணுவேன் என்றார்.

கேராரூரின் ஆசீர்வாதம் நிலையானதல்ல. இப்பொழுது பலிபீடம் கட்டப்பட்டு ஈசாக்கு கர்த்தரைத் தொழுது கொண்டான். கர்த்தரைத் தொழுதுகொள்ளும் உரிமையைப் பறிக்கும் எந்த இடத்திலும் நாம் நிரந்தரமாக இருக்கக்கூடாது. தொழுகையில்லா இடம் ஆவிக்குரிய பாலைவனம். அங்கே நமக்கு என்ன ஆசீர்வாதம் வந்தாலும், அந்த இடத்தை விட்டு சீக்கிரம் நாம் நீங்கிப் போய்விட வேண்டியதாயிருக்கும்.

தேவசித்தமான இடத்தில் நம்மோடு கர்த்தர் இருக்கிறார் என்பதைத் தேவன் விளங்கப் பண்ணினார். ஆகையால் எல்லாரும் அவனோடு சமாதானம் பண்ணிக் கொள்ள வந்தார்கள்.

சகோதரனே! பொருளாதார ஆசீர்வாதத்தை மாத்திரம் நம்பி, நீ உன் வாழ்க்கையை ஏமாற்றிக் கொள்ளாதே. எகிப்தின் கோதுமைக் களஞ்சியம் ஆசீர்வாதத் தோற்றத்தோடு ஆபிரகாமை ஆசீர்வதித்தது. உண்மையில் எகிப்தின் பொக்கிஷம் கர்த்தர் அருளினது அல்ல. எகிப்தினுடைய நிழலொதுக்கு உங்களுக்கு இலச்சையாக இருக்கும் என்று வேதம் சொல்கிறது. வளமான நதி, நல்ல கோதுமை அறுவடை, ஐசுவரியம் இவை தேவ சித்தத்திற்கு அடையாளம் அல்ல. நம்மோடு கர்த்தர் இருக்கிறார் என்பதே நாம் வாழும் இடத்தில் தொடர்ந்திருக்க நமக்குக் கிடைக்கும் அனுமதிச் சீட்டு.

**அப்பமும் மீனும் ஆண்டவர் கையினால் சாப்பிட்டவர்கள் சிலுவைக்கு வரவில்லை. சிலுவைக்கு வந்தவர்கள் அவருடைய கல்லறைக்கும் வந்தனர்.**

**27**
**மார்ச்**

# உனக்கென்ன?

நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன நீ என்னைப் பின்பற்றிவா. (யோவான் 21:22)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் அருமையான சீஷனான பேதுருவிடம், எந்தவிதமான மரணத்தினால் அவன் தன்னை மகிமைப்படுத்தப் போகிறான் என்பதை அவனுக்கு விளக்கிச் சொன்னார். தனக்கு ஊழியம் செய்வதினிமித்தம் அவன் சந்திக்கப் போகும் கொடூர மரணத்தை ஆண்டவர் பேதுருவுக்குச் சுட்டிக் காட்டினார்.

பாடுகளில்லை, உபத்திரவங்கள் இல்லை என்று இன்று இனிய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் நூதனப் போதகர்கள் திருந்த வேண்டும். ஆதி அப்போஸ்தலர்கள் காலத்து அதிசயங்களெல்லாம் இன்றும் நடக்கும் என்று நம்புகிறவர்கள், நம்பிப் பிரசங்கம் செய்பவர்கள், அப்போஸ்தலர் காலத்து உபத்திரவங்களும் இன்று நம்மைத் தொடரும் என்று ஏன் சொல்ல மறுக்கிறார்கள்?

உலகத்தோடு ஒத்துப் போகாத நம்மை உலகம் உபத்திரவப்படுத்தும் இதனையே பேதுருவுக்கு ஆண்டவர் உணர்த்தினார். அப்பொழுது அங்கே யோவான் வந்தான். உடனே பேதுரு இயேசுவிடம், யோவானைச் சுட்டிக்காட்டி, அவன் காரியம் என்ன என்றான். தனக்கு இன்னவிதமான மரணம், பாடுகள் என்று குறித்த இயேசு யோவானுக்கு எந்தவிதமான மரணத்தைக் குறித்திருக்கிறார் என்று அறிய ஆசைப்பட்டான். தன்னுடைய முடிவு அவனுக்குத் திருப்தியாக இல்லாதபடியால் அவன் காரியம் என்னவென்று கேட்டான்.

அவரவர் தங்கள் அழைப்பைக் காத்துக் கொள்ள வேண்டுமே தவிர, பிறரின் அழைப்பில் தலையிடக் கூடாது. ஆகவே, உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்று கட்டளையிட்டார். தன்னுடைய இரண்டாம் வருகை மட்டும் யோவான் உயிரோடிருந்தாலும் அது பற்றி கேள்வி கேட்க பேதுருவுக்கு உரிமை இல்லை. தன் அழைப்பின்படியே அவன் ஓட வேண்டும் என்பது இயேசுவின் விருப்பம்.

யோவான் என்றைக்கும் மரிப்பதில்லையென்று இயேசு சொன்னார் என்று மக்கள் தவறாக விளங்கிக் கொண்டார்கள்.

**வா என்றால் நீ வரவேண்டுமே தவிர,**
**அவனும் வருவானா என்று கேள்வி கேட்க**
**உனக்கு உரிமையில்லை.**

28
மார்ச்

# நொண்டி நடந்தான்

அவனுடைய தொடைச்சந்தைத் தொட்டார். அதினால் அவருடனே போராடுகையில் யாக்கோபின் தொடைச் சந்து சுளுக்கிற்று. (ஆதி.32:25)

கர்த்தரின் சித்தத்தைவிட்டு மாம்சீகத்தில் நன்றாய் ஓடினவன் யாக்கோபு. பெனியேலில் கர்த்தரைச் சந்தித்து இருபது வருடங்களாகியும் அவன் திருந்தவேயில்லை. பிரச்சனை வந்தால், அதைவிட்டு விட்டு ஓடித் தப்பித்துக் கொள்ளலாம் என்பது யாக்கோபின் குறுக்குப் புத்தி! ஆண்டவர் அவனைத் திருத்தப் பல முயற்சிகள் எடுத்தார். ஆனால் யாக்கோபு தன் மாம்சீக ஓட்டத்தை நிறுத்தவே இல்லை.

அவனைத் திருத்தும்படி யாப்போக்கின் ஆற்றின் கரையில் அவனைத் தனிமைப்படுத்தி, அவனுடைய தொடைச் சந்தைச் சுளுக்கும்படி செய்தார். அதன் பிறகு அவன் நொண்டி நொண்டி நடந்தாலும், சரியானப் பாதையில் நடந்தான். தவறானப் பாதையில் சிறுத்தைபோல பாய்ந்து ஓடுவதைவிட, சரியான பாதையில் ஆமை வேகத்தில் சென்றால் கூட, அது நன்மையாகும். யாக்கோபின் பலம், அவனது ஓட்டம். அவனுடைய ஓட்டம் தேவசித்தத்திற்கு மாறாக இருந்தது. ஆகவே அவன் பலத்தைத் தொட்டார்.

நம்முடைய பணம், தாலந்து இவையெல்லாம் தேவனுக்கு விரோதமானப் பலமாக இருந்தால், கர்த்தர் அந்தப் பலத்தைப் பலவீனமாக்குவார். நாம் தேவனையே சார்ந்திருப்பதுதான் கர்த்தர் விரும்பும் பாதை.

யாக்கோபு தன் பாடத்தைக் கற்றுக்கொண்டாலும் இஸ்ரவேலரோ தங்கள் பாடத்தைக் கற்றுக் கொள்ளவேயில்லை. ஆவிக்குரிய பாடத்தைக் கற்றுக் கொள்ளாமல், மூடநம்பிக்கையைக் கற்றுக் கொண்டனர். எப்படியெனில், இஸ்ரவேல் புத்திரர் இந்நாள்வரைக்கும் தொடைச் சந்து நரம்பைப் புசிக்கமாட்டார்கள் (ஆதி.32:32). இது எவ்வளவு புத்தியீனமான முடிவு. இஸ்ரவேலர் தங்கள் நம்பிக்கையில் நொண்டி நடந்தனர்! இது பரிதாபமானது.

நம்முடைய ஓட்டம் வேகமாக இருக்கலாம், ஆனால் விவேகமாக இருக்கிறதா? விவேகமாகவும் இருக்கலாம். ஆனால் தேவன் நியமித்தப் பாதையில் இருக்கிறதா?

**பாய்ந்து ஓடி பாதாளத்தில் விழுவதைவிட,**
**நொண்டி நடந்து பரலோகம் செல்வதே மேல்.**

**29**
**மார்ச்**

# எது அனுபவம்?

இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும், இராப்போஜனம் பண்ணுகையில் அவர் மார்பிலே சாய்ந்து, ஆண்டவரே உம்மைக் காட்டிக் கொடுக்கிறவன் யார் என்று கேட்டவனுமாகிய சீஷன். (யோவான் 21:20)

ஆவிக்குரிய அனுபவங்களால் மனிதன் வேறுபட்டவனாயிருக்கிறான். ஆகையால் அனுபவங்களையே உபதேசமாக மாற்றக் கூடாது. பவுல் ஞானஸ்நானம் பெற்ற அனுபவம் மிகவும் வித்தியாசமானது. வானத்திலிருந்து சத்தமும் பேரொளியும் உண்டாகி, அவன் தரையில் பார்வையற்றவனாய் விழுந்த பின் ஞானஸ்நானம் பெற்றான். எத்தியோப்பிய நிதி அமைச்சன் இரதத்தில் பிரயாணம் செய்து, வழியில் ஞானஸ்நானம் பெற்றான். இரண்டும் வித்தியாசமான அனுபவங்கள். இந்த அனுபவங்களையே ஞானஸ்நான உபதேசங்களாகப் பிரசங்கிக்கக் கூடாது.

இன்று இயேசுவின் மார்பினிலே சாயும் அனுபவம் என்று ஓர் உபதேசம் பிரசங்கிக்கப்படுகிறது. இந்த அனுபவத்திற்கு ஊழியக்காரர்களால், அழைப்புக் கொடுக்கப்படுகிறது. விசுவாசி மற்றொரு விசுவாசியின் மார்பில் சாய்ந்து கர்த்தரைத் துதிப்பது, மார்பினில் சாயும் அனுபவம் என்று சொல்லப்படுகிறது. இது ஆவிக்குரிய அனுபவமா?

பஸ்கா போஜன வேளையில் இயேசு திருவிருந்தை ஸ்தாபித்தார். பஸ்கா புசிக்கும் பொழுது, இடது பக்கம் சாய்ந்திருப்பார்கள். இயேசுவுக்கு இடப் பக்கம் அமர்ந்திருந்தவன் யோவான். அவன் தன் இடப்பக்கம் உள்ளவன் மேல் சாய்ந்து போஜனம் பண்ணுவான். இப்பொழுது இயேசு போஜனப் பந்தியிலிருக்கையில், உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான். என்று சொல்லவே, சீஷர்கள் ஒருவொருக்கொருவர், அவன் யார் என்று விசாரித்தான் அப்பொழுது யோவான், இடப் பக்கம் சாய்ந்தவன், வழக்கத்திற்கு மாறாக வலது பக்கம் இயேசுவின் மேல் சாய்ந்து, காட்டிக் கொடுக்கிறவன் யார் என்று இயேசுவிடம் கேட்டான்! யோவான் வலது பக்கம் சாய்ந்தது வழக்கத்திற்கு மாறானதாகையால், அவன் செயல் சீஷர்களின் கவனத்தை ஈர்த்தது. ஆகவே இயேசுவின் மார்பில் சாய்ந்தவன் என்று யோவானை அடையாளம் காட்டினார்.

இது தற்செயலாக நடைபெற்ற சம்பவமே தவிர, இதில் ஆவிக்குரிய அனுபவம் ஒன்றுமில்லை. ஆனால் இதையே ஓர் உன்னத அனுபவமாக பிரசங்கிப்பது தவறு. இயேசுவின் மார்பினில் சாய்ந்தது யோவானின் ஓர் செயல். அது அவனுடைய வழக்கமல்ல. அவருடைய பாதத்தில் அமர்வதே நமக்குக் கொடுக்கப்படும் அழைப்பு.

**இயேசுவின் மார்பினில் சாய்வது உன்னத அனுபவமெனில், சாட்டையை எடுத்து அவர் அடித்தது என்ன அனுபவம்?**

30
மார்ச்

# ஆவியின் ஏவுதலினால்

அவன் ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்தில் வந்திருந்தான். (லூக்.2:27)

மாம்சீகமான நம் தொழுகை, பாடல்கள், ஊழியங்கள் கர்த்தரால் அங்கீகரிக்கப்படுகிறதில்லை. ஆவியின் ஏவுதலினாலே நாம் எதையும் செய்ய வேண்டும்.

ஞாயிற்றுக் கிழமையாயிருப்பதினால், நாம் ஆலயம் செல்கிறதில்லை. ஆவியானவர் நம்மை ஆயத்தம் பண்ணுகிறபடியால் நாம் ஆலயம் செல்கிறோம். ஆவியானவரின் ஏவுதல் இன்றி ஆலயம் சென்றால், ஆண்டவரைத் தரிசிக்க முடியாது. ஆவியானவரின் ஏவுதல் இல்லாமல் கேட்டால், பிரசங்கம் வெறுமையாயிருக்கும். வழக்கம் காரணமாக நீ வேதத்தை வாசிக்கிறாயா? அப்படி வழக்கத்திற்காக நீ வேதம் வாசித்தால், கர்த்தர் உன்னோடு பேசமாட்டார். ஆவியின் ஏவுதலின்படி வேதத்தை வாசி.

சிமியோன் ஆவியானவர் அவரை ஏவவே, எருசலேமின் தேவாலயத்திற்கு வந்தார். அப்படி ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்து சிமியோன் ஆலயத்திற்கு வந்தால் ஓர் ஆச்சரியமான சம்பவம் நடந்தது. கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடைய மாட்டாய் என்று கர்த்தர் அவனுக்கு சொல்லியிருந்தார். ஆவியின் ஏவுதலின்படி அவன் வந்தபடியால், ஆலயத்தில் இயேசுவைக் குழந்தையாகக் காண்டான். இரட்சண்யத்தைத் தன் கண் கண்டதாக அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

ஜெபிக்காமல் ஆலயத்திற்கு வருவோர் சத்தத்தைக் கேட்பார்கள், சத்தியத்தைக் கேட்கமாட்டார்கள். உதடுகள் கெம்பீரமாய்ப் பாடும், உள்ளமோ உறங்கிக்கிடக்கும். வாய் அந்நிய பாஷையைப் பேசும், இதயமோ கர்த்தருக்கு அன்னியராயிருக்கும்! ஆவியில் நிறைந்து, ஆவியின்படி நடப்போருக்கு மனசாட்சியில் பாரமிருக்காது. ஆவியின் ஏவுதலின்படி வாழ்ந்தால், உன் மனசாட்சி உன்னைக் கடிந்துக் கொள்ளாது.

ஆவியின்படி ஆலயம் வந்த சிமியோனைச் சமாதானமாகப் போகவிட்டார். இவ்வுலகத்தையும் அவன் சமாதானமாய்க் கடந்து போனான். ஏனெனில் அவன் இயேசுவைத் தன் வாழ்வில் சந்தித்தது தற்செயலாய் அல்ல, ஆவியின் ஏவுதலின்படி.

**மாம்சக் கண்ணால் அன்று எருசலேம்<br>இயேசுவைக் கண்டது; ஆவியின் கண்ணால்<br>அவரைக் கண்டவர்களே இரட்சிக்கப்பட்டனர்.**

31
மார்ச்

# இழந்துவிடு

உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப்பிடுங்கி எறிந்துபோடு. (மத்.5:29)

நாம் பரலோகத்திற்குப் போவது இப்பொழுதுள்ள சரீரத்தோடு அல்ல. குருடன், பரலோகில் குருடனாக இருக்க மாட்டான். ஆனால் இந்தச் சரீரத்தோடுதான் நம் பரலோகப் பயணம் ஆரம்பிக்கிறது. நாம் மரிக்கும் பொழுது எப்படி இருப்போமோ, அப்படியே பரலோகிற்கு ஆயத்தமாகிறோ ம். நீதிமானாக மரித்தால், நீதிமானாக எழுந்து பரலோகம் போவோம். ஆனால் சரீரம் வித்தியாசமானது. அழிவுள்ளதாகிய இது அழியாமையைத் தரித்துக் கொள்ளும்.

இங்கு வலது கண் என்று குறிப்பிடப்படுவது, நமக்கு உரிமையானதும் மிகவும் சிறப்பானதுமான ஒன்று. நமக்குப் பிரியமான ஓர் பொருள். இடம் அல்லது உறவு நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்குத் தடையாக இருந்தால், அந்தத் தடையைப் பிடுங்கிபோடு. இந்தத் தடையை நீக்காமல் நமது உரிமைகளான பொருள், பணம், இடம் இவற்றையே பெரிதாக எண்ணுவோமெனில், ஆவிக்குரிய மேன்மையை அடைய மாட்டோம்.

கண் போன்று, நமக்கு அருமையாக இருப்பதையும் கிறிஸ்துவுக்காக இழக்க ஆயத்தமாக வேண்டும். இல்லாவிட்டால் நம் முழு வாழ்க்கையையும் நாம் இழந்துவிடுவோம். எழுத்தின்படி கண்ணைப் பிடுங்கிப் போடு என்று இந்த வசனம் சொல்லவில்லை. அப்படிச் செய்தால் அது தற்கொலைக்கு வழி வகுக்குமே. ஆகவே இந்த வசனத்தை ஆவியின்படியே விளங்கிக் கொள்ள வேண்டும்.

வலது கண், வலது கை நமது உரிமைகள்! ஆனாலும் கிறிஸ்து இயேசுவுக்காக நமது உரிமைகளை இழந்துவிடுவதற்கு நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துப் போவான் என்பதை நாம் ஆழமாக உணர வேண்டும்.

எப்பொழுதும் இயேசுவிடம் எதையாவது பெற்றுக் கொள்ளும் ஆசையை, ஆழப் புதைத்துவிட்டு, இயேசுவுக்கு எதைக் கொடுக்கலாம் என்று கருத்தாயிரு; தியாகமாக வாழ்!

**கிறிஸ்து என்னை வாழவைக்க வேண்டும். இது எதிர்பார்ப்பு.**
**கிறிஸ்துவுக்காய் நான் மரிக்க வேண்டும். இது அர்ப்பணிப்பு.**

**1**
**ஏப்ரல்**

# எதையும் கேள்; நீ பெற்றுக் கொள்வாய்

நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். (1 யோவா.5:15)

பழமுதிர்ச்சோலை என்று விளம்பரப் பலகை தொங்கும் அங்காடியில், இங்கு எல்லாமே கிடைக்கும் என்று அறிவிப்புப் பலகையும் தொங்குகிறது. அந்த அறிவிப்பை வாசித்த ஒருவன், எல்லாமே கிடைக்குமா என்று எதிர் கேள்வியோடு திருக்குறள் புத்தகம் கிடைக்குமா என்று கேட்கிறான். தம்பி! திருக்குறள் புத்தகம் பழக்கடையில் எப்படி கிடைக்கும் என்று கடைக்காரர் பதிலளிக்கிறார். எல்லாமே கிடைக்கும் என்று நீங்கள் தானே விளம்பரம் பண்ணியிருக்கிறீர்களென்று கேலியாகக் கேட்டான் அவன். எல்லாமே கிடைக்கும் என்பது பொது விளம்பரம் அல்ல, பழக்கடை விளம்பரம். ஆகவே அவன் எந்த பழத்தையும் கேட்க உரிமையுண்டு. அது போல "எதைக் கேட்டாலும்" என்று கர்த்தர் சொல்லும் பொழுது கர்த்தரின் சித்தத்தை மீறி கேட்க கூடாது. எதையும் கேள் என்பது நிபந்தனையற்ற ஓர் உரிமம் அல்ல.

நாம் கேட்பதை கர்த்தர் தருவார் என்ற அறிவு முதலில் நமக்கு வேண்டும். தேவ நீதி, ஒழுங்கு, சட்டங்கள், இவைகளை மீறாமல் நாம் எதைக் கேட்டாலும், அதனை நம் கர்த்தர் கொடுக்க முடியும் என்பது தான் நாம் பெறவேண்டிய அறிவு. அடுத்து அதனை அவர் தர நம்மிடம் எந்தத் தடையும் இல்லை என்ற உணர்வும், மனநிலையும் நமக்கு ஏற்பட வேண்டும். இந்த நிலைதான் விசுவாசம். இப்பொழுது நாம் எதைக் கேட்டாலும் கர்த்தர் தருவார். நம் கரங்கள் நாம் கேட்டதைப் பெற்றுக்கொள்ளுமுன், நம் விசுவாச இருதயம் இதனைப் பெற்றிருக்கும். இருதயம் விசுவாசத்தால் எதனைப் பெற்றுக்கொள்ளுகிறதோ அதனையே நம் மாம்சீகக் கண்கள் காணும், நம் கரங்கள் பெற்றுக்கொள்ளும்.

எதைக் கேட்டாலும் என்றால் நம் மனம் எந்த அளவைக் காட்டுகிறதோ அந்த அளவிற்குக் கேட்பதல்ல. நாம் எதைக் கேட்க வேண்டும் என்பது சூழ்நிலைகளின் உத்தரவு அல்ல. சூழ்நிலை ஓர் விண்ணப்பத்தை வைக்கும், ஆவியானவர் அந்த விண்ணப்பத்திற்கு ஒப்புதல் முத்திரை வைப்பார். இந்த முத்திரையைப் பெற்றிருக்கும் நாம் எதைக் கேட்டாலும் அவர் தருவார். உங்களைக் கேட்கத் தூண்டுவது கேட்கப்படும் பொருளின் மீதுள்ள உங்கள் வாஞ்சையல்ல, கொடுக்க விரும்பும் ஆவியானவரே!

"பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும்" (அப்.8:19) என்று சீமோன் கேட்டது, மாம்சீகத்தின் ஆசை! பரலோகம் இந்த வேண்டுதலைப் புறக்கணித்தது.

**"எதையும் கேள், பூமியிலுள்ள எல்லாவற்றையும் அல்ல, பரலோகம் உனக்கென்று முத்திரையிடுவதை மட்டுமே."**

2

ஏப்ரல்

# மகிழ்ச்சிப் பூங்காவிற்குச் செல்லும் மனக்கிலேசப் பாதை

"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்." (யோவா.16:33)

கடவுளின் பிள்ளைகளாயிருப்பதினால் உபத்திரவங்களோ, சங்கடங்களோ நமக்கு நேரிடாது என்ற உத்திரவாதத்தை வேதம் நமக்குத் தரவில்லை. மாறாக நமக்கு உலகில் உபத்திரவங்கள் உண்டு என்றே கர்த்தரும் சொல்கிறார். கிறிஸ்தவர்களென்றால் சிலுவையும், வேதனையும்தான்; நமக்கு எந்த விதமான மகிழ்ச்சியும் இல்லவே இல்லை என்பது இயேசுவின் போதனை அல்ல. கிறிஸ்துவுக்குள் நாம் வாழ முற்படும் பொழுது, கிறிஸ்துவின் போதனைகள் உலகிற்கு இணைந்து போகாவிட்டால் உலகம் நம்மைத் துன்பப்படுத்துகிறது.

அநியாயம், அக்கிரமம், அநீதி இவை உலகிற்கு மிகவும் பிரியமானவை இவற்றை நாம் விரும்பி அணைத்துக் கொண்டால், உலகம் நம்மை ஆசீர்வதிக்கத் தொடங்குகிறது. இது இயற்கைதானே! ஆனால் அந்த ஆசீர்வாதத்தைக் கண்டு "ஏன் துன்மார்க்கன் தழைக்கிறான்? அவர்கள் இருதயம் விரும்புவதைப் பார்க்கிலும் அதிகமாய் நடந்தேறுகிறதே!" என்று கடவுளின்பிள்ளை கலங்கி நிற்கிறான். உடனே தன் பரிசுத்த ஜீவியத்தின் மேல், "வீணானது" என்று ஓர் முத்திரையைக் குத்திவிட்டு விரக்தியோடு வேதத்தை மூடி அமர்ந்து விடுகிறான்.

சகோதரனே! நீயும் இப்படியொரு மனச் சஞ்சலத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறாயோ? உனக்குத்தான் இயேசு சொல்கிறார். உலகம் தேவனுடைய பிள்ளையான உனக்குத் தரும்படி தன்கைகளில் வைத்திருக்கும் பாத்திரம் வேதனையின் பாத்திரம். அந்தப் பாத்திரம் கசப்பானது! அதை நீ குடிக்க மாட்டாய் என்பது சாத்தானின் நம்பிக்கை. நீயோ இந்தப் பாத்திரத்தை எடுத்து "இயேசுவே உம்முடைய நாமத்திற்காக இந்தப் பாத்திரத்தில் நான் பானம் பண்ணுகிறேன்" என்று சொல்வீர்களானால்; உலகத்தை நீங்கள் ஜெயித்துவிட்டீர்கள்; உங்களைத் துன்பப்படுத்திய உபத்திரவங்கள் வலிமையிழந்து மடிந்து போம்!

உலகத்தை ஜெயித்துவிட்டாய் என்று ஆவியானவர் உன்னை வெற்றி மேடைக்கு அழைத்துச் செல்வார்.

**"உபத்திரவம் உன்னை உருவாக்கும்;<br>உன்னை உருவழித்துவிடாது"**

3
ஏப்ரல்

# உலகோடு கலந்து விடாதே; ஒதுங்கி விடு

"ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல, இதோ நான் உங்களை அனுப்புகிறேன்." (மத் 10:15)

கிறிஸ்தவ வாழ்க்கை கூண்டுக்கிளிபோல பத்திரமாக ஒதுங்கி வாழ்வதல்ல. பல எதிர் சவால்களைச் சந்திக்க வேண்டும் என்பதே தேவ நோக்கம். கடித்துக் குதறும் ஒரு ஓநாய் ஆட்டு மந்தைக்குள் வந்தாலே, அது மிகப் பெரிய ஆபத்து. ஆண்டவரோ கர்த்தருடைய பிள்ளைகளான நம்மை ஓநாய் மந்தைக்குள் அனுப்புகிறார். இது எத்தனை பயங்கரமானச் சூழ்நிலை. இந்தப் பயங்கரமான சூழ்நிலையில், நாமும் ஓநாயாக சுபாவத்தில் மாறிவிடக்கூடாது. நாம் ஆடாகவே இருக்க வேண்டும்.

சூழ்நிலை என்னை மாற்றிவிட்டது. என்னைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்கள் பொல்லாதவர்கள். நான் மட்டும் எப்படி நல்லவனாக இருக்க முடியும் என்று மனிதன் தன் பொல்லாத் தன்மைக்கு சூழ்நிலையைக் காரணம் காட்டுகிறான். ஓநாய் மந்தைக்குள் நாமும் ஓநாயாக மாற வேண்டும் என்பது சரியல்ல.

உலகம் பாவத்திலும், அக்கிரமத்திலும் கிடந்தாலும், நாம் பாவத்தில் சிக்கிக் கொள்ளாதவாறு, பரிசுத்தவானாகவே இருக்க வேண்டும், எதிர்சூழ்நிலைகளில் நாம் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. பகைவர்கள் ஓநாய்கள் போல், இயேசுவின் மேல் பாய்ந்தாலும் இயேசு சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலிருந்தார் என்பது நமக்கு ஓர் பாடமாக இருக்கட்டும். ஓநாய்க் கூட்டத்தில் நாமும் ஓநாயைப் போலிருந்தால், நம் நிமித்தம் தேவ நாமம் மகிமைப்படுமா?

சுவிசேஷ ஆர்ப்பரிப்பில் சிங்கமென செயற்படு, ஊழிய அர்ப்பணிப்பில் ஆட்டைப் போல அடங்கிவிடு. ஓநாயைப் போல சீறிப் பாய்ந்தவர்கள், வரலாற்றுச் சுவடுகளில் இல்லாமலே போனார்கள். ஆட்டைப் போல அமைதி காத்தவர்கள் சரித்திரத்தின் நாயகர்களாக இன்றும் வாழ்கின்றனர். கிறிஸ்துவுக்கு எதிராக எழுந்த மதவாத ஓநாய்கள், அறியாமை ஓநாய்கள், ஆணவ ஓநாய்கள் செயலற்றுப் போய்விட்டன! ஆனால் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியான இயேசுவோ சிங்கமென எழும்பி நிற்கிறார்.

**சத்தியத்தை எதிர்க்கும் மாளிகைகள் மண் குடிசையாகும்; சத்தியத்திற்குப் பணியும் மண்குடிசை மாளிகையாகும்.**

4
ஏப்ரல்

# கிழிக்கும் முள், மணக்கும் மலராகுமா?

"உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் பாம்பைக் கொடுப்பானா? (மத் 7: 9-10)

பிள்ளைகள் எவற்றையோ அப்பம் என்றும், மீன் என்றும் நம்பி பெற்றோரிடம் கேட்கும்பொழுது பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் அப்பம் என்று கேட்பது, கல் என்றும், மீனென்று நம்பி கேட்பது பாம்பு என்றும் கண்டால் அவற்றை, பிள்ளைகளுக்குக் கொடுப்பார்களா? கொடுக்க மாட்டார்களே.

அதுபோல, கடவுளிடம் அப்பம் என்று பிள்ளைகள் கேட்பதை, அவர் தன் ஞானத்தில், கல் என்று காண்பாரெனில், நிச்சயமாக அதனைக் கொடுக்க மாட்டார். மீன் என்று பிள்ளைகள் எண்ணிக் கேட்பதை, நாளடைவில் பாம்பாகக் கடவுள் காண்பாரெனில். பிள்ளைகளுக்கு அதனைக் கொடுக்க மாட்டார்.

இன்று நல்ல உணவாகத் தெரியும் மீன், நாளைக்கு ஜீவனைப் பறிக்கும் விஷப் பாம்பாக இருக்குமெனில், அதனை கர்த்தர் தரவே மாட்டார். ஏனெனில் எந்தப் பெற்றோரும், அப்படிப்பட்ட தீமைகளை அனுமதிக்க மாட்டார்களே.

சகோதரனே! நீ இன்று பெற்றோரிடம் போராடி அவர்களை எதிர்த்து நின்று இதுதான் வேண்டும் என்று பிடிவாதமாகக் கேட்பது நாளை உன் மனச் சமாதானத்தையே கெடுக்கும் பொல்லாப்பாக மாறுமெனில், நீ கேட்பதை உன் தகப்பன் தருவாரா?

நீ இன்று அப்பம் என்று விரும்புவது, சாப்பிட முடியாத ஓர் கல் என்று கர்த்தரின் ஞானம் அறியுமெனில், அந்த ஞானத்திற்கு உன்னை அர்ப்பணித்து அந்த அப்பத்திற்கான ஆசையை விட்டு விடு. நீ காண்பது அப்பமும், மீனும், கர்த்தர் அவற்றைக் காண்பது கல்லும், பாம்பும். கர்த்தரின் பார்வையே சரி என்று விசுவாசி. நீ தரிசிக்கிறபடி நடவாமல், விசுவாசித்து நட.

நீ கேட்பது கிடைக்கவில்லையா? தேவன் உன்னைத் தப்புவிக்கிறார் என்று நம்பு.

**தட்டுகிற கதவு திறக்காவிடில்,**
**நீ உள்ளே செல்லும் வீடு அது அல்ல.**

5
ஏப்ரல்

# நீதிமானோ அறிவினால் தப்புவான்

"சர்ப்பங்களைப் போல் வினாவுள்ளவர்களாயிருங்கள்." (மத்10:16)

சர்ப்பம் கொடிய விஷமுள்ளது; தீங்கு செய்யக் கூடியது. அத்தகையக் கொடிய சர்ப்பங்களைப் போல இருங்கள் என்று இயேசு சொன்னது, உண்மையாய் விளங்கிக் கொள்ள முடியாத ஒன்று. ஆனால் சர்ப்பங்களைப் போல இருங்கள் என்று இயேசு சொல்லவில்லை, சர்ப்பத்தைப் போல வினாவுடையவர்களாயிருங்கள் என்றே இயேசு சொன்னார். வினா என்றால் புத்திசாலித்தனம் என்று பொருள்.

ஆபத்தான சூழ்நிலையில் அற்பமான ஓர் எலி கூட தன் கால்களைப் பயன்படுத்தி, அந்தச் சூழ்நிலையினின்று எளிதில் தப்பிவிடும். எந்த மிருகமும் தன் கால்களைப் பயன்படுத்தி, தன்னைத் தற்காக்க முடியும். ஆனால் பாம்பிற்கு ஓடுவதற்கு கால்களோ, திருப்பித் தாக்க கரங்களோ இல்லை. தப்புவதற்கு அதற்குரிய ஒரே வழி அதன் அறிவு ஒன்றே, தன் அறிவைப் பயன்படுத்தி ஆபத்தை விட்டு ஓர் கணப்பொழுதில் கடந்து சென்று, தப்பித்துக் கொள்கிறது.

நாமும் எந்தவிதமான உதவியும் இல்லாமல், ஓர் இக்கட்டான சூழ்நிலையில் அகப்பட்டுக் கொள்வோமானால் தப்புவதற்கு ஒரேயொரு வழி மாத்திரமே இருக்கிறது. நட்பு, உறவு, பணம், பலம் என்று எந்த உதவியும் இல்லாத வேளையில் நமக்கு உதவுகின்ற மிகப் பெரிய சக்தி தேவனைப் பற்றிய நம் அறிவுதான்.

நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன் என்ற அறிவுதான், நம்மைத் தப்புவிக்கும். இடைவிடாமல் நாம் ஆராதிக்கும் நம் தேவன் நம்மைத் தப்புவிக்க வல்லவர் என்ற அறிவும், நம்பிக்கையும் எந்த ஆபத்திலிருந்தும் நம்மைத் தப்புவிக்கும்.

பாம்பு தப்பி ஓட அறிவை மட்டுமே நம்பியிருப்பது போல், நாமும் தேவனை அறியும் அறிவை மட்டுமே சார்ந்திருந்தால், எந்த உதவியும் இல்லாத வேளையிலும் பத்திரமாக இருப்போம்.

அக்கினிச் சூளையில் தூக்கி எறியப்பட்ட எபிரேய வாலிபர்கள், தப்புவதற்கு எந்த வழியும் இல்லாமலிருந்தார்கள். "நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்" (தானி 3:17) என்ற அறிவு மாத்திரமே ஆபத்துக் காலத்தில் அவர்களுக்குத் துணையாக நின்றது.

கொடிய பாம்பு தன் ஞானத்தினால் மாத்திரமே தப்புவதுபோல் தேவ ஞானத்தினால் மட்டுமே நாமும் தப்ப முடியும்.

**"எல்லா வழிகளும் இருண்டு போனாலும், கர்த்தரை அறிகிற அறிவாகிய விளக்கு உனக்கு வழியைக் காட்டும்."**

| |
|---|
| 6 |
| ஏப்ரல் |

# இயேசுவுக்காக உடைபடு

"நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து அதை உடைத்தாள்."

(மாற்கு 14:3)

மாலைக் கதிரவன் மேற்கு வாயிலில் கடந்து போய்க் கொண்டிருக்கிறான் இருள் சூழப்போகும் நேரம், அவள் உள்ளத்தில் துக்கமும், வேதனையும்! காலச்சக்கர வேகத்தில் அவள் வாழ்க்கை சுக்கு நூறாய் உடைந்து சிதைந்து விட்டது. இனி நம்பிக்கையே இல்லை என்ற நிலைக்கு வந்துவிட்டாள்! இப்படி உடைந்த வாழ்க்கைக்கு சொந்தக்காரராக எத்தனையோ பேர்!

உடைந்த வாழ்க்கையை எடுத்து, அதைச் சரிப்படுத்த உற்றார், உறவினரிடம் ஓடி ஏமாந்து நிற்போர் சிலர். உடைந்த வாழ்க்கையை எண்ணிக் கதறி துடிப்போர் பலர்.

ஒரு பெண் தன் உடைந்த வாழ்க்கையை எடுத்துக் கொண்டு கர்த்தர் இயேசுவின் சமுகத்திற்கு வந்தாள். இயேசுவே என் உடைந்த வாழ்வை உமக்கே அர்ப்பணிக்கிறேன். என் நண்பர்கள், உறவினர், நெருக்கமானவர் அனைவருமே என் வாழ்க்கையை உடைத்துப் போட்டார்கள் என்று அவள் கதறினாள். இயேசு அவளிடம் பரிவுடன் கேட்டார். "மகளே! பிறர் உன் வாழ்வை உடைத்தது இருக்கட்டும். உன் வாழ்வின் "இந்தப் பகுதியை" உடைத்தது யார் என்று, அவள் வாழ்வின் ஓர் நிகழ்வை அவர் சுட்டிக் காட்டினார். "உடனே அவள் உணர்வடைந்து, "இயேசுவே அதனை நானே உடைத்தேன்" என்று அழுதாள். இயேசு அவளிடம் "அந்த உடைந்த பகுதியை என் கையில் கொடு" என்றார்.

இப்படி உடைந்த வாழ்க்கையைச் செப்பனிட ஆண்டவரிடம் அனேகர் வருகிறார்கள். ஆனால் இந்தப் பெண்ணோ "பரணியைக் கொண்டு வந்து இயேசுவுக்காக அதை உடைத்தாள்."

தேவ பிள்ளையே! உன் உடைபட்ட வாழ்க்கையை இயேசுவிடம் கொண்டுவருவது நல்லதுதான். ஆனால் உன் வாழ்க்கையை இயேசுவுக்காக உடைப்பது அதைவிட மேலானதில்லையா? உன் வாழ்வு, வளம், சுகம் இவை இயேசுவுக்காக உடைபடவே இல்லையா? உடைபடா அந்தப் பரணிகள் எல்லாமே வீண். செல்வங்களைப் பத்திரப்படுத்தாதே, பரமனின் பணியில் அவற்றைச் செலவிடு! "இதோ பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்" என்பது இதய கீதமாக ஒலிக்கட்டும்!.

சாகாத கோதுமை மணி, புதைக்கப்படாத வித்துக்கள், இயேசுவிற்காக உடைக்கபடாத வாழ்வு இவையெல்லாம் குப்பைகளே!

**உடைந்து இயேசுவிடம் வந்தபின்,**
**அவருக்காக உடைபட ஆயத்தமாகு.**

7
ஏப்ரல்

# உடைத்துவிடு

வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றினாள்." (மாற்கு 14:3)

அவள் கொண்டு வந்தது விலையேறப் பெற்ற தைலம். அதனை எவ்வளவு கவனமாக அவள் அர்ப்பணிக்க வேண்டும்? அக்கால வழக்கத்தின்படி வீட்டிற்கு வரும் விருந்தினரை வரவேற்க நெற்றியில் ஒரு சொட்டு ஒலிவ எண்ணெய் வைத்தால் போதும். இவளோ ஓர் குப்பி நிறைய பரிமளத் தைலத்தைக் கொண்டு வந்தாள். அதோடு அந்தக் குப்பியை உடைத்து, முழுவதையும் இயேசுவுக்கே அவள் அர்ப்பணித்தாள்.

பரணியை உடைக்க வேண்டிய அவசியம் என்ன? கொஞ்சம் தைலத்தை ஊற்றிவிட்டு. மீதியை பத்திரப்படுத்தியிருக்கலாமே? பரணியை உடைத்ததினால் தானே சீஷர்கள், "வீண் செலவு" என்று குற்றப்படுத்துவதற்கு ஏதுவுண்டாயிற்று.

ஆனாலும் அவளது அர்ப்பணிப்பின் ஆழத்தை நாம் புரிந்துக்கொள்ள வேண்டுமே. அன்றைய வழக்கத்தின்படி, ஓர் ராஜாவுக்கு ஓர் அர்ப்பணம் செய்தால் அதில் மீதியே வைக்கக்கூடாது. அது வேறுயாருக்கும் அர்ப்பணிக்கப்பட கூடாது அந்த முறையின்படியே இந்தப் பெண்ணும் இயேசுவை தன் ராஜாவாக மதித்து விலையேறப்பெற்ற நளதம் என்னும் தைலத்தை முழுமையாக அவருக்கே அர்ப்பணிக்கும்படி, வேறு எவருக்கும் அதனைப் பங்கிடக் கூடாது என்ற வைராக்கியத்தில் அந்தப் பரணியை அவள் உடைந்தாள்.

கர்த்தரின் பிள்ளையே! உன் உன்னத வாழ்வை இயேசுவுக்கு அர்ப்பணிக்க நீ ஆயத்தப்படுவது நல்லதுதான். ஆனால் வாழ்க்கைப் பரணியை இயேசுவுக்கும், மாம்சீகத்திற்கும், உலகத்திற்கும் பங்கிடுவது சரி அல்ல. உன் வாழ்வு இயேசுவுக்கு மாத்திரமே! ஆம் அவருடைய வார்த்தையின் ஆளுகைக்கு மாத்திரமே உன் ஜீவியம். கிறிஸ்துவுக்கு வெளியேயுள்ள சக்திகள், உன் வாழ்வைப் பங்கிட முனைகின்றன.

மாம்சீகப் பகை, வெறி, கோபம், பயம், திகில் இவையெல்லாம் உன் ஆன்மாவைப் பட்சிக்க வீறு கொண்டு எழுகின்றன. உன் வாழ்வை அவைகள் தீண்டாதவாறு, இயேசுவின் சமுகத்தில் அவருக்காக மட்டும் உடைத்துவிடு. உடைபடாத பரணி வீண்! அவர் பாதத்தில் உடைபட்ட வாழ்வே பயன். காலத்தினால் பரணி உடைந்து அழிவதைவிட, உன் கரத்தினால் இயேசுவுக்காக உடைத்துவிடு. அது அழியாது.

**"உடைந்தால் உருக்குலையும், உடைத்தால் உருப்பெறும்"**

8

ஏப்ரல்

# அர்ப்பணிப்பில்லா வாழ்வு, அர்த்தமற்ற வாழ்வு

"நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றினாள்". (மாற் 14:3)

ஒரு பெண் தன் பாவங்கள் மன்னிக்கப்பட்டதை உணர்ந்து நன்றி பெருக்கினால் ஆண்டவர் இயேசுவிற்கு கொடுக்க விலையேறப் பெற்ற தைலம் நிறைந்த ஒரு வெள்ளைக்கல் பரணியை வாங்கி வந்தாள். இந்த உயர் வகை தைலம் மிகவும் மேன்மையானது. தன்னுடைய ஓராண்டு வருமானத்தைக் கொண்டு இத்தைலத்தை ஒருவர் வாங்க முடியும். இவளோ பாவ செயலில் ஈடுபட்டவள் எந்த வருமானமும் கிடையாது. ஏதேனும் விலையுயர்ந்த ஓர் பொருளை விற்றுத்தான் இதை வாங்கியிருக்க வேண்டும். கர்த்தர் இயேசு தன்னைத் தொட்டவுடனே இயேசுவுக்காக எதையாவது இழக்க வேண்டும். அதாவது அவருக்கு கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் பிறந்தது.

தற்செயலாய் கையில் கிடைத்ததை அவள் எடுத்துக் கொண்டு வரவில்லை. சிந்தித்து செயல்பட்டு ஒரு பொருளைத் தெரிந்தெடுத்தாள். அதுதான் விலையேறப் பெற்ற நளதம் என்ற தைலம். அந்தத் தைலத்தையே கர்த்தருக்கு அர்ப்பணிக்க சமூகத் தடைகளையெல்லாம் தாண்டி வந்தாள்.

தேவ பிள்ளையே! நீ கர்த்தருக்காக எதை அர்ப்பணித்திருக்கிறாய்? காலையும் மாலையும் இரண்டொரு அத்தியாயங்களை வாசிப்பதோ, தவறாமல் தினமும் ஜெபிப்பதோ அர்ப்பணமாகாது. "நான் அல்ல இனி நீரே" என்று வாழ்வது உண்மையான அர்ப்பணம். நமது நோக்கம், நமது ஆசை, நமது தரிசனம் இவைகளை தெய்வ சித்தம் என்ற பலிபீடத்தில் பலியிட்டு அவருடைய நோக்கம் அவருடைய விருப்பம் அவருடைய தரிசனம் என வாழ்வதே அர்ப்பணம்!

எதை அர்ப்பணிப்பது? அவள் விலையேறப் பெற்றதை அர்ப்பணித்தாள். இரட்சிக்கப்பட்ட ஆத்துமாவே உலகத்தில் விலையேறப் பெற்றது. ஆகவே இரட்சிக்கப்பட்ட உன் வாழ்க்கையே இயேசுவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும்.

சகோதரனே, சகோதரியே, இரட்சிக்கப்பட்ட பின் உன் நேரத்தை வழக்கம் போலவே செலவிடுகிறாயா? முன்பு போலவே பழைய பழக்க வழக்கங்களில் இருக்கின்றாயா? எந்தவொரு மாற்றமுமில்லாமல் இரட்சிப்பு என்னும் போர்வையை மாத்திரம் தரித்திருக்கின்றாயா? இது அர்ப்பணமில்லாத வாழ்க்கை. அர்ப்பணமில்லா வாழ்க்கை தேவனை அங்கீகரிக்காத வாழ்க்கை.

**உன் வாழ்க்கை அர்ப்பணமா? வெறும் கிறிஸ்தவ அலங்காரமா? கதறல் கண்ணீருக்குப் பின்னே அழகான குழந்தை மடியில் தவழ்கிறது.**

9
ஏப்ரல்

# நேரமா? மனநிலையா?

"பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள்." (ஆதி 3:8)

யாருக்கு குளிர்ச்சியான வேளை? ஆவியாயிருக்கிற கர்த்தருக்கு குளிர்ச்சி, வெப்பம் என்ற உணர்வுகள் தேவையில்லை. ஆதாம் தான் சரீரத்தில் இருக்கிறான். அவன்தான் வெப்பம், குளிர்ச்சி என்ற உணர்வுகளை அனுபவிக்க முடியும். ஆதாம் ஏற்கெனவே மிக மனரம்மியமான ஏதேன் தோட்டத்தில், நல்ல தட்பவெப்ப நிலையில் இருக்கிறான். ஆகவே அவனுடைய சரீரத்திற்கும் குளிர்ச்சியான வேளை அவசியமில்லை. கடவுளுக்கும், ஆதி பெற்றோருக்கும் தேவையில்லாத இந்தக் "குளிர்ச்சியான வேளை" யாருக்கு? அந்தக் குளிர்ச்சியான வேளை என்றால் என்ன?

இந்தக் குளிர்ச்சியான வேளையில் தான் மனிதன் தேவனது சத்தத்தைக் கேட்டான். கர்த்தரின் வார்த்தையைத் தெளிவாய்க் கேட்பதற்கு நல்ல மனநிலை தேவை. மலர், கனி, செடி, மான், மயில் என்று ஆதாமின் கருத்து, கவனம் சிதைந்து போனால், கர்த்தரின் வார்த்தை ஆதாமிற்குத் தெளிவாய்க் கேட்காது. கடவுளின் நோக்கத்தை அவனும் புரிந்துக் கொள்ளவே முடியாது.

ஆகவே அவன் மனம் கடவுளை நோக்கி ஆவலாய்க் காத்திருக்கும் வேளையில்தான் கர்த்தர் ஆதாமோடு பேசினார். அந்த மனநிலைதான் அதாவது தேவ சமுகத்திற்காக ஏங்கும், விரும்பும் மனநிலைதான் ஆவிக்குரிய குளிர்ச்சியான வேளை.

உலகில் பல்வேறு சூழ்நிலைகளில் சிக்கியிருக்கும் நம் மனம் அடிக்கடி உலகக் கவலைகளினால் பாரப்படுகிறது. இந்தப் பாரமுள்ள மனம் கர்த்தரின் குரலைச் சரியாகக் கேட்காது. ஆகவே இந்தப் பாரம் மனதைவிட்டு நீங்க வேண்டும். அப்படி நீங்கிப்போவதே மனதின் குளிர்ச்சியான வேளை. இந்த வேளையை உன் மனம் சந்திக்குமுன், வேதம் வாசிக்காதே! ஜெபம் பண்ணாதே. காலையில் எழுந்ததும், கர்த்தருக்கு நன்றி சொல்லிப் பழகு. உனக்குப் பிடித்த கருத்தாழமிக்க ஓர் பாடலை, உன் மனம் மகிழ்ச்சியடையும் வரை பாடு. அப்பொழுது உன் மனதை அமைதி ஆளுகை செய்யும். இதுவே குளிர்ச்சியான வேளை.

இந்த வேளையில், கர்த்தர் உன்னருகே உலாவுவதை நீ உணர முடியும். அவர் உன்னோடு பேசுவதைக் கேட்க முடியும். ஆகவே தேவனது சமுகத்தை தேடுமுன், குளிர்ச்சியான வேளையைத் தேடு.

**குளிர்ச்சியான வேளை காலம் அல்ல, மனநிலை.**

10
ஏப்ரல்

# விருப்பமா? பொருத்தமா?

"தேவனாகிய கர்த்தர், மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்." (ஆதி 2:18)

ஆறாம் நாளில் ஏவாள் ஆதாமிற்குத் துணையாக உருவாக்கப்பட்டாள். இந்த ஆறாம் நாள், இன்றைய நம்முடைய ஒரு நாளாக இருந்தால், ஆதாம் படைக்கப்பட்ட சில மணி நேரங்களில், ஏவாளும் படைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த ஆறாம் நாள் ஓர் காலப் பகுதியாக இருந்தால், கொஞ்சக் காலம் கடந்தபின் ஏவாள் படைக்கப்பட்டிருக்க வேண்டும்.

கொஞ்சக் காலம் அல்லது நேரம் ஆதாம் தனிமையாயிருந்திருக்க வேண்டும். படைத்த எல்லாவற்றையும் நல்லது என்று கண்ட தேவன் ஆதாமின் தனிமையை நல்லது அல்ல என்று கண்டார். மனிதன் தனிமையில் விடப்படுவானெனில், அவன் தனக்குள் சிறைப்பட்டுப் போவான். இந்தச் சிறையில், அவன் ஓர் பேராபத்தைச் சந்திப்பான். அது என்னவெனில் மனிதன் தனக்குள் சிந்திப்பான், தனக்குள் பேச ஆரம்பிப்பான்! தனக்குள் பேசி, மனிதன் எடுக்கும் முடிவு, தவறாகவே இருக்கும்.

"மரியாளைத் திருமணம் செய்யமாட்டேன். இரகசியமாய்த் தள்ளிவிடுவேன்" என்பது தனிமைச் சிந்தனையின் தவறான முடிவு. தட்டிக் கேட்க ஓர் துணையில்லாவிட்டால், தனிமை தப்பானப் பாதையில் மனிதனை நடத்திவிடும். ஆகவே கர்த்தர் ஆதாமிற்கு ஓர் துணையை உண்டாக்க விரும்பினார்.

ஆதாம் விரும்பிய துணையை ஆண்டவர் உண்டாக்கவில்லை. மனிதனின் விருப்பம், வாஞ்சை இவை துணையைத் தெரிந்தெடுக்கக் கூடாது. கர்த்தர் ஆதாமுக்கு "ஏற்ற" துணையை உருவாக்கினார். மனவிருப்பம் தெரிந்தெடுத்த துணை, மனிதனைச் சஞ்சலப் பள்ளத்தாக்கில் தள்ளிவிடும். கர்த்தர் தெரிந்தெடுத்த "ஏற்ற துணை", வாழ்க்கையை மேன்மையாக்கும். ஆகவே வாழ்க்கைத் துணையை, உன் மனம் தெரிந்தெடுக்க விடாதே ஆவியானவர் உன்னை வழிநடத்தட்டும். ஒருவேளை உன் மனவருப்பத்தின்படி உன் வாழ்க்கைத் துணையை நீ ஏற்கெனவே பெற்றிருந்தால், உன் துணையை ஏற்ற துணையாக மாற்ற தேவ சமுகத்தில் கண்ணீரை ஊற்றி ஜெபி!

அழகான துணை, தேவனுக்கு அலங்காரமாகவும் இருக்கட்டும், படித்த துணை, பரிசுத்தத்திற்கும் துணையாக இருக்கட்டும், விருப்பமான துணை விசுவாசத் துணையாகவும் இருக்கட்டும்.

**மனோவாஞ்சை கானல்நீர், கடவுள் சித்தம் பருவ மழை.**

**11**
**ஏப்ரல்**

# அறிவா ? ஞானமா?

"ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" (ஆதி 2:17)

நன்மை, தீமை அறியும் அறிவு பகுத்தறிவு. இந்த அறிவு மனிதனுக்கு மிகவும் அவசியம். இன்றைய உலகில் இந்தப் பகுத்தறிவு நமக்கு இல்லையெனில் நாம் மதிகெட்டவர்களைப் போல நடப்போம். ஆகவே இந்த அறிவு தவறல்ல. அப்படியிருக்க கர்த்தர் ஏன் இந்த அறிவைத் தடை செய்தார்? மனிதன் முட்டாளாக இருக்க வேண்டும் என்பது தான் கடவுளின் சித்தமா? கடவுள் இந்தப் பகுத்தறிவுக்கு விரோதமானவர் அல்ல. பகுத்தறிவைக் கர்த்தர் தடை செய்யவும் இல்லை.

ஆனால் இந்த அறிவை யார் வழியாகப் பெற்றுக் கொள்கிறோம் என்பதுதான் முக்கியம். இந்த அறிவு நமக்குத் தேவை தான். அது எப்பொழுது நமக்குத் தேவைப்படுமோ, அப்பொழுது இந்த அறிவை கர்த்தரே தருவார். ஆதாமின் நாள்களில் இந்த அறிவு தேவைப்படவே இல்லை. ஏனெனில் உலகில் படைக்கப்பட்ட அனைத்துமே நல்லதாகவே காணப்பட்டன. ஒன்றுகூட தீமையாக இல்லை. ஆகவே நன்மை, தீமை என்று பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை.

அப்படியெனில் அந்த மரத்தையும், அதின் கனியையும் கர்த்தர் ஏன் படைத்தார்? "என் விருப்பம்! நீ யார் இதைக் கேட்க?" என்று கர்த்தர் பதில் சொல்ல அவருக்கு முழு அதிகாரம் உண்டு. ஆனாலும் மனிதனுக்கு ஓர் சோதனை இல்லாவிட்டால், அவன் கடவுளுக்காகச் செயற்பட வாய்ப்பும், சுதந்தரமும் இல்லாத ஓர் பொம்மை மாதிரி தானே இருப்பான். ஆகவேதான் இந்தச் சோதனையைக் கர்த்தர் வைத்தார். இந்த கனியைப் புசி என்று ஆலோசனை சொன்னது சாத்தான். சாத்தான் வழியாகவே மனிதன் பகுத்தறிவைப் பெற்றான். ஆகவே அந்த அறிவையும் தவறாகவே மனிதன் பயன்படுத்துகிறான். முடிவு! கடவுள் இல்லை என்று மனிதன் மதிகெட்டவனாகப் போனான். கடவுள் இல்லையென்பவன் தன்னைப் பகுத்தறிவாளன் என்று கூறுகிறான்.

கடவுள் வழியாய் இந்த அறிவைப் பெற்றால், அது ஞானத்தின் ஆரம்பமாக, அதன் முடிவு கர்த்தருக்குப் பயப்படுதலாய் இருந்திருக்கும். நன்மை அறியும் அறிவைப் பெற்ற மனிதன் நன்மை செய்யும் திராணியைப் பெற்றானா? தீமையை அறியும் அறிவைப் பெற்ற மனிதன் தீமையினின்று விலகும் திராணியைப் பெற்றானா? இல்லையே!

சாத்தானிடம் பெற்ற அறிவு வழிதப்பச் செய்யும் வெளிச்சம். வெளிச்சம் உண்டு, ஆனால் அதில் எந்தப் பாதையும் தெரியாது.

**உனக்குக் கிடைத்தது எது என்பதல்ல,**
**அதை யார் கொடுத்தது என்பதே முக்கியம்.**

**12**
**ஏப்ரல்**

# கொடு உன் விருப்பப்படி அல்ல, கர்த்தரின் வார்த்தையின்படியே

"சிலநாள் சென்றபின்பு, காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தான்..."
(ஆதி 4:3)

வயல் விளைந்தவுடன், கதிர்களை அறுத்துக் கொண்டு ஆலயம் நோக்கி ஓட வேண்டும் என்று வேதம் சொல்லவில்லை. சம்பளம் வாங்கியதும் உடனே ஆலயத்தின் காணிக்கைப் பெட்டியைத் தேட வேண்டும் என்றும் வேதம் சொல்லவில்லை. கடவுளை வட்டிக் கடைக்காரர் என்று எண்ணி நாம் காணிக்கை செலுத்தக் கூடாது.

"சிலநாள் சென்றபின்பு காயீன்" என்று வேதம் சொல்வதை நாம் சற்றுக் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஏன் இந்த சிலநாள்கள்? மாதாந்தர வரவு, செலவுகளைச் சரி செய்து, ஏதேனும் மீதியாயிருக்குமா என்று கணக்குப் பார்ப்பதற்காக இந்த சில நாள்களா?

கனிவர்க்கங்களைக் குவித்து வைத்து, கொடுக்கவா, வேண்டாமா, என்று சிலநாள்கள் சிந்தனை! பழுங்கள் அழுக ஆரம்பித்தவுடன் அவசர அவசரமாக அவைகளை அள்ளி எடுத்து, ஆண்டவனுக்கே கொடுக்க இந்த சிலநாள்களா? இந்தச் "சிலநாள்" தாமதம் சரி அல்ல.

பழங்களைக் கொடுப்பது ஸ்தோத்திரக் காணிக்கை. இதனைச் செலுத்தும் முன் காயீன் தனக்குத் தன் தகப்பன் போதித்தபடியே, இரத்தக் கிரயமான ஒன்றைப் பலியாகச் செலுத்தி, கடவுளோடு தன் உறவைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். சிலநாள்கள் தாமதித்தப்படியால், இந்த ஆவிக்குரிய ஒழுங்கை காயீன் மீறி நடந்தான்.

மீறி நடக்கிறவனின் காணிக்கையை கர்த்தர் எப்படி அங்கிகரிப்பார்? முதலாவது பலி, பின்பு காணிக்கை எனும் ஒழுங்கை காயீன் தவற விட்டதால், காயீன் மதவாதியாக மாறி பின்பு மனிதக் கொலைபாதகனாகவே மாறிப் போனான்.

தாமதம் கடும் விளைவுகளை உண்டு பண்ணிவிடும். ஆகையால் தேவ திட்டத்தை நிறைவேற்ற காலதாமதத்தைத் தவிர்த்துவிடு. "நாளை" என்று நீ ஒருநாளைத் தாமதப்படுத்தினால், ஒரு நாளும் இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிடும். "தாமதம்" சாத்தானுடைய காலமாக மாறிவிடும். ஆகவே துரிதமாகச் செயற்படு.

சரியான நேரம், சரியான முறை இதுவே ஆவிக்குரிய ஒழுங்கு. இந்த ஒழங்கைத் தவறவிடுவது காயீனின் வழி.

**காலம் தாழ்த்துவது, தவறான வழியைத் திறக்கும்.**

13
ஏப்ரல்

# நல்ல தரிசனம்

"ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான். ஏனெனில் அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்."(ஆதி 3:20)

ஆதாமின் பாவத்தால் ஏதேன் தோட்டம் நிலை தடுமாறிப் போய்விட்டது. ஏதேன் தோட்டத்தில் மிகப்பெரிய அதிர்ச்சி மனுக்குலத்திற்கு மரண தண்டனை அளிக்கப்பட்டதே! நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்பது கடவுளின் கடுமையானத் தீர்ப்பு.

ஆம்! உலகமே கல்லறைத் தோட்டமாக மாறிவிடும் அவலநிலை. ஜீவனுள்ளோர் தேசம் என்று இந்த உலகத்தை அழைக்காமல், மரண தேசம் என்று அழைக்க வேண்டிய பரிதாப நிலையில் ஆதாமின் அன்றைய உலகம் இருந்தது. இதற்கு முதற் காரணம் அவனுடைய அன்பு மனைவிதான்! அவளுக்குப் ஓர் பெயரிட வேண்டுமெனில், சரியானப் பெயர் "மரித்தோருக்கெல்லாம் தாய்" என்பதே.

ஆனால் ஆதாம் தன் மனைவிக்கு "ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய்" என்று அருமையானப் பெயரை வைத்தான். ஆதாம் தன் மனைவிக்குப் பெயரிட்ட நாளில், அவள் ஒருவருக்கும் தாயாகவில்லை; அவள் எவரையும் பெற்றெடுக்கவில்லை. பாவத்தையும், மரணத்தையுமே அவள் பெற்றெடுத்தாள். ஆனால் ஆதாம் அவளுக்கு ஏவாள் என்று பேரிட்டான். ஏவாள் என்ற பெயர் கர்த்தர் கொடுத்த பெயர் அல்ல, கர்த்தர் ஏவாளை ஆதாமின் ஒரு பாகமாகவே கண்டார். ஆகவே அவளை மனுஷி என்றே அழைத்தார். ஆதாம் தான் ஏவாள் என்று பெயரிட்டான். ஏவாள் என்பது பெயர் அல்ல, ஓர் பட்டம். அந்தப் பட்டம் என்ன தெரியுமா? தாய்! ஏவாள் என்றால் தாய் என்று அர்த்தம்.

மரண தண்டனையைக் கேட்ட ஆதாம். விசுவாசத்தினால் எதிர் காலத்தை நோக்கினான். கடவுளது வாக்குத்தத்தத்தை நோக்கிப் பார்த்தான். இந்தக் கொடிய நிகழ்வுக்குக் காரணமான சாத்தானை நோக்கி, "அவர் உன் தலையை நசுக்குவார்" (ஆதி 3:15) என்ற வாக்குத்தத்தத்தை எண்ணிப் பார்த்தான் ஆதாம். இந்த விசுவாசத்தினால், பின் வரும் சந்ததியில் ஒருவர் எழும்பி சூழ்நிலையை மாற்றுவார்; மரணம் ஜெயமாக விழுங்கப்படும்; மரித்தோர் உயிரோடு எழுந்திருப்பார்கள் என்று ஆதாம் நம்பி, தன் மனைவிக்கு "ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய்" என்று பெயரிட்டான்.

சூழ்நிலைகளைக் கண்டு, உன் வாழ்க்கையைத் தீர்மானம் செய்யாதே. சூழ்நிலை இன்றைய வெளிச்சம், கடவுளின் வார்த்தை வருங்கால வெளிச்சம்.

**இன்றைய வெளிச்சத்தில் மங்கலாக, மறைவாகத் தெரிபவை நாளைய வாக்குத்தத்த வெளிச்சத்தில் பிரகாசமாய்த் தெரியும்.**

14
ஏப்ரல்

# எங்கே நீ?

"அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு. நீ எங்கே இருக்கிறாய் என்றார்." (ஆதி 3:9)

அதிகாரி ஒருவர் தவறு செய்த பணியாளரை அதட்டி மிரட்டி நீ எங்கே இருக்கிறாய் என்ற குரலில் கர்த்தர் ஆதாமைத் தேடி வரவில்லை. காணாமற்போன தன் பிள்ளையைப் பாசத்துடன் தேடும் அன்பு இதயத்தின் குரலாகவே ஆதாமை நோக்கி இந்தக் கேள்வி புறப்பட்டது.

கொத்த வரும் பாம்பு, சீறிப்பாயும் சிவிங்கை, சினந்து நிற்கும் சிங்கம் இப்படி பயமுறுத்தும் குணமேதும் உருவாகாத மிருகங்கள் ஆதாமைச் சுற்றிலும்! இயற்கையின் சீற்றம் இல்லை. நடுங்க வைக்கும் நிகழ்வுகளே இல்லை. அழகும், அமைதியும் ஆளுகை செய்யும் சுந்தரவனமான ஏதேன் தோட்டத்தில் ஆதாம் நடுங்கி ஒளிந்துக் கொண்டான். ஆண்டவர் படைத்த எதுவுமே அவனுடைய இந்த நிலைக்குக் காரணமில்லை. அவனுக்குள் அவன் தேடிக் கொண்ட பாவமே அவனைத் தனிமையாக்கிற்று. அவன் மீறுதலே அவனை நடுங்க வைத்தது. அவன் எடுத்த தவறான முடிவு அவனை தேவ சமுகத்தை விட்டு ஓட வைத்தது.

ஆதாமே! நீ எங்கே இருக்கிறாய்? "ஆண்டவரே நான் பயத்தில் இருக்கிறேன். கர்த்தரே, நான் நிர்வாணியாய் இருக்கிறேன். தேவனே, நான் ஒளிப்பிடத்தில் மறைந்திருக்கிறேன்" என்று ஆதாம் நடுங்குகிறான். தேவனோடு உறவாட வேண்டிய நேரத்தில் வாழ்க்கையின் ஓரத்தில் ஒதுங்க வேண்டிய பரிதாபமான நிலை ஏன்? அவன்தான் காரணம். உங்கள் கவலை, துன்பம், வியாதி இவற்றிற்கெல்லாம். உனக்கு வெளியே காரணங்களைத் தேடாதே! இவற்றிற்கெல்லாம் காரணம் உனக்குள் இருக்கிறது. அதுதான் உன் பாவ சுபாவமும் பாவக் கிரியைகளும்.

வீட்டுச் சிறையில், எத்தனையோ பாடுகளுக்கு மத்தியில், வேதனையில் பவுல் இருக்கிறார். அவரைப் பார்த்து, "பவுலே நீ எங்கே இருக்கிறாய்?" என்று ஆண்டவர் கேட்டால், அவர் நிச்சயமாகச் சொல்வார். "நான் மனரம்மியத்தில் இருக்கிறேன்" (பிலி 4:11) என்று.

அருமையான சூழ்நிலையில் ஆதாம் பயத்தில், நடுக்கத்தில், கடுமையானச் சூழ்நிலையில் பவுல் மனரம்மியத்தில். ஆம்! நம்மைச் சுற்றிலும் எவை எப்படி இருக்கின்றன என்பதல்ல. நமக்குள் இருப்பது என்ன என்பதே முக்கியம். சூழ்நிலைகளின் பிடியினின்று விடுபட்டு வா. இயேசு கிறிஸ்துவின் சமுகம் உன்னை ஆளுகைச் செய்யட்டும். நீ சூழ்நிலைகளை வெல்லும் ஆற்றலைப் பெறுவாய்.

**உன்னைச் சுற்றிலும் உனக்கெதிரே பாய்ந்து வரும் கற்கள்**
**உனக்குள் உற்றுப் பார்த்தால் கடவுளின் வல்ல சொற்கள்.**

15

ஏப்ரல்

# பொல்லாத நீதிபதி

"அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி; உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது?" (ஆதி 4:6)

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பார்கள். மனநிறைவை முகம் எளிதில் காட்டிவிடும். தியானம், மன்றாட்டு, பக்தி, தெய்வபயம் இவைகளினால் நிறைந்திருக்கும் இதயம், தெய்வீக அமைதி தவழும் முகத்தினால் அறியப்படும். வைராக்கியம், கோபம், எரிச்சல் இவைகளை ஒருவனது முகம் எளிதில் காட்டிவிடும்.

தன் காணிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லையெனில் அதற்காக வருத்தம் ஏற்படுவது இயற்கை. அந்த வருத்தம் காயீனைச் சிந்திக்க வைக்க வேண்டும். ஏன் தன் காணிக்கை அங்கிகரிக்கப்படவில்லையென்று அவன் ஆழமாக யோசித்திருக்க வேண்டும். மாறாக தன் தம்பியை எப்படி கடவுள் அங்கிகரிக்கலாம் என்று ஆத்திரமடைந்தான் காயீன். ஆகவே அவன் முகநாடி வேறுபட்டது. வேறுபட்ட முகநாடி மாறுபட்ட மனசாட்சியின் வெளிப்பாடு. ஆம்! காயீனின் மனசாட்சி கெட்டுப்போய் விட்டது.

அவனுக்குக் கிடைத்திருக்கும் புது அனுபவம் நன்மை தீமை அறியும் அறிவு. இந்த அறிவைக் கொண்டுதான் அவன் எதையும் தீர்மானிக்க முடியும். இந்த அறிவை கெட்டுப்போன அவனது மனசாட்சி, ஆளுகை செய்தபடியால், அவனால் நல்ல முடிவுக்கு வரமுடியவில்லை.

மனசாட்சி எப்பொழுதும் நன்றாக இயங்காது. மனசாட்சி கெட்டுப்போனால், அது பொல்லாத நீதிபதியாக மாறிவிடும். ஆட்டை வெட்டி பலி செலுத்து என்று தீர்ப்பு சொல்வதற்குப் பதிலாக பட்டயத்தை எடுத்து ஆபேலை வெட்டு என்று பயங்கரமானத் தீர்ப்பை அவனது பொல்லாத மனசாட்சி கொடுத்தது.

ஆகவே மனசாட்சியையே எப்பொழுதும் சார்ந்திராதே, கடவுளின் வார்த்தைதான், நன்மை, தீமை அறியும் சக்தியுடையவை. வார்த்தையின் ஆழத்தில் வழிகளைத் தேடு. சொந்த அறிவின் சிந்தனையில் முடிவு எடுக்காதே.

சொந்த சகோதரனை வெட்டிக் கொல்வது ஓர் பாவமாகவே அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் அவனுக்கு நன்மை தீமை அறியும் அறிவு உண்டு. கர்த்தரின் வார்த்தையை மீறிய அறிவு கொலைக் கருவியாக மாறும். உன் முகநாடி மாறி, உலகிற்கு தீவிரவாதியாகிவிடுவாய். ஆகவே எரிச்சலின் ஆவியைத் தள்ளு.

மனசாட்சி தேவ வார்த்தையை எடுக்கட்டும், பட்டயத்தைத் தள்ளிவிடு.

**16**
**ஏப்ரல்**

# துணிகரத்தின் ராஜவீதி

கர்த்தர் காயீனை நோக்கி உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார். அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான். (ஆதி 4:9)

ஆதாம் பாவம் செய்தவுடன், பயந்தான், ஓடி ஒளிந்தான். அவனுக்குள் பாவ உணர்வு அதிகமாய்க் கிரியைச் செய்தபடியால், கடவுளைச் சந்திக்கப் பயப்பட்டான். ஆனால் ஆதாமிற்கு அடுத்த தலைமுறையான காயீனின் வாழ்க்கையில் தெய்வபயமே இல்லை. ஆதாம் கர்த்தருக்கு முன்பு பணிந்து, குனிந்து நின்றான். காயீனோ பாவம் செய்தபிறகு துணிந்து, நிமிர்ந்து நின்றான். மனிதன் பாவத்தில் பழகிவிட்டான். ஆகவே அவன் தெய்வீகத்திற்குத் தூரமானான்.

ஆபேல் எங்கே என்று கர்த்தர் கேட்டவுடனே, மனசாட்சியில் அந்த வார்த்தைகள் சாட்டையடிகளாக விழுந்திருக்க வேண்டும். மாறாக உணர்வற்ற மரம் போல் காயீன் நின்றான். ஆபேலை அறியேன் என்று துணிவுடன் காயீன் பதில் சொன்னான். ஆபேலை எங்கே என்பது கேள்வி அல்ல; காயீன் மீது தேவன் வாசித்த குற்றப்பத்திரிக்கை. மௌனமாய்க் குனிந்து பயந்து நிற்க வேண்டிய அவன் ஆபேலுக்கு நான் காவலாளியோ? என்று ஆணவமாகக் கேட்டான். கடவுளை எதிர்க்கும் தைரியத்தைப் பாவப் பழக்கம் காயீனுக்கு கொடுத்தது.

ஆதாம் இருந்தது பாவத்தில். காயீன் வாழ்ந்தது பாவப் பழக்கத்தில், பாவத்தைவிடக் கொடியது பாவப் பழக்கம். காயீன் பாவத்தில் பழகிவிட்டபடியால் பாவத்தின் கொடுமையை உணராமல் போய்விட்டான். பாவத்தில் மனிதன் பழகப்பழக அதனை மிகவும் சாதாரணமாகவே பார்க்கிறான். இச்சையைப் பலவீனம் என்று அழைப்பான், களியாட்டுகளைப் பொழுதுபோக்கு என்றழைப்பான். பாவத்திற்கு இப்படி செல்லப் பெயர்களைக் கொடுப்பது பாவப் பழக்கத்தின் கொடுமை.

ஆதாமின் நிலையை விட, காயீனின் நிலை மிகவும் மோசமாயிற்று. பாவத்தை உணராத இரண்டாம் தலைமுறை காயீன். இன்று உலகின் நிலை மிகப் பரிதாபம். உலகம் பாவத்தில் பழக ஆரம்பித்துவிட்டது. ஆகவே இன்றைய காயீனுக்கு நன்மை, தீமை இரண்டுமே ஒன்றுதான்.

சகோதரனே! பாவப் பழக்கம் உன்னைத் தேவனுக்கு எதிரியாய் மாற்றும். கடவுள் என்பது வீண் கற்பனை என்று உன் அறிவு சொல்லும். ஆகவே ஜாக்கிரதைப்படு. குற்ற உணர்வு உன்னைவிட்டு நீங்கிப்போனால், நீ மனிதத் தன்மையை இழக்கிறாய் என்று அறி.

**நீ நடக்கும் பாதையின் பெயர் துணிகரத்தின் ராஜவீதி,**
**அதன் மற்றொரு பெயர் காயீனின் வழி.**

17
ஏப்ரல்

# கர்த்தரோடு நட

ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமற்போனான். தேவன் அவனை எடுத்துக் கொண்டார்."(ஆதி 5:24)

ஏனோக்கு தேவனோடு நடந்தான் என்றால் அது நடைப் பயிற்சி அல்ல. தன் வாழ்க்கையில் கடவுளைத் தவிர வேறெதையும் நோக்காமல் கடவுளையே தன் ஒரே இலக்காக வைத்து வாழ்வதே கர்த்தரோடு நடப்பது. இப்படி அவன் முந்நூறு ஆண்டுகள் தேவனோடு நெருங்கி வாழ்ந்தான். அதாவது ஒருநாள் கூட அவன் ஜெபிக்கத் தவறியதே இல்லை. தேவனோடு அவன் கொண்டிருந்த உறவில் தொய்வே ஏற்படவில்லை.

அப்படியாயின் ஏதோ ஓர் மலை உச்சியில், தரித்து வருடக் கணக்கில் உட்கார்ந்திருந்தானா? இல்லையே! இன்று கடவுளைத் தேட வேண்டுமெனில் மனிதன் தனிமையை நாடிச் செல்கிறான். குடும்பம், சமுகம், தேசம் இந்தப் பற்றுப் பாசங்களினின்று விடுபட்டு ஏதோ ஓர் மூலையில் முடங்கிக் கிடந்தால் கடவுளின் தரிசனம் கிடைக்கும் என்பது மனிதனின் தவறான சிந்தனை.

ஏனோக்கு மலை உச்சிக்கோ, பள்ளத்தாக்கிற்கோ செல்லவில்லை. குடும்பத்திலே தங்கியிருந்தான். "சஞ்சரித்துக் கொண்டிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்." தன் வாழ்க்கைத் துணையோடு சரியான உறவைத் தக்க வைத்திருந்தான். கடவுளோடு இருக்கப்போகிறேன் என்று அவன் துறவுக் கோலம் கொள்ளவில்லை. அவனுடைய பக்தி குடும்பக் கடமைக்கு தடையாக இல்லை.

இன்று அனேகர், ஊழியம் என்ற போர்வையில் வீட்டுக் கடமைகளை உதறிவிட்டு, பொறுப்பற்றவர்களாய் அலைகிறார்கள், வீடு சாட்சி இழந்த நிலையில் ஊழியப் பாதை அகலமாகிறது. பரிதாபம்!

ஆனால் ஏனோக்கு குடும்பத்தில் சாட்சி பெற்றவன். அவன் வாழ்ந்த சமுதாயம் மிகப் பொல்லாத சமுதாயம். ஆனாலும் சமுதாயத்திலும் நல்ல சாட்சியுள்ளவனாக இருந்தான். சமுகக் கொடுமைகளுக்கு மத்தியில் அவன் உத்தமனாய் வாழ்ந்தான். குடும்பக் கடமைகளில் அவன் உண்மையுள்ளவனாக இருந்தான். இந்த உத்தமமும், உண்மையுமே ஏனோக்கின் உறுதியான நடைகள்.

**குடும்பம் - பரலோகப் பாதையில்**
**ஓர் இளைப்பாறுதல், இடையூறு அல்ல.**

18
ஏப்ரல்

# பாவமா? தண்டனையா? எது பெரிது

"அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி, எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்க முடியாது" (ஆதி 4:13)

தான் செய்த பாவத்தின் கொடுமையை, காயீன் உணரவே இல்லை. மாறாக அவனுக்கு கிடைத்த தண்டனையை அவன் கொடுமையாக எண்ணி, கர்த்தர் அநியாயத்தீர்ப்பு வழங்கிவிட்டது போல் காயீன் மிகவும் அலறுகிறான்.

நான் செய்த பாவம் உம்மால் சகிக்க முடியாதது என்று உணர்ந்து திருந்த வேண்டிய காயீன். கர்த்தரின் தண்டனையைக் குறை கூறுகிறான். கர்த்தரைத் துக்கப்படுத்திவிட்டோமே என்ற உணர்வைவிட, பாவத்திற்குக் கிடைத்த தண்டனையையே பெரிதாக அவன் எண்ணினான். தண்டனையைக் குறித்த பயம் மனிதனைத் திருத்தாது.

பாவம் தேவனோடுள்ள உறவை முறிக்கிறது என்ற உணர்வுதான் மனிதனைத் திருத்தும். நரகத்தின் கொடுமை, அக்கினி, வேதனை இவைகளைப் பற்றி எவ்வளவு பிரசங்கித்தாலும், அது வெறும் பயத்தை மட்டுமே கேட்போரின் உள்ளத்தில் உருவாக்குமே தவிர, பாவத்தை வெறுக்கும் மனநிலையை உருவாக்காது.

காயீன், தான் பாவம் செய்த பிறகும், கர்த்தர் தன்னோடு அன்பாய்ப் பேசுகிறதை எண்ணி மனந்திருந்தியிருக்க வேண்டும். மாறாக, கடவுளையே குற்றப்படுத்துகிறான்.

இந்த ஆவி இன்று பலமாகக் கிரியை செய்கிறது. மனிதன் தன் பாவத்தின் விளைவுகளுக்காக கர்த்தரையே குற்றப்படுத்துகிறான். கர்த்தர் மழையைக் கொடுக்காதது குற்றம் என்று மனிதன் கடவுள் மீது வழக்குத் தொடுக்கிறான். தான் தன்னைத் தாழ்த்தி கர்த்தரிடத்தில் ஜெபிக்காதது தான், மழைத் தாழ்ச்சிக்குக் காரணம் என்று ஒத்துக்கொள்கிறதில்லை.

தன் பிழையை உணராத இருதயம், கர்த்தரையே குற்றம் காணும். பாவமன்னிப்பை வாஞ்சிப்பதைவிட, பாவ விளைவுகளுக்குத் தப்பவே மனிதன் வாஞ்சிக்கிறான். பாவத்தினால் வரும் வியாதி, வேதனை, மரணம் இவைகளைச் சகிக்க முடியாது என்கிறவன், இவைகளுக்கு காரணமான பாவத்தை எளிதில் சகித்துக் கொள்கிறான்.

**பாவத்தை ஒருபோதும் சகிக்காதே. பாவத்திற்காக வருந்து, பாவத்தின் விளைவிற்காக மட்டும் வருந்தாதே**

| 19 ஏப்ரல் |
|---|

# தடையைப் பாராதே

"விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்...." (எபி11:5)

ஏனோக்கு தேவனோடு நெருங்கி வாழ்ந்தான். முன்னூறு ஆண்டுகள் இப்படி கர்த்தரே என்ற ஒரே இலட்சியத்தோடு இருந்த அவன் திடீரென்று காணாமற் போய்விட்டான். கொஞ்சக் காலத்திற்குள் அவன் காணாமற் போனதின் காரணம் தெரியவந்தது. அவனை உயிரோடே கர்த்தர் தம்மண்டை அழைத்துக் கொண்டார். இது மிகப் பெரிய மகிழ்ச்சி ஏனோக்கிற்கு. ஆனால் அவன் குடும்பத்திற்கு மிகப்பெரிய அதிர்ச்சி.

இப்படி எடுத்துக் கொள்ளப்படுவது திடீர் நிகழ்வு அல்ல. கர்த்தர் ஏனோக்கை அவன் குடும்பத்தினின்று தட்டிப் பறித்துக் கொண்டு செல்லவில்லை. தான் எடுத்துக் கொள்ளப்படுவோம் என்பது ஏனோக்கிற்குத் தெரியும். ஏனெனில் விசுவாசத்தினாலே அவன் எடுத்துக் கொள்ளப்பட்டான் என்று வசனம் சொல்கிறது. ஆகவே, "உன்னை நான் உயிரோடே நம் வீட்டிற்கு அழைத்துச் செல்வேன்" என்று கர்த்தர் ஏனோக்கிடம் சொல்லியிருக்க வேண்டும். ஏனோக்கும் அந்த நாளை எதிர்பார்த்தே நம்பிக்கையோடு காத்திருந்தான்.

அந்த நாள் ஏனோக்குக்குத் தெரியாது; ஆனால் எடுத்துக்கொள்ளப்படும் காலம் அவனுக்குத் தெரியும். ஏனோக்கின் மகன் மெத்துசலா பிறந்தவுடன் அவனுக்கு ஓர் வெளிப்பாடு. இந்த மகனின் வாழ்வின் முடிவில் உலகை அழிக்கும் ஜலப்பிரளயம் வரும் என்பதே அந்த வெளிப்பாடு. உலகில் மாபெரும் பிரளயம் வரும் முன், "என்னோடு நடந்த உன்மேல் தண்ணீர் புரளுவதில்லை; மேலும் அந்தக் காலத்திலே நீ பூமியில் இருக்க மாட்டாய்" என்பதே கர்த்தரின் வார்த்தைகள். இதை விசுவாசித்தான். ஆகவே மரணத்தையே ஏனோக்கு சந்திக்கவில்லை.

கர்த்தரின் நெருக்கமான உறவு உனக்கு மிகப் பெரிய பாதுகாப்பு. கர்த்தரோடு நீ இணைந்து நடந்தால், அவர் இரகசியங்ளை உனக்குச் சொல்வார். நீ தீங்கைக் காணாதிருப்பாய்.

தன்னைச் சுற்றிலும் பொல்லாத மக்கள் குடும்பத்தில் பல சுமைகள். இவைகளுக்கு மத்தியில், ஏனோக்கு தன் ஜெபம், தியானம், தேவ சமூகம் இவைகளைத் தொடர்ந்து காத்து வந்தான். துன்மார்க்க சூழலோ, குடும்பப் பாரமோ அவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்குத் தடையே இல்லை.

**தேவனோடு நடக்கும் நடைகள், தடைகளைக் கடக்கும்**

| 20 |
|---|
| ஏப்ரல் |

# ஜன்னலா? கதவா?

"நீ பேழைக்கு ஓர் ஜன்னலை உண்டு பண்ணி...பேழையின் கதவை அதின் (ஜன்னலின்) பக்கத்தில் வை..."

(ஆதி 6:16)

பேழையில் ஜன்னல் கதவு ஆகிய இரண்டினையும் பார்க்கிறோம். இவை இரண்டும் மிக அவசியமானவை. பேழைக்குள் நோவாவின் குடும்பம் பிரவேசித்தது. உடனே கர்த்தர், அவனை உள்ளே விட்டுக் கதவை அடைத்தார்! இந்தக் கதவின் மீது முழு அதிகாரம் கர்த்தருக்கே. அவர் கதவை அடைத்தால், ஒருவரும் திறக்க முடியாது. அவர் கதவைத் திறந்தால் கதவை ஒருவரும் அடைக்க முடியாது. இந்தக் கதவுதான் கர்த்தரின் உபதேசம். உபதேசங்கள் வழியாகவே நான் தேவனுக்குள் பிரவேசிக்க முடியும். மனந்திரும்புதலும், பாவமன்னிப்புமே பரலோக வாசல். இந்த வாசலைத்தவிர, ஆம், இந்தக் கதவைத் தவிர, நமக்கு வேறு வழியே இல்லை.

இந்தக் கதவின் பக்கத்தில் ஜன்னல் இருக்கிறது. ஜன்னல் வழியாக நோவா தன் சுற்றுப்புற நிலையை அறிந்தான். தண்ணீர் எந்த அளவில் இருக்கிறது என்பதை ஜன்னல் வழியாக நோவா அறிந்தான். நம் வாழ்க்கையிலும் தேவ தரிசனம் ஜன்னலாக அமைகிறது. ஜெபம், தியானம், வேதவாசிப்பு இவை மூலம் நம்மைச் சுற்றிலும் உள்ள நிகழ்வுகளின் அர்த்தத்தை நாம் நன்றாகவே அறிந்துக் கொள்கிறோம். இந்த ஜன்னல்தான் நமது தரிசனம். தரிசனம் இல்லாமல் கிறிஸ்தவ வாழ்க்கை வாழவே முடியாது.

ஆனால் ஜன்னல், கதவுக்குப் பக்கத்தில் இருக்க வேண்டும். ஆம் தரிசனம், தேவனது வார்த்தைகளுக்குச் சமீபமாய் இருக்க வேண்டும். அதாவது வேத எழுத்துக்களுக்கு மாறாகத் தரிசனம் அமைந்து விடக்கூடாது. இன்று அநேக ஊழியக்காரர்கள் தரிசனம் கண்டேன் என்று சொல்வது வேத எழுத்திற்கு எந்த விதத்திலும் சம்பந்தமே இல்லாததாக இருக்கிறது. கதவுக்குப் பக்கத்தில் இராத ஜன்னல், வழியைச் சரியாய்க் காட்டாது.

உபதேசங்களுக்குத் தூரமான தரிசனம், தவறான காட்சியைக் காட்டிவிடும். ஆகவே நம்முடைய தரிசனங்கள் வேத வார்த்தைகளினால் அங்கிகரிக்கப்படுகிறதா என்பதை நாம் தெளிவாய் அறிய வேண்டும். வேதம் ஒத்துக்கொள்ளாத தரிசனம் வீண் கற்பனை, அர்த்தமில்லாத வீண் சிந்தனை ஓட்டம். நமக்கு தரிசனம் நிச்சயம் வேண்டும். அதே சமயம் நம்முடைய தரிசனங்கள் வேத எழுத்துக்களினால் அங்கிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆம் ஜன்னல், கதவுக்குப் பக்கத்தில் அமைந்திருக்க வேண்டும். தூரத்து ஜன்னலை மூடிவிடு.

**ஜன்னலை நீ பார்த்துக்கொள்,**
**கதவை கர்த்தர் பார்த்துக் கொள்வார்.**

21
ஏப்ரல்

# தோற்றத்தின்படி தீர்ப்பிடாதே

"நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு." (ஆதி 6:13)

கொப்பேர் மரம் பழங்காலத்தில் சவப் பெட்டி செய்யவும் பயன்பட்டது. நீண்ட காலம் அதாவது ஆயிரம் வருடம் பழுதுபடா நிலையில் இருக்கும் மரமே கொப்பேர் மரம். அந்த மரத்தினால் ஓர் பேழையை உண்டு பண்ணும்படி ஆண்டவர் நோவாவிடம் கட்டளையிட்டார்.

நோவா அந்தப் பேழையைச் செய்யும்பொழுது அவன் மிகப் பெரிய சவப்பெட்டியை ஆயத்தம் பண்ணுவதாகவே அன்றைய உலகம் எண்ணியிருக்கும். அவனது முயற்சியை அவர்கள் பரிகாசம் பண்ணி சிரித்திருப்பார்கள். எது அவர்களுடைய அறிவுக்கு சவப்பெட்டியாகத் தெரிந்ததோ அதே பெட்டிதான் இவர்களைக் காக்கும் ஜீவப்பெட்டியாகத் திகழ்ந்தது.

ஆம்! கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் இழந்துபோவது லாபமாகும். கிறிஸ்துவுக்காக நாம் ஜீவனை இழந்தால், நாம் அதனைக் காத்துக்கொள்கிறோம். கிறிஸ்துவை விட்டு விட்டு நாம் ஜீவனைக் காத்துக் கொள்ள முயற்சித்தால் நாம் ஜீவனை இழந்துவிடுகிறோம். தோற்றத்தின்படி கிறிஸ்தவ வாழ்க்கை தோல்வி போல தெரியும். உண்மையில் அது மிகப் பெரிய வெற்றி.

சவப்பெட்டி போன்ற தோற்றம்! ஆனால் உண்மையில் அது ஜீவனைக் காக்கும் பெட்டி. ஆகவே கிறிஸ்துவுக்காக எதையும் இழந்து போவதற்குத் தயங்காதே. உன் இழப்புகளெல்லாம், கிறிஸ்துவுக்குள் லாபமாக மாறும். யாக்கோபு தேவசித்தத்தின்படி பென்யமீனையும் பிரிய வேண்டியதிருந்தது. அதன் முடிவு பென்யமீனோடு யோசேப்பையும் சேர்த்துப் பெற்றுக்கொண்டான்.

கிறிஸ்துவுக்குள் இழப்பு இலாபமாகும். தோல்வி வெற்றியாகும், சாவு ஆதாயமாகும். ஆகவே தைரியமாயிரு. தோற்றத்தைக் கண்டு பயப்படாதே. கடல்மேல் நடந்த உருவம் ஆவேசம் போல் தோன்றியது. ஆனால் உண்மையில் அது ஆவேசம் அல்ல, நடுங்கிய சீஷர்களை அரவணைக்கும் இயேசுவே அது. தன்னைக் கொல்ல வரும் கடற் பிசாசு என்று எண்ணினார்கள் உண்மையில் தங்களைக் காக்க வரும் அன்பு தெய்வமான இயேசுவே அவர்.

தோற்றத்தைக் கண்டு துவண்டு விடாதே,
துணிந்து செயற்படு மாற்றத்தைக் கண்டு மகிழ்வாய்.

22
ஏப்ரல்

# கடவுள் திறந்த பாதையில் மேடுகள், பள்ளங்கள்.

"தமக்கு முன்னே அக்கரைக்குப் போகும்படி அவர்களைத் துரிதப்படுத்தினார். அதற்குள்ளாகப் படவு நடுக்கடலிலே சேர்ந்து. எதிர் காற்றாயிருந்தபடியால் அலைகளினால் அலைவுபட்டது." (மத் 14:22,24)

இயேசுவோடிருந்த சீஷர்களை அவர்தாமே படகில் தமக்கு முன்பே மறுகரைக்குச் செல்ல துரிதப்படுத்தினார். அவருடைய சொல்லுக்குக் கீழ்ப்படிந்து புறப்பட்ட சீஷர்கள், கடலில் பெரிய பிரச்சனையைச் சந்தித்தார்கள். திடீரென்று புயல் காற்று எழும்பியது. கடல் கொந்தளித்தது. காற்று எதிர் காற்றாக மாறியது. படகை உடைத்து நொறுக்கி, உயிருக்கே ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உருவாயிற்று.

பிரியமானவர்களே, நம் வாழ்விலும் இப்படி திடீரென்று பிரச்சனைகள் உருவாகிவிடுகின்றன. இதுவரை அனுகூலமாயிருந்த உறவுகள் எதிரிடையாக மாறிவிட்டன. சரீரத்தில் திடீரென்று ஓர் வியாதி தோன்றி பயமுறுத்துகிறது. உங்கள் உள்ளத்தின் கேள்வி ஏன்? கர்த்தரின் வார்த்தையைக் கேட்டு, அவைகளின்படிதானே வாழ்கிறோம். ஜெபித்துத்தானே ஒவ்வொரு நாளையும் ஆரம்பிக்கிறோம். அப்படியிருந்தும் ஏன் கடவுள் இவைகளை அனுமதித்தார் என்று அங்கலாய்க்கிறோம்; புலம்புகிறோம்.

கொந்தளிக்கும் கடலில் சீஷர்கள் எண்ணியிருப்பார்கள். இயேசு தானே நம்மைத் துரிதப்படுத்தி அனுப்பினார். வழியில் இப்படி ஓர் ஆபத்து ஏற்படும் என்று அவருக்குத் தெரியாதா? தெரிந்தும் இப்படி அனுப்பிவிட்டாரே, அவருடைய வழியில் இப்படி பிரச்சனையேற்படும் என்று அவருக்கு தெரிந்திருக்காவிட்டால் அவருடைய வழிநடத்துதலை எப்படி நம்புவது? வழியில் இப்படி ஆபத்து ஏற்படும் என்று தெரிந்தும் அவர் நம்மை அனுப்பியிருந்தால், அவர் நம்பிக்கைக்குரியவர் அல்லவே.

இப்படி சூறாவளி எழும்பும், கடலில் படகு தத்தளிக்கும் என்பது இயேசுவுக்குத் தெரியும். தான் சரீரப் பிரகாரமாகக் கூட இல்லாவிட்டாலும், தன் வார்த்தைகளை அவர்கள் விசுவாசிக்க வேண்டும்; விசுவாசத்தில் வளர வேண்டும் என்று இந்தப் பிரச்சனையை – கடுங்காற்றைக் கர்த்தர் அனுமதித்தார். உன் கிறிஸ்தவ வாழ்க்கையில் நீ சந்திக்கும் கடுமையானப் பிரச்சனைகள் உன்னை உருக்குலைக்க அல்ல, உன்னை உருவாக்கவே. கடலிலே அமைதியாயிரு என்று மனக்கடலுக்கு உத்தரவிடு, காற்றே இரையாதே என்று உன் எதிர் சிந்தனையை – அவிசுவாச எண்ணத்தைக் கடிந்து கொள். வாழ்வில் அமைதியுண்டாகும்.

**கடவுளில்லா அமைதிக்கடலைவிட,**
**அவரோடிருக்கும் கொந்தளிக்கும் கடல் ஆசீர்வாதமுள்ளது.**

23
ஏப்ரல்

# விருந்துசாலை

"அந்தத் தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. அவர்கள் நமக்கு இரையாவார்கள்." (எண் 14:9)

கானான் தேசத்தைச் சுற்றிப் பார்த்து வந்த வேவுகாரரில் பத்துபேர் அவிசுவாசக் குரல் எழுப்பி, ஜனங்களைக் கலங்கப் பண்ணினார்கள். அவர்கள் ராட்சதப் பிறவிகள், அவர்களுக்கு முன் தாங்கள் வெறும் வெட்டுக்கிளிகள் என்று அவர்கள் புலம்பினார்கள்.

நீங்களும் உங்கள் பிரச்சனைகளைக் கண்டு மலைத்து நிற்கிறீர்களா? இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்க நம்மால் முடியாது. இனி இதை நம்பிப் பயனில்லை என்று அவிசுவாசக் குழியில் பதுங்கிக் கொள்கிறீர்களா?

இந்தச் சூழ்நிலையில் காலேப் கூறுகிறான். "கர்த்தர் நம்மோடு இருக்கிறார். அவர்களுக்குப் பயப்பட வேண்டியதில்லை." ஆம்! முதலாவது நம்முடைய இக்கட்டான சூழ்நிலையில் கர்த்தர் நம்மோடு இருக்கிறார் என்பதை விசுவாசிக்க வேண்டும். இந்த விசுவாசம் பயத்தைப் புறம்பே தள்ளும்.

மேலும் காலேப் சொல்கிறான், "அவர்கள் நமக்கு இரையாவார்கள்." ஆம்! அவர்கள் நமக்கு ஆகாரமாகிவிடுவார்கள். என்ன ஆகாரம்? ஆகாரத்தை நாம் சாப்பிடுவது போல், நம்முடைய எதிர்சூழ்நிலைகளில், நம் விசுவாசம் எதிர்வரும் சவால்களை ஆகாரம் போல் சாப்பிட்டுவிடும்.

தைரியமாயிருங்கள்! சவாலை எதிர் நோக்குங்கள். ஒவ்வொரு சவாலும், நம் விசுவாசத்திற்கு ஆகாரமாகும். "அன்றன்று வேண்டிய ஆகாரத்தை எங்களுக்குத் தாரும்"என்று ஜெபிக்கிறோம். ஆம்! இன்று நாங்கள் சந்திக்க வேண்டிய ஆகாரமாகிய "பிரச்சனையை" – அறைகூவலை எங்களுக்குத் தாரும் என்பதே நம்முடைய ஜெபமாக இருக்க வேண்டும்.

எதிர்ப்பு, கவலை, பயம் இவை நம்மைச் சந்திக்கும்பொழுது, நமக்கு ஆவிக்குரிய இரை கிடைக்கிறது என்று, பதறாமல் இருக்க வேண்டும். பெரிய பிரச்சனையா? நல்ல ஆகாரம் ஆயத்தமாகிறது என்று அர்த்தம்.

ஆகவே எதிர் சூழ்நிலைகளைக் கண்டு நாம் பயப்படத் தேவையில்லை. எல்லாமே நமக்கு இரையாகும் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். ஆகவே தைரியமாயிரு!.

**பிரச்சனைகள், என் விசுவாசத்திற்கு விருந்துசாலை.**

24
ஏப்ரல்

# தாமதமா? தயங்காதே

"ஏழுநாள் சென்றபின்பு பூமியின்மேல் ஜலப்பிரளயம் உண்டாயிற்று". (ஆதி 7:10)

நோவாவின் குடும்பத்தினர் பேழைக்குள் சென்றுவிட்டனர். ஊர் மக்கள் அவனைச் சுற்றிலும் வேடிக்கைப் பார்க்கக் கூடியிருப்பார்கள். மழை வருமென்று பைத்தியக்காரத்தனமாக நோவா இப்படி நடந்துக்கொள்கிறானே என்று அவர்கள் நோவாவை பரிகாசம் பண்ணியிருப்பார்கள்.

பேழைக்குள் நோவா சென்ற பிறகு, நாள்கள் ஓடிக்கொண்டே இருந்தன. ஆறுநாள்கள் கடந்துவிட்டன. ஒன்றுமே நடக்கவில்லை. ஒரு சொட்டு தண்ணீர்கூட பூமியின்மேல் விழவில்லை. ஊர் மக்கள் கைகொட்டிச் சிரித்திருப்பார்கள். நோவாவோ கர்த்தரின் வார்த்தையை நம்பி. பேழைக்குள் அடங்கிவிட்டான்.

ஆத்திரப்பட்டு பேழையை விட்டு அவன் இறங்கவே இல்லை. சகோதரனே! உன் ஜெபத்திற்குப் பதில் உடனே வரவில்லை என்பதினால் ஆத்திரம் அடையாதீர்கள், எரிச்சலடையாதீர்கள்.

ஏழாம் நாள் கடந்தது; மழைபெய்ய ஆரம்பித்தது. தேவனது வார்த்தை தவறவே இல்லை. ஏன் இந்த ஏழு நாள்கள் தாமதமாயிற்று? நம் இதயத்தில் ஏன் என்ற கேள்விகள் எழுந்துக் கொண்டேயிருக்கும். நோவாவிற்கு விசுவாசம் பெருக வேண்டும் என்பதற்காக இந்தத் தாமதம் அல்ல. ஏனெனில் ஏற்கெனவே அவன் விசுவாசத்தினாலேயே பேழைக்குள் நுழைந்திருக்கிறான். நோவாவிற்குப் பொறுமையை உண்டாக்குவதற்காகவும் இந்தத் தாமதம் இல்லை. நோவா பொறுமையிழந்தவனாகக் காணப்படவில்லையே. பிறகு ஏன் தாமதம்.?

வெளியே உள்ள பரிகாசம் பண்ணும் கூட்டம் இரட்சிக்கப்பட வேண்டுமே என்ற தேவனின் இரக்கமே இந்தத் தாமதத்திற்குக் காரணம். அவர்கள் இரட்சிக்கப்படவே மாட்டார்கள் என்று கடவுளுக்குத் தெரியாதா? தெரியும். இது அவருடைய ஞானம். கடவுள் ஞானத்தின்படி மட்டும் செயற்பட மாட்டார். அவருடைய இரக்கத்தின்படியும் காத்திருப்பார்.

ஆகவே, தாமதம் என்றவுடன் சோர்ந்து போகாதீர்கள். கர்த்தர் மேலான ஓர் காரியத்தை நமக்குச் செய்யவே, இப்பொழுது அவர் நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்கத் தாமதப்படுகிறார்.

**உன் வேளையில் பதிலைப் பெறுவதைவிட,**
**அவர் வேளையில் பதிலைப் பெறுவது நல்லது.**

**25**
**ஏப்ரல்**

# விதி மீறல்

"அவர் அவர்களை நோக்கி; நீங்கள் இப்பொழுது மொண்டு பந்திவிசாரிப்புக்காரனிடத்தில் கொண்டு போங்கள் என்றார். அவர்கள் கொண்டு போனார்கள்".
(யோவான் 2:8)

கானாவூர் கல்யாண வீட்டில் இயேசு அற்பமானத் தண்ணீரை அற்புதமானத் திராட்சரசமாக மாற்றினார். ஆகவே கடவுளே அந்த ரசத்தை உண்டு பண்ணினார் என்று சொல்லலாம். "Made in Heaven" என்று ஓர் குறிப்பை எழுதிவிடலாம்.

தான் உண்டாக்கிய திராட்சரசத்தை, நல்ல ரசம்தான் என்று தரச்சான்று தரும்படி, பந்திவிசாரிப்புக்காரனிடம் அதனை இயேசு அனுப்பினார். இயேசு நித்தியமான தேவன். பந்திவிசாரிப்புக்காரன், சுமார் 2 மணி நேரம் அந்தப் பதவியில் இருப்பான், என்ற போதிலும், பந்திவிசாரிப்புக்காரனிடம் ஒப்புவித்த அதிகாரத்தை இயேசு மதித்தார். ஆகவே அவனிடம் தரச்சான்று கேட்டார்.

சகல அதிகாரம் படைத்த கர்த்தராகிய இயேசு, கொஞ்ச நேரமட்டும், அதிகாரம் பெற்றிருந்த, பந்திவிசாரிப்புக்காரனின் அதிகாரத்தை எவ்வளவாய் மதித்தார்?

சகோதரனே! உன்னுடைய போதகர், உனக்காக வைக்கப்பட்டிருக்கிற ஆவிக்குரிய அதிகாரம். இந்த அதிகாரத்தை நீ மதிக்க வேண்டும். போதகர் பெரியவரோ, சிறியவரோ, அவர்தான் உங்களது ஆவிக்குரிய அதிகாரம். அந்த அதிகாரத்தை மதித்து நட.

இயேசுவிற்கு மேலான அதிகாரமே கிடையாது. ஆனாலும், அவர் அதிகாரத்தை மதித்தார். நீங்களும், அதிகாரங்களை அற்பமாய் எண்ணாதீர்கள்.

நாட்டின் பிரச்சனை, சட்டங்கள் இல்லாமற்போவது அல்ல. சட்டங்களை நாம் மதிக்காமல் நடப்பதே மிகப்பெரிய பிரச்சனை.

**விதியை விட, விதி விலக்கையே மனிதன் நாடுகிறான்.**

26
ஏப்ரல்

# தள்ளப்பட்டால், தேவனால் கொள்ளப்படுவாய்

"நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே" (யோவான் 2:10)

திருமண வீட்டில் முதல் பந்தியில் மேட்டுக்குடியினரான பணக்காரர் மேன்மக்கள் பந்தியிருப்பார்கள். கடைசியில் ஏழைகள் வறியவர், ஒன்றுமில்லாதவர்கள் பந்தியிருப்பார்கள்.

இயேசு செய்த அற்புதத்தின் விளைவு, வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்ந்த ஏழை மக்கள் பலன் பெற்றதே. வழக்கமாக அற்பமாக எண்ணப்படும் பாமர மக்கள், இந்தத் திருமணத்தில் சிறப்பு விருந்தினராகக் கௌரவிக்கப்பட்டனர். அந்தத் திருமண விருந்தில் கலந்துக் கொண்ட அனைத்து கானாவூர் மக்களிலும் இந்த ஏழை, எளிய மக்களே மிகவும் சிறப்பு பெற்றனர். மிக உயர்ந்த திராட்சரசம் இவர்களுக்குத்தான் பரிமாறப்பட்டது.

ஆகவே இந்த அற்புதம் அந்தத் திருமண வீட்டின் தேவையைச் சந்திப்பது மாத்திரமல்ல. அதைவிட மேலான சமூகப் புரட்சியைச் செய்து, அந்த ஊரின் விருந்துசாலையில் ஏழை, பணக்காரன் என்ற வேற்றுமையைத் தகர்த்தது.

அற்புதம் மேலோட்டமாக நமது பிரச்சனையைத் தீர்ப்பதாக இருந்தாலும், அதனைவிட மிக மேலானக் காரியத்தைச் செய்யும். ஆகவே அற்புதம் எதைக் கற்றுக் கொடுக்கிறது என்பதைத் தெளிவாய் அறிய வேண்டும்.

உலகம் உன்னைப் புறக்கணித்து, உன்னை அற்பமாய் வாழ்க்கையில் நிறுத்தலாம். நீ கவனிப்பாரற்று, வெறுமையாய் தனித்து நிறுத்தப்படும் சூழ்நிலை வரலாம். ஆனால் நீ எதிர்பாரா சூழ்நிலையில் தேவக்கரம் உன்னை உயர்த்தும். இதுவரைக்கும் உனக்கு மறுக்கப்பட்ட மேன்மை இப்பொழுது உனக்குக் கிடைக்கும்.

மனுஷரால் தள்ளப்பட்டாலும், தேவனால் தெரிந்துக்கொள்ளப்படுகிறாய் என்பதை மறந்து விடாதே! உலகம் உன்னை வேண்டாம் என்று அற்பமாய் எண்ணும்பொழுது, கர்த்தர் உன்னை அற்புதமாக உயர்த்துவார்.

திராட்சரசம் இல்லையென்ற நிலையைச் சந்தித்த, இந்த அடித்தட்டு மக்களுக்கு நல்ல ரசத்தைக் கொடுத்த இயேசு விருந்துசாலையின் வாசலருகே நிற்கிறார். தைரியமாயப் பிரவேசி.

**"சூழ்நிலை உன்னைப் பள்ளத்தில் தள்ளினால்,
கர்த்தரின் கரம் உன்னை உயரே தூக்கும்."**

27
ஏப்ரல்

# தடை, ஓட்டத்தை நிறுத்துவதற்கல்ல, திசையைத் திருப்ப.

"என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாய் இருக்கிறவரே... ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும்." (ஆதி 32:9,11).

மிகுந்த ஆசீர்வாதமுள்ள ஒருவனாக யாக்கோபு இருந்தும், அவனிடம் மிகப் பெரிய குறை இருந்தது. அது என்னவெனில், அவனிடம் ஜெபமே கிடையாது. தன் சமயோசிதப் புத்தியினால் அவன் சமாளிக்க விரும்பினானே தவிர, கடவுளை நாடி, அவரை ஜெபத்தில் தேடவே இல்லை. ஆகவே கர்த்தர் இந்தச் சூழ்நிலையை அவன் வாழ்க்கையில் அனுமதித்தார்.

தந்திரமும், உலக வழிகளுமே யாக்கோபின் சுபாவங்களாக இருந்தன. எப்பொழுதும் தன் தந்திரம் ஜெயிக்கும் என்று அவன் நம்பினான். ஆகவே கர்த்தர் அவன் வாழ்க்கையில் பயப்படும் சூழ்நிலையை உருவாக்கினார். அவன் ஜெபம் பண்ண ஆரம்பித்தான்.

ஏசாவை அங்கு அனுப்பியது தேவ தயவு. சில சமயங்களில் நாம் சந்திக்கும் வறுமை, வியாதி, வேதனை தேவ தயவாக இருக்கக் கூடும். ஏனெனில் இத்தகைய சூழ்நிலைகள் நம்மை ஜெப அறைக்குள் இழுத்துச் சென்று தேவ சமூகத்தில் அர்ப்பணித்துவிடும்.

"என்னை ஆசீர்வதியும்" என்ற மலிவு ஜெபமல்ல யாக்கோபின் ஜெபம். அவன் ஏறெடுத்த ஜெபம் கண்ணீரில் பிறந்த மன்றாட்டு அர்ப்பணிப்பின் ஜெபம். "நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல" என்று யாக்கோபு முதல் முறையாகத் தன்னைத் தாழ்த்திய ஜெபம்! ஆம் அப்பாவை, அண்ணனை ஏமாற்றிய தான், எந்த ஆசீர்வாதத்திற்கும் பாத்திரவான் அல்ல என்பதை உணர்ந்தான்.

தான் யார் என்பதை யாக்கோபு உணர அவனை ஜெபிக்க வைக்க வேண்டும் என்பது தேவனின் நோக்கம். ஆகவே இந்தச் சூழ்நிலையை அவன் வாழ்க்கையில் அனுமதித்தார்.

என் சகோதரனே! உங்கள் வாழ்க்கையில் நெருக்கடிகளைச் சந்திக்கும்பொழுது, உள்ளே வா என்று ஜெப அறை உங்களை அழைக்கும் சத்தம் காதில் விழட்டும்.

**'ஓடுகின்ற உன்னை முழங்காலில் நிறுத்தவே, பயணத்தில் தடை".**

**28**
ஏப்ரல்

# அழைப்பை அலட்சியம் பண்ணாதே

"இதோ நான் அவனை (யாக்கோபை) உனக்கு எஜமானாக வைத்தேன்."(ஆதி 27:37)

இளையவனான யாக்கோபே மூத்தக் குமாரனுடைய, அதாவது ஏசாவினுடைய சிலாக்கியத்தைப் பெற வேண்டும் என்பது கர்த்தரின் சித்தம், திட்டம், அவ்வாறே ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து, அதனை ஏசாவிடம் கூறும்பொழுது, உன் தம்பியை உனக்கு எஜமானாக வைப்பேன் என்றல்ல, வைத்தேன் என்று கூறுகிறான். அவனை ஆசீர்வதித்தேனே அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும் இருப்பான் என்று திட்டவட்டமாய் ஈசாக்கு யாக்கோபுவைக் குறித்து தேவ வார்த்தையை சொல்லியிருந்தான். இந்த வார்த்தைகள் யாக்கோபின் காதில் தெளிவாய் விழுந்தன.

ஆனாலும், பிற்காலத்தில் ஏசா தன்னை எதிர்க்க வருகிறான் என்று தவறுதலாக எண்ணி யாக்கோபு மிகவும் பயப்படுகிறான். தேவ வார்த்தைகளை அவன் இதயம் பற்றிப் பிடித்திருந்தால், இந்த வீண் பயம் அவன் உள்ளத்தைப் பற்றிப் பிடித்திருக்காது.

"ஏசா வந்து என்னையும், பிள்ளைகளையும், தாய்மார்களையும் முறிய அடிப்பான்" என்று யாக்கோபு மிகவும் பயந்தான். நெருக்கங்கள் கர்த்தரின் வாக்குத்தத்தத்தை இதயத்தில் நொறுக்கிப் போடுகிறது. யாக்கோபு கோழையானான். உடனே அவனது அழைப்பை அவனே மாற்றிவிட்டான். ஏசாவுக்கு எஜமான் என்று அழைக்கப்பட்ட யாக்கோபு, ஏசாவைப் பார்த்து, "ஆண்டவனாகிய (எஜமானாகிய) உமக்கு"(ஆதி 32:5) என்று தன் அழைப்பை மறந்து, தன் சகோதரனை எஜமான் என்று அழைத்து, தேவசித்தத்திற்கு மாறாக அடிமையானான்!

நாமும், வாழ்க்கையில் நெருக்கடி நேரங்களில் வார்த்தைத் தவறுவோமெனில், எஜமானாக, நம் பிரச்சனையின் மேல் அதிகாரம் உள்ளவர்களாய் இருப்பதற்குப் பதிலாக, நெருக்கங்களுக்கு அடிமையாகிப் பரிதாபமாய் நிற்போம்.

"என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும்" என்பது கண்ணீரின் ஜெபம். உண்மையில் வேண்டாத ஜெபம்.

**"வீண் கவலைகள் உன்னை
முழங்காலில் நிறுத்தாதபடி பார்த்துக்கொள்."**

## நெருக்கடியா?

**29**
**ஏப்ரல்**

"கர்த்தர் ஆபிரகாமை நோக்கி; நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ." (ஆதி12:1)

ஆபிரகாமிற்குத் தேவன் இட்ட கட்டளை, அவன் தன் தேசத்தையும், தன் இனத்தையும், தன் தகப்பனையும் விட்டு நிரந்தரமாகப் பிரிய வேண்டும். ஆம்! இது எளிதானக் காரியமல்ல, தன் உறவை, சொத்து சுகங்களை, சொந்த ஊரை நிரந்தரமாகப் பிரிய வேண்டும் என்பது மிகக் கஷ்டமானக் காரியம்.

ஆனால் "இழந்துவிடு" என்பது மட்டுமல்ல கர்த்தரின் கட்டளை. இழப்புக்குப் பதிலாக, "பெற்றுக்கொள்" என்ற மற்றொரு அழைப்பும் உண்டு! உன்னைப் பெரிய தேசமாக உருவாக்குவேன், நீ ஆசீர்வாதமாயிருப்பாய் என்பதே அந்த அழைப்பு. ஆகவே தேவனுக்குக் கீழ்ப்படிவதினால் ஆபிரகாமிற்கு எந்த நஷ்டமும் கிடையாது.
ஆனாலும் அவன் தகப்பனையும், லோத்தையும் கூடவே அழைத்துப் போனான். லோத்தின் உறவினால், ஆபிரகாமிற்குப் பல இடையூறுகள் ஏற்பட்டன, அவன் தகப்பனாகிய தேராகுவை அழைத்துச் சென்றதினால் அவனுக்குக் கடும் பிரச்சனை உண்டாயிற்று. ஆரான் எனும் இடத்திற்கு வந்த பொழுது, தேராகுவினால் தொடர்ந்துப் பிரயாணம் செய்ய முடியவில்லை. தன் தகப்பனை மீண்டும் சொந்த ஊருக்கு அழைத்து வரவும் முடியவில்லை. நெருக்கமான சூழ்நிலையில் ஆபிரகாம் அகப்பட்டுவிட்டான்.

ஆம்! கர்த்தரின் வார்த்தைக்கு முழுமையாகக் கீழ்ப்படியாமல் நம் மாம்சீக அன்பினால், செயற்படுவோமானால், அதின் முடிவு இக்கட்டு! அதிலிருந்து மீள்வது கஷ்டம். தகப்பனை ஆரானில் விட்டுவிட்டு, ஆபிரகாம் தொடர்ந்து பிரயாணம் செய்தால், அது அவனுடைய தகப்பனுக்குச் செய்யும் துரோகம். தகப்பனை மீண்டும் சொந்த நாட்டிற்கு அனுப்ப முடியாது. தொடர்ந்து தன்னுடனும் அழைத்துச் செல்ல முடியாது. வழியில் விட்டுவிடவும் முடியாது மிகவும் நெருக்கடியான நிலை, என்ன செய்வது? சகோதரனே! மிக நெருக்கடியான சூழ்நிலையில் இருக்கிறாயா? என்ன செய்வதென்றே தெரியவில்லையா? நீ ஒன்றுமே செய்ய வேண்டாம். பிரச்சனையைக் கர்த்தரின் கரத்தில் கொடு. ஆபிரகாம் அமைதியாய் இருந்து விட்டான்.

தேராகு மரித்தான், அவன் மரிக்கும் வரை பிரயாணம் தடைபட்டது. இது ஓர் நஷ்டம் தான். கீழ்ப்படியாமைக்குக் கிடைத்த தண்டனை.

**"உன் நெருக்கத்தில் கர்த்தரோடு நெருங்கியிரு."**

**30**
**ஏப்ரல்**

# கடவுளே நமது பிரச்சனை

"யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான். அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி.."(ஆதி 32:24)

யாக்கோபின் பிரச்சனை ஏசா அல்ல. அவனுடைய குடும்பம் அல்ல. அவனுடைய எதிர்காலமும் அல்ல. அவனது பிரச்சனை கடவுள் தான். அவனது மற்றப் பிரச்சனைகளை அவன் சந்திக்கும்முன், அவன் முதலாவது கடவுளைச் சந்திக்க வேண்டும். கடவுளோடு ஒப்புரவாகாமல், மனிதன் எடுக்கும் எல்லா முயற்சிகளும் வீணாய்ப் போய்விடும்.

"ஒப்புரவாகாத ஒருவனுக்கு கடவுள் விரோதியாகவே இருப்பார். கடவுளை எதிராளியாக வைத்திருப்பது நல்லது அல்ல. கடவுளை உன் நண்பனாக நீ எண்ணுவதற்கு முன்பு, அவரை விரோதியாகச் சந்தித்துவிடு" என்கிறார் மார்ட்டீன் லூத்தர்.

உலகமே நம்மை எதிர்த்தாலும், இன ஜனங்கள் நமக்கு விரோதமாக எழுந்தாலும் அது பெரிய ஆபத்து இல்லை. கடவுள் நமக்கு விரோதியாக இருந்தால் அதை அறியாமலிருப்பது மிகப் பெரிய ஆபத்து.

ஆகவே யாப்போக்கு ஆற்றங்கரையில் கடவுள், யாக்கோபை ஓர் விரோதியாகவே சந்தித்து அவனோடு போராடுகிறார். நடுத்தெருவில் நம்மை நிறுத்தி, ஊர் மக்கள் பார்க்க, கர்த்தர் நமக்கு விரோதமாகப் போராட மாட்டார். நம் ஜெப அறையில், நம்மைத் தனியாக நிறுத்தி, நம்மோடு போராடுவார். யுத்தக்களத்தில் நீ கவனமாய் இருப்பதற்காகவே இந்தத் தனிமை உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே தனிமையாய் இரவு முழுவதும் யாக்கோபு தன் தேவனோடு போராடினான். எப்படி? அழுது, அழுது கெஞ்சினான். திடீரென்று கர்த்தர் யாக்கோபைப் பிடித்தார். அதுபோலவே திடீரென்று நமக்கு வரும் பிரச்சனைகள், நம்மைத் தீர்த்துக் கட்டும் விரோத அம்புகள் அல்ல. நம்மை உருவாக்கும் வாய்ப்புகள், திடீரென்று வரும் வியாதி, பணப் பிரச்சனைகள் இவையெல்லாம், நம்மை உருவாக்கும் தேவனது கரங்களே என்று நம்புவோமாக.

பொழுது விடிந்தது. அவன் துக்கமும் முடிந்தது. போராட்ட இரவின் முடிவு விடுவிக்கும் விடியல்.

**மிக இருண்ட நேரம், விடியற்காலத்துக்குச் சமீபம்.**

1 மே

# கடமையா? உரிமையா?

"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை, பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவதூதர்கள் துதித்தார்கள்." (லூக்.2:14)

நமது கர்த்தர் பெத்லகேம் ஊரில் பிறந்தபொழுது, வானசேனை மேய்ப்பர்களுக்குத் தரிசனமாகி, "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை, பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவதூதர்கள் துதித்தார்கள்."

உடனே நம் உள்ளத்தில் பல கேள்விகள் எழுகின்றன, கிறிஸ்து பிறந்தபொழுது பாடிய இப்பாடலுக்கு என்ன அர்த்தம்? உலகமெங்கும் சண்டைகளும், கலவரங்களும், தீவிரவாத தாக்குதல்களும் இருக்கின்றனவே. எங்கே சமாதானம்? ஜாதிக்கு விரோதமாக ஜாதி, இனத்திற்கு விரோதமாக இனம், நாட்டிற்கு விரோதமாக நாடும் பகையிலும், வெறுப்பிலும் இருக்கின்றனவே? எங்கே மனுஷர்மேல் பிரியம்? இயேசு பிறந்த பிறகுதானே உலகின் மிகபெரிய இரண்டு உலகப் போர்கள் நிகழ்ந்தன? அதனால் உயிரிழந்தோர், உடல் உறுப்பு இழந்தோர் எண்ணற்ற பேராயிற்றே. இதுதான் உலக சமாதானமா? இதுதான் மனுஷர்மேல் பிரியமா?

இப்படியெல்லாம் மனிதன் ஆவேசமாய்க் கேள்வி எழுப்புகிறான். கர்த்தரும் மனிதனிடம் ஓர் கேள்வி கேட்பார். பூமியில் சமாதானம் இல்லை, மனுஷர்மேல் பிரியமில்லை என்று ஆத்திரமடையும், நம் அலட்சியத்தையும் தேவன் சுட்டிக்காட்டுகிறார். அது என்ன அலட்சியம், தூதர்களின் பாடலின் முதல் வரியை மிகச் சௌகரியமாய் மறந்து விட்டோமே. அந்த முதல் வரி என்ன?

"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை!" கர்த்தருக்கு மகிமையாய் வாழ்ந்தோமா? நமது சொல், செயல் இவைகளினால், கர்த்தர் மகிமைப்பட்டாரா? சமாதானம், மனுஷர்மேல் பிரியம் இவை இரண்டும் நமது உரிமைகள்.

"கர்த்தருக்கு மகிமை" நமது கடமை. கடமையை வசதியாக மறந்து விட்டு, உரிமைக்குப் போராடுவது நியாயமா? கடமை நாம் விதைக்கும் விதை, உரிமை நமது விளைச்சல், விதைப்பு இல்லாத அறுவடையை எதிர்பார்க்காதே என்று கர்த்தர் நம்மை எச்சரிக்கிறார்.

கடமை வேர், உரிமை கனி! வேரைக் கவனி. கர்த்தருக்கு மகிமை செலுத்து. உன் வாழ்வில் சமாதானம் நிலவும். உன்னை யாவரும் விரும்புவார்கள்; ஆம். உன்மீது பிரியம் உண்டாகும்.

**முதலாவது கடமை, பின்பு உரிமை.**

**2**
**மே**

# நெருக்கமா? விசாலமா?

அப்பொழுது அவர்; நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள்; அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். (யோவான்.21:6)

நெருக்கமான வேளை வரும்பொழுது, மனிதன் மிகுந்த தன்னம்பிக்கையோடு தான் சமாளித்துக்கொள்ள முடியும் என்பதை அறைகூவலாகக் கூறுகிறான். தன்னம்பிக்கை நல்லதுதான் எனினும் கடவுளைத் தள்ளிவிடுகிற தன் நம்பிக்கை நல்லதல்ல.

பேதுருவும், மற்ற ஆறு சீஷர்களும் கடவுளின் ஒத்தாசையை ஆலோசனையைத் தள்ளிவிட்டு, தங்களது அனுபவம், படகு, வலை, திறமை இவற்றை நம்பி, கடலில் மீன்பிடிக்கச் சென்றார்கள். அவர்களால் ஒன்றுமே பிடிக்க முடியவில்லை. ஆம்! அனுபவம், திறமை இவற்றின் மேலுள்ள நம்பிக்கை எப்பொழுதும் வெற்றியாய் அமைந்துக் கொண்டே இருக்காது. ஆகவே நெருக்கமான வேளையில், நமது திறமை, அனுபவத்தைப் பயன்படுத்துமுன், தேவ ஆலோசனையைத் தேட வேண்டும். நமது நம்பிக்கை கர்த்தர் பேரிலேயே இருக்க வேண்டும்.

மாறாக, சீஷர்கள் முற்றிலும் தங்களையே சார்ந்துக் கொண்டார்கள். ஆகவே ஏமாற்றத்தின் விடியலைச் சந்தித்தார்கள். பொழுது புலர்ந்தது. அத்தோடு அவர்களுடைய ஏமாற்றமும் மலர்ந்தது. தன்னம்பிக்கை அவர்களுக்கு வெறுமையை விருந்தாகப் படைத்தது. அந்தச் சமயத்தில்தான் அவர்களுக்கு உதவி செய்ய கர்த்தர் வந்தார்.

"வலதுபுறமாக வலையைப் போடுங்கள்" என்றார் இயேசு. பொதுவாக வலதுபுறம் கடற்கரைக்குச் சமீபமான இடம். இடப்புறம் ஆழமானக் கடல். ஆழமானக் கடலில்தான் மீன்கள் கிடைக்கும். ஆம்! இடது பக்கம் மீன் பிடிப்பதுதான் அறிவு, அனுபவம். ஆனால் ஆண்டவரோ, ஆழமற்ற கடற்கரைப் பக்கம் வலையைப் போடுங்கள் என்றார். இது அறிவும், அனுபவமும் ஒத்துக் கொள்ளாதக் காரியம். ஆனால் கர்த்தரின் வார்த்தை இந்த வலது பக்கத்தைச் சுட்டிக்காட்டினால், நமது அறிவும், அனுபவமும் விடை பெற்றுக்கொள்ள வேண்டும். வார்த்தைக்கு வழிவிட வேண்டும்.

அறிவு சுட்டிக்காட்டுகிற விசாலம் அல்ல, கர்த்தர் சுட்டிக்காட்டுகிற நெருக்கமே நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும். அனுபவமான இடப்பக்கம் வெறுமையாய் மாறலாம். அறிவுக்கு எட்டாத வலப்பக்கம் நிறைந்த ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். ஆகவே நெருக்கத்தில் நில்! கர்த்தரிடம் கேள்! அவர் வார்த்தையின்படி செயற்படு. கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்.

**மாம்சீகம் காட்டும் விசாலத்தைவிட,**
**ஆவியானவர் காட்டும் நெருக்கமே ஆசீர்வாதம்.**

3
மே

# கர்த்தரின் நினைவும், வாழ்வில் நிகழ்வும்

"அந்நாள்களில் உலகெங்கும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளைப் பிறந்தது" (லூக்2:1)

அரசியல் கருத்து வேறுபாடுகள் நிலவியக் காலம் அது. அகஸ்துராயனுக்கும் ஏரோதுவிற்கும் அரசியல் கருத்து வேறுபாடுகளினிமித்தம், குடிமதிப்பு எழுதப்பட வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கர்த்தரோ, இதே வரிவிதிப்பு நிகழ்வை தமது நோக்கம் நிறைவேறப் பயன்படுத்திக் கொண்டார்.

அதாவது நிறைமாதக் கர்ப்பிணியாய் மரியாள் இப்பொழுது நாசரேத் ஊரில் இருக்கிறாள். தேவ தீர்க்கதரிசியின் வார்த்தையின்படி மரியாள் தன் முதற்பேறான குமாரனாகிய இயேசுவைப் பெத்லகேமில் பெற்றெடுக்க வேண்டும். பெத்லகேம் நாசரேத் ஊரிலிருந்து 80 கல் தொலைவு. ஆகவே அரசியல் நிகழ்வை தனக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு, மரியாளைப் பெத்லகேமிற்குப் பயணிக்கச் சித்தங்கொண்டார்.

கடவுளின் நினைவை விட்டு, நமது வாழ்வின் நிகழ்வுகள் தவறுவதேயில்லை. அகாஸ்வேரு ராஜா தூக்கமின்மையால், படுக்கையில் இருப்பதைக் கண்ட கர்த்தர் அவனது தூக்கமின்மையைப் பயன்படுத்தி, யூத மக்களுக்கு ஓர் விடுதலையை உண்டு பண்ணினார். யோசேப்பின் தூக்கத்தைப் பயன்படுத்தி, ஓர் சொப்பனம் மூலம், யோசேப்பு, மரியாள், இயேசு ஆகிய மூவரும் ஏரோதின் பட்டயத்திற்குத் தப்பும்படி செய்தார்.

தூக்கமோ, தூக்கமின்மையோ எந்த நிகழ்வையும் தேவன் பயன்படுத்தி நமக்கு ஓர் விடுதலையைத் தருவார். அகஸ்துராயனின் கட்டளையை நிறைவேற்றி, இயேசு பெத்லகேமில் பிறக்கும்படி, வழியைக் கர்த்தர் உண்டு பண்ணினார். எவ்வளவோ சம்பவங்கள் நடந்துவிட்டனவே, கர்த்தர் எதையுமே கவனித்ததாகவே தெரியவில்லையே என்று அங்கலாய்ப்புடன் இருக்கிறாயா? உன் வாழ்க்கைச் சம்பவங்களைக் கர்த்தர் உற்று கவனிக்கிறார். உன் வருத்தம் மனச் சஞ்சலம் போன்ற நிகழ்வுகளின் மூலம் கர்த்தர் கிரியை செய்வார்.

எந்த ஒரு நிகழ்வும், கடவுளின் பார்வையினின்று நீங்கிப் போகாது. கடந்து போகும் ஓர் வாழ்க்கைச் சம்பவத்தை கர்த்தர் ஆசீர்வாதத்தின் தலைவாசலாக மாற்றுவார். ஆகவே என்னை என் கர்த்தர் கவனிக்கிறார் என்று சமாதானம் அடைவோம். நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும், எந்த நிகழ்வுகளையும் கடவுளின் கவனம் தவற விடாது.

**சுவருக்குப் பொருத்தமான கல்,**
**வெகுநாள்கள் கவனிப்பாரற்று தெருவில் கிடக்காது.**

4
மே

# தீபமா? தீபந்தமா?

"தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர், என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார்" (சங்18:28)

இருளில் நடமாடுவது கஷ்டமான செயல். என்ன செய்யலாம் என்று நாம் அறியா சூழ்நிலை நமக்கு இருளான சூழ்நிலைதான். அந்தச் சூழ்நிலையில் நாம் தேவ ஆலோசனையை நாடாமல், மாம்சீகமாக, ஓர் விளக்கை ஏற்ற முயற்சிக்கிறோம். அது பெரிய தீ விபத்தாக மாறி, கடும் சேதத்திற்குள்ளாக்கிவிடுகிறது. ஆகவே நமது விளக்கை கர்த்தர் தாமே ஏற்ற வேண்டும்.

தாவீது மிகவும் நெருக்கமான சூழ்நிலையில், சவுலுக்குத் தப்பி ஓடும் பொழுது பெலிஸ்தியரின் ஒத்தாசையை நாடினான். தன் இருளான நாள்களில் அவன் பெலிஸ்திய விளக்கை ஏற்றினான். கர்த்தருக்கும், இஸ்ரவேலருக்கும் பகைவரான பெலிஸ்தியரின் உறவை தாவீது நாடினான். அந்த விளக்கு ஆரம்ப நாள்களில் பிரகாசமாக எரிந்தது. ஆனால் முடிவில் அது பெரிய காட்டுத் தீயாக மாறி தாவீது தங்கியிருந்த சிக்லாக் பட்டணத்தையே அழித்துப் போட்டது. மாம்சீக முயற்சிகள் ஆரம்பத்தில் வெளிச்சத்தைத் தரும், முடிவில் அக்கினியைக் கொட்டும், ஆகவே, இருளாயிருந்தாலும், கர்த்தரின் வார்த்தைக்கே நாம் காத்திருக்க வேண்டும்.

"வெளிச்சம் உண்டாகக்கடவது" என்று கர்த்தர் நம் வாழ்வில் கட்டளையிட்டப் பிறகும், தொடர்ந்து இருளாகவே இருந்தால் என்ன செய்வது? "உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துக்கொள்ளக்கடவன்." (ஏசா.50:10)

இருளுக்குப் பயந்து, தாவீதைப்போல பெலிஸ்திய உறவு என்ற தீபத்தை ஏற்றினால், அக்கினி ஜுவாலையில் நடக்க வேண்டிய நிலை வரும். நாமும் வேதனையில் கிடப்போம்.

தீபம் என்று தாவீது ஏற்றிய தீ பந்தமாக எரிந்து சிக்லாக்கை அழித்தது. கண்ணீரும், வேதனையும் பெருகின. கர்த்தர் தாவீதின் விளக்கை ஏற்றுவதற்கு அவன் காத்திராதபடி, மாம்சீகமாகச் செயற்பட்டதின் விளைவு, பொருள் நஷ்டமும், வேதனையும், கண்ணீருமே. ஆகவே காத்திரு! இருளில் அமைதியாயிரு. கர்த்தரே உன் விளக்கை ஏற்றுவார். அவர் ஏற்றிய விளக்கு அணையாது.

**இருளுக்குப் பயந்து, மாம்சீக விளக்கை ஏற்றாதே,**
**ஏற்றினால் விளக்கு தீ பந்தமாக மாறி,**
**உன் வாழ்வை அக்கினிக்கு இரையாக்கும்.**

# 5 மே

## முதிர்ந்த சீஷன்

"நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி... நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்." (மத்28:19,20)

கர்த்தரையும், அவருடைய உபதேசங்களையும் கற்றுத் தேறுவதுதான் சீஷத்துவம். சிலர் உபதேசங்களைக் கற்றிருப்பார்கள். ஆனால் கிறிஸ்துவைக் கற்றிருக்க மாட்டார்கள். அதாவது கிறிஸ்துவோடு எந்த ஐக்கியமும், உறவும் பெற்றிருக்க மாட்டார்கள்.

வேதம் சொல்கிறது. "இயேசு பன்னிரண்டு பேரைத் தெரிந்து கொண்டு, அவர்கள் தம்மோடு இருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பும்படியாகவும்... அவர்களை ஏற்படுத்தினார்." (மாற்கு 3:14,15) அவரோடு இருப்பது அவரை, அவருடைய சுபாவத்தை, சிந்தனையை, சித்தத்தைக் கற்றுக்கொள்வதற்கே.

உங்கள் முன் ஓர் முதிர்ந்த சீஷனை இப்பொழுது நிறுத்துகிறேன். அவன் பெயர் மினாசோன்! அவன் வேத அறிவும், அனுபவமும் மிக்கவன். வேதம் இவனை பழைய சீஷன் என்று அழைக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் மிகுந்த நெருக்கத்தில் இருக்கிறான். மரணத்தை அவன் சந்திக்கும் இருண்ட வேளை. அப்பொழுது மினாசோன் வருகிறான். எருசலேமில் பவுல் துன்பப்படப்போகிறான் என்று அறிந்ததும், ஜனங்கள் அழுது அரற்றி அவனை எருசலேமிற்குப் போகவேண்டாம் என்று வற்புறுத்தினார்கள். "இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தம்" என்று பவுல் புறப்பட்டு வருகிறான். அப்பொழுது மினாசோன் என்னும் பழைய சீஷன் வீட்டில் தங்கும்படி அவனையும் பவுலோடு அழைத்துச் சென்றார்கள். (அப். 21:16)

பவுலுக்குக் கொலை மிரட்டல், பயமுறுத்துதல் போன்ற சூழ்நிலைகளில் மினாசோன், பவுலைத் தன் வீட்டில் தைரியமாய் ஏற்றுக் கொண்டான். சகோதரனே! பாடுகள் உபத்திரவம் இல்லா இந்நாட்களில் பேரும் புகழும் பெற்ற ஊழியக்காரர்களை உங்கள் வீட்டில் தங்கவைப்பதும், உபசரிப்பதும் மிகப்பெரிய காரியம் அல்ல. ஊழியக்காரர்களோடு உட்கார்ந்து சாப்பிடுவது மாத்திரம் அல்ல; ஊழியக்காரனுக்கு பாடுகள், உபத்திரவங்கள் வந்தால், அவைகளிலும் பங்கு பெறும்படி, நெருக்கங்களில் ஊழியக்காரரோடு ஐக்கியமாயிருக்கிறீர்களா?

எதை விரும்புகிறோம்? எலியா செய்தது போன்ற அற்புதங்களையா? யோவான் ஸ்நானன் போல விரமிக்க பிரசங்கங்களையா? ஸ்தேவானைப் போல இரத்த சாட்சியாய் மரிக்கும் அர்ப்பணிப்பையா? மினாசோன் பவுலோடு மரிக்கவும் ஆயத்தமாக இருந்தான்.

**தேவ ஊழியர்களை கனம்பண்ண தவறிவிடாதீர்கள்**

6
மே

# இழப்பதா? பெறுவதா?

"நான் மரண இருளின் (நிழலின்) பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்" (சங் 23:4)

மனிதனை மரண பயம் உலுக்கி எடுத்துவிடுகிறது. ஆவிக்குரியவர்கள்கூட மரணம் என்றால், மிகவும் பயத்தோடு நோக்குகிறார்கள். பொதுவாக மரணத்தைக் குறித்துப் பேசவோ, கேட்கவோ விசுவாசிகள் விரும்புகிறதில்லை. மரணத்தைச் சந்திக்கும்படி விசுவாசிகளைப் பிரசங்க மேடை ஆயத்தம் பண்ணத் தவறிவிடுகிறது.

"நீ மரிப்பதில்லை.. என்றும் ஆசீர்வாதமாக இருப்பாய்" என்று கேட்டு கேட்டு விசுவாசி பூமியையே நித்திய வீடாக எண்ணும் நிலைக்கு வந்துவிட்டான். நான் கர்த்தரின் வருகை மட்டும் உயிரோடு இருப்பேன் என்று விசுவாசி சொல்வது, கிறிஸ்துவின் வருகையின் மீதுள்ள வாஞ்சையினால் அல்ல, மரணத்தைக் குறித்தப் பயத்தினாலேயே. இது மிகப் பரிதாபம்!

ஒரு சிறு வியாதி வந்தவுடனே, "ஐயோ நான் செத்துப்போவேனே" என்று பயப்படுவது சரி அல்ல. உலகில் மரிப்போரில் பெரும்பான்மையோர் வியாதியில்தான் மரிக்கிறார்கள். இப்படி மரணத்தின் வாசலைத் திறக்கும், வியாதி மனிதனின் கடைசி வியாதி அந்த வியாதியைக் கர்த்தர் சுகமாக்க மாட்டார். இந்த வியாதியைச் சந்திப்பவர்கள், உலகை விட்டு நீங்கிப்போக ஆயத்தமாக வேண்டும்.

கல்லறை, சவப்பெட்டி, ஆழமான குழி, மண் என்ற நினைவுகளின்று மனதைத் திருப்பி, பரலோகம், தேவசமுகம், தேவதூதர்கள், ஆடல், பாடல், என்று உன்னதமானக் காரியங்களை மனம் சிந்திக்க வேண்டும். அப்பா வீட்டிற்குப் போகிறோம் என்று ஆத்துமாவில் பெரிய வாஞ்சையும், அமைதியும் ஏற்பட வேண்டும். இருதயம் கலங்கவே கூடாது.

பொதுவாக மனிதன் பயத்தினால் ஓடுவான். துஷ்ட மிருகம் எதிர்த்து வந்தால் மனிதன் ஓட ஆரம்பிப்பான் பயத்தினால். தாவீது சொல்கிறான், "மரணப் பள்ளத்தாக்கில் நான் நடப்பேன்." தாவீது நடப்பதற்குக் காரணம், அவனுக்கு மரணப் பயம் இல்லாமையே. ஆம்! மரணத்தில் நிதானமான நடை வேண்டும். உலக வேலை முடித்து, வீட்டிற்கு நிதானமாக நடப்பதே மரணம். அந்த நடை பாதையில், நமது கரம்பிடித்து நம்மோடு வருகிறவர் நமது கர்த்தரே. ஆகவேதான் தாவீது சொல்கிறான், "நான் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்." சகோதரனே! உலகம் ஓர்வழிப் பிரயாணச் சத்திரம், வீட்டிற்குப் போக நமக்கு வாஞ்சை வேண்டும்! அப்பா காத்திருக்கிறார்.

**உலகை இழப்பது அல்ல, பரலோகத்தைப் பெறுவதே மரணம்.**

7
மே

# உலகிடம் நீட்டிய கரம் உன்னை உன்னதத்திற்கு உயர்த்தாது

"வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்." (ஆதி14:23)

கைகளை உயர்த்தி கர்த்தரை ஆராதியுங்கள் என்று சபையில் கட்டளை கொடுக்கப்படுகிறது. சபையார் ஆரவாரமாக கரங்களை உயர்த்தி, அசைத்து, கர்த்தரைத் துதித்து மகிமைப்படுத்துகிறார்கள். ஆனால் உயர்த்திய கரங்களைக் கர்த்தர் கவனிக்கிறார் மற்றவர்களைக் குறித்து அவதூறாக எழுதிய கரங்கள், அநியாயமாகச் சம்பாதித்த கரங்கள் இவைகளை ஆராதனையின் மத்தியில் என் ஆண்டவர் கண்டால், அவர் உள்ளம் எவ்வளவாய் வேதனைப்படும்? ஆகவே உயர்த்திய நம் கரங்கள் தேவனுக்கு முன்பாக கறைபடாதவாறு இருக்கிறதா?

சோதோமின் ஒரு பொருளையும் இச்சியேன் என்ற ஆழமானப் பரிசுத்தத் தீர்மானத்தில் அவன் எடுத்த முடிவுதான் வானத்திற்கு நேராக அவன் தன் கரங்களை உயர்த்திப்பிடித்த செயல். தன் கரங்கள் கறைபடவில்லை என்பதை சாட்சியாக அறிவிக்கும்படியே, தன் கரங்களை உயர்த்திப் பிடித்தான். தேவனுக்கு விரோதமானவர்களிடமிருந்து அற்பமான ஒரு உதவியைக்கூட, ஆம் பாதரட்சையின் வாரைக்கூட ஆபிரகாம் எடுக்க விரும்பவில்லை. சகோதரனே! நம் கர்த்தரை நம்பாத – ஏற்றுக்கொள்ளாதவர்களிடம் உன் சோகச் சரித்திரத்தைச் சொல்லி, கண்ணீர் விடுவது நம் ஆண்டவருக்கு அவமானம் இல்லையா? உன் கண்ணீர்க் கதையைக் கேட்கும் அந்த அவிசுவாசி நம் ஆண்டவரை மேன்மையாக எண்ணுவானா?

பாபிலோனிய ராஜா தானியேலுக்கு வெகுமதிகளைக் கொடுக்க முன்வந்த பொழுது தானியேல் ராஜாவை நோக்கி "உம்முடைய வெகுமானங்கள் உம்மிடத்திலேயே இருக்கட்டும்; உம்முடைய பரிசுகளை வேறொருவருக்குக் கொடும்." (தானி.5:17) என்று கர்த்தர்மேல் வைராக்கியத்தை வைத்தான் . ஊழியத்தின் தேவைகளைச் சந்திக்க, அவிசுவாசிகளிடம் கெஞ்சாதே. இரட்சிக்கப்படாதவர்களின் உதவியைத் தள்ளு. ஆபிரகாம் சோதோமின் ராஜாவின் வெகுமானங்களைத் தள்ளினான். ஏனெனில் ஆபிரகாமை சோதோமின் ஐஸ்வர்யம் ஆசீர்வதிக்கக்கூடாது என்பதில் ஆபிரகாம் அவ்வளவு வைராக்கியமாக இருந்தான்.

சகோதரியே! உங்கள் வீட்டின் வருமானத்தைக் கவனிக்கிறாயா? தேவனற்ற வழிகளில் உனக்கு ஏதேனும் ஐஸ்வர்யம் வருகிறதா? அப்படியாயின் சாத்தான் உன்னை ஐஸ்வர்யவானாக மாற்றுகிறான். உன் கையை உதறிவிடு, வேண்டாம் இந்த ஐஸ்வர்யம். ஆராதனை வேளைகளில் உன் கரங்களை உயர்த்தும்பொழுது ஆண்டவரின் முகம் மலருமா? அல்லது அவர் முகம் சுளிப்பாரா?

**கரத்தை உயர்த்துமுன் ஒரு நிமிடம் சிந்தி, எவ்வளவு உயர்த்தினாலும், கறைபட்ட கரம் தேவசமுகத்தை எட்டாது.**

**8**
**மே**

# பொழுது புலரும் வேளையில் ஏன் காரிருள்?

"பறவைகள் அந்த உடல்களின்மேல் இறங்கின; அவைகளை ஆபிராம் துரத்தினான், சூரியன் அஸ்தமிக்கும்போது, ஆபிராமுக்கு அயர்ந்த நித்திரை வந்தது. திகிலும் காரிருளும் அவனை மூடிக்கொண்டது." (ஆதி 15:11,12)

பொழுது புலரும் வேளை பிரகாசமான ஆரம்பம். அந்த வேளையில் இருளுக்கு இடமே இல்லை. ஆனால் பொழுது புலர்வதற்குமுன், காரிருள் இருக்கும். மிக இருண்ட வேளை காலை பொழுதிற்குச் சமீபமாயிருக்கிறது. The Darkest hour is nearest to dawn. ஆகவே இருண்ட நேரத்தை நாம் கடக்கும்பொழுது, ஆசீர்வாதமானக் காலைப்பொழுதைச் சந்திக்கிறோம் என்று நீ உறுதிக்கொள்ளலாம்.

ஆபிரகாம் வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலை நெருங்கிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு ஓர் சந்ததியும், அவன் சந்ததி வாழ ஒரு நாடும் அவனுக்கு வாக்களிக்கப்பட்டன. வாக்குத்தத்தம் உடனே நிறைவேறாது. அதன் நிறைவேறுதலுக்காக ஆபிரகாம் பல போராட்டங்களைச் சந்திக்க வேண்டும். பறவைகள் துண்டிக்கப்பட்ட மிருகங்களின் மேல் இறங்கின; ஆபிரகாம் அவைகளைத் துரத்தினான். வாக்குத்தத்தத்திற்காகக் காத்திருக்கும் தேவ பிள்ளையின் ஆத்துமாவில் பலவிதமான சந்தேகங்கள், எதிர் சிந்தனைகள் இறங்கும். அவைகள் விசுவாசி மனதை விட்டு நீங்கும்படி துரத்த வேண்டும். அந்தச் சிந்தனைகள் நம் இதயத்தில் கூடுகட்டும் பறவைகளாக மாறிவிடக் கூடாது. எண்ணப் பறவைகள் நம் தலைக்குமேல் பறக்கலாம். ஆனால் நம் தலையில் கூடுகட்டக் கூடாது.

தேவ நோக்கத்திற்கு விரோதமான சிந்தனைகளை நாம் உடனே துரத்த வேண்டும். கொஞ்சம் நாம் தாமதப்பட்டால், அவை நம் இதயத்தில் நிரந்தரமாகக் குடியேறி, நம் வாழ்வையே சிதைத்து விடும். சூரியன் அஸ்தமித்தது! ஆம் தேவசமுகத்தையே உணர முடியவில்லை. மனதில் திகிலும், காரிருளும் ஏற்பட்டன. "என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்" (சங் 22:1) என்று புலம்பி அழும் வேளைகூட வரலாம். சோர்ந்து போகாதீர்கள். நீ சந்திக்கும் காரிருள், உனக்கு எதிராக எழும்பும் ஆயுதம் அல்ல. உன் ஆசீர்வாதத்திற்குக் காத்திருக்கும் வரவேற்பு அறைதான் இந்தக் காரிருள். சீக்கிரம் பொழுது புலரும்! காரிருள் வெளிச்சமாகும்.

முள்ளில்லாத ரோஜா, வேதனையில்லா மகப்பேறு, பாடுகளில்லா அறுவடை அவை வெறும் கற்பனையே! நிஜம் வேறு, நிழல் வேறு. வாக்குத்தத்த நாட்டை அடையுமுன், வானாந்தரத்தை நீ கடக்க வேண்டும்.

**கல்லும், முள்ளும் நிறைந்த பாதையே,**
**பாலும் தேனும் ஓடும் நாட்டிற்கு வழி.**

9
மே

# இது நீதியா?

"அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான்."

(மத் 1:19)

சூழ்நிலை சுட்டிக்காட்டும் நிலையில் யோசேப்பு, மரியாளைத் தள்ளிவிட எண்ணியது சரிதான். ஆனால் நீதிமானாகிய யோசேப்பு நீதி செய்யவில்லையே. பாவி தண்டிக்கப்பட வேண்டும். ஆம், மரியாள் கல்லெறிந்துக் கொல்லப்பட வேண்டும் என்பது நியாயப்பிரமாணத்தின் நீதி. இதே நீதியை நிறைவேற்றாத யோசேப்பு எப்படி நீதிமானாக இருக்க முடியும்? பாவத்தைக் கண்டிக்காத, தண்டிக்காத ஓர் மனிதன் நீதிமான் என்று எப்படி சொல்ல முடியும்?

சட்டங்களை வளைக்காதவன் நீதிமான், யோசேப்பு நியாயப்பிரமாணச் சட்டத்தை மதிக்கவில்லையே? 'கன்னிகையான ஒரு பெண் ஒருவருக்கு நியமிக்கப்பட்டிருக்கையில் மற்றொருவனோடு உறவுவைத்து, கர்ப்பமானால், அவளைப் பட்டணத்து வாசலில் கல்லெறிந்துக் கொல்ல வேண்டும் என்பது சட்டம், இந்தச் சட்டத்தை யோசேப்பு மதிக்கவில்லையே. மரியாள் மீது யோசேப்பு வைத்த இரக்கம், தேவநீதிக்கு விரோதமாகச் செயற்படக் கூடாதே. நியாயப்பிரமாண நீதியை மதிக்காத யோசேப்பு எப்படி நீதிமான் என்று அழைக்கபட முடியும். மோசேயின் பிரமாணத்தை உடைத்த யோசேப்பு எப்படி நீதிமானாக இருக்க முடியும்.

குற்றவாளியைத் தண்டிப்பது மாத்திரம் நீதி அல்ல. வேதத்தில் இன்னொரு நீதியும் சொல்லப்பட்டிருக்கிறது. அது என்ன? "அவர் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும் நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்" (ஏசா 42:3) என்றும் வேதம் சொல்கிறது. இதே மனநிலையில்தான் யோசேப்பும் மரியாளுக்கு இரக்கம் பாராட்டினார். அந்த இரக்கம் நியாயத்தைத் தள்ளிய இரக்கம் அல்ல. உண்மையான நியாயத்தின் விளைவாக இருந்தது. ஆகவே யோசேப்பு நீதிமானாகவே விளங்கினார்.

சூழ்நிலையைப் பார்த்து பாவமா இல்லையா என்று தீர்மானிக்கக் கூடாது. பாவத்திற்கு சூழ்நிலையைக் காரணமாகக் காட்டக்கூடாது. "நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே" (யோ 5:14) என்று கர்த்தர் சொன்னதிலிருந்தே, அவர் பாவத்தை கண்சாடையாய் விடமாட்டார் என்று தெரிகிறது. நெரிந்த நாணலைப் போன்று, மரியாள் யோசேப்புக்குக் காணப்பட்டபடியால், மரியாளைக் கல்லெறிந்து முறித்துப்போட யோசேப்பு விரும்பவில்லை. இதுவும் நீதியாகவே எண்ணப்படுகிறது.

**பாவியின் இரத்தத்தைச் சிந்துவதல்ல,**
**பாவிக்காக இரத்தம் சிந்துவதே கிறிஸ்தவம்.**

**10**
**மே**

# இந்த நீதியுண்டா?

"அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து. அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான்." (மத். 1:19)

தனக்கு நியமிக்கப்பட்டிருக்கும் கன்னிகையான மரியாள், ஏற்கெனவே கர்ப்பமாயிருக்கிறாளென்று கேள்விப்பட்டு யோசேப்பு வருத்தமும். அதிர்ச்சியும் அடைந்தது ஆச்சரியமல்ல. இயற்கையாக ஓர் ஆணுக்கு ஏற்படும் ஆத்திரமும், யோசேப்புக்கு உண்டாகி, மரியாளைத் தள்ளிவிட வேண்டும் என்று யோசேப்பு யோசித்தது நியாயமானதே (சூழ்நிலையின்படி)

பிழைபட வாழ்ந்த ஒரு பெண்ணைத் தள்ளவேண்டும் என்று யோசேப்பு எண்ணும்பொழுதே, அவருக்குள் இருந்த நீதியும் கிரியைச் செய்ய ஆரம்பித்தது. பாவ வாழ்க்கையைச் சகிக்காதது நல்ல குணமே, மரியாளை வெளியரங்கமாகத் தள்ளினால், ஊர் மக்கள்முன் அவமானமாயிருக்குமே, எல்லா மக்களுக்கு மத்தியிலும் மரியாள் தலைகுனிந்து நிற்க வேண்டியதிருக்குமே என்று யோசேப்பு மிகவும் பாரப்பட்டார். அதோடுகூட மரியாளின் வாழ்க்கை வெளியே தெரிந்தால், கல்லெறிந்து மரியாளைக் கொன்று போடுவார்களே என்று யோசேப்பு மிகவும் பரிதாபப்பட்டார். இப்படி அவமானமும் கோர மரணமும், தனக்கு நியமிக்கப்பட்டப் பெண்ணுக்கு நேர்ந்துவிடக் கூடாது என்று யோசேப்பு எண்ணியது அவரது நீதி. இந்த நீதியின்படி யோசேப்பு, மரியாளின் நன்மதிப்பைக் காத்தார்.

மற்றவர்களின் பாவத்தை நாம் சகித்துக்கொள்ள அவசியமே இல்லை. அவர்களது பாவத்தை நாம் கண்டித்தே தீர வேண்டும். அதே சமயத்தில் பாவம் செய்தவர்களை அவமானப்படுத்துவதோ, அவர்களை மனமடியப் பண்ணுவதோ நம் நோக்கமாக இருக்கக் கூடாது. பிறரது நன்மதிப்பு நம் கையில் பத்திரமாக இருக்க வேண்டும். (others reputation should be safe in our hands) யோசேப்பு எவ்வளவு பெருந்தன்மையோடு நடந்துக்கொள்ள தீர்மானித்தான் என்பது நமக்கு ஓர் பாடமாக இருக்கட்டும்.

மற்றவர்களின் தவறுகளை நாம் எவ்வளவாய் அலசி, ஆராய்ந்து அவைகளை ஊரறியப் பேசுகிறோம். இப்படி நாம் செய்வதால், அவர்களுடைய பெயர் கெட்டுப்போகுமே என்று நாம் உணர்வதே இல்லை. நாளை அவர்கள் திருந்தி நடந்தாலும், நம்மாலே கெட்டுப்போனப் பெயரை அவர்களால் திரும்பப் பெற முடியாது. யோசேப்பு பாவத்தைச் சகிக்காத மனிதன். அதோடு பாவியை அவமானப்படுத்தாத நீதிமான். சகோதரனே! பாவத்திற்கு விரோதமாக நீ போராடும்பொழுது பாவியை வெட்டிச் சாய்த்துவிடாதே; எச்சரிக்கையாயிரு.

**பாவி மனந்திரும்ப நீ பேசு,**
**அவன் மனச்சோர்வு அடையப் பேசாதே.**

| 11<br>மே |
|---|

# ஆத்திரமாய் ஜெபம் பண்ணு.

"அவள் அழுகிறதையும் அவளோடகூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்தார்". (யோவான் 11:33)

பொதுவாக நாம் வியாதியை சரீரப் பிரச்சனையாக மாத்திரம் பார்க்கிறோம். அதற்கான பரிகாரங்களைத் தேடுகிறோம். உண்மையில் வியாதி சரீரப் பிரச்சனை மாத்திரமல்ல. அதில் ஆவிக்குரிய பிரச்சனையும் கலந்திருக்கிறது. லாசருவின் மரணத்தை இயேசு சரீரப் பிரச்சனையாகப் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் அவர் உள்ளம் கலங்கிப்போயிருக்கும்; மாறாக அவர் "ஆவியிலே கலங்கினார்" என்று வேதம் சொல்கிறது. இந்த ஆவியின் கலக்கம் மன சஞ்சலமல்ல; இது ஆவியின் உயிர் துடிப்பு.

கடல் அலைகள் பொங்கியெழுவது போல அவருடைய எண்ண அலைகள் பொங்கியெழுந்தன. மரணத்தைக் கொண்டு வந்த சாத்தான் மீது தேவனின் ஆத்திரம் பற்றியெரிந்தது. போர்க் குதிரைபோல அவருடைய ஆவி கிளர்ந்து எழுந்தது. இந்தக் கிளர்ச்சியில் பிறந்ததுதான் அவரது துயரம்.

அடிக்கிற தகப்பனைப் பார்த்து, "அடிக்காதீர்கள் அப்பா" என்று கெஞ்சுகிற குழந்தையைப் போல "இயேசுவே என் வியாதியைப் பொறுக்க முடியவில்லையே, நீர் சுகமாக்கும்" என்று பரிதாபமாய் ஜெபம் பண்ணாதீர்கள். வியாதியைத் தந்தது இயேசு அல்ல. ஆகவே பரிதாபமாய் இயேசுவிடம் கெஞ்ச வேண்டியதில்லை. வியாதியைக் கொண்டு வந்தது சாத்தான். ஆகவே அவன்மீது நம் கோபம் பொங்கியெழுந்து இயேசு தந்த அதிகாரத்தில் நாம் ஜெபம் பண்ண வேண்டும்.

சாத்தான் மீது இயேசு கொண்ட கோபம்தான் "லாசருவே வெளியே வா" என்று உரத்த சத்தமிட வைத்தது. சகோதரனே! உன் ஜெப அறையில் போர்க் குதிரைப்போலிருக்கிறாயா? அல்லது சப்பாணிபோல் உட்கார்ந்து புலம்பிக் கொண்டிருக்கிறாயா? கடலைபோலக் கிளர்ந்து எழுந்து ஜெபிக்கிறாயா? தேங்கிக் கிடக்கும் குட்டையைப் போல அமர்ந்திருக்கிறாயா? உன் ஜெபத்தை மாற்று. தேவன் மீது விசுவாசமுள்ளவனாயிரு, அதே சமயம் சாத்தானை வைராக்கியமாய் எதிர்த்து நில். உன் கைகளை வானத்தை நோக்கி ஏறெடு. உன் கால்கள் சாத்தானை மிதிக்கட்டும்.

ஆவியில் கலக்கமில்லாமல் ஜெபம் பண்ணாதே. இந்தக் கலக்கம் பயமல்ல, திகைப்பல்ல, சாத்தானுக்கு விரோதமான ஆத்திரமே. இயேசு கிறிஸ்து வியாதியை சாத்தானின் படையெடுப்பாகவே கருதி அவனுக்கு எதிராக நின்றார். ஆகவே அவர் வெற்றி பெற்றார். மரணக் கண்ணிகளைத் தகர்த்தார். நற்செய்தியாளர் எ.லேக் என்பவர் அவருடைய மனைவியின் மரணப் படுக்கையில் பெரிய சத்தமிட்டுக் கூறினார். "என் மனைவி மரிக்கவே கூடாது. அதை நான் சம்மதிக்கவே மாட்டேன். அந்த வியாதியையும் அது கொண்டு வரும் மரணத்தையும் நான் வெறுக்கிறேன், எதிர்க்கிறேன்" என்ற வைராக்கியத்தில் ஜெபித்தார்.

**கொடிய விலங்குக்குப் பயப்படுவதுபோல் வியாதிக்குப் பயப்படாதே; பகைவனைச் சந்திப்பதுபோல் ஆத்திரமாய்ப் போ.**

| 12<br>மே |
|---|

# எதிர் சிந்தனை

"அதற்கு சீஷர்கள்; ரபீ, இப்பொழுது தான் யூதர் உம்மைக் கல்லெறியத் தேடினார்களே, மறுபடியும் நீர் அவ்விடத்திற்குப் போகலாமா என்றார்கள்." (யோவான் 11:8)

சிந்தனையைவிட எதிர்சிந்தனை மிகவும் வலிமையானது. போகலாம் என்ற எண்ணத்தை, போகக் கூடாது. போக வேண்டாம் என்ற எதிர் எண்ணம் வெகு எளிதில் வென்றுவிடுகிறது. ஆகையால் மனிதன் செயற்படாமற்போகிறான், எதிர்சிந்தனை பெரும்பாலும் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துகிறது.

இயேசு கிறிஸ்து யூதேயாவிற்குப் போகலாம் என்று தன்னுடைய சீஷர்களை அழைக்கும் பொழுது, ஆண்டவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதை விட்டு விட்டு, இயேசுவுக்கே ஆலோசனைக் கூறும்படியாக எதிர்சிந்தனையில் சீஷர்கள் இருந்தனர்.

"இப்பொழுது தான் யூதர் உம்மைக் கல்லெறியத் தேடினார்களே" என்று அவர்கள் மறுப்பு சொல்கிறார்கள். இப்பொழுது தானே என்று அவர்கள் குறிப்பிட்ட அந்த நிகழ்வு உண்மையென்றாலும், அது இப்பொழுது என்று சொல்லும்படி சமீபத்தில் நடைபெற்ற ஓர் சம்பவம் அல்ல. எத்தனையோ சம்பவங்கள் இந்தக் கல்லெறிய முற்பட்ட சம்பவத்திற்குப் பிறகு நடந்தாலும், அவையெல்லாம் சீஷர்களின் நினைவை விட்டு நீங்கிப்போயின. ஆனால் இந்தத் தீய நிகழ்வு மட்டும் மனதில் நிலைத்து நின்றுவிட்டது. ஆம்! மனிதனின் இருதயம் தீய நிகழ்வுகளின் நினைவுப் பெட்டகமாக இருக்கிறது. கர்த்தர் கொடுத்த அனேக நன்மைகளை இருதயம் மறந்துவிடும். ஆனால் கர்த்தர் எதையாவது கொடுக்க மறுத்தால், அவர் தராததையே மனம் எண்ணிக் கொண்டிருக்கும். இது எதிர்சிந்தனைக்கு வித்து. இந்த வித்தை நம் மனதினின்று எடுத்து எறிந்துவிட வேண்டும்.

'போவோம் வாருங்கள்' என்று இயேசு சொன்னவுடன். 'ஆம் போகலாம்' என்றுதானே அவர்கள் பதில் சொல்லியிருக்க வேண்டும் அவ்விடத்திற்குப் போகலாமா என்ற எதிர் கேள்வி அர்த்தமற்றது, தேவையற்றது. நம் வாழ்க்கையிலும் வேதம் தரும் ஆலோசனையைத் தள்ளிவிட்டு, நம் அனுபவம், நம் மூளை தரும் பல யோசனைகளை நாம் ஏற்றுக்கொண்டால், நாம் எதிர்சிந்தனையில் மாட்டிக்கொள்வோம்.

சிந்தனை நல்லது தான், ஆனால் எதிர்சிந்தனை நல்லதல்ல. வாழ்க்கைப் படகு கடலில் செல்ல, காற்று அவசியம், ஆனால் எதிர்காற்று பிரயாணத்தைத் தடைசெய்யும், ஆகவே சிந்தனையில் எச்சரிக்கையாயிரு.

**ஆவியானவரின் குரலுக்கு எதிரானக் குரல்,**
**நம் உள்ளத்தில் கேட்குமெனில், அதற்கு செவிசாய்க்காதே.**

**13**
**மே**

# ஆவிக்குரிய போஜனம்

"உன் பற்கள், மயிர் கத்தரிக்கப்பட்டபின் குளிப்பாட்டப்பட்டுக் கரையேறுகிறவைகளும், ஒன்றாகிலும் மலடாயிராமல் எல்லாம் இரட்டைக்குட்டியீன்றவைகளுமான ஆட்டுமந்தையைப்போலிருக்கிறது". (உன் 4:2)

உன்னதப்பாட்டின் பல வசனங்கள் உடலழகை வர்ணிப்பதுபோல் காணப்படுகின்றன. ஆனால் அவை ஆழமான ஆவிக்குரிய அர்த்தமுள்ளவை. பற்களின் அழகை கூறும் இவ்வசனம் புற அழகை வெளிப்படுத்தாமல் பற்களின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. உணவை சரியாய் எடுத்துக் கொள்வதற்காகவே பற்கள் அமைந்திருக்கின்றன. நம்மடைய ஆவிக்குரிய உணவு தேவசித்தம் செய்வது. "என் பிதாவின் சித்தத்தைச் செய்வதே என் போஜனம்" என்று இயேசு சொல்லியிருக்கிறார். பிதாவின் சித்தம் அவருடைய வார்த்தையில் அடங்கியிருக்கிறது. "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்" (ஏரே 15:16) என்று எரேமியா கூறுகிறான். சரியான வார்த்தைகளை சரியான சூழ்நிலையில் எடுத்துக் கொள்வதுதான் ஆவிக்குரிய பற்களின் பணி. பற்களுக்குக்கிடையே சிக்கிக்கொள்ளும் கல் போன்ற வேண்டாதவற்றை பற்கள் உடனே அறிந்து தள்ளும்.

வேதத்திற்குப் பொருந்தாத ஆவியானவரால் அங்கீகரிக்கப்படாத சில வேத விளக்கங்களை ஆவிக்குரிய பற்கள் தள்ளிவிடும். ஆகவே ஆரோக்கியமான உபதேசங்களையே ஆகாரமாய் எடுத்துக்கொள்ள பற்கள் உதவுகின்றன. கட்டுக்கதைகளைப் பிரசங்கம் பண்ணும் இந்த நாட்களில் சத்தியமல்லாதவற்றைத் தள்ளும் பற்கள் தேவை. எவ்வளவு தவறான உபதேசங்களாயிருந்தாலும் அவைகள் பற்களைக் கடந்து போக முடியாது. பற்கள் அவைகளை அடையாளங் கண்டு தடுத்து நிறுத்தும். அவைகளை வெளியே தள்ளும்.

பற்களுக்கு இரண்டு சிலாக்கியங்கள் உண்டு. பற்களுக்கு பலமுண்டு அவைகளுக்கு ஒழுங்கான வரிசையுண்டு. எவ்வளவு கடினமான உபதேசமாயிருந்தாலும் அவைகளை ஏற்றுக் கொள்வதே அந்த பலம். 'இதை யார் ஏற்றுக் கொள்வார்கள் இது கடினமான உபதேசம்' (யோவான 6:60) என்று பலர் அன்று இயேசுவை விட்டு விலகிப் போனார்கள். இவர்கள் பலவீனமான பற்களுடையவர்கள். பற்கள் ஒழுங்கான வரிசையிலிருக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கையில் ஓர் ஒழுங்கு வேண்டும். ஜெபம், வேதவாசிப்பு, தியானம், ஊழியம் இவையெல்லாம் கிறிஸ்தவ ஜீவியத்திலிருப்பதே ஒழுங்கு. இந்த ஒழுங்கே ஆவிக்குரிய வரிசை.

**நல்ல வரிசைகள் அமைந்துள்ள**
**பலமான பற்களே முகத்திற்கு அழகு.**

**14**
**மே**

# இடமும் தெரியாது, வழியும் தெரியாது.

"நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார். தோமா அவரை நோக்கி, ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான்." (யோவான் 14:4,5)

நான் போகிற இடத்தையும், வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்று இயேசு சொன்னவுடன், தோமா எந்தவொரு ஆழமானச் சிந்தனையுமில்லாமல், இடமும் தெரியாது, வழியும் தெரியாது என்கிறான்.

'இயேசுதான் வழி' என்பதை தோமா அறியாமல், பிதாவைத் தங்களுக்குக் காட்டும்படி கேட்கிறான். "பிதாவை எங்களுக்குக் காட்டும் அது எங்களுக்குப் போதும்" என்று தோமா இயேசுவிடம் தர்க்கம் செய்கிறான். இயேசுவே நீர் யார் என்பது அல்ல எங்களுக்கு வேண்டியது. இயேசு யாராகவும் இருக்கட்டும், தங்களுக்குப் பிதாவை இயேசு காட்ட வேண்டும் என்று தோமா பிடிவாதமாக இருக்கிறான்.

சத்தியத்தை அறிந்துக் கொள்ள தோமாவிற்கு விருப்பம் இல்லை. ஆகவே எதிர் கேள்வி கேட்கிறான். தெரியாது என்பது உண்மையில் தோமாவின் பதிலாக இருந்தால், தெரியாததைத் தெரிந்துக்கொள்ள முயற்சிக்க வேண்டுமல்லவா? மாறாக, "இது போதும்" உமது வெளிப்பாடு தேவையில்லை என்பது தோமாவின் மிகப் பெரிய எதிர் சிந்தனை அல்லவா?

சத்தியத்தை அறியும் விருப்பம் நமக்கு இல்லையாதலால் நாம் மனம்போல கேள்விகளைக் கேட்டு கற்றுக்கொண்ட சத்தியத்தை தர்க்க சாஸ்திரமாக மாற்றுகிறோம். இது நல்லதல்ல! ஞானம் போல் காணப்படும் நமது தர்க்கங்கள், நம்மை அறியாமைச் சிறையில் தள்ளிவிடும். ஆகவே சத்தியத்தை வாஞ்சி. அதனை எதிர்த்து கேள்வி கேட்காதே! யூதாஸை ஏன் தெரிந்தெடுத்தார்? பிசாசை ஏன் உடனே அழிக்கவில்லை? என்ற கேள்விகள் சத்தியத்தை விரும்பாத இதயத்திலிருந்து கிளம்பும் வீண் கேள்விகள்.

"பிதாவை எங்களுக்குக் காண்பியும்" என்பது சத்திய வாஞ்சை அல்ல. சத்தியத்தின் வெளிப்பாடான இயேசுவும், பிதாவும் ஒன்றாய் இருக்கிறார்கள் என்பதற்கு விரோதமான அவிசுவாசச் சிந்தனையின் ஆரம்பம். சத்தியம் நமக்கு விளங்காவிட்டாலும், நாம் விசுவாசிக்க வேண்டும். ஆதாம், ஏவாள் தோற்றத்தை விளங்கிக்கொள்ள முடியுமா? இயேசுவின் பிறப்பை விளங்கிக்கொள்ள முடியுமா?

**"காட்டும்" என்ற விண்ணப்பத்தைத் தள்ளிவிட்டு,**
**"காண்கிறேன்" என்ற விசுவாசத்திற்கு வா!**

15

மே

# தலைவனா? தெய்வமா?

"மோசே மலையிலிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங்கூடி அவனை நோக்கி எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம், ஆதலால் நீர் எழுந்து எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும் என்றார்கள்."(யாத் 32:1)

எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்திய மோசே ஜனங்களுக்கு ஆவிக்குரிய தலைவன். அவன் வரத் தாமதித்தாலோ அல்லது அவனுக்கு என்ன நடந்தது என்று தெரியா விட்டாலோ, அவனுக்குப் பதிலாக வேறொருவரைத் தேட வேண்டிய அவசியம் ஜனங்களுக்கு உண்டு என்பதில் மாற்றுக் கருத்தே கிடையாது. ஆனால் பதிலாளாக யாரைத் தேட வேண்டும்? மோசே அவர்களுக்கு ஓர் தலைவன். அவனுக்குப் பதிலாளாக ஓர் தலைவனைத் தான் தேட வேண்டும். ஆனால் அவர்கள் தலைவனை அல்ல, முன் செல்லும் வேறு தெய்வங்களைத் தேடினார்கள்.

வேறு தலைவனைத் தேடியிருந்தால், அது நியாயமானக் கோரிக்கை. ஆனால் வேறு தெய்வங்களைத் தேடியது எந்த விதத்தில் நியாயம்? ஏன் அவர்கள் வேறு தெய்வத்தை நாடினார்கள்? மோசேயை ஓர் தலைவனாக அல்ல, கடவுளாகவே இஸ்ரவேல் ஜனங்கள் எண்ண ஆரம்பித்தனர். இது மிகப் பெரிய தவறு. ஓர் தலைவன் எவ்வளவு பெரியவனாக இருந்தாலும், அவனைக் கடவுளுக்குச் சமமாய் எண்ணுவது மதிகேடு. இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசே விக்கிரகமானான். அவன் இல்லாத சமயத்தில் ஜனங்கள் வேறு விக்கிரகங்களைத் தேடினார்கள்.

மனிதனைத் தெய்வம் என்ற சொல்வது மிகப்பெரிய குற்றம், மனசாட்சி கெட்டவர்கள், தங்கள் சுயலாபத்திற்காக தலைவர்களை இதய தெய்வங்கள் என்றே அழைப்பார்கள். இது தேவனது பார்வையில் மிகப்பெரிய குற்றம். மோசேயைத் தெய்வம் என்று கருதியது முதற்தவறு. அவன் இல்லாதவேளையில் எகிப்தின் விக்கிரகத்தைக் தேடியது இரண்டாவது குற்றம். எகிப்தின் விக்கிரகத்திற்கு இஸ்ரவேல் தெய்வத்தின் சாயலைக் கொடுத்தனர். இது மிகப்பெரிய வஞ்சகம்.

கிறிஸ்தவப் போர்வையில் அஞ்ஞான வழிபாடுகளுக்கு இடம் கொடுப்பது மிகப்பெரிய ஆபத்தை உண்டாக்கும். அவர்கள் முன்னே தெய்வமாக நின்றது பொன் கன்றுக்குட்டி. ஆனால் அதிகாலையில் எழுந்து அதற்குச் சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானப்பலிகளைச் செலுத்தினார்கள். ஆராதனை முறை ஆவிக்குரிய முறை, வழிபடுவதோ விக்கிரகத்தை! இன்றும் கிறிஸ்தவ சாயலில் பொய்மை ஆராதனை. வேதப் புத்தகத்தை திறந்துவைத்தே, கட்டுக்கதைகளின் பிரசங்கம். சத்தியம் என்ற பெயரில் பொய் உரைகள். ஆராதனை என்ற பெயரில் அருவருப்புகள். கடவுளின் இடத்தை எந்தத் தலைவனுக்கும் கொடுக்காதே. கொடுத்தால், சீக்கிரம் நீ விக்கிரக ஆராதனைக்காரனாக மாறிவிடுவாய்.

**தலைவனுக்குப் பதிலாக வேறு தலைவன் இருக்கலாம். கடவுளுக்குப் பதிலாக வேறு கடவுளா? இருக்கவே முடியாதே.**

**16**
**மே**

# அன்பு?

"இயேசு மார்த்தாளிடத்திலும் அவள் சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார். அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்டபொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார்."(யோ11:5-6)

லாசரு மிகவும் வியாதிப்பட்டிருக்கிறான் என்று இயேசு கேள்விப்படுகிறார். உடனே அவர் லாசருவைத் தேடி பயணிப்பார் என்பது நமது எதிர்பார்ப்பும், நம்பிக்கையும். ஆனால் மாறாக இயேசு தான் இருந்த இடத்தில் மேலும் இரண்டு நாள்கள் தங்கிவிட்டார். அப்படி அவர் தங்குவதற்கான காரணத்தை வேதம் சுட்டிக் காட்டுவது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

என்ன காரணம் தெரியுமா? இயேசு மார்த்தாளிடத்திலும் அவருடைய சகோதரியினிடத்திலும், லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார் என்பதே தாமதத்திற்குக் காரணம், அன்பாயிருந்தார்; உடனே புறப்பட்டார் என்றால் அதனை நம்மால் விளங்கிக்கொள்ள முடியும். ஆங்கில வேதம் சொல்கிறது "Therefore when He heard that he was sick. He stayed two days longer" (Jn 11:6). அவர் அவர்கள் மீது அன்புவைத்தார்; அதனால் இரண்டுநாள் முந்திப் புறப்பட்டார் என்று வேதம் சொல்லியிருந்தால், நம்மால் அதனைப் புரிந்துக்கொள்ள முடியும். ஆகையால் அவர் இரண்டுநாள் பிந்திப் புறப்பட்டார் என்று வேதம் சொல்லும் அன்பை நம்மால் புரிந்துக்கொள்ளவே முடியவில்லை.

இயேசு நம்மை மிகவும் நேசிப்பதினால், சில சமயங்களில் அவர் நம் ஜெபத்திற்குத் தாமதமாகவே பதில் தருகிறார். இந்த நேசத்தை நம்மால் எளிதில் புரிந்துக்கொள்ளவே முடியவில்லை. இயேசு நம்மீது கோபமாக இருக்கிறார்; அலட்சியமாகவே இருக்கிறார் என்ற தவறான முடிவுக்கு மிக எளிதில் வந்துவிடுவோம். இது எத்தனை பரிதாபம்? எதையும் உடனே செய்வது அன்பு என்று நாம் விளங்கிக்கொள்கிறோம். எதையும் நிதானமாக ஆனால் நேர்த்தியாய்ச் செய்ய வேண்டும் என்பது கர்த்தரின் அன்பின் வாஞ்சை.

சகோதரனே! சகோதரியே! கர்த்தர் தாமதப்பட்டால், அந்தத் தாமதம் நம்மீது அவர் கொண்டிருக்கும் அன்பின் நிமித்தமே என்பதை நாம் நம்ப வேண்டும். விளங்கிக்கொள்ள முடியாத இந்த மாபெரும் அன்பை நாம் விசுவாசிக்கப் பழக வேண்டும் பதறக்கூடாது. தேவ அன்பு தேவ மகிமையை வெளிப்படுத்தும் என்று பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்.

**அன்பு என்பது அவசரத்தில் அள்ளித் தெளிக்கும் கோலம் அல்ல, நிதானமாய் உருவாகும் அழகானச் சித்திரம்.**

17
மே

# கல்லறையைத் திறக்கும் தேவ வல்லமை

"இயேசு: கல்லை எடுத்துப்போடுங்கள் என்றார். மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரை நோக்கி; ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலு நாளாயிற்றே என்றாள்."(யோ 11:39)

லாசருவின் கல்லறை முன்பு இயேசு நிற்கிறார். எல்லாமே முடிந்துவிட்டது. இனி செய்வதற்கென்று எதுவுமே இல்லை. மருத்துவம் இனி தான் செய்வதற்கு ஒன்றுமே இல்லை என்று ஒதுங்கிவிட்டது. மனித ஒத்தாசைகள் அமைதியாகிவிட்டன. இந்தச் சூழ்நிலையில், கல்லறை வாசலில் வைக்கப்பட்ட கல்லைப் புரட்டித் தள்ளுங்கள் என்று இயேசு சொல்கிறார்.

"நாலு நாளாயிற்றே..."என்று எதிர்ப்பு குரல் எழுப்புகிறாள் மார்த்தாள். இது நியாயமானக்குரல்! இது உலகத்தின் குரல். ஆனால் லாசரு உயிர்த்தெழுவான் என்று கர்த்தர் கூறிய பிறகு, இந்த எதிர்ப்புக்குரல் நியாயமானக்குரலல்ல; இது அவிசுவாசத்தின் குரல். லாசரு உயிரோடு எழுந்திருப்பான் என்பதை மரியாள் பொதுவான விசுவாச அறிக்கையாக எடுத்தாளேயன்றி, தனிப்பட்ட வாக்குத்தத்தமாக எடுக்கத் தவறிவிட்டாள், இதே தவறை நாமும் செய்கிறோம். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு லாசரு உபதேசத்தின்படி எழுந்திருப்பான் என்பதை மார்த்தாளினால் விசுவாசிக்க முடிகிறது. ஆனால் நான்கு நாளைக்குப் பிறகு அவன் வாக்குத்தத்தத்தின்படி எழுந்திருப்பான் என்பதை அவளால் விசுவாசிக்க முடியவில்லை.

நாமும் வாக்குத்தத்த வசனத்தை உபதேசமாகவும், உபதேச வசனத்தை வாக்குத்தத்தமாகவும் எடுத்துக் கொள்கிறோம். இது தவறு. கல்லைப் புரட்டிப்போடுங்கள் என்பது உபதேசம் அல்ல. உபதேசமாக இருந்தால் எல்லா கல்லறைகளிலும் கல்லைப் புரட்டிப்போட வேண்டியதிருக்கும். இது தனிப்பட்ட – லாசருவின் கல்லறைக்கு மாத்திரமே தேவன் கொடுத்த வாக்குத்தத்தம். இந்த வாக்குத்தத்தத்தை அறிவு ஏற்றுக் கொள்ளாது. மனிதனின் அனுபவமும் இதை எதிர்த்தே நிற்கும். உலக ஞானத்திற்கு அது பைத்தியமாகவே தோன்றும். ஆனால் உண்மையில் தேவ பெலனாக விளங்கும். இயற்கைக்கு மாறாக சத்தம் கேட்டால், உடனே உன் காதை விலக்கிக் கொள்ளாதே. சில சமயங்களில் கர்த்தர் இயற்கைக்கு ஒத்துப்போகமாட்டார். கர்த்தர் இயற்கை விதிகளை மீறுகிறவர் அல்ல. இயற்கைக்கு மேலாகவும் கர்த்தர் கிரியை செய்ய வல்லவர்.

God never acts unnaturally but supernaturally. இயற்கைச் சட்டங்கள் தேவனுக்கே கட்டுப்படும். ஆகவேதான் லாசருவின் உயிர்த்தெழுதல் இயற்கையின் மீது தனக்கு அதிகாரம் உண்டு என்று வெளிப்படையாகக் காட்டியதே!

**மரித்தான், அடக்கம்பண்ணப்பட்டான்,**
**இது உலக நடவடிக்கை; மரித்தான் உயிரோடு**
**எழுந்தான் என்பது தேவனின் நடவடிக்கை.**

18
மே

# அடைக்கலமா? ஆபத்தா?

"தாவீதும் அவன் மனுஷரும் அந்தப் பட்டணத்திற்கு வந்தபோது, இதோ, அது அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டது என்றும், தங்கள் மனைவிகளும் தங்கள் குமாரரும் தங்கள் குமாரத்திகளும் சிறைப்பிடித்துக் கொண்டுபோகப்பட்டார்கள் என்றும் கண்டார்கள்." (1 சாமு 30:3)

தாவீதின் அடைக்கலப் பட்டணமாகிய சிக்லாக் எரிகிறது. அவனது மனைவிகள் சிறைப் பிடிக்கப்பட்டனர். தாவீதோடிருந்தவர்கள் அனைவரும் துக்கத்திலும், கண்ணீரிலும் ஜனங்கள் தங்களுக்கு நேர்ந்த நஷ்டத்தையும், கஷ்டத்யைும் எண்ணி, தங்கள் தலைவனாகிய தாவீதுக்கு விரோதமாக எழும்பினார்கள். தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்.

ஏன் தாவீதுக்கு இப்படி நேர்ந்தது? இந்த நிகழ்வு தாவீதுக்கு ஓர் பாடத்தைக் கற்றுக் கொடுத்தது. அதாவது கர்த்தருக்கு வெளியே புகலிடம் தேடாதே. அப்படி தேடினால், புகலிடமே, போர்க்களமாக மாறிவிடும்.

தாவீது சவுலுக்குப் பயந்து, பெலிஸ்தியரிடம் அடைக்கலம் தேடினான். பெலிஸ்தியரின் தவறான உறவு தாவீதுக்குக் கொடுத்த பரிசுதான் சிக்லாக் பட்டணம். அந்தப் பட்டணம் தவறான ஓர் தெரிந்தெடுப்பு. பெலிஸ்திய உறவினின்று தாவீதைப் பிரித்தெடுக்க, கர்த்தர் இந்தத் தீ விபத்தை, தாவீதின் வாழ்க்கையில் அனுமதித்தார்.

கர்த்தரைத் தனது அரணும் கோட்டையுமாக நம்பின தாவீது பெலிஸ்திய நன்கொடையான சிக்லாக்கை, தன் கோட்டையாக எண்ணினான். அந்தச் சிக்லாக் எரிய ஆரம்பித்தது. தாவீதின் உடமைகள் எரிந்தன; உறவுகள் முறிந்தன. ஏன்? தாவீதை சிக்லாக் என்ற வசதிப் பகுதியை விட்டு வெளியே கொண்டு வர. இதைத் தவிர கர்த்தருக்கு வேறு வழியே இல்லை.

கர்த்தர் நம்மோடு இருந்தால், சிலந்தி வலையும் கோட்டை சுவராகும். கர்த்தர் நம்கூட இல்லாவிட்டால், இரும்புக் கோட்டையும், சிலந்தி வலைபோல் பலவீனமடைந்து விடும். தந்திரம் தெரிந்தெடுத்தது சிக்லாக்! தேவ ஞானம் அதை எதிர்த்து சாம்பல் மேடாக்கியது.

தேவனையும், நம்மையும் பிரிக்கும் எந்தச் சக்தியின் மீதும் தேவ தண்டனையான அக்கினி இறங்கும். ஆகவே ஆபத்து என்று பயந்து தேவகிருபையின் எல்லையைத் தாண்டாதே.

**பெத்லகேமின் பஞ்சத்திற்குப் பயந்து,**
**மோவாபிற்குள் நீ நுழைந்தால், அது கல்லறையாய் மாறிவிடும்.**

19
மே

# தேவசமுகத்தைத் தேடு

"தாவீது அகிமெலேக்கின் குமாரனாகிய அபியத்தார் என்னும் ஆசாரியனை நோக்கி; ஏபோத்தை என்னிடத்தில் கொண்டு வா என்றான்; அபியத்தார் ஏபோத்தைத் தாவீதினிடத்தில் கொண்டுவந்தான். தாவீது கர்த்தரை நோக்கி; நான் அந்தத் தண்டைப் பின்தொடரவேண்டுமா? அதைப் பிடிப்பேனா என்று கேட்டான். அதற்கு அவர்; அதைப் பின்தொடர்; அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக்கொள்வாய் என்றார்". (1சாமு30:7-8)

சிக்லாக் பட்டணம் பாதுகாப்பான பட்டணமென்று அறிந்து, தன் உடமைகளையும், உறவுகளையும் தாவீது அங்கே விட்டுச் சென்றான். எந்தவிதமான ஆபத்தும், பொல்லாப்பும் நேரிடாது என்ற மிகுந்த நம்பிக்கையில் சிக்லாக் பட்டணத்தில் தன் குடும்பத்தையே விட்டுச் சென்றான். ஆனால் தாவீது மறுபடியும் சிக்லாக்குக்கு வந்த பொழுது, அவன் கண்ட காட்சி மிகவும் வித்தியாசமானது; அதிர்ச்சி தரக்கூடியது. ஆம்! அந்தப் பட்டணம் முற்றிலும் கொள்ளையடிக்கப்பட்டு விட்டது. தாவீதின் உடைமைகள் அனைத்தையும் அமலேக்கியர் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர். தாவீதின் வீடு வெறுமையாயிற்று. தாவீதின் குடும்பமும் சிறைப்பிடிக்கப்பட்டது. நகரம் அக்கினிக்கு இரையாயிற்று. ஏன்? தாவீதின் தவறான கணிப்பு.

எல்லாவற்றையும் சிக்லாக்கில் விட்டுச் சென்ற தாவீது, முக்கியமான ஒன்றைத் தன்னோடு வைத்துக் கொண்டான். அது என்ன? அபியத்தார் என்னும் ஆசாரியனின் தொடர்பை. ஆம்! ஆசாரியனை அவன் சிக்லாக்கில் விட்டுச் சென்றிருந்தால், ஆசாரியனும் அமலேக்கியரிடம் சிறைப்பட்டுப் போயிருப்பான். தாவீது ஞானமாக அபியத்தாரின் உறவைத் தன்னோடு தக்கவைத்துக் கொண்டான். ஆகவே நெருக்கமான இந்த நேரத்தில், ஆசாரியனின் உதவியோடு கர்த்தரின் சமுகத்தைத் தேடினான். தேவசமுகத்திலிருந்து ஓர் பதிலைப்பெற ஆசாரியன் தேவை. அந்தத் தேவையை சந்திக்க அபியத்தார் தாவீதோடு இருந்தான். "நீ சகலத்தையும் திருப்பிக்கொள்வாய்" என்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றான்.

சகோதரனே! எந்தப் பொருளை, பொக்கிஷத்தை, உறவை நீ இழந்து போனாலும் தேவசமுகத்தை இழந்து விடாதே! தேவனோடுள்ள உறவை இழந்துவிடாதே, வேதப் புத்தகம் உன் கரங்களை விட்டு நீங்கிப் போகக்கூடாது. எல்லா நெருக்கங்களிலும், நம்மோடு நெருங்கியிருப்பது வேதப் புத்தகமே. நம் நிலையைக் கண்டு சுற்றமும், சூழமும் அமைதியாயிருக்கலாம். சூழ்நிலை மிகவும் ஆழமாக மௌனம் சாதிக்கலாம். எந்தச் சூழ்நிலையிலும், நம்மோடு பேசுவது வேதப் புத்தகம் மாத்திரமே.

**வேதப் புத்தகம் உனக்குத் தூரமானால்,**
**தனிமை உனக்குச் சமீபமாகும்.**

20
மே

# சமையல் அறையா? ஜெப அறையா?

"மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து அவரிடத்தில் வந்து; ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டுவந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள்". (லூக் 10: 40)

இயேசுவின் மேலுள்ள அன்பினால் கடினமாக மார்த்தாள் உழைத்தாள். அதிக உழைப்பு சரீரத்தைப் பாதிக்கும். ஆகவே மிகவும் களைப்படைந்தாள். சரீரம் பாதிக்கப்பட்டவுடன், மனமும் பாதிக்கப்படுகிறது. ஆரோக்கியமான உடலில் ஆராக்கியமான மனதும் உண்டு. மனச்சோர்வு மார்த்தாளைத் தடுமாற வைத்தது. ஆகவே இயேசுவிடம் மார்த்தாள் ஆத்திரமாகவே பேசுகிறாள். "நான் வருத்தப்படுவது உமக்குக் கவலையில்லையா?" என்று கோபத்துடன் இயேசுவை கேட்கிறாள். வீட்டிற்கு வந்த விருந்தாளியை இப்படி அவமதிக்கிறோமே என்ற கவலைகூட மார்த்தாளுக்கு இல்லை. கட்டுப்பாட்டை இழந்த சுபாவம் மார்த்தாளின் சுபாவம், மார்த்தாளின் செயல், இயேசுவுக்கே வருத்தமாக இருந்தது.

சூழ்நிலைகளின் நெருக்கத்தில் நாம் பதறிப் பேசக்கூடாது, " தன் ஆவியை அடக்காதவன் மதிலிழந்த பட்டணம் போலிருப்பான்" என்று வேதம் சொல்கிறது. கட்டுப்பாடில்லாமல் பேசுகிறவள், பாதுகாப்பை இழந்து, உலக அரங்கில் பரிதாபமாக நிற்கிறாள். அளவுக்கு மிஞ்சி வேலை செய்யாதீர்கள். மிகுந்த வேலை ஜெப வேளையைப் பட்சிக்கும், மனஉளைச்சலைக் கொடுக்கும். சமையலறை போராட்டக் களமாக மாறிவிடக்கூடாது.

ஜெபம் வேலைக்கு மாற்றல்ல, சமையலறைக்குப் பயந்து, ஜெப அறைக்குள் பதுங்கிவிடக் கூடாது. மரியாள் வேலைக்குப் பயந்து இயேசுவின் பாதத்தருகே அமர்ந்துவிடவில்லை. வேதம் கூறுவதைக் கவனமாய்க் கேளுங்கள்: "Mary who also sat at the feet of Jesus". "மரியாள் இயேசுவின் பாதத்தினருகேயும் உட்கார்ந்தாள்" என்று சொல்வதிலிருந்து, அவள் வேலையையும் செய்துவிட்டுத்தான் வந்திருக்கிறாள் என்று அறிகிறோம். ஆகவே மரியாள் வேலையை கடமையை ஒதுக்கிவிட்டு, வசனம் கேட்க உட்காரவில்லை. மார்த்தாள் இயேசுவிற்கு விருந்து கொடுப்பதில் எடுத்த ஆர்வம், கரிசனை இவற்றை இயேசு அவளுக்குத் தர விரும்பும் ஆவிக்குரிய விருந்தில் காட்டவில்லை. மாறாக ஜெப நேரத்தையும் சமையலறைக்குள்ளேயே செலவழித்தாள். ஊழியம் அவசியம், ஆனால் ஜெபிக்காமல், வேத வசனம் வாசிக்காமல், முறையான தியானம் இல்லாமல் ஊழியம் செய்யாதீர்கள். குடும்பக் கடமைகளை அலட்சியம் பண்ணிவிட்டு ஊழியப் பாதையில் ஓடாதீர்கள்.

சமையலறையா? ஜெப அறையா? என்பதல்ல நம் பிரச்சனை. இரண்டுமே அவசியம் தான். எங்கு எப்பொழுது இருக்க வேண்டும் என்பதே பிரச்சனை. மார்த்தாளுக்குப் பற்பல வேலைகள். இயேசு சொல்கிறார் "தேவையானது ஒன்றே" அது என்ன?

**பசிக்கு ஆகாரம்! விருந்து அல்ல. பாத்திரம் துலக்கப் பயந்து, வேத சாத்திரங்களில் மூழ்கி விடாதே.**

21
மே

# அறியாமையின் மன்றாட்டு

"நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும், உங்களால் கூடுமா என்றார். (மாற் 10:38)

யாக்கோபும், யோவானும் ஆண்டவரின் ராஜ்ஜியத்தில் உயர்ந்த பதவிகளை வாஞ்சித்தனர். இயேசு உலகப் பிரகாரமான அரசியல் பின்னணியில் ஓர் ஆட்சியை உருவாக்கப் போகிறார். அந்த அரசில் மிகப் பெரிய இரண்டு பதவிகள் தங்களுக்கு வேண்டும் என்ற கோரிக்கையை இவர்கள் இயேசுவிடம் வைத்தார்கள்.

இரட்சகராய் வந்திருக்கும் தன்னுடைய வேலை அல்ல அது என்றும், அது பிதாவின் சித்தம், விருப்பம் என்றும் இரட்சகர் இயேசு தெளிவாய்க் குறிப்பிட்டார். அதாவது அவர்களது மன்றாட்டு மிகவும் தவறானது என்பதை இயேசு அவர்களுக்குத் தெரிவித்தார். நாம் மிகவும் மனோ வாஞ்சையுடனும், நம்பிக்கையோடும் சில மன்றாட்டுகளை ஏறெடுக்கலாம். ஆனால் அவைகளுக்குத் தொடர்ந்துப் பதில் வராமல் போகலாம். காரணம் என்ன? அவை தேவ சித்தத்திற்கு மாறாக இருப்பதினால். நம்முடைய மிகுந்த மனபாரம், கண்ணீர் நம்முடைய ஜெபங்களை நியாயமானவைகளாக மாற்றாது.

விசுவாசத்தோடு கேட்டோம், கண்ணீரோடு மன்றாடினோம், கர்த்தர் பதில் தரவில்லை என்று அங்கலாய்க்கிறோம். தேவசித்தத்தின்படி கேட்டோமா? தேவசித்தத்தின்படி எதையாவது கேட்டால், அதைப் பெற்றுக்கொள்வோம் என்ற தைரியம் நம் ஆத்துமாவில் உண்டாயிருக்குமே? அப்படி தைரியம் உண்டாயிற்றா? இந்த அனுபவங்கள் இல்லாமலே, நாம் ஜெபிப்பதில் என்ன பயன்? மேலும் நாம் விலை கொடுக்காமல், ஒன்றைப் பெற முயற்சிப்பது சரி அல்ல. தேவன் தருவது எல்லாமே இலவசமே. எல்லாமே கிருபை, என்றாலும் நமக்கு சில கடமைகள் உண்டு.

இரட்சிப்பு இலவசம், அதனைப் பெற நமது சொந்த, பந்தம் என்ற உறவுகளை நாம் முறிக்க வேண்டிய மிகப் பெரிய விலையைக் கொடுக்க வேண்டியதிருக்குமே. யாக்கோபையும், யோவானையும் பார்த்து, "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா?" என்று இயேசு கேட்டார். இயேசு படப்போகிற பாடுகள் அவருடைய பாத்திரமும், அவருடைய மரணம் அவருடைய ஸ்நானமாகவும் இருக்கின்றன. ஆகவே தேவனிடத்தில் சிலாக்கியங்களைப் பெற விரும்புகிறவர்கள், பாடுகள் உபத்திரவங்களுக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும்.

அர்ப்பணமில்லா வாழ்க்கைக்கு அற்புதம் செய்யும் வல்லமையைத் தேவன் தர மாட்டார். ஆத்துமாவைக் குறித்து கண்ணீரில்லா ஒருவனுக்கு ஊழிய அழைப்பை தேவன் தர மாட்டார்.

**கொடுக்க மனதற்றவனுக்கு வாக்கும் உரிமையும் கிடையாது**

22
மே

# அறியாமை

"என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப்பட்டு போகிறார்கள்; அவர்களில் கனமுள்ளவர்கள் பட்டினியினால் தொய்ந்துபோகிறார்கள்; அவர்களுடைய திரளான கூட்டத்தார் தாகத்தால் நாவறண்டுபோகிறார்கள்."(ஏசா 5:13)

உலக மக்கள் அறியாமையினால் பிரச்சனைகளில் சிறைப்பட்டுப் போகிறார்கள். அதிலும், மிகப் பெரிய அறியாமை, இயேசுவை இரட்சகர் என்று அறியாததுதான். இந்த அறியாமையினால் கோடிக்கணக்கானோர் எரிநரகத்திற்குச் சிறைப்பட்டுப் போகிறார்கள் உலக மக்களின் நிலை இப்படியெனில், கிறிஸ்தவர்களின் நிலையும் பரிதாபமாகவே இருக்கிறது.

ஏசாயா தீர்க்கன் சொல்வது போல், "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப்பட்டுப்போகிறார்கள்." கர்த்தருடைய பிள்ளைகளின் அறியாமை எது? மருந்து எடுத்தால் சரீரம் மறுரூபமாகாது என்பது அறிவுடைமையா? நம் சரீரங்களை மறுரூபப்படுத்தும் ஆவியானவரைவிட மருந்து சக்தியுள்ளதா? மருந்து ஆவியானவரின் கிரியையைத் தடுக்க முடியுமா?

வியாதி என்னை தேவசாயலாகப் பூரணப்படுத்துகிறது என்பது அறியாமை இல்லையா? தேவசாயலை வியாதி கொண்டு வந்தால், வியாதி பரிசுத்த ஆவியின் வரமா? வியாதி ஒருபோதும் நம்மைப் பூரணமாக்காது. வியாதி நம்மைதேவனோடு நெருங்கி வாழ உதவி செய்யுமானால், இயேசு ஏன் வியாதியைச் சுகமாக்க வேண்டும். வியாதியை அப்படியே விட்டு விட வேண்டியது தானே. வியாதியை சிலுவைப் பாடுகளில் ஓர் பங்கு என்று எண்ணுவது அறியாமை. இயேசுவின் சிலுவைப் பாடுகளில் நமக்குப் பங்கே கிடையாது. நம்முடைய பாடுகள், வேதனைகள், கஷ்டங்கள் எல்லாமே சிலுவை என்று கருதக் கூடாது. இயேசுவின் நாமத்தினிமித்தம் நாம் அனுபவிக்கிற பாடுகள், நமது சிலுவையின் பாடுகள்.

இயேசு சிரித்தார் என்று வேதம் சொல்லவில்லை. ஆகவே நாமும் சிரித்து மகிழ்ந்திருக்கக் கூடாது என்பது அறியாமை. குழந்தைகளைப் பார்த்தபொழுது அவர் சிரித்திருக்க மாட்டாரா? சந்தோஷமாயிருங்கள் என்று வேதம் சொல்லவில்லையா?

தரித்திரத்தில் வாழ்வதே பக்தியான வாழ்க்கை என்பது மூடத்தனமில்லையா? பரலோக மேன்மையை இயேசு விட்டதே அவருடைய தரித்திரம். நாம் பரலோக மேன்மையை (ஐஸ்வர்யம்) அடையும்படிக்கே அவர் தரித்திரனானார். பொருளாதாரத்தில் மிகவும் கீழ்மட்ட நிலையில் பரிதாபமாக வாழ்வது கிறிஸ்துவின் நற்கீர்த்திக்கு சாட்சியான வாழ்க்கை அல்ல. ஆகவே இப்படிப்பட்ட அறியாமைச் சிறையினின்று கிறிஸ்தவர்கள் வெளியே வர வேண்டும்.

**ஞானம் என்று பெயர் பெற்ற அறியாமை விலங்குகள்
தங்க முலாம் பூசப்பட்ட அடிமைச் சின்னங்கள்.**

23
மே

# பயப்படாதே

"எலிசா மரணத்துக்கு ஏதுவான வியாதியாய்க் கிடந்தான்... எலிசா மரணமடைந்தான். அவனை அடக்கம் பண்ணினார்கள்."(2 இரா 13:14,20)

எலிசா! மாபெரும் தேவ மனிதன். எத்தனையோ அற்புதங்களைச் செய்தவன். மரித்தோரை எழுப்பினவன். தன் கடைசி நாள்களில் இந்த மாபெரும் மனிதன் வியாதிப்பட்டான். பரிசுத்தவானாகிய எலிசா வியாதியில் கிடந்தான். எப்பொழுதுமே வியாதி பாவத்தினால் தான் வருகிறது என்றும், வியாதியஸ்தர்களைப் பாவிகள் என்றும் எண்ணுவது தவறு.

கர்த்தருடைய பிள்ளையான தீமோத்தேயு வயிற்று வலியினால் கஷ்டப்படவில்லையா? எப்பாப்பிரோதீத்து வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தானே! ஆகவே பாவிகளுக்குத்தான் வியாதி வரும் என்று சாதிக்கக் கூடாது. எவருக்கும் வியாதி வரலாம். அப்படியே பரிசுத்தவானாகிய எலிசா வியாதிப்பட்டு, அவன் மரித்தேபோனான், அவன் வியாதியைக் கர்த்தர் சுகமாக்கவில்லை. பலர் எலிசாவிற்காக ஜெபித்திருக்கலாம். ஆனால் கர்த்தர் அந்த ஜெபங்களைக் கேட்டு, எலிசாவை விடுவிக்கவில்லை. மாறாக வியாதியின் கொடுமை அதிகரித்து, அவன் அந்த வியாதியிலே மரித்துப்போனான். ஏன் கர்த்தர் சுகமாக்கவில்லை? இந்தக் கேள்வியை நாம் நூறுமுறை கேட்டாலும் கர்த்தர் பதில் தரவேண்டிய அவசியமே அவருக்கில்லை. பொதுவாக, மக்கள் வியாதி வந்துதான் மரிக்கிறார்கள். மரணத்தைக் கொண்டு வரும் வியாதி, கடைசி வியாதி என்று அழைக்கப்படுகிறது.

கடைசி வியாதியை இயேசு சுகமாக்குகிறதில்லை. இந்த வியாதி மூலம் கர்த்தர் தனது பிள்ளைளைப் பரலோகத்திற்கு அழைத்துக் கொள்கிறார். ஆகவே கடைசி வியாதி என்று நாம் அறியும்பொழுது, மிகவும் தைரியம் கொண்டு கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமாக வேண்டும். பயப்படவோ, கலவரப்படவோ கூடாது.

எலிசா வேலை முடித்து, வீட்டிற்குப் போய்விட்டான். நம்முடைய வேலை முடிந்துவிட்டால், நாம் நம் பரம வீட்டிற்குப் போக ஏன் தயங்க வேண்டும்? எலிசா தயங்கவில்லையே! வேதத்தில் எந்தப் பரிசுத்தவானும், மரணத்திற்குப் பயப்படவில்லையே.

ஆகவே கடைசி வியாதி என்று நாம் நிச்சயமாய் அறிந்தால், நான் விழிக்கும்பொழுது, உமது சாயலில் திருப்தியாவேன் என்ற நம்பிக்கையில் இமைக் கதவுகளை மூடுவோம்.

**உலகைவிட்டு வெளியே செல்லும்**
**பாதைகளில் ஒன்று வியாதி.**

24
மே

# மருந்து எடுக்கலாம்

"நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்."(யாத் 15:26)

இந்த வேதப் பகுதி கீழ்ப்படிதலை வலியுறுத்திப் பேசுகிறது. வியாதியை வரவிடேன் என்பது கர்த்தரின் வாக்காக அமைந்தாலும், இந்த வசனத்தில் மிகவும் வலியுறுத்திச் சொல்லப்படுவது, கீழ்ப்படிதலே. கர்த்தரின் பிரமாணங்களுக்கு நாம் முற்றிலும் கீழ்ப்படிந்தால், கர்த்தர் வியாதியை வரப்பண்ண மாட்டார் என்ற வாக்குத்தத்தத்தை நமக்குத் தருகிறார்.

"நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" என்று கர்த்தர் சொல்வதினால் நாம் மருந்தே எடுக்க கூடாது என்று வேதம் சொல்லவில்லை. கர்த்தர் இந்த வாக்குத்தத்தத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுக்குமுன், ஓர் அற்புதம் செய்தார். அது என்னவெனில், மாராவின் தண்ணீர் குடிக்க முடியாதபடி கசப்பாக இருந்தது. அதே தண்ணீரைச் சுகமாக்க, கர்த்தர் வார்த்தையை அனுப்பவில்லை. ஒரு மரத்தை வெட்டி அதனைத் தண்ணீரில் போடும்படி கர்த்தர் கட்டளையிட்டார். தண்ணீர் மதுரமாயிற்று. வேதத்தில் சொல்லப்படும் முதற் சுகப்படுத்துதல், தண்ணீரை மதுரமாக மாற்றியதே. இந்தச் சுகத்திற்காகக் கர்த்தர் ஒரு மரத்தைப் பயன்படுத்தினார். ஆகவே நம்முடைய சுகத்திற்காக கடவுள் படைத்திருக்கும் பிற எத்தனங்களையும் பயன்படுத்தலாம்.

ஆசா மன்னன், "கர்த்தரை அல்ல, பரிகாரிகளையே தேடினான்" ஆகவே அவன் செத்துப் போனான் என்று வேதம் சொல்கிறதே என்ற ஓர் கேள்வியும் எழலாம். ஆசா செத்தது பரிகாரிகளைத் தேடினதினால் அல்ல, கர்த்தரைத் தள்ளிவிட்டபடியினால். நாம் தெளிவாய் அறிந்துக்கொள்ள வேண்டும். டாக்டர் கர்த்தருக்குப் பதிலாள் அல்ல. மருந்து ஜெபத்திற்குப் பதிலாக அல்ல. கர்த்தரைத் தள்ளிவிட்டு, மருத்துவமனையையே அடைக்கலப் பட்டணமாக எடுத்துக் கொள்ளாதே. மருந்து எடுப்பது பாவமல்ல. மருத்துவத்திற்குப் பயந்துக் கொண்டு மருந்து எடுக்காமலிருந்தால் அதுவே பாவம். மேலும் எனக்கு மருந்தே போதும், ஜெபம் வேண்டாம் என்பதும் பாவமே.

மருந்து எடுக்காதே என்று கர்த்தர் சொன்னால், நீ மருந்து எடுக்க வேண்டாம். நீயாகவே ஓர் முடிவு எடுக்காதே. எடுத்தால் நீ நினையாமலேயே வாழ்க்கை முடிந்துவிடும்.

**மருந்து கௌரவப் பிரச்சனையல்ல.**

25
மே

# திரும்பு

"அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன்" (வெளி 1:12)

பத்மு தீவில் தனித்துவிடப்பட்ட யோவானை இயேசு சந்திக்கிறார். அவருடைய சமுகத்தின் சத்தம் அவரைத் திரும்பிப் பார்க்கும்படி செய்தது. சத்தம் வந்தத் திசையை நோக்கி யோவான் திரும்பிப் பார்த்தார்.

கர்த்தரின் சத்தத்தைக் கேட்டிருக்கிறாயா? அவருடைய குரலைக் கேட்டவுடன் உன் பழைய 'சுபாவத்திநின்று திரும்பி, அவரைப் பார்த்தாயா? உலகத்தினின்று நீ திரும்பி, அவரை நோக்கிப் பார்த்தாயா? நீ திரும்பிக்கூடப் பார்க்காமல் உன் வழியிலே போய்க் கொண்டிருக்கிறாயே, இது நல்லதா? அவருடைய சத்தம் உன்னிலே ஒரு மாற்றத்தையும் கொண்டு வரவில்லையா? பரிதாபம்.

வேதம் வாசித்து முடித்துவிட்டாய்.. ஜெபம் பண்ண ஆயத்தமாகிவிட்டாய் நல்லது. ஆனால் ஓர் கேள்வி. ஜெபம் பண்ணுவதற்குமுன் தேவசித்தம் கேட்டாயா? சத்தம் உன் ஆவிக்குரிய காதில் விழ வேண்டுமெனில் நீ திரும்பிப் பார்த்தாயா? உலகை வெறுத்துத் திரும்பிப் பார்த்தாயா? பாவத்தை வெறுத்து நீ திரும்பிப் பார்த்தாயா? அப்பொழுதான் தேவ சத்தம் உன் காதில் விழும். உன்னைத் திரும்பச் செய்யாத வேத வாசிப்பும், தியானமும் வெறும் சடங்காச்சாரமே. இவை அன்றாடகக் கடமைகளாக இருக்குமே தவிர ஆவிக்குரிய செயல்களாக அமையாது.

தேவ சத்தத்தைக் கேட்டு, நாம் திரும்பியிருந்தால் நம் உள்ளான மனுஷனிடத்தில் மிகப் பெரிய மாற்றம் உண்டாயிருக்கும். இயேசுவின் சத்தத்தைக் கேட்டு அவரைக் கண்டபொழுது யோவான் சரீரப் பிரகாரமாகச் செத்தவன்போல் விழுந்தான். ஆவிக்குரிய நிலையில் நமக்குள் ஓர் அசைவு உண்டாக வேண்டும். நாம் விழ வேண்டும்; சரீரப் பிரகாரமாக அல்ல. உலக ஆசைகளுக்கு விலகி விழ வேண்டும். பாவ இச்சைகளுக்குச் செத்து கீழே விழ வேண்டும்.

இயேசுவை முழுமையாக யாரென்று அறியாத நிலையில் யோவான் இயேசுவின் மார்பில் சாய்ந்து உறவாடும் நெருக்கத்தைப் பெற்றிருந்தான். ஆனால் அந்த இயேசுவை பூரண மகிமையில் சந்திக்கும் பொழுது, அதே யோவான் செத்தவனைப்போல் கீழே விழுந்தான்.

நம் வாழ்க்கையிலும் எப்பொழுதும் இந்தத் தெய்வபயம் இருக்க வேண்டும். இந்த பயம் நமக்கு ஏற்பட வேண்டுமெனில், உலகைவிட்டு நாம் திரும்பிப் பார்க்க வேண்டும்

**நம் கண்கள் உலகையே வெறித்து நோக்கினால்,**
**பரலோகம் அந்நிய தேசமாகத் தெரியும்.**

26
மே

# சத்தியமா ? சட்டமா?

"சாராய் ஆபிராமை நோக்கி நான் பிள்ளைபெறாதபடிக்குக் கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்; என் அடிமைப்பெண்ணோடே சேரும், ஒருவேளை அவளால் என் வீடு கட்டப்படும் என்றாள். சாராயின் வார்த்தைக்கு ஆபிராம் செவிக்கொடுத்தான்."(ஆதி 16:2)

கர்த்தர் தன் ஆசீர்வாதத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார் என்று சாராள் உண்மையாய் நம்பியிருந்தால், அந்த ஆசீர்வாதத்தின் வழியைத் திறக்க சாராள் கர்த்தரையே நோக்கிப் பார்த்திருக்க வேண்டும். மாறாக மாம்சீகமான ஓர் முடிவெடுத்தாள். அப்படி முடிவெடுக்க சட்டப்படி அவளுக்கு உரிமை உண்டு. சத்தியத்தின்படி அவளுக்கு உரிமை கிடையாது. சத்தியமா? சட்டமா? என்ற நிலை எழும்போது, கர்த்தரின் பிள்ளைக்குச் சத்தியமே பெரியது.

இந்த மாம்சீக யோசனை ஆபிரகாம் உள்ளத்தில் தோன்றாவிட்டாலும், சாராளின் யோசனைக்கு அவன் துணைப்போனான். சூழ்நிலையின் நெருக்கத்தினாலே விட்டுக் கொடுத்தான். தன் விசுவாசத்தில் உறுதியாய் நிற்கவில்லை; சூழ்நிலைக்குப் பணிந்துவிட்டான். அவன் இப்படி பணிந்தது இன்றுவரையிலும் கர்த்தரின் பிள்ளைகளுக்குத் தலைகுனிவு. பிரச்சனையை ஆபிரகாம் தேவ கரத்தில் விட்டிருக்க வேண்டும். மாறாக அவன் தன் கரத்தில் பிரச்சனையை எடுத்தபடியினால், நெருக்கங்கள் அதிகமாயின. சாராளின் யோசனை "எகிப்திய தீர்வு" (Egyptian solution) இது கர்த்தருடைய பிள்ளைக்குப் பொருந்தாது. எகிப்திய தீர்வு ஆரம்பத்தில் தென்றலைப்போல இனிமையாயிருக்கும். கடைசியில் பெரும் புயலாகச் சீரழிக்கும். குடும்பத்தில் சண்டை பிரிவினைகள், சமாதானமின்மை இப்படியாக ஆபிரகாம் குடும்பம் சாட்சியிழக்க ஆரம்பித்தது.

சட்டப்படி ஒன்றைச் செய்வதற்கு நமக்கு உரிமை இருந்தாலும். கர்த்தருடைய பிள்ளைக்கு எல்லாமே தகுதியாயிராது. தகுதியற்ற ஒன்றை தேவ பிள்ளை செய்வானானால், விசுவாச வாழ்க்கைக்கு அவன் தகுதியற்றுப் போய்விடுவான். "எனக்கு நேரிட்ட அநியாயம் உமது பேரில் சுமரும்" என்று சாராள் ஆபிரகாமைக் குற்றப்படுத்தினாள், தவறான ஒரு செயல் தேவ பிள்ளையை ஒருவரையொருவர் குற்றப்படுத்தத் தூண்டுகிறது. ஆபிரகாம் மிகவும் பொறுப்பற்றவனாக நடந்துகொண்டான். உன் பார்வைக்கு நலமானதை ஆகாருக்குச் செய் என்று மனைவி கரத்தில் பிரச்சனையை விட்டு விட்டான். இருவரும் சேர்ந்தே ஓர் முடிவெடுக்க வேண்டிய நிலையில், பொறுப்புகளை ஆபிரகாம் உதறித் தள்ளிவிட்டான். விசுவாசியின் தகப்பனுடைய வீடு இப்படிச் சண்டைக்கும் சச்சரவுக்கும் இடமாயிற்று. காரணம் கர்த்தருக்கு காத்திராமல் சுய வழியில் நடந்தது.

**உன் சுய இஷ்ட, மலர் பாதையில் நடப்பதைவிட, தேவன் காட்டும் முள் பாதையில் நடப்பதே நலம்**

# 27
மே

# நமது தெரிந்தெடுப்பு

"அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் எனப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனே வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும் தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள்"(அப் 13:1)

நம்முடைய ஆசிர்வாதமான வாழ்க்கைக்கு நம்முடைய தெரிந்தெடுப்பும் மிக முக்கியம். இங்கே ஒன்றாக வளர்க்கப்பட்ட இருவரைப் பார்க்கின்றோம். காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனே வளர்க்கப்பட்ட மனாயீன் என்று ஒரு ஊழியக்காரர் அறிமுகப்படுத்தப்படுகிறார். ஒருவன் ஏரோது இவ்வுலக ராஜ்ஜியத்தின் அதிபதி மற்றொருவர் மனாயின் பரலோகராஜ்யத்தின் பணிவிடைக்காரர். ஏரோதிற்கு மதிப்பு, மரியாதை, செல்வம், செல்வாக்கு, அந்தஸ்து என உலக ஆசீர்வாதங்கள் அதிகம். தேவனுடைய ராஜ்ஜியத்தைத் தெரிந்து கொண்ட மனாயீனுக்கு ஆவிக்குரிய வட்டாரத்தில் மதிப்பு, மரியாதை இருந்தாலும் யூதர்கள் மத்தியில் எதிர்ப்பு, நிந்தனை, உபத்திரவம், பாடுகள். ஆனாலும் மானயீன் இயேசுவை அறிந்தவன், இயேசுவால் அறியப்பட்டவன்.

ஒரே சூழலில் வளர்ந்தாலும் ஏரோது இயேசுவை அறியாதது ஆச்சரியமே. அவன் இயேசுவை அறிந்து கொள்ளாததற்கு காரணம் அவன் இயேசுவை அறிந்து கொள்ள மனமற்று இருந்ததுதான். உலக காரியத்தில் சிரத்தையோடிருந்த அவன் ஆவிக்குரிய காரியத்தில் அக்கறையற்றிருந்தான். அதனால் அவன் பாவம் செய்தான். தேவ மனிதன் யோவான் எச்சரித்தும் தன் பாவத்தை விட்டு அவன் விலகவே இல்லை. (மாற் 6:17,18) பாவத்தைச் சுட்டிக் காட்டிய பரிசுத்தவானை சிறையிலிட்ட அவன் பின்னர் பரிசுத்தாவானையே – யோவானையே சிரச்சேதம் செய்யவும் நேரிட்டது பாவத்தின் விளைவே. ஒரு பாவம் இன்னொரு பாவத்தைச் செய்ய தூண்டும். பாவி மற்றவர்களையும் பாவஞ் செய்ய தூண்டுவான் (உ.ம்) ஏவாள் தான் பாவம் செய்ததோடு தன் கணவன் ஆதாமையும் பாவஞ்செய்யத் தூண்டினாள்.

யோவானைச் சிரச்சேதம் செய்த ஏரோது பின்னாளில் இயேசுவை நிந்தித்துப் பரியாசம் பண்ணி, மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி... பிலாத்துவினிடத்திற்கு அனுப்பினான். (லூக் 23:11) இயேசுவை சிலுவையிலறைய அவனும் மறைமுகமாய்க் காரணமானான். ஆகவே இவன் இரட்சிப்புக்கு தூரமானவன். அதே சமயம் மனாயீம் தான் இரட்சிக்கபட்டதோடு மற்றவர்களையும் இரட்சிப்பிற்குள் நடத்தினான். பரலோக இராஜ்ஜியத்தில் மேன்மையான பலன்களைப் பெறுவார். ஒரே சூழலில் வளர்ந்த, ஒரே அழைப்பைப் பெற்ற இருவரின் வாழ்க்கையில்தான் எத்தனை வேறுபாடுகள். காரணம் அவர்களது தெரிந்தெடுப்பு, சகோதரனே, சகோதரியே உங்கள் தெரிந்தெடுப்பைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்.

**யாரை சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்.**

**28**
**மே**

# அன்பின் வளர்ச்சி

"என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள், அவர் லீலி புஷ்பங்களுக்குள்ளே மேய்கிறார்". (உன் 2:16)

சூலமித்தியாள் என் நேசர் என்னுடையவர் என்று உரிமை பாராட்டி மகிழ்கின்றாள். புதுமணப் பெண் தன் உறவினர்களுக்கும் தோழிகளுக்கும் 'அவர் என் கணவர்' என்று அறிமுகப்படுத்தி மகிழ்வது போல சூலமித்தியாள் தன் நேசரை அறிமுகப்படுத்தி மகிழ்கின்றாள். தன் நேசர் தனக்கு சொந்தம் என்பதில் மகிழ்கிறார். இந்த அன்பு இதோடு நின்றுவிடக் கூடாது. இது வளர வேண்டும். இரட்சிக்கப்பட்ட புதிதில் இரட்சண்யத்தின் சந்தோஷத்தில் ஒரு விசுவாசி மகிழ்கிறார். வேத வாசிப்பு, தியானம், ஜெபம் விசுவாசிகளின் ஐக்கியம் இவற்றில் வாழும் விசுவாசி, தியானம், ஜெபம், அதோடு நின்றுவிடக் கூடாது. இது ஒரு சுயநலமான அன்பு. இந்த அன்பு வளர்ச்சியடைய வேண்டும்.

என் நேசர் என்னுடையவர் என்று மகிழ்ந்த அவள் இப்பொழுது "நான் என் நேசருடையவள் என்ற உணர்வை அடைகிறாள். தான் மணவாளனுக்காய் படைக்கப்பட்டவள் என்பதை உணர்ந்து கொள்கிறாள். விசுவாசி ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரும்போது தான் கர்த்தருக்காய்ப் படைக்கப்பட்டவர் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படி உணர்வடைந்தால் அப்போஸ்தலனாகிய பவுலைப் போல "ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கீறீர்" என்று கேட்க வேண்டும். அவர் சித்தத்தை அறிந்து அதை நிறைவேற்ற வேண்டும். ஆலயங்களிலே பிரசங்கித்தார். அதுபோல நாமும் கிறிஸ்துவுக்காக ஜீவிக்க வேண்டும்

நான் என் நேசருடையவள், அவர் பிரியம் என் மேலிருக்கிறது. (உன் 7:10). புது மணப்பெண் சில காலம் சென்ற பின் இன்னார் மனைவி என்றே அழைக்கப்படுகிறாள். மனைவி தன் கணவனின் பிரியத்தை சம்பாதிக்க முயற்சிக்கின்றாள். அதற்காக தன் கணவரை கவரும்படி அலங்காரம் செய்துகொள்கிறாள். அவருக்கு பிரியமான பணிவிடைகளை செய்கிறாள். எஸ்தர், தான் அகாஸ்வேரு ராஜாவினால் அங்கீகரிக்கப்பட தன்னை சுத்திகரித்து கொண்டாள். அலங்கரித்துக் கொண்டாள். அதுபோல ஆவிக்குரிய மணவாளனாகிய இயேசுவின் பிரியத்தை நாம் சம்பாதிக்க வேண்டும். இதற்கு அனுதினமும் வேத வாசிப்பினால் நம்மை சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது என் உபதேசத்தினால் சுத்தமாயிருக்கிறீர்கள்

உலகப்பிரகாரமாக நம் தகப்பன் ஆதாம், முந்தின ஆதாமின் பாவ சுபாவங்களை ஒழித்துவிட்டு பிந்தின ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவின் திவ்ய சுபாவங்களால் நம்மை அலங்கரித்துக் கொள்வோம். அப்போது நம் ஆவிக்குரிய மணவாளன் இயேசு நம்மில் பிரியப்படுவார். அவர் வரும்போது நம்மைப் பார்த்து.. என் பிரியமே என் ரூபவதியே நீ எழுந்து வா (உன்2:13) என்பார். நம்முடைய அன்பு வளருட்டும்.

"ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோ. 15:13)

29
மே

# கிறிஸ்துவே தலைவர்

"அப்பொழுது மரியாள் விலையேறப் பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள். அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது". (யோவான் 12:3)

அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது என்று வேதம் கூறுகிறது. அந்த வீட்டைக் கடந்து போகின்றவர்கள் அந்த வீட்டை நெருங்க சில அடி தூரம் இருக்கும்போதே அந்த வாசனையை முகர்ந்திருப்பார்கள். தூரத்திலேயே தெரிகிறது இந்த வீட்டில் பரிமளத் தைலமிருக்கிறது என்று. நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையும் இப்படி கிறிஸ்துவின் வாசனையை வீசுகிறதாய் இருக்க வேண்டும். நம்முடைய பக்கத்து வீட்டார் நமது தெருவில் வசிப்போர் இதோ இந்த வீட்டார் உத்தம கிறிஸ்தவர்கள் அவர்கள் தாங்கள் வணங்கும் இயேசுவைப்போல அன்பானவர்கள், பொறுமையுள்ளவர்கள், சாந்த குணமுள்ளவர்கள், இந்த வீட்டிற்கு சென்றால் சமாதானம் கிடைக்கும். இப்படி கிறிஸ்துவின் வாசனையான அன்பு, சமாதானம், சந்தோஷம், வெற்றி, நம்பிக்கை இவைகளை நம் வீடு மற்றவர்களுக்கு அறிவிக்கின்றதா?

முன்பு அந்த வீடு சண்டை, சச்சரவு, பொறாமை, பெருமை, தோல்வி, கண்ணீர் நிறைந்ததாயிருந்தது. லாசரு உயிர்த்தெழுந்த பின்பு இயேசு அந்த வீட்டிற்கு வந்த பின்பு அந்த வீடு அன்பு, சமாதானம், வெற்றி, சந்தோஷம் நிறைந்ததாய் மாறிவிட்டது. இரட்சிக்கப்படுவதற்கு முன்பு நம்முடைய வாழ்க்கையும் கண்ணீர், கவலை, நிம்மதி இல்லாமை, பயம், தோல்வி என்றிருந்தது. ஆனால் இப்பொழுது விசுவாசம், அன்பு, நம்பிக்கை, சந்தோஷம் நிறைந்ததாய் மாறியிருக்கிறது.

விருந்தினரை உபசரிப்பதற்கு ஒரு சொட்டுத் தைலத்தை அவர்கள் தலையின் முன் உச்சியில் வைத்தால் போதும். ஆனால் அவளோ அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமையிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள். இச்செயல் "தான் இயேசுவை தன் ஆண்டவராக, எஜமானனாக ஏற்றுக் கொண்டதைக் குறிக்கிறது. முன்பு அவர் இதே வீட்டிற்கு எத்தனையோ முறை வந்திருந்தாலும் அப்போதெல்லாம் அவரை ஒரு விருந்தாளியாகத்தான் ஏற்று உபசரித்தனர். ஆனால் இம்முறை அவரைத் தங்கள் ஆண்டவராக வீட்டின் தலைவராக ஏற்றுக் கொண்டனர். இயேசு வீட்டின் தலைவரானால் அவரைக் கேட்டுதான் எதையும் சொல்ல வேண்டும் செய்ய வேண்டும்.

இயேசு நம் வீட்டில் யாராக இருக்கிறார்? விருந்தாளியாகவா? தலைவராகவா? தலைவரானால் சிறிய காரியமானாலும் பெரிய காரியமானாலும் அவர் உத்தரவைப் பெற்றே செய்ய வேண்டும்.

**இயேசு நம் வீட்டின் தலைவர் என்று**
**வீட்டுச் சுவரல்ல, நம் வாழ்க்கை காட்டட்டும்.**

30
மே

# தன்னை அறியும் அறிவு

"நித்தை என் இருதயத்தைப் பிளந்தது, நான் மிகவும் வேதனைப்படுகிறேன். எனக்காகப் பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன். ஒருவனும் இல்லை, தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன்; ஒருவனையும் காணேன்" (சங்.6:20)

மனிதன் தன்னை யாரென்று அறியாமலேயே அற்பமாகவே மதிப்பிடுகிறான். நம்மை நாமே குறைவாக மதிப்பிடக் கூடாது. பக்தன் தாவீதுகூட தான் யாரென்பதை மறந்து, தெய்வ சமூகத்தில் புலம்புவது உண்டு, "உலகத்தாருக்குப் பழமொழியானேன், மதுபானம் பண்ணுகிறவர்களுக்குப் பாடலானேன்" என்று தாவீது புலம்புவது உண்டு. "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்" என்று விசுவாச முழக்கமிட்ட தாவீதுதான் இப்பொழுது இப்படி புலம்பித் தவிக்கிறார். "தனக்காகப் பரிதவிக்க, தன்னைத் தேற்ற ஒருவருமில்லை" என்று தாவீது புலம்பித் தவிக்கக் காரணம் என்னவெனில், தான் கர்த்தரின் கரத்தில் ஒரு ஆடு என்பதை மறந்ததே. கர்த்தர் நம்மை மண்ணென்று நினைவுகூர்வது நாம் ஒரு மதிப்பும் இல்லாதவர்கள் என்பதால் அல்ல. நம் பலவீனத்தையே அவர் குறிப்பிடுகிறார்.

"தங்களிலுள்ள இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல் தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்." (2 கொரி 4:7) பவுலைப் பார்த்து, நீங்கள் யாரென்று கேட்டால், "நாங்கள் மண்பாண்டம்" என்று சொல்லமாட்டார். கடவுளுடைய பொக்கிஷம் என்றே தன்னைக் குறித்துச் சொல்லுவார். அவருடைய சரீரம் ஒரு மண்பாண்டம்தான். ஆனால் அவர் அந்த மண்பாண்டம் அல்ல. ஆகவே நாம் எல்லோரும் ஆவிக்குரிய பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் நாம் யார் என்பதைத் தெளிவாக அறிய வேண்டும்.

நாம் யாரென்று நாம் அறிந்து கொள்ளுவது நம்மை உயர்த்துவதற்கு அல்ல. கிறிஸ்துவுக்குள் நாம் எப்படியிருக்கிறோம் என்று அறிந்து கொள்ளவே. "நான் எதைக் கேட்டாலும் கர்த்தர் தருவார், நான் விசுவாச அறிக்கை செய்வேன், பரலோகம் தந்தே தீரவேண்டும்" என்பதெல்லாம் நம்மை நாமே உயர்த்திக்கொள்வதுதான். இப்படிச் செய்வதால் நாம் யாரென்று அறிந்துக்கொள்ளத் தவறிவிடுகிறோம். தன்னை அப்போஸ்தலன் என்று அறிவித்த பவுல் கொஞ்சக் காலத்தில் தன்னை அகாலப்பிறவி என்று தாழ்த்துகிறார். பின்னும் கொஞ்சக் காலத்தில் தன்னைப் பாவிகளில் பிரதான பாவி என்று மிகவும் தாழ்த்துகிறார். தன்னை யாரென்று பவுல் சரியாகப் புரிந்து கொண்டார். நாம் யாரென்று நம்மை புரிந்து கொண்டோமா?

சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றிவா என்றுதான் இயேசு அழைக்கிறார். நீங்கள் யாரென்ற கேள்விக்குப் பதில் "நான் கிறிஸ்துவுக்காய் சிலுவை சுமக்கிறவன்; அவரைப் பின்பற்றுகிறவன்" என்று நம்மை குறிந்து அடையாளம் காட்ட வேண்டும்.

**நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்?**
**உங்கள் ஆவிக்குரிய அடையாளம் என்ன?**

31
மே

# தலை சாய்க்க இடமில்லை

"என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்" (சங்.23:5)

ஓயா உழைப்பினால் மனிதனுக்கு இளைப்பாறுதலே இல்லை. பொழுது புலர்ந்ததும் அவனுடைய ஓட்டம் ஆரம்பிக்கிறது. நள்ளிரவிலும் மனிதன் ஓடிக்கொண்டே இருக்கிறான். ஓய்வில்லா அவனது ஓட்டம் சொல்கிறது. "தலை சாய்க்க இடமில்லை!".

இயற்கையோ, நல்ல சூழ்நிலைகளோ, இனியப் பாடல்களோ அவனுக்குச் சற்று இளைப்பாறுதலைக் கொடுத்தாலும் அவன் தலையைச் சாய்க்க அவைகளெல்லாமே உதவாமற்போகின்றன. தலை வெடித்துவிடும் போலிருக்கிறது என்று வேதனையில் மனிதன் அங்கலாய்க்கிறான். இப்படி நெருக்கத்தில் மாட்டிக்கொள்ளும் தலை, சற்று சாய்ந்து இளைப்பாற இடத்தை நாடுகிறது.

உற்றார், உறவினர், இனம், ஜனம் என்று எங்கெல்லாமோ இளைப்பாறுதலை – தலைசாய்க்கும் இடத்தை நாடித்தேடி, அந்த இடம் கிடைக்காமலே மனிதன் ஓடிக் கொண்டிருக்கிறான். இப்படி ஓடிக் கொண்டிருக்கும் ஒரு மனிதரைப் பார்த்து, ஐயா, கொஞ்சம் ஓய்வு எடுங்களேன்" என்று சொன்னவுடன் அவர் பதில் சொன்னார், "நன்றி... நித்திய ஓய்வு வந்துக் கொண்டிருக்கிறது." ஆம்! இவ்வுலகில் மனிதனுக்குத் தலைசாய்க்க இடமில்லை. ஆனால் ஒரு இடமிருக்கிறது தலை சாய்க்க.

ஆவியானவரின் கரங்களில் மனிதன் தலை சாய்க்கலாம். "என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்" என்று தாவீது தன் தலைக்கு இளைப்பாறுதலைத் தேடுகிறான் (சங்.23:5) தாவீது தன்னை ஒரு ஆட்டிற்கு ஒப்பிடுகிறான். ஆடு புல் மேய்ந்து மாலையில் தொழுவத்திற்குத் திரும்பும்; அப்பொழுது மேய்ப்பன் ஆட்டின் தலையைத் தடவிப்பார்ப்பான். புல் மேயும்பொழுது ஆட்டின் தலையில் முள் குத்தியிருந்தால், அந்த முள்ளை மெதுவாக அவன் வெளியே எடுப்பான். பிறகு முள் குத்தின இடத்தில் எண்ணெய்ப் பூசுவான். அதன் பிறகே மேய்ப்பன் ஆட்டைத் தொழுவத்திற்குள் விடுவான்.

அதுபோலவே கர்த்தரின் பிள்ளையின் தலை நிந்தை, அவமானம், கேவலம் நிறைந்த சொற்கள் செயல்கள் இவைகளால் தாக்கப்பட்டிருக்கும். ஆவியானவர் இந்த முட்களையெல்லாம் மெதுவாக எடுப்பார். அந்தத் தலையில் தன் அபிஷேகத் தைலத்தை ஊற்றுவார். அந்தத் தலை ஆவியானவரின் மடியில் இளைப்பாறும். ஆம்! தாவீதுக்கு இளைப்பாற இடமிருந்தது, ஆவியானவரின் கரங்களில்.

**கர்த்தருடைய சமுகத்தில் உன் தலையை சாய்த்து விடு**
**ஆவியானவரின் கரங்களில் உன்னை ஒப்புக்கொடு**

**1**
**ஜூன்**

# காற்று எங்கிருந்து வீசுகிறது?

"காற்றைத் தமது பண்டசாலைகளிலிருந்து புறப்படப் பண்ணுகிறார்." (சங்.135:7)

இப்பொழுது வீசும் காற்று சாத்தான் இருக்கும் ஆகாயத்திலிருந்து புறப்படவில்லை, கர்த்தரின் பண்டசாலையிலிருந்து வீசுகிறது. ஆம்! சர்வ வல்லவரின் சேமிப்புக்கிடங்கிலிருந்து இந்தக் காற்று வீசுகிறது.

பிரச்சனையைக் கண்டதும் இதன் ஆரம்பம் கர்த்தரா, உலகமா, சாத்தானா என்று ஆராய்ந்துப்பார். உடனே கலங்கிவிடாதே. அவரது பண்டசாலையிலிருந்து வீசும் காற்று ஆசீர்வாதமானது. இது தேவனால் அனுமதிக்கப்பட்ட காற்று. இது நன்மையாகவே முடியும். இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடல் அருகே பயந்து நடுங்கி நிற்கும்வேளையில், "கர்த்தர் இரவு முழுவதும் பலமான கீழ்க்காற்றினால் கடல்நீர் ஒதுங்கும்படி செய்தார்". (யாத்.14:21) அதனால் கடல் வறண்டு வெட்டாந்தரை உண்டானது. இதுவே இஸ்ரவேலர் கடலைக் கடந்து போகும் அற்புதப் பாதையாயிற்று.

"உம்முடைய காற்றை வீசப்பண்ணினீர், கடல் பகைவர்களை மூடிக்கொண்டது." (யாத்.15:10) அப்படியே இன்று உன் வாழ்வில், ஊழியத்தில் வீசும் பலமான காற்று அற்புதமான வழியை உண்டாக்கும். சாத்தானின் கோஷ்டங்கள் அழிந்துப்போகும் பலமான காற்று வீசும்பொழுது கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை நினைத்தருளினார். கர்த்தர் உன்னையும் நினைக்கிறார்.

அவர் இடித்தால் யாராலேயும் கட்டமுடியாது. அவர் மனுஷனை அடைத்தால் விடுவிக்க முடியாது. அவர் தண்ணீர்களை அடக்கினால் எல்லாம் உலர்ந்துபோம். அவர் அவைகளை வரவிட்டால் பூமியைக் கீழது மேலனதாக்கும் (யோபு 12:14,15) இத்தகைய சர்வ வல்ல கர்த்தர் உன்னை நினைக்கிறார். ஆகவே அவர் நினைவில் நீடித்திருக்கப் பிரயாசப்படு.

சிருஷ்டிப்பில் உடனே செயற்படும் கர்த்தர், புதிய சிருஷ்டியில் படிப்படியாகச் செயற்படுகிறார்.

**தேவன் தாமதப்படுகிறதாக உனக்குத் தோன்றினால்**
**அவர் உனக்குப் புதிதான ஆசீர்வாதத்தை**
**உருவாக்குகிறார் என்று அறிந்துக்கொள்.**

2

ஜூன்

# வெற்றி மேடைக்குச் செல்லும் தோல்விப் படிக்கட்டு.

"நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்" (ஆதி.28:15)

"எப்படியும் வெற்றி பெறு" என்பது உலகத்தின் சத்தம். நீதியின் பாதை வழியாய் ஓடி வெற்றி பெறு. இது சத்தியத்தின் சத்தம். சராசரி மனிதன் எப்படியும் வாழலாம் என்று தரம் தாழ்ந்து விடுகிறான். தேவனது பிள்ளையின் இலக்கு வெற்றி; ஆனால் அதற்கான பாதை தேவனது கட்டளையின்படியே.

கர்த்தரின் பாதை நீதியின்பாதை, நேர்மையின் பாதை, ஆனால் நேர்வழி அல்ல; வளைவுகளும் திருப்பங்களும் நிறைந்தவை. இந்த வளைவுகளும் திருப்பங்களும் நடைபயணத்தை சோர்வடையச் செய்யும், தோல்விப் படிக்கட்டுகளைப் போல அமைந்துவிடும். இந்தப்படிகளை ஒருவன் மிகுந்த விழிப்போடு கடக்கவேண்டும். இவைகளைக் கடந்த ஒரு தேவ மனிதனை உங்கள் முன் நிறுத்த விரும்புகிறேன். அந்த மனிதன்தான் யாக்கோபு!.

பதன் அராமிலே பல ஆண்டுகளைச் செலவிட்ட யாக்கோபு, தேவனது வாக்குத்தத்தத்தை மறந்து ராகேலின் மேல் கொண்ட மாம்சீக அன்பினால் கர்த்தரை விட்டு வெகுதூரம் சென்றுவிட்டான். ஆனால் யோசேப்பு பிறந்ததும் தேவன் யாக்கோபை வாக்குத்தத்த நாட்டை நோக்கிப் புறப்படத் தூண்டினார். அப்படியே அவன் வாக்குத்தத்த நாட்டை நோக்கிப் புறப்பட்டான். ஆனால் தேவன் தந்த வாக்குத்தத்தத்தை வழியில் மறந்துவிட்டான். தன் சகோதரனாகிய ஏசா தனக்கு எதிர்ப்பட்டு, தன்னைக் கொன்று போடுவான் என்று அஞ்சினான். கடந்த காலப் பாவங்கள் அவன் மனக்கண்முன் பூதகரமாக உருவெடுத்தன.

அண்ணனை ஏமாற்றிய பாவம், அவன் ஆத்துமாவைத் திகிலடையச்செய்தது. "நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்" (ஆதி 28:15) என்ற தேவனது உறுதிமொழிகளை அவன் மறந்தான். "என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாட்கள் சீக்கிரமாய் வரும், அப்பொழுது யாக்கோபைக் கொன்றுபோடுவேன்" (ஏசா27.41) என்ற ஏசாவின் கோப வார்த்தைகள் மாத்திரமே அவன் இதயத்தில் நிலைத்திருந்தன. ஆகவே வழியில் அவன் நடைகள் தளர்ந்தன.

என்னருமையான தேவபிள்ளையே! நெருக்கத்தின் வேளையில் நீ தேவனது வார்த்தைகளில் அடைக்கலம் தேடிக்கொள். மனிதனின் ஆத்திரமான வார்த்தைகள் எரிச்சலின் வெளிப்பாடுகள். இவைகளைக்கண்டு அதைரியப்படாதே! மனித வார்த்தைகள் செயலிழந்துப்போம். தேவனது வார்த்தைகள் ஜீவவார்த்தைகள். மனிதனுக்குப் பயந்து, தேவனை விட்டு ஓடிவிடாதே. யாக்கோபு ஏசாவை எண்ணிக் கலங்கித் தவிக்கிறான். நான் சொன்னதைச் செய்யுமளவும், உன்னைக் கைவிடுகிறதில்லை என்ற வார்த்தைகளை அவனால் விசுவாசிக்கமுடியவில்லை. இன்று நீங்களும் சில நெருக்கங்களில் சிக்குண்டு வேதனையோடிருக்கலாம். இந்த நெருக்கத்தில் கர்த்தரின் வார்த்தைகளை எண்ணித் தைரியமடையுங்கள்.

**சூழ்நிலை, சந்தர்ப்பங்கள்**
**தேவனது சித்தத்தை மாற்றவே முடியாது.**

| 3<br>ஜூன் |
| --- |

# நீரூற்றாக்கிக்கொள்

"அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்கிறார்கள்." (சங்.84:6)

உலகம் உனக்கு மாராவைத்தந்தால் - கசப்பான பாத்திரத்தைத் தந்தால் தேவன் உன் ஜெபத்திற்குப் பதிலாக, அதனையே மதுரமாக மாற்றுவார். உளையான பாவச் சேற்றினின்று நம்மைத் தூக்கி எடுத்து கன்மலை மேல் நம்மை நிறுத்துகிற தேவன், உன் துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார். பரிதாபத்தின் அவதாரமாக நின்ற கிதியோனைப் பராக்கிரமசாலியாக கர்த்தர் மாற்றினார். நாணலைப்போல உறுதியற்று வளைந்துக் கொண்டிருந்த பேதுருவை அசையா பாறையாக தேவன் மாற்றினார். சபையைப் பாழாக்கின சவுலை, சபையைக் கட்டுகின்ற பவுலாக இறைவன் உருவாக்கினார். மனிதர்களால் தள்ளப்பட்டவர்கள் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டார்கள். இவர்களெல்லாரும், காலம் தங்களுக்குத் தந்த கண்ணீரின் பள்ளத்தாக்குகளை புதுப்புனல் ஓடும் நீரூற்றாக்கிக் கொண்டார்கள். எப்படி?

அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்கிறார்கள். கண்ணீரின் பள்ளத்தாக்குகளான பிரச்சனைகளை எண்ணினால், அவைகளைப் பற்றிகலங்கினால், அவைகளைக் கண்டு பதறினால் அவைகள் நீரூற்றாக மாறிவிடாது. அவைகளை உருவ நடக்கவேண்டும். ஆம்! அவைகள் வழியாய் நாம் கடந்து செல்லும்பொழுது அவைகள் நீரூற்றாக மாறிவிடுகின்றன.

இழப்பு, அவமானம், எதிர்ப்பு - இவைகளைப் பக்தன் யோபு கர்த்தர் மேல் உள்ள நம்பிக்கையினால் உருவ நடந்தபடியால் அவைகள் அவனுடைய ஆத்துமாவிற்கு நீரூற்றுகளாக மாறி அவன் ஆத்ம தாகத்தை தீர்த்தன அவன் வாழ்க்கையெனும் வனாந்திரம் நீர்த்தடாகமாக மாறியது. அந்தத் தடாகத்தில் மலர்ந்ததுதான் இரட்டிப்பான ஆசீர்வாத மலர்.

ஆகோரின் பள்ளத்தாக்கை – சாபத்தின் தலைவாயிலை நம்பிக்கையின் வாயிலாக கர்த்தர் திறப்பார். நான்கு திசைகளிலும் உங்களுக்குக் கதவுகள் அடைக்கப்பட்டால் வானத்தின் வாசல் திறக்கும்.

சகோதரனே! சகோதரியே! கண்ணீரின் பள்ளத்தாக்கில் நடந்துக்கொண்டிருக்கிறாயா? சோர்ந்து போகாதே! இன்னும் சிலநாட்களில் நீ இவைகளைக்கடந்துவிடுவாய். ஒன்றை நினைவில் வை. நீ கண்ணீரின் பள்ளத்தாக்கில் தங்கிவிட மாட்டாய், அதைக்கடந்து விடுவாய்.

**கண்ணீரின் பாதையை விட்டு ஓடாதே,**
**அந்த பாதையில் ஓடு, விரைவில் நீரூற்றாக மாறிவிடும்.**

| 4<br>ஜூன் |
|---|

# ஆத்துமா வாஞ்சித்த தேவ சமூகம்

"என் ஆபத்து நாளிலே உமது முகத்தை எனக்கு மறையாதேயும்" (சங்.102:2)

கோபத்தினால் தேவன் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிவிடக்கூடாதென்று கெஞ்சினான். தேவனுடைய முகம் தேவ சமூகத்தைக் குறிக்கிறது. "தேவனே இப்பொழுது நான் உமது புன்னகையைக் காணட்டும். என் மீது உமக்குள்ளக் கோபங்களை வேறு நேரத்திற்கென்று ஒதுக்கி வைத்துவிடும். இப்பொழுது உமது கோபத்தை என்னால் தாங்கமுடியாது. உமது பரிவான பார்வையை நான் நாடி நிற்கிறேன். என் ஆத்துமா உமது சமூகத்தை ஆழமாய் உணரட்டும்" இப்படி அவன் ஆத்துமா ஏங்கித் தவிக்கிறது.

உன் ஆத்துமா தேவ சமூகத்தை உணர வேண்டுமெனில் உன் ஆத்துமா வேத வசனங்களுக்குள் உலாவி வரவேண்டும். உன் இதயம் வேத வசனத்தால் நிறைந்திருக்குமெனில் உன் ஆத்துமாவை தேவ சமூகம் நிரப்பியிருக்கும்.

தள்ளாத வயதில் ஆவியானவரின் ஏவுதலின்படி சிமியோன் தேவாலயத்திற்கு வந்திருந்தான். இரட்சகரைப் பாலகனாகக் கண்டான். இந்தக் காட்சியினால் என்னை சமாதானத்தோடு அனுப்புகிறீர் என்று சொல்லவில்லை. எத்தனையோ பேர் அந்தப் பாலகனைக் கண்டாலும் கண்டவர்களுக்கெல்லாம் சமாதானம் கிடைக்கவில்லை. "உமது வார்த்தையின்படி அடியேனை சமாதானத்தோடு அனுப்புகிறீர்". (லூக் 2:29) என்று சிமியோன் கூறினான். அவனுக்குச் சமாதானத்தைத் தந்தது தேவனது வார்த்தைகளே. அந்த வார்த்தைகள் என்ன? "கர்த்தருடைய கிறிஸ்துவை காணுமட்டும் நீ மரணமடையமாட்டாய்" (லூக் 2:26) இவ்வார்த்தைகளே அவனது சமாதானத்திற்குக் காரணமான வாக்குத்தத்த வார்த்தைகள்.

இவ்வார்த்தைகளை நம்பி அவன் தேவாலயத்திற்கு வந்தான். நீ எந்த வார்த்தைகளை நம்பி ஜெபிக்கிறாய் சகோதரனே, சகோதரியே! வார்த்தைகள் உன்னை ஜெப அறைக்கு இழுத்துச் சென்றால் நிச்சயமாகவே நீ தேவ சமூகத்தைக் காண்பாய். தேவ சமூகம் எங்கேயோ அங்கே விடுதலையுண்டு. ஆகவே தேவ சமூகத்தை உணராது ஜெபிக்காதே.

**மன்றாட்டுகள் வேத வசன பாதைகளைக் கடக்கவேண்டும். அப்பொழுதான் அது தேவ சமூகத்தை அடையும்.**

5
ஜூன்

# பிதாவின் பாத்திரம்

"பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" (யோ.18.11)

உலகத்தில் உனக்கு விருந்தின் பாத்திரம், அன்பின் பாத்திரம், ஆதரவின் பாத்திரம், தத்தளிப்பின் பாத்திரம், நிறைவான பாத்திரம், வெறுமையான பாத்திரம் என்று பல பாத்திரங்கள் இருந்தாலும் அவைகளில் எது பிதா உனக்குக் கொடுத்தப் பாத்திரமோ அதில்தான் நீ பானம் பண்ண வேண்டும். மற்றப் பாத்திரங்களைத் தள்ளிவிடு.

விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் சோதோமின் வெற்றிக்குப் பிறகு, மனநிறைவுடன் நிற்கிறான். அப்பொழுது சோதோமின் ராஜா ஒரு ஐஸ்வர்யத்தின் பாத்திரத்தை அவனிடம் நீட்டுகிறான். "ஜனங்களை எனக்குத் தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும்" (ஆதி 14:21) என்று சோதோமின் செல்வப் பாத்திரத்தை அவன் ஆபிரகாமிடம் நீட்டுகிறான். எனக்கு இது வேண்டாம் என்று தன் மனவெறுப்பினால் அந்தப் பாத்திரத்தைத் தள்ளவில்லை. அவன் கையை நீட்டி வேண்டாம் என்று தள்ளவில்லை. நீர் என்னை ராஜாவாக்க வேண்டாம், என்னை ஐஸ்வரியவனாக்கும் பாத்திரம் என் தேவன் கையிலிருக்கிறதென்று கூறி, தன் கைகளைக் கர்த்தருக்கு நேராக உயர்த்தி சோதோமின் பாத்திரத்தைத் தள்ளினான்.

இச்சையின் அலங்காரப் பாத்திரமான தன் உடலை ஒவ்வொரு நாளும் யோசேப்பிடம் கொடுக்க முயற்சித்தாள் போத்திபாரின் மனைவி. போத்திபாரின் நம்பிக்கைக்கு விரோதமாகப் போய்விடக் கூடாது என்ற வாஞ்சையல்ல, தன் பெயர் கெட்டுவிடக் கூடாது என்ற எண்ணமுமல்ல. தேவனுக்கு விரோதமாக நான் பாவம் செய்யமாட்டேன் என்று "கர்த்தருக்கு பரிசுத்தம்" என்ற பாத்திரத்தின் மேலுள்ள யோசேப்பின் வாஞ்சையே இந்த அசுத்தப் பாத்திரத்தைத் தள்ளியது. சாத்தான் இன்று உன் முன் வைக்கும் அலங்காரப் பாத்திரங்களை உன் மனவெறுப்பின் காரணமாகத் தள்ளுவாயானால் நாளை உன் மனநிலை மாறும்பொழுது, நீ வெறுத்துத்தள்ளிய பாத்திரங்கள், உன் இதயக் கூடாரத்திற்குள் நுழைந்து விடும். ஆகவே ஆவியின் பலத்தால், கர்த்தரின் வார்த்தையின் பலத்தால் இந்த அசுத்தப் பாத்திரங்களைத் தள்ளு.

ஆனால் நீ தள்ளக்கூடாத ஒரு பாத்திரம் உண்டு. அதுதான் தேவசித்தம் என்னும் பாத்திரம். "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ? "(யோ. 18.11) என்று இயேசு உறுதியாய்த் தெரிவிக்கிறார். சகோதரனே! உனக்கு இன்று கொடுக்கப் பட்டிருக்கும் பாத்திரம் பிசாசு தந்த பாத்திரமா? அப்படியெனில் அதை விசுவாசத்தினால் தூக்கி எறி. காலம் தந்த பாத்திரமா? பொறுமையுடன் பானம் பண்ணு. கர்த்தர் தந்த பாத்திரமா? கண்ணீரோடு பருகிவிடு.

**கர்த்தர் தந்த இந்தப் பாத்திரத்தை தேவனின் அநியாயத்தீர்ப்பு என்று சொல்லிவிடாதே.**

6

ஜுன்

# தேவனுக்குக் கொடுத்தவர்கள் இழந்து போவதில்லை.

"அவர் போதகம்பண்ணி முடித்த பின்பு சீமோனை நோக்கி: ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளை போடுங்கள் என்றார்."(லூக்.5:4)

இராமுழுவதும் பாடுபட்ட பேதுருவும் அந்திரேயாவும் மிகவும் களைத்துப் போயிருந்த நிலையிலும் இயேசு பிரசங்கம் பண்ணும்படி அவர்கள் படகைக் கொடுத்ததோடன்றி அதைக் கரையிலிருந்து சற்றே கடலுக்குள் தள்ளினார்கள். இராக்கால பிரயாசங்கள், வெறுமையான வலைகள், களைத்துப்போன கரங்கள் இவைகளோடு நின்ற அந்தத் தோல்வியின் சின்னங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிய மறுக்கவில்லை. தளர்ந்த கரங்கள் படகை மீண்டும் கடலுக்குள் தள்ளின (லூக்கா 5:3) அந்தச் சின்ன உதவியையும் தேவன் மறக்கவில்லை. அவர் நாமத்தினிமித்தம் ஒரு குவளைத் தண்ணீர் கொடுத்தாலும் அதற்கும் பலனளிக்கிறவர் நமது இயேசு. பிரசங்க மேடையாக தனக்குப் படகைத் தந்தபடியால் அவர்களை ஆசீர்வதிக்க தேவன் சித்தங் கொண்டார்.

தேவன் மீது கொண்ட வைராக்கியத்தினால் மாபெரும் இழப்புக்குள்ளான யோபுவைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். அவர் நாமத்தினிமித்தம் துன்பங்களைக் கடந்து போகும் நமக்கு நம்முடைய நஷ்டங்களை, இழப்புகளை நூறத்தனையாக தேவன் ஆசீர்வதிப்பார் என்று வேதம் சொல்கிறது. ஆகவே தேவன் நிமித்தம் கண்ணீர் வடிக்கும் உனக்கு இன்பமான வாழ்க்கையைத் தேவன் வைத்திருக்கிறார். இயேசுவுக்காக நீ செலவிட்ட நேரம், கொடுத்த பணம் தேவனது கணக்கில் இருக்கிறது. என் அலைச்சல்களும் என் கண்ணீரும் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது என்று தாவீது தன் துன்பத்தில் கர்த்தரையே நம்பினது போல் நீயும் கர்த்தரையே நம்பியிரு.

தன் சின்னப் படகைக் கொஞ்ச நேரம் இயேசுவுக்குக் கொடுத்த அந்த இரண்டு பேரையும் ஆசீர்வதிக்க தேவன் நோக்கங்கொண்டார். நீ கொடுப்பது, பெற்றுக்கொள்ளும் வழியாகும். இதனை நீ கற்றுக் கொள்ளத் தவறிவிடாதே. உன் படகை நீ கொஞ்சம் தள்ளினால் ஆழ்கடலுக்குப் போக கர்த்தர் உதவி செய்வார். அவருக்குக் கீழ்ப்படிந்து ஒரு அடி எடுத்துவை. உனக்கு முன் புதுவழி உருவாகும். கீழ்ப்படிதல் மாபெரும் வெற்றியைத் தரும், இனி மீன் கிடையாது என்று அறிவு சொல்லும் இந்தப்பிரயாசம் வீணாகும் என்று அனுபவம் சொல்லும். "வலையைப் போடு" என்ற கர்த்தரின் வார்த்தைக்கே கீழ்ப்படி.

இயேசுவுக்குக் கீழ்ப்படிந்த பேதுரு தேவனின் மாமனிதரானார். அவர் எழுத்துக்கள் காலத்தைக் கடந்த நிருபங்களாயின. அவரது சொற்கள் இறவா காவியமாயிற்று.

**உன் வாழ்க்கை மலர வாழ்க்கைக் கடற்கரையில் நிற்கும் இயேசுவைச் சந்தித்து விடு. அவர் சொல்லுக்கு அடங்கிவிடு.**

# 7 ஜுன்

# பேதுரு அமிழத் தொடங்கினான்

"காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்; ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான்." (மத்.14:30)

பாடும் பரிசுத்தவான் மூழ்கும் பரிசுத்தவானானான். (Singing saint became sinking saint.) அதாவது பரபரப்பு மனிதன், பதைப்பதைப்பு மனிதனானான். கர்த்தரைக் கண்டு நடந்தான், கடலலையைக் கண்டு மூழ்க ஆரம்பித்தான். எப்பொழுது அவன் பார்வை அலைகள் மீது விழுந்ததோ அலைகள் அவனை ஆளத்தொடங்கின. ஆகவே ஆழத்தில் மூழ்க ஆரம்பித்தான். அலைகளின் கொடூரத்தைக் கண்ட பேதுரு இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தை இழந்தான். ஆகவே மூழ்க ஆரம்பித்தான். சகோதரனே, சகோதரியே! உன் அலைகள் எவ்வளவு பெரியவைகளாக இருந்தாலும் அவைகளைவிட இயேசு பெரியவர். ஆகையினால் எந்தப் பிரச்சனையையும் கண்டு பயப்படாதே.

இத்தாலியக் கப்பல் கொடுங்காற்றினால் அலையுண்ட பொழுது, எல்லோரும் பயந்து, திகைத்து நிற்கும்பொழுது "மனுஷரே! திடமனதாயிருங்கள். உங்களில் ஒருவருக்கும் உயிர்ச்சேதம் வரவே வராது என்று என்னை ஆட்கொண்ட கர்த்தர் உரைக்கிறார்" என்று (அப்27:23) பவுல் கர்த்தரின் வல்லமையை வெளிப்படுத்தினார். இந்த இத்தாலியக் கப்பலைக் கவனிப்போம். கப்பலைக் கடும் காற்று மோதிக்கொண்டேயிருந்தது. "அநேக நாளாய் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படாமல், மிகுந்த பெருங்காற்றும் மழையும் அடித்துக் கொண்டிருந்தபடியினால், இனித் தப்பிப் பிழைப்போம் என்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று." (அப்.27:20) சூரியனையும் நட்சத்திரத்தையும் காற்றையும் கண்டு எல்லோரும் நம்பிக்கையிழந்த வேளையில் கர்த்தரைக் கண்ட பவுல் மாத்திரம் "திடமனதாயிருங்களென்று உங்களுக்கு தைரியஞ் சொல்லுகிறேன்" என்று வீரமுழக்கமிட்டான். ஆகவே எந்தச் சூழ்நிலையிலும் கர்த்தரையே நோக்கிப்பார்.

பேதுருவின் பார்வை தவறியபடியால் அவன் சந்தோஷம் துக்கமாக மாறிற்று. கர்த்தரைப் பார்க்காத இஸ்ரவேலர் இராட்சதர்களை மாத்திரம் பார்த்தபடியால் இரவுகளை கண்ணீர்த் தடாகமாக மாற்றினார்கள். (எண்.14:1) அப்பொழுது தேவ மனிதர்களாகிய யோசுவாவும் காலேபும் உரைத்த சத்திய வார்த்தைகளைச் செவி சாய்த்துக் கேளுங்கள். "கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம் பண்ணாதிருங்கள்; அந்தத் தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை; அவர்கள் நமக்கு இரையாவார்கள்; அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப் போயிற்று; கர்த்தர் நம்மோடே இருக்கிறார்; அவர்களுக்குப் பயப்பட வேண்டியதில்லை" என்றார்கள். (எண்14:9) ஆகவே எல்லாச் சூழ்நிலையிலும் கர்த்தருக்குள் தைரியமாயிருங்கள். சூழ்நிலையின் கொடுமையைக் கண்டு பதறாதீர்கள், பயப்படாதீர்கள். பேதுரு இப்பொழுது தோல்வியின் அடையாளமாய் மாறிவிட்டான். இது நமக்கொரு பாடமாக இருக்கட்டும்.

**சந்தேகம் சங்கடத்தை உண்டாக்கி தோல்வியடைய செய்யும்**
**விசுவாசம் தோல்வியை வெற்றியாக மாற்றிவிடும்**

8
ஜூன்

# நல்ல ஆரம்பம்

"அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத் திராணியில்லாமற்போனால், பார்க்கிறவர்களெல்லாரும்; இந்த மனுஷன் கட்டத்தொடங்கி, முடிக்கத் திராணியில்லாமற்போனான் என்று சொல்லித் தன்னைப் பரியாசம் பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப் பாராமலிருப்பானோ?" (லூக்14:29, 30) என்று இயேசு அவனைக் குறித்துச் சொல்கிறார்.

நாம் நன்றாக ஆரம்பிக்கலாம். ஆனால் ஆரம்பித்ததை முடிக்க வேண்டுமே. ஆரம்பித்ததை முடிக்காத ஒருவனை இயேசு கிறிஸ்து நமக்கு முன் நிறுத்துகிறார். கட்டடம் கட்ட ஆரம்பித்தவன் ஒரு மனக்கணக்கு போட்டிருக்க வேண்டும், கட்டடத்திற்கு ஆகும் செலவைப்பார்த்து மேற்கொண்டு கட்டத் திகைக்கிறான். பணம் இல்லாததினால் அல்ல, இல்லாமையை ஒருவரும் பரிகாசம் பண்ண மாட்டார்கள். பணம் இருந்தும், செலவைப்பார்த்து, செலவழிக்க மனமற்றுப் போனான். சிமெண்ட், கல், மணல் என்ற பில்கள் வரவர கொடுக்கக்கூடாது என்று மனம் எதிர்தீர்மானம் போடவே, கட்டடம் பாதியில் நின்றது. காரணம் அவன் மனமே!

தம்மால் இந்தக் கடல் தண்ணீரில் நடக்க முடியுமோ என்று பேதுரு முதலாவது கணக்குப்பார்க்க வேண்டும். தண்ணீரின் ஆழம், எதிர்த்து வரும் சுழல்காற்று - இவைகளை அவன் எண்ணி யோசித்து, இவைகளுக்கு மேல் தேவனுடைய வார்த்தைக்கு அதிகாரம் உண்டு என்று அவன் விசுவாசித்திருக்க வேண்டும். அதுபோல ஆரம்பத்தில் பேதுருவுக்கு கடலும், காற்றும் பிரச்சனை இல்லை. ஆனால் வழியில் மனம்மாறிவிட்டது. அமிழ்ந்து விடுவோமோ என்ற பயம் மனதைக் கவ்விப் பிடிக்கவே, நடை பாதியில் நின்றுவிட்டது. நடப்பேன் என்று விசுவாசித்து ஆரம்பித்த மனம் அவனுக்கு இப்பொழுது கை கொடுக்கவில்லை. பிரச்சனையைத் தரிசித்து தடுமாறிப்போனான். பேதுருவின் தோல்விக்கு காரணம் அவன் மனமே. ஆரம்பத்தில் ஆவியில் தொடங்கினான். பயம் என்ற மாம்சீகத்தில் பாதியில் நடையை முடித்துவிட்டான். "ஆவியில் ஆரம்பம் பண்ணின நீங்கள் மாம்சத்தில் முடிக்க இத்தனை புத்தியீனர்களா?" (கலா.3:3) என்று பவுல் கேட்கிறாரே இப்படி புத்தியீனர்களாக நாம் மாறிவிடக் கூடாது.

மனம் எப்படியிருக்க வேண்டும் தெரியுமா? கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக்கொள்வது மாத்திரமல்ல, உறுதியாய்ப் பற்றிக் கொள்ளும் மனதுடையவனாகவும் ஒருவன் இருக்க வேண்டும் (ஏசா.26:3) என்று வேதம் சொல்கிறது. பேதுரு இயேசுவை நம்பி தண்ணீரில் நடக்க ஆரம்பித்தான், ஆனால் காற்றைக் கண்டதும் அவனது மனவுறுதி தளர்ந்து, மனம் நிலைகுலைந்தும் போய்விட்டது. அவன் மனம் ஆவியோடு ஒத்துழைக்க மறுத்தது. ஆகவே அமிழத் தொடங்கினான். தண்ணீரில் அவன் மூழ்குமுன் எதிரிடையான எண்ணங்களில் அவன் மனம் மூழ்கிவிட்டது. தேவ அழைப்பில் நிலைக்க வேண்டிய மனம் வழியில் கண்ட சூழ்நிலைகளினால் கலங்கிப்போயிற்று. பேதுருவின் வீர நடையும் தளர் நடையாகி, தவறிப்போகும் நடையாயிற்று.

**உன் எண்ணங்களைக் குறித்து எச்சரிக்கையாயிரு.**

9
ஜூன்

# திருப்தி இல்லாத உழைப்பு

"ஆசையானது அலைந்து தேடுகிறதைப் பார்க்கிலும் கண் கண்டதே நலம்". (பிர.6:9)

மனுஷன் படும் பிரயாசம் எல்லாம் அவன் வாய்க்காகத்தானே? அவன் மனதிற்கோ வெற்றியில்லை. மனிதன் உணவிற்காகவோ, பணத்திற்காகவோ பிரயாசப்படுகிறான். தன் வாழ்க்கையில் பல வருடங்களைக் கூட்ட மனிதன் பிரயாசப்படுகிறான். வருடங்களோடு வாழ்க்கையைக் கூட்டாமல், வாழ்க்கையோடு வருடங்களைக் கூட்டினால் என்ன பயன்? மனிதன் பறவையைப்போல வாழக் கூடாது. ஆகாரத்திற்காக அங்கும் இங்கும் பறப்பதும், பகைவரிடமிருந்து தப்பித்துக் கொள்வதும் பறவையின் வாழ்க்கை. பறவைகள் பிழைக்கின்றன, ஆனால் வாழவில்லை, ஆனாலும் பறவைகள் கடவுளைத் துதித்துப் பாடுகின்றன.

சகோதரனே, மனிதன் வாழ்க்கை முழுவதையும் உண்பதற்கும், உழைப்பதற்குமே செலவழித்தால், மிருகத்திற்கும் மனிதனுக்கும் வித்தியாசமில்லை. மிருகம் எப்பொழுதும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே முந்திக் கொள்கிறது. தன்னைக் காப்பாற்றிக் கொள்வதுதான் சிருஷ்டியின் முதல் சட்டம். (The first law of life) தன்னைக் காப்பாற்றிக் கொள்ள மாத்திரம் ஒரு மனிதன் வாழ்ந்தால் அவன் மிருகம். பிறருக்காக நம் ஜீவனை இழந்துபோவது புது சிருஷ்டியின் முதல் சட்டம். புதிய சிருஷ்டியின் முதல் சட்டத்தை தள்ளிவிட்டு, நம்மைக் காக்க பிரயாசப்படுவோமானால் அந்தப் பிரயாசை நம்மைத் திருப்திப்படுத்தாது.

மனிதன் ஞானத்திற்காக அறிவிற்காக மிகுந்த பிரயாசப்படுகிறான். தேவனற்ற ஞானத்தினால் அறிவினால் என்ன பயன்? மனித ஞானம் சந்திர மண்டலத்திலிருந்து பூமிக்கு படங்களை அனுப்புகிறது. அதே ஞானம் தொலைக்காட்சியில் சின்னத்திரையை அசுத்தத்தாலும் தீவிரவாதத்தாலும் கறைபடுத்துகிறது. தேவனற்ற ஞானத்தின் பிரயாசம் விருதா. ஆசையானது அலைந்து தேடுகிறதைப் பார்க்கிலும் கண் கண்டதே நலம். (பிர.6:9) அப்படியானால் ஆசையே தவறா? ஆசையை அறவே ஒழி என்ற பக்தனின் வார்த்தைதான் சத்தியமா? இல்லை. நமது ஆசைகள் ஆவியானவரால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். நமது ஆசையின் முடிவு பரமபிதாவை மகிமைப்படுத்த வேண்டும்.

சகோதரனே! சகோதரியே! நமது ஆசைகள் மற்றவர்களுக்கு நன்மையாய் முடியவேண்டும். தேவ சித்தத்தை நிறைவேற்றுவதே நம்முடைய ஆசையாயிருக்க வேண்டும். தேவ சித்தமே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்கு உணவாயிற்று. தேவ சித்தத்திற்கு மாறான எந்தப் பிரயாசத்திலும் நமக்கு திருப்தி வராது.

**ஆசை சமூகப்பணி என்ற அன்புப் பாசறையாய் அமைய வேண்டும். சுயநலமென்ற தொட்டிலாய் மாறிவிடக்கூடாது.**

10
ஜுன்

# தவறான இடம்

"யாக்கோபு... சீகேமுடைய பட்டணத்திற்கு அருகே சென்று எதிரே கூடாரம் போட்டான். அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு ஏல்எல்லோகே இஸ்ரவேல் என்று பேரிட்டான்."
(ஆதி.33:18,20)

இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய பிள்ளையாகிய பரிசுத்தவான் என்று பெயரெடுத்த பின்பும் கூட வழி விலகி ஜீவிக்கும் வாய்ப்பு இருக்கிறது. There is a way to hell even from the gate of heaven என்று ஒரு பழமொழி இருக்கிறது. பரலோகத்தின் வாசலிலிருந்தும் பாதாளத்துக்கு ஒரு வழி இருக்கிறது. ஆகவே எல்லா பரிசுத்தவான்களும் மிகுந்த ஜாக்கிரதையோடு இருக்கவேண்டும். யாக்கோபு என்ற தேவப் பிள்ளையின் தவறானப் பாதை நமக்கு ஒரு எச்சரிப்பின் பாதையாயிருக்கட்டும். அந்த பாதையைத் தொலை தூரத்திலிருந்து உற்று நோக்குங்கள்.

சீகேம் பட்டணத்திலே யாக்கோபு பலிபீடத்தைக் கட்டியது முறையற்றது. பாவமும் அக்கிரமும் நிறைந்த அந்தப் பட்டணத்தில் தேவனுக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டுவது மாம்சீகமான மதமே தவிர தெய்வீக ஆராதனையன்று. இந்த மதம் மாம்சீகத்தைத் திருப்திப்படுத்துமே தவிர தேவனைத் திருப்திப்படுத்தாது. சீகேமின் வாலிபர்கள் அந்தப் பலிபீடத்தை அடித்து நொறுக்கியிருப்பார்கள். யாக்கோபினுடைய ஐசுவரியத்தின் நிமித்தம் அந்த பலிபீடத்தைக் கண்டும் காணாமல் விட்டு விட்டார்கள். தெய்வ பயத்தை நினைவூட்டுகிற பலிபீடம் ஒரு அலட்சியப் பொருளாயிற்று. சகோதரனே, சகோதரியே! உன் ஜெபத்தை, பக்தியை உன்னைச் சுற்றிலுமாய் இருக்கிற ஜனங்கள் ஒரு பொருட்டென்று எண்ணவில்லையா? ஆவிக்குரிய ஜீவியத்தில் நீ தவறான இடத்தில் இருக்கிறாய்.

பலிபீடத்துக்கு நல்ல பெயரிட்டான். "ஏல்எல்லோகே இஸ்ரவேல" என்றால் "இஸ்ரவேலின் தேவாதி தேவன்" என்று அர்த்தம். (God the God of Israel) இந்தப் பலிபீடம் தேவனைப் பற்றிய அவனுடைய அறிவை வெளிப்படுத்துகிறது. ஆனால் பலிபீடம் கட்டப்பட்ட இடமோ அவனுக்கும் தேவனுக்கும் தொடர்பில்லை என்பதைக் காட்டுகிறது. தேவனது பார்வையில் தான் சரியாயிருக்கிறேன் என்று காட்டுவதற்கே இந்தப் பெயரிட்டான். பலிபீடத்தின் பெயருக்கும் அவன் ஜீவியத்திற்கும் சம்பந்தமே இல்லை. கன்மலையைப் பெயர்ப்பது போன்று விசுவாச முழக்கம், பிரசங்கியார் மேடையிலே. ஆனால் சின்னஞ்சிறு பிரச்சனையிலும் துவண்டு சோர்ந்து வீழ்வது வீட்டினிலே. ஆம்! பிரசங்க மேடை பெத்தேல், குடும்ப வாழ்வு சீகேம். இது தவறான இடம். யாக்கோபு தங்கியிருக்க வேண்டிய இடம் பெத்தேல். இப்பொழுது அவன் தங்கியிருக்கும் இடம் சீகேம் தவறான இடம்.

**உன் ஆராதனை பெத்தேலிலா? சடங்காச்சார சீகேமிலா? சீக்கிரமாய் உன்னை ஆராய்ந்து பார்.**

11
ஜூன்

# துன்பத்தின் ஆசிர்வாத முடிவு

"என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியம் அடையும் படிக்கு நீர் வந்து, அவள்மேல் உமது கைகளை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்." (மாற்கு 5:23)

துள்ளி விளையாடிய அவன் அருமை மகள் சோர்வுற்று படுக்கையில் விழுந்த வேளை ஏதோ உடல் களைப்பு என்று எண்ணியிருந்தான். அதுவே கொடூர வியாதியாய் உருவெடுத்து கல்லறைக்கு இழுத்துச் செல்லத் துடிக்கும் என்று அவன் எண்ணிப் பார்க்கவில்லை. இந்த இருண்ட நேரம், தாங்க முடியா இந்தத் துயரம் அவனுக்கு இயேசுவை காட்டியது. தேவனற்ற ஐசுவரியத்தைவிட இயேசுவிடம் வழி நடத்தும் வறுமை ஆசிர்வாதமாகும். இதுவே நெருக்கத்தின் ஆசிர்வாதமாகும். ஜீவனற்ற ஜெப ஆலயம் அவனுக்கு உதவி செய்ய மறுத்தது. ஜீவனுள்ள இயேசுவை அவன் கண்டான். பரிசேயக் கூட்டமோ, வேதபாரகர்களோ அவனுக்கு உதவி செய்ய முடியாமல் வெறுமையாய் நின்றனர்.

தேவாலயத்திலும் பெரியவரான இயேசுவுக்கு முன் ஜெப ஆலயம் வெறும் கட்டடமாய் இருந்தது. ஜீவனற்ற ஆலய கட்டடங்கள் சத்தியத்தின் கல்லறைகள். நம்பிக்கையற்ற அந்த வேளையில் அவனது ஒரே நம்பிக்கை இயேசு என்ற நம்பிக்கை நட்சத்திரமே. பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரட் தாட்சர் நெருக்கடியான அரசியல் சூழ்நிலைகளில் அடைக்கலம் தேடிய ஜீவ வார்த்தைகள் "தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர்". (சங்.46:1) இந்த வசன வெளிச்சத்தை பரப்பிக் கொண்டே இருந்தது மார்கிரட் தாட்சரின் அரசியல் வாழ்க்கை. இத்தகைய நம்பிக்கையே யவீருவை இயேசுவண்டை கொண்டுவந்து நிறுத்தியது.

யவீரு நேரடியாய் இயேசுவினிடத்திற்குச் சென்றான். "உமது கைகளை வையும், அப்பொழுது அவள் பிழைப்பாள்" என்றான். இந்தக் கரத்தை மாத்திரமே நீயும் நம்பவேண்டும். இஸ்ரவேலிலே ஒருவன் குஷ்டரோகியைத் தொட்டால், தொட்டவன் தீட்டுப்படுகிறான். ஆனால் இயேசு கிறிஸ்து ஒரு குஷ்டரோகியைத் தொட்டவுடன் நியாயப்பிரமாண சட்டங்கள் நிலை குலைந்து குஷ்டரோகி சொஸ்தமடைகிறான். இந்த அற்புதக் கரம் உன்னைத் தொட வாஞ்சையாய் இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது உன் இருதயத்தில் வெளிச்சமில்லா காரணத்தினால்தானே இரவல் விளக்குகளை வாங்கச் செல்கிறாய்? இயேசுவின் வார்த்தை உன்னைத் தொடும்; உன் வாழ்வு மலரும். இந்த வெளிச்சம் உன்னைப் பிரகாசிப்பிக்கட்டும்.

**எந்தச் சூழ்நிலையும் அவர் கரத்திற்கு அப்பால் இல்லை என்கிற வெளிச்சம் முதலாவது உன் இருதயத்தில் பிரகாசிக்கட்டும்.**

12
ஜூன்

# மேகம் என்ற கல்விக் கூடம்

ஒரு மேகம் வந்து அவர்கள் மேல் நிழலிட்டது. அவர்கள் அந்த மேகத்துக்குள் பிரவேசிக்கையில் சீஷர்கள் பயந்தார்கள். (லூக்கா 9:34)

மேகம் என்ற கல்விக் கூடத்தின் சிறப்புப் பாடங்கள் "பாடுகளும், சிலுவையும்." 'தைரியமாய் வா' என்பது தேவனது அழைப்பு! மேகத்தைக்கண்டு சீஷர்கள் பயப்படுகிறார்கள், மேகம் காட்டும் காட்சி சிலுவை! மேகத்தின் மேலுள்ள வானவில் காட்டும் காட்சி சிங்காசனம்! நீ சிலுவைப் பாடத்தை ஒழுங்காய்ப் படித்தால், சிங்காசனத்தில் அமர்வாய்! இந்த மேகத்தில் ஆயிரம் ஆயிரம் செய்திகள் இருக்கலாம். ஆனால் எந்தச் செய்தியை மறந்து போனாலும் இந்த மேகத்திற்குள் கர்த்தர் இருக்கிறார் என்பதை மறந்து விடாதே.

"உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன்" (யாத்.19:9) என்று தேவன் சொல்கிறார். சில அனுகூலமற்ற சூழ்நிலைகள் தேவ சமுகத்தைச் சுமந்து வரும். அந்தக் கார்மேகம் மூலம் தேவ மகிமை வெளிப்படும். எபிரேய வாலிபர்கள் தீ நாக்குகளின் நடுவில் தூக்கியெறியப்பட்டதும், அக்கினி நாவுகள் செயலற்றுப் போய்விட்டன! அவர்களின் வஸ்திரங்களைக் கூட அந்த அக்கினியால் பட்சிக்க முடியவில்லை! ஆம் அக்கினிச் சூளை என்ற கார்மேகத்தில் கர்த்தரும் இருந்தார். நான்காம் ஆளாக, திரித்துவத்தின் இரண்டாம் ஆளான இயேசு அங்கே உலாவினார். அநேகக் கார்மேகங்கள் உன்னைத் தேவன் பக்கம் இழுக்கின்றன. ஆகையால் மேகங்களைக் கண்டு கலங்காதே!

"நான் உபத்திரவப்பட்டது நல்லது; அதனால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொண்டேன்." (சங்.119:71) ஆம்! கார்மேகங்கள் கர்த்தரின் பிரமாணத்தை நமக்கு கற்றுக் கொடுக்கும். இருண்ட மேகங்கள் பிரகாசமான ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும்.

செங்கடல் ஓரம் இஸ்ரவேல் மக்கள் நிற்கும் பொழுது இராக் காலம் முழுவதும் பலத்த காற்று வீசியது! கார்மேகங்கள் சூழ்ந்துக் கொண்டன! இஸ்ரவேலர் நடுங்கித் திகைத்தனர். கர்த்தரோ செங்கடலைப் பிளந்து, எகிப்துக்கு தண்ணீர்க் கல்லறையை உருவாக்கினார்! இஸ்ரவேலர் கடந்து போகும் பாதை, எகிப்தியருக்கு கல்லறையின் வாசலாயிற்று! ஆரம்பத்தில் நடுங்க வைத்த மேகம், ஆசீர்வாத மழையைப் பெய்தது! சகோதரனே! சகோதரியே! உன் வாழ்க்கையில் துன்பமெனும் கார்மேகங்கள் சூழும்பொழுது, தேவனது உடன்படிக்கையான வானவில்லைப்பார்!.

**தேவனில்லாமல் ரோஜா தோட்டத்தில் நின்று கொண்டிருப்பதினால் பயன் என்ன? தேவனோடு அக்கினிச் சூளையில் உலாவுவது அதை விட மேன்மையானது.**

13
ஜுன்

# மனசோர்வு மாமனிதனையும் அசைத்துவிடும்

"நான் சாகவேண்டும், போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல" (1இரா.19:4)

எலியா மிகச் சலிப்புடன், ஒரு சூரைச் செடியின் கீழ்ப்படுத்துவிட்டான். இந்த மனநிலைக்கு காரணம் எலியாவின் தோல்வி மனப்பான்மையே. யேசபேலின் கொடிய வார்த்தைகளுக்கு. கொலை மிரட்டல்களுக்கு அவன் அஞ்சவில்லை. தன் தேவன் தன்னை இந்த விக்கிரக ஆராதனைக்காரியின் கையில் ஒப்புக் கொடுக்க மாட்டார் என்று அவனுக்குத் தெரியும். "விக்கிரக ஆராதனையை இஸ்ரவேலில் ஒழித்துவிட்டேன்; அதன் பலனாகத் தேசத்தில் மழையையும் கட்டளையிட்டுவிட்டேன். தேசம் தண்ணீரால் நிரம்பி ஓடுகிறது. யேசபேல் தலைகுனிந்து நிற்பாள்" என்று எலியா எண்ணியிருந்தான். ஆனால் அவனது எதிர்பார்ப்புக்கு மாறாக, அவள் அடிபட்ட புலியாக சிலிர்த்து எழும்பி, "...நாளை இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதே போனால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்கு செய்யக்கடவர்கள் என்று சொல்லச் சொன்னாள்." (1இரா.19:2)

தேவர்கள் என்று யேசபேல் கூறியதைக் கேட்டதும், எலியா சோர்ந்துப் போனான். இத்தனைப் பிரயாசத்திற்குப் பிறகும், விக்கிரக ஆராதனை கொலுமண்டபத்தில் வீற்றிருப்பதைக் கண்டு தன் ஊழியம் படுதோல்வி அடைந்துவிட்டதாகத் தவறாக எண்ணினான். இந்தத் தவறான எண்ணமே, எலியாவை மிகவும் மனச்சோர்வுக்குள் தூக்கி எறிந்துவிட்டது. தேவனது பாதுகாப்பும், ஆதரவும் பெற்ற தாவீது அசையாமலிருந்திருக்க வேண்டும். சூழ்நிலைகள் எப்படி மாறினும், தேவன் மாறமாட்டார் என்பதை எண்ணி மன உறுதியுடன் இருக்க வேண்டிய தாவீது சூழ்நிலைகளுக்குப் பயந்து, விசுவாசத் தளர்ச்சியில் சொல்கிறான். "எந்த நாளாகிலும் ஒரு நாள் சவுலின் கையில் நான் மடிந்துபோவேன்." (1சாமு.27:1) இப்படி ஒரு தவறான சிந்தனையின் முடிவிற்கு வந்தான். அதன் விளைவாக அவன் பாதை தவறினான். இஸ்ரவேலின் விரோதியான பெலிஸ்தியரிடத்தில் அடைக்கலம் புகுந்தான். அது முதற்கொண்டு காரியங்கள் தாவீதுக்கு எதிரிடையாக நேரிட ஆரம்பித்தன

என் அருமையான சகோதரனே, சகோதரியே, தேவனைப் பற்றிய தவறான எண்ணங்கள் உன் பாதையை தாறுமாறாக்கிப் போடும். சுகமடைந்து கொண்டிருக்கும் வியாதியை மரணக் கண்ணி என்று எண்ணிக் கலங்குகிறாய். தென்றலைப் புயலென எண்ணி அஞ்சுகிறாய். ஆகவே தேவனது வார்த்தைகளுக்குள் சமாதானத்தைத் தேடு.

**எண்ணங்களை கிறிஸ்துவுக்குள் வெளியே அலையவிடாதே. தோல்வியை விட பயங்கரமானது தோல்வி மனப்பான்மை.**

# 14
ஜூன்

# தேவன் யார்?

"நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்" (2தீமோ.1:12)

தேவனைப் பற்றிய சரியான அறிவு இல்லாதது மிகப்பெரிய ஆவிக்குரிய பிரச்சனைகளை உருவாக்கிவிடுகிறது. தெளிவானக் கொள்கை இல்லாததால் திருச்சபைகளும் திசை திரும்பிவிட்டன. கர்த்தர் யார் - இயேசு யார் என்ற தெளிவின்மையால், அநேக விசுவாசிகள் வாழ்க்கையில் வியாதி, தோல்வி, ஏமாற்றம் இவைகளைச் சந்திக்கும் திராணியின்மையால் விசுவாசப் பாதையை விட்டு விலகிச் செல்கின்றனர்.

சந்திரரோகியான தன் மகனை சீஷர்களால் சுகப்படுத்த முடியவில்லை. உடனே இனி இயேசுவின் நாமத்தில் ஊழியம் செய்யமாட்டோம் என்று சீஷர்கள் முடிவெடுக்காமல் இயேசுவினிடத்தில் தனித்துவந்து அதைத் துரத்திவிட தங்களால் ஏன் கூடாமல் போயிற்று என்று கேட்டார்கள். (மத்.17:16)

"நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்" (2தீமோ.1:12) என்ற பவுலின் அறிக்கை நம் ஆவிக்குரியச் சிந்தனையைத் தூண்டவேண்டும். அனேகர் இயேசுவைச் சரியாகப் புரிந்துக்கொள்ளாததால் பவுல் இந்த வார்த்தைகளை அழுத்தமாகக் கூறுகிறார் தனக்குத் தெரியும் என்பது பவுலின் மூளை அறிவு இல்லை - இருதய அறிவு. அன்று இயேசுவைத் தங்கள் கண்களினால் பார்த்தார்கள். அவருடைய புறத்தோற்றம் அவர்களுக்குத் தெரியுமே தவிர உள்ளான இயேசுவை அவர்களுக்குத் தெரியாது.

அனேக விசுவாசிகளுக்கு வேத எழுத்துக்களின் புறத்தோற்றம் தெரியுமே தவிர, அவைகளின் ஆவிக்குரிய அர்த்தம் தெரியாது. அவர்களுடைய ஆவிக்குரிய கண்களுக்குச் சரியான பார்வை கிடையாது. பவுலுக்கு சரியான ஆவிக்குரிய பார்வை இருந்தபடியால், அவரால் இயேசுவை அறிவேன் என்று சொல்ல முடிந்தது. இயேசுவைப் பற்றி தெரியுமென்றால், வரலாற்று இயேசுவைத் தெரியும் என்று பொருள், இந்த வரலாற்று இயேசுவைப் பற்றித் தெரிந்துக் கொள்ள பரிசுத்த ஆவியானவர் தேவையில்லை. இந்த அறிவினால் பெரிய பயன் ஏதும் இல்லை. இந்த இயேசுவிற்கு நம்மை அர்ப்பணிக்கத் தேவை இல்லை. நான் இயேசுவை அறிவேன் என்றால் ஆவிக்குரிய இயேசுவை அறிவேன் என்று பொருள் இப்படி அறிந்துக்கொள்ள பரிசுத்த ஆவியானவரின் உதவி தேவை. இந்த இயேசுவிற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும். வரலாற்று இயேசு தம்மை வெளிப்படுத்த மாட்டார். வேதாகம இயேசு தம்மை வெளிப்படுத்துவார்.

**தேவ வார்த்தை – தேவ சமூகம் இந்த வெளிச்சத்தில் மட்டுமே நட... உன் துக்கம் சந்தோஷமாக மாறும், உன் துக்க நாட்கள் முடிந்துபோகும். உன் ஆத்துமாவில் நீதியின் சூரியன் உதிக்கும்.**

**15**
**ஜூன்**

# சுவரில் படரும் கொடி

"இந்தப் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு." (யோவான் 10:16)

யோசேப்பு சுய நலக்கொடி அல்ல; அவன் சுவரின் மீது படர்ந்து அண்டை வீட்டிற்கும் கனி கொடுக்கிறவனாயிருந்தான். இயேசு கிறிஸ்துவும் இஸ்ரவேலருக்காக மட்டும் கனி கொடுக்கவில்லை. அவரது கனி அன்னியருக்கும் கூடத்தான். சபையாகிய தொழுவத்திலில்லாத ஆடுகளுக்கு உங்களால் பலன் உண்டா? சுவரில் படரும் கொடி பக்கத்து வீட்டுக்கு ஆசீர்வாதமாக இருப்பதுபோல், உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையினால் பிறருக்கு ஆசீர்வாதம் உண்டா? உங்கள் சொந்த வீட்டிற்கு மட்டும் நீங்கள் கனி கொடுத்தால் அதனால் பயன் என்ன? ஊழியக்கார சகோதரனே, மந்தைக்கு வெளியே அலையும் ஆடுகளுக்கு உங்கள் ஜீவியம் ஆவிக்குரிய ஆகாரமாக இருக்கிறதா?

எகிப்து தேசத்தில் யோசேப்பு ஆசீர்வாதமாக இருந்தான். அந்நியர்களுக்கு அவன் சுவரில் படரும் கொடியாக இருந்தான். எப்படி அவனால் ஆசீர்வாதமாக இருக்க முடிந்தது? அவன் ஆத்துமா அவனைச் சுற்றியே அலைந்துக் கொண்டிருக்கவில்லை. "இஸ்ரவேல் பலனற்ற திராட்சச் செடி, அது தனக்குத்தானே கனி கொடுக்கிறது" (ஓசி 10:1) என்று வேதம் குற்றப்படுத்தும் தன்னலச் செடி அல்ல யோசேப்பு. சபை தன்னலக் கொடியாய் இருந்தால் அது பலனற்றச் செடி. உள்ளுக்குள் கிளைகளும் கொடிகளுமாய்ப் படர்ந்திருப்பதல்ல சபை. அது சமுதாயச் சுவரைத் தாண்டிப் படர வேண்டும்.

"திராட்சை செடிக்கு மேன்மை என்ன? யாதொரு வேலை செய்ய அதிலே ஒரு கட்டை எடுக்கப்படுமோ? யாதொரு தட்டுமுட்டைத் தூக்கி வைக்கும்படி ஒரு முளையை அதினால் செய்வார்களா?" (எசே. 15:3) திராட்சச் செடியின் ஒரே வேலை கனி கொடுப்பதே. கிறிஸ்தவனின் கடமை ஆவியின் கனி கொடுப்பதே. ஆனால் சிலர் கனி கொடுப்பது சுய மேன்மைக்காக. தங்களுடைய சுய மகிமைக்காக உழைப்பது, ஓடுவது, உதவுவது என்றிருந்தால் அவை சுவரில் படராத கொடிகள்.

"மனுஷர் உங்கள் கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்5:16) என்ற வசனத்தின்படி வாழ்பவர்களே சுவரில் படரும் கொடி.

**அவனவன் தனக்கானவைகளையல்ல,**
**பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.**

**16**
**ஜூன்**

# தனிப்பட்ட விசுவாசம்

"நாம் தைரியங் கொண்டு, கர்த்தர் எனக்கு சகாயர். நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்?" (எபி.13:16)

நாம் என்று பன்மையில் ஆரம்பித்த விசுவாச தைரியம், அனுபவரீதியில் நான், எனக்கு என்று ஒருமையில் தனிப்பட்ட விதமாக உருவாகிறது. ஒரு சமுகத்தின், ஒரு சபையின் பொது விசுவாசத்தைவிட தனிப்பட்டவர்களின் விசுவாசம் மிகவும் முக்கியமானது. "கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார்; நான் பயப்படேன் மனுஷன் எனக்கு என்ன செய்வான்?" (சங் 118:6) என்பது முதலாவது தாவீது செய்த அறிக்கை. மிகுந்த உபத்திரங்களுக்கு மத்தியில் தாவீதை விழுங்கப் பார்க்கையில் அவன் இந்த நம்பிக்கையை எடுத்தான்.

கடவுள் ஒருவனுக்கு அனுகூலமாக இருந்தால், மனுக்குலமே அவனுக்கு எதிராக இருந்தாலும் அவன் பயப்படத் தேவை இல்லை. தான் கஷ்டப்படமாட்டேன் என்று தாவீது சொல்லவில்லை. நான் பயப்படமாட்டேன் என்று தான் கூறுகிறான். தாவீதின் அறிக்கையை பவுல் தனக்குச் சொந்தமாக்கினார். பவுலின் அறிக்கையை நாமும் சொந்தமாக்க வேண்டும். உங்கள் சூழ்நிலை முழுவதுமே உங்களுக்கு எதிராக இருந்தாலும் கர்த்தரை விசுவாசியுங்கள். அவர் உங்களில் மகிமைப்படுவார்.

இந்த நம்பிக்கையைத்தான் யோசுவாவிற்குக் கர்த்தர் கொடுத்தார். புதிய பொறுப்புகளை ஏற்கப்போகும் வேளையில் யோசுவா கடவுளின் சமுகத்தில் மிகவும் ஆறுதல் அடைந்தான். தன்னை கைவிடாத, தன்னை விட்டு விலகாத அவருடைய சமுகமே யோசுவாவிற்கு மிகுந்த அடைக்கலமும் பாதுகாப்பும்.

ஆர்டிக் கடல் பறவைகள் கடற்கரையில் வரிசையாக முட்டையிடும். அவற்றில் ஒன்றினை இடம் மாற்றி வைத்தால் தாய்ப் பறவை அந்த முட்டையை இனம் கண்டு மீண்டும் தம் முட்டைகளின் வரிசையில் திரும்ப வைத்துவிடும். இப்படி ஒரு பறவைக்கு ஞானம் இருக்குமெனில் சர்வ வல்லவரின் ஞானம் உங்களை மறக்குமா?

**சூழ்நிலை உங்களை இடம் மாற்றி வைத்தால் கர்த்தர் உங்களை இருக்க வேண்டிய இடத்தில் வைப்பார்.**

17
ஜூன்

# வாழ்க்கையில் லாப நஷ்டங்கள்

"ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்." (பிலி.3:7)

வாழ்க்கை ஓரே சீராக இருப்பதில்லை, தென்றல் வீசும் நாள்களும் உண்டு; புயல் வீசும் வாரங்களும் உண்டு. இந்த மாறுப்பட்ட, வேறுபட்ட சூழ்நிலைகளில் ஆத்துமா கடவுளைப் பற்றிக் கொள்ளுமானால் அந்த மனிதன் கிறிஸ்துவுக்குள் வளருகிறான். வருடங்கள் கழிந்து போவதால் ஒரு மனிதனுக்கு வயதாகி விடுவதில்லை. அவன் வளருகிறான். வயதாவது என்பது வேறு; வளர்ச்சி என்பது வேறு. வயதான எல்லாரும் வளர்ந்தவர்கள் அல்ல.

கடந்த போன வருடங்களை மறக்கிறவனே புதிய வருடத்தில் வளருகிறான். தனக்கு தன் சகோதரர்களால் செய்யப்பட்ட எல்லா அநியாயங்களையும், யோசேப்பு மறந்ததினால் எகிப்து தேசத்திலே அவன் ஆவிக்குரிய மனிதனாக வளர முடிந்தது. நம்முடைய நஷ்டங்களை நம்மால் மறக்க முடியாவிட்டால் கிறிஸ்து நமக்கு லாபமாக இருக்க மாட்டார். நம்முடைய நஷ்டங்களை நம்மால் மறக்கமுடிந்த நிலையில் உங்கள் ஆத்துமா இருந்தால்தான் நீங்கள் கர்த்தருக்குள் அமர்ந்திருப்பீர்கள். எந்தச் சூழ்நிலையிலும் அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும். அப்படியிருக்க உங்கள் ஆத்துமா தவறிப்போனால் நீங்கள் சிந்தனைக் குதிரை மீது ஏறி, பல திசைகளில் ஓடுவீர்கள், பிரச்சனை பல திசைகளில் கடுவேகமாக உங்களைத் துரத்தும். (ஏசா.30:15,16)

பெற்றோர்களுக்கு ஒரு அன்பு வார்த்தை, உங்கள் பிள்ளைகள் ஒரு தீர்மானம் எடுத்தால் நீங்கள் முதலாவது கவனிக்க வேண்டியது, உங்கள் பிள்ளைகள் எடுத்த தீர்மானம் அவர்கள் வயதானதால் எடுத்த தீர்மானமா அல்லது அவர்கள் வளர்ந்து விட்டதால் எடுத்த தீர்மானமா? வயது வந்ததால் மாத்திரம் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டால் அந்த தீர்மானத்தை நீங்கள் தள்ளிவிடலாம், அவர்கள் வளர்ந்ததினால் எடுத்த தீர்மானம் எனில் அதை கிறிஸ்துவுக்குள் ஜெபத்தில் வையுங்கள். ஏனெனில் வளர்ந்த பிள்ளைகளின் தீர்மானம், ஆத்தமாவில் பிறக்கும் தீர்மானம்.

தனக்கு நேரிட்ட பொல்லாப்புகள், உபத்திரவங்கள், நெருக்கங்கள் இவையெல்லாவற்றிலும் கர்த்தர் தனக்கு நன்மையே செய்கிறார் என்று நம்பி, "நீரே இதைச் செய்தீர்" என்று தாவீதின் ஆத்துமா அமர்ந்திருந்தது.

**கிறிஸ்துவினிமித்தம் லாபங்களை நஷ்டமென்று எண்ணுகிற ஆத்துமாதான் வளரும் நிலையில் இருக்கிறது.**

18
ஜுன்

# நிறைவான கூடைகள்

"எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளைப் பன்னிரெண்டு கூடை நிறைய எடுத்தார்கள்." (மத்.14:20)

வனாந்தரமான இடம். நேரமோ அனுகூலமற்ற வேளை. இரவு சீக்கிரம் சூழப்போகிறது. வீடுகளோ தொலை தூரம்! ஜனங்களின் உற்சாகம் பசியினால் குறைந்தது. இன்னும் அவர்கள் வீடுவரை மேற்கொள்ளும் நடை பயணத்தில் அவர்களது சந்தோஷம் முற்றிலும் குறைந்துவிடும். இதனின்று விடுவிக்க இயேசு விரும்பினார். "ஜனங்களுக்கு ஆகாரம் கொடுங்கள்" என்று இயேசு கட்டளையிட்டார். சீஷர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒன்றும் புரியா நிலையில் அங்கும் இங்கும் பார்க்கும்பொழுது ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்கள் மாத்திரம் ஒரு கூடையில் இருக்கக் கண்டார்கள். 'இது மிகவும் குறைவு' என்று அறிவு கூறியது! கர்த்தரோ பரலோகத்தை நோக்கி தன் கண்களை ஏறெடுத்து ஜெபம் பண்ணினார். அதன் பின்பு "ஜனங்களுக்குக் கொடுங்கள்"என்று உத்தரவிட்டார்.

என் அருமை சகோதரனே, சகோதரியே உன் வாழ்க்கை வனாந்திரமாய் தோன்றலாம். உன் பணப்பை ஏறக்குறைய வெறுமையாய் கொஞ்சப் பணத்தோடு இருக்கலாம். உன் சரீரத்தில் ஆரோக்கியம் குறைந்திருக்கலாம். இச்சூழ்நிலையிலிருந்து விடுபட ஒரு மார்க்கமும் உனக்குத் தெரியவில்லை. ஆனால் அன்று வனாந்தரத்தில் ஜனங்களின் குறைவைக் கண்டு பாரப்பட்டு நின்ற இயேசு, உன் நிலைமையைக் குறித்தும் வருந்துகிறார் என்பதை நீ மறந்துவிடாதே. உன் குறைவையும் நிறைவாக்க வழியொன்றைக் காட்டுவார். நெருக்கத்தில் கர்த்தர் வானத்தை நோக்கி ஜெபம் பண்ணினார். நீயும் என்ன செய்யலாம், என்ன செய்யலாம் என்று இதயத்தை கசக்கிப் பிழியாமல் கர்த்தரை நோக்கி அமைதியாய் அமர்ந்திரு. "தமது ஐசுவரியத்தின்படியே உனது குறைவுகளையெல்லாம் மகிமையில் நிறைவாக்குவார்" என்ற பவுலின் வார்த்தைகள் உன் இதயத்தை நிரப்புவதாக!.

கூடை நிறைய மீன்களைக் கண்டதும் பசித்த ஜனங்கள் முண்டியடித்துக் கொண்டு 'எனக்குத் தா, எனக்குத்தா' என்று ஒழுங்கு தவறிவிடவில்லை. அவர்கள் பசியோடிருந்தாலும் புல்லின் மேல் ஒழுங்காகப் பந்தியிருந்தார்கள். உன் ஆத்துமாவும் அங்குமிங்கும் அலைபாயாமல் உன் வாழ்க்கை ஒரு விருந்தாகும் என்ற நம்பிக்கையில் பந்தியிருப்பதாக! அவர்கள் எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். மீதியான உணவு பனிரெண்டு கூடைகளை நிறைத்தன. சூழ்நிலைகளுக்கு மேலாக கிரியை செய்கிறவர் இயேசு. ஆகவே உன் சூழ்நிலைகள் இன்று எப்படியிருந்தாலும் உன் வெறும் கூடையான வாழ்க்கையைக் கர்த்தரிடத்தில் கொடு. கர்த்தர் அதை நிரப்புவார்; உனக்கு குறைவு ஒன்றும் ஏற்படாது. இயேசு உன் மீது கருத்துள்ளவராய் இருக்கிறார்.

**கர்த்தர் உன் வெறுமையை நிறைவாக்குவார். வெறும் கூடைகள் நிறைந்தது போல உன் வாழ்க்கையும் நிறையும்.**

19
ஜூன்

# தீர்மானம்

"நான் தாழ்ச்சியடையேன்" (சங் 23:1)

பல இக்கட்டான சூழ்நிலைகளில் நான் தாழ்ச்சியடையேன் என்ற உறுதிக்கு வருகிறான் தாவீது. அவன் வாழ்க்கையில் பல குறைவுகள் இருந்தன. அவனது ஆலோசனைக்காரனான அகித்தோப்பேலை அவன் இழந்தான். அவனது அன்பு மகன் அப்சலோமுடைய அன்பையும் இழந்தான். மற்றொரு மகனான அதோனியாவின் பாசத்தையும் அவன் இழந்தான். பக்கபலமான படைத்தளபதி யோசுவாவையும் இழந்தான். மனைவியின் மதிப்பையும் இழந்தான். இத்தகைய சூழ்நிலையில் "நான் குறைவுபட்டேனே" என்றுதான் மனிதன் வருந்துவான். தாவீதோ " நான் தாழ்ச்சியடையேன் " என்று உறுதியோடு கூறுகிறான்.

பொதுவான கஷ்டங்களில் மனிதன் தன்னை துரதிஷ்டக்காரன், தரித்திரன், பிறக்க வேண்டாதவன் என்றெல்லாம் சபித்துக் கொள்வான். ஆனால் தன் நெருக்கங்களில் தாவீது கர்த்தரை மேய்ப்பராகவும் தன்னை ஆடாகவும் எண்ணினான். ஆடு, நாயைப்போன்று விலை மதிப்பில்லாத ஒரு மிருகமல்ல. ஆடு என்பது சொத்து. ஆகவே தன்னை தேவனது சொத்தாக தாவீது நம்பினான். என் போராட்டம், என் வேதனை என்று மனிதன் பிரச்சனைகளை தனக்கு சொந்தமாக்கிக் கொள்கிறான். தாவீதோ கர்த்தரை "என் மேய்ப்பர்" என்று சொந்தம் பாராட்டினான். இப்படிப்பட்ட நெருக்கங்களில் சாதாரண மனிதன் கடவுள் எனக்கு அநியாயம் செய்துவிட்டார். கடவுளுக்கு கண்ணில்லை என்றெல்லாம் அநியாயத்தீர்ப்பு எழுதுவார்கள். தாவீதோ கர்த்தரை உடைமையாக்கி, சொந்தமாக உரிமை பாராட்டினான். சுற்றமும் நட்பும் அவனைத் தாழ்ச்சியடையச் செய்தன. கர்த்தரோ அவனை நிறைவான பாத்திரமாக்கினார்.

ஆடு புல்லுள்ள இடங்களில் மேய்வது போல் தாவீதின் ஆத்துமா வேத வசனங்களையே மேயும். அது வனாந்தரத்தில் அலையாது. இப்படிப்பட்ட நிலைமைகளினால் தாவீதின் வாழ்க்கை குறைவுபடவில்லை. நீயும் தாவீதைப் போலிருந்தால் உன் சந்தோஷமும் மகிழ்ச்சியும் குறைவுபடாது. உன் இருதயம் தேவ சமூகத்தால் நிறைந்திருக்கும். அந்த இருதயத்தைப் பார்த்து கர்த்தர் சொல்லுவார் 'நீ எனக்கு ஏற்ற இருதயம்' என்று கர்த்தருக்கேற்ற இருதயம் ஒருபோதும் குறைவுபடாது.

"நீங்களும் ஒன்றிலும் குறைவுபடமாட்டீர்கள்"

**20**
**ஜுன்**

# வசனத்தை வேதத்திலிருந்து பிரித்து எடுக்காதே

"நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாயிருக்கும்" (மாற்கு 11:24)

இந்த வசனத்தின் அடிப்படையில் மிகவும் பாரத்துடன் ஜெபித்து ஒரு பலனும் பெறாமற் போனவர்களும் உண்டு. அப்படியெனில் இந்த வசனம் தவறா? வேதத்தில் ஒரு வசனமும் தவறானதில்லை; இந்த வசனமும் தவறானதில்லை. அப்படியெனில் இந்த வசனத்தின்படி ஏன் சுகம் கிடைக்கவில்லை? ஏன் வேலை கிடைக்கவில்லை? இப்படி பல கேள்விகள் எழும்புகின்றன.

இந்த வேத வசனம் ஒரு வெளிச்சத்தைத் தருகிறது. இந்த வெளிச்சம் நம் ஆத்துமாவில் சரியாய் விழ, வேதப் புத்தகமாகிய வெளிச்சம் தேவை. பரிசுத்த ஆவியில்தான் வேதவசனத்தை எடுக்கவேண்டுமே தவிர நம் மனவெளிச்சத்தில் இந்த வசனத்தை எடுக்கக் கூடாது. In the background of the whole Truth we must see the light of this particular verse. முழுசத்தியத்தின் பின்னணியில் இந்த வசனத்தின் வெளிச்சத்தைக் காண்போமானால், தேவன் நமக்கு எவைகளைத் தருவேன் என்று வாக்களிக்கிறாரோ, அவைகளை நமது ஜெபத்தில் கேட்டால், அவைகள் நமக்கு உண்டாகும். நீ ஜெபிக்கும் பிரச்சனைக்காக, அந்த வசனத்தை நீ எடுப்பதற்குமுன், தேவன் என்ன சொல்கிறார் என்பதை அறியக் கவனமாயிரு. வறுமை, வாட்டம், நஷ்டம் இப்படி சில சூழ்நிலைகளுக்கு ஏற்ற வசனத்தை நாம் தேடக்கூடாது. ஒருவருக்குப் பணநெருக்கடி உண்டாகுமெனில், உடனே அவர் "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலி. 4:19) என்ற வசனத்தைத் தேடி, தன் சூழ்நிலைக்கு அதனைப் பொருத்தி ஜெபம் பண்ணுகிறார், இது நம்மெல்லாருடைய பண நெருக்கடிக்கு தேவன் தந்த ஓப்பன் செக் (open cheque) அல்ல.

பவுல் இந்த வசனத்தை கர்த்தரின் ஊழியக்காரர்களின் தேவைகளைச் சந்திக்கும்படி கொடுத்த கரங்களுக்கு ஆசீர்வாதமாக எழுதுகிறார். இந்த வசனத்தை வேதத்தின் சூழ்நிலையினின்று பிரிக்கக்கூடாது. சூழ்நிலைக்குத் தக்கவாறு, நாமே வசனத்தை எடுத்துக்கொண்டால், வசனம் தந்த ஆவியானவரை வெளியே தள்ளிவிடுகிறோம். இது துணிகரம். ஆவியானவர்தான் சூழ்நிலைகளுக்கேற்ற வசனத்தை தரவேணடும். இந்த விஷயத்திலும் நீங்கள் மிகவும் கவனமாயிருங்கள். வேதவசனம் ஒரு கருத்தை வலியுறுத்தும்பொழுது நாம் நமது சிந்தனை ஓட்டத்தின்படி மற்றொரு கருத்தாக அதே வசனத்தை எடுத்துக் கொள்வது தவறான நம்பிக்கையை உருவாக்கும். வாக்குத்தத்தத்தைச் சுதந்தரிப்பதில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

**உங்கள் மன விருப்பத்தின்படி நீங்கள் வார்த்தைகளைப் பொறுக்கி எடுக்கக் கூடாது.**

**21**
ஜூன்

# தனித்திருக்கும் குருவியைப் போலானேன்

நான் நித்திரையில்லாமல் வீட்டின்மேல் தனித்திருக்கும் குருவியைப் போல் இருக்கிறேன் (சங்கீதம் 102:7)

இந்தக் குருவி தேசத்தில் உண்டான பாழ்க்கடிப்பினிமித்தம் தன்னுடைய துணையை இழந்துவிட்டது. எங்கோ பறந்து சென்ற அதன் துணை திரும்பி வரவேயில்லை. இடிந்த வீட்டின் கூரை மீது இந்தக் குருவி உட்கார்ந்திருக்கிறது. உடைந்து நொறுங்கிய இருதயமுடையவனின் ஆத்துமா தனிமைப் பறவை போன்றிருக்கிறது. பாடி மகிழ்ந்த தோழமை என்றோ விடை பெற்றுவிட்டது. கூடவே பறந்து திரிந்த துணை போன இடம் தெரியவில்லை. என்னருமை சகோதரனே, சகோதரியே, காலம் உன்னைத் தனிமையில் நிறுத்தி வேடிக்கைப் பார்க்கிறதா? உன் வேதனைச் சரித்திரம் பார்ப்போருக்கு வேடிக்கையாயிருப்பதினால் உன் இருதயம் உடைந்து நொறுங்குகிறதா? எதிர் சிந்தனை என்ற பாழான இடத்திலிருந்து உன் ஆத்துமா பறக்கட்டும். தேவப் பிள்ளைகளின் ஐக்கியத்தை நாடு. இல்லையெனில் தேவ சமூகத்தில் மற்றவர்கள் இளைப்பாறும் வேளையில் நீ ஓய்வின்றி விழித்திருப்பாய். இந்நிலை உனக்கு வேண்டாம்.

"என் நாட்கள் சாய்ந்து போகிற நிழலைப் போலிருக்கிறது." (சங்.102:11) சாய்ந்த நிழல்கள் மிக நீண்ட நிழல்கள். சாய்ந்த நிழல்கள் சூரிய அஸ்தமனம் சமீபம் என்று காட்டுகிறது. ஆம், காரிருள் நெருங்குகிறது சகோதரனே, சகோதரியே! உன் பிரச்சனைகள் நீண்ட நிழலாய் விழுகின்றனவா? எதுவுமே செய்ய முடியாத இராக்காலம் வந்துவிட்டது என்று அர்த்தம். இந்த இராக்காலம் தனிமையின் நேரம். நம்பிக்கையற்ற ஒரு காலம். இந்த இராக் காலத்தை நீ சந்திக்கவே கூடாது. ஆகவே தனிமைப் பறவையாயிராதே.

வானந்திர நாரையாய், பாழான இடத்து ஆந்தையாய், வீட்டில் தனிமையாயிருக்கும் குருவியாய் இருந்த ஆத்துமா ஓர் நட்சத்திரத்தைக் காண்கிறது. அது ஒரு நம்பிக்கையின் நட்சத்திரம். அது என்ன நம்பிக்கை? திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம் பண்ணாமல் அவர்களின் விண்ணப்பத்தை அங்கிகரிப்பார் (சங்.102:16) இந்த நம்பிக்கையில் அவன் ஆத்துமா புத்துயிர் பெற்றது. திக்கற்றவன் வானந்திரத்திலுள்ள முட்செடியைப் போன்றவன். இந்த முட்செடி எந்த மனிதனுடைய நினைவிலும் தங்குவதில்லை. எந்த மனிதனும் இந்த முட்செடியை நாடித்தேடி வருவதில்லை. இந்த முட்செடியைக் கர்த்தர் கவனிக்கிறார். இந்த நம்பிக்கை அவனுக்குள் ஜீவனைக் கொண்டு வந்தது.

ஜெபம் அவன் வாழ்க்கையை மாற்றியது. நெருக்கத்தில் அவன் நேசரை நோக்கினான். பாழான இடம், தரிசு நிலம் இவைகளை விட்டு நீள வானத்தில் கழுகைப்போல பறக்க ஆரம்பித்துவிட்டான். சகோதரனே! சகோதரியே, நீயும் கழுகாக மாறி விடு, கழுகுக்கு சமானமாய் உன் வயது வால வயது போலாகிறது (சங்.103:5)

**துதி, ஸ்தோத்திரம் என்ற இறக்கைகளை அடித்து நம்பிக்கை வானில் வழும்பி பறக்கிற கழுகாக மாறி விடு.**

22
ஜூன்

# மாற்றப்படும் பாத்திரங்கள்

"மோவாப் தன் சிறுவயது முதல் சுகமாய் வாழ்ந்தது; அது ஒரு பாத்திரத்திலிருந்து மறுபாத்திரத்தில் வார்க்கப்படாமலும், அதன் வண்டல்களின் மேல் அசையாமலும் இருந்தது. அது சிறையிருப்புக்குப் போனதில்லை; ஆதலால் அதின் ருசி அதில் நிலைத்திருந்தது அதன் வாசனை வேறுபடவில்லை." (எரே.48:11)

நம் வாழ்க்கையில் பல்வேறு சம்பவங்கள் திடீர் திடீரென்று நடக்கின்றன. உடனே ஏன் ஆண்டவரே என்று ஆயிரம் கேள்விகளைக் கர்த்தரிடம் கேட்கிறோம். ஒரு கேள்விகூட கேட்கும் உரிமையற்ற நாம் அத்தனைக் கேள்விகளைக் கேட்கிறோம். தேவன் பதில் சொல்லக் கடமைப்பட்டவரல்ல. கர்த்தர் மௌனமாயிருக்கிறபொழுது. உலகம் பல பதில்களைச் சொல்கிறது.

| | |
|---|---|
| நாத்தீகம் சொல்கிறது | - இவைகளெல்லாம் வெறும் சந்தர்ப்பங்கள் |
| மதம் சொல்கிறது | - இவைகளெல்லாம் தலைவிதி. |
| கிறிதுவுக்குள்ளான அனுபவம் சொல்கிறது | - எல்லாமே நன்மையாக முடிந்துவிடும். |

மோவாப் தேசம் தன் துர்குணத்தினின்று மாறுபடவேயில்லை. ஏனெனில் அதன் ஆரம்ப நாட்களிலிருந்து அதற்குப் பாடுகள், கஷ்டங்கள், சிறையிருப்புகள் ஒன்றுமில்லாமல் சுகவாசியாய் ஜீவித்து அது கெட்டுப்போனது. திராட்சை ரசம் சுவையோடு இருக்கவேண்டுமெனில் அது ஒரு பாத்திரத்திலிருந்து மறு பாத்திரத்திற்கு மாற்றப்படவேண்டும். அப்படி மாற்றப்படாமல் ஒரே பாத்திரத்தில் தொடர்ந்து இருந்தால், அதன் வண்டல்கள் அப்படியே படிந்து, அதன் வாசனை நல்ல வாசனையாக மாறாமல் அப்படியே இருக்கும். அதுமட்டுமல்ல அதன் ருசி கூடாமல் அப்படியே நிலைத்திருக்கும். இப்படி தரக்குறைவான திராட்சை ரசமாக அது இருக்கும்.

அப்படியே பாடுகள், வருத்தங்கள், ஏமாற்றங்கள், எதிர்ப்புகள் என்ற பாத்திரங்களில் நம் வாழ்க்கை மாற்றப்படாவிட்டால் கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் வெற்றியுள்ள ஜீவியமாக இருக்க மாட்டோம். ஆகையால் மாற்றப்படும் பாத்திரங்களினால் ஒரு பெரிய நன்மையை அடைவோம். இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கும் ஓட்டத்தில் பொறுமையாய் ஓடக்கடவோம்.

**தேவசித்தம் என்னும் பாத்திரத்தை**
**பணிவாகப் பெற்றுக் கொள்ளுவோம்.**

23
ஜூன்

# ஆபத்தான இடத்தில் இயேசு

"கப்பலின் பின்னணியத்தில் அவர் நித்திரையாயிருந்தார்." (மாற்கு 4:38)

ஒரு கப்பல் உடையுமெனில் முதலாவது உடையும் பகுதி கப்பலின் பின்னணியமே. அப்படி எளிதில் உடைந்து நொறுங்கும் பகுதியிலே இயேசு தங்கியிருந்தார். அப்படியே உன் பலவீனத்தில், மன உளைச்சலில், சங்கடமான வேளைகளில் கர்த்தர் உன்னோடு இருக்கிறார். கர்மேல் பர்வதத்தின் மேல் பாகால் தீர்க்கதரிசிகளுக்கு அறை கூவல் விடுத்த எலியாவோடு கர்த்தரும் மலையுச்சியில் நின்றார் என்பது மாத்திரம் உண்மையல்ல. சூரைச் செடியின் கீழ் சாகவேண்டும் என்று விரும்பி கோழைத்தனத்தின் மடியாகிய பின்னணியத்தில் படுத்திருந்த பரிதாபமான எலியாவோடும் கர்த்தர் இருந்தது உண்மை. "போதும் கர்த்தாவே" என்று அவன் எழுப்பிய குரல், வாழ்க்கைப் பின்னணியத்தில் அவன் எழுப்பிய குரல், இந்தக் குரலை அடக்க கர்த்தர் இங்கு வந்தார். "கர்த்தாவே நீரே போதும்" என்ற குரல் எழும்பும்படியாக கர்த்தர் அங்கு வந்தார்.

கொந்தளிக்கும் கடலில், அலைக்கழிக்கப்படும் படகில் இயேசு பிதாவின் மடியில் படுத்திருந்தார். "இவர் என் நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்ற பிதாவின் உறவிலும், பாசத்திலும் இயேசு இளைப்பாறினார். இந்த உறவே இயேசுவுக்கு எப்போதும் பாதுகாப்பு. சகோதரனே! சகோதரியே! இந்த உறவை - இயேசுவோடு உள்ள இந்த உறவைத் தக்க வைத்திருக்கிறீர்களா? ஆபத்தான வேளையில் இந்த உறவு நமக்கு நிச்சயமான பாதுகாப்பு. இந்த உறவில் உள்ள பாதுகாப்பில் இயேசு கண்ணுறங்கினார். நாமோ கண் விழித்திருக்கிறோம். சகோதரனே, சகோதரியே இளைப்பாறு.

ஆகவே பின்னணியம் வெற்றியின் முதற்படிக்கட்டு, இயேசு அமர்ந்திருந்தாலும் சரி உறங்கிவிட்டாலும் சரி, படகு மூழ்கினால் இயேசுவும் கடலில் மூழ்கிப் போய்விடுவார். இயேசு மூழ்கிப் போனால் இரட்சிப்பின் திட்டமும் மூழ்கிப் போய்விடும். அப்படி மாத்திரம் நடந்தால் கடல் அலைகள் எழுந்து சாத்தனுக்கும் துதிபாடுமே. ஒரு நாளும் இப்படி நடக்காதே, இயேசு தங்கியிருக்கும் படகு உடையாது. கவிழாது.

சகோதரனே! சகோதரியே! பயப்படாதே உன் பிரச்சனைக்குப் பின்னால் எதிர் வல்லமை கிரியை செய்யலாம். கர்த்தரின் வார்த்தை அந்த எதிர் வல்லமையைத் தகர்த்துப் போடும்.

**உன் பலவீனமான பின்னணியம் உடையாது.**
**நீ பத்திரமாக கரை சேருவாய். உன் குழந்தைகளும்**
**உன்னோடு கரை சேருவார்கள்**

24
ஜூன்

# மேகங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிகின்றன

"அநேக நாளாய் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படாமல், மிகுந்த பெருங்காற்றும் மழையும் அடித்துக் கொண்டிருந்தபடியால், இனி தப்பிப் பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுவதும் அற்றுப் போயிற்று" (அப்.27:20)

மரணக் குழியில் லாசரு தூக்கியெறியப்பட்டு "இனி நம்பிக்கையில்லை" என்ற கல் வைக்கப்பட்டுவிட்டது. மரணம் என்ற கார்மேகம் அவனை மூடிவிட்டது, வாழ்க்கையில் "இனி நம்பிக்கை இல்லை" என்ற கல் தலைவாசலில் வைக்கப்பட, எத்தனையோ நம்பிக்கைகள் புதைகுழியில் அடக்கம் பண்ணப்பட்டுவிட்டன! இனி எதிர்காலம் இல்லை என்ற கவலையோடு உட்கார்ந்திருக்கிறாயா? இனி எனக்கு திருமணம் நடக்காது – எனக்கா இனி வேலை கிடைக்கப்போகிறது என்று எதிர்கால நம்பிக்கைகளைக் கல்லறைக்குள் எறிந்து விட்டு, கார் மேகங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறாயா?

ஆனால் அதே கப்பலில் ஒரு ஆத்துமா தேவனது வானவில்லைக் கண்டது! வாழ்க்கை முடியப்போகிறது – காலம் அவர்களது சரித்திரத்தின் கடைசி அத்தியாயத்தின் கடைசி வரியை எழுதப் போகிறது என்ற சூழ்நிலையில் "திட மனதாயிருங்கள் ... உங்களில் ஒருவனுக்கும் பிராணச் சேதம் வராது" என்ற சொல் அந்த ஆத்துமாவில் பிறந்து, இந்த மரணச் சூழலில் ஜீவனாக எதிரொலித்தது! இப்படி நீ வானவில்லைப் பார்க்கப் பழகிவிட்டாயா? அல்லது மேகங்களையே கண்டு புலம்பி இனி நம்பிக்கை இல்லை என்று எதிர்காலத்தைக் கல்லறைத் தோட்டமாக்கி, அதன் தலைவாசலில், தலைகவிழ்ந்து உட்கார்ந்து விட்டாயா?

பெத்தானியாவில், மார்த்தாள் வீட்டை மரணம் தன் காரிருளினால் மூடிவிட்டது! வியாதி என்ற மேகம், மரணம் என்ற மழையைப் பெய்தது. அப்பொழுது திடீரென்று ஒரு வானவில் தோன்றியது! ஆம். இயேசுவின் சமூகம் என்ற வில்லும், அவர் வல்லமை என்ற பிரகாசமும் தோன்றின. "லாசருவே, வெளியே வா" என்ற வார்த்தைகளே இந்த வானவில். "மரணமாகிய காரிருளே விலகு" என்ற ஒரு குரல் எதிரொலித்தது! தேவசமூகத்தில் காத்திரு ... அப்பொழுது உன் இதயத்தில் ஆவியானவர் தரும் வார்த்தைகளைப் பேசு...

**"காற்றே, இரையாதே" என்று சொல்!**
**மேகங்கள் உனக்குக் கீழ்ப்படியும்.**

25
ஜூன்

# கவலைப்படாதீர்கள்

"ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?" (மத்.6:25)

ஜீவன், சரீரம் இவையிரண்டும் நாம் உருவாக்கியவையல்ல, கடவுள் உருவாக்கியவை, இவையிரண்டையும் கூட்டவோ குறைக்கவோ நமக்கு அதிகாரம் இல்லை. ஜீவனைத்தந்தது கடவுள், அப்படியிருக்க அந்த ஜீவனைத் தக்கவைத்துக் கொள்ள உணவு தரமாட்டாரா?

சரீரம் கடவுள் தந்தது; சரீரத்தைத் தந்த கடவுள், அதைப் பாதுகாக்கும் உடைகளைத் தரமாட்டாரா? நம்மால் செய்ய முடியாததை நமக்குக் கர்த்தர் தரும்பொழுது, நம்மால் செய்யக் கூடியவைகளைத் தரமாட்டாரா? நம்முடைய ஜீவன் மேலானது; ஆச்சரியமானது அதை உண்டு பண்ணின தேவன் ஜீவனைக் காக்காமல் போவாரா? ஆகவே எதை உண்போம் எதைக் குடிப்போம் என்று கவலைப்படாதீர்கள். ஏனெனில் நமது கர்த்தர் மாத்திரம்தான் ஜீவன் மீது அதிகாரமுள்ளவர்.

கர்த்தரின் அன்பையும் வல்லமையையும் மறந்த மக்கள் கவலையினால் பாரமுள்ள இதயத்தையும் தூக்கமில்லா சஞ்சல இரவுகளையும் பெற்றிருக்கின்றனர். ஆனால் "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாதீர்கள்" என்று வேதம் நமக்குச் சொல்கிறது. கவலைப்படாமலிரு என்பது வெறும் தத்துவம். அனுபவ ரீதியாக கவலைப்படாமலிருக்கவே முடியாது என்று தர்க்கம் செய்கின்றனர். கவலைப்படாதே என்று நமக்குப் போதித்த பவுல் எல்லா சபைகளையும் குறித்தக் கவலை நெருக்குகிறது என்று எழுதுகிறார். கவலை என்ற உணர்வையல்ல வேதம் கண்டிப்பது. நமது விசுவாசத்தைத் தளரப் பண்ணுகிற அந்த உணர்வின் ஆதிக்கத்தையே வேதம் கண்டிக்கிறது.

பெனின்னாள் அன்னாளைப் பரிகாசம் பண்ணும்போது அவள் அழுதாள். ஆகவே நிச்சயம் அவள் கவலைப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்தக் கவலை அவளை ஜெப ஆலயத்திற்கு அழைத்துச் சென்றது. ஆகவே நம்முடைய கவலைகள் தேவனைவிட்டு நம்மை பிரித்துவிடக் கூடாது. கவலை சில பேரை ஜெப அறையை விட்டுத் துரத்திவிடுகிறது. சிலருக்கு ஆலயத்தின் கதவை பல ஆண்டுகளாக அடைத்துப் போடுகிறது. இவர்கள் தேவனுக்கு அந்நியராக சஞ்சரித்து தேவனுக்கு விரோதிகளாய் வாழ்ந்து விசுவாசத்திற்கு துரோகிகளாய் மடிந்து போகிறார்கள். ஆகவே கவலைப்படாதீர்கள்.

**ஆவிக்குரிய காரியங்களை ஆர்வத்தோடு தேடு**
**கவலையினால் தேடாதே.**

| 26<br>ஜூன் |
| --- |

# கவலைத் தவறான செயல்

"இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" (மத்.6:32-33)

இம்மைக்கான கவலை அஞ்ஞானிகளின் செயல் என்று வேதம் சொல்கிறது. உங்களுக்கு உணவு, உடை, தண்ணீர், வீடு இவையெல்லாம் தேவையென நம்முடைய பரம தகப்பன் அறிந்திருக்கிறார். ஆகவே முதலாவது நாம் தேட வேண்டியது தேவராஜ்ஜியத்தையே. ஆவிக்குரிய மேன்மைகளையே முதலாவது தேடுங்கள். அப்படி தேடினால், கூடவே இம்மைக்குரிய உணவும், உடையும் நம்மை வந்தடையும் என்று வேதம் சொல்கிறது.

இலவசமாக அல்ல, இனாம்களாக அல்ல, கூடுதலாக இவ்வுலக நன்மைகளைக் கர்த்தர் தருவார். எப்பொழுது? நாம் முதலாவது மறுமைக்குரிய சிலாக்கியங்களைத் தேடும் பொழுது!. இவ்வுலகக் காரியங்களான பணம், பொருள், கல்வி இவைப் பற்றி நாம் கருத்தற்று இருப்பதை வேதம் மெச்சிக் கொள்ளாது.

ஒரு ஏழைத் தாய் தன் சின்ன மகனுக்கு கதை சொல்வது வழக்கம். பஞ்ச காலத்தில் எலியாவுக்கு காகம் அப்பம் கொடுத்து போஷித்ததை தாய் சொல்லிக் கொடுத்திருந்தாள். ஓரிரவு வெளியே கடும் பனிப்பொழிவு தெருவில் நடமாட்டம் குறைவு. தாயும் மகனும் வீட்டிலே முடங்கி விட்டனர். சாப்பிட ஒன்றுமில்லாமல் இரவிலே இருவருமே பட்டினியாயிருந்தார்கள். பசியில் தாய் உறங்கி விட்டாள். விழித்திருந்த சிறு பையன் ஜன்னல் கதவைத் திறந்து வைத்தான். பனிக் காற்று ஜன்னல் வழியாய் உள்ளே வந்தது. இரவு ரோந்து வந்த போலீஸார், "யார் இந்தப் பனி நேரத்தில் ஜன்னலைத் திறந்து வைத்திருப்பது" என்று கேட்டனர். உடனே இந்தச் சிறுபையன் நான் பசியாயிருக்கிறேன் காகம் இன்னும் வரவில்லை. காகம் ஜன்னல் வழியாய் அப்பத்தைப் போட்ட பின்பு நான் ஜன்னலை அடைத்து விடுவேன் என்றான். போலீஸார் அவனை விசாரிக்கவே தன் தாய் தனக்குச் சொன்ன எலியாவின் கதையைச் சொன்னான். அவனது நம்பிக்கையை மெச்சிக் கொண்ட போலீஸார் வெகு தூரத்திலிருந்து அப்பத்தை வாங்கி ஜன்னல் வழியாய் எறிந்தனர். அப்பம் வீட்டிற்குள் வந்து விழுந்ததும் "அம்மா எழுந்திருங்கள் காகம் வந்து விட்டது" என்றான். இதுதான் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பது. இம்மைக்காக மாத்திரம் கர்த்தரைத் தேடுவது பரிதாபம். இம்மைக்கான காரியத்தை கர்த்தர் தரமாட்டார் என்று எண்ணுவது அஞ்ஞானம். நம் இருதயம் பரிதாபக் கூடாரமாகவோ, அஞ்ஞானக் கூடாரமாகவோ இருக்கக் கூடாது.

தவறான கவலையை விட ஒரே வழி நித்தியத்தை, பரலோக மேன்மையைத் தேடுவதே! சரீர மீட்பு என்ற நித்திய நம்பிக்கை சரீர உணவு என்பதை பற்றிக் கவலைப்படவிடாது.

**நித்திய நம்பிக்கை மலரட்டும்!**
**வீண் கவலைகள் உலர்ந்து போம்!**

27
ஜூன்

# அற்பமான மனிதர்களுக்கு அற்புத செய்தி.

"தேவதூதன் மேய்ப்பர்களை நோக்கி... மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்... என்றான்." (லூக்கா 2:10)

முக்கியமான செய்தி முக்கியமான மனிதரால் அறிவிக்கப்படுவதுதான் வழக்கம். அதுவும் முக்கியமானவர்களுக்கே முதலில் அறிவிப்பார்கள். நமது பாரதப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அம்மையார் படுகொலை செய்யப்பட்ட செய்தியை உலகின் மற்ற நாடுகளுக்கு அறிவித்தபின்தான் இந்தியா தன் நாட்டிற்கு அறிவித்தது, ஏன்? நாட்டிற்கு முக்கிய செய்தியைப் பிரதமர் அல்லது ஜனாதிபதி அறிவிக்க வேண்டும். இப்பொழுது பிரதம மந்திரியே இறந்து விட்டார். அதை அறிவிக்க வேண்டிய ஜனாதிபதி வெளிநாடு சென்றிருந்தார். அவர் இந்தியா திரும்பிய பின்தான் அந்தச் செய்தி அறிவிக்கப்பட்டது.

உலகின் மிகப்பெரிய செய்தியான கடவுள் மனுஉருவில் குழந்தையாகத் தோன்றிய செய்தி முதலாவது ஆசாரியர்களுக்கோ, வேதபாரகர்களுக்கோ அறிவிக்கப்படவில்லை. இந்தச் செய்தி சாதாரண மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்டது. எப்பொழுதும் விழிப்போடு இருங்கள். திடீரென்று பரலோகம் FLASH NEWS என்று அறிவிக்கும். உங்கள் இதயத்திரையில் ஆவியானவர் பரலோகச் செய்தியை ஒளிபரப்புவார் ஆகவே விழித்திருங்கள்.

இரண்டாம் உலகப்போரின் சமயத்தில் இங்கிலாந்தில் யுத்த செய்தியை மேகங்களுக்கிடையில் எழுத்து வடிவங்களில் ஒளி பரப்பிவந்தனர். யுத்தத்தில் ஜெர்மானியர் ஜெயித்து விடுவார்களோ என்று இங்கிலாந்து மக்கள் அஞ்சி ஆவலோடு வானத்தில் தோன்றும் செய்திக்காகக் காத்திருந்தனர். மேகங்களுக்கிடையில் எழுத்துக்கள் தோன்றத் தொடங்கின. திக்திக் என்று இதயம் அடித்துக்கொள்ள மக்கள் செய்தியை வாசிக்கத்தொடங்கினர். "இரண்டாம் உலகப்போரில் இங்கிலாந்து தோல்வி... "என்று எழுத்துக்கள் தோன்றியவுடன், கை கால்கள் நடுங்கின. கண்ணீர் பெருகி ஓடியது. திடீரென்று மேகங்கள் விலக மேற்கொண்டும் எழுத்துக்கள் தோன்றின. "இரண்டாம் உலகப்போரில்... இங்கிலாந்து தோல்வியடையச் செய்தது ஜெர்மனியை" என் வெற்றிச்செய்தி பளிச்சென்று தெரிந்தது. (ENGLAND DEFEATED GERMANY).

ஆகவே செய்தியை முழுமையாக பெற ஜாக்கிரதையாய் இருங்கள். ஆவியானவர் என்ன சொல்கிறார் என்பதற்கு முழு கவனம் செலுத்துங்கள். சகோதரனே, சகோதரியே, தேவனது செய்திகள் உன்னைத் துரிதப்படுத்துகின்றனவா? தேவதூதர்கள் சொன்ன செய்தியை அவர்கள் தேவனது செய்தி என்று நம்பினார்கள். தேவன் உன்னோடு பேசுவதை நீ நம்புகிறாயா? தேவ செய்தி உண்மையென்றும் அது உனக்காகவென்றும் எடுத்துக்கொள்கிறாயா? அப்படி நீ எடுத்துக்கொள்வாயானால் உன் வாழ்க்கை வசந்த காலமாக இருக்கும்.

**வாக்குத்தத்தத்தை மட்டும் உங்களுக்கு .எடுத்துக்கொண்டு
எச்சரிப்பின் சத்தத்தை தனக்கு அல்ல என்று
எடுக்கும் குணம் உங்களுக்குத் தூரமாயிருப்பதாக..**

28
ஜூன்

# மண்ணா? பொன்னா?

"நீ மண்ணிலிருந்து எடுக்கப்பட்டாய்; நீ மண்ணுக்கே திரும்புவாய்." (ஆதி.3:19)

நம் சரீரம் மண்ணிலிருந்துதான் எடுக்கப்பட்டது. அது இன்னும் மண்ணென்றே தேவனும் நினைவு கூருகிறார். நாம் வெறும் சரீரங்கள் அல்ல, நமக்குள் விலையேறப்பெற்ற ஆத்துமா இருக்கிறது. அது பொன்னாக மாற வேண்டும். நீ மண்ணிலிருந்து எடுக்கப்பட்டாய்; நீ மண்ணுக்கே திரும்புவாய். இது நம் சரீரம் இவ்வுலகில் அடையும் தற்காலிக நியாயத்தீர்ப்பு. "நீ விண்ணிலிருந்து உருவாக்கப்பட்டாய்; நீ விண்ணுக்கே திரும்புவாய். "இது நம் ஆத்துமாவிற்குத் தேவன் செய்யும் இரக்கம். ஆகவே பாடுகள், உபத்திரவங்களின் வழியாய் கடந்து போகும் உன் ஆத்துமா பொன்னாக விளங்க வேண்டும்.

"அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்" (யோபு 23:10) என்று யோபு கூறுகிறான். ஆகவே துக்கத்தின் பாத்திரமாய் இருக்கும் நீ தேவனது கரத்தினால் பொற்பாத்திரமாய் உருவாகிக் கொண்டிருக்கிறாய். உலக இன்பத்தில், பாவ சந்தோஷத்தில் மகிழ்ந்து மகிழ்ச்சியின் பாத்திரமாக உலகத்தின் கரத்தில் இருப்பவர்கள், கர்த்தரின் நியாயத்தீர்ப்பில் மண்பாத்திரங்களாக உடைந்து நொறுங்கிப் போவார்கள். தேவன் தன் நீதியின் பாதையில் நடத்தினால் அதில் நட, அவர் தன் இரக்கத்தின் பாதையில் உன்னை நடத்தினால் அதில் நட; எந்தப் பாத்திரத்தை உனக்கு பிதா கொடுக்கிறாரோ, அந்தப் பாத்திரத்தில் மௌனமாய் பானம் பண்ணு! உன் மனக் கண்களுக்கு முன்பு ஒரு காட்சியைக் கொண்டு வருகிறேன்

(கர்த்தராகி இயேசு, பேதுருவை அழைக்கிறார்)

இயேசு : பேதுருவே! நீ இளைஞனாக இருந்தபொழுது உன்னை நீயே அரைக்கட்டிக்கொண்டு உனக்கு இஷ்டமான இடங்களிலே திரிந்தாய். நீ முதிர்வயதடையும்பொழுது உன் கைகளை நீட்டுவாய் அவர்கள் உன்னை நடத்துவார்கள். உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு நீ கொண்டு போகப்படுவாய். இப்படி நீ எனக்காக மரணமடைவாய். உன் மரணத்தினால் நீ என்னை மகிமைப்படுத்துவாய். ஆம்! நீ மகிமையின் பாத்திரமாவாய். (அப்பொழுது யோவான் அங்கு வருகிறான். பேதுரு யோவானைப் பார்த்தவாறே)

பேதுரு : இயேசுவே! இந்த யோவானுக்கு இந்த அழைப்பு கிடையாதா? இவன் காரியமென்ன?

இயேசு : நான் மீண்டும் வரும் வரை அவன் உயிரோடு இருக்கவேண்டும் என்று நான் சித்தம் கொண்டால் அதனால் உனக்கென்ன? நீ உன் வேலையை மட்டும் செய்! நீ என்னைப் பின்பற்றிவா. இதுவே உன்னைக் குறித்து என் சித்தம்.

பேதுரு : தேவசித்தம் என்னும் பாத்திரத்தைப் பணிவாகப் பெற்றுக் கொண்டான்.

**இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கும் ஓட்டத்தில் பொறுமையாய் ஓடக் கடவோம்.**

29
ஜூன்

# உன்னைத்தொட இயேசு காத்திருக்கிறார்.

"மீன் பிடிக்கிறவர்கள் அதினின்று இறங்கி வலையை அலசிக்கொண்டிருந்தார்கள்." (லூக்.5:2)

இருள் இன்னும் அகலவில்லை. ஆழ்கடலில் இந்தப் படகு மீன் பிடிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறது. வலைகள் மீண்டும் மீண்டும் போடப்படுகின்றன. ஒவ்வொரு முறையும் 'இல்லை, இல்லை' என்ற பதிலே வந்துக் கொண்டிருக்கின்றன. பொழுது விடிந்துவிட்டது; ஆனால் அவர்களுக்கு நல்ல பொழுது விடியவேயில்லை. வேலை தேடி நீங்கள் அனுப்பும் மனுக்கள் ஒவ்வொன்றிற்கும் 'இல்லை, இல்லை' என்ற பதில் வருகிறதா? அந்தப்படகிற்காகக் காத்திருந்த இயேசு உன்னையும் அசீர்வதிக்கக் காத்திருக்கிறார். படகு கடற்கரையை அடைகிறது. தங்களது வருத்தத்தில் அவர்கள் இயேசுவை நோக்கிப் பார்க்கத் தவறிவிட்டார்கள். ஆனால் சோர்ந்துப்போன மனிதனை நோக்கிப் பார்க்கத் தேவன் தவறுவதேயில்லை. ஏமாற்றம் தேவனிடத்திலிருந்து, நமது இதயங்களை வெகு தூரம் பிரித்துவிடும். ஊழியம் தோல்வியடைந்துவிட்டது என்ற தவறான எண்ணம், எலியாவை உலகைவிட்டே துரத்தியது; அவனும் மரணத்தைத் தழுவ ஆயத்தமாகிவிட்டான். (1இரா.19:4)

சகோதரனே! சகோதரியே! ஏமாற்ற அலைகள் உன் ஆத்துமாவின் மீது மோதியடிக்கும் வேளையில், உன் வாழ்க்கைப்படகை இயேசுவிடம் கொடுத்துவிடு. இல்லையெனில் கரையில் காத்திருக்கும் இயேசுவை நீ அடையாளம் காணமாட்டாய். எம்மாவூர் சீஷர்கள் எத்தனையோ நற்செய்திகளைக் கேட்டும் தங்களோடு நடந்துவந்த இயேசுவை அறியாதிருந்தார்கள் (லூக்24:16). 'பிள்ளைகளே' என்று அன்புடன் அழைத்த இயேசுவை, சீஷர்கள் அறியாதிருந்தார்கள் (யோ.21:4) ஆழ்கடலில், கொந்தளிக்கும் அலைகளின் மத்தியில் தங்களைத் தேடிவந்த இயேசுவை, ஆவேசம் என்று எண்ணினார்கள் (மத்.14:26) ஏன் அவர்களால் இயேசுவைக் கண்டுக்கொள்ள முடியவில்லை? ஏமாற்றம், பின்மாற்றம், பயம் இவைகளினாலே அவரை அடையாளம் கண்டுக்கொள்ள முடியவில்லை. உன்னைத் தொட காத்திருக்கும் இயேசுவை நீ கண்டுக்கொள்ள இவைகளிலிருந்து நீ விடுபட்டுவிடு.

உனக்கு ஒரு புது வழியை தேவன் திறக்கப்போகிறார்; நீயோ உன் பழைய வழிகளை விட்டுவிடு. நியாயமானது என்று உன் உள்ளம் தீர்ப்பளிக்கும் காரியங்களையும் நீ விட்டுவிடவேண்டியதிருக்கும். இதற்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? அப்படியானால் கர்த்தர் உங்களை உயர்த்தப் போவது நிச்சயம்.

**தேவன் தொட்ட பின்பு நீ ஆசீர்வாதமாகவே இருப்பாய்.**
**தேவன் தொடும்படியாக உன் வாழ்க்கை மாறட்டும்**

# 30 ஜூன்

# வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொள்ளும் மனம்.

"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கும் நினைவுகளை அறிவேன்" (எரே.29:11)

நல்ல மனம் வாக்குத்தத்தங்களை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளும். நல் மனம் வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக்கு விரோதமாக சூழ்நிலைகள் நிலவினாலும், தளர்ச்சியடையாமல், கர்த்தரின் வாக்கை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளும். எவ்வளவு உறுதியாய் கர்த்தரின் வார்த்தையைப்பற்றிப் பிடித்தாலும் சில சமயங்களில், வாக்குத்தத்தம் நிறைவேறாமல் போகிறதே என்று நீங்கள் அங்கலாய்க்கிறீர்களா? கர்த்தரின் வார்த்தைகளை நிதானமாய்ப் பாருங்கள்.

"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குத் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கும் நினைவுகளை அறிவேன்" என்பது கர்த்தரின் வாக்குத்தத்தம். இந்த வசனத்தைப் பெற்றுக்கொண்டவுடன் நாம் எதிர்பார்த்திருக்கும் முடிவுகள் நம்மைச் சந்தித்துவிடும் என்று உடனே எண்ணிவிடக்கூடாது. பரீட்சையில் வெற்றிபெற்றுவிடுவேன், எனக்கு வேலை கிடைத்துவிடும், என் திருமணம் நடந்துவிடும், என் பணப்பிரச்சனைத் தீர்ந்துவிடும் என்பனவெல்லாம் நம்முடைய பொதுவான எதிர்பார்ப்பு. இந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற கடவுள் வல்லவர். ஆனால் எப்பொழுதுமே அவர் தம்முடைய வல்லமையின்படியே கிரியை செய்யமாட்டார். "தேவன் கல்லுகளினாலே ஆபிரகாமுக்கு பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார்" என்று வேதம் சொல்லுகிறது. (மத்.3:9) அதாவது ஒரு கல்லினால் ஒரு பிள்ளையை ஆபிரகாமுக்கு உருவாக்கிக் கொடுக்கமுடியும். இது கடவுளுடைய வல்லமை; ஆனால் இந்த வல்லமையின்படியே கர்த்தர் எப்பொழுதாவது கல்லினாலே ஒரு பிள்ளையை உருவாக்கினாரா? இல்லை. ஏனெனில் அது தேவனது நோக்கமோ திட்டமோ அல்ல. கடவுள் தன்னுடைய நோக்கத்திற்கும் திட்டத்திற்கும் வெளியே கிரியை செய்ய மாட்டார்.

அப்படியே நாம் எதிர்பார்த்திருக்கும் முடிவுகளைத் தருவதற்கு கர்த்தர் வல்லவர். அந்த முடிவுகளை நமக்கு நிறைவேற்ற நம்மைக் குறித்து சில நினைவுகளையும் கர்த்தர் வைத்திருக்கிறார். அந்த நினைவுகள் தான் கர்த்தர் நம்மேல் வைத்திருக்கும் நோக்கமும் திட்டங்களும். இந்த நோக்கங்களையும் திட்டங்களையும் நிறைவேற்றவே கர்த்தர் நம்மேல் வைத்திருக்கிற முடிவுகளைத் தருவார். ஆகவே நாம் தேவனது நோக்கங்களையும் திட்டங்களையும் அறிவதிலே மிகக் கருத்தாக இருக்கவேண்டும்.

தேவ நோக்கத்தை நாம் அறிய வேண்டுமானால் நம்முடைய சிந்தனையில் உலக நம்பிக்கைகள் கலந்துவிடகூடாது. "மற்ற புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தனையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள்" (எபே.4:17). உலக சிந்தையாகிய பயம், கவலை, சந்தேகம் இவற்றினால் ஆளுகை செய்யப்படுவோமானால் நம்முடைய ஆவிக்குரிய சிந்தனை இருளடைந்துவிடும். "தேவன் பார்த்துக் கொள்ளுவார்" என்று உங்கள் வாஞ்சை உங்கள் நோக்கம் இவைகளை தூரத் தள்ளிவிட்டு, உங்கள் வாழ்க்கையை குறித்த தேவ நோக்கம், தேவ சித்தத்தினாலே உங்கள் மனம் ஆட்கொள்ளப்பட வேண்டும்.

**தேவனுடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும் என்று தன் பிரச்சனையிலே, விசுவாசத்தில் உறுதியாயிருக்கும் - மனம்**

**1**
**ஜூலை**

# ஏன் சந்தேகப்பட்டாய்?

"அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை" (மத்.13:58)

பேதுரு தேவனது "வா" என்ற அழைப்பைச் சந்தேகிக்கவே இல்லை. அவனது சந்தேகம் முழுமையான அவிசுவாசமல்ல. காற்றின் கடுமை அவன் இதயத்தைக் கலங்கப்பண்ணிற்று. இன்று உன் வாழ்வில் தொடர்ந்து நீடிக்கும் பிரச்சனைகள், உன்னைக் கவலையின் கடலில் தள்ளிவிட்டனவா? அவிசுவாச ஆழ்கடலுக்குள் போய்விடாதே! அற்ப விசுவாசி என்ற நிலையிலேயே உன்னைத் திருத்திக்கொள்.

சந்தேகப்படுவது மனித இயல்பு. ஆனாலும் எல்லா சந்தேகங்களையும் கர்த்தர் சகித்துக் கொள்ளமாட்டார். அவிசுவாசத்தினிமித்தம் இயேசு தன் சொந்த ஊரிலே அனேக அற்புதங்களைச் செய்யவில்லை. ஆம்! அவிசுவாசம் தேவனைச் செயற்படவிடாது. அற்பவிசுவாசம், அவிசுவாசத்தின் தலைவாசல். உள்ளே நுழையாமல் அங்கேயே திரும்பிவிடு.

தேவதூதன் மரியாளை நோக்கி, "இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்" என்று சொன்னவுடன், மிகவும் கலங்கினாள்; சந்தேகப்பட்டாள். "இது எப்படியாகும்? புருஷனை அறியேனே" என்றாள். உடனே தேவன் அவிசுவாசம் என்று எண்ணவில்லை. ஆனால் சகரியாவைப் பார்த்து, "உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள்" என்று தேவதூதன் சொன்னதும், இதை நான் எதினால் அறிவேன்? நான் கிழவனாயிருக்கிறேன். என் மனைவியும் வயது சென்றவளாயிருக்கிறாளே" என்று (லூக்.1:18) சகரியா சொன்னதைத் தேவன் அவிசுவாச வார்த்தைகளாகவே எண்ணினார்.

ஏனெனில் சகரியா ஒரு ஊழியக்காரன், தேவசித்தம் அறிந்தவன் அவனது சந்தேகத்தைத் தேவன் அவிசுவாசமாகவே கருதினார். ஆகவே தேவ தண்டனை அவன்மேல் வந்தது. நீ விசுவாசியாதபடியால், இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையாயிருப்பாய்" (லூக்.1:20) என்று கர்த்தர் சகரியாவைத் தண்டித்தார்.

வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தைச் சந்தேகப்படாதே! அவிசுவாசம் வாழ்க்கையைச் சீர்கெடுத்துப்போடும். ஆகவே இயேசு பேதுருவைக் கடிந்துக்கொண்டார். அவனைக் கடிந்துக்கொண்ட பின்தான் இயேசு அவனைத் தூக்கி எடுத்தார். தேவன் உனக்கு வெளிப்படுத்திய காரியத்தில் சந்தேகப்படாதே. தேவன் சொன்னால் அதை நிறைவேற்றுவார். அவரை சந்தேகப்படாமல் விசுவாசி, தேவன் பெரிய காரியங்களை செய்வார்.

**சந்தேகம் அவிசுவாசத்தின் தலைவாசல்;**
**வாசலோடு திருப்பி அனுப்பிடு.**

2
ஜூலை

# எதைக் கேட்டாலும் ?

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்கு செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்." (1யோவான் 5:14,15)

அந்த வசனம் பின் தேதியிட்ட எந்தத் தொகையும் குறிப்பிடாத திறந்தக் காசோலையல்ல. (Open cheque) அதாவது நம் விருப்பம் போல் எந்தத் தொகையையும் எழுதிக் கொள்ளும் சாசோலையல்ல இந்த வசனம். நாம் எதைக் கேட்டாலும் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்ற அசாதாரணமான நம்பிக்கை மனிதனிடத்தில் நிலவுகிறது. இந்த அடிப்படையில் "Name it and claim it" என்று நம்பிக்கை வளர்கிறது. அதாவது 'எதாவது ஒன்றின் பெயரைச் சொல்லி கேள் அது உனக்கு கிடைத்துவிடும்'. அதுதான் இந்த நம்பிக்கை.

எதையாவது கேள் என்று சொல்லியிருந்தால் ஒரு வரைமுறை இல்லாமல் மாடமாளிகைகள் கூட கோபுரங்கள் என்று உலக ஐசுவரியங்களை தாராளமாய்க் கேட்போம். இப்படி கேட்க வேதம் நமக்கு உத்திரவு கொடுக்கவில்லை. அவருடைய சித்தத்தின்படியே கேட்க வேண்டும் என்பதுதான் வேதத்தின் கட்டளை. அப்படியென்றால் தேவன் நமக்கு எதைக் கொடுக்கிறார் என்பதை முதலாவது தெரிந்துக் கொள்ள வேண்டும். பிறகு அதற்காக ஜெபித்தால், ஜெபித்தப்பின் அதனை பெற்றுக்கொள்கிறோம்.

தேவன் நமக்கு ஒன்றைக் கொடுக்க சித்தமாயிருக்கும்பொழுது ஜெபம் அவசியமா என்ற ஒரு கேள்வி எழுகிறது. அவர் செய்ய எண்ணியது தடைபடாது என்று வேதம் சொல்லுகிறதே. அவர் எதைச் சித்தம் கொள்ளுகிறாரோ அது தானாகவே நடந்துவிடுமே. அக்காரியங்கள் நடைபெற ஜெபம் தேவையில்லையே. இப்படியெல்லாம் மனிதனின் சிந்தனை ஓட்டம் அமைகிறது. வெளிச்சம் உண்டாகக் கடவது, மழைப்பெய்வதாக, கடல் இரண்டாகப் பிளப்பதாக இப்படியெல்லாம் தேவ சித்தம் நிறைவேற பொதுவாக தேவன் மனிதனின் ஜெபத்தை சார்ந்திருப்பதில்லை. ஆனால் தனிப்பட்ட மனிதனுக்கு கர்த்தர் ஒன்றைச் செய்யச் சித்தமானால் அதைக் கடவுள் செய்வதற்கு மனிதனுடைய ஜெபம் தேவை. "அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும்." (எசே.36:37)

ஆகவே கர்த்தர் நமக்கு ஒன்றினை செய்யவேண்டுமெனில் அப்படி செய்வது அவருக்கு சித்தமா என்று முதலில் அறிய வேண்டும். அறிந்தபின் அந்த தேவசித்தத்திற்காக ஜெபம்பண்ணவேண்டும். சகோதரனே! சகோதரியே! ஜெபித்து தேவ சித்தத்தை அறியுங்கள். இந்த சித்தத்தின் மீது மேலும் தொடர்ந்து கட்டுங்கள். தேவன் வாக்களித்ததை நிச்சயம் பெற்றுக் கொள்வீர்கள். இதுவே விசுவாசத்தின் அஸ்திபாரம்.

**தேவ சித்தம் அறிந்து ஜெபிப்பதே, விசுவாசத்தின் அஸ்திபாரம். அஸ்திபாரம் உறுதியாகயிருந்தால்தான் வீடு ஸ்திரமாகயிருக்கும்.**

3

ஜூலை

# தவறான ஐக்கியம்

"அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?"

(2கொரி.6:14)

ஆவிக்குரிய மக்களின் ஐக்கியத்தைக் குறித்து தேவன் மிகவும் கண்டிப்பாக இருக்கிறார். தேவனுக்குத் தூரமாயிருப்பவர்களோடு நீங்கள் சமீபமாயிருந்தால், வாழ்வில் பல சிக்கல்கள் உருவாகும்; இன்னல்கள் உங்களைத் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

நான் காண்பிக்கும் தேசத்திற்குப் போ என்று ஆபிரகாமை அழைத்த தேவன் வழியில் அவனோடு பேசவும் இல்லை; அந்த நாட்டை அவனுக்குக் காண்பிக்கவும் இல்லை. ஏனென்றால் ஆபிரகாம் முழுமையாகத் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை. தேசத்தை விட்டு வெளியே வா என்றார். ஆனால் வழியில் அவன் தங்கிய இடமாகிய ஆரான், பாபிலோனிய நாட்டின் ஓர் பகுதியே! தகப்பன் வீட்டை விட்டு தனித்து வா என்றார், அவன் தன் தகப்பனையே கூட அழைத்துச் சென்றான். இனத்தை விட்டு வெளியே வா என்றார், தன் இனத்தானாகிய லோத்தை அழைத்துச் சென்றான்!

எலிமெலேக்கும், நகோமியும் தங்கள் ஆண் பிள்ளைகளுக்கு மோவாப் தேசத்திலே பெண் கொண்டார்கள். சாபத்தின் பிள்ளைகளோடு தேவப் பிள்ளைகள் உறவுவைத்துக் கொண்டார்கள். அப்பத்திற்காக அந்தத் தகாத உறவை அவர்கள் உண்டு பண்ணினார்கள்; தேவனோ அவர்களுடைய அப்பத்தின் ஆதரவு கோலையே முறித்துப் போட்டார். ஆம்! நமோமியின் இரு ஆண் பிள்ளைகளும் அவள் கணவனும் மோவாபிலே மரித்துவிட்டார்கள்.

மனிதனுக்குச் செம்மையாய்த் தோன்றும் வழிகள் உண்டு, அதன் முடிவோ மரணம் என்று வேதம் சொல்லவில்லையா? தகாத ஐக்கியத்திற்கு உன் மனம் இரத்தின கம்பளம் விரித்து வரவேற்பு கொடுக்கலாம் முடிவோ இரத்தக் கண்ணீராகிவிடும்.

சகோதரனே, சகோதரியே! உங்கள் உறவுகளைக் குறித்து மிக ஜக்கிரதையாக இருங்கள். அவ்விசுவாசிகளுக்கும், விசுவாசிகளுக்கும் பங்கு ஏது? நம்முடைய பிள்ளைகளின், குடும்பத்தின் ஜாக்கிரதையாக கவனிக்கவேண்டும். தேவனோடு ஐக்கியமாக இருந்தால் உலகத்தோடு ஐக்கியமாக இருக்க முடியாது.

**உன்னுடைய உறவு யாருடனிருக்கிறது; தகாத உறவு உன்னுடைய வாழ்க்கையையே கெடுத்துப்போடும், ஜாக்கிரதையாக இரு!**

4
ஜூலை

# மனவுறுதி

"கடவுளை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் கடவுளையே நம்பியிருக்கிறபடியால், கடவுள் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வார் (ஏசா.26:3)

மனவுறுதியுடன் நாம் கடவுளோடு பழகுவோமானால், நம் வாழ்க்கை வளமாய் இருக்கும். உறுதியற்ற மனமுடையவன், எப்பொழுதும் சஞ்சலத்திலேயே இருப்பான்; அவனுக்குள் சமாதானமிராது.

மாம்சீகமான அன்பு ரூத்தை மோவாபிலே தடுத்து நிறுத்தியிருக்கும், ஆவிக்குரிய அன்பு அவளை நகோமியைவிட்டுப் பிரிக்க முடியவில்லை. விதவையான தன் மாமி தனக்கு எந்தவித ஆறுதலையும், பாதுகாப்பையும் தரமுடியாது என்று அறிந்திருந்தும் ரூத் நகோமியை விடாமல் பற்றிக் கொண்டது ஆச்சரியமே.

கிறிஸ்துவோடுள்ள நம் உறவில் நாமும் ரூத்தைப் போல் உறுதியாயிருக்க வேண்டும். "கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ .... கிறிஸ்து இயேசுவிலுள்ள அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:36,39) என்று பவுல் வலியுறுத்துகிறார். சுகம், பணம், பதவி இவைகளுக்காக இயேசுவின் மேல் நம்பிக்கையுள்ளவன், தடாகத்தில் தண்ணீர் வற்றியவுடன் வேறிடம் நோக்கிப் பறந்து போகும் பறவைகள் போன்றவன். நாம் அப்படி இருக்கக் கூடாது.

ஓர்பாள் ஆழ்ந்த சிந்தனையின் முடிவாக மீண்டும் மோவாபிற்குச் சென்றுவிட்டாள். ஆனால் ரூத்தோ ஆழமான விசுவாசத்தின் முடிவாக மோவாபை விட்டு, பெத்லகேமிற்குப் புறப்பட்டுவிட்டாள். பிறர் மனம் வருந்துமே என்று பயந்து, சிலசமயங்களில் நாம் உண்மைகளை மறைப்பதுசரியல்ல. பிறர் வருந்தினாலும் சரி, வருந்தாவிட்டாலும் சரி, கர்த்தருக்குள் நாமெடுத்த முடிவுகளை உறுதியுடன் தெரிவிக்க வேண்டும்.

ரூத் விசுவாசத்தில் எடுத்துவைத்த காலடி, ஆபிரகாமின் விசுவாசத்தையும் மிஞ்சியது. ஆபிரகாம் கடவுள் தனக்குத் தந்த வாக்குத்தத்த அடிப்படையில் செயற்பட்டார். எந்தவொரு குறிப்பிட்ட வாக்குத்தத்தத்தையும் பெறாமலேயே ரூத் விசுவாசத்தில் செயற்பட்டாள். நகோமி எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாத பரிதாபமானப் பெண்ணாக நிற்கும்பொழுது, ரூத் நகோமியின் கடவுளை நம்பிப் புறப்பட்டது நமக்கு ஓர் முன்மாதிரி இல்லையா?

சகோதரனே! சகோதரியே! எங்கும் இருளாய் தோன்றுகிறதா? என்ன செய்வதென்றே புரியவில்லையா? விசுவாசப் பலகணியைப் பார்.... கிருபையின் வயல்வெளியைக் காண்கிறாயா? ஆம்! ஆசீர்வாதக் காலைப் பொழுது புலரப் போகிறது!

**பலகணியைத்திற; விடியலைப்பார்**

5
ஜுலை

# இளைப்பாறுதல்

"கர்த்தர் ராஜாவைச் (தாவீதை) சுற்றிலும் இருந்த அவனுடைய எல்லாச் சத்துருக்களுக்கும் அவனை நீங்கலாக்கி இளைப்பாறப் பண்ணினார்." (2சாமு.7:1)

யுத்தம், சண்டை, போராட்டம் என்று எப்பொழுதும் பதைபதைத்து ஓடிக் கொண்டிருந்தான் தாவீது. இப்பொழுது சண்டைகள் ஓய்ந்து தேசத்தில் அமைதி நிலவியது. இளைப்பாறுதல் அல்லது ஓய்வு தேவன் தரும் ஆச்சரியமான பரிசு. இன்று மனிதன் காலை முதல் இரவுவரை ஓடிக்கொண்டேயிருக்கிறான். காலை பொழுது புலர்ந்ததும் இன்று என்னவாகுமோ? என்ன நடக்குமோ என்று மனம் பதைபதைத்து ஒவ்வொரு நாளும் இளைப்பாறுதலின்றி ஓடுகிறான். இப்படி ஓடிய தாவீதுக்கு இப்பொழுது இளைப்பாறுதல்.

இளைப்பாறுதல் யாருக்கு? "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்.11:28) என்று வேதம் சொல்கிறது. பாடுபடுகிறவர்களுக்கு, அவர் நாமத்தினிமித்தம் பிரயாசப்பட்டு, வேதனைப்படுகிறவர்களுக்கு இளைப்பாறுதல் கர்த்தர் கொடுப்பார். கர்த்தரின் நாமத்தின் நிமித்தம் பிரயாசைப்படாதவர்களுக்கு கடவுள் இளைப்பாறுதல் கொடுக்கவேண்டிய அவசியமில்லை.

மேலும் "என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று வேதம் சொல்கிறது. கர்த்தருக்கு வேலை செய்வது ஒரு பாரமாகத் தோன்றுகிறது. ஆனால் கர்த்தரின் நுகம் ஒரு பாரமல்ல. பொதுவாக மிருகங்கள் நுகத்தைச் சுமக்கும்பொழுது இரண்டு மிருகங்களும் இணைந்து, இசைந்து சுமக்கின்றன. அதுபோல நாமும் கர்த்தருக்கு இசைந்தும், இணைந்தும் அவர் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும்.

நுகத்தைச் சுமந்து என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் என்று இயேசு சொல்கிறார். நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் கீழ்ப்படிதலும், ஒப்புக்கொடுத்தலும், (obedience and Surrender) கீழ்ப்படிதலினால் தேவ சமாதானத்தைப் பெற்றுக் கொள்கிறோம். "என் சமாதானத்தையே நான் தருகிறேன்" என்ற இயேசு சொன்னது இந்த சமாதானத்தையே, சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள், விளைவுகள் இவற்றில் பாதிக்கப்படாத சமாதானம், தேவ சமாதானம்.

ஒப்புக்கொடுத்ததினால் வரும் சமாதானம் தேவனோடு சமாதானம். ஆம்! அவருக்கும் நமக்கும் இடையே எந்தத் தடையும் இல்லாததுதான் தேவனோடு உள்ள சமாதானம்.

**கர்த்தருக்குள் கீழ்ப்படிந்து, அவருக்கே நம்மை அர்ப்பணித்தால் கர்த்தர் நமக்கு இளைப்பாறுதல் கொடுப்பார்.**

**6**
**ஜூலை**

# ஆவிக்குரிய விருந்து

"ஈசாக்கைப் பால் மறக்கப் பண்ணின பிறகு, ஆபிரகாம் பெரிய விருந்து பண்ணினான்" என்று வேதம் சொல்கிறது. (ஆதி 21:8)

குழந்தையைப் பால் மறக்கப் பண்ணுவது சமூக ரீதியாக ஒரு கொண்டாட்டமாகவே அக்காலத்தில் இருந்தது. இன்று ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையில் இது ஆவிக்குரிய கொண்டாட்டம், எப்படியெனில் கிறிஸ்துவுக்குள் வளரும் ஒருவன் ஆழமான உபதேசங்களை உட்கொள்ள அரம்பிக்கிறான். இந்த ஆவிக்குரிய உணவின் விளைவாகத்தான் கிறிஸ்துவுக்குள் நீதிமானாகவும் பத்திரமாகவும் இருப்பதாகவும் உணருகிறான். இந்த உணர்வு அவனை ஆரம்ப உபதேசங்களைக் கடந்து வேதத்தின் ஆழமான சத்தியத்திற்குள் பிரவேசிக்க உதவுகிறது.

"கிறிஸ்துவைப் பற்றி சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு... இந்த அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல் பூரணராகும்படி கடந்து போவோமாக" (எபி.6:1,2) என்ற வசனத்தின்படி ஒரு விசுவாசி கிறிஸ்துக்குள் வளர ஆரம்பிக்கிறான். இந்த வளர்ச்சியின் ஆரம்பம் தான் அவனுடைய ஆத்துமா பால் மறந்த நிலைமையில் இருப்பது. ஆவிக்குரிய நிலையில் ஒரு விசுவாசி கற்றுக்கொள்கிற முதல் பாடம் இதுவே.

ஆபிரகாம் ஊர் பட்டணத்தை விட்டு புறப்படும்படி அழைக்கப்பட்டவுடன் அவன் ஆத்துமாவுக்கு பிரியமான இன, ஜனம், நிலம், வீடு இவையெல்லாவற்றையும் அவன் மறக்க வேண்டியதாயிற்று. வழி நடை வருத்தங்கள், சந்தித்த சங்கடங்கள், கடந்து போன பாதைகள், மேடுகள் அவன் விட்டு வந்த தேசத்திற்கு திரும்பிப்போக செய்யக் கூடும். "தான் விட்டு வந்த தேசத்தை அவன் நினைத்திருப்பானானால் அதற்கு திரும்பிப் போவதற்கு அவனுக்குச் சமயம் கிடைத்திருக்குமே! அதையல்ல அதிலும் மேன்மையான பரம தேசத்தையே அவன் விரும்பினான்" (எபி 11:15,16) அவனுடைய ஆத்துமா ஊர் பட்டணம் என்ற பாலை மறந்து தேவனது பாதை மீது வாஞ்சையாயிருந்தது.

நாமும் இரட்சிக்கப்பட்ட நிலையிலே இருந்துவிட முடியாது. ஆவிக்குரிய பாதையில் முன்னேறிச் செல்ல வேண்டும். வேத வாசிப்பு – வேதத்தை போதிக்கிறதாகவும், ஜெபம் - சமூகத்திற்காக போராடுகிற ஜெபமாகவும் மாற வேண்டும். பால் மறந்த குழந்தை அந்த நிலையிலே இருக்க முடியாது. அப்படியிருந்தால் பெலவீனமாக இருக்கும். திட ஆகாரம் உட்கொள்ளவேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கையிலும் திட ஆகாரத்தை உட்கொள்.

**குழந்தையாயிராதே; புருஷனாய் வளர்ந்திட ஆரோக்கியமான உபதேசமான திடஆகாரத்தை உட்கொள்!**

7
ஜூலை

# நம்பிக்கை என்பது விசுவாசமல்ல

"அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை." (மத்.13:58)

நம்பிக்கை என்பது ஒரு பொருளின் மீதோ, ஒரு ஆள் மீதோ நாம் வைப்பது. ஆனால் நாம் தேவன் மேல் வைக்கிற நம்பிக்கையே விசுவாசம். கடவுள் மீது நம்பிக்கை வைக்கிற எல்லாருமே விசுவாசிகள் என்று சொல்ல முடியாது. உதாரணமாக ஒன்றினைப் பார்ப்போம். இயேசு தாம் வளர்ந்த நாசரேத்தூரிலே சில அற்புதங்களைச் செய்தார். அவர் என்ன அற்புதம் செய்தார் என்று சொல்லப்படாவிட்டாலும் பலத்த செய்கைகளையெல்லாம அவர்கள் நம்பினார்கள். அவருடைய ஞானத்தைக் குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். ஆனாலும் அவரை அவர்கள் விசுவாசிக்கவில்லை. பலத்தச் செய்கைகளை நம்பினவர்கள், அதைச் செய்த தேவகுமாரனை விசுவாசிக்கவில்லை.

ஆகவே அற்புத அடையாளங்கள் நடைபெறுவதினாலே ஒரு மனிதன் விசுவாசியாக மாறிவிட முடியாது. லோத்தின் மனைவி தன் வீட்டின் வாசற்படியில் அற்புதத்தைக் கண்டாள். ஆனால் அவளோ சோதோம் பட்டணத்திற்கு வெளியே அழிந்துப் போனாள். ஆகவே அற்புதங்கள் மீதே நம்முடைய மனம் இருக்குமானால் அவர் மேல் உள்ள விசுவாசத்தை இழந்து விடுவோம். அற்புதங்கள் நடைபெறாது. ஆம்! நாசரேத்தூரிலும் அவர் அநேக அற்புதங்களைச் செய்யவில்லை. ஆனால் நாம் சூழ்நிலைகளைக் கடந்து இயேசுவின் மீது விசுவாசம் வைப்போமானால் தேவன் நம்மை ஆளுகைச் செய்வார். ஆகவே விளைவுகளை எதிர்பாராமல் எல்லா சூழ்நிலையிலும் கர்த்தரையே விசுவாசிப்போம்.

நம்பிக்கை விசுவாசமல்ல, அது போல சந்தேகம் அவநம்பிக்கையல்ல. நம்முடைய வாழ்க்கையில் பல சூழ்நிலைகளில் நமக்கு சந்தேகம் ஏற்பட்டுவிடுகிறது. இது ஒரு பெலவீனம்தான் என்றாலும் இதனால் ஒருவன் அவிசுவாசியாகிவிடுகிறதில்லை. கடல் கொந்தளிக்கும்போது, பேதுரு கடல் மீது நடக்க ஆரம்பித்தான். ஆனால் காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, அவன் அமிழத் தொடங்கினான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து, "ஏன் சந்தேகப்பட்டாய்" என்றார். (மத்.14:31) ஆனாலும் பேதுரு இயேசு தன்னைக் கைவிட்டுவிட்டார் என்று சந்தேகப்படவில்லை. இயேசுவே என்னை இரட்சியும் என்று அவரை நோக்கியே கூப்பிட்டான். அலைகளைக் கண்டு பயந்தபோதிலும் அவன் கர்த்தர் மேல் உள்ள நம்பிக்கையை இழக்கவில்லை. இங்கு சந்தேகம் என்பது கொஞ்ச நேர உணர்வே தவிர ஆழமான அனுபவமல்ல. ஆகவே உன் வியாதியைக் குறித்தோ உன் பிரச்சனையைக் குறித்தோ பயந்துவிட்டால் உடனே கர்த்தர் தண்டித்துவிடமாட்டார்.

**சந்தேகத்தை நீக்குவதில் பிரயாசப்பட்டுக் கொண்டிராமல், கர்த்தரை விசுவாசிப்பதில் பழகப் பிரயாசப்படு.**

8
ஜூலை

# சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்.

"சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன், சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாம் என்று நினையாதிருப்பானாக" (யாக்.1:6,7)

வேதம் இப்படிச் சொல்லும்பொழுது சந்தேகம் அவிசுவாசமில்லையென்று நாம் எப்படிச் சொல்ல முடியும். சந்தேகத்தை யாக்கோபு ஒரு பாவமாகவே சொல்லுகிறாரே. சகோதரனே! சகோதரியே! யாக்கோபு சந்தேகம் என்ற சொல்வது, சந்தேக உணர்வு அல்ல. மனிதனுக்கு ஏற்படும் பல சோதனைகளை யாக்கோபு சொல்லிக் கொண்டு வருகிறார். அந்தச் சோதனையைச் சந்திக்க மனிதனுக்கு போதுமான ஞானம் இல்லாவிட்டால் அவன் கர்த்தரிடத்தில் அந்த ஞானத்தைக் கேட்டுப் பெற்றுக் கொண்டு சோதனையைச் சந்திக்கவேண்டும்.

"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துக்கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன்; அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்." (யாக்.1:5) இங்கு ஞானம் என்று சொல்லப்படுவது, தேவனது ஆலோசனை, எச்சரிப்பு இவற்றையே குறிக்கும். இப்படி கடவுளது ஆலோசனையையும் எச்சரிப்பையும் பெற்றப் பிறகு தேவன் தந்த தேவ ஞானத்தின் மீது ஒருவன் சந்தேகப்பட்டால் அவன் கர்த்தரையே சந்தேகிக்கிறான். இப்படிப்பட்டவன் கர்த்தரிடத்திலிருந்து ஒன்றையும் பெற்றுக் கொள்ள முடியாது என்று யாக்கோபு சொல்லுகிறார்.

நம் மனதில் மற்றொரு கேள்வியும் எழலாம். எபிரேய வாலிபர்கள் தாங்கள் ஆராதிக்கிற தங்கள் தேவன் தங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் தங்களை அக்கினிச் சூளையினின்று விடுவிப்பார் என்று விசுவாச அறிக்கை செய்யும்பொழுதே, "விடுவிக்காமற்போனாலும்" என்றும் அறிக்கையிட்டார்கள். இது சந்தேகமில்லையா? இப்படி சந்தேகப்பட்டாலும் அவர்கள் விடுவிக்கப்பட்டார்களே எப்படி? அந்த எபிரேய வாலிபர்கள் கடவுளின் வல்லமையைப் பற்றி சந்தேகப்படவேயில்லை. தேவனால் விடுவிக்க முடியாமற்போனால் என்று அவர்கள் சொல்லவில்லை. தாங்கள் இடைவிடாமல் ஆராதித்தாலும் அந்த ஆராதனையின் முடிவு அவர்கள் எதிர்பார்த்தபடியும் இருக்கலாம். எதிர்பார்த்தபடி இல்லாமலும் இருக்கலாம் என்று சந்தேகப்பட்டார்கள். இந்த சந்தேகம் பாவமல்ல. சகோதரியே, சகோதரனே! கர்த்தரை சந்தேகப்படாமல், கர்த்தரையே எல்லா சூழ்நிலைகளிலும் நம்புங்கள்.

**எப்பொழுதும் விசுவாசத்தில் நிலைத்திருப்போம்.**

9
ஜுலை

# மனதை மறுரூபப்படுத்துங்கள்

"எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாக இருக்கக் கற்று கொண்டேன்" (பிலி.4:11)

மனிதனுடைய வெற்றி தோல்விக்கு மனம் ஓர் முக்கியக் காரணம். ஆரவாரமான ஆரம்பங்கள் சோகமான முடிவை அடைவதற்குக் காரணம் மனதைப் பற்றிப்பிடிக்கும் சோர்வே. இல்வாழ்க்கையில் கடும் பிரச்சனைகள் எழக் காரணம் ஒருவரை ஒருவர் புரிந்துக் கொள்ளாத மனமே. ஆவிக்குரிய நிலையில் கடவுளைப் பற்றிய நல்ல அறிவு நமக்கு இருக்குமெனில் வாழ்க்கையின் நெருக்கங்களில் மனம் விசுவாசத்தில் தளர்ந்துவிடாது.

இயேசு செய்யும் அற்புதங்கள், அவர் தரும் வாக்குத்தத்தங்கள் இவற்றையே நாம் சார்ந்திருப்போமானால் எதிரிடையான சூழ்நிலை, தாமதமான செயல்பாடுகள் இவற்றினால் நம் மனம் கர்த்தரைப் பற்றிய நம்பிக்கையை இழந்துவிடுகிறது. நம்பிக்கையற்ற மனம் நம் ஆத்துமாவை வனாந்திரத்தில் அலையவிடும். பரிசுத்த பவுல் எல்லாச் சூழ்நிலைகளிலும், அதாவது பசி, தாகம், நிர்வாணம், காவல், வேதனை இவையெல்லாவற்றிலும் மனரம்மியமாகவே இருந்தார். எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாக இருக்கக் கற்று கொண்டேன் என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். சூழ்நிலைகளையும், பிரச்சனைகளையும் அவர் விளங்கிக்கொண்டதினால் இப்படிச் சொல்லவில்லை. "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று நான் அறிவேன்" (2தீமோ.1:12) என்ற மன உறுதியே அவர் வாழ்க்கையை மகிழ்ச்சியாக்கிற்று.

கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளும் மனம் மிகவும் அவசியம். "உம்மை உறுதியாய்ப்பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவரைப் பூரண சமாதானத்தோடுக் காத்து கொள்வீர்" (ஏசா.26:3) என்று வேதம் சொல்லவில்லையா? ஆகவே கர்த்தரைப் பற்றிக் கொள்ளும்போது, பற்றிக் கொள்ளும் மனம் மிகவும் அவசியம். இந்த மனதில் தான் பூரண சமாதானம் தங்கியிருக்கும். கர்த்தரைப் பற்றிக் கொள்ளாத மனம் வாழ்க்கையின் நெருக்கடியில் தடுமாறிப்போகும். இளைப்பாறுதல் இல்லாமல் அங்கும் இங்கும் அலையும். கர்த்தரைப் பற்றிக் கொள்ளும் மனமோ இரவிலே கர்த்தரை வாஞ்சிக்கும். அதிகாலையில் கர்த்தரைத் தேடும். (ஏசா.26:9)

சகோதரனே! சகோதரியே! உங்கள் மனம் இந்த இளைப்பாறுதலில் தங்கியிருக்கிறதா? வாழ்க்கையின் பிரச்சனைகள், நெருக்கங்கள், பாரங்கள் இதயத்தை ஆக்கிரமித்திருக்கும்போது மனம் எப்படி இளைப்பாறுதலில் இருக்கும் என்று கேட்கிறீர்களா? உங்கள் மனம் கர்த்தருக்குள் இளைப்பாறினால் பாரங்களும், நெருக்கங்களும் உங்களுக்குள் தூரமாகும். உலகத்தாரைப் போல நீங்களும் உங்கள் சிந்தனை ஓட்டத்தில் இருப்பீர்களானால் உங்கள் இருதயம் கிறிஸ்துவுக்குள் மறுரூபப்படாது.

**மறுரூபப்படாத மனம் சமாதானத்தை இழந்துப்போகும்.**

# தாழ்மைப்படுங்கள்

10
ஜூலை

"போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சிலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சிலையினால் துடைக்கவும் தொடங்கினார்." (யோவான் 13:4,5)

ஆண்டவர் தம்முடைய இடுப்பிலே ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு சீஷர்களுடைய பாதங்களைக் கழுவினார். அந்தப் பாதங்களை ஒரு பாத்திரத்தில் வைத்து கழுவி, தம்முடைய துண்டினாலே அவைகளைத் துடைத்தார் என்று வேதம் சொல்லுகிறது. அடிமைகள் தான் இந்த வேலைகளைச் செய்வார்கள். அடிமைகள் செய்கிற வேலையை ஆண்டவர் செய்தார். இது ஒரு முன்மாதிரியான செயல். அவர்களுக்கு ஒரு தாழ்மையைக் கற்றுக்கொடுக்க இதை செய்தார். என்னை நோக்கி வந்த நீங்கள் என்னுடைய பிள்ளைகள் என்று நீங்கள் விளங்குவீர்களானால் நீங்கள் செய்யவேண்டிய வேலை மற்றவர்களுக்குப் பணிவிடை செய்வதுதான். பணிவிடை செய்வதற்காகவே நீங்கள் அழைக்கப்பட்டீர்கள். கிறிஸ்தவன் என்பது பெருமைக்குரிய சால்வை அல்ல. அது ஒரு பணிவிடை ஓட்டம். மற்றவர்களுக்குச் சேவை செய்வதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை என்பதை தம்முடைய சீஷர்களுக்கு உணர்த்தும்படியாக இந்தக் காரியத்தைச் செய்தார்.

எப்பொழுது செய்தார்? தான் பரத்துக்கு ஏறப்போகிறேன் என்பதை அறிந்த வேளையில். ஆண்டவர் பரத்திலிருந்து பூமிக்கு இறங்கி வந்தார். தன் வேலையை முடித்து பரலோகத்துக்குத் திரும்ப வேண்டிய வேளை வந்துவிட்டது. தாம் விட்டுவந்த மகிமையை திரும்ப எடுத்துக்கொள்ளப்போகிறார். தேவகுமாரனாகப் போய் அமரப் போகிறார். மிக உன்னத நிலையை அடையப்போகிறார். பசியும் தாகமும் உள்ள மனித நிலை அல்ல. ஏளனமும், பரிகாசமும் சந்தித்த நிலையல்ல. ஒருவரும் எதிர்த்து நிற்க முடியாத சர்வ வல்லமையுள்ள தேவனாக அவர் அமர போகிற நேரம். தன் ஸ்தானத்திற்குத் திரும்பப் போவதை அவர் அறிந்தவுடனே இந்த வேலையைச் செய்கிறார். ராஜாதி ராஜனாக! கர்த்தாதி கர்த்தராக! தேவனாக சிங்காசனத்தில் அமரப்போகிற வேளையில் அவர் நியாயத்தீர்ப்பு செய்ய எழுந்திருக்கவில்லை. தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனங்களைத் தண்டிக்க அவர் முற்படவில்லை. அந்த சமயத்திலே அவர் போஜனத்தைவிட்டு எழுந்து சீஷர்களுடைய கால்களைக் கழுவினார். ஒரு உன்னதமான நிலையை அடையப்போகும்போது தாழ்மையான ஒரு காரியத்தை அவர் கற்றுக்கொடுக்கிறார்.

இது சீஷர்களுக்கும், உங்களுக்கும் ஒரு பாடம். உங்களுக்கு உன்னதமான நிலையை மிக உயர்ந்த பதவியை மிகச்சிறந்த சிலாக்கியத்தை கர்த்தர் உங்களுக்கு தருவரெனில் நீங்கள் மற்றவர்களுக்கு உதவியாயிருங்கள். நீங்கள் தாழ்மையாயிருங்கள். நீங்கள் பணிவிடை செய்யுங்கள் என்று கர்த்தர் சொல்கிறார்.

**தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தபடுவான்.**

11
ஜுலை

# வெளிச்சம் உண்டாகக்கடவது

"வெளிச்சம் உண்டாகக்கடவது" (ஆதி.1:3)

வேத வார்த்தை அமைதியாயிராது. அது இதமானத் தென்றல் அல்ல, கடுமையான புயல்காற்று. நம் இதயத்தில் சாத்தான் கட்டியெழுப்பும் சாம்ராஜ்ஜியங்களை அது தகர்த்து எறிந்து போடும்.

வெளிச்சம் உண்டாகக்கடவது என்பது கடந்த காலத்தில் புறப்பட்ட தேவ வார்த்தை அல்ல. இன்றும் அதே வார்த்தை கிரியைச் செய்கிறது. ஒழுங்கின்மையும், வெறுமையுமான உலகத்தை கர்த்தரின் வார்த்தை சீராக்கி, ஒளிரச் செய்தது போல் இன்றும் ஒழுங்கற்றதும், வெறுமையுமான வாழக்கையைத் திருத்தி பிரகாசிப்பிக்கிறது. நீங்கள் வாசிக்கும் வேத எழுத்துக்கள் உங்களில் ஏற்படுத்தும் மாற்றங்கள் எவை? ஆதியில் சிருஷ்டித்து, உருவாக்கிய தேவ வார்த்தை இன்றும் உருவாக்கும் வல்லமை உடையது. ஆகவே அது ஜீவவார்த்தை, இந்த வார்த்தை உங்கள் ஒழுங்கின்மையை மாற்றுகிறதா? வெறுமையை அகற்றுகிறதா?

இன்று காலையில் நீங்கள் வாசித்த வேத எழுத்துக்கள் உங்களில் எவற்றை உருவாக்கின? ஒன்றுமே நடக்கவில்லையா? அப்படியாயின் அது பொழுதுபோக்கான வேதவாசிப்பு! இலக்கு இல்லாமல் வாகனத்தை ஓட்டிச் செல்வது பொழுதுபோக்கு, வெறும் மனக்கிளர்ச்சி. இதனால் நீங்கள் செய்த ஆவிக்குரிய பிரயாணம் ஒன்றுமேயில்லை. ஒன்று ஜீவன் உள்ளதாக இருந்தால், அது வளரவேண்டும். தேவ வார்த்தை ஜீவனுள்ளது. ஆகவே அது வளர்கிறது. வேத வசனம் எப்படி வளரும்? எழுதப்பட்ட வார்த்தைகளின் வெளிப்பாட்டில் அவை வளரும்.

"ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமற் போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்." (ஆதி.5:24). இந்த வசனம் நமக்கு தரும் செய்தி.

1. ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்தான்.
2. அப்பொழுது அவன் காணப்படாமற்போனான்.
3. ஏனென்றால் தேவன் அவனை எடுத்துக் கொண்டார்.

"விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான். தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற் போனான். அவன் தேவனுக்கு பிரியமானவனென்று அவன் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சி பெற்றான்". (எபி.11.5) இந்த வசனம் நமக்கு தரும் செய்தி

1. ஏனோக்கு உயிரோடே எடுத்துக் கொள்ளப்பட்டான்.
2. எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு, தேவனுக்குப் பிரியமாய் வாழ்ந்தான்.
3. அவன் எடுத்துக் கொள்ளப்படுவான் என்பது அவனுக்கு ஏற்கனவே தெரியும்.
4. தான் எடுத்துக் கொள்ளப்படுவதை அவன் நம்பியே ஜீவித்தான்.

"விசுவாசத்தினாலே ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான் என்று வசனம் சொல்வதிலிருந்து அவன் தான் எடுத்துக் கொள்ளப்படுவதை விசுவாசித்தான் என்பதை நாம் விளங்கிக் கொள்கிறோம் ஆதியாகமம் நமக்குப் பேசுவதைவிட எபிரேயர் நிருபம் இன்னும் கூடுதலாகப்பேசுகிறது. ஆகவே வசனம் வளர்கிறது.

வெளிப்பாட்டில் வசனம் வளர்கிறது.

12

ஜூலை

# சத்திய வேதத்தின் வார்த்தை

"அந்த வார்த்தை மாம்சமாகி... நமக்குள்ளே வாசம்பண்ணினார்" (யோவான் 1:14)

எல்லா சமயங்களிலும் வார்த்தைகள் வார்த்தைகளாகவே இருக்கின்றன. ஆனால் நம்முடைய கிறிஸ்தவ மார்க்கத்தில் வார்த்தை மாம்சமாயிற்று. வார்த்தையான கிறிஸ்து மாம்சமானதே கிறிஸ்தவத்தின் சரித்திரம். வார்த்தை சிந்தனைகளின் பிரதிபலிப்பு. பிதாவின் சிந்தனையை கிறிஸ்து பிரதிபலிக்கிறார். பிதாவின் நோக்கங்களை நமக்கு சரியாகப் புலப்படுத்துவது இயேசுவே. கடவுளின் எண்ணங்களை, சிந்தனைகளை நாம் அறிந்து கொள்ள முடியாது. ஒரு மனிதனுடைய எண்ணங்களையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்துகிறது அவனது வார்த்தைகளே. அதுபோல, பிதாவின் எண்ணங்களை வெளிப்படுத்துவது வார்த்தையான கிறிஸ்துவே. மனித வார்த்தை ஒலி வடிவத்தில் வெளிப்படுகிறது. தேவ வார்த்தை மனு உருவில் கிறிஸ்துவாக வெளிப்பட்டது. "அந்த வார்த்தை மாம்சமாகி... நமக்குள்ளே வாசம்பண்ணினார்" (யோவான் 1:14) என்று வேதம் சொல்கிறது. உலகில் எல்லா சமயங்களிலும் தெய்வீகம் என்று அழைக்கப்படும் வார்த்தைகள் உண்டு. ஆனால் கிறிஸ்தவ சமயத்தில் மட்டுமே, வார்த்தைகள் மாம்சமாயிற்று. மற்ற சமயங்களில் வார்த்தைகள் வார்த்தைகளாகவே இருக்கின்றன. ஆகவே இயேசு பிதாவின் சிந்தனை, நோக்கம், வாஞ்சை இவையெல்லாவற்றையும் சுமந்து நிற்கிறவர்.

"ஆதியிலே வார்த்தை இருந்தது" (யோ.1:1) இதன் பொருள் என்ன? At the beginning என்றால் தொடக்கத்திற்கு முன்பே என்று அர்த்தம். In the beginning என்றால் தொடக்கத்தின்பொழுது என்று அர்த்தம். வேதம் என்ன சொல்கிறது? எல்லாவற்றையும் தொடங்குவதற்கு முன்பே, வார்த்தை இருந்தது.

இயேசு வார்த்தையின் உருவமாக இருக்கிறார். பிதாவின் இருதயத்திலுள்ள யாவும், இந்த உருவில் அடங்கிவிட்டன. இந்த இயேசு நம்மில் இருக்கிறார். ஆகவே பிதாவின் சித்தம், நோக்கம், திட்டம், வாஞ்சை இவையெல்லாமே நம்மில் குடியேறிவிட்டன! நாம் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், இவற்றையெல்லாம் சுமக்கிறோம்.

இயேசு நம்மோடு பேசுகிறார் என்றால், தேவ சித்தம் நம்மோடு பேசுகிறது என்று அர்த்தம். தேவ திட்டம், தேவ நோக்கம் எல்லாமே நம்மோடு பேசுவதைத்தான் இயேசு பேசுகிறார் என்று நாம் சொல்கிறோம். பிதாவின் மனதில் இல்லாத ஒன்றையும், இயேசு பேச மாட்டார். ஆகவே இயேசு சொன்னார் என்று பிதாவிற்கு மாறாக ஒன்றை ஒருவர் கூறினால், உடனே அதனைத் தள்ளிவிடுங்கள்.

**தேவ சித்தம் நிறைவேற; தேவன் பேசுவதை கேள்**

13
ஜூலை

# தேவ மனிதனின் தைரியம்

"நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்று பிலிப்பு மந்திரியைக் கேட்டான்." (அப்.8:30).

இரதத்தில் அமர்ந்திருப்பவன் ஓர் மந்திரி. அவனிடம் அவன் வாசிப்பது அவனுக்குப் புரிகிறதா என்று கேட்பதற்கு தைரியம் வேண்டும். பிலிப்புவிற்கு ஆவியானவர் இந்தத் தைரியத்தைக் கொடுத்திருந்தார். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு அந்நிய பாஷை மட்டும் அடையாளமல்ல, தைரியமும் ஓர் அடையாளம். இன்று பலருக்கு பொது ஆராதனை யில் ஜெபம் பண்ண பயம்; சாட்சி சொல்ல பயம், பேசப் பயம். ஏனெனில் அவர்கள் அபிஷேகம் பெற்றிருந்தாலும், பரிசுத்த ஆவியானவரின் ஆளுகையில் இல்லை. ஆனால் தேவ மனிதனாகிய பிலிப்பு, ஆவியானவரின் ஆளுகையில் இருந்தான். ஆகவே தைரியமாய் அவன் மந்திரியிடம் பேசினான். இன்று பேச வேண்டியவர்களின் வாய்கள் மூடிக்கிடப்பதால், தேசத்தில் சாத்தான் சிங்கத்தைப்போல கர்ஜிக்கிறான். ஆவியில் நிறைந்தவர்கள் வாய் திறந்தால், இந்த வீண் கர்ஜனைகள் அடங்கிவிடும். பேதுரு தைரியமாய்ப் பேசினபடியால், பெந்தகொஸ்தே நாளில் பிரமித்து நின்றவர்களில் மூவாயிரம் பேர் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்தனர்.

சகோதரனே! சகோதரியே! இந்த வாரம் யாருடன் சத்தியத்தைப் பகிர்ந்துக் கொண்டீர்கள்? நமக்கென்ன என்று மௌனமாய் இருந்துவிட்டீர்களா? மௌனமாயிருக்க இது காலம் இல்லையே. மதவெறியாளர்களின் செயலின் கொடுமைக்கு இரையான மக்களுக்காக நாம் அறைக்கதவை அடைத்து ஜெபம் பண்ண வேண்டும். ஆனால் அது மட்டும் போதாது. அநியாயத்தை, அக்கிரமத்தை எதிர்த்து சத்தியத்தைத் தைரியமாய் நாம் பேச வேண்டும்.

சங்கிலிகளால் கட்டப்பட்ட பவுல் தன் விடுதலைக்காக ஜெபம் பண்ண நம்மை அழைக்கவில்லை; சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாதிபதியாகிய நான் அதைப்பற்றிப் பேச வேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக... வாக்கு எனக்குக் கொடுக்கும்படி எனக்காக விண்ணப்பம்பண்ணுங்கள்" (எபே.6:19,20) என்று தான் பவுல் நம்மிடம் கூறுகிறார்.

சகோதரனே, சகோதரியே! தைரியமாய் ஆவியில் நிறைந்து பேசுங்கள் எதிர் வாதங்கள், மதவாதங்கள் அடங்கி ஒடுங்கிப்போம். மௌனமாயிராதீர்கள்! கிறிஸ்துவுக்குள் தைரியமாயிருங்கள். நீங்கள் பேசுங்கள்; கர்த்தர் கிரியை செய்வார்.

நாம் தைரியமாக சத்தியத்தைப் பேச பெலமுள்ள
ஆவியானவர் உதவி செய்வார்.

14
ஜூலை

# ஆகாரத்துக்கு நெருக்கடி

"இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து. திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு, பிலிப்புவை நோக்கி, இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று கேட்டார்." (யோவான் 6:5).

இந்தச் சூழ்நிலைக்கு இயேசுவே அதிகாரி. வேண்டுமென்றே இயேசு இந்தச் சூழ்நிலையை உண்டுபண்ணினார். மலை போன்ற பெரிய தடைகளை, இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தினால் மாத்திரமே தகர்க்க முடியும் என்பதை மக்கள் உணரும்படியாகவே இந்தச் சூழ்நிலையைக் கர்த்தர் அனுமதித்தார்.

சகோதரனே! சகோதரியே! உன் வாழ்க்கையின் நெருக்கடியான சூழ்நிலையில் தேவனது மகத்தான நோக்கம் நிறைவேறப்போகிறது. ஆகவே தைரியமாயிரு. இயேசு தன்னால் முடியாததினால் நம்மிடம் ஆலோசனை கேட்கிறார் என்று பிலிப்பு எண்ணியிருக்கலாம். ஆனால் அடுத்த வசனம் இயேசுவின் நோக்கத்தைத் திரை விலக்கிக் காட்டுகிறது. "தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும் அவனைச் சோதிக்கும்படி இப்படிக் கேட்டார்." (யோவான் 6:6) ஒரு சூழ்நிலை எப்படி பயமுறுத்தினாலும், நெருக்கினாலும் அது இயேசுவின் வல்லமைக்கும், கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்டதல்ல.

காரணமில்லாமல் கர்த்தர் செயற்படமாட்டார். ஏன் இந்த ஐயாயிரம் பேரை இயேசு போஷிக்க வேண்டும்? இதிலிருந்து என்ன ஆவிக்குரிய பாடத்தை நாம் கற்றுக்கொள்கிறோம்? பக்கத்தில் பட்டணங்கள் இருந்தபடியால், உணவைப் பெற்றுக்கொள்வது அவர்களுக்கு ஒரு பிரச்சனையல்ல. சீஷர்களும், அவர்களைச் சுற்றிலும் இருக்கிற பட்டணங்களுக்கு அனுப்பச் சொல்லி ஆலோசனை கொடுக்கிறார்கள்.

ஆனால் இயேசுவே அவர்களுக்கு ஆகாரம் கொடுக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தார். இக்கட்டான நிலையில் சீஷர்கள் எப்படி செயற்படுகிறார்கள் என்பதையும், எதிர் சூழ்நிலையில் அவர்கள் இயேசுவினிடத்தில் வைத்திருந்த விசுவாசத்தையும் வெளிப்படுத்தவே. இந்தச் சூழ்நிலையைத் தேவன் உண்டாக்கினார். அன்பான சகோதரனே! சகோதரியே! எதிர்பாரா நெருக்கங்களினால் சோர்ந்து போகாதே! இந்த நெருக்கத்தை நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் பலத்தினால் சந்தித்தால் உன்னிடமிருந்து ஆசிர்வாத வாய்க்கால்கள், மற்றவர்களையும் வாழவைக்க, பொங்கிப் பெருகி ஓடும்.

அருமையானவர்களே! உன் நெருக்கடிகளில் தேவனின் வல்லமையை நம்புவாயா? உங்கள் சூழ்நிலைகள் எதிரிடையாக இருக்கலாம். ஆனால் அவைகள் தேவனது கரத்தில் இருக்கின்றனவா என்பதை கவனியுங்கள். தேவன் உன் நெருக்கடிகளை மாற்றுவார். உன் தேவைகளை நிறைவாக்குவார். கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு.

**நெருக்கடிகள் தேவனோடு நெருங்கி வாழவே.**

15
ஜூலை

## நெருக்கடியின் நோக்கம் என்ன?

"இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து. திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு, பிலிப்புவை நோக்கி, இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று கேட்டார்." (யோவான் 6:5).

முதலாவது சீஷர்களைக் கர்த்தர் சோதிக்க விரும்பினார். "முடியாது" என்ற பதில் அவர்களுக்கு இயற்கையானதுதான். ஆனாலும் இயேசுவால் கூடும் என்ற நம்பிக்கையை அவர்கள் எடுக்கத் தவறிவிட்டனர்.

கிணறு ஆழமாயிருக்கிறதே என்ற சமாரியப் பெண்ணின் அவிசுவாசத்தைவிட, ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களும் எம்மாத்திரம் என்கிற சீஷர்களின் அவிசுவாசம் மிகப் பெரியது! இந்தப் பதில் தேவனை மகிமைப்படுத்தாது. ஆகவே அவரை மகிழ்ச்சியாக்காது. என்னைப் பெலப்படுத்துகிற இயேசுவாலே எல்லாம் கூடும் என்று உன்னால் நம்பமுடிகிறதா? இந்த நம்பிக்கையை உண்டு பண்ணவே, இயேசு இந்த உணவு நெருக்கடியை உண்டாக்கினார்.

எவ்வளவு குறைவும், தேவன் கூட இருப்பாரெனில் நிறைவாகும் என்பதை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க இயேசு விரும்பினார். ஜனங்கள் ஒழுங்காக, வரிசை வரிசையாக அமர்ந்திருந்தனர். ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட ஜனங்கள் இயேசுவை நோக்கிப் பார்க்கின்றனர். அவர் கையில் இரண்டு மீன்களும், ஐந்து அப்பங்களும் மாத்திரமே! மிகுந்த நம்பிக்கையோடு ஜனங்கள் இருந்தனர். "இரண்டு மீன்களும், ஐந்து அப்பங்களும் போதாது". இது அறிவு தரும் காட்சி! "மீன்களும், அப்பங்களும் இயேசுவின் கரத்தில், இது அற்புதமாக மாறும்" இது விசுவாசத்தின் செய்தி!.

ஆகவே உங்கள் சூழ்நிலைகள் எதிரிடையாக இருக்கலாம். ஆனால் அவைகள் தேவனது கரத்தில் இருக்கின்றனவா என்பதைக் கவனியுங்கள். அவைகளைத் தன் கரங்களில் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணினார். (யோவான் 6:11) இந்த ஸ்தோத்திர ஜெபமே அற்புதத்தை நடத்தியது. "ஜெபிக்காமல் சாப்பிடுகிறவன் கர்த்தரிடம் திருடிச் சாப்பிடுகிறான்" என்பது ஆவிக்குரிய பழமொழி! ஜெபம் விருந்து சாலையை உருவாக்கும் என்பதை சீஷர்களும், ஜனங்களும் கற்றுக்கொண்டனர்.

**அப்பங்களைப் பிட்டது ஒரு தடவை, கொடுத்தது பலதடவை!
அப்பங்களும், மீன்களும் தேவனது கரத்தினால்
திரளாய்ப் பெருகின!**

# பிரசங்கத்தினால் ஒரு நெருக்கடி

16
ஜுலை

கப்பர்நகூமில் ஜெப ஆலயத்தில் இயேசு உபதேசிக்கையில், "நானே ஜீவ அப்பம், இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்து இறங்கின அப்பம் இதுவே" என்று கூறினார். (யோ. 6:48,51)

உடனே அவருடைய சீஷர்களில் அனேகர் இவைகளைக் கேட்டபொழுது, "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்" என்றார்கள். (யோவான் 6:60) இந்தப் பிரசங்கம் ஒரு பெரிய நெருக்கடியை உண்டாக்கியது. நீ கேட்கும் பிரசங்கம் எந்த நெருக்கடியை உண்டாக்குகிறது? காதுக்கு இனிய பாடலாகவும், கீதவாத்திய ஓசையாகவும் பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்கிறாயா? அப்படியாயின் நீ கேட்பது தேவ சத்தம் அல்ல. தேவ சத்தம் நெருக்கடியை உண்டாக்க வேண்டும். நெருக்கடி உண்டானதினிமித்தம், அவருடைய சீஷர்களில் அனேகர் பின்வாங்கிப் போனார்கள் (யோவான் 6:66) அந்த அளவிற்கு பிரசங்கம் அவர்களுக்கு நெருக்கடியை உண்டு பண்ணியது. ஆனால் யூதாஸ் உட்பட, பனிரெண்டு பேரும், அந்த நெருக்கடியிலும், தேவனது உபதேசங்களைப் பற்றிக்கொண்டார்கள்.

இயேசுவை ஏற்றுக்கொள்வது – சிலுவையிலறையப்பட்ட இயேசுவை ஏற்றுக்கொள்வது மனித சுபாவத்திற்கு ஒரு பெரிய நெருக்கடி. அவரை ஏற்றுக்கொள்வது மூளைவேலை அல்ல. நமது சித்தம், எண்ணம், உணர்வுகள் அனைத்தோடும் முழுப்பலத்தோடும் வைராக்கியமாய் இயேசுவை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்வதே அவரை ஏற்றுக்கொள்வது. இப்படிச் செய்வதினால் வாழ்க்கையில் நெருக்கடி உண்டாகிறது. நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்க வந்தேன் என்று நினைக்கிறீர்களா? சமாதானத்தையல்ல பிரிவினையையே உண்டாக்க வந்தேன். "எப்படியெனில் இது முதல் ஒரே வீட்டிலே ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள். இரண்டு பேருக்கு விரோதமாய் மூன்று பேரும் மூன்று பேருக்கு விரோதமாய் இரண்டுபேரும் பிரிந்திருப்பார்கள்" (லூக்.12:51,52) என்று இயேசு சொல்லியிருக்கிறார்.

இரண்டு பேர் ஒரு வீட்டில் இரட்சிக்கப்பட்டிருந்தால் இரட்சிக்கப்படாத மூன்றுபேர் அவர்களை எதிர்ப்பார்கள். மூன்று பேர் இரட்சிக்கப்பட்டிருந்தால் இரட்சிக்கப்படாத இருவர் அவர்களை எதிர்ப்பார்கள். இது இரட்சிப்பினால் உண்டாகும் நெருக்கடி! இப்படி ஒரு நெருக்கடி உன் இரட்சிப்பினால் உண்டாகுகிறதா? உன் பழைய நண்பர்கள் எந்த எதிர்ப்பும் இல்லாமல் உன்னோடு பழகுகிறார்களா? அப்படியாயின் உன் இரட்சிப்பு எந்த நெருக்கடியையும் உருவாக்கவில்லை. வேலை, பணம், வீடு, சொத்து என்பதை மட்டுமே நாடுவோர் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளை எடுப்போர். இயேசுவின் மூலம் தெய்வீக சுகம், உலக ஆசீர்வாதங்களை மட்டுமே விரும்புவோர் மேஜையிலிருக்கும் அப்பத்தை எடுப்பவர். இயேசுவே எனக்கு எல்லாம் என்று அவரையே எல்லாவற்றையும் விட நேசிப்போர் ஜீவ அப்பமாகிய எஜமானை ஏற்றுக்கொள்பவர். இவர்களையே இயேசு நாடுகிறார்.

**உன் ஆலயத்தில் நீ கேட்கும் பிரசங்கம் உனக்கு நெருக்கடியை உண்டாக்காவிட்டால் நீ இனிமையான இயேசு கதையைக் கேட்டுவருகிறாய்.**

17
ஜூலை

# இயேசுவால் சிநேகிக்கப்பட்டவன்

"ஆண்டவரே நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்". (யோ.11:3)

இயேசுவால் சிநேகிக்கப்பட்ட லாசரு வியாதிப்பட்டான். ஆகவே நமக்குத் துன்பம், கஷ்டம் இவைகள் வந்தவுடன் இவைகள் தேவனால் கொடுக்கப்பட்ட தண்டனைகள் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. பக்தன் யோபு அனுபவித்த துன்பங்களெல்லாம் தேவ தண்டனைகள் அல்ல. யோபு தேவனுக்கு விரோதியல்ல; ஆனாலும் மிகவும் நெருக்கப்பட்டார். அதன் காரணத்தை நாம் அறிவோம். ஆனால் துன்பங்களை அனுபவித்த யோபு அறியவில்லை.

ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று லாசருவின் சகோதரிகள் இயேசுவிற்குச் செய்தி சொல்லியனுப்பினார்கள். கர்த்தர் நம்மைச் சிநேகித்தாலும் நமக்கு வியாதிகள், பிரச்சனைகள் வரும். கிறிஸ்தவர்களுக்கு வியாதியே வராது என்பது தவறான உபதேசம். நீங்கள் ஜெபித்தாலும், பரிசுத்தமாய் ஜீவித்தாலும், உண்மையாய் ஊழியம் செய்தாலும் உங்களுக்குப் பிரச்சனைகள் வரும். கிறிஸ்தவனுக்கு வியாதி இல்லை என்று முழங்கும் ஆராதனைகள் வெறும் சொற்பொழிவுக் கூட்டங்கள்.

உலகில் எல்லோர் மீதும் பரம தகப்பனுக்கு அன்பு உண்டு. தம் ஒரே பேறான குமாரனைத் தந்தருளிய அன்பு அவருடைய பொது அன்பு. அந்த அன்பினால் உண்டான ஈவாகிய இயேசு கிறிஸ்துவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாவிட்டால் நீ பிதாவின் அன்புக்கு வெளியே இருக்கிறாய். பறவைகள், மிருகங்கள் போல உனக்கும் இவ்வுலக நன்மைகள் கிடைக்கலாம். ஆனால் கர்த்தர் உனக்குப் பிதாவாக இருக்க மாட்டார்.

பிதாவின் பிள்ளைகளாக நீங்கள் இருந்தால் மட்டுமே பறவைக்கும் மிருகத்திற்கும் மேலாக நீங்கள் விசேஷித்தவர்களாக இருக்க முடியும். அப்படி இருக்கிறீர்களா?

அன்றன்று வேண்டிய ஆகாரத்திற்கு மாத்திரம் நீ இயேசுவைப் பற்றிக்கொண்டால் நீ சராசரி கிறிஸ்தவன். ஆனால் நீ தேவனுடைய பிள்ளை இல்லை. உன் மீது அவர் பிதாவுக்குரிய அன்பைச் செலுத்தமாட்டார். ஏனெனில் "உயிரினங்கள் எல்லாமே ஏற்ற வேளையில் ஆகாரத்தைத் தருவீர் என்று அவைகளெல்லாம் உம்மை நோக்கிக் காத்திருக்கும்" (சங்.104:27) என்று வேதம் சொல்கிறது.

**நீ சாதாரண உயிரினம் அல்ல, தேவ சாயலின் படைப்பு**

18
ஜூலை

# தேவ வல்லமைக்கு அடையாளம்

"அவர் மரித்தோரிலிருந்தெழுப்பின லாசருவைக் காணும்படியாகவும் வந்தார்கள்." (யோவான் 12:9).

லாசரு புது வாழ்க்கையைப் பெற்றான். இந்த மறுவாழ்வைக் காண திரளானக் கூட்டம் அவனைக் காண ஓடியது. மரணத்தை உதறிய வாழ்க்கையை அவன் ஜனங்களுக்கு வெளிப்படுத்தினான். நீங்களும் பாவத்தை உதறிய வாழ்க்கையை உலகிற்குக் காட்டுகிறீர்களா?

உயிர்த்தெழுந்த லாசருவின் உடலில் மரணத்தின் கொடுமை, வியாதியின் அடையாளம் எல்லாமே ஒழிந்தன. "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின." (2கொரி.5:17) அப்படி உனக்குள் ஒழிந்திருக்கும் பழைய காரியங்கள் யாவை? பொய், புறங்கூறுதல், பெருமை, மாய்மாலம் இவையெல்லாம் ஒழிந்தனவா? லாசருவின் சரீரம் புதிதானதுபோல உன் வாழ்க்கை புதிதாகிவிட்டாதா?

உன் பரிசுத்தமே உன் வல்லமை. நீ கிறிஸ்துவுக்குள் உயிர்த்தெழுந்திருக்கிறாய் என்பதற்கு இதுவே அடையாளம். ஆராதனை வேளையில் அன்னிய பாஷை பேசி ஆரவாரம் செய்யும் நீ மற்ற நாட்களில் பிரச்சனைகள் நெருக்கும்போது வாய்க்கு வந்தபடி பேசி தேவனுக்கு அந்நியராய் போனாயே. இதுதான் இன்றையக் கிறிஸ்தவம் காட்டும் தேவ வல்லமையா?

அலுவலகத்திற்குப் பிந்திப் போகும் கிறிஸ்தவன், சம்பளம் போதாதென்று லஞ்சம் வாங்கும் கிறிஸ்தவன், குடும்பத்தையே யுத்தக்களமாக மாற்றும் கிறிஸ்தவன் இவர்களெல்லாம் அங்கம் வகிக்கும் சபை உயிருள்ளதென்றும் பெயர் பெற்றும் செத்ததாயிருக்கிறது. "நீ விழித்துக்கொண்டு சாகிறதற்கேதுவாய் இருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து. உன் கிரியைகள் தேவனுக்கு முன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை." என்று அந்தச் சபையைப் பார்த்து இயேசு கூறுகிறார். (வெளி.3:2) நீயும் அப்படியிருந்தால் உன்னைப் பார்த்தும் அப்படித்தான் கூறுவார்.

லாசரு உயிர்த்தெழுதலின் வெளிச்சமானான். ஆகவே மரண இருள் விலகிற்று. பெத்தானியா கிராமத்திற்கு லாசரு அடையாளமாகவும் அற்புதமாகவும் இருந்தான். தேவ வல்லமையை வெளிப்படுத்துவது அற்புதம், தேவ சுபாவத்தை வெளிப்படுத்துவது அடையாளம்.

**உன் வாழ்க்கையில் நீ உலகத்துக்குக் காட்டும் கிறிஸ்தவ அடையாளம் என்ன?**

19
ஜுலை

# மிகப்பெரிய சோதனை

கர்த்தர் யோசுவாவோடு சொன்ன அருமையான வார்த்தைகள், "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை". (யோசு.1:5)

மோசே என்ற பலமான தூண் விழுந்துவிட்ட நிலையில் இஸ்ரவேலருக்கு மிகவும் தேவையான பலத்தை, துணையைத் தரக்கூடியது கடவுளின் சமூகமே. இஸ்ரவேலின் கடவுள் தன் சமூகத்தை – தன் நீங்கா சமூகத்தை யோசுவாவிற்கு வாக்களிக்கிறார். நான் உன்னோடு இருப்பேன் என்று மாத்திரமல்ல. "நான் மோசேயோடு இருந்ததுபோல் உன்னோடும் இருப்பேன்" என்று கர்த்தர் சொல்கிறார். ஆகையால் மோசேயின் இழப்பினால் ஒரு பாதிப்பும் இல்லை.

அதுபோல கடந்த கால இழப்புகளினால் நீங்கள் இப்பொழுது பாதிக்கப்படமாட்டீர்கள். கடவுளின் சமூகம் சூழ்நிலைகளின் கடுமையை, வெறுமையை மாற்றும். மோசேயின் நாற்காலி வெறுமையாகத்தான் இருக்கும். அந்த வெறுமை உங்கள் கண்களில் நீரை வரவழைக்கத்தான் செய்யும். ஆனால் சிங்காசனம் வெறுமையாயில்லை; கர்த்தர் எல்லா சூழ்நிலைகளையும் அரசாளுகிறார்.

மோசே இல்லாத நாள்களில் இஸ்ரவேலரின் பிரச்சனை கடுமையாகிறது. ஆம்! இப்பொழுது ஏழு ஜாதிகளைத் துரத்த வேண்டிய நிலை. இது மிகப் பெரிய பிரச்சனை. இப்பொழுதும் பிரச்சனைகள் மிகவும் கடுமையானதாக மாறிவிட்டனவா? மோசேயின் உதவி மிகவும் தேவைப்படும் வேளையில் மோசே இல்லை. ஐயோ! இந்தச் சூழ்நிலையில் அவர்கள் இல்லையே, அந்த அதிகாரி மாத்திரம் இப்பொழுது இருந்திருப்பாரானால் எவ்வளவு உதவியாக இருந்திருக்கும். இப்பொழுது பார்த்து அவரும் இல்லையே என்று மிகவும் மனம் தளர்ந்து போயிருக்கிறீர்களா?

நீங்கள் கடவுளது பிள்ளைகளாக அவருடைய சத்திய பாதையில் நித்தமும் நடப்பவர்களாக இருந்தால் உங்கள் வெறுமையான சூழ்நிலைகளை அவர் சமூகத்தால் நிரப்புவார். பணத்தேவை, உடல் நலக்குறைவு, மரணக்கண்ணி இந்தச் சூழ்நிலைகளிலெல்லாம் கர்த்தரின் சமூகம் உனக்கு இளைப்பாறுதலைக் கொடுக்கும். ஆகவே அவர் சமூகத்தைப் பற்றி பிடித்துக் கொள். கர்த்தரின் சமூகத்தை விட்டு விலகாதே. அவரின் வார்த்தையைப் பற்றிக்கொள்.

**கர்த்தர் உன்னை விட்டு விலகுவதுமில்லை**
**உன்னைக் கைவிடுவதுமில்லை.**

20
ஜூலை

# கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே நமது பெலன்

"பின்னும் அவன் அவர்களை நோக்கி; நீங்கள் போய்க் கொழுமையானதைப் புசித்து, மதுரமானதைக் குடித்து, ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள்; இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்குப் பரிசுத்தமான நாள், விசாரப்படவேண்டாம்; கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான்." (நெகே.8:10)

சந்தோஷம் உணர்வாக இருந்தால், சில நல்ல சூழ்நிலைகள் மனிதனுக்கு சந்தோஷத்தைத் தரமுடியும். ஆனால் அந்த சந்தோஷம் வெறும் உணர்வாக மட்டும் இருந்தால், சீக்கிரம் மறைந்துவிடும். நம்முடைய சந்தோஷத்தின் இரகசியம், நாம் வேத எழுத்துக்களை நம்புவதையும், அவற்றின்மேல் செயற்படுவதையும் பொருத்தே இருக்கிறது. தேவ வார்த்தைகளினால் வராத சந்தோஷம், தேவன் தராத சந்தோஷம்.

"மிகவும் கொள்ளையுடைமையைக் கண்டுபிடிக்கிறவன் மகிழுகிறது போல, நான் உமது வார்த்தையின் பேரின் மகிழுவேன்." (சங்.119:162) என்கிறான் சங்கீதக்காரன். குப்பையும், கூளமும் சிதறிக்கிடக்கும் ஓர் சாதாரண தரையைத் தோண்டும்பொழுது விலையேறப்பெற்ற ஓர் பொக்கிஷத்தை ஒருவன் கண்டெடுத்தால் அவன் மிகவும் சந்தோஷம் அடைவான் அல்லவா, அதுபோல வேதப் புத்தகத்தில் சிதறிக்கிடக்கும் வேத எழுத்துக்களை ஆவியானவர் துணைக்கொண்டு தியானித்தால், ஆவிக்குரிய பெரும் பொக்கிஷத்தைக் கண்டுபிடிக்கலாம். இப்படி கண்டுபிடித்தவர்களின் மகிழ்ச்சி உண்மையான சந்தோஷம்!.

இந்தப் பொக்கிஷங்களாகிய ஐஸ்வர்யத்தை நாம் அனுதின வேதத்தியானத்தில் பெறுகிறோமா? அல்லது கடற்கரையில் ஓர் சிப்பியையும் ஓர் கூழாங்கல்லையும் எடுத்து விளையாடும் குழந்தையைப்போல, மேலோட்டமாக ஓர் வசனத்தை, வாக்குத்தத்தத்தை எடுத்து மகிழ்கிறோமா? ஆவியானவர்தான் வசனத்தைத் தரவேண்டும். மனோவாஞ்சை நமக்கு ஓர் வசனத்தைத் தரக்கூடாது. மனோவாஞ்சையின் வசனங்கள் நமக்கு ஏமாற்றத்தையே தரும்; நம் மகிழ்ச்சியைப் பறித்துவிடும். எந்த சூழ்நிலையிலும் நமக்கு வேண்டிய ஓர் உண்மை என்னவெனில், கர்த்தர் தவறு செய்யவே மாட்டார் என்பதே.

சகோதரனே! சகோதரியே! கடவுளுடைய பல செயற்கள் நமக்கு விளங்காமல் இருக்கலாம். அதனால் நம்முடைய சந்தோஷத்தை இழந்து துக்கமாகயிருக்ககூடாது கடவுள் செய்வதெல்லாம் சரியாகத்தான் இருக்கும் என்று நம்ப வேண்டும்.

**தேவன் தராத சந்தோஷம் வெறும் உணர்வாகிய மனக்கிளர்ச்சியே!**
**அது விரைவில் உலர்ந்து போகும் காட்டு மலரே!.**

21
ஜூலை

# யோசேப்பு கனிதரும் செடி.

உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு. (3 யோவான் 2)

யோசேப்பு என்றால் பெருகு என்று பொருள். நாம் வாழ்ந்து பெருகும்படியே நம்மை உண்டாக்கிய கடவுள் விரும்புகிறார். உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு என்பது தனிப்பட்ட ஒருவனுக்கு கொடுக்கப்பட்ட ஆசீர்வாதம் என்றாலும் அந்த ஆசீர்வாதத்தை நாமும் சுதந்தரிக்கலாம்.

நம்முடைய ஆத்துமா வாழ்ந்தால்தான் நாமும் சுகமாக இருக்க முடியும். பல வருடங்களுக்குத் தேவையான ஆகாரத்தை மூட்டை மூட்டைகளாக, தானியக் களஞ்சியத்தை இடித்துப் பெரிதாக்க கட்டி சேர்த்து வைத்துவைப்பதினால் ஒரு மனிதனின் ஆத்துமா பலம் அடையாது. மதிகெட்ட ஓர் ஐசுவரியவான் இவையெல்லாவற்றையும் சேர்த்து வைத்து "ஆத்துமாவே, உனக்காக அனேக வருஷங்களுக்கு அனேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. நீ இளைப்பாறி புசித்துக் குடித்து பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன்" (லூக்.12:19) என்று சொல்கிறான். ஆனால், அதனால் அவன் வாழப்போவதில்லை. அவன் ஆத்துமாவும் நித்திய மரணத்தை அடையும். ஆகையால் மனிதன் வாழ்ந்து, பெருக வேண்டுமெனில் அவனுடைய ஆத்துமா வாழ வேண்டும். ஆத்துமா வாழ வேண்டுமெனில் ஆத்துமா வேத வாசிப்பிலும் தியானத்திலும் பலம் பெற வேண்டும்.

யோசேப்பு கடவுள் தனக்குத் தந்த தரிசனத்தை எந்த எதிர் சூழ்நிலைகளிலும் மறக்கவே இல்லை. எப்பொழுதும் கர்த்தரின் தரிசனத்தையே அவன் முன்வைத்தபடியால், அவன் தேவ ஆவி பெற்ற மனிதனாக விளங்கினான். அவன் குழியில் தள்ளப்படும்பொழுதும், எகிப்துக்கு விற்கப்படும்பொழுதும். சிறைச்சாலையில் தள்ளப்படும்பொழுதும், "கடவுள் என்னை முன்னே அனுப்பினார்". (ஆதி.45:5) என்று கர்த்தரின் தரிசனத்தையே நம்பினான். ஆகவே "தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொருவன் உண்டோ" என்று (ஆதி.41:38) உலக அரசன் கூட அவனை மெச்சி ஓர் சாட்சி கூறினான். அதாவது யோசேப்பின் வாழ்க்கை கடவுளை மகிமைப்படுத்தியது. ஆகவே யோசேப்பு கனிதரும் செடி.

நெருக்கடியான சூழ்நிலை வரும்பொழுது ஆவியைப் பெற்றவன் வித்தியாசமாக இருப்பான். "ஐயோ! இனி என்ன செய்வேன்? இப்படி நடந்து விட்டதே" என்று புலம்பி நிற்கமாட்டான். மாறாக. "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி.4:13) என்று தைரியமாயிருப்பவனே ஆவியின் கனியைப் பெற்ற மனிதன். யோசேப்பு இத்தகைய அசாதாரணமான தைரியத்தை ஆவியினாலே பெற்ற மனிதனாக இருந்தான். யோசேப்பு பட்டுப்போன அல்லது பலனற்ற கொடி அல்ல. நெருக்கடியான சூழ்நிலையில் தேவன் பார்த்துக் கொள்ளுவார் என்று அவரையே சார்ந்திருங்கள்.

**நாம் பட்டுப்போன பலனற்ற கொடி அல்ல,**
**கனி தரும் பலமுள்ள கொடி.**

22
ஜூலை

# வாக்குத்தத்தத்தைச் சுதந்தரி

"உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்". (யோசுவா 1:3)

கானான் தேசத்தைச் சுதந்தரிப்பது இஸ்ரவேலருக்கு முன்பாக மிகப்பெரிய பணி. ஆறுகள் குன்றுகளைக் கடக்க வேண்டும்; நாடு நகரங்களைப் பிடிக்கவேண்டும். கொடுமையான மக்களைத் துரத்தவேண்டும். இத்தகையை மாபெரும் பணி இஸ்ரவேலரை எதிர்நோக்க, மோசேயின் திடீர் மறைவு வெற்றிடமாய் உருவாகி வேதனைப் பட்டயமாய் யோசுவாவின் இதயத்தை ஊடுருவிப் பாய்ந்தது. அவன் மாத்திரம் அல்ல. இஸ்ரவேல் மக்கள் அனைவரும் கண்ணீர் தடாகத்தில் தள்ளப்பட்டனர். இப்படி முப்பது நாட்கள் அழுது அரற்றிய பின் யோசுவா தேவனது குரலைக் கேட்டான். அந்தக் குரலே இந்த வாக்குத்தத்தம்! எத்தனைப் பெரிய துன்பத்திலும் கர்த்தரின் பிள்ளை தேவனது சத்தத்தைக் கேட்கத் தவறக்கூடாது. சூழ்நிலைக்கு ஏற்ற ஓர் செய்தி கர்த்தரிடம் உண்டு. உனக்கு அதனைத் தெரிவிக்க எப்போதும் தேவன் ஆயத்தமே. ஆனால் அவர் குரலைக் கேட்க உன் செவிகள் பயிற்சிப் பெற்றிருக்க வேண்டுமே.

தேவன் நமக்குத் தரும் வாக்குத்தத்தங்களை வாஞ்சித்துப் பெற்றுக் கொள்கிறோம். ஆனால் காலம் செல்லச்செல்ல, அவைகளின் நிறைவேறுதல் நமக்கு இன்னும் வெகு தூரத்திலே இருப்பதை எண்ணி மிகவும் மனச்சோர்வு அடைகிறோம். தருவேன் என்று கர்த்தர் சொல்லியும், இன்னும் தந்தபாடில்லையே. ஒருவேளை நாம் தாம் இப்படி நம்பி நம்பி நம்மையே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோமா? இப்படியெல்லாம் எதிர்சிந்தனைகள், எதிர்காற்றாய், நமது ஆத்மப் படகை அலைக்கழிக்கலாம். இந்த மனநிலையில் இன்று நீங்கள் இருக்கிறீர்களா? தேவனது வாக்குத்தத்தத்தைக் குறித்து சந்தேக அலைகள் உங்கள் மனக்கடலில் புரண்டு எழும்பி, இதயக்கதவுகளின் மீது மோதியடிக்கின்றனவா? உங்களுடன் தேவன் பேசப்போகிறார்.

தேவன் வேத வசனத்தின் மூலமாய்ப் பேசுவார். இதுவே மிக உறுதியானதும் சந்தேகத்திற்கு இடமில்லாததுமாகும். நம்முடைய ஆவியின் தூண்டுதல்களினாலும் கர்த்தர் பேசுவார். "சிமியோனே, நீ ஆலயத்திற்குப் போ" என்ற உணர்வை அவன் ஆவியில் பெற்றான். அதன்படியே ஆலயத்திற்கு வந்தான். (லூக்.2:27) சொப்பனத்தின் மூலமாகவும் தரிசனத்தின் மூலமாகவும் தேவன் பேசுவார். ஒருவன் எப்பொழுதும் கவனமாக இருந்தால் அவன் தேவனது செய்தியைக் கேட்டுக் கொண்டேயிருப்பான். வேத வசனம் உன்னோடு பேசுவதில் நீ பழகியிருக்கிறாயா? ஆபேல் உன்னோடு என்ன பேசுகிறான்? "உனக்குப் பிரியமானதையல்ல, தேவனுக்குப் பிரியமான காணிக்கையையே செலுத்து" என்று அவன் பேசுகிறான். ஆபேலின் இரத்தம் என்ன பேசுகிறது? "அவனைப் பழிவாங்கு" என்ற நியாயப்பிரமாணத்தின் குரலை ஒலிக்கின்றது. இயேசுவின் இரத்தம் எதைப் பேசுகிறது? "மன்னித்துவிடு" என்று ஆபேலின் இரத்தத்தைவிட மேன்மையானதைப் பேசுகிறது.

**தேவனின் செய்தியை அறியாமல் வேதம் வாசித்தால் அது வரலாற்று புத்தகமே தவிர வேதப் புத்தகம் அல்ல.**

**23**
**ஜூலை**

# கிறிஸ்து இல்லாத வாழ்க்கை

"சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களை-யெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது" (பிர.1:14)

வாழ்க்கையில் எத்தனை வசதியும், மேன்மையும் இருந்தாலும் கிறிஸ்து இல்லா வாழ்க்கை மாயைதான். இதைத்தான் சாலொமோனும் கூறுகிறான். ஆவிக்குரிய மனிதன் இப்படிச் சொல்லமாட்டான். "என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்" (சங்.23:5) என்றே ஆவிக்குரிய மனிதன் சொல்வான்.

தாவீது ஆவியில் நிறைந்து தன் வாழ்வை நோக்கிப் பார்க்கிறான். ஆகவே "என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைப் தொடரும்" என்று பாடினான். சாலொமோன் ஆவியில் நிறைந்து அல்ல, பரலோக சிந்தனையில் அல்ல, உலக மனிதனின் பார்வையில் தன் கருத்தைச் சொன்னான். ஆகவே சூரியனுக்குக் கீழே என்று மனித அனுபவத்தையே அவன் சுட்டிக் காட்டுகிறான்.

சூரியனுக்கு மேலே இருக்கும் ஆவியானவரின் பார்வையில் அவன் கண்ட காட்சியை அல்ல, மனிதனாக அவன் கண்ட காட்சிதான் மாயையின் காட்சி. அதாவது கிறிஸ்துவுக்குள் இல்லாத உலக மனிதனின் செயல்கள் அனைத்தும் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. ஆனால் தேவ சமூகத்தை நாம் உணர்வோமானால், அங்கே பரிபூரண ஆனந்தமும் அவருடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு. (சங் 16:11)

எங்கே உலக மனிதன் சஞ்சலத்தையும் மாயையும் மட்டுமே காண்கிறானோ அங்கே கிறிஸ்துவுக்குள்ளான மனிதன் ஆனந்தத்தையும் நித்திய பேரின்பத்தையும் காண்கிறான். நம் ஆத்துமா சூரியனுக்குக் கீழே சஞ்சரிக்குமெனில் அது மாயையை மட்டும் கண்டு, கடைசியில் மண்ணோடு ஒட்டிக்கொள்ளும். ஆனால் நம் ஆத்துமா உன்னதங்களில் இயேசுவோடு உலாவினால் நாம் மேன்மையையும் வளத்தையும் காண்போம். ஆனாலும் ஆவியானவர் அவனைத் தூண்டி எழுதிய வார்த்தைகளில் சூரியனுக்கு மேலான பார்வை ஒன்று இருக்கிறது. இந்தப் பார்வையில் வாழ்க்கை மாயையல்ல. பூமியில் வாழ்நாட்கள் முடிந்து போகும், ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான வாழ்க்கை முடியவே முடியாது.

கர்த்தருக்குள் வாழ்க்கையைப் பார்க்கும்படி உங்கள் மனக்கண்களை கர்த்தர் பிரகாசிக்கப்பண்ணுவாராக. "எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும் அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே. அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது. நாங்களும் பறந்து போகிறோம்." (சங்.90:10) இது மனித பெலவீனத்தின் சத்தமே தவிர பரிசுத்த ஆவிக்குள்ளான கண்ணோட்டம் அல்ல.

**நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி**
**என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.**

24
ஜூலை

# ஆத்துமாவில் முள், ஆவியில் மலர்.

அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து... (எபி.12:2)

எத்தனையோ சம்பவங்கள் நம் மனதில் (ஆத்துமாவில்) முட்களாகக் குத்திக்கிழித்து. நம் எண்ணங்களை வேதனையின் வடிகால்களாக மாற்றுகின்றன. ஆனால் ஆவியிலோ, நம்பிக்கை மலர்கள் பூக்கின்றன. ஆத்துமாக்களைக் கிழிக்கும் முட்கள் அல்ல. நமது ஆவியை மகிழச்செய்யும் மலர்களையே நோக்க வேண்டும். எவை இந்த மலர்கள்? நெருக்கங்களில், நமக்கு நம்பிக்கைத் தரும் வேத வசனம், அரவணைக்கும் தேவ சமூகம் - இவைகளே அந்த மலர்கள். சிலுவைப்பாடுகள் நமது கர்த்தரின் ஆத்துமாவில் கொடிய முட்கள். நமதாண்டவர் அந்த ஆத்ம முட்களை எப்படி சகித்தார் என்பது நமக்கு வழிகாட்டியாகும்.

அவமானத்தை எண்ணாமற்போவதே, முட்களைச் சகிக்கும் வழி. பிரச்சனைகளை அற்பமாக, ஒன்றுமில்லாததாக கருதுவது அவைகளை எண்ணாமற்போவதாகாது. அவைகளை முற்றிலும் மறந்துவிடுவதும் அவைகளை எண்ணாமற் போவதாகாது. அப்படியாயின் அவைகளை எண்ணாமற்போகும் வழி எது? ஒரு மனிதனிடம், அவனுடைய நண்பன் ஒரு குரங்கின் படத்தைக் காட்டிவிட்டு கொஞ்சநேரம் கழித்து, நீ எந்த மிருகத்தைப் பார்த்தாய் என்று கேட்டபொழுது அவன் "குரங்கை" என்று பதில் சொன்னான். "சரி அந்தக் குரங்கை மறந்துவிடு" இப்பொழுது உன் மனதில் எந்த மிருகம் தோன்றுகிறது என்று கேட்டான். "இப்பொழுதும் அந்தக் குரங்கைத்தான் என் மனம் காண்கிறது" என்று பதிலுரைத்தான். உடனே அந்த மனிதன் ஒரு யானைப்படத்தைக் காட்டிவிட்டு, "இப்பொழுது உன் மனம் எந்த மிருகத்தைக் காண்கிறது" என்று கேட்டபொழுது, அவன் சொன்ன பதில் "யானை". ஆம்! நம் மனமானது காரியங்களை, சம்பவங்களை, வேதனைகளை எளிதில் மறந்துவிடாது. இவைகளை எண்ணாமற்போக, குரங்கை மறக்க யானை தேவைப்பட்டது போல் புதிய சிந்தனைகள் வேண்டும்.

உதாரணமாக ஆபிரகாம் தகப்பனாவதற்கு சாத்தியக்கூறே இல்லாத வேளையில் தன் சரீரம் செத்துப்போனதை எண்ணாதிருந்தான். எப்படி? தன் பலவீனத்தை அல்ல, தேவனது வாக்குத்தத்தமாகிய பலத்தையே நினைவு கூர்ந்ததினாலே. ஆம்! ஆத்துமாவைக் கிழித்த வெறுமையான இல்லத்தை அல்ல, அவன் இதயத்தை நிரப்பிய வாக்குதத்த மலரை நினைவு கூர்ந்தான்! முள்ளை மறந்து, மலரை நினைவு கூர்ந்தான். நம் வேதனைகளாகிய முட்கள், தேவதிட்டம் என்ற தோட்டத்திற்கு வெளியே இருக்க வேண்டியவை என்று எண்ணாமல், முட்கள் நிறைந்த இந்தத் தோட்டத்திலும் அவரின் சித்தப்படி உன் எதிர்காலம் மலரும் என்று விசுவாசி.

**முட்களை மற, வண்ணமலரைப் பார்.**

25
ஜூலை

# ஆவியில் மலரும் வண்ணமலரை மறந்துவிடாதே.

"யாக்கோபு அதைக்கண்டு இது என் குமாரனுடைய அங்கிதான், ஒரு துஷ்ட மிருகம் அவனைப்பட்சித்துப் போட்டது. யோசேப்பு பீறுண்டு போனான் (ஆதி 37:33)

யோசேப்பு அணிந்திருந்த அங்கியைக் காட்டி, உன் மகன் பீறுண்டுப் போனான் என்று சாத்தான் யாக்கோபை முட்பாதையில் இழுக்க ஆரம்பித்தான். மகனின் திடீர் மறைவு என்ற முள் ஆத்துமாவைக் கிழித்தது. கண்கள் கண்ணீர் நதியாக மாறின. "கடைசி நாளில் விழிக்கதவுகளை மூடும்வரை, என் ஆத்துமா ஆறுதலடையாது. துக்கத்தின் மகனாகவே நான் மரிப்பேன்" என்று யாக்கோபு கலங்கினான். அவன் ஆவியில் ஏற்கெனவே ஒரு சின்னமலர், தன் இதழ்களை விரித்திருந்தது. ஆம்! ஒரு நாள் யோசேப்பு தன் கனவுகளைத் தன் சகோதரரிடம் சொன்னான். அவனை அவர்கள் வணங்குவது போல் ஒரு காட்சியைக் கண்டிருந்தான். இதனைக்கேட்ட யாக்கோபு, தன் மகன்களுக்கு மத்தியில் யோசேப்பைப் கடிந்துக் கொண்டாலும் அந்தச் சொப்பனத்தைத் தன் மனதில் வைத்துக் கொண்டான் (ஆதி.37:11)

தன் மகன் யோசேப்பு மற்றெல்லா மகன்களைவிட உயர்த்தப்படப்போகிறான் என்ற செய்தி, சிறு மொட்டாக அரும்ப ஆரம்பித்தது அவன் மனதில். அந்த அரும்பு, அவன் ஆவியில் நம்பிக்கை மலராகத் தோன்ற ஆரம்பிக்குமுன், சூழ்நிலை காட்டிய முள்ளில் அவன் ஆத்துமா சிக்கிக்கொண்டது. இரத்தக் கறைகள் அவன் இதயத்தைக் கலங்கப்பண்ணின. எங்கோ ஒரு அடர்ந்த காட்டில் யோசேப்பு கொடிய மிருகத்திற்கு இரையாகிவிட்டான் என்று நம்பினான். ஆவியில் மலர்ந்திருந்த வாக்குத்தத்தத்தை, சொப்பனத்தை நினைத்திருப்பானெனில், இந்த முள்ளுக்கு அவன் ஆத்துமா தப்பியிருக்கும்; இந்தக் கண்ணீரின் பாதை அவனுக்கு வெகு தூரமாயிருந்திருக்கும்! ஆவியில் பெற்ற தேவசெய்தியான வண்ண மலரை மறந்தான்; முள் அவன் ஆத்துமாவைக் கிழிக்க ஆரம்பித்தது.

வேதம் ஒரு சம்பவத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. பசியினால் வாடும் நூறு வேதாகமக் கல்லூரி மாணவர்களுக்கு திடீரென்று, தேவ தயவால் 20 அப்பங்கள் கிடைக்கின்றன. தேவ மனிதன் எலிசா தன் பணிவிடைக்காரனை நோக்கி "இந்த அப்பங்களை அவர்களுக்குக் கொடு" என்கிறார். "ஐயா! 20 அப்பங்கள் எப்படி 100 பேருக்குப் போதும்" என்று திகைக்கிறான் பணிவிடைக்காரன். எலிசாவின் ஆவியில் ஒரு செய்தி கேட்கிறது. அதனைக் கேட்ட எலிசா "நீ கொடுக்கத் தொடங்கு, மீதி உண்டாகும்" என்றான். அப்படியே ஆவியின் செய்தியின்படி எல்லோருடைய தேவைகளையும் சந்தித்தபின் மீதியும் இருந்தது!

**உன் ஆவி பெற்ற செய்தி – மொட்டு**
**அதை விசுவாசித்தால் வெற்றி என்ற மலர் கிட்டும்.**

26
ஜூலை

# வருத்தத்தின் முள்

"கர்த்தர் என் அருகில் போகிறார். நான் அவரைக் காணேன்; அவர் கடந்துபோகிறார், நான் அவரை அறியேன். இதோ அவர் பறித்துக் கொண்டு போகிறார்; அவரை மறிப்பவன் யார்? நீர் என்ன செய்கிறீர் என்று அவரைக் கேட்பவன் யார்?"
(யோபு 9:11,12)

வருத்தம் அனுபவிக்கவே மனுஷன் பிறந்திருக்கிறான் என்பது சாதாரண மனிதனின் வார்த்தைகள். மனரம்மியமாய் இருக்கிறேன் என்பது தேவ சமுகம் ஆளுகை செய்யும் இதயத்தின் வெளிப்பாடு. மரணம் தன் கொடுமையான ஆட்சியை நடத்திவிட்டு யோபுவின் வீட்டை கண்ணீர் தடாகமாக மாற்றியிருந்தது. இது ஏன் இப்படி என்று புரியாத பக்தன் யோபு புலம்புகிறான். தன்னுடைய துயரப்படுக்கை அருகே கர்த்தர் நிற்பதாக ஒரு உணர்வு. கண் விழித்துப் பார்த்தால் அவர் கண்ணெதிரே இல்லை. தன்னைத் தொட்டு கர்த்தர் போவதுபோல தெரிகிறது. ஆனால் கொஞ்ச நேரத்தில் அந்தத் தொடு உணர்ச்சியும் மறைந்துவிடுகிறது. இப்படி தேவப் பிள்ளை எண்ணி எண்ணி கலங்குகிறான். "என் சந்தோஷத்தையும், என் சமாதானத்தையும், என் ஆரோக்கியத்தையும் நீர் பறித்துக்கொண்டு போகிறீர். ஏன் என்று உம்மை மறிப்பது யார்? தடுப்பது யார்? உம்மை கேள்வி கேட்க யாரால் முடியும்?" என்ற வார்த்தைகள் கண்ணீரோடு கலந்து வருகின்றன.

என் அருமை சகோதரனே, சகோதரியே! விளங்கிக்கொள்ள முடியாத வேதனையில் சிக்கிக்கொண்டாயா? ஒவ்வொரு சூழ்நிலையும் உன் வாழ்வின் ஆசிர்வாதங்களைத்தட்டிப் பறிக்கிறதா? எல்லாம் அவர் சித்தம் என்று மனமகிழ்ச்சியோடு மனநிறைவோடு இந்த முட்களை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக "ஐயோ என் தலையெழுத்து" என்று அமர்ந்துவிட்டாயா? பாடுகளையும் பயங்கரங்களையும் கடந்துவந்த யோபு கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் யாவை? "என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது." (யோபு 42:5) முட்களையே கண்டுவந்த அவன் கண்கள், அவன் ஓடின பொறுமையின் பாதையினிமித்தம் இரட்சண்ய மலரான மீட்பரைக் கண்டன.

உன் வருத்தத்தின் பாதை முடிய வேண்டுமென்றால் விசுவாசத்தில் துரிதமாய் நட. இதயத்திற்குப் பாரமான எல்லாவற்றையும் தள்ளு. உன் சுபாவத்திற்கு சூழல்களைத் தேவன் நியமித்த பாதையென்று எண்ணி ஓடு. இந்தப் பாதையில் இப்பொழுது பக்தன் சொல்லும் வார்த்தை "நான் தேவனைக் கண்டேன்." நொண்டி நொண்டி நடந்த யாக்கோபு தன் வேதனையில் அறிவித்த வெற்றியின் வார்த்தைகள். "நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன்".

**முட்களுக்கு நடுவின் மலர்ந்த வெற்றியின் மலர்களே;**
**உன்னைச் சுற்றிலும் நம்பிக்கை நறுமணத்தை பரப்பும்**

27

ஜூலை

# சந்தேகத்தின் முள்

"மற்ற சீஷர்கள்; கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன்; அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான்." (யோவான் 20:25)

ரோமானிய எதேச்சதிகாரம், அரசாங்கத்தின் அத்துமீறல்கள், மதவாதிகளின் தீவிரவாதம் இவைகளினால் எருசலேமில் கொடுமைகள் நிறைவேறிக் கொண்டேயிருந்தன. ஊருக்கு வெளியே சிலுவை மரத்தில் தொங்கும் பிணங்கள்! கிறிஸ்தவத்திற்கு எதிரான போர் முரசு கொட்டப்பட்டுவிட்டது. சீஷர்களும் பயந்து பதுங்கிவிட்டனர். இந்நிலையில் இயேசு, தாளிட்ட அறைக் கதவைத் திறவாமல் உள்ளே வந்து "உங்களுக்கு சமாதானம்" என்றார். இச்செய்தியைக் கேள்விப்பட்ட தோமா சொல்கிறான் "நான் நம்பமாட்டேன்; அவர் காயத்தில் விரலைப் போட்டால்தான் நம்புவேன்". ஆண்டவரின் சரீரத்தைக் கிழித்த ரோமாபுரி ஆணிகளைவிட, விலாப் புண்ணிலே தன் விரலை விடுவேன் என்று சொன்ன தோமாவின் வார்த்தைகளே இயேசுவுக்கு அதிக வேதனை தந்தன. இந்தச் சந்தேக வார்த்தைகள் முட்களாகத் தைத்துக் கொண்டிருக்கும் வேளையில் "என் தேவனே! என் ஆண்டவனே" என்று தோமாவின் வாயினின்று புறப்பட்ட விசுவாச அறிக்கை என்ற மலர், கர்த்தரின் மேல் குளிர்ந்தத் தென்றலாய்த் தடவிச் சென்றது.

உன்னையும் வீணாகச் சந்தேகப்படுகிறார்களா? உன் அந்தரங்க வாழ்க்கையை அவதூறாய் விமர்சிக்கிறார்களா? உன் கொடுக்கல், வாங்கலை அநியாயம் என்று தீர்ப்பளிக்கிறார்களா? தேவன் என்னை அநியாயத்தின் தலைவாசலின் தலைகுனிய வைத்து விட்டார் என்று புலம்பாதே! "நான் கடந்துபோகக்கூடாதபடிக்கு அவர் என் பாதையை வேலியடைத்து, என் வழிகளை இருளாக்கிவிட்டார்" (யோபு 19:8) என்று தேவன் மேல் குற்றம் சாட்டிய யோபு கூறுகிறார். "தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது." (யோபு 42:2). ஆம்! உன் வாழ்வை இருளாக்குவது அவரது நினைவு அல்ல. உன் பாதையை கடந்து போகாதபடி வேலியடைப்பது அவர் வேலை அல்ல.

**இதய முட்களோடு அவரது பாதத்தில் அமர்ந்துவிடு! காலம் உன் கோலத்தை மாற்றும்படி அவர் உத்தரவிடுவார்.**

28

ஜூலை

# அடைக்கப்பட்ட கோட்டையும், வெளிப்பட்ட வார்த்தைகளும்

"இதோ எரிகோவையும், அதன் ராஜாவையும், யுத்த வீரரையும் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்" (யோசு.6:2)

ஏமாற்றம், வருத்தம், பாடுகள் என்று தத்தளிக்கும் மனித உள்ளம் வெற்றிப் பாதையைத் தேடி தேடி அலுத்துப்போகிறது. ஜீவ மார்க்கங்களாக ஆரம்பத்தில் தோற்றமளிக்கும் அனேகப் பாதைகள் மரணத்தின் வழிகளாக மாறிவிட்டன! உலகம் கிறிஸ்தவனின் வாய்மொழிகளையல்ல, வாழ்க்கை மொழியைக் கேட்கவே விரும்புகிறது. பொய்யும், பித்தலாட்டமுமாக வாழ்ந்துக்கொண்டே இயேசு பரிசுத்தர் என்று ஓங்கி முழங்குவதால் என்ன பயன்? (What you are, Speaks louder than what you say!) உன் வாழ்க்கை, உன் வார்த்தைகளை விட சப்தமாகப் பேசுகிறது என்பதை மறந்துவிடாதே. வேதத்தில் யோசுவா என்ற பாத்திரம் வெற்றிப்பாதையைச் சுட்டிக்காட்டுகிறது. இஸ்ரவேலின் போர்த்தளபதி யோசுவாவின் வாழ்க்கையில் ஓர் சம்பவத்தைப் பார்க்கலாம்.

அடைக்கப்பட்ட கோட்டை இஸ்ரவேலின் முன்னேற்றத்திற்கு தடையாயிருந்தது. ஊடுருவிச் செல்லமுடியாத அக்கோட்டை இஸ்ரவேல் மக்களைப் பார்த்து "பின்னிட்டுத் திரும்பிச் செல்லுங்கள்" என்று உத்தரவிட்டுக் கொண்டிருந்தது. இது ஒரு இடிமுழக்கச் செய்தியல்ல. இடிக்கமுடியா கோட்டையின் அமைதிச் செய்தி. சாத்தான் உன் வாழ்க்கையில் பெரிய யுத்தப் பிரகடனம் செய்யமாட்டான். நரித் தந்திரத்தினால் உன் ஆசிர்வாத வழிகளை அடைப்பான். உனக்கு ஏதேனும் வழி அடைபட்டுவிட்டதா? உன் நீண்டகால பிரயாசை வீணாயிற்று என்று கலங்குகிறாயா? இந்த வழியை சாத்தான் அடைக்கவில்லை, தேவனே அடைத்துவிட்டார். ஏனெனில் மேன்மையான வழியொன்றை உனக்குத் திறக்க வேண்டும் என்பதற்காக.

கடந்த காலத்தில் தேவன் உனக்கு செய்த நன்மைகளை எண்ணி, வருங்காலப் பிரச்சனைகளையும் தேவன் தீர்ப்பார் என்பதை நம்பு. இந்த நம்பிக்கை உன்னைப் பின்னிட்டுப் போகாமல் காக்கும். ஆனால் முன்னோக்கி நடக்கும் வெற்றிப் பாதையை உருவாக்காது. தேவன் உனக்கு தரும் வார்த்தைகளுக்காக காத்திரு. "இதோ எரிகோவையும், அதன் ராஜாவையும், யுத்தவீரரையும் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்" என்ற தேவனது வார்த்தைகளே அடைக்கப்பட்ட கோட்டையை எதிர்த்துச் செல்ல அவனை தைரியப்படுத்தின. இந்த அடைக்கப்பட்ட கோட்டையின் வாசலைக் கர்த்தர் திறப்பார் என்பதல்ல நாம் பெற்றுக்கொள்ளும் விசுவாசம். இந்தக் கோட்டையைக் கடப்பதற்கு முன்பே அதற்கப்பால் இருக்கும் எரிகோ நாட்டையும் அதன் இராஜாவையும் யோசுவாவின் கையில் கர்த்தர் ஒப்புக் கொடுத்துவிட்டார் என்ற விசுவாசமே அவனுக்கு வெற்றிப் பாதையாய் அமைந்தது. பிரச்சனையில் ஜீவ வார்த்தைகள் உன் ஆத்துமாவில் இறங்கவேண்டும்.

**கவலை மேகங்களைக் கலைத்துவிட்டு உன் நம்பிக்கை வானில் உதித்துவரும் நீதியின் சூரியனை உற்றுநோக்கு. உன் இருள் வெளிச்சமாகும்.**

29
ஜூலை

# மனந்திரும்புதலின் கண்ணீர்.

"பேதுரு வெளியே போய் மனங்கசந்து அழுதான்" (மத்.26:75)

கர்த்தரை மறுதலித்த பேதுருவின் மனசாட்சி அவனைச் சாட்டையால் அடித்தது. சத்தியத்தேவனை "நான் அறியேன்" என்று மறுதலித்த பேதுரு தன் பாவத்தை எண்ணிக் கலங்கினான். கண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்து ஓடி மறுதலித்த உதடுகளை நனைத்தது.

இப்படி யாராவது மறுதலிப்பார்களா என்று நீ பதறிக் கேட்பது என் செவிகளில் விழுகிறது. ஆம்! இயேசுவை மறுதலிக்கும் அந்தக் கொடிய நெஞ்சங்கள் இன்றும் வாழுகின்றன. எங்கே? உனக்குள்ளும் எனக்குள்ளேயும். உலகத்தின் உதவிக்காக, தேவனது கரத்திற்காகக் காத்திருக்கத் தவறியது மறுதலிப்பு இல்லையா? இன ஜனங்களைத் திருப்திப்படுத்த சத்தியத்தை மறந்து நடந்தவேளை மறுதலிப்பின் நேரமில்லையா? அரசாங்கப் பணிக்காக ஞானஸ்நான உடன்படிக்கையை அதால பாதாளத்தில் தள்ளிவிட்டு இந்து என்று சான்றிதழை நீட்டவில்லையா?

பேதுருவின் கன்னங்களில் வடியும் கண்ணீர் மனந்திரும்பிய இதயத்தின் கண்ணீர். மனம் திரும்பியபின் அவன் கண்ணீரின் பள்ளத்தாக்கில் உருவ நடந்தான். சிலுவைக்குப் போகுமுன் கர்த்தர் பேதுருவைக் கடைசியாக பார்த்தார். அந்த பார்வை பேதுருவின் இருதயத்தை ஊடுருவிய பட்டயம். கர்த்தரின் வார்த்தைகளை எத்தனையோ முறை கேட்கிறாயே, "தேவனுடைய வார்த்தை எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவை ஊடுருவி இதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" (எபி.4:12) உன் நினைவுகள் தேவனுக்கு விரோதமாக மாறிப் போனதை எண்ணி அழுதிருக்கிறாயா? பேதுரு அழுதான், அவன் கண்ணீரைக் கண்ட கர்த்தர் இயேசு, தான் உயிர்த்தெழுந்த செய்தியை பேதுருவுக்கு சிறப்புச் செய்தியாக தனி செய்தியாக அனுப்பினார். (மாற்கு 16:7)

நான் கலிலேயாவிற்குப் போகிறேன் என்பதை சீஷர்களுக்கும் பேதுருவுக்கும் சொல் என்று அவனுக்குத் தனி செய்தியாகவும் சொன்னார். ஏன் இந்தத் தனி செய்தி, அவன் கண்ணீரின் பள்ளத்தாக்கை உருவ நடக்கிறதினிமித்தம்.கர்த்தர் நிமித்தம் கண்ணீரின் பள்ளத்தாக்கை உருவ நடக்கிறவர்களுக்குப் பரலோக ஆசீர்வாதம் உண்டு. இன்று உன் தவறுகளை எண்ணி மனம் உடைந்து அழுதுக்கொண்டிருக்கிறாயா? தேவன் உன்னை மீட்டெடுப்பார். செய்த தவறையே எண்ணி எண்ணி கலங்கித் தவிக்காதே. உன் தவறான முடிவினால் நீ கண்ணீரின் பள்ளத்தாக்கில் இருப்பாயானால் உன் இருகரங்களை நீட்டி கர்த்தரை தாவிப் பிடித்துக்கொள். இழந்துபோன சகலத்தையும் நீ திரும்ப பெற்றுக்கொள்வாய். எதை இழந்தாலும் உன்னை நீ இழந்து போகாதே.

**பள்ளத்தாக்கில் சோர்ந்து கிடக்கிற என் தேவப்பிள்ளையே, நீ உருவ நட. எதிர்காலம் நீருற்றாகும்! புது வாழ்வு மலரும்.**

30

ஜூலை

# கர்த்தரை நோக்கி ஓடிய கண்ணீர் ஆறு.

"என் கண் தேவனை நோக்கி கண்ணீர் சொரிகிறது". (யோபு 16:20).

உபத்திரவத்தின் குகையில் தள்ளப்பட்ட பக்தன் யோபு தாங்க முடியா வேதனையில் கர்த்தரை நோக்கி அழுதான். ஒரே நாளில் தன் பத்துப் பிள்ளைகளையும் இழந்தான். ஒவ்வொன்றாய் மண்ணில் போட்டு புதைத்தான். ஆனால் அவன் இதயம் கலங்கவில்லை. உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை நோயினால் அவதியுற்றான். தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்ற அவன் மனைவியும் கடிந்து கொண்டாள். இத்தனைத் துன்ப அம்புகளும் அவன் இதயத்தைத் துளைத்தன. அப்பொழுது அவன் சிநேகிதர்கள் அவனைப் பரிகாசம் பண்ணினார்கள். இதுவரைக்கும் அவன் அடக்கி வைத்திருந்த கண்ணீர் மடைதிறந்த வெள்ளம் போல் பாய்ந்தோடியது. அந்தக் கண்ணீர் வெள்ளம் உலகத்தை நோக்கி ஓடவில்லை. உறவினரை நோக்கி ஓடவில்லை. கர்த்தரை நோக்கி ஓடியது. ஆம்! அவன் கண்ணீரின் பள்ளத்தாக்கை உருவ நடந்தான்.

என் சகோதரனே! சகோதரியே, கண்ணீரின் பள்ளத்தாக்கில் நம்பிக்கையற்றவர்களாய் இராதீர்கள். நீ கண்ணீரில் நனைந்தாலும் தேவனை நம்பி நட. யோபுவின் நிலையை சற்று கூர்ந்து கவனியுங்கள். "என் சகோதரரை என்னைவிட்டு தூரப்படுத்தினார். எனக்கு அறிமுகமானவர்கள் எனக்கு அந்நியராய்ப் போனார்கள். என் பந்து ஜனங்கள் விலகிப் போனார்கள். என் சிநேகிதர் என்னை மறந்துவிட்டார்கள். என் வீட்டு ஜனங்களும் என் வேலைக்காரிகளும் என்னை அந்நியனாக எண்ணுகிறார்கள். அவர்கள் பார்வைக்கு நான் பரதேசியானேன்" (யோபு 19:13-15).

இந்த நிலையில் அவன் நம்பிக்கையற்றவனாக மாறிவிடவில்லை. அந்தக் கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது அவன் நமக்குச் சொல்லும் செய்தி. "இந்த என் தோல் முதலானவைகள் அழுகிப்போன பின்பு நான் என் மாம்சத்திலிருந்து தேவனைப் பார்ப்பேன். கண்ணீர் பள்ளத்தாக்கில் அவன் மூழ்கிப் போனால் இந்த வார்த்தை அவன் வாயிலிருந்து புறப்பட்டிருக்காது. அவன் கண்ணீரின் பள்ளத்தாக்கில் உருவ நடந்ததினாலே அந்த வார்த்தைகள் அவன் வாயிலிருந்து பிறந்தன. நீயும் இந்தக் கண்ணீரின் பள்ளத்தாக்கில் விடப்பட்டால் உருவ கடந்துவிடு. அழுகைப் பொங்கியெழுந்தால் கர்த்தரின் பாதத்தை உன் கண்ணீரால் நனை.

**"துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதலடைவார்கள்."**

31
ஜுலை

# தேவ சமுகம்

"நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்" (சங்.23:4).

மனிதன் இன்று அதிகமாகப் பயப்படுவது மரணத்தை எண்ணி, "ஐயோ உலகை விட்டுப் போகிறோமே" என்ற கவலை, பயமாக மாறி இதயத்தை வாட்டுகிறது. தான் நேசித்த இயேசுவை அடைகிறோம் என்ற நம்பிக்கை இல்லாதபடியால் மரணத்தை நஷ்டங்களின் பிரதான வாயிலாகவே மனிதன் காண்கிறான்.

ஆனால் ஓர் தேவ மனிதனின் வித்தியாசமான மன ஓட்டத்தை உங்களுக்குக் காட்ட விரும்புகிறோம். நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன் தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர் என்பதே அந்த மன ஓட்டம். கர்த்தரின் சமுகம், மரணத்தை எளிதாக்குகிறது. எப்படி? தேவ சமுகம் மரணத்தை ஓர் நிழலாகவே காட்டுகிறது.

மரணம் ஓர் நிழல் போன்றது. இது தேவப்பிள்ளைகளைப் பாதிக்காது. ஏனெனில் கர்த்தரின் பிள்ளைகள் மரிக்கும்பொழுது, கர்த்தர் அவர்களின் கூடவே இருக்கிறார். ஆகவே தேவ சமுகம் மரணப் பயத்தைத் துரத்திவிடுகிறது. நம் பரம தகப்பன் நம் கூட இருப்பதே, தேவ சமுகம்.

நம்மில், நம்மோடு இருக்கும் தேவ சமுகம், சூழ்நிலைகளை நடுங்க வைக்கும். தனக்கு எதிரே நெடிதுயர்ந்து நிற்கும். இரும்புக் கதவண்டை நின்றுகொண்டு, எப்படி முன்னேறிச் செல்வது என்று திகைத்து நிற்பதுதான் சராசரி மனிதனின் அனுபவம். ஆனால் தேவ மனிதன் முன் இரும்புக் கதவு தானாக திறக்கும். ஆம்! சிறைச்சாலையைப் பேதுரு கடக்க இரும்புக் கதவண்டையிலே வந்தபோது அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது. பேதுருவோடு இருந்த தேவ சமுகத்திற்கு முன்னால், இரும்புக்கதவுகள் கூட அசைந்தன.

நீங்கள் தேவ சமுகத்தைச் சுமப்பீர்களாயின், சூழ்நிலைகள் உங்களுக்குப் பயப்படும். தேவ சமுகம் நோவாவின் காகத்தைப்போல் அடிக்கடி நம்மிடம் வந்துபோகும் பறவை அல்ல. திடீரென்று நம் இதயக் கதவைத் தட்டும் ஆவிக்குரிய விருந்தாளியும் அல்ல. எப்பொழுதும் நம்மில் தங்கியிருப்பதே தேவ சமுகம். "இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாள்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத்.28:20) என்பது கர்த்தரின் வாக்குத்தத்தம்.

**வாழ்க்கையில் எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும், தேவ சமுகத்தை சுமப்பீர்களாக!**

# நெருக்கடி

1
ஆகஸ்டு

"கர்த்தரை நோக்கி சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன், கர்த்தரை நோக்கி சத்தமிட்டுக் கெஞ்சிகிறேன். அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன். அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன்" (சங்.142: 1,2)

நம் வாழ்க்கையில் ஏற்படும் நெருக்கடிகள். நம்மில் மறைந்து கிடக்கும் ஆவிக்குரிய பொக்கிஷங்களை வெளிப்படுத்தும். இவைகளை நம்முடைய மாம்சீகக் கண்கள் காணமுடியாது. நெருக்கடி நேரத்தில் ஒன்றுமே செய்யமுடியாத நிலைக்கு நாம் விரட்டப்படக் கூடாது. நெருக்கடியினால் மனம் சோர்ந்துப்போனால், நெருக்கடியினால் உண்டாகும் பாதிப்பு அதிகமாகிவிடும். அப்பொழுது ஆவியானவரின் தூண்டுதல்களுக்கு நாம் அசைத்துக் கொடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுப் போய்விடுவோம். அதன் முடிவு மிகுந்த மனச்சோர்வும், ஆத்துமாவின் துயர கீதமுமே.

நெருக்கடி நம்மைத் தேவனது சிம்மாசனத்திற்கு இழுத்துக் கொண்டு போக வேண்டும். அங்கே நமது விண்ணப்பங்களைக் கண்ணீரில் சமர்ப்பிக்க வேண்டும். நமது பரமபிதா நமது வேதனை விண்ணப்பங்களுக்குத் தன் செவியை விலக்க மாட்டார்.

"கர்த்தரை நோக்கி சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன், கர்த்தரை நோக்கி சத்தமிட்டுக் கெஞ்சிகிறேன். அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றுகிறேன். அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன்" என்பது தாவீதின் நெருக்கடியின் அனுபவம். இரத்த வெறிகொண்ட பகைவரின் கொடுங்கரங்களுக்குத் தப்பும்படி குகையில் பதுங்கிய தாவீதின் அனுபவமே இவ்வரிகள். நெருக்கத்தில் தேவ சமூகத்தை நாடி ஓடினான் சூழ்நிலைகளோ அவனைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன.

நமக்குச் ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுக்கொடுக்கவே தேவன் சில நெருக்கங்களை நம் வாழ்க்கையில் அனுமதிக்கிறார். சோதனையான சூழ்நிலையையும், அதனை மேன் நிலையாக்கும், இயேசுவின் அற்புதத்தை நாம் காணும்படிக்கே.

**நெருக்கடியான நேரங்களின்; தேவனோடு நெருங்கியிருங்கள். நெருங்கடிகள் விசாலமாகும்.**

2
ஆகஸ்டு

# வார்த்தை மாம்சமாயிற்று

"ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோ 1:1) "அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்." (யோ 1:14)

எண்ணத்தின் வெளிப்பாடே வார்த்தை. வார்த்தை இல்லாமல் எண்ணத்தை விளங்கிக் கொள்ளவே முடியாது. பிதாவாகிய தேவன் பெரிய ஞானம். இந்த ஞானம் வெளிப்படுவது வார்த்தையான கிறிஸ்து. கிறிஸ்து இல்லாமல் பிதாவை நாம் விளங்கிக்கொள்ள முடியாது. பிதா வெளிப்படாத கடவுள். இயேசு வெளிப்படுத்தப்பட்ட கடவுள்.

சிந்தனை, வார்த்தையை விடப் பெரியது. ஆகவேதான், "பிதா என்னிலும் பெரியவர்" என்று இயேசு சொன்னார். அப்படியாயின் "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்பதின் பொருள் என்ன? சிந்தனையும் அதன் வெளிப்பாடான வார்த்தையும் ஒன்றுக்கொன்று முரண்பாடு இல்லாததுபோல, பிதாவுக்கும் இயேசுவுக்கும் எந்த முரண்பாடும் இல்லை என்பதையே இது காட்டுகிறது. ஆதியிலே வார்த்தையாயிருந்த இயேசு, உலகில் மனு உருவில் வந்ததினால் கடவுள் மனிதனாகப் பிறந்து விட்டார் என்று அர்த்தம் அல்ல. கடவுளுக்குப் பிறப்பே கிடையாது ஆகவே கிறிஸ்துவின் பிறப்பு கடவுள் மனிதனாகப் பிறந்த பிறப்பு அல்ல. அப்படி பிறந்திருந்தால் அவர் கடவுள் என்ற நிலையை விட்டு விட்டார் என்று அர்த்தமாகிவிடும். அவர் என்றைக்குமே கடவுள்தான். ஆகவே கடவுள் மனிதனாகப் பிறந்தார் என்பது கிறிஸ்தவ சத்தியம் அல்ல.

அப்படியெனின் பிறந்தது யார்? "கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக் 2:11) என்று வேதம் சொல்கிறது. ஆகவே பெத்லகேமிலே பிறந்தது கடவுள் அல்ல, இரட்சகர். 'இயேசு' என்பது மானிடப் பெயர். 'கிறிஸ்து' என்பது அவருடைய பதவி. ஆகவே இயேசு என்ற பெயரில் இரட்சகர் பிறந்தாரே தவிர, கடவுள் பூமியில் மனிதனாகப் பிறக்கவில்லை. "வார்த்தை மாம்சமாயிற்று" என்றால் வார்த்தையான தேவன் மனிதனாகி விட்டார் என்றல்ல; தேவனது வெளிப்பாடான இயேசு மாம்சத்தில் வெளிப்பட்டார் என்று பொருள்.

இயேசு இரட்சகராக மானிட உருவில் வந்தபொழுது, அவர் பரலோகில் குமாரனாகிய தேவனாகவே இருந்தார். கடவுள் என்ற நிலையை வெறுமையாக்கி வார்த்தையான கிறிஸ்து இயேசுவாக இந்த உலகில் பிறக்கவில்லை. ஆனால் கடவுளுக்கு தான் சமமாயிருக்கும் நிலையை, இரட்சகர் என்ற நிலையில் அவர் வெறுமையாக்கினார். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே (கடவுளுக்குச் சமமாயிருப்பதை) வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனித சாயலானார்." (பிலி 2:6,7)

**வார்த்தை மாம்சமான அந்த மாபெரும் அற்புதம்,**
**நம் வாழ்க்கை முழுவதிலும் மறுபிறப்பை உருவாக்கட்டும்.**

3
ஆகஸ்டு

# ஒளிபரப்பு

"இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்" (எபே 5:8)

வெளிச்சத்தின் பிள்ளையாய் ஒரு கிறிஸ்தவன் இருக்கிறான் என்றால் அவன் கிறிஸ்துவின் ஒளியைப் பரப்புகிறவன் என்று அர்த்தம். வெளிச்சத்தில் இருப்பதும் வெளிச்சமாயிருப்பதும் இரண்டு நிலைகள். இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள் நம்முடைய ஆவிக்குரிய உன்னதத்தை வேதம் இப்படியாய் மேன்மைப்படுத்துகிறது. கிறிஸ்து நம்மைப் பிரகாசிப்பிக்கிறதுபோல நாமும் மற்றவர்களைப் பிரகாசிக்கப் பண்ணவேண்டும். பிரசங்கத்தால், பரிசுத்த ஜீவியத்தால், ஆவிக்குரிய கடமைகளை ஆற்றுவதால் நாம் தேவனது ஒளியைப்பரப்புகிறோம். இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு ஆத்துமாவிலும் தேவன் உண்டாக்கிய வெளிச்சமிருக்கிறது. இந்த வெளிச்சத்தைத் தனக்குள்ளே மறைத்து வைக்கிறவன் தேவனுக்குப் பயன்படாத பாத்திரம். இந்த ஒளியைத் தன் வீடு, தன்னுடைய தெரு, தன் கிராமம் என்று பரவச் செய்கிறவனே வெளிச்சத்தின் பிள்ளை.

கப்பர்நகூமில் வாழ்ந்தவன் ஜெப ஆலயத்தலைவன் யவீரு. யவீரு என்றால் ஒளியைப் பரப்புகிறவன் என்று அர்த்தம். இஸ்ரவேலின் பாரம்பரிய இருளில் வளர்ந்த அவனது ஆத்துமாவில் ஒரு வெளிச்சம் உண்டாயிற்று. அதுதான் இயேசுவைப் பற்றிய ஞானம்! அவன் வீட்டில் திடீரென்று ஒரு கடும் பிரச்சனை உண்டாயிற்று. அவனது அன்பு மகள் பன்னிரென்று வயதுள்ள ஒரே மகள் வியாதியின் அகோரப்பிடியில் சிக்கி மரணத்தைத் தழுவிக் கொண்டிருந்தாள். மருத்துவம் மௌனம் சாதித்து விட்டது. உற்றார், உறவினர்கள் உதவ முடியா நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஐயோ என்று கதறி அழும் தாய், இனி பிழைக்கமாட்டாள் என்று வருத்தத்தின் செய்தியை தெரிவிக்கும் உதடுகள், கண்ணீர் வடியும் கவலை தோய்ந்த முகங்கள், இவைகளுக்கு மத்தியில் பதறாது நின்றான் யவீரு. அவன் உள்ளத்தில் பிரகாசித்த வெளிச்சம் அவனை இயேசுவண்டை நடத்திற்று. அன்று இயேசுவும் அந்த ஊருக்கு வந்திருக்கிறார். யவீருவின் கால்கள் இயேசுவை நோக்கி துரிதமாய் நடந்தன. எத்திசையிலும் அவன் இருளையே கண்டான். அவன் ஆத்துமாவில் ஒரு விசுவாச விளக்கு எரிந்து பிரகாசித்தது. அந்த வெளிச்சத்தில் கர்த்தரை நோக்கி நடந்தான்.

நம்பிக்கையற்ற அந்த வேளையில் அவனது ஒரே நம்பிக்கை இயேசு என்ற நம்பிக்கை நட்சத்திரமே. "தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர்". (சங் 46:1) இத்தகைய நம்பிக்கையே யவீரை இயேசுவண்டை கொண்டுவந்து நிறுத்தியது. எந்தச் சூழ்நிலையும் அவர் கரத்திற்கு அப்பால் இல்லை என்கிற வெளிச்சம் முதலாவது உன் இருதயத்தில் பிரகாசிக்கட்டும். நாம் வெளிச்சத்தில் இருக்கிறோமா? வெளிச்சமாக இருக்கிறோமா? நம்முடைய வாழ்க்கை உலகத்திற்கு வெளிச்சமாக இருக்கவேண்டும். நம்முடைய ஒவ்வொரு நடவடிக்கையில் இயேசுவை ஒளிப்பரப்ப வேண்டும்.

**தேவ வார்த்தை என்னும் விளக்கு எரியட்டும் அந்த ஒளி உன் வாழ்க்கை முழுவதும் பிரகாசிக்கட்டும்**

4
ஆகஸ்டு

# மனிதனது வீணான புலம்பல்

"என் ஆபத்து நாளில் ஆண்டவரைத் தேடினேன்; இரவிலும் என் கை தளராமல் விரிக்கப்பட்டிருந்தது; என் ஆத்துமா ஆறுதலடையாமற் போயிற்று" (சங் 77:2)

அநேக சமயங்களில் மனிதன் நம்பிக்கையற்றவனாகப் புலம்புகிறான். பெரும்பாலும் இப்புலம்பல்கள் வீணானவைகள். இப்படி எவரையும் தேவன் ஆறுதலற்ற நிலையில் விடமாட்டார். உண்மையாய் கர்த்தரைத் தேடுகிறவர்கள் ஆறுலடையாமற் போவதில்லை. "நான் கர்த்தரை தேடினபோது நான் அலறினேன்" (சங் 77:3) என்பது விபரீதமான அனுபவம். பயம் அவன் இதயத்தைப் பிடித்துக் கொண்டபடியினால் அவன் அலறுகிறான். நெருக்கத்தில் நீ நேசரை நோக்கினால் உன் ஆத்துமா அலறாது, கர்த்தருக்குள் மலரும். உன் விசுவாசப் பலவீனமே உன்னை அலறச் செய்கிறது. பயந்த அவன் ஆத்துமா தேவக்கிருபை வற்றிப்போனதாகக் காண்கிறது. அவருடைய இரக்கத்தின் வாசலை அடைக்கப்பட்டக் கதவாய் பார்க்கிறான்.

அவனுடைய நெருக்கம் அவன் ஆத்துமாவிற்கு விபரீதமான சூழ்நிலையை உண்டாக்கிவிட்டது. திடீரென்று அவன் ஆத்துமா தேவ சமூகத்தை உணர்ந்தது. "உன்னதமானவருடைய வலதுகரத்திலுள்ள வருஷங்களை நினைவு கூருவேன்" என்றான். அவனுக்கு விரோதமாயிருந்த நேரம், நாட்களை மறந்தான். என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது என்று கர்த்தரை நோக்கினான். நெருக்கத்தில் நீ இப்படி அவரைத் தேட வேண்டும்.

"நான் கூப்பிடுகிற நாளிலே எனக்குத் தீவிரமாய் உத்தரவு அருளிச் செய்யும்" (சங் 102:2) தான் கூப்பிடுகிற நாளிலே அப்பொழுதே தேவன் தீவிரமாய் பதிலளிக்கவேண்டும் என்று அவன் ஆத்திரப்படுகிறான். உன்னுடைய எதிர்பார்த்தலுக்கோ திட்டத்திற்கோ கர்த்தர் தாமதமாகச் செயற்படுவதாகத் தெரியலாம். ஆனால் பரலோகக் கடிகாரத்தின்படி எப்பொழுதும் சரியான நேரத்தில் உன் வாழ்க்கையின் சம்பவங்கள் நடக்கும்.

மார்த்தாள், மரியாளின் நேரத்தில் இயேசு வந்திருந்தால் லாசருவின் வியாதியை மட்டுமே குணமாக்கியிருக்க முடியும். ஆனால் தமது நேரத்தில் வந்ததால் மரணத்தினின்று அவனை எழுப்பிய பெரிய அற்புதம் நடந்திருக்கிறது. தேவனது நேரமென்றால் மிகவும் பிந்திவிடும் என்று நீ நினைப்பது தவறு. கானாவூரில் திருமண வீட்டில் என் வேளை வரவில்லை என்று சொன்னவர் அவர் வேளையில் உடனே அற்புதம் செய்யவில்லையா? சீக்கிரம் கொடுக்கிறவன் இரண்டு மடங்காய் கொடுக்கிறான் என்பது பழமொழிதானே அன்றி நீதி மொழி அல்ல. கர்த்தரின் நாளில் நீ எதிர்பார்க்கும் பதில் வந்தே தீரும்.

**தேவனது கடிகாரம் ஒருபோதும் தாமதிப்பதில்லை**

| 5 ஆகஸ்டு |
|---|

# இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட தண்ணீர்.

"அப்பொழுது அந்த ஸ்திரீ தன் குடத்தை வைத்து விட்டு ஊருக்குள்ளே போனாள்" (யோ 4:28).

இயேசு கேட்டது ஒரு கலசம் தண்ணீர், அவள் கொடுத்ததோ ஒரு குடம் தண்ணீர். கால்நடை வருத்தம், நண்பகல் வெயில், ஊராரின் ஏளனம் இவைகளையெல்லாம் சகித்து அவள் எடுத்த தண்ணீர் முழுவதையும் இயேசுவுக்கே கொடுத்து விட்டாள்.

குடம் முழுவதையும் கொடுத்தது எல்லை மீறிய அன்பு. இந்த தண்ணீரைக் குடிக்காமலேயே அவர் உள்ளத்தின் தாகந் தீர்ந்தது. இயேசுவுக்கு கொடுத்ததினாலே நீ ஏதேனும் பாதிக்கப்பட்டிருக்கிறாயா? கத்தை கத்தையாய் கரன்சி நோட்டுகளுள்ள உன் பர்ஸை திறந்து ஒரு ஐநூறு ரூபாய் நோட்டை நீ காணிக்கைத் தட்டில் போடுவது ஒரு பாதிப்பில்லா செயல். காணிக்கை – பலியாய் இருக்க வேண்டுமே தவிர நன்கொடையாய் இருக்க கூடாது. பாதிக்கப்படாமல் நீ கொடுக்கும் காணிக்கை தாகத்துக்குத் தா என்று கேட்கும் இயேசுவின் கரங்களில் நீ கொடுக்கும் வெறும் கலசம். இரண்டு காசு காணிக்பை செலுத்திய அந்த ஏழை விதவை பாதிக்கப்பட்டவள். இரண்டு மீன்களையும் ஐந்து அப்பங்களையும் கொடுத்த சிறுவன் பாதிக்கப்பட்டவன். வெள்ளைக் கல் பரணியை உடைத்த மரியாள் பாதிக்கப்பட்டவள். படகையும் வலையையும் விட்டுப் புறப்பட்ட பேதுரு பாதிக்கப்பட்டவன். இவைகளெல்லாம் இயேசுவின் தாகந் தீர்த்த கலசங்கள். தந்தை மரித்த பின் ஊழியத்திற்கு வருகிறேன் என்று சொன்ன வாலிபன் பாதிக்கப்படா வாழ்க்கையின் சொந்தக்காரன். நீயோ இயேசுவின் தாகத்தைத் தீர்க்க வேண்டும்.

அவள் வைத்துவிட்டு போன குடம் இயேசுவைப் பார்த்துச் சொல்லுகிறது 'அவள் மீண்டும் வருவாள், மேலும் சொல்லுகிறது "உம்மை அறிவிக்க நடைபயணம் மேற்கொண்ட அவளுக்கு நான் ஒரு தடைக்கல்." சிற்றூர்கள், பேரூர்கள், சாலை ஓரங்கள், சந்தை வெளிகள் - இங்கெல்லாம் ஆத்தும தாகத்தால் நிற்கும் மக்களுக்கு இயேசுவின் நற்செய்தி என்ற ஜீவத் தண்ணீரைக் கொடுக்க தடைக்கல்லாய் நிற்கும் உன் சொந்த வேலையை கொஞ்ச நேரம் தூக்கி எறிவாயா? இதெல்லாம் அவருடைய தாகத்தைத் தீர்க்கும் வழிகள்.

அவள் தேவனோடு செய்த உடன்படிக்கை என்னவென்றால் ஞானஸ்நானம். ஞானஸ்நானம் நல் மனசாட்சியின் உடன்படிக்கை என்று வேதம் சொல்லுகிறது. (1பேதுரு 3:21) இரத்தத்தினால் உன்னோடு உடன்படிக்கை பண்ணிய இயேசுவோடு, தண்ணீர் முழுக்கினால் உடன்படிக்கை பண்ணினாயா? "இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெற தடையென்ன" என்று கேட்ட வனாந்திர மார்க்கமாய் பிரயாணம் பண்ணிய, எத்தோப்பிய நிதி அமைச்சர் இயேசுவின் தாகந்தீர்த்தவன். உன் நேரம், உழைப்பு இவைகளை கொடுக்க மனமாயிருக்கிறாயா? உன் வாழ்விற்கும் வசதிக்கும் எல்லாவற்றையும் செலவிட்டு விட்டு மீதி உள்ளதில் எடுத்துப் போட இயேசுவின் கரம் பிச்சைப் பாத்திரம் அல்ல. உடலிலே வலுவிருக்கும் நாளெல்லாம் உனக்காகவே உழைத்துவிட்டு பணி ஓய்வு பெற்ற பிறகு நரம்புகளும் தசைகளும் தன் பலவீனத்தை அடைந்து, நடக்கமுடியா வேளையில் உன் இதயத்தில் பிறக்கும் ஊழிய வேட்கை, இயேசுவின் தாகந்தீர்க்காத கானல்நீர்.

**"இயேசுவின் தாகந்தீர்க்க கொடு; கொடுப்பதினால் பாதிக்கப்படு".**

6

ஆகஸ்டு

# ஒரு தேவபிள்ளை எப்படியிருக்க வேண்டும்?

"எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாக காணமல் துக்கமாய்த் காணும் ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு நீதியாகிய சமாதானப்பலனைத் தரும்."(எபி 12:11).

வாழ்க்கையில் சிட்சைகள் ஏற்படலாம். வறுமை, தோல்வி, ஏமாற்றம் இவைகளெல்லாம் தேவனுடைய சிட்சைகளாகக் கூட இருக்கலாம். தேவன் சம்மதித்த பாடுகளும் உபத்திரவங்களும் சரீரத்திற்குக் கசப்பானவைகள். ஆனால் அவைகளினால் ஒருவன் கற்றுக்கொண்டப் பாடங்கள் ஆத்துமாவை உயிர்ப்பிக்கும், மகிழ்ச்சியாக்கும்.

உயிர்த்தெழுந்த இயேசுவைக்காண பேதுரு கலிலேயாவிற்குப் போகாதது பெரிய பின்மாற்றம். அவர்களுக்கு முன்னே தான் கலிலேயாவுக்குப் போவதாகச் சொன்ன இயேசுவின் வார்த்தைகளை சீமோன் பேதுரு விசுவாசியாமற் போனான். அவிசுவாசம் தெய்வ நம்பிக்கையை விட்டு விட்டு தன்னம்பிக்கையை எடுக்கச் சொன்னது. அந்த தன்னம்பிக்கைதான் திபேரியாக் கடலோரம் பேதுருவை நிற்க வைத்து ஏமாற்றத்தைத் தழுவச் செய்தது. கர்த்தருடைய மனுஷனான பேதுரு பசியோடிருந்திருக்கலாம் அல்லது வருங்காலத்தை எண்ணிச் சம்பாதிக்கப் புறப்பட்டிருக்கலாம். நிச்சயமற்ற வருங்காலமும் அவனுடைய பசிக்கொடுமையும் அவன் பின்மாற்றத்திற்குக் கிடைத்த சிட்சைகளாய் இருக்கலாம்.

பசித்த வயிரோடு கர்த்தருக்காய் அவன் காத்திருந்தால் கர்த்தரே போஷித்திருப்பார். காகங்களைக் கொண்டு எலியாவைப் போஷித்த தேவன் பேதுருவைப் போஷித்திருக்க மாட்டாரா? ஆகவே உங்கள் பின்மாற்ற ஆவியிலிருந்து விடுபடுங்கள். உங்கள் நெகிழ்ந்த கைகளையும், தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்துங்கள். அப்பொழுது ஏற்கனவே விசுவாசத்தில் முடமாய்ப்போனவர்கள் தங்கள் ஆத்துமாவில் குணமடைவார்கள் அவர்கள் சத்தியத்தில் திரும்ப நடக்கும்படி உங்கள் விசுவாசப் பாதையை செம்மையாக்குங்கள். (எபி 12:13)

நீ ஒரு வீட்டிற்குச் சென்றால் அவ்வீட்டாரின் ஆத்மீக நோய்களைச் சுகமாக்கும் மருந்தாக இருக்கிறாயா? அல்லது நீயே தொத்து நோயாயிருக்கிறாயா? நீ போகின்ற இடமெல்லாம் அவிசுவாச வார்த்தைகளை விதைக்கிறாயா? அப்படியெனின் நீ போகாதிருப்பது உனக்கும், அவ்வீட்டாருக்கும் ஆசீர்வாதமாயிருக்கும். வறுமையில் வாழும் ஒரு வீட்டிற்கு நீ சென்றால் "வறுமையினால் குடும்பத்தோடுத் தற்கொலை" என்ற பத்திரிக்கைச் செய்திகளையெல்லாம் பேசாதே. கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது என்பதை விளக்கிச் சொல்.

பிரச்சனையில் இயேசுவின் மகிமையைக் காண உன் கண்கள் பிரகாசமாயிருக்க வேண்டும். பரிசுத்த பவுலுக்கு எதிராக வைக்கப்படும் கண்ணிகளோ, பேசப்படும் வார்த்தைகளோ அவனுடைய விசுவாசத்தை அசைக்கவில்லை. மாறாக அவைகளெல்லாம் தனக்கு இரட்சிப்பாய் முடியுமென்று விசுவாசித்தான். இது பவுலின் மனோ வாஞ்சையல்ல; அவன் உள்மனது பெற்ற உன்னத வெளிப்பாடு.

நீ தேவப்பிள்ளையின் அடையாளமாயிரு.

7
ஆகஸ்டு

# தேவனது செய்தியைக் கேள்

"ஒரு சூரைச்செடியின் கீழ்ப்படுத்துக்கொண்டு நித்திரை பண்ணினான்; அப்பொழுது ஒரு தூதன் அவனைத் தட்டியெழுப்பி; எழுந்திருந்து போஜனம்பண்ணு என்றான்" (1 இரா 19:5)

தேவனது செய்திதான் தேவ மனிதனுக்கு உணவு. எலியாவுக்கு தேவதூதன் ஆகாரங் கொடுத்தது போல உன் இதயத்தைப் பரலோகம் தன் செய்தியால் நிரப்பவேண்டும். உலகம் தருகிற எதிரிடையான செய்திகளை நீ தள்ள வேண்டும். சூழ்நிலையின் கடுமையை வைத்துக்கொண்டு ஒரு முடிவிற்கு வராதே. ஆவியானவர் உனக்கு என்ன சொல்லுகிறார் என்பதைக் கவனமாய் கேள். ஆயி பட்டணத்தை எதிர்நோக்கி நிற்கும் யோசுவாவிற்கு செய்தி ஒன்று வருகிறது. "இது சின்னப் பட்டணந்தானே, யுத்த மனுஷர் எல்லாரும் போக வேண்டாம். கொஞ்ச பேர் மாத்திரம் போனால் போதும். "இது யோசுவாவிற்கு மனிதர்கள் கொடுத்த செய்தி. இதன் விளைவு இஸ்ரவேலருக்கு படுதோல்வி. "மனிதனுக்கு செம்மையாய்த் தோன்றுகிற வழிகள் உண்டு. அதன் முடிவு மரணம்." தோல்விக்குப் பிறகு யோசுவா தேவனை நோக்கிப் பார்த்தான். "நீ யுத்த ஜனங்கள் யாவரையும் கூட்டிக்கொண்டு எழுந்து ஆயிபட்டணத்தின் மேல் போ... பட்டணத்தை உன் கையிலே ஒப்புக் கொடுத்தேன்." (யோசு 8:1) இதுவே யோசுவாவிற்கு கிடைத்த பரலோக மன்னா. உன் ஆத்துமா வேத வசனத்தினாலே பசியாறட்டும்.

பிசாசைக் குறித்தும் அவனது இருண்ட இராஜ்ஜியத்தைக் குறித்தும் நீ எண்ணிக் கொண்டேயிருப்பாயானால் கறுப்பு எண்ணங்கள் உன் இதயத்தைச் சிறைபிடிக்கும். மரண பயத்தில் சிக்கிக் கொள்ளுவாய். தோல்வி மனப்பான்மை உன்னை வாட்டி வதைக்கும். எலியா பயந்து ஒடி வரும்போது வழியில் தேவதூதனைக் காணவில்லை. ஆனால் அவன் இதயம் அமைதியடைந்தவுடன் அவன் தேவதூதனைக் கண்டான். ஆகவே உன் வழிகளிலே தேவதூதர்கள் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதே. எப்பொழுதும் சாத்தானைக் குறித்து எண்ணிக் கலங்காதே. தேவதூதர்களும் உன் வீட்டைச் சந்திக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதே. வனாந்திரத்தில் ஆதரவற்றவனாய் யாக்கோபு படுப்பதற்கு முன்பே அவனைக் காக்கும் தேவதூதர்கள் ஏற்கனவே இறங்கியிருந்தார்கள்! அதனால்தான் தன் கனவிலே தேவ தூதர்கள் ஏறுகிறதாகக் கண்டான். இறங்கினால்தானே ஏற முடியும்? உன்னுடைய ஜெபம் உன் வீட்டிற்கு தேவதூதர்களைக் கொண்டு வருகிறதா? அல்லது எண்ண அலைகளாக ஓய்ந்து விடுகிறதா? உன் ஜெபம் உன் வாழ்வின் இருளை வெளிச்சமாக்கும். கோணலானதைச் செவ்வையாக்கும்.

தேவ சித்தம் அறிய தேவ சத்தம் கேட்க, உன்னோடு பேசத் துடிக்கும் வேதப் புத்தகம் வாய் திறவாது மௌனமாக மேஜையின் மீது அடங்கிக் கிடக்கிறது. புத்தகத்தை நீ திறந்தால்தானே மெல்லிய சத்தத்தை நீ கேட்பாய். ஆகவே வேதத்தைத் திற. தேவனது மெல்லிய சத்தத்தைக் கேள். இதோ வேதம் பேசுகிறது. "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்." (யோவான் 14:1)

**வேத எழுத்துக்கள் உன் திசை மாறும் எண்ணங்களை மாற்றட்டும். பாதை தவறும் பாதங்களை நேராக்கட்டும்.**

**8**
**ஆகஸ்டு**

# வழியில் தடை

"எரிகோ இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அடைக்கப் பட்டிருந்தது; ஒருவரும் வெளியே போகவுமில்லை, ஒருவரும் உள்ளே வரவுமில்லை" (யோசு 6:1)

இஸ்ரவேலின் படை, இப்படி ஒரு தடையை சந்திக்கிறது. யோர்தான் என்ற தடையை வெற்றி பெற்ற கொஞ்ச நாட்களுக்குள் எரிகோ என்ற மாபெரும் தடை! ஒரு தடை நீங்கினவுடன் அல்லல் நீங்கியதே என்று அமைதியாய் அமரமுடியாதபடி மற்றொரு பெரிய தடை எழும்பி நின்றது. இது தான் வாழ்க்கை. நோய் சுகமடைந்ததே என்று மகிழ்ந்து கொண்டிருக்கும் வேளையில், மருத்துவத்திற்காகச் செலவிட்டப் பணப் பிரச்சனை ஒரு பெரிய கோலியாத்தாக எழும்பி நிற்கும். இத்தகைய வாழ்க்கையில் மனிதன் சோர்ந்து போகிறான். யோர்தான் என்ற தடையோ, எரிகோ என்ற மாபெரும் எதிர்ப்போ, நம் வாழ்க்கையில் ஏற்படினும் "மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன்" என்ற அறிக்கையே வெற்றி வாழ்க்கைக்கு அடையாளம். நீ எதிர்பாராத, புதிய பிரச்சனையைக் கண்டு கலங்காதே. பயப்படாதே! வாழ்க்கையே பிரச்சனை நிறைந்ததுதான், பிரச்சனையையே வாழ்க்கையாக்கி விடாதீர்கள்.

பவுலின் ஜீவனுள்ள வார்த்தைகளைக் கவனியுங்கள், "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை. கலக்கமடைந்தும் முறிவடைகிறதில்லை." (2கொரி 4:8) நெருக்கமும் கலக்கமும் நமக்கு உண்டாகும். இது உலகம் நமக்குத் தரும் பாரங்கள். ஆனால் தேவனோ நாம் முறிந்து விழாமல் காப்பார். நான் கர்த்தருக்குப் பிரியமாய் நடக்கிறேனே, நான் தவறாமல் ஜெபிக்கிறேனே; அப்படியிருந்தும் எனக்கு ஏன் இந்தத் துன்பங்கள் என்று நீ கேள்வி மேல் கேள்விக் கேட்டு அங்கலாய்க்கலாம். "நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அனேகமாயிருக்கும்" என்று வேதம் சொல்லவில்லையா? (சங் 34:19) இந்த வசனத்தினாலே நமக்கு என்ன லாபம் என்று திருப்பிக் கேட்கிறாயா? சகோதரனே! சகோதரியே! ஒன்றை நினைவில் வைத்துக்கொள். நீ தேவனோடு வாழ்ந்தாலும் பொல்லாத உலகில் ஜீவிக்கிறாய் இப்பொல்லாத உலகம் பிசாசின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. ஆகவேதான் நீதிமானுக்குத் துன்பம். இதை சொல்லிவிட்டு வேதம் அமைதியாயிருக்கவில்லை. வேதம் தொடர்ந்து பேசுகிறது. "துன்பங்கள் எல்லாவற்றினின்றும் விடுவிப்பார்" என்ற இதுதான் வேதத்தின் தொடர்ச்சியாக சத்தம்.

நம் வாழ்க்கையில் துன்பங்களை அனுமதித்த தேவன், அவைகளினின்று நம்மை விடுவிப்பதினால் சாத்தானையே தோல்விப் பள்ளத்தாக்கில் தள்ளுகிறார். நமக்குத் துன்பங்களைக் கொண்டுவருவதினால், கர்த்தரின் கரத்தில் சிக்கிக் கொள்கிறான்! ஆகவே உன் துன்பங்களில் மகிழ்ந்திரு. நம் வாழ்க்கை வெற்றிப் பாதையாகிறது.

**பிரச்சனையே இல்லாத வாழ்க்கை சஞ்சாரமில்லாத வனாந்திரப் பாதை; அது மனிதனுக்கு வெறுமையின் வழி.**

**9**
**ஆகஸ்டு**

# தேவனது சிறப்புச் செய்தி

"இதோ ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது இவர்க்குச் செவி கொடுங்கள்" (மத் 17:5)

"ஒரு மேகம் வந்து அவர்கள் மேல் நிழலிட்டது. அவர்கள் அந்த மேகத்துக்குள் பிரவேசிக்கையில் சீஷர்கள் பயந்தார்கள். (லூக் 9:34)

இந்த மேகம் கொண்டு வந்த செய்திகள். அவர் சந்திக்கப்போகும் மரணத்தின் பாடுகள். அந்த மலை உச்சியில் எருசலேமில் அவர் நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக் குறித்து அவருக்கு அறிவிக்கப்பட்டது! மலை உச்சியில் மேகத்தின் நிழலில் மரணம் தன் பாடத்தைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தது!

நீ விரும்பாத அனேகப் பாடங்களைக் கற்றுத்தரும் தேவனது சித்தத்தின்படியான மேகங்கள், உன் மேல் நிழலிடும்! அந்த மேகத்தை விரட்டாதே! அது தரும் பாடத்தைக் கவனி! "நீ மரித்து விடுவாய் என்ற ஒரு செய்தி அந்த மேகத்திலிருந்து உனக்குக் கிடைக்குமெனில், எசேக்கியா ராஜாவின் முன்மாதிரியைப் பின்பற்றி, சுவர்ப் புறமாகத் திரும்பி கண்ணீர் விட்டு கதறி அழுது, ஆயுசு நாட்களைத் தேவனது கரத்திலிருந்து பிடித்து இழுக்காதே! "இப்பொழுதே நான் பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்; நான் தேகத்தைவிட்டுப் பிரியும் காலம் வந்தது.... இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது." (2தீமோ 4:6,8) என்று மறுமை தன்னை வரவேற்க ஆயத்தமாயிருப்பதைப் பவுல் கண்டாரே. அதையே உனக்கு முன்மாதிரியாக எடுத்துக்கொள். பரலோகம் என் தாய்வீடு என்ற பாடிவிட்டு, தாய் வீட்டிற்குச் செல்லத் தயங்குவதேன்? அஞ்சாதே! மேகத்தின் செய்தியை ஏற்றுக்கொள்! "நித்தியமே! உன் வாசல்களை எனக்காகத் திறந்து விட்டாய்! நான் என் இதய நிறைவுடன். என் வாழ்க்கை எனும் நிறை குடத்துடன், உள்ளே வருகிறேன்" என்ற பிரவேசித்துவிடு.

ஒரு மேகம் வந்து அவர்கள் மேல் நிழலிட்டது. அவர்கள் அந்த மேகத்துக்குள் பிரவேசிக்கையில் சீஷர்கள் பயந்தார்கள். மேகம் என்ற கல்விக் கூடத்திற்குள் பிரவேசிக்க சீஷர்கள் பயந்தார்கள். ஏனெனில் அந்தக் கல்விக் கூடத்தின் சிறப்புப் பாடங்கள். "பாடுகளும், சிலுவையும்". "தைரியமாய் வா" என்பது தேவனது அழைப்பு! மேகத்தைக்கண்டு சீஷர்கள் பயப்படுகிறார்கள், மேகம் காட்டும் காட்சி சிலுவை! மேகத்தின் மேலுள்ள வானவில் காட்டும் காட்சி சிங்காசனம்! நீ சிலுவைப் பாடத்தை ஒழுங்காய்ப் படித்தால், சிங்காசனத்தில் அமர்வாய்! இந்த மேகத்தில் ஆயிரம் ஆயிரம் செய்திகள் இருக்கலாம். ஆனால் எந்தச் செய்தியை மறந்து போனாலும், இந்த மேகத்திற்குள் கர்த்தர் இருக்கிறார் என்பதை மறந்து விடாதே.

**துன்பமேனும் கார்மேகங்கள் சூழும்பொழுது, தேவனது உடன்படிக்கையான வானவில்லைப்பார்.**

10
ஆகஸ்டு

# அவன் காரிய சித்தியுள்ளவனானான்

"கர்த்தர் அவனோடு இருக்கிறார் என்றும் அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும் அவன் எஜமான் கண்டான்" (ஆதி 39:3).

கர்த்தர் ஒருவனோடு இருக்கும் சூழ்நிலையிலும் ஒருவன் துயரத்தின் பாத்திரமாயும் இருக்கக்கூடும். அவனது வாழ்க்கையில் ஒரு ஆசீர்வாத அடையாளத்தைக் காணமுடியாவிட்டாலும் அவன் மற்றவர்களுக்கு ஆசீர்வாத பாத்திரமாகவே இருந்தான்.

தேவனுக்கு அன்னியனான போத்திபார் யோசேப்பின் வாழ்க்கையில் உண்மையான தேவனைக் கண்டான். உன்னுடைய வாழ்க்கை உன் தேவனது நாமத்தை விளங்கப்பண்ணுகிறதா? "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப் பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (2 கொரி 2:14). இப்படி கிறிஸ்துவுக்குள் உன் வாழ்க்கை மற்றவர்களுக்கு வெற்றி செய்தியாக இருக்கிறதா?

யோசேப்பு ஒரு அடிமை என்பது காலத்தின் முத்திரை; அவன் காரிய சித்தியுள்ளவன் என்பது கர்த்தரின் முத்திரை. காலம் உனக்கு 'துக்கத்தின் மகன்', 'துக்கத்தின் மகள்' என்று பெயரிடும்போது "நீ சந்தோஷத்தின் வாரிசு" என்று பரலோகம் உனக்கு முத்திரையிடுகிறது. மறைந்திருக்கும் முத்திரை சீக்கிரத்தில் பளிச்சிடும். ஆகவே நீ தரித்திரன் எனப்படும்பொழுது அனேகரை ஐசுவரியவான்களாக்குகிறாய். நீ பலவீனமாய் இருக்கும்பொழுது உன் ஜெபத்தால் அனேகரை நீ பலவான்களாய் மாற்றுகிறாய். நீ அடிமைத்தனத்தில் இருந்தாலும் உன் முழங்கால் யுத்தத்தினால் அனேகரை விடுதலையாக்குவாய். யோசேப்பு செய்ததெல்லாம் வாய்த்தது. இதற்குக் காரணம் அவன் ஜாதகமல்ல, கைராசி அல்ல; இரவும் பகலும் தேவனைத் தியானிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் நீர்ப்பாய்ச்சலான தோட்டத்திலுள்ள இலையுதிராத மரம். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" (சங் 1:3) என்கிற சங்கீத வார்த்தைகள் யோசேப்பின் வெற்றி வாழ்க்கையின் படபிடிப்பாகும்.

நீ நெருக்கப்படும் வீட்டிலேயே வெற்றித் திருமகனாய், திருமகளாய் விளங்குவாய். கர்த்தர் உனக்கு உதவி செய்வார். என்னைத் தேவன் அடிமையாக இருக்க சித்தங்கொண்டால் நான் ஒரு சிறந்த அடிமையாகவே (THE BEST SLAVE) இருப்பேன் என்று யோசேப்பு தீர்மானம் எடுத்தான்.

**எந்நிலையில் தேவன் உன்னை வைத்தாலும்**
**மனரம்மியமாய் இருக்கக் கற்றுக்கொள்.**

11
ஆகஸ்டு

# தேவனது வீடு

"அவன் பயந்து, இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல, இது வானத்தின் வாசல் என்றான்" (ஆதி.28:17)

"யாக்கோபு தரிசனம் கண்ட இடத்தைத் தேவனது வீடு என்று உணர்ந்தான்." சுற்றுச்சுவர்கள்; எதுவுமில்லை, கூரையும் இல்லை. ஆனால் அதனை தேவனது வீடு என்று யாக்கோபு கூறுகிறான். ஏனெனில் அங்குதான் அவன் வானத்தின் வாசலை கண்டான். ஏன் அது வானத்தின் வாசல்? பரலோகத்தின் மேன்மையை அவன் காணவில்லை. அந்தப்பேரொளியில் அவன் அவனையே வெளிப்படையாகக் கண்டான். அவன் குற்றங்கள் ஒன்றும் தேவனுக்கு மறைந்திருக்கவில்லை. ஆகவே தேவசமுகத்தை வானத்தின் வாசலாகக் கண்டான்.

"கர்த்தவே, நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர், என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர். என் வழிகளெல்லாம் உமக்குத்தெரியும்" (சங்139:1-3) என்று சங்கீதக்காரன் வானத்தின் வாசல் ஒளியில் தன்னைப்பார்த்து இந்த அறிக்கையைச் செய்கிறான்.

தங்கத்தரை, ஜீவ மரங்கள், கண்ணாடிக் கடல் - இவைகளைப் பார்ப்பதல்ல வானத்தின் வாசல். உன் நிலை, உன் கடமை, உன் தடுமாற்றம் இவைகளை சத்திய வெளிச்சத்தில் பார்ப்பதே வானத்தில் வாசல்! இவைகளையெல்லாம் யாக்கோபு மறந்துவிட்டான். பெத்தேல், தேவதூதர்கள், தேவ வார்த்தைகள் - எல்லாமே அவனது நினைவை விட்டு நீங்கிவிட்டன. இப்பொழுது அவன் நினைவில் இருப்பது "ஏசா! ஏசா!. தேவபிள்ளையே! ஜெபம், வேதம், ஆராதனை, துதி ஸ்தோத்திரம் எல்லாவற்றையும் மறந்துவிட்டு, பிரச்சனைகளையே வெறித்து நோக்கிக் கொண்டிருக்கிறீர்களா? தேவ தரிசனத்தை மீண்டும் நினையுங்கள். வேதவார்த்தைக்குத் திரும்புங்கள்.

வழியில் ஏசாவை யாக்கோபு சந்திக்க நேரிடுவது, அவனுக்கு மிகப்பெரிய நெருக்கடி. யாக்கோபைப்போல நீங்களும் ஒரு பெரிய பிரச்சனையைச் சந்திக்க வேண்டியதிருக்கலாம். கடுமையானப் பணப்பிரச்சனை, மோசமான ஒரு வியாதி, திடீரென்று எழும்பும் பகை இவைகளெல்லாம் நீங்கள் சந்திக்கவேண்டிய கடும்பிரச்சனைகள்!. யாக்கோபு ஏசாவைச் சந்திப்பதற்கு முன் கர்த்தர் மற்றொருவனைச் சந்திக்கும்படி விரும்பினார். யாரை யாக்கோபை! ஆம், ஏசாவை யாக்கோபு சந்திப்பதற்கு முன், யாக்கோபு, யாக்கோபைச் சந்திக்க வேண்டும்! ஆம்! அவன் அவனை உணரவேண்டும். தான் யார் என்பது அவனுக்குத் தெரியவேண்டும். தனக்கு உண்டான யாவையும் அக்கரைப்படுத்தினான்; பிந்தித் தனித்திருந்தான். இப்படி கர்த்தர் யாக்கோபைத் தனிமைப்படுத்தியது, அவனைத் தான் உருவாக்குவதற்காக.

**நீங்கள் சந்திக்கும் தனிமைகள், நெருக்கங்கள்,**
**ஆசீர்வாத வாய்க்கால்களாக மாறிவிடும்.**

12
ஆகஸ்டு

# தேவனோடு போராட்டம்

"தேவனோடு போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள்" (அப்: 5:39)

யாப்போக்கு ஆற்றங்கரையில் தன்னந்தனியாக யாக்கோபு அமர்ந்திருக்கிறான். இராக்காலம்! ஆற்றின் தண்ணீரின் சத்தத்தையே அவன் கேட்டுக்கொண்டிருக்கிறான். திடீரென்று ஏசா வந்துவிடுவானோ என்று அஞ்சி அமர்ந்திருந்தான். அப்பொழுது ஒரு கரம் அவனைப்பற்றிப் பிடிந்தது. ஏசாவின் ஆட்களில் ஒருவன் தன்னைப் பிடிக்கிறானோ என்று யாக்கோபு பதைபதைத்து எழுகிறான். அவனைப் பற்றிப் பிடித்தது ஏசாவின் கரமல்ல; கர்த்தரின் கரம். இதை அறியாமல் யாக்கோபு போராடத் துணிந்துவிட்டான். (ஆதி.32:24). யாக்கோபே தேவனோடு போர் செய்கிறான். திடீரென்று அந்தக்கரம் யாக்கோபின் தொடைச்சந்தைத் தொட்டது. ஆம்! மாம்சீகத்தின் பலத்தை தேவன் தொட்டார். யாக்கோபு நொண்டியானான்.

தேவனை விட்டு ஓடும் ஓட்டத்தைத் தேவன் தடை செய்வார். பெத்தேலின் யாக்கோபு தேவனது பிள்ளையானான். ஆனால் பெனியேலில் கர்த்தர் அவனைத் தேவனது பரிசுத்தவானாக மாற்றினார். தேவப்பிள்ளையாக பெத்தேலிலிருந்து யாக்கோபு துள்ளிக்குதித்து வந்தான். பெனியேலில் அவன் நொண்டி நடந்துபோனான். பெத்தேலில் யாக்கோபு பாவத்திற்கு மரித்தான். இப்பொழுது அவன் சுயத்திற்கு மரித்தான்.

யாக்கோபைக் கர்த்தர் பணியவைத்தார். அவனது மாம்சம் சிலுவையில் அறையப்பட்டது. தனது திட்டங்களைக் கர்த்தர் ஏற்றுக்கொள்ளவில்லையென்று யாக்கோபு அறிந்ததும் தனிமையை நாடினான். தேவன் அவன் தனிமையைக் கலைத்து தன் திட்டங்களை அவன் ஏற்றுக்கொள்ளும்படி செய்தார்.

என் சகோதரனே! என் சகோதரியே! உன் சித்தம், உன் திட்டம், உன் ஆசை, உன் விருப்பம் நிறைவேறவில்லையென்பதற்காக தேவனோடு ஜெபத்தில் போராடுகிறாயா? இது ஆவிக்குரிய ஜெபம் அல்ல. மாம்சீகமான வார்த்தைகளின் யுத்தம். நீ ஜெயிக்கமுடியாது. யாக்கோபும் ஜெயிக்கவில்லை. இந்தத் தோல்வியைத்தான் அவனது வெற்றிக்குப் படிக்கட்டாக கர்த்தர் மாற்றினார்.

**கர்த்தரின் பாதையில் நடக்கும்பொழுது;**
**சூரியன் உதிக்கும், தோல்வியின் காரிருள் விலகும்!**

13
ஆகஸ்டு

# ஒரு விலை கொடுக்க வேண்டியதாயிற்று.

"பிரதான ஆசாரியர்கள் லாசருவையும் கொலைசெய் ஆலோசனைபண்ணினார்கள்" (யோவான் 12:11)

இரட்சிப்பு இலவசமானது; ஆனால் இரட்சிப்பின் சாட்சிக்கு நாம் விலை கொடுக்க வேண்டும். பிரதான ஆசாரியர்கள் லாசருவையும் கொலை செய்ய ஆலோசனை பண்ணினார்கள். ஆம்! அவன் வாழ்க்கை கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருந்தது. அனேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள அவன் உயிர்த்தெழுதல் காரணமாக இருந்தபடியால் அவனைக்கொலை செய்ய முயற்சித்தனர். கிறிஸ்தவ சாட்சிக்காக அவன் தன் ஜீவனையே விளையாகக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. "என் பிராணனை அருமையாக எண்ணேன்" என்ற இலட்சியத்தோடு லாசரு வாழ வேண்டியதாயிற்று.

நீ சத்தியத்தை நேசித்தால் உலகம் உனக்கு சத்துருவாய் மாறிவிடும். ஆகவே நீ கடுமையான விலை கொடுக்க வேண்டிய சூழ்நிலை உனக்கு நேரிடும். இனம், ஜனம், நண்பர் மற்றும் பலர் உன்னை வெறுப்பார்கள். "என்னிமித்தம் உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி பலவிதமான தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்கள்" (மத்.5:11) என்று வேதம் ஏற்கெனவே நம்மை எச்சரித்திருக்கிறது.

"ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ நான் உங்களை அனுப்புகிறேன்" (மத்10:16) என்றுதான் இந்த உலகிற்குள் நம்மை இயேசு அனுப்பியிருக்கிறார் என்பதை மறந்து விடாதீர்கள். ஆனாலும் பிதாவின் சித்தம் இல்லாமல் ஒரு குருவிகூட தரையில் விழாது என்று நமது தேவன் நம்மை உற்சாகப்படுத்துகிறார்.

இந்த உலகில் விசுவாசத்திற்காக நாம் போராட வேண்டியதிருக்கிறது. பாவத்திற்கு விரோதமாகப் போராடுகிறதில் நாம் கண்ணீரையும் இரத்தத்தையும் சிந்த வேண்டியதிருக்கும் (எபி.12:4).

பரிசுத்த பவுலின் வார்த்தைகளை இதயத்தில் ஆழமாகப் பதித்துக்கொள். "நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு தீங்கனுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய்; உன் ஊழியத்தை நிறைவேற்று, ஏனென்றால் நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்." (2தீமோ.4:5,6). லாசருவும் மீண்டும் மரணத்தைச் சந்திக்க ஆயத்தமாகவே இருந்தான்.

**"வாழ்ந்தால் கிறிஸ்துவுக்காக; மரித்தால் கிறிஸ்துவோடு இதுதான் நீ கொடுக்கும் விலை.**

14
ஆகஸ்டு

# இருக்கவேண்டிய இடத்தில் இரு.

"பின்பு, அவர்கள் பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார், அங்கே மார்த்தாள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரி அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள்." (லூக்கா 10:38)

லாசரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் வீட்டார் இயேசுவை உபசரித்தார்கள், உபதேசத்திற்கு மதிப்புக் கொடுத்தார்கள். லாசருவிடம் இந்த இரண்டு சுபாவங்களும் இருந்தன. இந்த மூவரிலும் லாசருவே மிகவும் பாக்கியவான். இவர் அவனை எவ்வளவாய் சினேகித்தார் என்ற யூதர்கள் ஆச்சிரியப்பட்டனர்.

இயேசு கல்லறைக்குள் அடக்கம் பண்ணபடுவதற்கு முந்திய வாரத்திற்கு முன்பு, பெத்தானியாவில் ஒரு இராவிருந்து, அந்த முக்கிய விருந்தில் லாசரு இருக்கிறான். ஆரம்பத்தில் இயேசுவோடு இருந்த அனேகர் அவரை விட்டுப் போய்விட்டனர். இவரது கடைசி நாட்களில், ஆபத்தான நாட்களில் அவரோடுகூட இருந்தவர்களில் லாசருவும் ஒருவன். (யோவான் 12:1,2) அதிகாரிகள் இயேசுவைப் பிடிக்க வகைதேடிய நேரத்தில் லாசரு இயேசுவோடு இருந்தான்.

சபையில் கை தட்டி நீ பாடுவது ஆச்சரியமல்ல; சத்தியத்திற்காக நீ சிறைப்பட்டுப்போனால் சிறையில் நீ கைதட்டிப் பாடுவாயா? "மாஞ்சோலை, பூஞ்சோலை என்ன மாற்ற நினைக்கும் சிறைச்சாலை" என்று உலக மனிதன் பாடுகிறானே, உன் ஆவிக்குரிய பாடல் எது? தேவன் விரும்பும் இடத்தில் இருக்கிறாயா?

கானானில் இருக்க வேண்டிய லோத்து சோதோமில் இருந்தான். (அதி.19:1). யுத்தத்திற்குப் போகவேண்டிய தாவீது உப்பரிகையிலே இருந்தான். இயேசுவோடு இருக்கவேண்டிய பேதுரு குளிர்காயும் இடத்தில் இருந்தான். லாசரு இருக்கவேண்டிய இடத்தில் இருந்தான். நீ எங்கு இருக்கிறாய்?

லாசருவின் வாழ்க்கை இயேசு செய்தவைகளில் சிலவற்றைச் சுட்டிக்காட்டின. இயேசுவின் வல்லமைக்கு லாசரு ஒரு உதாரணம். லாசரு என்றால் கர்த்தர் உதவி செய்கிறார் என்ற பொருள். ஆகவே லாசருவைக் காண்போர் கர்த்தர் உதவி செய்கிறார் என்று ஆறுதல் அடைவார்கள். நீங்கள் கிறிஸ்துவின் வல்லமைக்கு உதாரணமாக இருக்கிறீர்களா? லாசரு கிறிஸ்துவின் உயிர்த்தெழச்செய்யும் வல்லமைக்கு ஒரு உதாரணம்.

லாசரு, கிறிஸ்து என்னும் மாளிகைக்கு வரவேற்புப்பலகை. நீ கிறிஸ்துவின் சபைக்கு வரவேற்புப் பலகையாய் இருக்கிறாயா? உன் வாழ்க்கை கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று வழிகாட்டியாக இருக்கிறதா?

**லாசரு ஒரு நம்பிக்கையின் வாசல். நீ எப்படி இருக்கிறாய்?**

15
ஆகஸ்டு

# பெத்லகேமில் இயேசுவோடு.

"எப்பிராத்தா எனப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களில் சிறியது" (மீகா 5:2)

ஆயிரம் ஊர்களில் மிகப்சிறிய ஊர் பெத்லகேம். ஆனால் இன்று உலகமே அறிந்த ஊர்களில் ஒன்று பெத்லகேம். ஏனெனில் உலக இரட்சகரும் இஸ்ரவேலின் ராஜாவுமாகிய இயேசு இங்கேதான் பிறந்தார் இயேசுவின் பிறப்பினால் இந்தச்சிறிய ஊர் பேரும் புகழும் அடைந்தது.

இங்குதான் இரட்சகர் பிறக்க வேண்டும் என்று தேவன் முன்குறித்த இடம் பெத்லகேம். இயேசுவினால் இந்த ஊர் ஒரு தகுதி பெற்றது. சகோதரனே, சகோதரியே! இந்த உலகில் உனக்கு சொத்து, சுகம் என்று ஒன்றுமில்லாமல் போனாலும் நீ இயேசுவின் பிள்ளையாயிருந்தால் அதுவே மிகப்பெரிய தகுதி.

"எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிப்பதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல. எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" (2கொரி3:5) என்று பவுல் சொல்கிறபடியே, நம்முடைய மிகப்பெரிய தகுதி கிறிஸ்வினாலேயே.

கிறிஸ்துவினால் உண்டான தகுதியினால் சாத்தானின் மீது உனக்கு அதிகாரமுண்டு. வியாதிகள் மீது, பிரச்சனைகள் மீது உனக்கு அதிகாரமுண்டு. நீ உலகில் அற்பமாய் இருக்கலாம். கிறிஸ்தவன் என்ற ஒரே தகுதியினால் பாதாளத்தின் வாசலை நீ மேற்கொள்வாய். இரும்புத் தாழ்ப்பாள்களை முறிப்பாய்: வெண்கலக்கதவுகளை உடைப்பாய்.

பெத்லகேம் என்றால் அப்பத்தின் வீடு. உன்னில் இயேசு வாழ்ந்தால் உன்னிலிருந்து ஜீவ அப்பமாகிய அவரது வார்த்தைகள் புறப்படும்.

**உன்னிலிருந்து புறப்படும் கிறிஸ்துவின் வார்த்தையே செத்துக்கொண்டிருக்கும் சமுதாயத்திற்கு ஜீவ அப்பம்.**

16
ஆகஸ்டு

# சிங்கக் கெபியில் தானியேல்

ஒரு கல் கெபியினுடைய வாசலின்மேல் கொண்டுவந்து வைக்கப்பட்டது. தானியேலைப்பற்றிய தீர்மானம் மாற்றப்படாதபடிக்கு ராஜா தன் மோதிரத்தினாலும் அதன் மீது முத்திரைபோட்டான். (தானி 6:17)

தானியேல் சிங்கக் கெபிக்குள் தூக்கி எறியப்பட்டான். அந்தக்கொடிய விலங்குகளின் மத்தியில் தனியாக நின்றான். சிங்கங்கள் அவன் உடலைக் கிழித்து உண்ண, அவன் எலும்புகளை நொறுக்கிப்போட மிகவும் ஆத்திரமுடன் நின்றன. சாத்தான் சொல்லியிருப்பான், "தானியேலே, உன் முடிவு உன்னை விரைவில் நெருங்கிக்கொண்டிருக்கிறது. நீ மரிப்பது நிச்சயம். யோசித்துபார், உன் பக்தியும் ஜெபமும் உன்னை விடுவித்ததா? நீ ஆராதிக்கும் உன் தேவனால் இந்த அரசாங்க ஆணையை – சட்டத்தை மாற்றமுடியவில்லையே, கர்த்தர் உன்னை தப்புவிக்கத் தவறிவிட்டாரே." ஆம்! அரசாங்க ஆணை மாற்றப்படவில்லை. ஆனால் கர்த்தர் சிங்கப் கெபிக்குள் வேறொரு காரியத்தைச் செய்தார்.

அன்பான சகோதரனே, சகோதரியே! அரசு கொண்டுவந்த சட்டத்தினால் மிகவும் நெருக்கத்தில் இருக்கிறாயா? இருண்ட இடத்தில் தவிக்கிறாயா? இந்தச்சட்டம் எடுபட்டுப்போய்விடும் என்று நம்பியிருந்த வேளையில் சட்டத்தின் மேல் நீதிமன்ற முத்திரையும் விழுந்து மிகவும் அல்லற்படுகிறாயா? சட்டத்தை ராஜா அறிவித்தப்பின்னும் துணிந்து அதை மீறியது பெரிய குற்றமில்லையா? இது சரியான தண்டனை தான் என்று தானியேலோடு இருந்தவர்கள் சொன்னதுபோல இன்று உனக்கெதிராகப் பேசுகிறார்களா? சட்டம் இவ்வளவு கொடியது என்று தெரிந்திருந்தும் அதனை மீறலாமா என்றெல்லாம் விளக்கங்கள் - வியாக்கியானங்கள் கொடுப்பார்கள். சட்டத்தை ராஜா மாற்றும்படி எத்தனையோ பேர் ஜெபித்திருக்கலாம். விளைவுகளை எண்ணிப் பலர் கலங்கியிருக்கலாம். கர்த்தர் சட்டத்தை, அரசு ஆணையை மாற்றவேயில்லை. ஆனால் ஒரு காரியத்தைச் செய்தார். சிங்கங்கள் அவனைச் சேதப்படுத்தாதப்படிக்கு ஒரு தேவதூதனை அனுப்பினார்.

சிங்கக் கெபியின் வாசல் மூடப்பட்டது, ஆனால் அதேநேரம் பரலோகம் திறக்கப்பட்டது. மனிதன் சிங்கக் கெபியின் வாசலில் ஒரு கல்லை வைத்தான். தேவன் சிங்கக் கெபிக்குள் ஒரு தேவ தூதனை அனுப்பினார். இதனை எந்தச்சட்டம் தடுக்க முடியும்? தேவன் சட்டத்தை இயற்றிய ராஜாவின் கரங்களை தடுக்கவில்லை. முத்திரைப்போட்ட அவன் கைகளைத் தேவன் கட்டவில்லை. ஆனால் தானியேலைக் கடித்துக் குதற நிற்கும் சிங்கங்களின் வாயைத் தேவன் கட்டினார். தானியேலை மீட்க கெபியின் வாசலைத் தேவன் திறக்கவில்லை. இப்பொழுதும் அரசாணை அமுலில்தான் இருந்தது. பிரச்சனை அப்படியே இருக்கிறதா? விடுதலை, சமாதானம் கண்ணுக்கெட்டா தூரம் சென்றுவிட்டனவா? பயப்படாதே!

**கர்த்தர் நீ நினையாத ஒரு வழியைத்திறப்பார்.**

17
ஆகஸ்டு

# நெருக்கத்தில் எண்ணித்துணிக.

"எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராய் என் கண்களை ஏறெடுக்கிறேன்" (சங்.121:1)"

நெருக்கங்களில் நாம் பரத்தை நோக்கிப்பார்க்க வேண்டும். பஞ்சம் என்பது எதிர்பாராத நெருக்கம். உலகம் பஞ்சத்திற்கு ஆயத்தமாக இருக்காது. ஆனால் ஒரு விசுவாசி எல்லாவித நெருக்கங்களுக்கும் ஆயத்தமாக இருக்கவேண்டும். நெருக்கம் ஒரு மனிதனைத் தேவ சமூகத்திற்கு விரட்ட வேண்டும். தங்கையின் பரிகாசச் சொல் அன்னாளைக் கர்த்தரின் சமூகத்திற்கு இழுத்து வந்தது. அங்கே கர்த்தரிடம் அவள் மனம் கசந்து அழுதாள்.

நீயும் நெருக்கத்தில் தேவனது அரவணைப்பிற்குள் ஓடி வா. ஆனால் எலிமெலேக் பஞ்சத்தில் பெத்லகேமை விட்டு மோவாபின் தானியக் களஞ்சியத்திற்குள் ஓடினான். அப்பத்தின் வீட்டில் கர்த்தரின் தேசத்தில் பஞ்சமென்றால் அங்கேயே தேவ மக்கள் தங்கிவிட வேண்டுமே தவிர சாபத்தின் தேசமான மோவாபிற்குள் அவர்கள் நுழையக் கூடாது.

மோவாபிற்குப் போகலாம் என்று அவர்கள் எடுத்த தீர்மானம் அவர்களுடைய குடும்பத்தையே நிலைகுலுங்கச் செய்துவிட்டது. கஷ்டமான நேரங்களில் - நாம் சூழ்நிலைகளினால் நெருக்கப்படும்பொழுது தேவனுக்கு விரோதமான தீர்மானங்களை எடுத்து விடுகிறோம்.

பெத்லகேமில் பஞ்சம். தன் பிள்ளைகளைக் காப்பாற்ற வேறு வழியே இல்லை என்று அவர்களே ஒரு அவசர முடிவுக்கு வந்தனர். பஞ்சத்திற்குத் தப்பவேண்டும் என்பது நல்ல நோக்கம். மோவாபிற்குப் போக வேண்டும் என்பது தவறான பாதை. நோக்கம் சரியாயிருந்தாலும் தவறான வழிகளில் செல்வது பாவம்தானே. மோவாப் சாபத்தின் இடமாக இருக்கும்பொழுது இஸ்ரவேலர் அங்கு போவது இஸ்ரவேலரின் தேவனுக்கு அபகீர்த்திதானே?

நெருக்கமான வேளை என்பதற்காக அடுப்பின் மேலுள்ள பாத்திரத்திலிருந்து அடுப்புக்குள் குதித்து விடுவது மிகப்பெரிய ஆபத்தில்லையா?

**கர்த்தரில் நிலைத்திரு. அவரையே அடைக்கலமாய் கொண்டிரு. நீ அசையாமல் கர்ததருக்குள் இரு.**

18
ஆகஸ்டு

# வானம் திறந்தது.

"...வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்" (மத் 3:16)

யோர்தான் ஆற்றில் பாவிகள் மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுக்கிறார்கள். அந்தக்கூட்டத்தின் மத்தியில் ஞானஸ்நானம் பெற இயேசுவும் நிற்கிறார். இயேசுவையும் பாவியான மனிதர்தான் என்று பலர் எண்ணியிருக்கக்கூடும். இப்படி மக்கள் தன்னைத் தவறாகப் புரிந்துக்கொள்வார்களே என்று இயேசு கவலைப்படவில்லை.

அருமையான தேவபிள்ளையே, ஆவிக்குரிய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய நீ ஆயத்தமாகும்பொழுது, உலகம் உன்னைத் தவறாகப் புரிந்துகொள்ளலாம். ஆதனால் உன்னைத் தாழ்ந்த சாதி என்று சிலர் முத்திரையிடலாம். நீயோ பரிசுத்த ஜாதியில் இணைந்துவிட்டாய் என்று நம்பிக்கை பெறு.

இயேசுவையையும் ஒரு பாவி என்று உலகம் எண்ணின வேளையில் வானம் திறந்தது. உடனே ஒரு சத்தம் பிறந்தது. "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று அது உரைத்தது. (மத்.3:17) இயேசு பாவி அல்ல என்று பரலோகம் வானத்தைக் கிழித்து கூறியது. உன்னையும் பலர் தவறாக எடைபோட்டால் உன் மீது வீண்குற்றம் சாட்டினால் இயேசு உனக்காகப்பேசி உன் நியாயத்தை விளங்கப்பண்ணுவார்.

ஊழியத்திற்காக உன் நேரத்தை, பணத்தை நீ செலவிட்டால் உன்னை உன் வீட்டார் குற்றப்படுத்துகிறார்களா? இயேசுவின் தலையில் நளதம் என்னும் வாசனைத் தைலத்தை ஊற்றிய அந்தப்பெண்ணைச் சீஷர்கள் குற்றப்படுத்தினார்கள். உடனே இயேசு, "அவளை விட்டுவிடுங்கள். ஏன் அவளைத் தொந்தரவு செய்கிறீர்கள்" என்று இடைமறித்து அவள் என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள் என்று அவளது செயலுக்கு நியாயம் கற்பித்தார். உன் வாழ்க்கையிலும் இயேசு நியாயத்தை விளங்கப்பணணுவார்.

ஐயோ! என்னை எல்லோரும் தவறாகப் புரிந்துக் கொள்கிறார்களே என்று புலம்பாதே. நீ உத்தமமாய் நடந்தால் நாளானது அதை விளங்கப்பண்ணும். எகிப்திற்குள் நுழையும்பொழுது யோசேப்பு அடிமை! போத்திபார் வீட்டில் வீண் பழி! அடுத்த நாளிலிருந்து எகிப்து சிறையில் கைதி! தேவன் அவன் வாழ்க்கையில் தலையிட்டதால் பார்வோனின் அரண்மனையில் யோசேப்பை, "தேவ ஆவியைப் பெற்ற மனிதன்" என்று கர்த்தர் விளங்கப்பண்ணினார். உன் வாழ்க்கையிலும் தேவன் தலையிடுவார்.

**கர்த்தருக்காக கொடுத்து கெட்டு போனவர்கள் இல்லை;**
**கொடுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும்.**

19 ஆகஸ்டு

# உன் சிலுவையை சுமந்து விடு

"தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல." (மத்.10:38)

நம்மெல்லாருக்கும் ஒரு சிலுவை இருக்கிறது. இயேசு கிறிஸ்து சிலுவை சுமந்தது மாத்திரமல்ல, நம் ஒவ்வொருவருக்கும் ஒரு சிலுவையிருக்கிறது. தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான். ஆகவே நமக்கென்று ஒரு சிலுவை உண்டு.

ஒவ்வொரு கஷ்டமும், ஒவ்வொரு வேதனையும் ஒரு சிலுவையல்ல. நாம் கஷ்டப்படும் போதெல்லாம் இது சிலுவை என்று சொல்லக் கூடாது. குடும்பத்தின் பிரச்சனைகள், நெருக்கங்களெல்லாம் சிலுவைகளல்ல. வேதம் சொல்கிற சிலுவை என்பது கர்த்தருடைய நாமத்தினாலே நமக்கு வருகிற துன்பங்கள்தான்.

தன்னைத்தான் வெறுப்பது என்பது பொருள்களை, நம்முடைய வசதிகளை விட்டுவிடுவது மாத்திரம் அல்ல. நாமாகவே வலிய அவருடைய துன்பங்களை சுமந்துக் கொள்வது தான் நம்மை நாமே வெறுப்பது. நம்முடைய வசதியான சூழ்நிலையில் நாம் சந்தோஷமாயிருக்கிறோம். நம்முடைய வேலை ஸ்தலம், நம்முடைய குடும்பம், ஆராதனை இவையெல்லாம் வசதியானவைகள். இவைகளையெல்லாம் நாம் சந்தோஷமாய் அனுபவிக்கிறோம். ஆனால் ஆண்டவர், "இந்த வசதியான இடத்தை விட்டுவிட்டு நீ என்னைப் பின்பற்றி வா"என்று அழைக்கிறார்.

நாம் ஆண்டவரை ரசித்துக் கொண்டிருக்க அழைக்கப்படவில்லை. இயேசுவைப் பின்பற்றி வரவேண்டும். அப்படி பின்பற்றி நடப்பதற்கு மனதார நம்முடைய வசதிகளை நாம் விட்டுவிடவேண்டும். என்னருமையான தேவப்பிள்ளையே, கிறிஸ்துவின் நிமித்தமாக எந்த அளவிற்கு நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம்? எந்த அளவிற்கு நாம் நெருக்கப்படுகிறோம் அல்லது துன்பம் அனுபவிக்கிறோம்? நாம் இயேசுவைப் பின்பற்றுகிறோம், ஆனால் சிலுவையை எடுக்காமல் பின்பற்றுகிறோம்.

சிலுவையில்லாமல் இயேசுவைப் பின்பற்றுவது வரலாற்று இயேசுவைப் பின்பற்றுவது, ஆவிக்குரிய இயேசுவையல்ல. ஆவிக்குரிய பிரகாரமாய் வேதாகமத்தின் நாயகனாகிய இயேசுவைப் பின்பற்றுகிறதற்கு நாம் சிலுவை சுமக்க வேண்டும். சிலுவை சுமக்காமல் ஆண்டவரை நாம் பின்பற்றவே முடியாது.

**சிலுவையை நீ சுமந்தால், தேவன் உன்னை சுமப்பார்.**

**20**
**ஆகஸ்டு**

# இயேசுவின் சமூகம் விசுவாசத்தை உருவாக்குகிறது.

"அந்தப் பரம தரிசனத்திற்கு நான் கீழ்ப்படியாதவனாய் இருக்கவில்லை". (அப்.26:19)

"நான்தான்" என்று இயேசு சொன்னதைக் கேட்டவுடன் பேதுருவின் பயம் உடனே அவனைவிட்டு விடைபெற்றுக்கொண்டது; அவன் மிகுந்த தைரியமுள்ளவனானான். கிறிஸ்துவின் சமூகம் ஒருவனை வித்தியாசப்படுத்துகிறது; பலப்படுத்துகிறது. தமஸ்கு நகரத்து வாசலில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கொடுத்த தரிசனம் பவுலின் ஜீவியத்தையே மாற்றியது. அந்த பரம தரிசனத்திற்கு நான் கீழ்ப்படியாதவனாய் இருக்கவில்லை என்ற பவுலின் வார்த்தைகள் தேவ தரிசனத்தின் மகத்துவத்தை விளக்குகின்றன. கர்த்தரைத் தரிசித்தவர்களின் வாழ்க்கையில் நிச்சயம் ஒரு மாற்றமிருக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்து சிறு பாலகனாய் இருக்கும் பொழுதே அவரைக் கண்ட ஞானிகள் அவரைத் தொழுதார்கள். எந்தச் சூழ்நிலையிலும் இயேசு கிறிஸ்துவுக்குள் இருந்த தெய்வீகம் மனிதனை ஆக்கிரமித்துக் கொண்டேயிருந்தது. இயேசுவைச் சந்தித்த அவர்கள் வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள். (மத் 2:12) ஆவிக்கேற்ற நிலைமையிலும் இயேசுவை சந்தித்தவர்கள் தங்கள் பழைய பாவ வழிகளில் அல்ல பரிசுத்தமான வேறு வழிகளில் நடக்க ஆரம்பிக்கின்றனர். ஆவியானவரால் தொடப்பட்ட இஸ்ரவேலின் மன்னன் சவுல் கர்த்தர் தொட்ட அந்த நாளிலே வேறு மனுஷனானான். (1சாமு 10:6) இயேசுவைச் சந்தித்த சகேயு தான் தகாத வழியில் சம்பாதித்தப் பணத்தை நாலத்தனையாய் திருப்பிக் கொடுக்க ஆயத்தமானான். இயேசுவின் தரிசனம் சகேயுவின் உள்ளான வாழ்க்கையைப் பாதித்தது.

சகோதரனே, சகோதரியே! இயேசு கிறிஸ்துவை உன் இரட்சகராக நீ ஏற்றுக் கொண்டதினால் எந்த அளவிற்கு உன் வாழ்க்கைப் பாதிக்கப்பட்டிருக்கிறது? உன் சொல், செயல், நடை, உடை பாவனைகளில் மாற்றமிருக்கிறதா? சோர்ந்துகிடந்த சீஷர்களுக்கு மத்தியில் புது தரிசனத்தோடு எழுந்தான் பேதுரு. ஆகவே கூடாது என்ற காரியங்களெல்லாம் எளிதில் கைகூடும் என்ற நம்பிக்கையை அவன் எடுத்தான். நீ எப்படி? யாக்கோபைப் போல புலம்புகிறாயா? அல்லது சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது என்று பவுலைப் போல திடமான நம்பிக்கையில் இருக்கிறாயா?

**கிறிஸ்துவின் சமூகம் உன்னை**
**வித்தியாசப்படுத்தட்டும்; பலப்படுத்தட்டும்.**

**21**
**ஆகஸ்டு**

# உலகத்திற்குத்தண்டனை; உத்தமனுக்கு விடுதலை.

"இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுவதில்லை." (லூக்.12:6).

ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவி என்ற விலையில் இரண்டு காசுக்கு ஐந்து குருவிகள் கிடைத்தால் அந்த ஐந்தாவது குருவி இலவசமாய்க் கிடைத்த குருவி. அந்தச் சின்னக்குருவியும் தேவனால் மறக்கப்படுவதில்லை. ஆகையால் பரமபிதா உன்னை மறக்கவே மாட்டார்.

உலகம் முழுவதுமே தண்ணீரில் மூழ்கி அழிந்து போகும்பொழுது கர்த்தர் நோவாவை மட்டும் நினைத்தார். ஏனெனில் அக்காலத்தில் அவன் மட்டும் உத்தமனும், நீதிமானுமாக இருந்தான். உலகத்தின் பாவத்தைத் தேவன் தண்டித்தபின், நோவா பேழையில் இருப்பதை நினைவு கூர்ந்தார். அதாவது உலகத்தை அதன் கொடிய பாவத்திற்காகத் தண்டித்தபின் நோவாவை ஆசீர்வதிக்க தேவன் சித்தம் கொண்டார்.

அப்படியே உங்கள் பாவத்தைச் சரிசெய்யாமல் தேவன் உங்களை ஆசீர்வதிக்கவே மாட்டார். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, தேவபிள்ளையாக நீங்கள் மாறாவிட்டால் தேவனது நினைவில் நீங்கள் இருக்கவே மாட்டீர்கள். தேவன் நம்முடைய பாவங்களுக்காக நிச்சயமாய் கோபம்கொள்வார். "குமாரன் கோபம் கொள்ளாமலும் நீங்கள் விழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு அவரை முத்தம் செய்யுங்கள்" (சங்.2:12) என்று வேதம் எச்சரிப்பதைக் கவனியுங்கள். அவருடைய கோபம் மறைந்தவுடன் அவருடைய இரக்கம் பிறக்கும். கோபித்தாலும் இரக்கத்தை நினைத்தருளும் (ஆபகூக் 3:2) என்று அப்பொழுது ஜெபிக்கமுடியும்.

நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகும்வரைக்கும் அவர்கள் உணராதிருந்தார்கள். உணர்வில்லா அவர்கள் முற்றிலும் அழிந்தார்கள். "அவர்களோ கலகம் பண்ணி அவருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள். அதினால் அவர் அவர்களுக்குச் சத்துருவாய் மாறி அவரே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணினார்கள்" (ஏசா63:10) என்ற கொடுமை உன்னிலே நிறைவேறவே கூடாது. ஆகவே வேத சத்தியத்திற்கு, தேவ ஊழியருக்கு விரோதமாகக் கலகம் பண்ணாதே. தேவனுக்கும், ஊழியத்திற்கும் விரோதமாக நீ செயற்பட்டால் தேவன் உனக்கு விரோதமானச் சத்துருவாக மாறிவிடுவார்.

**தேவனது நினைவில் நீ காணப்பட அர்ப்பணிப்பு அவசியம்**

22
ஆகஸ்டு

# உறுதியான விசுவாசம்.

"நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து உமது கோபம் தீருமட்டும் என்னை மறைந்து என்னைத் திரும்ப நினைக்கும்படிக்கு எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும்" (யோபு 14:13)

நாட்கள், வாரங்கள், மாதங்களாக உருவெடுத்து கடந்து செல்லும்போது மனிதன் சோர்வடைகிறான். காத்திருப்பதினால் ஆத்துமா இளைப்படைகிறது. நேரம் நீடித்துக்கொண்டே போவதால் நோவா சோர்வடையவே இல்லை. ஒருவேளை தேவன் பேழையை மறந்துவிட்டால்... இப்படி நோவா யோசிக்கவே இல்லை. பேழையில் நோவா தேவனை மறக்கவேயில்லை. தேவனை மறக்காதவர்களைத் தேவனும் மறப்பதில்லை. கர்த்தர் மனிதனை நினைக்காவிட்டால் மனிதன் நடைபிணமாவான். குடும்பம் போர்க்களமாகும், ஊழியம் பாபேலாகும். நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து உமது கோபம் தீருமட்டும் என்னை மறைந்து என்னைத் திரும்ப நினைக்கும்படிக்கு எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும். எப்படியாவது தேவன் தன்னை நினைக்கும் காலம் ஒன்றுவரவேண்டும் என்று பக்தன் யோபு வாஞ்சிக்கிறான்.

நீண்ட நெடும் பயணத்திற்குப் பிறகு அப்படி ஒரு காலம் நோவாவிற்கு வந்தது. கர்த்தர் அவனை நினைத்தருளினார். ஆகவே தேவ பிள்ளையே காலம் கடந்து போகிறதே என்று கலங்காதே. உன்னை நிச்சயம் தேவன் தன் காலத்தில் நினைப்பார். பிள்ளை இல்லையே என்று கலங்கிய ராகேலை நினைத்த கர்த்தர், எனக்கு இவைகளெல்லாம் இல்லையே என்று கலங்கும் உன்னை நிச்சயமாய் தேவன் நினைப்பார்.

கர்த்தர் நோவாவை நினைவுகூர்ந்ததினால் பேழையின் கதவு திறக்கவில்லை. எந்த மாற்றமும் உடனே ஏற்படவில்லை. அதுபோல உன் ஜெபம் கேட்கப்பட்டதினால் உடனே கண்காணும்படியாகத் தேவன் கிரியை செய்யாமலிருக்கலாம். ஆகவே தேவன் கிரியைச் செய்யும் விதம் உனக்கு விளங்காமலிருக்கலாம். அதனால் நீ மனம் தளர்ந்துவிடாதே.

நோவாவை மட்டுமல்ல, அவன் குடும்பத்தை, அவன் தேடிய மிருகங்கள், பறவைகள் இவைகளையும் கர்த்தர் நினைத்தார். தேவன் உன்னை நினைப்பதினால் உன் பிள்ளைகள், சொத்துக்கள் எல்லாமே ஆசீர்வதிக்கப்படும்.

**தேவனின் நினைவில் இருக்க; தேவ சித்தம் செய்**

23
ஆகஸ்டு

# சோதனைகளுக்கு முன்பு தேவன் நம்மை ஆயத்தப்படுத்துகிறார்.

"உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடம் கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (1கொரி.10:13).

சோதனைகளை நாம் சந்திக்குமுன் நாம் சோதனையினின்று தப்பும்படி ஒருவழியை உண்டாக்கிவிடுகிறார். ஈசாக்கைப் பலிபீடத்தில் கிடத்துவதற்கு முன்பே, பலி ஆடு அங்கு ஆயத்தமாக இருந்தது. நீ இன்று சந்திக்கப்போகும் சோதனைக்கு, ஏற்கனவே தேவன் விடுதலையை ஆயத்தம் பண்ணிவிட்டார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடம் கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார். ஆகவே சோதனையைக் குறித்து அதரியப்படாதே.

"ஐயோ! எனக்கு வந்ததுபோல சோதனை ஒருவருக்கும் வந்தது இல்லை. ஏன்தான் கடவுள் என்னை இப்படி சோதிக்கிறாரோ" என்று சொல்லாதே. முதலாவது நீ அறிய வேண்டியது எல்லா சோதனைகளும் தேவனால் வருவதில்லை. மற்ற மனுஷர்களுக்கு வருகிற சோதனையே உனக்கும் வருகிறது. உன் திராணிக்கு மேலாக அவர் சோதிக்கவே மாட்டார். ஐயாயிரம் பேருக்கு ஆகாரம் கொடு என்று கட்டளையிட்ட இயேசு, ஏற்கனவே அதற்கான வழியை தன் சித்தத்தில் உண்டாக்கி இருந்தார். கலலைப்படாதே! சோதனைகள் கர்த்தர் உன்மேல் வைத்த நம்பிக்கையை விளங்கப்பண்ணுகிறது.

திடீரென்று பெரிய சோதனை வந்துவிடாது. சிறு சிறு சோதனைகளில் நாம் வென்றுப் பழகவேண்டும். நீ காலாட்களோடு ஓடியபின்தான், குதிரைகளோடு ஓட முடியும்? சமாதான காலத்தில் நீ அடைக்கலம் தேடி ஓடினால், யோர்தான் பிரவாகித்துவரும்பொழுது என்ன செய்வாய்? கர்த்தரின் துணையோடு, சிறு சிறு சோதனைகளை வென்றுப் பழகு; சோதனைகளுக்கு விலகி ஓடாதே! இப்பொழுது ஆபிரகாமைச் சந்திக்க, சோதிக்க கர்த்தர் வருகிறார். ஆபிரகாமின் பதில் "இதோ அடியேன்". ஆசீர்வதிக்கும் கர்த்தரைச் சந்திக்க நீ ஆவலாய் இருக்கலாம். சோதிக்கும் கர்த்தரை – சிட்சிக்கும் கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமா?

எந்தச் சூழ்நிலையிலும் தன் வார்த்தைகளை நிறைவேற்ற தேவன் வல்லவர் என்பதை விசுவாசி. உன் பகுத்தறிவின் ஆராய்ச்சி பலன் தராது! அவர் வார்த்தைகளை நம்பு! பார்க்க முடியாத அவர் கரத்தை விசுவாசத்தால் தொடு.

**சோதனையில் நீ நிற்பாய் என்பது தேவனது எதிர்பார்ப்பு.**

# விடையில்லா வினாக்கள்

**24**
**ஆகஸ்டு**

"இருக்கிறவன் எவனும் தோன்றுமுன்னமே பேரிடப்பட்டிருக்கிறான்" (பிர.6:10)

மனிதனுடைய பிறப்பிற்கு முன்பே அவனைக் குறித்த எல்லாமே கடவுளால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அப்படியெனில் நாம் ஜெபிக்க வேண்டிய அவசியம் என்ன? கடவுள் நிர்ணயித்ததை அல்லது பெயரிட்டதை யார் மாற்ற முடியும்? மாற்ற முடியாததற்கு ஏன் ஜெபம் பண்ண வேண்டும்? இப்படி பல கேள்விகள் எழுகின்றன. எல்லாமே விதிப்படி என்றால் விசுவாசத்திற்கு என்ன பலன்?

தேவசித்தத்தை மாற்ற நாம் ஜெபம் பண்ணவில்லை. "உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்பதே ஜெபம். ஆனால் மனிதன் தேவ சித்தத்தை மாற்றுவதற்காகவே ஜெபம் பண்ணுகிறான். தேவ சித்தத்தை அறிவதற்காகவும், அறிந்த சித்தத்திற்கு நாம் ஒத்துப் போகவுமே ஜெபிக்கிறோம். தேவன் பேரிட்டதை (நிர்ணயித்ததை) ஏற்றுக்கொள்வதே ஜெபத்தின் நோக்கம்.

சகோதரனே, உன்னைக் குறித்த தேவ சித்தத்தை மாற்றும்படியாக ஜெபம்பண்ணாதே தேவ சித்தம் அறிவதற்கு ஜெபம் பண்ணு. அறிந்தபின் அதை ஏற்றுக் கொள்ள ஜெபம் பண்ணு. "தன்னிலும் பெலத்தவரோடே போராட அவனால் கூடாது." (பிர.6:10) அதாவது கடவுளை எதிர்த்து மனிதன் போராடக் கூடாது. தேவ சித்தத்தையோ, தேவ சிந்தனையையோ மனிதன் எதிர்க்கவே கூடாது. அடங்கிப் போவதே ஆசீர்வாதம்.

மனித வார்த்தைகள் பிரச்சனைகளைத் தீர்க்காது. ஆகவே மனித வார்த்தைகளினால் என்ன பயன்? வீண் கேள்விகளை எழுப்புவதினால் மனிதன் மாயையான வலையைப்பின்னுகிறான். பாதுகாப்பான கோட்டை சுவர்களை வார்த்தைகள் எழுப்புகிறதில்லை. ஆகவே கர்த்தரின் வார்த்தையையே நம்பியிருப்போம்.

வரும் காரியங்களைக் குறித்து அறிய ஆசைப்படாமல் அதனை அறிந்த கர்த்தரையே நம்பி ஜீவிப்போம். இந்த நம்பிக்கையில்லாமல் யாராவது தீர்க்கதரிசனம் சொல்லமாட்டார்களா என்று மனிதர்களை நாடி ஓடுகிறவர்களுடைய வாழ்க்கை திடீரென்று முடிந்துவிடும் பாதைபோல் அமைந்துவிடும். "என் காலங்கள் உமது கரத்திலிருக்கின்றன" என்று நம்ப நாம் அந்தக் கரத்தின் கீழ் அடங்கி இருக்க வேண்டுமே தவிர. அந்தக் கரத்தை எட்டிப்பார்க்க வேண்டியதில்லை.

**நம்முடைய காலங்கள் தேவனுடைய கரத்தில் இருக்கின்றன.**

**25**
**ஆகஸ்டு**

# யோனாவின் ஊழியம், தேவனது கட்டளையும்

"நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய் அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி" (யோனா 1:2)

தேவன் யோனாவிற்குக் கட்டளையிட்டார். தேவனது வார்த்தைகளைப் பிரசித்தப்படுத்துவதே அவனது ஊழியம். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தேவனது வார்த்தைகளை உலகிற்கு அறிவிப்பதே தேவனது பிரதான ஊழியம். தேவ வசனம் வளர்ந்து பெருகிற்று என்பதே முதலாம் நூற்றாண்டில் ஊழியமாயிருந்தது. அன்று கர்த்தர் யோனாவைப் பாரப்படுத்தினார். நினிவேயை யோனா எச்சரிக்க வேண்டும், அதனைச் சத்தியத்திற்குள் நடத்த வேண்டும், அந்நகரத்தைத் தேவ தண்டனைக்குத் தப்புவிக்க வேண்டும். இதுவே தேவன் யோனாவைப் பற்றி கொண்டிருந்த நோக்கங்கள். அழிந்து போகும் நினிவே இரட்சிக்கப்பட வேண்டும் என்ற எச்சரிப்பின் செய்தியை யோனா மூலமாய் அனுப்ப தேவன் சித்தங் கொண்டார்.

நினிவேயின் பாவம் தேவனை நோக்கிக் கூச்சலிடுகிறது. "அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது" என்று நினிவேயின் பாவத்தை வேதம் சுட்டிக் காட்டுகிறது. நினிவேயின் களியாட்டு, குடிவெறி, காமவெறி இவைகளெல்லாம் கூக்குரலிட்டு தேவனைத் தொந்தரவு செய்கின்றன. தேவனாலே மன்னிப்பைப் பெறாத எல்லாப் பாவத்தாலுமே தேவனுக்கு மிகுந்த தொந்தரவு தான். இந்தப் பாவத்தின் கூக்குரலை அடக்க தேவன் தன் கோபாக்கினையை அந்நரகத்தில் ஊற்ற வேண்டும். இரக்கமுள்ள தேவன் அப்படிச் செய்ய மனதற்று எச்சரிப்பின் செய்தியை யோனா மூலமாய் அனுப்புகிறார். பரலோகத்தின் அவசரத்தை உணராத யோனாவோ அமைதியாய் இருந்து விட்டான். "நினிவேயின் பாவத்துக்கு விரோதமாக சத்தமிட்டுக் கதறி அழு" என்பதே தேவனது கட்டளை. "சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக்கொள்ளாதே; எக்காளத்தைப்போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி" (ஏசா.58:1) என்பதே நமக்கும் இன்று தேவன் தரும் கட்டளை.

பாவத்தைக் கண்சாடையாய் நாம் விடவே கூடாது. தேவனது ஊழியக்காரன் பாவத்தை எவ்விடத்திலும் கண்டிக்கத் தவறவே கூடாது. ஏரோதின் கொலுமண்டபம் அதிர, "அவளை வைத்திருப்பது நல்லதல்ல" என்று பாவத்தைக் கண்டித்த யோவான் ஸ்நானகனின் ஆவி நமக்குத் தேவை! இன்றைய பிரசங்க மேடைகள் பாவத்துக்கு எதிராக சீறி எழுவது இல்லை. ஆசீர்வாதப் பிரசங்கங்கள் மலிந்துவிட்டன. "நீ இருக்கும் நிலையில் அப்படியே இரு. இயேசு உன்னை இரட்சிப்பார்", "இயேசுவை ஏற்றுக்கொள். உனக்குப் பிரச்சனையே இல்லை" என்ற மலிவுப் பிரசங்களுக்கு குறைவேயில்லை. "விரியன் பாம்புக் குட்டிகளே, மனந்திரும்புங்கள்", "நீங்கள் தள்ளுபடியான வெள்ளியானீர்கள்", "நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே" இந்த சத்தங்கள் மெல்ல ஓய்ந்துவிட்டன.

**"ஆத்தும பாரமில்லா இருதயம் அமைதியாயிருக்கும்."**

# 26 ஆகஸ்டு

# தேவ சமுகம் பாதுகாப்பானது

"அப்பொழுது யோனா... கர்த்தருடைய சமுகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான்." (யோனா 1:3)

யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகினான். இதுவே தவறான பாதையின் ஆரம்பக்கட்டம், தேவ சமுகம் நம்மோடு இல்லை என்று எப்பொழுது நாம் அறிகிறோமோ, அப்பொழுதே நாம் உணர வேண்டும், நம்முடைய பாதை தவறுகிறது என்று. தான் தவறான பாதையில் இருக்கிறேன் என்பதை அறியாத சிம்சோன் எப்போதும் போல காரியங்கள் நடக்கும் என்று நம்பி ஏமாந்தான். தேவ சமுகத்தை இழந்தது அவனுடைய முதல் தவறு. தேவ சமுகத்தை இழந்ததை அவன் அறியாதிருந்தது இரண்டாவது தவறு. தேவ சமுகத்தை இழந்த பின் நாம் செய்யும் ஊழியமும், ஜீவியமும் அழிவுக்குச் செல்லும் நெடுஞ்சாலைகளே. தேவ சமுகம் நம்மோடு இல்லாததை நாம் உணர்ந்தவுடனேயே, "வழிகளிலே நின்று பூர்வமான பாதை எவையென்று விசாரித்து அவைகளில் நாம் நடக்க வேண்டும்." (எரே.6:16)

பிரயாணத்தின் ஆரம்பத்தில் இயேசு தங்களோடிருப்பார் என்று எண்ணிக் கொண்டு ஒரு நாள் பிரயாணம் போன பின்னரே அவர் தங்களோடில்லை என்பதை மரியாளும், யோசேப்பும் அறிய நேரிட்டது. மீண்டும் அவரைக் கண்டுபிடிக்க மூன்று நாட்கள் ஆகின. ஆவிக்கேற்றபடியும் அஜாக்கிரதையாய் தேவ சமுகத்தை இழப்போமானால் அதைத் திரும்பப் பெறுவது மிக எளிதான காரியமல்ல. "உம்முடைய சமுகம் என்னோடு கூட செல்லாமற்போனால் எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும்" (யாத்.33:15) என்று மோசே தேவ சமுகத்தைக் குறித்து கருத்தாய் இருந்தது போல நாமும் இருக்க வேண்டும். "உமது சமுகத்தைவிட்டு என்னைத் தள்ளாதிரும்." (சங்.51:11) என்று தாவீது கெஞ்சியது போல நாமும் தேவ சமுகத்தை தக்கவைத்துக் கொள்ள ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

யோனா என்ற புறா தேவ சமுகத்துக்கு வெளியே பறந்து கொண்டிருக்கிறது. இது ஒரு பாதுகாப்பற்ற விண்வெளி. ஆகாயத்து பிரபுவாகிய சாத்தான் வெகு எளிதில் இந்தப் புறாவை வீழ்த்தி விடுவான். மனபாரமுள்ள தாவீது, "இந்தப் புறாவைப் போல் சிறகுகள் இருந்தால் நான் பறந்து போய் இளைப்பாறுவேன்" (சங்.55:6) என்று அங்கலாய்க்கிறான். எங்கேயுமே அது பறந்து போக முடியாது "உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது, இரவும் பகலைப் போல் வெளிச்சமாயிருக்கும்" (சங்.139:11,12) என்ற உண்மையை தன் அனுபவத்தில் தாவீது கற்றுக் கொண்டான். இதனைக் கற்றுக் கொள்ளாத யோனாவோ அவர் சமுகத்தை விட்டு தப்பலாம் என்று பாதை தவறி பறக்கிறான். அவன் எத்தனை தூரம் தேவனை விட்டு விலகிப் பறந்தாலும் "அங்கேயும் உமது கை என்னை நடத்தும்; உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்" என்பதே யோனா மறந்து விட்டான். யோனா மறந்ததை நாமும் மறந்து விடக் கூடாது.

**தேவ சமுகம் என்பது பருவ காலத்தில் நம் வீட்டு பலகணி வழியாய் வரும் தென்றலல்ல; நாம் பிரயாசப்பட்டு எழுப்ப வேண்டிய அனல்.**

27
ஆகஸ்டு

# தேவனுடைய விரல்

"கர்த்தர் சமுத்திரத்தின்மேல் பெருங்காற்றை வரவிட்டார்; அதினால் கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று" (யோனா 1:4)

வழிதப்பும் தன் பிள்ளைகளை எச்சரிக்க தேவன் தன் விரலை நீட்டுவார். இந்த எச்சரிப்பை உணர்ந்து சரியான வழிக்குத் திரும்புகிறவன் பாக்கியவான். வழிதப்பிய யோனா தர்ஷீசுக்குக் கப்பல் ஏறினான். அந்தக் கப்பல் தனக்குப் பாதுகாப்பாயிருக்கும் என்று அவன் எண்ணினான். தேவனோ கடலைக் கொந்தளிக்கப் பண்ணினார். இதனை இயற்கையின் சீற்றமென அவர்கள் எண்ணியிருக்கக்கூடும். ஆனால் அந்தக் கடல் கொந்தளிப்பு, தேவனது விரல் என்பதை ஆரம்பத்தில் அவர்கள் அறியவில்லை. பொதுவாக வறுமையும், வாட்டமும் நம்மைச் சந்திக்கும் பொழுது அவை சாத்தானின் கிரியைகளென்று நாம் சபிக்கத் தொடங்குகிறோம். ஆனால் சில சமயங்களில் அவை தேவனது விரல்களாகக் கூட இருக்கக்கூடும். நம்முடைய வியாதிக்கு மருத்துவம் ஒரு விளக்கம் கூறும். நம்முடைய அறிவு மற்றொரு விளக்கத்தைத் தரும். ஆனால் உண்மைக் காரணம் இப்படிக்கூட இருக்கலாம், "அபாத்திரமாய் திருவிருந்து எடுத்ததினிமித்தம் நம்மில் அநேகர் பெலவீனரும், வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறோம்." (1 கொரி.11:30)

யோனா தேவ சமுகத்தை விட்டு விலகியது துணிகரம். தேவனது அழைப்பை அசட்டைப் பண்ணியது மற்றொரு துணிகரம். துணிகரக்கார்கள் தங்கள் செயலுக்குக் கடுமையான விலை கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. யோனா தேவனை விட்டு விலக கப்பலுக்குக் கூலி கொடுக்க வேண்டியதாயிற்று. அவனுடைய கப்பல் கட்டணம், கீழ்ப்படியாமைக்கு அவன் செலுத்திய அபராதத் தொகை. இன்றும் அநேகர் தங்கள் வாழ்க்கைப் பிரயாணத்தில் செலுத்தும் சில கட்டணச் சீட்டுகள் தங்கள் அபராதத் தொலையின் ரசீதுகள்தான் என்பதை அறியாமலிருக்கிறார்கள். நினிவேக்குச் செல்ல அவன் இந்தக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. பாதை தவறினால் சேஷ்ட புத்திர பாகத்தைக் கூட விற்றுத்தான் கூழைக் குடிக்க வேண்டியதிருக்கும். கல்வாரியில் நம்முடைய தேவன் நமக்காகச் செலுத்திய கிரயமாகிய அவருடைய இரத்தத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறவர்கள் தங்கள் வாழ்க்கையில் கடுயைமான விலை கொடுத்தே தீர வேண்டும். இப்படி விலை கொடுத்து வாங்குகிறது நித்திய மரணமே. இந்த நித்திய மரணப் பாதையில் நிர்விசாரமின்றி நடக்கும் மக்களைச் சரியான பாதைக்குத் திருப்ப பல சூழ்நிலைகளின் மூலம் கர்த்தர் தன் விரல்களை நீட்டுகிறார். ஆனால் ஜனங்களோ கவனியாமற் போகிறார்கள். நான் என் கையை நீட்டியும் கேட்க மாட்டோம் என்கிறீர்கள். நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனுமில்லை." (நீதி.1:24) என்று தேவன் மார்க்கம் தப்பிய மக்களைக் குறித்துத் துக்கப்படுகிறார். கப்பல் உடையத்தக்க கொந்தளிப்பைத் தேவன் அனுப்பக் காரணம் யோனாவின் இதயத்தை உடைத்து தனது திருப்பாதங்களுக்கு அவனைத் திரும்பச் செய்வதே.

**பின்மாற்ற ஓட்டத்தை நிறுத்து; விசுவாச ஓட்டத்தை ஓடு.**
**அப்பொழுது தேவனது விரல் உன்னைவிட்டு நீங்கும்.**

28
ஆகஸ்டு

# கர்த்தரின் சிட்சையே தேவனது விரல்

"யோனாவோவென்றால் கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிபோய்ப் படுத்துக்கொண்டு, அயர்ந்த நித்திரைபண்ணினான்." (யோனா 1:5)

தன் வழிநடை வருத்தத்தால் யோனா சோர்ந்து போனான். மாம்சக் களைப்பு அவனைக் கப்பலின் அடித்தளத்தில் கொண்டுபோய் தூங்கச் செய்தது. "கர்த்தருக்குக் காத்திருப்பவர்களோ ஓடினாலும் இளைப்படையார்கள்; நடந்தாலும் சோர்ந்து போகார்கள்." (ஏசா.40:31)

தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்கள் புதுபெலன் அடைவார்களே தவிர சோர்ந்துபோக மாட்டார்கள். பின்மாற்ற யோனாவோ மிகக் களைப்படைந்தான். அவன் கைகளும் கால்களும் தளர்ந்துவிட்டன. ஆவிக்குரிய ஓட்டத்தில் ஓடுகிறவன் ஒருபோதும் பெலவீனமடைவதில்லை. ஊழியத்தையும் மாம்சீகத்தில் செய்யும்பொழுதுதான் பலர் பெலவீனமடைகிறார்கள். சரியாய் ஓய்வு எடுக்க வேண்டும் என்ற தேவனது இயற்கைச் சட்டத்தை மீறி மாம்ச உற்சாகத்தில் இரவும் பகலும் அதிகமான ஊழியத்தைச் செய்தவர்கள் சோர்வுற்று மரணப் படுக்கையில் விழுந்து விடுகின்றனர். "லேவியர்கள் வேர்வை உண்டாக்கத்தக்க தொன்றையும் அரையில் கட்டலாகாது." (எசே.44:18) இதன் ஆவிக்குரிய அர்த்தம் மாம்சீகமான எந்த முயற்சியையும் ஊழியக்காரர்கள் ஊழியத்தில் செய்யக்கூடாது.

சரீரக் களைப்பினால் யோனா அயர்ந்த நித்திரை பண்ணினான். ஆகவே கடல் கொந்தளிப்பை தேவனது விரல் என்று அறியாமற்போனான். நம்முடைய ஜீவியத்திலும் திடீரென்று ஏற்படுகிற வியாதி, தோல்வி, வறுமை, நஷ்டம் இவைகளை அலட்சியமாய் எண்ணாதபடி இவை தேவனது விரலோ என்று பகுத்தறிந்து ஜாக்கிரதையாய் ஜீவிப்போம். கர்த்தரின் சிட்சையே தேவனது விரல். இந்த சிட்சையில் நாம் பழகினால் அது நீதியும் சமாதானமுமான பலனைத் தரும். சிட்சையில் பழகுதல் என்பது அதனைச் சகிப்பதற்கு நம்முடைய சரீரத்தைப் பக்குவப்படுத்துவதல்ல. அந்தச் சிட்சையிலிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்வதே சிட்சையில் பழகுதலாகும்.

"நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு." (வெளி.2:4) என்று தேவனுடைய விரல் நம் அந்தரங்க வாழ்வைச் சுட்டிக்காட்டுமானால் எந்த நிலைமையிலிருந்து விழுந்தோம் என்பதை நினைத்து மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்ய வேண்டும். ஆதி அன்பை இழந்த எபேசு சபையைப் பார்த்து தேவன் கூறுகிறார், "நீ மனந்திரும்பாத பட்சத்தில் உன் விளக்குத் தண்டை நீக்கி விடுவேன்." (வெளி.2:5) அதாவது சபையை மூடிவிடுவேன் என்று தேவனே சொல்லுகிறார். கொந்தளிக்கும் கடல் தன்னைத் தட்டியெழுப்பும் தேவனுடைய கரம் என்று அறியாமல் யோனா உறங்கிக் கொண்டிருக்கிறான். நம்முடைய வாழ்க்கைக் கதவை தேவனுடைய விரல்கள் தட்டுகின்றன என்பதை உணர்வோமா?

**தேவனது சிட்சையை அலட்சியம் பண்ணாதே; மாறாக உணர்ந்து மனந்திரும்பு, அது நீதியும் சமாதானமுமான பலனைத் தரும்.**

29
ஆகஸ்டு

# யோனாவின் பரிதாப நிலைமை

"அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி: யார்நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நீ எங்களுக்குச் சொல்லவேண்டும்; உன் தொழிலென்ன?" (யோனா 1:8)

நீ என்ன தொழில் செய்கிறாய்? இது சராசரி மனிதனைப் பொறுத்தமட்டிலும் அர்த்தமுள்ள கேள்வி. ஆனால் ஒரு தேவ மனிதனை இந்தக் கேள்வி சந்திக்குமானால் அது சாதாரணமான கேள்வியல்ல. ஒரு போர்வீரனின் நடை, உடை, சொல், பாவனை, செயல் இவையனைத்தும் ஒருவனை போர்வீரனென்றே சொல்ல வேண்டும்.

விசுவாசியின் ஒவ்வொரு செயலிலும் பரம அழைப்பின் முத்திரை பதிந்திருக்க வேண்டும். இப்படி தேவ முத்திரையற்ற வாழ்க்கை மிகப் பரிதாபமான ஒன்று. அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியம் பாதாளத்தையே அதிரவைத்தது. அதனால் அந்த அசுத்த ஆவிகள் "பவுலையும் அறிவோம்; இயேசுவையும் அறிவோம்" என்று சாட்சிக் கொடுத்தன. நம்மை சுற்றியிருக்கும் உலகம் நாம் தேவ பிள்ளையென்று நம்மை அடையாளம் காட்ட வேண்டும். உன் பரிசுத்த வல்லமையை நீ வசிக்கும் தெரு அறிந்திருக்கிறதா? கண்டிருக்கிறதா? நீ யாரென்றே அவர்கள் அறியாதவாறு ஜீவித்துக் கொண்டிருக்கிறாயா? உன் தொழிலென்ன என்ற கேள்விக்கு யோனா செல்லியிருக்க வேண்டிய பதில் 'ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்வதே.'

சகோதரனே! சகோதரியே! உன்னுடைய தொழில் என்ன என்ற கேள்விக்கு நீ என்ன பதில் சொல்வாய்? நான் ஒரு நர்ஸ், ஒரு ஆசிரியன், ஒரு எழுத்தாளன் என்று பதில் சொல்கிறாயோ? இங்கிலாந்து தேசத்து பக்தன் வில்லியம் கேரி சொல்லுகிறான், "என்னுடைய பிரதானமான வேலை ஆத்தும ஆதாயம் செய்வதே, என் வயிற்றுப் பிழைப்புக்காக நான் செருப்புத் தைக்கிறேன்" என்று. உன் பிரதானமான தொழிலே வயிற்றுப் பழைப்புக்கென்று இருக்குமானால் நீ பரிதாபமான மனுஷனே. "ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுகிறவன் ஞானமுள்ளவன்" என்று வேதம் சொல்லவில்லையா? நீ தேவனுக்கு ஊழியம் செய்வதையே பிரதானமானத் தொழிலாகக் கொண்டிருப்பாயானால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் நீ கௌரவிக்கப்படுவாய். இல்லையெனில் பரிதாபமான நிலையில் இருப்பாய்.

"அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்." (தானி.12:3) இந்த ஆத்தும ஆதாயத் தொழிலைச் செய்யாதவர்கள் பரலோகத்தில் அக்கினியில் அகப்பட்டுத்தப்பினது போல இருப்பார்கள். இது எத்தனை பரிதாபம். உன் தொழிலென்ன என்ற கேள்விக்கு இப்பொழுதாவது பதில் சொல்ல முடியுமா? நீ தேவனுக்கு ஊழியம் செய்வதையே பிரதானமானத் தொழிலாகக் கொண்டிருப்பாயானால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் நீ கௌரவிக்கப்படுவாய்.

**தேவனுடைய நாளில் ஊழியம் செய்கிறவனுக்கும் ஊழியம் செய்யாதவனுக்கும் உள்ள வித்தியாசம் வெளிப்படும்.**

30
ஆகஸ்டு

# கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி ஓடுகிறவன்

"அவன் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி ஓடிப்போகிறவன் என்று தங்களுக்கு அறிவித்ததினால், அந்த மனுஷர் மிகவும் பயந்து, அவனை நோக்கி: நீ ஏன் இதைச் செய்தாய் என்றார்கள்." (யோனா 1:10)

இப்பொழுதுதான் அவன் அறிக்கையில், ஒரு பிடிப்பை நாம் காணமுடிகிறது. தன் தப்பிதத்தை யோனா ஒத்துக் கொள்வதை நாம் காண்கிறோம். இதைத்தான் அவன் முதலாவது அறிக்கையிட்டிருக்க வேண்டும். எபிரேயன், கர்த்தருக்குப் பயந்தவன் இதெல்லாம் அவனது முந்திய அனுபவங்கள். கர்த்தரைவிட்டு ஓடுகிறவன் இதுதான் யோனாவின் இன்றைய அனுபவம்.

சகோதரனே! சகோதரியே! உன் ஆவிக்குரிய அனுபவம் என்ன? முன்பு ஒரு மணிக்கு 1000 துண்டுப் பிரதிகள் கொடுத்தது சரிதான்! இப்பொழுது ஊழியத்தில் எப்படி இருக்கிறாய்? ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பு. ஆதியை நினைத்து அதிலே மயங்கிக் கிடப்பதில் பயனில்லை. அவைகளையெல்லாம் நினைத்து இன்று அப்படி செய்யத்தவறி விட்டேனே என்ற மனம் திருந்தி திரும்பவும் பழைய ஆவிக்குரிய கிரியைகளைச் செய். நினைப்பதினால் என்ன பயன்? "செய்ய வேண்டாததைச் செய்கிறோம்; செய்ய வேண்டியதையோ நாங்கள் செய்கிறதில்லை... எங்களுக்குச் சுகமேயில்லை" என்று வாரம் வாரம் கோரஸ் பாடுகிறாயா? உனக்கு உணர்வே வராதா?

பாவ உணர்வு இரட்சிப்பைக் கொண்டு வராது. பாவத்தை உணர்ந்து, அறிக்கை செய்து, அவைகளை விட்டுவிடு. கர்த்தருடைய சமூகத்தை விட்டு ஓடிப்போகிறவன் என்பதை அவன் உண்மையிலேயே உணர்ந்திருந்தால், அவன் தேவ சமூகத்தைத் தேடியிருப்பான். அப்படி அவன் தேடவில்லையே. ஆகவே இந்த அறிக்கையும் மாய்மாலமானது.

"நான் கர்த்தரின் வார்த்தையை நிறைவேற்றினேன்" என்று சவுல் அறிக்கையிட்டதுமே, சாமுவேல், "அப்படியெனில் என் காதில் விழுகிற சத்தம் என்ன" என்று கேட்டான். சவுலின் அறிக்கைக்கு சாவு மணி அடிக்கும்படி கீழ்ப்படியாமையின் சத்தம் கேட்டது. நான் ஒரு கர்த்தரின் பிள்ளை என்று நீ அறிக்கையிடும்பொழுது உன் அந்தரங்க வாழ்க்கை "இவன் கர்த்தரின் பிள்ளையே இல்லை" என்று சத்தமிடுகிறதா?

சகோதரனே! சகோதரியே! உன் அறிக்கைகளுக்கும் உன் அந்தரங்க வாழ்க்கைக்கும் தொடர்பு உண்டா? இல்லையேல் வேதம் உனக்கு இடும் செல்லப் பெயர், மாய்மாலக்காரன்! உனக்கு 'ஐயோ!'

**உன் அறிக்கையும் உன் வாழ்க்கையும் இணையாக செல்லட்டும்; அதுவே தேவன் விரும்பும் வாழ்க்கை.**

# 31 ஆகஸ்டு

# தேவனுடைய கரம்

"யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார்; அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தான்." (யோனா 1:17)

மனிதனைச் சந்திக்க தேவன் எப்பொழுதும் ஆயத்தமாகவே இருக்கிறார். "கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாக தம்மைத் தேடும்படிக்கு... அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே" (அப்.17:27) தன்னை மனுஷன் தேடி வரவேண்டும் என்றே தேவன் எப்பொழுதும் விரும்புகிறார். அசுத்தமான பாவ ஜீவியம், வெட்ககரமான பின்மாற்ற ஜீவியம், வஞ்சகமான மாய்மால ஜீவியம் இவைகளில் சிக்கிக் கொண்ட மனிதன், தன்னை நோக்கிக் கூப்பிட்டால் அவனை விடுவிக்க தேவன் எப்பொழுதுமே ஆயத்தமாய் இருக்கிறார். யோனாவையும் தேவன் சந்திக்க ஆயத்தமானார். கடலில் மூழ்கிக் கொண்டிருந்த யோனாவை விழுங்கும்படி ஒரு மீனுக்குக் கட்டளையிட்டார். எந்தச் சூழ்நிலையிலும் ஒரு மனிதனை இரட்சிக்க தேவனாலே முடியும். தற்செயலாக அங்கு வந்த ஒரு மீன் யோனாவை விழுங்கிற்று என்று வேதம் சொல்லவில்லை. ஒரு மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார். மோரியா மலை உச்சியில் ஆபிரகாமுக்காக ஒரு பலி ஆட்டை ஆயத்தப்படுத்தியிருந்த தேவன் கடலடியில் யோனாவுக்காக ஒரு மீனை ஆயத்தப்படுத்தியிருந்தார். தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை.

தேவனுடைய கரத்தில் அகப்பட்ட மனிதன் மீண்டும் உருவாக்கப்படுகிறான். "குயவன் வனைந்து கொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று. அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான்." (எரே.18:4) யோனாவும் தேவனுடைய கரத்தில் தீர்க்கதரிசியாய் உருவாகிக் கொண்டிருக்கும்போதே உடைந்தான். மீண்டும் தேவன் கையில் கிடைத்தான். யோனாவுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசியை உருவாக்க தேவன் சித்தம் கொண்டார். உங்களுக்குள் கிறிஸ்து உருவாகுமளவும் நான் பிரசவ வேதனைப்படுகிறேன் என்று பவுல் சொல்லுகிறாரல்லவா? ஒருவனைக் கிறிஸ்துவுக்குள் நடத்த ஒரு சுவிசேஷகன் வேதனைப்பட வேண்டியிருக்கிறது. அவனைக் கிறிஸ்துவுக்குள் பெற்றவுடன் அவனைக் கிறிஸ்துவுக்குள் வளர்க்க சபை வேதனைப்பட வேண்டியதாயிற்று. மீன் வயிற்றில் யோனா மிகவும் நெருக்கப்பட்டான். தண்ணீரின்றி, ஆகாரமின்றி மிகவும் வேதனைப்பட்டான். தன் நெருக்கத்தில் ஜெபிக்க ஆரம்பித்தான். ஆம், மனிதனுடைய நெருக்கம், பாரம், கவலை இவைகள் மனிதனை ஜெபிக்கவே தூண்ட வேண்டும்.

தேவகரம் உன்னைப் பின் தொடர்ந்து வரும் அன்பின் கரம். உன்னை இழுத்து அக்கினிக்கடலில், ஆழத்தில் தூக்கி எறியத் துடிக்கும் துணிகரக்கரமல்ல கர்த்தருடைய கரம். பாதாளத்திலும் தேவனது கரம் யோனாவைத் தொடுகிறது. கெட்ட குமாரனைத் தூரதேசத்தில் குறைவுபட வைத்தது தேவ கரமே! அப்படியாயினும் அவன் தன் தகப்பன் வீட்டை நினைக்க வேண்டுமே என்று தேவகரம் அவனை நெருக்கடிக்குள்ளாக்கிற்று. சகோதரனே! சகோதரியே! உன் நெருக்கத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடு; உனக்கு உதவி செய்யும் தேவகரம் இறங்கி வரும்.

**தேவனுடைய கரத்தில் அகப்பட்ட மனிதன் உருவாக்கப்படுவான்;
அவரை விட்டுப் பின்வாங்கிச் செல்லும் மனிதன் நெருக்கப்படுவான்.**

1
செப்டம்பர்

# நான் உன்னோடு இருப்பேன்

"நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன். நீ ஆறுகளைக் கடக்கும்போது அவை உன் மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய். ஆக்கினி ஜுவாலை உன் பேரில் பற்றாது. (ஏசா 43:2)

இஸ்ரவேலர் கடவுளுக்கு விரோதமாக செயற்பட்டபொழுது, கடவுள் அவர்கள் மீது மிகவும் கோபப்பட்ட போதிலும் அவர்களை நித்தியமாய் கைவிடவில்லை. மாறாக, அவர் அவர்கள் மீது மிகுந்த அன்பு பாராட்டினார். தான் அவர்களை மீட்டுக் கொண்ட காரணத்தினால் அவர்களைத் தண்டித்து வெறுத்துத்தள்ளாமல் அவர்களை மிண்டும் மீண்டும் நேசிக்கவே செய்தார்.

என் அருமையான சகோதரர்களே, சகோதரிகளே! கடந்த நாட்களில் சடுதியான அழிவுக்கும் மரணத்துக்கும் நாம் தப்பியது முற்றிலும் கடவுளின் கிருபையே. உலகில் எல்லா சிலாக்கியங்களிலும் மேலானது கடவுள் நம்மோடிருப்பதே.

கடவுள் நம்மோடிருப்பது வெறும் நம்பிக்கையல்ல; ஆழமான அனுபவம். பாவச் செயல்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது, கடவுளின் சித்தத்திற்கு மாறாக நாம் செயற்படும்பொழுது கடவுள் நம்மோடிருக்கமாட்டார். "அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்ந்து என் முகத்தைத் தேடுமட்டும் நான் என் ஸ்தானத்துக்குத் திரும்பிப் போய்விடுவேன்" (ஓசியா 5:15) என்று கடவுள் மனந்திருந்தாத பாவிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறாரே! சத்தியப்பாதையில் நாம் நித்தமும் நடந்தால் அவர் நம்மோடிருப்பது நிச்சயமே. கடவுளின் சமூகம் நமக்கு அரணும் ஆறுதலுமாகும்.

ஆபத்துகள் உங்களைப் பயமுறுத்தும்பொழுது கடவுளின் சமூகம் உங்களை நிச்சயம் காக்கும். தண்ணீர்களை நீங்கள் கடக்கும்பொழுது அவைகள் உங்கள் மேல் புரளுவதில்லை என்று வேதம் சொல்கிறதே. செங்கடலைப் பிளந்து வழியை உண்டாக்கினவர் நமக்கும் பாதையை உண்டாக்குவார். யோர்தானை வற்றிப்போகப் பண்ணியவர் நம் பிரச்சனைகளைக் கடந்து போகப்பண்ணுவார்.

பிசாசின் உக்கிர அக்கினி நமக்கு எதிரே பற்றி எரிந்தாலும் நாம் அந்த அக்கினியில் வெந்துபோகவே மாட்டோம். வேதனையின் அனுபவங்கள் உண்டு. ஆனாலும் நீங்கள் பத்திரமாய்க் காக்கப்படுவீர்கள்.

**நாம் தைரியமாய்ச் சொல்ல வேண்டியது.**
**கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன்**

2
செப்டம்பர்

# அவர் சமூகம் தரும் பாதுகாப்பு

"என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்."(யாத் 33:14)

கர்த்தர் உங்களோடிருந்தால் எல்லா சூழ்நிலைகளிலும் உங்கள் ஆத்துமாவில் இளைப்பு உள்ளவர்களாய்ச் சோர்ந்து போகாதபடிக்கு உங்கள் இதயங்களுக்கு இளைப்பாறுதலைத் தருவார். ஆகவே இளைப்பாறுதலுக்காக முயற்சிக்காமல் கர்த்தர் உங்களை விட்டு விலகாமல் என்றும் அவர் உங்களோடு இருக்கும்படி கடவுளின் சமூகத்தை உங்களுக்குள் காத்துக்கொள்ளுங்கள்.

நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்கு அடையாளமே நமது கர்த்தர் நம்மோடு வருவதுதானே. "உமது மக்களுக்கு உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது எதினால் அறியப்படும்? நீர் எங்களோடு வருவதினால் அல்லவா" (யாத் 33:16) என்று மோசே கூறுகிறாரே.

ஆகவே அவர் நம்மோடு இல்லாவிட்டால் உலகத்தார் நம்மைக் கடவுளின் பிள்ளைகள் என்று ஒத்துக்கொள்ள மாட்டார்கள். கடவுள் நம்மோடிருந்தால் நாம் பயத்திலும், திகிலிலும், தோல்வியிலும் இருக்கமாட்டோம். மாறாக, நம் ஆத்துமாவில் இளைப்பாறுதல் இருக்கும். நாம் எப்படி இருக்கிறோம்?

எதிரிடையான சூழ்நிலைகளை சந்திக்கிறீர்களா? நீங்கள் அஞ்சி நடுங்கத்தக்கதாக பயங்கரமான சூழ்நிலைகள் உங்கள் முன் காணப்படுகின்றனவா? உங்கள் வாயைத் திறந்து பெருந்தொனியாய் கர்த்தரைத் துதியுங்கள்; பாடுங்கள். அப்பொழுது அவரது சமூகத்திலே நீங்கள் நினைவுகூரப்படுவீர்கள். உங்கள் எதிர்சூழ்நிலைகள் விலகி ஓடும், நீங்களோ பகைவர் கைகளினின்று விடுவிக்கப்படுவீர்கள். (எண் 10:9)

கர்த்தரின் சித்தத்திற்குள் நாம் இருந்தால் மட்டுமே கர்த்தர் நம்மோடு இருப்பார். நாம் மனம் போனபடி வாழ்ந்துக் கொண்டே கர்த்தர் நம்மோடு இருப்பார் என்று எதிர்பார்ப்பது மிகவும் அறியாமை.

கர்த்தரின் சமூகம் அதாவது கடவுள் நம்மோடிருந்தால் நாம் மகிழ்ச்சியாயிருப்போம். "உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும் உம்முடைய வலது பாரிசத்தில் பேரின்பமும் உண்டு" (சங்16:11) என்பது சத்திய வார்த்தைகளெல்லவா?

**கடவுள் நம்மோடு நடப்பது ஜீவமார்க்கம். அந்த ஜீவ மார்க்கத்தில் நம்மை நடத்தும் நமது கடவுள் நம் வழிகாட்டி.**

3
செப்டம்பர்

# நாம் இயற்கைக்கு நல்ல உக்கிராணக்காரராயிருக்க வேண்டும்.

"தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதை பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் (ஆதி 2:15)

மனிதன் கடவுளைக் பணிகிறவன் மாத்திரமல்ல. கடவுள் படைத்த உலகிற்கு பணிவிடைக்காரர்களாக இருக்க வேண்டும். உலகை ஆள்வது மாத்திரமல்ல. பண்படுத்தவும் காக்கவும் மனிதனுக்கு கட்டளையிட்டார். ஆகவே இயற்கையைச் சேதப்படுத்துவது பாவம், மனிதன் இயற்கை விதிகளை மீறுவது ஆபத்தை விளைவிக்கிறது. நாம் கடவுளைத் தொழ வேண்டும். மனிதனை நேசிக்க வேண்டும். பொருள்களை கடவுளின் மகிமைக்காகப் பயன்படுத்த வேண்டும். நமது பரலோகத் தரிசனம் உலகத்திற்கு நம்மைக் குருடாக்கிவிடக்கூடாது.

கடவுளது இயற்கைச் சட்டங்களை நாம் மதிக்க வேண்டும். "தாயானது குஞ்சுகளின் மேலாவது முட்டைகளின் மேலாவது அடைகாத்துக் கொண்டிருந்தால், நீ குஞ்சுகளோடே தாயையும் பிடிக்கலாகாது. தாயைப் போகவிட்டு குஞ்சுகளை மாத்திரம் எடுத்துக்கொள்ளலாம். அப்பொழுது நீ நன்றாயிருப்பாய். உன் நாட்களும் நீடித்திருக்கும் "(உபா 22:6). என்று கர்த்தர் சொல்கிறார். உயிரினங்களை கட்டளையை மீறி அழித்தால் நாம் நன்றாக இருக்கமாட்டோம்.

ஏழு வருடத்திற்கு ஒரு வருடம் நிலத்தை ஓய்வாக விட்டுவிட வேண்டும் என்பதுவும் கர்த்தரின் கட்டளை. அப்படி இஸ்ரவேலர் செய்யாதபடியால் அவர்கள் அந்நிய நாட்டிற்குச் சிறைப்பட்டுப் போனார்கள் என்று வேதம் எச்சரிக்கிறது.

இன்று நிலத்தைக் கெடுக்கும் பிளாஸ்டிக் போன்ற பொருள்களை நிலத்தில் தொடர்ந்து எறிகிறோமே, இது நியாயமா? நாம் நிலத்தைக் கெடுத்தால் அது கடவுளது கட்டளைக்கு எதிரான செயல். ஆகவே இயற்கை நமக்கு எதிராகச் சீறுகிறது.

ஒவ்வொரு நாளும் 100 வகை இனச் செடிகள் அழிகின்றன. மரங்கள் வெட்டப்படுகின்றன. ஆழ்கிணறுகள் தோண்டப்படுகின்றன. காடுகள் அழிகின்றன. ஆற்றில் மண் எல்லையை மீறி வாராப்படுகின்றன. அணுகுண்டுகள் வெடிக்கப்படுகின்றன. இயற்கைப் பாழடைகிறது. பூமி அதிர்கிறது. நிலம் சரிகிறது. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றன. மனிதனே, நீ நிலத்தைப் பண்படுத்தத் தவறிவிட்டாய். இயற்கை உன்னைத் தண்டிக்கத் தொடங்குகிறது.

**நாம் இயற்கையை அழித்தால்**
**கடவுளின் கோபம் நம்மேல் எரியும்.**

# கற்க வேண்டிய பாடங்கள்

**4**
**செப்டம்பர்**

"போதகர் வந்திருக்கிறார்; உன்னை அழைக்கிறார்" (யோவான் 11:28)

மார்த்தாள், மரியாளை அழைக்கிறாள். நெருக்கடியான அந்த நேரத்திலும் இயேசுவிடம் போதகங்களைக் கற்றுக் கொள்ளவே மார்த்தாள் தன் சகோதரியை அழைக்கிறாள். எல்லா சூழ்நிலைகளிலும் நாம் சில பாடங்களைக் கற்க வேண்டும். எதிர்ப்பு, போராட்டம், பசி, தாகம் போன்ற சூழ்நிலைகளில் "மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன்" (பிலி4:11) என்று பவுல் மிக முக்கியமான பாடத்தையும் கற்றுக் கொண்டார்.

முதற்பாடம் : "இயேசு கண்ணீர் விட்டார்." (யோவன் 11:35)

நம்முடைய சுக துக்கங்கள் இயேசுவை மிகவும் பாதிக்கிறது. அவர் தொலைதூரத்தில் இருந்து வேடிக்கைப் பார்க்கிற தேவன் அல்ல. "நம் எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்" (ஏசா 63:9) என்று வேதம் அறிவிக்கிறது. ஆம்! நம்முடைய வேதனைகள், துயரங்களை அவர் நீக்குகிறவர் மாத்திரமல்ல. அதில் அவரே பங்கெடுக்கிறவராகவும் இருக்கிறார். ஆகவே மார்த்தாளும் மரியாளும் அழுதபொழுது அவரும் அழுதார். உன் கண்களில் கண்ணீர் வடியும்பொழுது கர்த்தரின் கண்கள் உலர்ந்து இருப்பதில்லை. இந்த உண்மையை நாம் முதலாவது கற்றுக் கொள்ள வேண்டும்.

பாடம் இரண்டு: "கல்லை எடுத்துப்போடுங்கள்." (யோவான் 11:39)

கல்லறையினின்று இப்பொழுது கல்லை எடுப்பது கடுமையான விளைவை ஏற்படுத்தும். லாசருவை அடக்கம் பண்ணினபொழுது இருந்த அமைதியான தோற்றம் முற்றிலும் விகாரமாக மாறி இருக்கும். அந்தப் பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசும். ஆகவே இப்பொழுது இயேசுவுக்குக் கீழ்ப்படிவது மிகவும் மோசமான விளைவை உருவாக்கும். ஆகவே மரியாளின் "கல்லைப் புரட்ட வேண்டும்" என்பது சரியான ஆலோசனைதான். ஆனால் "லாசரு உயிரோடு எழுந்திருப்பான்" என்று இயேசு சொன்ன பிறகு மரியாளின் எதிரிடையான அறிக்கை தவறானது. நம்முடைய அனுபவத்திற்கும், அறிவிற்கும் பொருத்தமற்றதாக இருப்பினும் கர்த்தர் சொல்வதையே நம்ப வேண்டும். நம்முடைய அனுபவம் தரும் செய்தியைத் தள்ளிவிட்டு கர்த்தர் தரும் செய்தியை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவும் நாம் கற்க வேண்டிய முக்கியப் பாடம்.

பாடம் மூன்று: "எப்பொழுதும் விசுவாசி" (யோவான் 11:40)

"நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்" என்பது கர்த்தர் கற்றுத் தரும் முக்கிய பாடம். மார்த்தாளின் மனதில் வீசிக்கொண்டிருந்த சூறாவளிக் காற்றை எதிர்த்து கழுகைப்போல அவள் உள்ளம் பறக்க ஆரம்பித்தது. ஆம்! அவள் விசுவாசிக்கத் தொடங்கினாள். வான் கோழியைப்போல (அதுவரை) பதுங்கிக் கிடந்தாலும் கழுகைப் போல செட்டைகளை அடித்துப் பறக்க ஆரம்பித்தாள். கர்த்தரின் மகிமையைத் தரிசித்தாள். நீங்களும் இந்தக் கழுகை போலப் பறக்க ஆரம்பியுங்கள்; கர்த்தரின் மகிமையைக் காண்பீர்கள்.

5
செப்டம்பர்

# தவறுகளை திருத்துங்கள்

"நீ பயித்தியக்காரி பேசுகிறது போலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ" (யோபு 2:10)

"ஒருவருக்கு ஒருவர் தவறுக்கு துணை போகாமல் ஒருவரை ஒருவர் திருத்துவதே தெய்வ பயமுள்ள குடும்பம். தேவனைத் தூஷித்து ஜீவனை விடும், என்று சொன்ன மனைவியோடு சண்டை போடாமல். நீ பயித்தியக்காரி பேசுகிறது போலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ என்று தன் மனைவியை அன்புடன் யோபு திருத்தினான்.

காணிக்கையை வஞ்சித்த அனனியாவைத் திருத்துவதற்குப் பதில், அவன் தவறு செய்ய சப்பிராள் உடந்தையாயிருந்து குடும்பத்தை மரணக் கண்ணியில் விழவைத்தாள். நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கும் பிலாத்துவை, "அந்த நீதிமானுக்குக் கெடுதி ஒன்றும் செய்யாதிரும் (மத்27:19) என்று பிலாத்துவின் மனைவி தன் கணவரைத் தக்க சமயத்தில் எச்சரித்தாள். இவையெல்லாம் குடும்பத்தில் மறக்க முடியாத பாடங்கள்.

சம்பாத்தியத்திற்கு மிஞ்சின வருமானம் குடும்பத்துக்கு வருமெனில், கணவன், மனைவி, பிள்ளைகள் மிகவும் எச்சரிக்கையுடன் இருந்து அதனைத் தடுக்க வேண்டும். வருமானத்திற்கு மிஞ்சிய பணத்தை புருஷன் கொண்டு வரும்பொழுது புன்னகையுடன் அவனை வரவேற்று. அவன் தரும் பொன் வளையல்களை இன்று மனைவி அணிந்தால், நாளை கணவன் இரும்பு வளையல்களை (விலங்குகள்) அணிய அவளே காரணமாகிறாள்.

எகிப்திலிருந்து ஆபிராமிற்குக் கிடைத்த பரிசுகளில் மறைந்து கிடந்தாள் ஆகார். இந்தத் தவறான சம்பாத்தியம் ஆபிரகாமின் விட்டில் கடும் பிரச்சனையை உருவாக்கி, இன்று உலக அமைதியையே கேள்விக் குறியாக்கிவிட்டது. பணம் வந்தவுடன் "இது கடவுளின் ஆசீர்வாதம்" என்று எண்ணுவது மனித இயல்பு. சோதோமை கர்த்தரின் தோட்டம் என்று லோத்து எண்ணியது மிகப் பெரிய தவறு. குடும்பம் தன் வருமானத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

தேவனுடைய பிள்ளைகள் மற்றவர்களுக்கு ஓர் முன்மாதிரியாக இருக்கவேண்டும். நம்முடைய குடும்பத்தை ஜாக்கிரதையாக கவணிக்க வேண்டும். தவறுகளை சுட்டிக் காட்டி திருத்தவேண்டும், இவ்வாறு இருக்கவேண்டுமென்றால் நிச்சயமாக நாம் பரிசுத்த ஜீவியத்தோடுயிருக்க வேண்டும்.

**நம்முடைய கரங்களும், இருதயமும்
தேவனுக்கு முன்பாக குற்றமற்றதாயிருப்பதாக.**

6
செப்டம்பர்

# குடும்பத்தில் பிள்ளைகள்

என் பிள்ளைகள் சத்தியத்தில் நடக்கிறார்கள் என்பதைப் போன்று வேறு சந்தோஷமே இல்லை. (3யோ 4)

குடும்பத்தில் பிள்ளைகள் முக்கியமானவர்கள். பிள்ளைகளைக் குறித்த மிகப்பெரிய சந்தோஷம், அவர்கள் சத்தியத்தில் நடக்கிறார்கள் என்பதே. டாக்டர், எஞ்சினியர், கணிப்பொறி வல்லுனர் என்று பிள்ளைகள் சிறந்து விளங்குவது நல்லதுதான். ஆனாலும் வேதம் சொல்லும் சந்தோஷத்தினால் குடும்பம் நிறைந்திருக்க வேண்டும்.

பனிரெண்டு வயதில் இயேசு வேதப் பண்டிதர்களோடு தர்க்கம் செய்யும் அளவிற்கு (மனிதனாக) வேதத்தைக் கற்றிருந்தார். சகோதரனே, சகோதரியே! உங்கள் பிள்ளைகளின் உலகப் படிப்பிற்காக எத்தனையோ பிரயாசம் எடுக்கிறீர்களே, அவர்களுக்கு வேதம் தெரியவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்கள் பிள்ளைகளின் ஆவிக்குரிய மந்த நிலை உங்களைப் பாரப்படுத்துகிறதா?

யோபினுடைய வீட்டில் விருந்து நடக்கிறது. யோபினுடைய பத்துப் பிள்ளைகளும் அந்த விருந்தில் கலந்து கொண்டனர். அவர்கள் தகப்பனை விருந்துக்கு அழைக்கவில்லை. சிரித்து, மகிழ்ந்து விருந்து நேரத்தைக் கழித்த தமது பிள்ளைகள் ஒருவேளை கடவுளுக்கு விரோதமாக பாவம் செய்திருப்பார்களோ என்று யோபு சந்தேகப்பட்டான். அதிகாலமே எழுந்து, தன் பிள்ளைகளை அழைத்தனுப்பி, தன் பிள்ளைகளுக்காக சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினான்.

தன் பிள்ளைகள் பாவம் செய்தார்கள் என்று நிச்சயமாய் தெரியாதிருந்தும், செய்திருக்கக் கூடும் என்ற பயத்தில் யோபு தன் பிள்ளைகளுக்காகப் பலி செலுத்தினான். தன்னுடைய பிள்ளைகளுடைய பரிசுத்த வாழ்க்கையைக் குறித்து அவன் அவ்வளவு எச்சரிக்கையாக இருந்தான். அருமையானவர்களே, உங்களுடைய பிள்ளைகளுடைய பரிசுத்த வாழ்க்கையைக் குறித்து எச்சரிக்கையாகயிருக்கிறீர்களா? உங்களுடைய பிள்ளைகளுக்கு நீங்கள் முன்மாதிரியாக இருக்கிறீர்களா? உங்கள் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாக இருக்கவேண்டுமெனில் அவர்களை சத்தியத்தில் பழக்குங்கள். எதை இழந்துபோனலும், பரலோகத்தை இழந்துபோகாதபடி பரிசுத்த நடத்தையில் பிள்ளைகளை நடத்துங்கள்.

பிள்ளைகளை சிட்சிக்காவிட்டால் அவர்கள் கடவுளுக்கு சத்துருக்களாக வளருவார்கள். ஆடுகளைப் போல வளரவேண்டியப் பிள்ளைகள் பாசான் தேசத்து எருதுகளைப்போல வளர ஆரம்பிப்பார்கள்.

**குடும்பத்தை விட்டு கர்த்தர் விலகிப் போவதற்கு முன்பு சிட்சையினால் பிள்ளைகளை சீராக்குங்கள்.**

| 7 செப்டம்பர் |
|---|

# மனத்தடைகள்

"அவர் அவர்களை நோக்கி, நீங்கள் இப்பொழுது மொண்டு பந்தி விசாரிப்புக்காரனிடத்தில் கொண்டு போங்கள் என்றார்". (யோ 2:8).

அவர்களுக்குத் தெரிந்திருக்கிறபடி ஜாடிகள் தண்ணீரால் நிறைந்திருந்தன. இந்தத் தண்ணீரை எடுத்து பந்தி விசாரிப்புக்காரனிடம் எப்படிப் போவது என்ற எதிர் சிந்தனை அவர்களிடத்தில் வந்திருக்கலாம். திராட்ச ரசத்திற்காக காத்திருக்கும் பந்தி விசாரிப்புக்காரனிடம் வெறும் தண்ணீரைக் கொண்டு போனா௳ அவன் கோபப்படுவானே? கோபத்தில் அவன் வேலையை விட்டே நீக்கிவிடுவானோ? இவையெல்லாம் மனத்தடைகள். இந்த மனத்தடைகளைத் தாண்டி அவர்கள் பந்தி விசாரிப்புக்காரனிடம் கொண்டு போனார்கள். அது ஆசீர்வாதமாக மாறிற்று.

சகோதரனே, சகோதரியே! கர்த்தருக்குக் கீழ்ப்படிய முடியாதபடி உங்களுக்கு பல மனத்தடைகள் இருக்கலாம். கர்த்தர் சொல்கிறபடி நாம் பொறுமையாயிருந்தால் என்னை இயலாதவன் என்று எண்ணிவிடுவார்களே? கர்த்தர் சொல்லுகிறபடி என் பொருளை நான் கொடுத்துவிட்டால் நான் இல்லாமையினால் கஷ்டப்படுவேனோ? கர்த்தர் சொல்லுகிறபடி என் மனைவி மீது நான் அதிக அன்புகூர்ந்தால் என்னை அவள் ஏமாளி என்று எண்ணுவாளே? கர்த்தர் சொல்லுகிறபடி என் புருஷனுக்குக் கீழ்ப்படிந்தால் என்னை மேலும் அடிமையாக்கிவிடுவாரோ?

இப்படியெல்லாம் பல மனத்தடைகள், அந்த வேலைக்காரருக்கு ஏற்பட்டது போல ஏற்படலாம். இந்த மனத்தடைகளைத் தள்ளி அவர்கள் இயேசுவிற்குக் கீழ்படிந்தது போல நீங்களும் கீழ்ப்படியுங்கள். அவர்கள் தைரியமாய் பந்தி விசாரிப்புக்காரனைச் சந்தித்ததுபோல நீங்களும் பிரச்சனைகளைத் தைரியமாய்ச் சந்தியுங்கள். அத்திருமண வீட்டில் புதுரசத்தின் வாசனை காற்றோடு கலந்து வருகிறது. அந்தக் காற்றில் மிதந்து வரும் செய்தி என்னவெனில், "இயேசு தேவ குமாரன்" நாம் எதிர்பார்த்திருக்கிற மேசியா இவர்தான் என்று அற்புதத்தின் காற்று வீசியது.

அத்திருமண வீட்டில் கடைசி வேளையில் இந்தப் புது ரசம் பரிமாறப்பட்டது. இந்த நல்ல ரசம் இதுவரைக்கும் எங்கேயிருந்தது? இந்த நல்ல ரசத்தை இதுவவரைக்கும் மணவாளன் ஒளித்து வைத்திருந்தார் என்று பந்திவிசாரிப்புக்காரன் நினைக்கிறான். ஆனால் மணவாளன் உண்மையில் வைத்திருந்தது வெறும் பாத்திரமே. இந்தப் புதுரசம் பரலோகப் பிதாவின் திட்டத்தில் மறைந்திருந்தது. உங்கள் வீட்டில் அநேக வெறுமைகள் இருக்கலாம். குறித்த நேரத்தில் இந்த வெறுமையானப் பாத்திரங்களை எல்லாம் பரலோகம் புது ஆசீர்வாதங்களினால் நிரப்பும்.

**"உங்கள் வாழ்க்கையிலும் அற்புதத்தின் காற்று வீசட்டும்."**

# 8 செப்டம்பர்

## கண்ணீரின் பாத்திரம்

"உம்மடைய வேதத்தை மனுஷர் காத்து நடவாதபடியால் என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஒடுகிறது."
(சங் 119:136)

பாவ மனிதர்களுக்காக அழுகிறவன் யோபு, உடன்படிக்கைக்குத் தூரமான மக்களுக்கு மத்தியில் யோபு வாழ்ந்தான். யோபு என்றால் அழுகை என்று ஒரு பொருள் உண்டு. தன் காலத்தில் தெய்வ பயமில்லாமல் வாழ்ந்த மக்களை எண்ணி நிச்சயமாய் யோபு அழுதிருப்பான். யோபு மற்றவர்களுக்காக அழுதான் என்று வேதம் வெளிப்படையாகச் சொல்லவில்லை. அவன் பெயர் அழுகை என்றும் பொருள்படுகிறபடியால் கண்ணீர்த்தாரைகள் உள்ள மனிதன் யோபு.

சகோதரனே, நீ யாருக்காக அழுகிறாய்? பேச மாட்டாத விக்கிரகத்தின் முன் நின்று என்னைக் காப்பாற்று என்று மன்றாடும் கோடிக்கணக்கான மக்களை எண்ணி அழுகிறாயா? பட்டப்பகலில் பயங்கர கொள்ளை, சின்னஞ்சிறு மகளிர் மீது பாலியல் பலாத்காரம். இராக்காலங்களில் நடக்கும் துர்மனசாட்சியின் கொடுமையான நாடகங்கள். உயர்ந்த பதவியில் இருப்போரின் வஞ்சக செயல்கள் இவைகள் நிறைந்த நமது நாட்டை எண்ணி அழுகிறாயா? நிச்சயமாய் யோபு ஊத்ஸ் தேசத்திற்காக அழுதிருப்பான்.

"இரவும் பகலும் நதியளவு கண்ணீர்விடு; ஓய்ந்திராதே. உன் ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு" (புல 2:18,19) என்று வேதம் நம்மை அழுகையின் பள்ளத்தாக்கிற்கு அழைக்கிறது. சகோதரனே, சும்மா இருக்காதே!

"அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் மாமன்னனையும் வாரிக்கொண்டு போய்விடும்" என்று உலக ஞானி கூறுகிறான். அக்கிரமம் ஒழிய ஆண்டவரின் பாதத்தில் அழு அநியாயம் அகல அவர் கரங்களைப் பற்றிக்கொண்டு கதறி அழு.

**மார்க்கந்தப்பி நடக்கும் மக்கள் பூர்வ வழியை அறிந்திட புலம்புவாயா கர்த்தர் சமூகத்தில்?**

9
செப்டம்பர்

# கர்த்தரின் பிள்ளைகளின் விருந்து

"இதோ, சகோதரர்கள் ஒருமித்து வாசம்பண்ணுவது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது" (சங்133:1)

இப்படி வேதம் மகிழ்கிற வீடு யோபுவின் பிள்ளைகளின் வீடு. ஏதேனும் பிரச்சனை இருந்தால் ஒருவருக்கொருவர் பேசித்தீர்த்துக் கொள்ளும் நல்ல வாய்ப்பு இருந்தது. கருத்து வேறுபாடு இருக்குமெனில் பேசித்தீர்த்துக் கொள்வதுதான் சரி. ஆனால் பல வீடுகளில் மௌன நிலைக்குத் திரும்பி விடுகின்றனர் இதனால் பயங்கரச் சூறாவளியாய் எழும்பி வரும் சண்டைகள் அடங்கிவிட்டாலும் திடீரென்று அக்கினி கொட்டும் எரிமலைகளாகவே உ வர்கள் இருதயங்கள் மாறிவிடுகின்றன. யோபுவின் பிள்ளைகளின் இருதயங்கள் தெளிவான இருதயங்கள். எப்பொழுதும் மனம்விட்டுப் பேசுகின்ற அருமையான கர்த்தரின் பிள்ளைகள்.

பரிசுத்த பவுல் சிறையில் இருக்கிறார், அவருடைய உள்ளம் சபையிலுள்ள ஒரு பிரச்சனையைச் சுற்றிவட்டமிடுகிறது. எயோதியாள், சிந்திகேயாள் என்ற இரு ஆவிக்குரிய சகோதரிகள் ஒருவருக்கொருவர் பேசமாட்டார்கள். இது பவுலின் உள்ளத்தை வறுத்தியது. உடனே தன் சிறையிருப்பிலிருந்து பிலிப்பு சபைக்கு எழுதுகிறார். "கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்தி சொல்கிறேன்" (பிலி4:2) இரண்டு விசுவாசிகள் பேசாதிருக்கும் பகைமையைப் பரிசுத்த பவுலினால் சகித்துக்கொள்ள முடியவில்லை. பக்தன் யோபுவிற்கு இப்படிபட்ட மன வருத்தமே கிடையாது. தன் பிள்ளைகள் பகையின்றி வாழ்ந்தார்கள்.

தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களோடே போஜனம் பண்ணும்படி அழைப்பார்கள் (யோபு 1:4) தங்கள் தங்கள் முறைப்படி சகோதரர்கள் ஒரு வீட்டில் கூடும்பொழுது சகோதரிகளுக்கு மட்டும் பிரத்தியேகமாக அழைப்பு கொடுக்கப்பட்டன. சகோதரிகள் சீக்கிரம் உணர்ச்சி வயப்படுகிறவர்கள். கோபம், வெறுப்பு இவைகள் அவர்களுக்கு எவ்விதத்திலும் வந்துவிடக் கூடாது என்று பிரத்தியேகமான அழைப்பைச் சகோதரிகளுக்கு கொடுத்தனர். சகோதரனே, எளிதில் உணர்ச்சிவயப் படுகின்றவர்களுக்கு விசேஷமானக் கவனத்தைச் செலுத்து. சிலர் எப்பொழுதும், எதனையும் எதிர்சிந்தனையோடு நோக்குவார்கள். சிலர் சந்தேகப்பார்வையோடு இருப்பார்கள். யாவருக்கும் நீங்கள் மனம் திறந்த பார்வையோடு அழைப்பைக் கொடுங்கள். குடும்ப ஒற்றுமையில் கவனமாயிருங்கள்.

விருந்து மனமகிழ்ச்சியின் நேரம். கடவுளைக்கூட மறந்துவிடும் சூழ்நிலை ஏற்பட்டுவிடலாம். விருந்து வேளையில் ஒருவேளை தன் பிள்ளைகள் தங்கள் இருதயத்தில் கடவுளைத் தூசித்து பாவஞ்செய்திருப்பார்களோ என்று தன் உள்ளத்தில் மிகுந்த எச்சரிப்பை எடுத்தான் யோபு. (யோபு 1:5). விருந்து முடிந்த மறுநாள் அதிகாலையிலே அவர்களுக்கு பாவ நிவாரணப்பலி செலுத்தி தன் பிள்ளைகள் பாவத்தினால் மூடப்பட்டிருக்கக்கூடாது என்று பலியினால் மூடினான்.

**ஒற்றுமையான குடும்பம் தேவன் விரும்பும் பரலோகமே.**

**10**
**செப்டம்பர்**

# விசுவாசத்தை தந்திரம் எதிர்க்கிறது

"...ராஜா கட்டளை பிறப்பித்து, உறுதியான தாக்கீது செய்யவேண்டுமென்று ராஜ்யத்தினுடைய எல்லாப் பிரதானிகளும், தேசாதிபதிகளும், பிரபுக்களும், மந்திரிமார்களும், தலைவர்களும் ஆலோசனைபண்ணிக்.... (தானி 6:7.8)

தந்திரகாரர்கள் தானியேலைக் குற்றவாளியாக்கப் புது சட்டங்களை உருவாக்க முற்பட்டனர். நீங்கள் விசுவாசத்தில் முன்னேறும்பொழுது சாத்தான் தன் தந்திரதிட்டங்களினால் உங்களை எதிர்ப்பான். எதிர்ப்புகள் சட்டத்தின் உருவில் வந்தால் நாம் எளிதிற் குற்றவாளிகளாகி விடுவோம். ஊழியத்தைக் குற்றப்படுத்த அரசு நினைத்தால் மதமாற்றத்தடை சட்டம் கொண்டுவரும்.

திடீர் திடீரென்று ஏற்படும் சட்டம் உங்கள் எதிர் காலத்தை கேள்விக்குறியாக்குகிறதா? அலுவலகத்தில் பிறப்பிக்கப்படும் திடீர் உத்தரவுகள் உங்களை நிலைகுலையச் செய்கிறதா? பயப்படாதீர்கள். கர்த்தர் பார்த்துக் கொள்வார். நீ உண்மையான தேவப்பிள்ளையாக இருப்பதினால் உனக்கு விரோதமாக தந்திரம் செய்கிறார்களா? கூட்டம் கூட்டமாக ரகசியமாய்ப் பேசி திட்டம் தீட்டுகிறார்களா? உனக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். ஆகவே விசுவாசத்தைத் தளரவிடாதே.

சில சமயங்களில் உங்கள் தகுதி, திறமை இவற்றையெல்லாம் மனதிற் கொள்ளாமல், உங்களை அற்பமாய் சிலர் எண்ணுவார்கள். பரிசுத்த பவுலை இந்த வாயாடி என்று ஏளனம் பேசினார்கள். நீங்கள் எங்கே, எப்படி இருக்கிறீர்கள் என்பதல்ல முக்கியம். கர்த்தர் உங்களோடு இருக்கிறாரா என்பதே காரியம். கடவுளுடைய மக்கள் பாடுகள், இன்னல்கள், உபத்திரவங்கள் இவற்றிற்கு ஆயத்தமாகவே இருக்கவேண்டும். "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்."(2 தீமோ 3:12)

சகோதரனே, சிலுவைவில் அறையப்பட்ட பேதுரு, வாளால் வெட்டப்பட்ட பவுல் இன்னும் எத்தனையோ பாடுகளை அனுபவித்த சீஷர்களுக்கு வந்த துன்பம் நமக்கு வரவே கூடாது என்று நாம் விரும்பினால், நாம் எப்படிப்பட்ட கிறிஸ்தவர்களாய் இருக்க விரும்புகிறோம்? ஆபத்திலிருந்து தன்னை எப்பொழுதும் காப்பாற்றிக்கொள்ளும், தப்பித்துக் கொள்ளும் சுபாவம் மிருக சுபாசம். மற்றவர்களுக்காக நம் ஜீவனைக் கொடுப்பது தெய்வீகம். நாம் எப்படி இருக்க வேண்டும்? சிந்தியுங்கள்.

தானியேல் சிங்கத் கெபியில் தூக்கி எறியப்பட்டான். அப்பொழுது ராஜா தானியேலை நோக்கி "நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைக் தப்புவிப்பார்" என்றான் (தானி 6:16) அதிகாரிகளின் தந்திரம் ராஜாவின் கையைக் கட்டிப் போட்டுவிட்டது. ஆனால் தானியேலின் ஜெப வாழ்க்கை ராஜாவின் வாயைத் திறந்தது. அவன் இந்த நல்லறிக்கையைச் செய்தான்.

**உன் விசுவாசம் தந்திரங்களைத் தகர்த்தெறிய வேண்டுமே தவிர, அடிபணிந்து போய்விடக் கூடாது.**

11
செப்டம்பர்

# ஞானத்தைப் பெற்றுக் கொள்

"ஆகையால் உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்; ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான்." (1 இரா.3:9)

கர்த்தர் சாலொமோனிடம், "நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்" என்றார். சாலொமோன் தனக்கு நீண்ட ஆயுள் வேண்டுமென்றோ, எதிராளியின் ஜீவனையோ கேளாமல் கர்த்தரிடம் ஞானத்தைக் கேட்டான்.

அறிவு என்பது வேறு ஞானம் என்பது வேறு. அறிவு, புத்திசாலிதனம் என்பது மூளை சம்பந்தப்பட்டது. நன்மை, தீமை என்று வகையறுப்பது இதயத்தைச் சார்ந்தது, அதுவே ஞானம். தீமையைவிட்டு விலகுவதே ஞானம். கர்த்தருக்குப் பயப்படுதலே இந்த ஞானத்தின் ஆரம்பம்.

சாலொமோன் கேட்ட ஞானமுள்ள இருதயம் இரு பகுதிகளைக் கொண்டது:

1. கவனித்தல் : ஜனங்கள் சொல்வது உண்மையா பொய்யா, சரியா தவறா என்று கவனித்து கேட்க வேண்டும். ஆராய்ந்து பார்க்க வேண்டும்.
2. கேட்டல் : இந்த விஷயத்தில் கர்த்தர் என்ன சொல்லுகிறார் என்று கவனித்துக் கீழ்ப்படிதல்தான் அவசியம்.

ஜனங்கள் சொல்லும்போது அவர்கள் வார்த்தைகளினால் இழுப்புண்டு போகாதபடி கவனமாயிருக்க வேண்டும். தேவசத்தம் எது? உலக சத்தம் எது? மனித சத்தம் எது என்று தெளிவாய் அறிந்து கொள்ள வேண்டும். இதற்கு எனக்கு ஞானத்தைத் தாரும் என்று சாலொமோன் கேட்டான். கர்த்தரின் சித்தமறிவதே ஞானம். புத்திசாலிதனம் - படிப்பறிவு, பட்டறிவு (அனுபவம்), கேள்வி ஞானம், முயற்சி இவைகளினால் வளர்த்துக் கொள்வது.

ஞானத்தை கர்த்தரிடம் பெற்றுக்கொள்ள வேண்டும். சாலொமோன் ஞானத்தைக் கற்றவனல்ல, பெற்றவன்.

**ஞானத்தைப் பெற்றபின் சந்தேகப்படாதே, செயலாற்று.**

12
செப்டம்பர்

# கர்த்தரது ஒரே மனது

"அவரோவென்றால் ஒரே மனமாயிருக்கிறார்; அவரைத் திருப்பத் தக்கவன் யார்? அவருடைய சித்தத்தின் படியெல்லாம் செய்வார்." (யோபு 23:13)

மனிதனைப் போல கர்த்தர் மனம் மாறுகிறவரல்ல. கர்த்தர் தமது தீர்மானத்தை மாற்றவே மாட்டார். தமது தீர்மானத்தில், திட்டத்தில் உறுதியாயிருப்பார். பாவியைத் தண்டிக்க வேண்டுமென்பது அவரது திட்டம். அந்தப் பாவி மனந்திரும்பினால் மன்னிக்க வேண்டுமென்பதும் அவரது திட்டம். இந்தத் திட்டங்களில் அவர் மாறவே மாட்டார். கர்த்தர் தமது சட்ட திட்டத்தின்படி செயல்படுவாரே தவிர அடிக்கடி தமது நிலையை, முடிவை மாற்றிக் கொள்ளமாட்டார்.

அப்படியானால் மனிதனைப் படைத்ததற்காக மனஸ்தாபப்பட்டார் (ஆதி.6:7) என்று வேதம் கூறும்போது அவர் மனம் மாறிவிட்டதா? மனம் வருந்துகிறாரா? மனிதனைப் படைத்ததற்காக மனம் வருந்தவில்லை; மனிதன் சாத்தானுக்குக் கீழ்ப்படிந்ததினால் அடையப் போகிற முடிவை எண்ணி மனஸ்தாபப்பட்டார். ஆதாம், ஏவாளைப் படைத்ததற்காக வருந்தவில்லை, அவர்கள் சாத்தானுக்குக் கீழ்ப்படிந்ததினால் அடையப் போகும் முடிவை (நித்திய மரணம்) எண்ணி வருந்தினார். மற்றபடி மனிதனைப் போல ஏன்தான் இவர்களைப் பெற்றேனோ என்று மனஸ்தாபப்படவில்லை.

மனிதனின் பாவத்துக்கு நியாயத்தீர்ப்பு செய்யும் போது கர்த்தரின் இரக்கம் "இவனை மன்னித்துவிடு" என்று குறுக்கே வராது. மனிதன் தன் பாவத்துக்கு மனஸ்தாபப்பட்டு பாவமன்னிப்பு கேட்பதினால் கர்த்தர் அவனுக்கு இரங்கி பாவமன்னிப்பு வழங்கும்போது "இல்லை, இல்லை. இவனைத் தண்டிக்கத்தான் வேண்டுமென்று ஆண்டவரது நீதி குறுக்கே வராது. மனிதன் நீதி செய்யும் போது இரக்கத்தை தவறவிடுகிறான், இரக்கம் செய்யும் போது நீதியை தவறவிடுகிறான். அதுபோல் கர்த்தர் செய்கிறதில்லை."

தேவனது நோக்கத்தை, திட்டத்தை நம் கண்ணீர் மாற்றாது. "கேளுங்கள் கொடுக்கப்படும்" என்பது தேவனது திட்டம். அவரது நோக்கம், சித்தமறிந்து கேளுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும். மற்றபடி நமது நீண்ட கால ஜெபம், உபவாச ஜெபம், கண்ணீரின் ஜெபம் கர்த்தரின் மனதை மாற்றாது.

"ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" - இயேசு (மத்.26:39).

**ஜெபம் கர்த்தரை எதிர்க்கும் போராட்டமல்ல, சாத்தானை எதிர்க்கும் போராட்டம்.**

13
செப்டம்பர்

# பரிபூரண ஆசீர்வாதத்தை நாடு

நாம் தேசத்தில் பலுகும்படிக்கு, இப்பொழுது கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார் என்று சொல்லி, அதற்கு ரெகொபோத் என்று பேரிட்டான்." (ஆதி.26:22)

கானான் தேசத்தை நோக்கி ஈசாக்கு போய்க் கொண்டிருக்கும் வேளையில் ஒரு குறிப்பிட்ட தேசத்தில் தற்காலிகமாக குடியிருக்கும்படி கர்த்தர் சொன்னார். "ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்திலே நூறு மடங்கு பலன் அடைந்தான்." (ஆதி.26:12) இப்படி ஈசாக்கு நூறு மடங்கு ஆசீர்வாதத்தைப் பெற்றாலும் அது அவன் நிரந்தரமாய் தங்க வேண்டிய இடமல்ல. அவன் போகவேண்டிய தூரம் அதிகம், அடைய வேண்டிய ஆசீர்வாதம் இதைவிட அதிகம். இந்த ஆசீர்வாதத்தில் சந்தோஷப்பட்டு இதிலேயே ஈசாக்கு திருப்தி அடைந்துவிடக் கூடாது.

"ஈசாக்குடைய வேலைக்காரர் பள்ளத்தாக்கிலே வெட்டி, அங்கே சுரக்கும் நீரூற்றைக் கண்டார்கள். கேராருர் மேய்ப்பர் இந்தத் தண்ணீர் தங்களுடையது என்று சொல்லி, ஈசாக்குடைய மேய்ப்பருடனே வாக்குவாதம் பண்ணினார்கள்... வேறொரு துரவை வெட்டினார்கள்; அதைக்குறித்தும் வாக்குவாதம் பண்ணினார்கள்; ஆகையால் அதற்கு சித்னா என்று பேரிட்டான்." (ஆதி.26:19-21) மூன்றாவது துரவை வெட்டும் போது அவர்கள் வாக்குவாதம் பண்ணவில்லை. எனவே நிறைய தண்ணீர் கிடைத்திருக்கிறது, நல்ல சமாதானமான சூழ்நிலை நிலவுகிறது. எனவே இதுதான் தேவன் தனக்கு வாக்களித்த தேசம் என்று ஈசாக்கு எண்ணி மகிழ்ந்து ரெகொபோத் - அதாவது விசாலம் என்று பேரிட்டான். ஆனால் இவை வழிப்பிரயாணத்தில் கிடைத்த ஆசீர்வாதமே தவிர கர்த்தர் வாக்களித்த முழுமையான ஆசீர்வாதமல்ல. இதிலேயே ஈசாக்கு திருப்தியடைந்து நின்றுவிடக் கூடாது.

இஸ்ரவேலரின் வழிப் பிரயாணத்தில் வனாந்திரத்தில் தேவன் அவர்களுக்கு வானத்து அப்பமான மன்னாவைக் கொடுத்தாலும் அது அவர்கள் போய்ச் சேரவேண்டிய தேசமல்ல. அதுபோல நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என எண்ணும்போதே ஆசீர்வாதங்கள் கிடைக்கும். உடனே எனக்குத்தான் ஆசீர்வாதங்கள் கிடைத்துவிட்டனவே, நான் தேவனுக்கு பிரியமாகத்தான் இருக்கின்றேனே எனவே நான் இரட்சிக்கப்பட, ஞானஸ்நானம் எடுக்க, ஆவியின் அபிஷேகம் பெற அவசியமில்லை என்று எண்ணக் கூடாது. ஆபிரகாம் வழியில் ஆசீர்வாதங்களைப் பெற்றாலும் தன் பிரயாணத்தை நிறுத்திவிடவில்லை. லோத்தோ வழியில் ஆசீர்வாதம் கிடைத்ததும் வழியிலேயே தங்கிவிட்டான். அது அவன் விட்டுவிட வேண்டிய ஆசீர்வாதம். சில சமயம் உங்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதம், உயர்வு இவைகளை சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் தந்துவிடலாம். எனவே உங்கள் ஆவிக்குரிய ஓட்டத்தின் ஆரம்பத்திலேயே நின்றுவிடாமல் கர்த்தர் உங்களுக்கு வைத்திருக்கும் பரிபூரண ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேத கட்டளைகள் அனைத்திற்கும் கீழ்ப்படியுங்கள்; நிறைவான பலனை பெற்றுக் கொள்ளுங்கள்.

**அரைகுறை கீழ்ப்படிதல் குறைவான ஆசீர்வாதங்கள்.**
**முழுமையான கீழ்ப்படிதல் நிறைவான ஆசீர்வாதங்கள்.**

# 14 செப்டம்பர்

## கர்த்தர் ஆளுகை செய்கிறார்

"உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக்கண்டேன்; அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது." (ஏசாயா 6:1)

யூதாவிலே உசியா நல்ல ராஜா. தேவனுக்கும் ஜனங்களுக்கும் பிரியமான ராஜா. அவன் காலம் ஜனங்கள் மனமகிழ்ச்சியாக வாழ்ந்த காலம். திடீரென்று அவன் வாழ்க்கை முடிந்துவிட்டது. ஜனங்களுக்கு மிகுந்த துக்கம். எங்களை ஆதரித்த கரம் போய்விட்டதே என்று ஜனங்கள் துயரத்திலிருந்தனர். தங்கள் வாழ்க்கைக்கு நல்ல ராஜாவை நம்பினது நல்லது. ஆனால் அவரை மட்டுமே நம்பினது தவறு.

ஆண்டவர் திரை விலக்கி காட்டுகிறார். இந்த உசியா ராஜாவின் சிங்காசனம் வெறுமையாக இருந்தாலும் கர்த்தரின் சிங்காசனம் வெறுமையாக இல்லை. ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தார். அதுபோல நம் வாழ்க்கையில் பல இழப்புகள் இருக்கலாம். அதையே எண்ணி கலங்குகிறீர்களா? அதைவிட மேலான ஒன்றை கர்த்தர் நமக்கு தருவார். இஸ்ரவேல் கலக்கமும் திகைப்புமாக இருந்தது. அப்போது கர்த்தர் தமது சிங்காசனத்தைக் காட்டினார். அவருடைய ராஜ்ஜியத்திற்கு முடிவில்லை. அவரது ஆளுகை நித்தியமானது.

உசியா ராஜாவிற்கு சில காரியங்களை செய்ய முடியாது. மழையை வருஷிக்க அவனால் முடியாது. நிலத்தைப் பண்படுத்தலாம், பயிர் பச்சையை விளைவிக்க முடியாது. உங்கள் பிரச்சனையைக் கண்டு மனம் பதைபதைக்காதீர்கள். இதை நம்பியிருந்தேன் அதை நம்பியிருந்தேன் அவை ஒன்றும் கை கொடுக்கவில்லை. அவரை நம்பியிருந்தேன் அவர் கைவிட்டுவிட்டார் என்று புலம்பாதீர்கள். இந்த அருமையான சந்தர்ப்பம் என்னை விட்டு போய்விட்டதே. இந்தப் பொருளை, பணத்தை, வேலையை இழந்து விட்டேனே என்று கலங்காதீர்கள். உங்கள் ஆவிக்குரிய கண்களை ஏறெடுத்து பரலோகத்தின் தேவனைப் பாருங்கள். கர்த்தர் எப்போதும் நம்மோடிருக்கிறார். நீங்கள் அவரோடிருந்தால். நாம் ஆவிக்குரியவர்களாய் இருந்தால் நம் வீட்டில் நடக்கும் எல்லாவற்றையும் கர்த்தர் ஆளுகை செய்வார். அவரது ஆளுகைக்கு உட்பட்டவை எல்லாம் நன்மையாகவே இருக்கும். எனவே எதைக் குறித்தும் கவலைப்படாதீர்கள்.

**எதை இழந்தாலும் கவலைப்பட தேவையில்லை**
**தேவ சமுகம் நம்மை ஆளுகை செய்தால்.**

15
செப்டம்பர்

# கசப்பு வேண்டாம்

"பின்பு அகித்தோப்பேல் அப்சலோமை நோக்கி: நான் பன்னீராயிரம்பேரைத் தெரிந்து கொண்டு எழுந்து, இன்று இராத்திரி தாவீதைப் பின்தொடர்ந்து போகட்டும். அவன் விடாய்த்தவனும் கைதளர்ந்தவனுமாயிருக்கையில், நான் அவனிடத்தில் போய், அவனைத் திடுக்கிடப்பண்ணுவேன்; அப்போது அவனோடிருக்கும் ஜனங்களெல்லாரும் ஓடிப்போவதினால், நான் ராஜா ஒருவனைமாத்திரம் வெட்டி, ஜனங்களையெல்லாம் உம்முடைய வசமாய்த் திரும்பப்பண்ணுவேன்; இப்படிச் செய்ய நீர் வகைதேடினால், எல்லாரும் திரும்பின பின் ஜனங்கள் சமாதானத்தோடு இருப்பார்கள் என்றான்." (2 சாமு.17:1-3)

இந்த அகித்தோப்பேலின் ஆலோசனையை தாவீதுக்கு கர்த்தரின் ஆலோசனை போலிருக்கும். அவன் வாயின் வார்த்தைகள் ஔஷதம் போலிருக்கும். இப்பொழுதோ அகித்தோப்பேல் தாவீதுக்கு விரோதமாக அவன் உயிரையே பறிக்கும்படி ஆலோசனை சொன்னான். அவன் உள்ளம் கசப்பினால் நிறைந்திருந்தது. காரணம் தாவீது ஒரு பெரிய தவறை செய்தான். ஐயோ என் இராஜா தவறு செய்துவிட்டானே அவன் திருந்த வேண்டுமே என்று பரிதபித்து அவன் தவறை நாத்தான், திருத்தினான். ஆனால் பத்சேபாளிடம் தவறு செய்துவிட்டானே இவனை தீர்த்துக்கட்ட வேண்டும் என்று அகித்தோபேல் கறுவினான்.

எந்தப் பாவியையும் திருத்துவது – கர்த்தரின் உள்ளம். எந்தப் பாவியையும் தீர்த்துக்கட்ட நினைப்பது – சாத்தானின் உள்ளம். அகித்தோபேலுக்கு கசப்பான எண்ணம் ஏற்பட்டது. தாவீதை திடுக்கிடப் பண்ண வேண்டும் திக்குமுக்காடப்பண்ண வேண்டும் அவனை கொலை செய்ய வேண்டும் என நினைத்தான். இஸ்ரவேலின் ராஜாவுக்கு விரோதமாக எழுந்தான். கர்த்தர் இஸ்ரவேலின் இராஜாவுக்கு அனுகூலமாக இருக்கிறார் என்பதை அவன் அறியவில்லை. பிள்ளைமீது அன்பிருந்தால் பிள்ளையை அடிப்பார்கள். பிள்ளைமீது கசப்பிருந்தால் தன்னையே அடிப்பார்கள். அகித்தோப்பேலின் கசப்பான எண்ணம் அவனையே அழித்தது.

ஊசாய் சொன்ன ஆலோசனையினால் தாவீது தப்பிவிடான். (2சாமு.17:4-7) அகித்தோப்பேலின் நல்ல ஆலோசனையை அபத்தமாக்குகிறதற்குக் கர்த்தர் கட்டளையிட்டார். தன் ஆலோசனைப்படி நடக்கவில்லை என்றதும் தன்னையே கொலை செய்து கொண்டான் (2 சாமு.17:23). காரணம் கசப்பு. அவன் தன் கோபத்தை வெளிப்படையாக காட்டாமல் தந்திரமாக நடந்தான். கசப்பை மனதில் வைத்தான் மன்னிக்கவில்லை. தூர வைத்தான். அவன் மனக்கசப்பு அவனையே கொன்று போட்டது.

**தவறை கடிந்துகொள் - கசப்படையாதே – மன்னித்துவிடு. தவறை தண்டிக்க தந்திரமாய் நடவாதே, அன்பினால் நிறைந்துவிடு.**

# உணர்வுகளை மதிக்கும் கர்த்தர்

**16**
**செப்டம்பர்**

"நீ உன் பயிரை அறுக்கையில் உன் வயலிலே ஒரு அரிக்கட்டை மறதியாய் வைத்துவந்தாயானால், அதை எடுத்து வரும்படி திரும்பிப் போகவேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர் உன் கைப்பிரயாசத்திலெல்லாம் உன்னை ஆசீர்வதிக்கும்படி, அதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடுவாயாக. நீ உன் ஒலிவமரத்தை உதிர்த்துவிட்டபின்பு, கொம்பிலே தப்பியிருக்கிறதைப் பறிக்கும்படி திரும்பிப் போகவேண்டாம்; அதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடுவாயாக; நீ உன் திராட்சப்பழங்களை அறுத்தபின்பு, மறுபடியும் அதை அறுக்கத் திரும்பிப்போகவேண்டாம்; அதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடுவாயாக. நீ எகிப்திலே அடிமையாயிருந்ததை நினைப்பாயாக; ஆகையால், இப்படிச் செய்யும்படி நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்." (உபா.24:19-22)

இன்றைய அரசாங்கம் பல நலத் திட்டங்களை அறிவிக்கின்றது. அவைகளை இலவசம் என்று கூறுகிறது. ஆண்டவர் ஒரு இலவசத் திட்டம் வைத்திருக்கின்றார். இஸ்ரவேலரில் ஏழைகளுக்கு ஆண்டவர் ஒரு ஏற்பாடு செய்தார். ஏழைகள் வசதியானவர்களின் வீட்டு வாசலில் நின்று ஐயா உதவி செய்யுங்கள் என்று பரிதாபமாகக் கூப்பிடும் நிலை ஏற்படா வண்ணம் "நீ உன் வயலிலே மறதியாய் விட்டு வந்த அரிக்கட்டை எடுக்க திரும்பப் போகாதே" அதை இல்லாதவர்களுக்கு, வறுமையில் உள்ளவர்களுக்கு விட்டுவிடு என்று கூறுகிறார். திராட்ச பழங்களை அறுத்த பின்பு திரும்பவும் அறுக்கப் போகாதே அவைகளை ஏழைகள் பறித்துக் கொள்ளட்டும் என்று கூறுகிறார். எதற்காக என்றால் ஏழைகளின் தன்மான உணர்வுகளை மதிக்கவே அப்படிக் கட்டளைக் கொடுத்தார். நான் வயலுக்குப் போய் கதிர்களை எடுத்து வந்தேன். திராட்சத் தோட்டத்திற்குப் போய் கனிகளைப் பறித்து வந்தேன் மரம் ஏறி ஒலிவப் பழங்களைப் பறித்து வந்தேன். நான் பிரயாசப்பட்டேன் என் உழைப்பின் பலனைச் சாப்பிடுகிறேன் என்ற எண்ணம், திருப்தி உண்டாக வேண்டும். எனவேதான் பரதேசிக்கும், திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் இந்த அருமையான ஏற்பாட்டை ஆண்டவர் ஏற்படுத்தினார். உலக மனிதன் கூட "மீனைக் கொடுக்காதே, மீன் பிடிக்கக் கற்றுக்கொடு" என்கிறான். யாரையும் பிச்சைக்காரர்களாக சோம்பேறிகளாக மாற்ற கர்த்தர் விரும்பவில்லை.

மேலும் நீ எகிப்திலே அடிமையாயிருந்ததை நினை. கடந்த காலத்தில் நீ துன்பப்பட்டதை நினைத்து இன்று பிறருக்கு ஏழை எளியவர்களுக்கு இரங்கு என்று கர்த்தர் கூறுகிறார். "உன்னைப் போல் பிறனையும் நேசி" என்ற உபதேசத்தின் செயல் வடிவம்தான் இது. சில சமயம் "அடடா இதை வைத்துவிட்டு வந்து விட்டேனே" என்ற நினைவு வந்தவுடன் சரி திரும்பிப் போக வேண்டாம் என்ற எண்ணமும் ஏற்பட்டிருக்கும். நீங்கள் மறதியாய் விட்டு வந்தது என்னைவிட கஷ்டப்படுகிற ஒருவருக்கு அது உதவட்டும் என்ற திருப்தி அடையுங்கள். நம்மைத் தாழ்விலிருந்து தூக்கி எடுத்தவரைத் துதியுங்கள்.

**நம் உணர்வுகளை மதிக்கும் கர்த்தரைத் துதியுங்கள்.**
**பிறர் உணர்வுகளை மதித்து நடந்து கொள்ளுங்கள்.**

17
செப்டம்பர்

# மேன்மைகளை இயேசுவின் பாதத்தில் வை

"அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது." (யோவான் 12:3)

யூதப் பழக்கத்தின்படி பெண்கள் விருந்து சாலைக்கு வரமாட்டார்கள். நான் இயேசுவை வரவேற்பது உபசரிப்பது அவசியம் என்று எண்ணி பாரம்பரியத்தை மீறி விருந்து சாலைக்கு மரியாள் வந்தாள். இன்றைக்கும் இயேசுவை ஏற்றுக் கொள்ள தடையாக இருக்கும் பாரம்பரியங்களை, சமுதாய சாஸ்திரங்களைத் தள்ளுங்கள்.

அன்றைய சூழ்நிலையில் விருந்து சாலைக்கு வந்ததே பெரிய காரியம். வந்தது மட்டுமன்றி தலைமுடியை அவிழ்த்துப் போட்டது செய்யவே கூடாத காரியம். அது பெருத்த அவமானம். தெரியாமல் தலைமுடி அவிழ்ந்தால் கூட உடனே உள்ளே போய் விடுவார்கள். அப்படியிருந்தும் தன் தலைமுடியை அவிழ்த்தாள். காரணம் தன் மகிமையை கர்த்தரின் பாதத்தில் வைக்க விரும்பினாள். வேதம் சொல்கிறது, "ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதிலலையா?" (1கொரி.11:15) என் மகிமை இருக்க வேண்டிய இடம் இயேசுவின் பாதமே என்று அவள் தன் தலை மயிரால் இயேசுவின் பாதத்தைத் துடைத்தாள், இன்றைக்கும் பேசப்படுகிறாள்.

பரிசுத்த பவுல் தன் செல்வம், செல்வாக்கு, கமாலியேல் பாதத்தில் படித்த படிப்பு போன்ற மேன்மைகளை இயேசுவின் பாதத்தில் சமர்ப்பித்தார். தாவீது – மாபெரும் வீரன் - தன் பராக்கிரமத்தை இயேசுவின் பாதத்தில் வைத்தார். இசைக் கருவிகளை இசைக்கும் திறமை போன்ற திறமைகளை இயேசுவின் பாதத்தில் வைத்துவிடுங்கள். என் சான் உடலுக்கு சிரசே பிரதானம். அதை இயேசுவின் பாதத்தில் வைத்தாள் மரியாள். நாம் நமது மேன்மைகளை இயேசுவின் பாதத்தில் வைப்போம்.

**உயர்ந்த பொருட்களை உயர்வான இடத்தில் வைப்போம். உன்னதர் இயேசுவின் பாதமே உன்னமான இடம்.**

18
செப்டம்பர்

# திருப்பிப் போடாத அப்பம்

"எப்பிராயீம் அந்நியஜனங்களோடே கலந்திருக்கிறான்; எப்பிராயீம் திருப்பிப் போடாத அப்பம். அந்நியர் அவனுடைய பலத்தைத் தின்கிறார்கள்; அவனோ அதை அறியான்; நரைமயிரும் அவனில் தெளித்திருக்கிறது, அவனோ அதை அறியாதிருக்கிறான்." (ஓசியா 7:8,9)

எப்பிராயீம் - தேவனுடைய பிள்ளைகள் அந்நிய ஜனங்களோடே கலந்திருக்கிறார்கள். உலகத்தைக் கலக்குகிறவர்களாக நாம் இருக்க வேண்மே தவிர, உலகத்தோடு கலந்துவிடுகிறவர்களாக நாம் இருக்கக் கூடாது. நம்பிக்கையில் விசுவாசத்தில் அந்நியராக இருப்பவரோடு நட்பு பாராட்டலாம், அன்பு கூரலாம், உதவி செய்யலாம். ஆனால் கலந்துவிடக் கூடாது. அந்நியருடைய தொழுகை, பண்டிகையில் கலந்து விடாதீர்கள், பிரிந்திருங்கள். இதனை குறுகிய மனப்பான்மை என்று பிறர் கூறலாம். ஆனாலும் கர்த்தருக்காக வைராக்கியமாய் ஜீவி.

இயேசுவின் இரத்தம், உபதேசம், விசுவாசத்திற்கு அந்நியரோடு எல்லை மீறி ஐக்கியமாகாதீர். அப்படி ஐக்கியமானால் உங்கள் நிலை திருப்பிப் போடாத அப்பத்தைப் போன்றது. அப்பம் நன்றாக இருந்தும் திருப்பிப் போடாததினால் கருகிவிடும். ஞாயிற்றுக் கிழமை ஆலயத்திற்கு ஒன்றாக வந்து பிரசங்கம் கேட்கும்போது விசுவாசி நன்றாக வெந்த அப்பம். வாழ்க்கையில் பிரசங்கத்தை அப்பியாசப்படுத்தாதினால் - திருப்பிப்போடாததினால் கருகிப்போன அப்பம். கேட்ட வசனம் கிரியைச் செய்யாததினால் அது கெட்டுப்போன அப்பம். பாதி வெந்ததினால் அப்பம் நன்றாக இருக்கிறது என சொல்ல முடியாது அந்த அரை வேக்காடு அப்பத்தை யாரும் சாப்பிட முடியாது. எனவே அது கெட்டுப் போன அப்பமே. அதுபோல ஆலயம் செல்வதினால் மட்டும் திருப்தி அடைந்துவிடக் கூடாது. உபதேசத்தை செயல்படுத்தாத கிறிஸ்தவர்கள் அரைவேக்காடு கிறிஸ்தவர்களே.

அந்நியர் அவன் பலத்தைத் தின்கிறார்கள். மற்ற நம்பிக்கை உள்ளவர்களோடு ஐக்கியம் கொள்வதினால் தேவப் பிள்ளைகள் தேவனோடுள்ள விசுவாசத்தில் பலத்தில் குன்றிவிடுகிறார்கள். எனவே உங்கள் ஐக்கியத்தைக் குறித்து ஜாக்கிரதைப்படுங்கள். நரைமயிர் - பலவீனத்தைக் குறிக்கிறது. இரண்டு வசனம் வாசித்ததும் நாளை வேதம் வாசிக்கலாம், நாளை ஜெபிக்கலாம் என்று ஆவிக்குரிய ஜீவியத்தில் பலவீனம் ஏற்படுகிறது. ஆதியிலே இருந்த விசுவாசம் இன்றைக்கு இருக்கிறதா? உங்கள் பலத்தைத் தின்றது யார்? நண்பர்களா? புத்தகமா? உறவினர்களா? கைபேசியா? ஆராய்ந்து பார்த்து சரிசெய்து கொள்ளுங்கள்.

**நட்பு என்பது வேறு ஐக்கியம் என்பது வேறு.**
**அந்நியரிடம் நட்பு பாராட்டு விசுவாசியோடு ஐக்கியம் கொள்.**

19
செப்டம்பர்

# இயேசு தருவதே நிறைவு

"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்." (மத்.15:28)

தீரு சீதோன் தேசத்திலிருந்து அந்நிய தேசத்திலிருந்து வந்த பெண் ஆண்டவரிடம் ஒரு பெரிய நற்சான்றிதழைப் பெற்றாள். அவள் வேறு மதத்தைச் சார்ந்தவள். அவள் எதிர்பார்பிற்கு எதிரிடையான சூழ்நிலைகளைச் சந்தித்தாள்.

1. "....அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக் கூப்பிட்டாள். அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை." (மத்.15:23) இரக்கமுள்ள தேவன் அவளுக்குப் பதிலே சொல்லவில்லை.
2. "...காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல வென்றார்." (மத்.15:24) ஆண்டவர் வாயைத் திறந்து ஏதோ சொல்லப் போகிறாரே என ஆவலுடன் பார்த்தால் 'நான் உனக்காக வரவில்லை' என்று சொன்னார்.

இப்படிப்பட்ட எதிரிடையான சூழ்நிலையைச் சந்தித்தப் போதிலும் அவள் விடாப்பிடியாகக் கர்த்தரைப் பற்றிக் கொண்டாள். "அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார். அதற்கு அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்." (மத்.15:26-28)

தீரு சீதோனில் அவள் மதம், மருத்துவம், இன ஜனம் கலாச்சாரம் தரும் அப்பங்கள் வேண்டாம். இயேசு தரும் துணிக்கையே போதும் என்று கூறினாள். கர்த்தர் குறைவாகத் தந்தாலும் அது நிறைவான ஆசீர்வாதத்தைத் தரும் என்று விசுவாசித்தாள். அவளுக்கு கிடைத்த கொஞ்ச வெளிச்சத்திலே அவள் அவ்வளவு விசுவாசத்தோடு இருந்தாள். அதைத்தான் ஆண்டவர் "உன் விசுவாசம் பெரிது என்று மெச்சிக் கொண்டார். அவளைவிட இயேசுவையே அறிந்திருக்கிற நாம் எவ்வளவு விசுவாசத்தோடு இருக்கிறோம். நாம் நம்முடைய ஜெபங்களுக்கு உடனடி பதிலை எதிர்பார்க்கிறோம். கிடைக்காவிட்டால் மனம் சோர்ந்து போகிறோம். அதனால் சில சமயம் ஜெபிக்க தவறுகிறோம் அல்லது ஜெபிக்க மறுக்கிறோம். இனி இந்தக் கானானிய பெண்ணைப் போல் விசுவாசத்தோடு பெற்றுக் கொள்ளும் வரை தொடர்ந்து ஜெபிப்போம். உலகத்தை நோக்கி ஓடாதிருப்போம். உலகம் தரும் ஏராளத்தைவிட கர்த்தர் தரும் குறைவே நிறைவான ஆசீர்வாதம்.

**உலகம் அள்ளி அள்ளித் தந்தாலும் அது குறைவே**
**இயேசு கிள்ளித் தந்தாலும் அது நிறைவே**

# அடிமையைப் புறம்பே தள்ளு

**20**
**செப்டம்பர்**

"பின்பு எகிப்துதேசத்தாளாகிய ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரன் பரியாசம்பண்ணகிறதைச் சாராள் கண்டு, ஆபிரகாமை நோக்கி: இந்த அடிமைப்பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்ளும். இந்த அடிமைப்பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை என்றாள்."
(ஆதி.21:9,10)

ஆபிரகாமுக்கு இரண்டு பிள்ளைகள். சாராளைப் பார்த்து ஆபிரகாமுக்கு எத்தனைப் பிள்ளைகள் என்று கேட்டால் ஒன்று என்று சொல்லுவாள். ஆகாரைப் பார்த்துக் கேட்டாலும் ஒன்று என்றுதான் சொல்லுவாள். கடவுளும் ஆபிரகாமுக்கு ஒரு பிள்ளை என்றுதான் சொல்லுவார். ஆபிரகாமுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தாலும் ஒரு பிள்ளைதான் அங்கீகரிக்கப்படுகிறான். ஏனென்றால் அவன் வாக்குத்தத்தத்தின் பிள்ளை. மற்றவன் மாம்சீக சிந்தனையில் முயற்சியில் பிறந்தவன். இரு பிள்ளகைளுக்கும் தகப்பன் ஒருவன்தான். அதுபோல நமக்கு மூளை ஒன்றுதான். அனால் அதில் ஆவிக்குரிய சிந்தனையும் பிறக்கும் மாம்சீக சிந்தனையும் பிறக்கும். ஆனால் இரண்டு சிந்தனைகளும் சேர்ந்து இருக்க முடியாது. மாம்சீக சிந்தனை பிறரை பரிகாசம் பண்ணும், பிறரை வேடிக்கைப் பொருளாக்கும் பிறர் மனதை புண்படுத்தும், வீண் பொழுது போக்கும். ஆவிக்குரிய சிந்தனையோ பிறரை நேசிக்கும், கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியும் கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்ய நாடும். இவையிரண்டும் சேர்ந்திருக்க முடியாது.

ஈசாக்கை இஸ்மவேல் பரியாசம் பண்ணினதைப் போல் நம் ஆவிக்குரிய சிந்தனைகளை மாம்சீக சிந்தனைகள் பரிகாசம் பண்ணி தோற்கடிக்கப் பண்ணும். "அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்." (ரோம.8:5,6) என்று வேதம் நம்மை எச்சரிக்கின்றது. இரண்டு சிந்தையும் ஒரே சமயத்தில் ஒருவரிடம் இருக்க முடியாது.

சாராளைப் போல உறுதியான தீர்மானம் பண்ணுங்கள். இஸ்மவேலைப் போல பிறரை புண்படுத்துகின்ற கர்த்தரது வாக்குத்தத்தங்களைப் பரிகாசம் பண்ணுகின்ற, தேவனுக்கு விரோதமாக எழும்புகின்ற மாம்ச சிந்தையை புறம்பே தள்ளுங்கள். உங்களை நீங்களே ஆராய்ந்து பார்த்து ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள். மாம்ச சிந்தை தலை தூக்கும்போதெல்லாம் உடனுக்குடனே அதைத் தள்ளிவிடுங்கள்.

**ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.**

21
செப்டம்பர்

# இரட்சிப்பை பிரசங்கம் பண்ணு

"யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவார்கள்." (மத்.12:41)

இயேசு தன் பிரங்கத்தைக் கேட்டு மனந்திரும்பாதவர்களைக் குறித்து இப்படிக் கூறினார். நினிவே பட்டணத்தார் ஏன் எப்படி இவர்களைக் குற்றப்படுத்துவார்கள் யோனா தண்டனையைக் குறித்து மாத்திரம் பிரசங்கம் பண்ணினான். அதைக் கேட்டே ஜனங்கள் மனந்திரும்பினார்கள்.

"யோனா நகரத்தில் பிரவேசித்து, ஒருநாள் பிரயாணம்பண்ணி: இன்னும் நாற்பதுநாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான்." (யோனா 3:4) நினிவே கவிழ்க்கப்பட்டுப் போகும் என்று தண்டனையை மட்டும் கேட்டு மனந்திரும்பினார்கள். பாவமன்னிப்பைக் குறித்து யோனா பிரசங்கிக்கவில்லை. நியாயத்தீர்ப்பை மட்டும் கேட்ட அவர்கள் மனந்திரும்பியிருப்பார்களானால், மன்னிப்பைக் குறித்து கேள்விப்பட்ட நீங்கள் எவ்வளவாய் மனந்திரும்பியிருக்க வேண்டும். நியாயத்தீர்ப்பை மட்டும் கேட்ட அவர்களுக்கு அவ்வளவு தண்டனை என்றால் மன்னிப்பைக் குறித்து கேள்விப்பட்டும் மனந்திரும்பாத உங்களுக்கு எவ்வளவு தண்டனை கிடைக்கும் என்று இயேசு கூறுகிறார்.

தண்டனையை மட்டும் கேட்டே நாங்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டுவிட்டோம். நீங்களோ பாவமன்னிப்பை கடவுளின் அன்பைக் குறித்து கேள்விப்பட்டும் மனந்திரும்பவில்லையே என்று நினிவே பட்டணத்தார் குற்றம் சுமத்துவார்கள். பாவத்தை மட்டும் சுட்டிக்காட்டினால் மனிதர்கள் மனந்திரும்ப மாட்டார்கள். பாவமன்னிப்பைக் குறித்தும் பேச வேண்டும். ஒரு குடிகாரனைப் பார்த்து நீ குடிப்பதினால் உன் சரீரம் கெட்டுப் போகும், பணம் விரயமாகும், குடும்பம் சீர் கெடும் என்றெல்லாம் கூறினால் அவன் துக்கப்படுகிறான். இது லௌகீக துக்கம். இது மனந்திரும்புதலைக் கொண்டு வராது. மாறாக உன் பாவங்கள் மன்னிக்கப்படும்படி இயேசு தம் பரிசுத்தமான இரத்தத்தை சிலுவையில் சிந்தினார். அந்த இரத்தத்தை நீ அலட்சியம் பண்ணாதே என்று கடவுளின் அன்பைக் குறித்து இரட்சிப்பிற்கேற்ற பிரசங்கம் பண்ணுங்கள். அது இரட்சிப்பின் பிரசங்கம் ஜனங்களை மனந்திரும்புதலுக்கு கொண்டுவரும்.

யோனாவின் தண்டனையின் பிரசங்கம் ஜனங்களை மனந்திரும்பப் பண்ணினால், கிருபையின் இரத்தத்தை, இரக்கத்தின் இரத்தத்தைக் குறித்து பிரசங்கம் பண்ணுவது எவ்வளவு மனந்திரும்புதலைக் கொண்டு வரும். கடவுளின் பாரம் நாம் இரட்சிப்பை பிரசங்கம் பண்ண வேண்டுமென்பது.

**லௌகீக துக்கமல்ல ஆவிக்கேற்ற துக்கமே இரட்சிப்பைக் கொண்டு வரும்.**

22
செப்டம்பர்

# தேவ மகிமையில் நிறைந்திட...

"ஆறுநாளைக்குப் பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று."

(மத்.17:1,2)

நாம் ஒரு முக்கியமான விஷயத்தை நமக்கு நெருக்கமானவர்களோடு பகிர்ந்து கொள்வோம். அதுபோல கர்த்தரும் ஒரு முக்கியமான விஷயத்தை தமக்கு நெருக்கமானவர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்பி அவர்களை மறுரூபமலைக்கு அழைத்துச் சென்றார். இன்றைக்கு கர்த்தர் முக்கியமான விஷயங்களைகூட உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புமளவிற்கு நீங்கள் கர்த்தரோடு அவ்வளவு நெருக்கமாக இருக்கின்றீர்களா?

இயேசு தம்மோடு மறுரூபமலைக்கு அழைத்துச் சென்ற அவ்வளவு நெருக்கமான உண்மையான சீஷர்கள்கூட உண்மையிலேயே இயேசு யார் என்று அறியாதிருந்தார்கள். காரணம் அந்த அளவிற்கு இயேசு தம்மை வெறுமையாக்கியிருந்தார். அவரை நாசரேத்தூர் இயேசு என்று வெறும் மனிதனாக மட்டுமே சீஷர்கள் அறிந்திருந்தனர். மறுரூபமலையில் இயேசுவின் மகிமையைக் கண்டனர். அப்பொழுதான் இயேசு "ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என அறிந்து கொண்டனர்."

இயேசு இந்த உலகிற்கு இரட்சகராக வந்த போது தம்மை வெறுமையாக்கினதால் தேவ மகிமையால் நிறைந்திருந்தார். நாம் எந்த அளவிற்கு நம்மை வெறுமையாக்குகிறோமோ அந்த அளவிற்கு தேவ மகிமையால் நிறைந்திருப்போம். எந்த அளவிற்கு தேவனுக்கு விட்டுக் கொடுக்கின்றோமோ அந்த அளவிற்கு தேவ மகிமையால் நிறைந்திருப்போம். மகிமையிலே ஒருவருக்கொருவர் மகிமையிலே வேறுபடுவோம். ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் தேவனுக்கு விட்டுக் கொடுக்கும் அளவு வேறுபடுகிறது.

வெறுமையான பாத்திரம் நிறைய தண்ணீர் பிடிக்கும். ஏற்கெனவே நிரம்பியுள்ளது குறைவான தண்ணீரைத்தான் கொள்ளும். நம்முடைய சுயம் எந்த அளவிற்கு குறைகிறதோ அந்த அளவிற்கு தேவ மகிமை நிறையும். ஆண்டவர் நமக்காக தம்மைத்தாமே வெறுமையாக்கினார். நாம் அவருக்காக அவர் சித்தத்தைச் செய்ய நம்மை வெறுமையாக்குகிறோமா? ஆவியானவர் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

காலி குடத்தில் முழுவதும் நிரப்பலாம்
கால் குடத்தில் முக்கால் குடம்தான் நிரப்பலாம்

23
செப்டம்பர்

# உங்கள் பிரயாசத்தை மறவாத கர்த்தர்

"ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியுஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே." (எபி.6:10)

நமக்கு சோர்வு உண்டாக்குகிற காரியங்களில் ஒன்று மனிதர்கள் நன்றியில்லாமல் போவது. அதுமட்டுமல்ல நாம் அவரைக் காணும்போது நம்மை அறியாதவர்கள் போல கண்டும் காணாமல் போவது இன்னும் இதயத்தை உடையப் பண்ணுகிறது. இவ்வளவு சீக்கிரத்தில் நம்மை மறந்து விட்டார்களே என்று ஆச்சரியமும் வருத்தமும் அடைகிறோம். ஊழியக்காரர் என்றும் தேவ மனிதர்கள் என்றும் நாம் ஆதரிதோமே அவர்களே நம்மை மறந்துவிட்டார்களே என்று வேதனைப்படுகிறீர்களா? அவர்கள் மறந்துவிட்டாலும் தேவன் உங்கள் பிரயாசத்தை மறக்கவில்லை. நிச்சயமாய் பலனளிப்பார். என்னுடைய தேவைகளுக்கு மத்தியிலும் ஊழியக்காரனுக்கு உதவி செய்தேனே அந்த ஊழியக்காரரோ இன்று பாராமுகமாய் போகின்றாரே, ஒரு சிறு விசாரிப்பு கூட இல்லையே என்று புலம்புகின்றீர்களா? "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்." (1 பேதுரு 5:7) என்று வேதம் கூறுகிறது.

தேவனுடைய பிள்ளைகள் என்று உதவி செய்தோமே, அவர்கள் தேவைகளில் ஓடிப்போய் உதவினேன். பொருள் உதவி செய்தேன், சரீர உழைப்பைக் கொடுத்தேன். ஆனாலும் அவர்கள் என்னை மறந்து போனார்களே என்று வருந்துகிறீர்களா? தேவப் பிள்ளைகள் மறந்தாலும் தேவன் மறந்துவிடுகிறவரல்ல. உங்கள் பிரயாசங்கள் அனைத்தையும் அவர் கணக்கில் வைத்திருக்கிறார். நாம் யாருக்கு உதவி செய்தோமோ அவர்கள் நமக்கு விரோதமாக போனாலும் கர்த்தர் நம்மோடிருக்கிறார். நாம் அவரது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தை மறந்துவிடாத நீதியுள்ள தேவன் நமக்கு / உங்களுக்கு பலனளிப்பார்.

நாம் கர்த்தருக்கு செலுத்தும் காணிக்கைகளை பிரயாசப்பட்டு செய்கின்றோமா அல்லது கையில் கிடைத்ததை செலுத்துகின்றோமா? ஏழை விதவை தன் ஜீவனத்துக்கு உண்டானதெல்லாவற்றையும் போட்டாள் என பார்க்கிறோம். படகை கர்த்தருக்குக் கொடுத்த சீமோன் பேதுரு தன் சரீரக் களைப்பை பொருட்படுத்தாது தேவனுக்குக் கீழ்ப்படிந்து படகை கொடுத்தார். ஆண்டவர் அவரது வெறுமையை மாற்றி நிறைவாய் ஆசீர்வதித்தார்.

**உங்கள் பிரயாசத்தை தேவன் நினைத்திருக்கிறார்**
**அவர் நீதியுள்ளவர் யாருக்கும் கடன்படார்.**

24
செப்டம்பர்

# வாழ்ந்து என்ன பயன்?

"மனுஷன் புசித்து, குடித்து தன் பிரயாசத்தின் பலனை அநுபவிப்பதைப் பார்க்கிலும் அவனுக்கு ஒரு நன்மையும் இல்லை. இதுவும் தேவனுடைய கரத்திலிருந்து வருகிறது என்று நான் கண்டேன்"(பிர 2:24)

வாழ்க்கையை மாயை என்று சொன்ன சாலொமோன் மனிதன் புசித்து, குடித்து தன் பிரயாசத்தின் பலனை அநுபவிக்க வேண்டும் என்கிறார். உண்ணாமலும், உடுத்தாமலும் தன்னையே வெறுத்து ஒரு மூலையில் முடங்கிக் கிடப்பதல்ல வாழ்க்கை, உண்டு, உடுத்தி மனம் போனபடி உல்லாசமாய் வாழ்வதும் வாழ்க்கையல்ல. உண்ணும் உணவு, உடுத்தும் உடை, தங்கும் வீடு இவை அத்தனையும் தன்னை உண்டாக்கிய கடவுளுடைய கரத்திலிருந்து தனக்குக் கிடைக்கிறது என்று கர்த்தரைத் துதித்து, மகிழ்ந்து வாழ்வதே வாழ்க்கை.

வாழ்க்கை என்பது கடவுள் தந்த பரிசு; காலம் தந்த பாரமல்ல. சரீர ஒடுக்கத்தைப் பற்றி அதிகக் கட்டுப்பாடுகளைப் பிரசங்கிக்கும் பவுல் சொல்கிறார். "நாம் அநுபவிக்கிறதற்கு சகலவித நன்மைகளையும் நமக்கு சம்பூரணமாய் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும்" (1தீமோ 6:17) சொத்து, சுகம், மாட மாளிகைகள் வைத்திருப்பது தவறல்ல. இவையாவற்றையும், கர்த்தருக்கு நன்றி செலுத்தி அநுபவிப்பதே வாழ்க்கை.

ஒரு அழகான புது வீட்டைப் பார்த்து, "இது சீக்கிரத்தில் இடிந்து போகும்; எனக்கு நிலையான, நித்திய வீடு இருக்கிறது" என்று சொல்வது சத்தியமல்ல. ஒரு அழகான புத்தாடையைப் பார்த்து. இது சீக்கிரம் கிழிந்து, ஒழிந்து போகும்; எனக்கோ கிழியாத இரட்சிப்பின் வஸ்திரம் இருக்கிறது என்று சொல்வதல்ல பக்தி. புதிய வீட்டின் வாசலில் நின்று, "கர்த்தாவே, இந்த வீட்டை எனக்குத் தந்ததற்கு நான் எம்மாத்திரம்? இந்தப் புதிய ஆடையைத் தந்ததற்கு ஸ்தோத்திரம்"என்று கர்த்தருக்குள் மகிழ்ந்திருப்பதே வாழ்க்கை.

தரித்திரம், வறுமை இவைதான் பரிசுத்த வாழ்க்கையின் அடையாளங்கள் என்ற தவறான எண்ணங்களிலிருந்து கிறிஸ்தவன் விடுதலை பெற வேண்டும். மாயை, மாயை என்று சாலொமோன் கூறுவதைத் தவறாக விளங்கிக்கொண்டு, நல்ல உணவு, நல்ல வீடு இவையெல்லாம் பரலோகம் செல்ல தடைகள் என்று நினைக்க ஆரம்பிக்கிறான்.

**வாழ்ந்து என்ன பயன் என்று அதிர்ப்தியடைவதைப் பார்க்கிலும், கர்த்தர் தந்த வாழ்வை எண்ணி மகிழ்ந்திருப்பதே நலம்.**

**25**
**செப்டம்பர்**

# குடும்பப் பிரச்சனைக்கு முக்கியக் காரணம்

"நீர் தேவனுடைய குமாரனேயானால்.... இக்கல்லுகளை அப்பமாக மாற்றும்" (மத்; 4:3)

குடும்பப் பிரச்சனைக்கு முக்கியக் காரணம், உறவுகளின் முறிவு. சரியான உறவுகள் நீடிக்காததினால் பிரச்சனைகள் வெடித்துக் கிளம்புகின்றன. கணவனும் மனைவியும் தங்கள் இருவர் வீடுகளையும் "நம் வீடு" என்று சொல்லாமல் கணவன் மனைவியைப் பார்த்து, "உன் வீடு"என்றும் மனைவி கணவனைப் பார்த்து "உங்க வீடு"என்றும் பிரித்துப் பேசுவதால் உறவுகளில் விரிசல் உண்டாகிறது. உறவுகளை உடைப்பது பிசாசுக்கு ஒரு மகிழ்ச்சி. நீர் தேவனுடைய குமாரனானால் இக்கல்லுகளை அப்பமாக மாற்றும்" என்று சாத்தான் சொல்லும்பொழுது பிதா, குமாரன் என்ற உறவை முறிக்கவே விரும்பினான்.

குடும்பத்திலும் உறவுகளை முறிப்பதில் அவன் ஆர்வமாய் இருக்கிறான். ஆகவே உறவுகளைக் காத்துக் கொள்ள கவனமாயிருங்கள். கணவன், மனைவி என்பது ஒப்பந்த உறவு அல்ல; உடன்படிக்கையின் உறவு. ஒப்பந்தத்தில் உறவுகளுக்கும், உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் இல்லை, பொருளுக்கும், பணத்திற்குமே அதிக முக்கியத்துவம். வரதட்சணை வாங்கி நடக்கும் திருமணம் ஒப்பந்த உறவைத்தான் உண்டாக்கும். கிறிஸ்தவத் திருமணங்கள் உடன்படிக்கையின் திருமணமாயிருக்க வேண்டும். உடன்படிக்கையில் திருமணத்தில் முக்கியமானவை; அன்பும், கீழ்ப்படிதலும். ஒப்பந்த திருமணத்தில் முக்கியமானவை; பணமும், பொருளும். முதல் சுற்று உறவு. (Relationship on First circle) அப்பா, அம்மா, அண்ணன், தம்பி, அக்காள், தங்கை இது முதல் சுற்று உறவு. இது பிறப்பினால் உண்டான உறவு. ஆகையினால் இங்கு அதிகமான பிரச்சனைகள் வரவாய்ப்பில்லை. பிரச்சனையே வராது என்று சொல்லவில்லை.

இரண்டாம் சுற்று உறவு (Relationship in second circle). மாமனார், அத்தை, மைத்துனர், மைத்துனி என்பது திருமண உறவினால் வரக்கூடிய உறவுகள். இந்த இரண்டாம் சுற்று பிரச்சனையை உண்டாக்குகின்றது. தன் தங்கை செய்யும் தவறைப் பொறுத்துக் கொள்ளும் அக்காள், தன் கணவனின் தங்கை செய்யும் தவறைப் பொறுத்துக் கொள்ளமாட்டாள். ஏனெனில் கணவனின் தங்கையை முதல் சுற்று உறவிற்குள் கொண்டுவர மனம் மறுக்கிறது. தம்முடைய குடும்பத்தின் உறவுகளை நாம் எப்படி பார்க்கிறோம். எல்லோரையும் சமமாக நேசிக்கிறோமா? உறவுகளை தக்கவைத்துக்கொள்ள நாம் எடுத்த பிரயாசை என்ன? நம்மை தேவனுடைய பிள்ளைகளாக மாற்ற தேவன் தன்னுடைய ஜீவனையே கொடுத்தாரே! சிந்தியுங்கள்!!

**"நாம் கிறிஸ்துவுக்குள்" என்ற நம்பிக்கையே நல் உறவுகளை உண்டுபண்ணும்.**

**26**
**செப்டம்பர்**

# மாளிகையை கட்டுங்கள்

"என் தேவனே, என் ஆத்துமா எனக்குள் கலங்குகிறது. ஆகையால் யோர்தான் தேசத்திலும், எர்மோன் மலைகளிலும், சிறுமலையிலிருந்தும் உம்மை நினைக்கிறேன்" (சங் 42:6)

சங்கீதக்காரன் கலங்கிய உள்ளத்தோடு இருந்தாலும் கர்த்தரை நினைக்கிறான். தோல்வியில், கவலையில், வேதனையில் அவன் இருந்தாலும் அவன் ஆத்துமா வெற்றிச் சிகரத்திலிருந்து தேவனை நோக்குகிறது. எர்மோன் எதிராளியை அழிப்பதைக் குறிக்கும். "அர்னோன் ஆறு துவக்கி எர்மோன் மலை மட்டும் உள்ள ராஜாக்களை இஸ்ரவேலர் முறியடித்து தேசங்களைச் சுதந்தரித்தார்கள்." (யோசு 12:1,2)

இந்த வெற்றிச் சிகரத்தில் சங்கீதக்காரனின் ஆத்துமா உலாவியது. ஆம் நமது மனதைத் தோல்விப் பள்ளத்தாக்கிலிருந்து, வெற்றிச் சிகரத்தை நோக்கித் திருப்பவேண்டும். இராட்சஷப் பலத்தோடு எழுந்து நிற்கும் எதிர்வல்லமையை வீழ்த்தும் இடமே எர்மோன் மலை." பாசானின் ராஜாவாகிய ஓகை அழித்தவரைத் துதியுங்கள்" (சங் 136:20) என்ற இந்த வரிகள், இந்த வெற்றியின் மகிமையை விவரிக்கின்றன. உங்கள் ஆத்துமா தோல்வி மனப்பான்மையில் சிக்கிக் கொள்ளாமல் எர்மோன் என்ற வெற்றிச் சிகரத்தில் - சிந்தனையில் நிற்கட்டும்.

சிறுமலையென்பது நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்ட இடம். தாவீது தேவனது கட்டனைகளை – பிரமாணங்களை நினைக்கிறான். கர்த்தரின் கற்பனைகளை நினைக்கிறீர்களா? "உமது கற்பனைகளின் பாதையில் என்னை நடத்தும்; நான் அதில் பிரியமாயிருக்கிறேன்" (சங் 119:35) இப்படி, கர்த்தரின் கட்டளைகளின் மீது பிரியமாயிருக்கிறீர்களா? "என் மீது நீங்கள் அன்பாய் இருந்தால், என் கட்டளைகளை நிறைவேற்றுங்கள்" என்று வேதம் சொல்கிறது.

உபதேசம் உன்னில் ஒரு துப்புரவை உண்டாக்கும். ஆகவே வேத உபதேசங்களை வாஞ்சி! இது தான் சிறுமலையின் அனுபவம். இந்த மலைகளில் நீ வெட்டும் மரங்கள், மாம்சீகத்தின் மேல் வெற்றி, சத்தியத்தின் மீதுள்ள வாஞ்சை! இம்மரங்களைக் கொண்டு உங்கள் கிறிஸ்தவ வாழ்கையான ஆலயத்தைக் கட்டுங்கள். இந்த நம்பிக்கை எனும் மரத்தினால் உன் விசுவாச வாழ்க்கையை உறுதியாகக் கட்டுங்கள்! ஆவிக்குரிய மலைகளில் ஏறுங்கள், ஆவிக்குரிய அனுபவ மரங்களை வெட்டுங்கள். கிறிஸ்த ஜீவியமாகிய மாளிகையை கட்டுங்கள். கர்த்தர் அதின் மேல் பிரியமாயிருப்பார்.

**உங்கள் ஆவிக்குரிய ஜீவியம் கிறிஸ்து என்னும் கன்மலையின்மீது கட்டப்படுவதாக!**

27

செப்டம்பர்

# வாக்குத்தத்தத்தின் வளர்ச்சி

"நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்குப்போ" (ஆதி 12:1)

தேவனது வார்த்தைகள் நம்மிடம் வளர்கின்றன. இவைகளை நமது ஆவிக்குரிய காதுகள் கவனிக்க வேண்டும். நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்குப்போ என்பது தேவனது ஆதிவார்த்தைகள். ஆபிரகாமிற்கு அந்தத் தேசத்தைத் தருவேன் என்று ஆதியில் தேவன் வாக்களிக்கவில்லை. காண்பிப்பேன் என்று மாத்திரமே தேவன் வாக்கு கொடுத்திருந்தார். ஆனால் ஆபிரகாம் தேவனை விசுவாசித்து, கானான் தேசத்தைப் போய்ச் சேர்ந்தான். அப்பொழுது கர்த்தர் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி, "உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்" என்றாரா் (ஆதி 12:7) ஆம் ஆபிரகாமின் கீழ்ப்படிதலுக்குப் பிறகே "கொடுப்பேன்" என்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றான். இப்பொழுது காண்பிப்பேன் என்ற நிலையிலிருந்து கொடுப்பேன் என்ற நிலைக்குத் தேவனது வார்த்தை வளர்ந்திருக்கிறது.

உன் வாழ்க்கையில் தேவனது வார்த்தைகள் வளர்வதைக் கவனிக்கிறாயா? தேசத்தை காண்பிப்பேன் என்ற அரம்ப நிலையிலேயே ஆபிரகாம் இருந்திருப்பானானால் "தேசத்தைத் தாரும், என்று ஊர் பட்டணத்திலேயே வானத்தை நோக்கி மன்றாடிக் கொண்டிருப்பான். ஆனால் அவன் முதல் நிலைமையிலேயே வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக்கு தன்னை ஆயத்தமாக்கிக் கொண்டு தன்னுடைய இன, ஜன, நண்பர்கள் யாவரையும் விட்டுப் பிரிந்தான். தனக்குத் தெரிந்த அனைவரையும் விட்டுவிட்டு தனக்குத் தெரியாத தேசத்திற்குப் போவது எளிதான காரியம் அல்ல. தனக்குச் சொந்தமான சொத்து, சுகங்களை எல்லாம் விட்டுவிட்டு சொந்தமில்லாததை சுதந்தரிக்கப்போவது விசுவாசத்தின் வீரபோராட்டமே. இந்தக் கடுமையான விலையை ஆபிரகாம் செலுத்தினபடியால் தேசத்தைத் தனக்குத் தருவார் என்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றான்.

வேத வசனம் நம்மில் வளர அர்ப்பணிப்பு அவசியம். இந்த வாக்குத்தத்தம் காலாகாலத்தில் வளர்ந்து நமக்கும் சொந்தமாகிறது. இந்த வாக்குத்தத்தம் நமக்குள் வளர வேண்டுமெனில் நாம் ஆபிரகாமுடைய சாயலைப் பெற்றிருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் ஆபிரகாமின் சந்ததியாயிருக்க முடியும். அந்தச் சாயல் எது? அந்தச் சாயல் ஆபிரகாமின் விசுவாசமே. ஆகவே நாமும் ஆபிரகாமைப் போல விசுவாசிப்பது என்பது ஆழமான சிந்தனையல்ல தியாகமான அர்ப்பணிப்பும். இந்த அர்ப்பணிப்பு இல்லாவிட்டால் வாக்குத்தத்தம் சுதந்தரித்தக் நிலையை அடையாது.

சகோதரனே, சகோதரியே! வாக்குத்தத்தம் உன்னில் நிறைவேறாததற்கு காரணம் உன் உள்ளம் இன்னும் ஊர் பட்டணத்தையே சுற்றிக் கொண்டிருப்பதே ஒருவேளை நீ ஊர் பட்டணத்தை விட்டிருந்தாலும் உன் இதயம் ஆரானிலேயே தங்கியிருக்கும். ஆம் புறப்படவேண்டிய இடத்திலோ வழிப்பிரயாணத்தின் ஒர் இடத்திலோ நீ தடுமாறி தவித்து நின்று விடுவதால் வாக்குத்தத்தம் உனக்குத் தூரமாயிற்று. ஆகவே நீ ஆபிரகாமின் சாயலில் இருக்கிறாயா என்பதைக் கவனி. வாக்குத்தத்தம் உன்னிலே நிறைவேறிக் கொண்டிருக்கிறது என்பதை நம்பு. இதுவே ஆசீர்வாதத்தைச் சுதந்தரிக்கும் வழி.

**தேவனது வாக்குத்தத்தம் வல்லமையுள்ளது;**
**அது என்றும் கிரியை செய்யும் வல்லமையுள்ளது.**

28
செப்டம்பர்

# இருதயம் தரிசனத்தால் நிறைந்தது

"என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது; நான் ராஜாவைக் குறித்துப்பாடின கவியைச் சொல்லுகிறேன்; என் நாவு விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத்தாணி. (சங் 45:1)

சங்கீதக்காரனின் இருதயம் கர்த்தரை இராஜாவாகக் கண்ட தரிசனத்தால் நிறைந்தது. அந்தத் தரிசனத்தினால் அவன் இருதயத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. ஆகையால் அவன் உதடுகள் இராஜாவைப் பற்றி பாட ஆரம்பிக்கின்றன. நீயும் இயேசுவை உன் வாழ்க்கையின் இராஜாவாகக் காண்கிறாயா? உனக்கு ஒரு தொலைநோக்கு இருந்தால் மட்டுமே நீ இயேசுவை இராஜாவாகக் காண முடியும். "உன் கண்கள் ராஜாவை மகிமை பொருந்தினவராகக் காணும்; தூரத்திலுள்ள தேசத்தையும் பார்க்கும்" என்று வேதம் சொல்கிறது. கர்த்தருக்குப் பயந்த இஸ்ரவேலர் தங்கள் உபத்திரவங்களில் ஆவிக்குரிய கண்களினால் வரப்போகிற மேசியாவைக் காண்பார்கள். தேவன் தரும் வாக்குத்தத்த நாட்டின் சுதந்தர எல்லைகளையும் காண்பார்கள்.

அதுபோல பாடுகள், கஷ்டங்கள் நமக்கு இருந்தாலும் நம்முடைய எல்லா சூழ்நிலைகளையும் ஆளுகிற இராஜாவாகவே நமது இயேசுவை நாம் காணவேண்டும். நாம் நம்முடைய சுய தேசமாகிய மாம்சீகம், கவலை, திகில், பயம் இவைகளில் இருந்து கொண்டே இயேசுவை இராஜாவாகக் காணமுடியாது. பரிசுத்தம், தேவ அழைப்பு, விசுவாசம், தைரியம் ஆகிய, மாம்சத்துக்கு தூர தேசத்தில்தான் இயேசுவை இராஜாவாகக் காணமுடியும்.

இயேசுவைச் சிறுபாலகனாகக் காணும்பொழுதே ஞானிகள் அவரை இராஜாவாகக் கண்டார்கள். யூதருக்கு இராஜாவாகப் பிறந்தவர் எங்கே என்றுதான் அவர்கள் தேடினார்கள். (மத 2:2) அவர் மரிக்கும்பொழுது உலகம் அவரைப் பரிகாசம்பண்ணின வேளையில் அவரருகே சிலுவையில் தொங்கின கள்ளன் அவரை நோக்கி, "ஆண்டவரே, உமது ராஜ்ஜியத்தில் அடியேனை நினைத்தருளும்" என்றான். (லூக்க 23:42) எல்லோரும் இயேசுவைப் பரிதாபமான ஒருவராகக் காணும்பொழுது இந்தக் கள்ளன் அவரை ஒரு இராஜாவாகக் கண்டது ஆச்சரியமே!

உன் கண்கள் இயேசுவை இராஜாவாகக் காண்கிறதா? உலகத்தார் அவரை இராஜாவாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அவரை இராஜாவாக்க முற்பட்டனர். இருண்டு அப்பங்களைக் கொண்டு ஐயாயிரம் பேரை இயேசு போஷித்தவுடன் அவரை இராஜாவாக்கும்படி அவர்கள் பிரயாசப்பட்டனர். (யோவான் 6:15) ஆனால் மனிதர்கள் அவரை இராஜாவாக்கும் பிரயாசத்தை இயேசு விரும்பவில்லை. அவரை இராஜாவாக ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, அவரை இராஜாவாக்க வேண்டியதில்லை. ஏனெனில் எற்கனவே அவர் இராஜாவாகவே இருக்கிறார்.

**பெரிதும் உயரமுமான சிங்காசனத்தில் கர்த்தர் வீற்றிருக்கிறார்.**

29
செப்டம்பர்

# சோதனைகள்

"தேவன் ஆபிரகாமை சோதித்தார். ஆனால் ஒருவனையும் தேவன் பொல்லாங்கினால் சோதிக்கிறவரல்ல." (யாக்.1:13)

தேவன் ஒருவனை உருவாக்க சோதிக்கிறார். தோற்றத்தின்படி பொல்லாங்காய்த் தோன்றினாலும், தேவனது சோதனை பொல்லாங்கு அல்ல. ஆபிரகாமிற்குத் தேவனது கட்டளை, "உன் மகனைப் பலியிடு." ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிட்டால், அவன் மூலம் ஒரு பெரிய சந்ததி எழும் என்ற தேவனது வார்த்தை என்னவாகும்? மலையுச்சியில் ஈசாக்கு பலியிடப்பட்டால், அவன் சீரம் எரிந்து சாம்பலாகும். திடீரென்று ஒரு காற்றடித்தால் சாம்பல் இருந்த இடமும் முற்றிலும் கழுவப்பட்டுப்போம். இதுதான் ஆபிரகாமின் விசுவாசத்தின் சிகரம். உன் நம்பிக்கைகள் இன்று மடிந்து, உன் எதிர்பார்ப்புக்கு மாறாக எல்லாமே நடந்து முடிந்துவிட்டதா? பயப்படாதே! இவைகளெல்லாம் நடக்குமுன் தேவன் உனக்குக் கொடுத்த வார்த்தைகளை எண்ணி உறுதிப்படு! உன் சுகவாழ்வு சீக்கிரம் துளிர்க்கும்.

ஈசாக்கு கயிறுகளால் கட்டப்படுவதற்கு முன்பு தேவக்கட்டளையால் ஆபிரகாம் கட்டப்பட்டான். ஆனால் வாக்குத்தத்தம் கட்டப்படவில்லை. இயேசு சிலுவையில் அடிக்கப்பட்டார். இரட்சிப்போ கட்டப்படவில்லை. ஈசாக்கு கட்டைகளைச் சுமந்தான்; ஆபிரகாமோ மனக்கிலேசத்தைச் சுமந்தான். உன் ஆத்துமாவின் ஒரு சிலுவையைச் சுமக்கிறாயா? கால்கள் தடுமாறுகின்றனவா? சீக்கிரம் கர்த்தர் உன்னைச் சந்திப்பார். மோரியா மலையில் ஈசாக்கு கட்டப்பட்டுவிட்டான். முடிந்தது என்று அவன் வாய் முணுமுணுத்திருக்கும். மனசஞ்சலத்தில் நீயும் எல்லாமே முடிந்தது என்று சொல்லியிருப்பாய். என் நம்பிக்கை முடிந்தது, என் சந்தோஷம் முடிந்தது என்றெல்லாம் நீ அங்கலாய்த்திருப்பாய். ஈசாக்கு மலை உச்சியில் முடிந்துவிடவில்லை. நீயும் முடிந்துவிடமாட்டாய். கல்வாரியில் இயேசு மிகுந்த சத்தமாய் "முடிந்தது" என்றார். ஆம், சாத்தானின் வல்லமை முடிந்தது. அந்தகாரத்தின் ஆட்சி முடிந்தது. மனுக்குலத்தின் இருள் முடிந்தது. முடிந்தது என்பது இயேசுவின் ஜெயகீதம். ஆம், பிரியமானவர்களே! உன் வீட்டிலும் பிசாசின் கோஷ்டங்கள் முடிந்தன. அந்தகார சக்திகள் முடிந்தன; முறிந்தன.

இயேசு சிலுவையில் உனக்காக யாவையும் செய்து முடித்திருக்கிறார். ஆகவே, நீ பயப்படாமல் விசுவாசத்தோடு சோதனைகளை எதிர்கொள். "நான் உலகத்தை ஜெயித்தேன்" என்ற இயேசுவின் ஜெயதொனி, உன்னையும் ஜெயிக்க வைக்கும். சகோதரனே, சகோதரியே, சோதனையில் மனந்தளராதே! இயேசுவின் நாமத்தினால் ஜெயங்கொடுக்கும் தேவன் உனக்கு உண்டு. நீ வெற்றி பெறுவாய். நீ சோதனைகளை மேற்கொள்வாய். உன் வாழ்வு மலரும்.

**சோதனை உன்னை அழிப்பதற்காக அல்ல,**
**உன்னை உருவாக்குவதற்காக.**

**30**
**செப்டம்பர்**

# மகிமையால் நிறைவும்; ஆறுதலினால் நிறைவும்

**மகிமையால் நிறைவு :** "... பூமி முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக! ஆமென், ஆமென்." (சங் 72:19)

இன்றைய உலகம் பசி, பஞ்சம், கலவரம் குழப்பம் இவைகளினால் நிறைந்து, தேவ மகிமையற்று இருக்கிறது. என் சகோதரனே, சகோதரியே கடன் தொல்லைகள், கடுமையான வியாதிகள், தலை குனியவைக்கும் அவமானங்கள் - இவைகள் உன் வாழ்க்கையின் தொடர்கதையாய் இருக்குமெனில் நீ தேவ மகிமையால் நிறைந்திருக்கவில்லை. உலக இருள் உன் வாழ்க்கையைப் பற்றிக் கொண்டிருக்கிறது என்பது தான் உண்மை. "கூப்பிடுகிற எளியவனையும் உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார்" (சங் 72:12) என்று வேதம் கூறுகிறது. இந்த விடுதலை ஒருவனை தேவ மகிமையால் நிறைக்கும். உன் நெருக்கத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடு; உனக்கு அவர் தரும் பதில், பதிலாக மாத்திரம் இருப்பதில்லை. அது மகிமையின் வெளிப்பாடாக இருக்கும். உன்னுடைய எளிமை, சிறுமை எல்லாமே தேவ மகிமையில் மறைந்துபோகும். உன் கண்களில் தாரை தாரையாய் கண்ணீர் வரும் நிலைமைக்கு உன் தேவன் அனுமதிக்கலாம். அழுகை என்பது ஆத்துமாவின் தாய்மொழி. இந்தக் கண்ணீரைத் தேவன் புரிந்து கொள்ளுகிறார். உன் கண்ணீருக்குப் பின்னால் இருக்கும் வேதனையையும் வாட்டத்தையும் பரலோகம் உணர்ந்து கொள்ளும். ஆம், உன் அழுகை பரலோகத்தில் கேட்கப்படும். அதனுடைய முடிவு என்ன? "உங்களை சிறுமைப்படுத்தின நாட்களுக்கும் நீங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கு சரியாய் மகிழ்ச்சியினால் நிறைந்திருப்பீர்கள்". இதுவே உங்கள் வாழ்க்கையை நிறைக்கும் தேவ மகிமை.

**ஆறுதலினால் நிறைவு :** "ஆறுதலினால் நிறைந்திருக்கிறேன், எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாய் இருக்கிறேன்" (2கொரி 7:4)

பவுல் சகலவிதமான உபத்திரவகங்களின் மத்தியில் வாழ்கிறார். வெளியே போராட்டங்களும், இதயத்தினுள்ளே பயங்களும் இருந்தன, என்றாலும் அவர் இதயத்தைப் பயமோ, திகிலோ நிறைக்கவில்லை. தேவ சமூகம் அவரை ஆறுதலால் நிரப்பிற்று. உபத்திரவங்களை அவர் எண்ணிப் பார்க்காமல் தேவன் தந்த வாக்குத்தத்தங்களையே அவர் எண்ணி மகிழ்ந்தார். பணமும் பலமும் குறைந்து போகும். இவைகள் நிலையான தேவனது வார்த்தைகளையே பவுலின் இதயம் பற்றிக் கொண்டது. ஆதலால் அவர் சந்தோஷமும் குறைவுபடவில்லை அவர் ஆறுதலும் குறைவுபடவில்லை. நீங்களும் சூழ்நிலைகளின் கொடுமைகளை மறந்து சூழ்நிலைகளின் மீது அதிகாரமுள்ள தேவனையே நம்புங்கள், உங்களுக்கு ஒன்றும் குறைவுபடாது. "காற்றே! இரையாதே, கடலே! அமைதலாயிரு" என்று கட்டளையிட்ட தேவ வார்த்தைகள் உன் சூழ்நிலைகளைப் பணியவைக்கும் ஆறுதலும் சந்தோஷமும் குறைவுபடாது. "நீங்கள் ஒன்றிலும் குறைவுபடமாட்டீர்கள்.

**கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.**

**1**
**அக்டோபர்**

# உணர்வற்ற தன்மை

"அப்பொழுது மாலுமி அவனிடத்தில் வந்து நீ நித்திரைபண்ணுகிறது என்ன? எழுந்திருந்து உன் தேவனை நோக்கிவேண்டிக்கொள்; நாம் அழிந்து போகாதபடிக்குச் சுவாமி ஒருவேளை நம்மை நினைத்தருளுவார் என்றான்." (யோனா 1:6)

அவனவன் தன் தன் தேவனை நோக்கி வேண்டுதல் செய்யும் பொழுது யோனாவோவென்றால் கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிக் போய் படுத்துக்கொண்டு அயர்ந்த நித்திரை பண்ணினான். (யோனா 1:5) பெரிய ஆபத்தைக் கப்பல் சந்தித்ததுக் கொண்டிருக்கும் பொழுது கப்பலில் உள்ள அஞ்ஞானிகள் தங்கள் தெய்வங்களை நோக்கி வேண்டுதல் செய்யும் பொழுது ஜீவனுள்ள தேவனின் ஊழியக்காரன் உணர்வற்று உறங்கி விட்டான். அவன் மூன்று காரியங்களைச் செய்தான். இறங்கிப் போனான், படுத்துக் கொண்டான், தூங்கினான்.

தேவ சமுகத்துக்கு விலகி ஓடின யோனா, தேவனால் விடப்படும் சூழ்நிலைகளுக்கும் விலகி ஓட ஆரம்பித்தான். அந்த சூழ்நிலையில் அந்த அஞ்ஞானிகளுக்கு மத்தியில் ஜீவனுள்ள தேவனை நோக்கி அபாயமிட்டு கதறி ஜெபிக்க வேண்டிய யோனா தன் நிலையிலிருந்து விலகிப் போய் விட்டான். "ஆபத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்" (சங்.50:15) என்ற வசனம் யோனாவுக்கு தைரியத்தைத் தரவில்லை. ஏனெனில் அவன் உன்னதமானவருக்குத் தன் ஊழியப் பொருத்தனைகளைச் செலுத்தத் தவறிய குற்றமுள்ள மனசாட்சியுடையவன். ஆகவே அவனால் ஜெபிக்க முடியவில்லை. தூசி படிந்த மனசாட்சியினால் தேவனது முகத்தை சரியாய்ப் பார்க்க முடியாது. யோனா போய் படுத்துக்கொண்டது அவனுடைய ஆவிக்குரிய அலட்சியத் தன்மையைக் காட்டுகிறது. கப்பலை எளிதாக்க தங்கள் பாரங்களைக் கடலில் மற்றவர்கள் எறிந்துக் கொண்டிருக்கும் பொழுது யோனா கருத்தற்று படுக்கப் போய்விட்டான். தூக்கியெறியப்பட வேண்டிய பாரமே அவன்தான் என்பதை அவன் அறியவில்லை.

உணர்வற்ற யோனாவை கப்பலின் மாலுமி கண்டு, நீ நித்திரை பண்ணுகிறது என்ன? உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள். சுவாமி ஒரு வேளை நம்மை நினைத்தருளுவார்" என்றான் (யோனா 1:6) தான் வணங்கும் சுவாமி வெறும் கல், மண் அல்லது ஏதோ ஒரு ஆசாமி என்பதை அறியாத அஞ்ஞானியான மாலுமி கூட யோனாவை ஜெபிக்கும்படி உணர்த்துகிறான். சகோதரனே! சகோதரியே! விக்கிரகத்தின் நிழலிலே சன்மார்க்கக் கொடி பிடிக்கும் இத்தேசத்து மக்கள் மத்தியில் உணர்வுள்ள கிறிஸ்தவ ஜீவியம் செய்வாயா? தேவன் சமீபமாயிருக்கிறார் என்பதை உணர்ந்து ஜீவி; யோனா இன்னும் உணர்வடைந்து ஜீவிக்க எழும்பவில்லை. நீ பிரசங்கிக்கும் இயேசு உன் வாழ்க்கையில் இல்லையே என்ற அஞ்ஞானிகளின் கேள்வியே, உன் வாழ்க்கையில் பதிலாக அமைந்து விட்டால் அது எத்தனை பரிதாபம். ஆகவே, இன்றே உணர்வடைந்து விழித்துக்கொள்! விழித்திருந்து ஜெபம்பண்ணு.

**உணர்வற்ற தன்மை உன்னை உருக்குலைத்துவிடும்;**
**உணர்வுள்ளவனாயிரு, அது உன்னை தேவனைத் தேடச் செய்யும்.**

2
அக்டோபர்

# யோனா ஒரு யாத்திரகன்

"நான் எபிரெயன்." (யோனா 1:9)

எபிரெயன் என்றால் யாத்திரிகன் என்று பொருள். ஆவிக்குரிய பிரகாரமாகவும் யோனா பரலோக யாத்திரிகன். ஆனால் தன் வழியை மறந்து வேறு திசையில் யாத்திரை செய்துக் கொண்டிருக்கிறான். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு யாத்திரிகனே இப்பிரபஞ்சத்தினின்று விடுதலையாகி, உன்னத நாட்டை நோக்கி நடக்கிறான். "இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கும் ஓட்டத்தில் பொறுமையோடு ஓடுவதே" அந்த உன்னத யாத்திரை. (எபி.12:1) இந்த யாத்திரையில் ஓடுபவன் இரண்டு காரியங்களை செய்ய வேண்டும்.

1. பாரமானவற்றைத் தள்ள வேண்டும்.
2. சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தைத் தள்ள வேண்டும்.

யோனா சுயமதிப்பு, கௌரவம் இந்தப் பெருமைகளாகிய பாரத்தைத் தள்ளவில்லையே! இரட்சிக்கப்பட்ட போதிலும் மீண்டும் ஒருவனை ஆவிக்குரிய நிலையினின்று தள்ளிவிட அவனுடைய பாவசுபாவம் முயற்சித்துக் கொண்டேயிருக்கும். மிக எளிதில் ஒருவனை ஆட்கொள்ளும் பாவத்தைத் தூண்டி, அவனை அவன் சுபாவம் வென்றுவிடும். முன்கோபம், இச்சை, எரிச்சல் இத்தகைய பாவங்களை மிக எளிதில் சுபாவம் தூண்டிவிடும். ஆகவே தன் பலவீனங்களைக் குறித்து மிக எச்சரிக்கையோடு இருந்து, அவற்றிற்கு மிகவும் விலகி நடக்க வேண்டும்.

எதிரிக்கப்பலை வீழ்த்த பகையாளி, கப்பலின் மேற்பகுதியைத் தாக்குவதில்லை. கப்பலும் தண்ணீரும் எங்கு இணைந்து இருக்கின்றனவோ, அங்குதான் தாக்குதல் ஆரம்பிக்கும். அந்தத் தாக்குதலில் ஏற்பட்ட துவாரத்தின் வழியாக தண்ணீர் உள்ளே செல்ல கப்பலும் மூழ்க ஆரம்பிக்கிறது. அதுபோல நாம் எங்கு உலகோடு (பணப்பழக்கம், எதிர்பாலரோடு பழகுதல்) ஐக்கியப்படுகிறோமோ, அங்கு நம் பலவீனத்தைச் சாத்தான் பயன்படுத்திவிடுவான். ஆகையால் சூழ்நிலைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருப்பதே சுற்றி நெருங்கி நிற்கும் பாவத்தைத் தள்ளுவதாகும். சகோதரனே! சகோதரியே! உன் வாழ்க்கையில் இன்று சந்தர்ப்பம் தேடும் பாவங்களுக்கு இடம் கொடுத்துவிடாதே. "நிற்கிறோம் என்று எண்ணுகிறவர்கள் விழாதிருக்கக் கடவர்கள்" என்ற வார்த்தை எப்பொழுதும் உனக்கு எச்சரிப்பாக இருக்கட்டும். உன் பலவீனத்தை அலட்சியமாக எண்ணிவிடாதே. அதே சமயத்தில் பலவீனத்தையே உன் எஜமானாக்கிவிடாதே. எச்சரிக்கையாயிரு!

மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரமாக இராதே! நீ ஒரு பரலோக யாத்திரிகன்! உன் இலக்கு தேவனது நகரம்! பூமியில் நீ ஒரு பரதேசி. இதை மறந்துவிடாதே. "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக என் இலக்கை நோக்கி தொடர்கிறேன்" (பிலி.3:14) என்ற அப்போஸ்தலனின் இலக்கை நோக்கி விரைவோம்.

**போய்ச் சேரவேண்டிய இலக்கை அடைய பிரயாணம் செய்பவனே யாத்திரகன்.**

| 3<br>அக்டோபர் |
|---|

# கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவன்

"சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் இடத்தில் பயபக்தியுள்ளவன் என்றான்." (யோனா 1:9)

உண்மையில் யோனா தேவனுக்குப் பயந்திருந்தால் ஆபத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டிருப்பான். "ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்." (சங்.50:15) என்ற வாக்குத்தத்தத்தை யோனா பற்றிக் கொள்ள முடியாததற்கு காரணம் அவனது குற்றமுள்ள மனசாட்சிதான். திருக்குள்ள இருதயமே தேவனைச் சந்தேகிக்க வைக்கிறது. கர்த்தர் தன் ஜெபத்திற்குப் பதில் கொடுக்க மாட்டார் என்று யோனாவின் குற்றமுள்ள மனசாட்சி, ஜெபத்தைத் தடுத்துப் போட்டது; வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொள்ள அவன் இதயம் தவறிவிட்டது என்ன பரிதாபம்! மனிதனின் குற்ற மனசாட்சியை விளக்க டாக்டர் சாம் கமலேசன் ஒரு அருமையான உதாரணத்தை சொன்னார். லீலா, மணி என்ற இருவர் சிறுபிள்ளைகள். மணி அழகான கோலிக்குண்டுகளை வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறான். அப்போது அங்கு சாக்லெட்டைச் சுவைத்துக் கொண்டே லீலா வருகிறாள். லீலாவின் கைநிறைய சாக்லெட். இதனைக் கண்டவுடன் மணிக்கு நாக்கில் நீர் ஊறுகிறது. "லீலா! எனக்குக் கொஞ்சம் சாக்லெட் கொடு" என்கிறான். "மணி! உன்னிடம் உள்ள எல்லா கோலிக் குண்டுகளையும் எனக்குத் தா; நான் உனக்கு என்னிடம் உள்ள எல்லா சாக்லெட்டுகளையும் தருகிறேன்" என்றாள் அவள்.

மணிக்கு கோலிகளைக் கொடுக்க மனதில்லை. ஆனாலும் சாக்லெட்டின் மீதும் அவனுக்கு ஆசை. என்ன செய்தான் தெரியுமா? தன்னிடமுள்ள பெரிய நீலநிறக்கோலி ஒன்றைத் தன் சட்டை பையில் ஒளித்து வைத்துக் கொண்டு, மீதி கோலிகளை லீலாவிடம் கொடுத்தான். லீலாவும் தன் சாக்லெட் எல்லாவற்றையும் அவனிடம் கொடுத்தான். லீலாவும் தன் சாக்லெட் எல்லாவற்றையும் அவனிடம் கொடுத்துவிட்டு கோலிகளை எண்ணிக் கொண்டு நகர்கிறாள். தன் சட்டைப் பையில் ஒளித்து வைத்த நீலநிறக் கோலியை தொட்டவாறே மணி கேட்கிறான், "லீலா எல்லா சாக்லெட்டுகளையும் கொடுத்து விட்டாயா? அல்லது எதையாவது ஒளித்து வைத்திருக்கிறாயா?" அவனது நீலக்கோலி அவனது குற்றமுள்ள மனசாட்சியை உறுத்துகிறது. (Blue marble is irritating him) யோனா ஒளித்து வைத்த தேவ அழைப்பு, ஊழியம் என்ற நீலக்கோலி அவனை உறுத்தவே அவன் மௌனமாகி விட்டான்.

இந்தத் தேசத்தின் இரட்சிப்புக்காக தேவனைக் கூப்பிட வேண்டிய நீ மௌனமாக இருக்கக் காரணம் என்ன? புலம்பி அழவேண்டிய நீ பதுங்கிக் கிடக்கக் காரணம் என்ன? உன் மனசாட்சியை எது உறுத்துகிறது. இப்படிப்பட்ட மனசாட்சி தேவனிடம் பயபக்தியாயிருக்குமா? உண்மையில் யோனா தேவனுக்குப் பயந்திருந்தால் அவன் கர்த்தரின் வழியில் அல்லவா நடந்திருப்பான்? "கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் பாக்கியவான்." (சங்.128:1) என்று வேதம் சொல்லவில்லையா? கர்த்தருக்குப் பயப்படுகிறவன் அவர் வழிகளை விட்டு விலகவே மாட்டான். யோனாவின் அறிக்கை ஒரு விதமாகவும் அவன் வாழ்க்கை மற்றொரு விதமாகவும் அமைந்துவிட்டது. 'What you are speaks louder than what you say' உன் வாயின் அறிக்கையைவிட உன் ஜீவியம் நீ யாரென்று அதிக சப்தமிடுகிறது.

**உன் ஜீவியத்தை உன் அறிக்கைக்குத் தக்கப்படி மாற்றி அமைத்துக்கொள்.**

4

அக்டோபர்

# யோனாவே, உனக்கு என்ன செய்ய வேண்டும்?

"...சமுத்திரம் நமக்கு அமரும்படி நாங்கள் உனக்கு என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள்." (யோனா 1:11)

இந்தக் கேள்வி மிகவும் கூர்மையானப் பட்டயம் போன்றது. இத்தனைப் பெரிய பொல்லாப்புக்குத் தான்தான் காரணம் என்று இப்பொழுது யோனா அறிந்து கொண்டான்! தான் சரியாகாமல், சூழ்நிலை சரியாகாது என்பதை அவன் அறிந்துக் கொண்டான். ஒரு சிறு பையன் தன் தகப்பனாரைப் பல கேள்விகள் கேட்டு தொந்தரவு செய்துக் கொண்டிருந்தான். அவரால் அமைதியாய் வேலை செய்ய முடியவில்லை. கொஞ்ச நேரம் தன் பிள்ளை தன்னைத் தொந்தரவு செய்யாமலிருக்க ஒரு வழியொன்று கண்டார். தன் மேஜை மீதிருந்த ஒரு உலகப் படத்தை எடுத்து அதைப் பல துண்டுகளாய் கிழித்து தன் மகனிடம் கொடுத்து அதனை மீண்டும் சரியான உலகப் படமாக ஒட்டிக்கொண்டு வரச் சொன்னார். இது அதிக சமயத்தை எடுக்கும் என்று தகப்பனார் எண்ணிக் கொண்டார். வெளியே சென்ற பையன் சில நிமிடங்களுக்குள்ளாக அறைக்குள் வந்து "அப்பா, உலகப்படத்தைச் சரி செய்துக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றான். தகப்பனாரும் மிகுந்த ஆச்சரியத்துடன் "இவ்வளவு சீக்கிரத்தில் உன்னால் இதை எப்படிச் செய்ய முடிந்தது?" என்று கேட்டார். "அப்பா! உலகப் படத்திற்குப் பின்னால் ஒரு மனிதனின் படம் இருந்தது. நான் மனிதனை சரி செய்தேன்; உலகம் சரியாகிவிட்டது" என்று பதில் சொன்னான். ஆம்! கிறிஸ்தவன் சரியானால், உலகம் சரியாகிவிடும். ஆகவே கிறிஸ்தவனை என்ன செய்ய வேண்டும் என்பதே இப்பொழுதுள்ள பிரச்சனை. யோனாவை என்ன செய்வது என்பதுதான் இப்பொழுதுள்ள அவசரமான பிரச்சனை.

யோனாவைப் போலவே, பரிசுத்த பவுலும் ஒரு முறை கப்பற் சேதத்தில் இருந்தார். இனி தப்பிப் பிழைப்போம் என்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று. அச்சமயத்தில் அக்கப்பலில் பிரயாணம் செய்த தேவ மனிதரான பவுல் மிகுந்த தைரியமாய், அவர்களுக்குச் சொன்ன ஆறுதல் வார்த்தைகள், "ஆகிலும் திட மனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ் சொல்லுகிறேன். கப்பற் சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச் சேதம் வராது... ஆனபடியினால் மனுஷரே, திட மனதாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்." (அப்.27:22, 25) இப்படி ஆறுதலான வார்த்தைகளை சொல்ல வேண்டிய யோனா, பரிதாபமான நிலையில் நிற்கிறான். ஆகவே உலகம் அவனுக்கு ஏதாவது செய்யலாமா என்று பரிவுடன் கேட்கிறது!

உலகத்தில், அஞ்ஞானிகளின் தயவில் நிற்பது போன்ற இழிவான நிலையில் யோனா நிற்கிறான். இன்றும் அநேக கிறிஸ்தவர்கள் ஜீவனுள்ள தேவனது வல்லமையை வெளிப்படுத்துவதற்குப்பதிலாக அஞ்ஞானிகளின் ஆலோசனையில், ஆதரவில் நடக்கின்றனர். இது எத்தனை பரிதாபம்! "உன்னை வாலாக்காமல் தலையாக்குவேன்" என்ற வாக்குத்தத்தைப் பெற்ற தேவனுடைய பிள்ளைகள் தங்கள் வேலைகளில் கருத்தாய் இராதபடியால், இன்னும் தாழ்நிலையில் இருப்பது தேவனுக்கு அவமானம்தான். சகோதரனே! சகோதரியே! விசுவாசிகளின் நன்மதிப்பில் வாழ்; அவர்களின் பரிதாபத்தில் வாழ்ந்துவிடாதே.

**அஞ்ஞானிகள் உன்னைத் தீர்ப்பு செய்யும் நிலையில் இராதே; கர்த்தருடைய வல்லமை வெளிப்படும் தேவ பிள்ளையாயிரு.**

**5**
**அக்டோபர்**

# என்னை எடுத்து சமுத்திரத்திலே போட்டு விடுங்கள்

"அதற்கு அவன்: நீங்கள் என்னை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டு விடுங்கள்; அப்பொழுது சமுத்திரம் உங்களுக்கு அமர்ந்திருக்கும்." (யோனா 1:12)

யோனாவின் இந்தப் பதிலிருந்து இரண்டு காரியங்களைக் கற்றுக் கொள்கிறோம். அவன் இன்னும் தேவனுக்கு கீழ்ப்படியவில்லை என்பதை அறிந்துக் கொள்கிறோம். என்னை நினைவேக்கு அனுப்பிவிடுங்கள் என்று சொல்லியிருக்க வேண்டும். மாறாக, தான் கடலில் விழுந்து செத்துத் தொலைவது நல்லது என்று எண்ணினான். இந்த எண்ணம் அவனது இருதயத்தின் அடித்தளத்தில் பதிந்து விட்டபடியால் பிற்காலதில் அவன் அடிக்கடி "நான் சாக வேண்டும், நான் சாக வேண்டும்" என்று புலம்புகிறான். வார்த்தை என்பது வித்து. அது தேவனிடத்தில் இருந்து புறப்பட்டால் ஜீவனும், பிசாசினிடத்திலிருந்து புறப்பட்டால் மரணமும் உண்டாகும். அவனது கீழ்ப்படியாமையே அவனை மரணத்திற்குத் துரத்துகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய மரண அறிக்கையும் ஜீவனுள்ளது. ஸ்தேவானின் மரண அறிக்கை மிகுந்த வல்லமையுள்ளது.

"கர்த்தராகிய இயேசுவே! என் ஆவியை ஏற்றுக் கொள்ளும்... ஆண்டவரே! இவர்கள் மேல் இந்தப் பாவத்தை சுமத்தாதிரும்" என்ற ஸ்தேவானது வார்த்தைகள் பவுலின் இருதயத்தை ஊடுருவிச் சென்றிருக்க வேண்டும். ஸ்தேவானின் மரணம் பவுலைச் சிந்திக்க வைத்ததென்பதே அநேக வேதப் பண்டிதர்களின் கருத்து. நம்முடைய மரணமும், மரண அறிக்கையும் வேறு சமயத்தவனின் உள்ளத்தில் பரம இராஜ்ஜியத்தின் நம்பிக்கையை உண்டு பண்ண வேண்டும். இந்த அனுபவத்திற்கு முற்றிலும் மாறாக கில்போவா மலையில் சவுல் தற்கொலை செய்து மடிந்தவுடன் அவன் ஆயுததாரியும் அவனோடு பட்டயத்தில் விழுந்து மடிந்து போனான். ஜீவன் ஜீவனையும், மரணம் மரணத்தையும் பிறப்பிக்கும். யோனாவின் அறிக்கை ஒரு ஜீவனற்ற அறிக்கை.

என் நிமித்தம் இந்தப் பெரிய கொந்தளிப்பு உங்கள் மேல் வந்தது என்பதை நான் அறிவேன் என்று யோனா அறிக்கையிட்டும் அவன் மனந்திரும்பவில்லை. "இந்த முறை நான் பாவஞ்செய்தேன்; கர்த்தர் நீதியுள்ளவர்; நானும் என் ஜனமும் துன்மார்க்கர்." (யாத்.9:27) இது பார்வோனின் அறிக்கை. இடிமுழக்கங்களையும் கல்மழையையும் எகிப்தின் மேல் தண்டனையாக அனுப்ப, அதனைக் கண்ட பார்வோன் தன் பாவத்தை உணர்ந்தான். கர்த்தர் கல்மழையை நிறுத்தினார். பார்வோனோ மனந்திரும்பவில்லை. கொந்தளிப்பைக் கண்டு தன் பாவத்தை உணர்ந்தாலும் யோனா தன் தவறைத் திருத்திக் கொள்ளவில்லை. இன்றும் அநேகக் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் வறுமை, வியாதி போன்ற கொந்தளிப்பு ஏற்படும்போது தங்கள் பாவத்தை உணர்ந்து "ஐயோ! நான் பாவஞ் செய்தேன்" என்று அறிக்கையிடுகிறார்கள். ஆனால் தேவனுடைய கிருபையால் வியாதியும், வறுமையும் நீங்கினவுடன் தங்கள் பாவத்தையே தொடர்ந்து செய்கிறார்கள். திருந்தி வாழ்வதைவிட திருந்தாமல் செத்து மடிவதே நலம் என்று எண்ணுகிற மரணப் பிரியர்கள், தியாகச் சாயலைக் காட்டும் துரோகிகள். தேவன் காட்டும் நகரத்தைவிட, சாத்தான் காட்டும் ஆழ்கடலே இவர்களுக்கு அடைக்கலம். அந்தோ பரிதாபம்!

**மரணத்தை விரும்பாதே; ஜீவனைத் தரும் கர்த்தரிடம் திரும்பு!**
**அப்பொழுது உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்.**

6
அக்டோபர்

# மனித முயற்சி உன்னைக் கரை சேர்க்காது

"அந்த மனுஷர் கரைசேரும்படி வேகமாய்த் தண்டுவலித்தார்கள்; ஆனாலும்... அவர்களால் கூடாமற்போயிற்று." (யோனா 1:13)

பாவக் கடலில் விழுந்து விடும் மனிதனை உலகின் எந்த முயற்சியும் பரலோகக் கரையில் சேர்க்காது. யோனாவின் முடிவைக் கேட்ட மற்ற மனுஷர் அவனைக் கடலில் போட மனதில்லாது அவனைக் காப்பாற்ற முயற்சிக்கின்றனர். தேவனுடைய கோபத்தால் கடல் கொந்தளித்துக் கொண்டு இருக்கும் போது மனிதனுடைய அன்போ, உதவியோ ஒருவனைக் கரைசேர்க்க முடியாது. யோனாவின் மீது அவர்கள் கொண்ட அன்போ, பரிவோ அவனைத் தப்புவிக்க முடியவில்லை. அதுபோல பாவியான மனிதன் தானாக மனந்திரும்பாவிடில் அவன் தாயும் தகப்பனும் அவன் மீது காட்டும் பரிவோ, அன்போ, அவனைப் பாவத்திலிருந்து விடுதலைச் செய்யாது. புருஷன் சுவிசேஷத் தண்டு வலிப்பதினால் மனைவியினுடைய வாழ்க்கைக் கப்பல் கரை சேராது. "இரட்சிப்படைய நான் என்ன செய்ய வேண்டும்" என்பதிலிருந்து இரட்சிப்பு தனிப்பட்ட மனிதனுடைய சொந்தப் பிரச்சனை என்பதை அறிந்துக் கொள்கிறோம்.

யோனாவுடைய மனமாறுதலையே தேவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இதை யோனா செய்யாதபடியினால் கடல் முன்னிலும் அதிகமாய்க் கொந்தளித்தது. அவனைக் காப்பாற்ற முயன்ற மனிதக் கரங்கள் பெலவீனமடைந்தன. அவர்கள் தண்டு வலிப்பதினால் சீக்கிரம் ஆபத்தில் இருந்து தப்பிவிடலாம் என்று யோனா நினைத்திருக்கலாம். இன்றும் சில பிள்ளைகள் தங்கள் பெற்றோர்கள் தேவ ஊழியம் செய்வதினால் தாங்கள் மோட்சக்கரை சேர்ந்துவிடலாம் என்று தவறாக எண்ணுகின்றனர். ஏலியின் பக்தியும், ஊழியமும் அவன் பிள்ளைகளான ஓப்னியையும், பினெகாஸையும் கரை சேர்க்க முடியவில்லை. ஒவ்வொருவரும் தங்களை உணர்ந்து மனந்திரும்பாவிட்டால் அவர்கள் பாவக் கடலிலே மூழ்கி அழிவார்கள்.

சகோதரனே! சகோதரியே! உன் ஆவிக்குரிய முயற்சி எப்படியிருக்கிறது? உன் ஆவி கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறதா அல்லது மற்றவர்களுடைய பிரயாசங்களை நம்பியிருக்கிறதா? உன் பெயரால் செய்யப்படும் தர்மம், புண்ணியம் இவற்றை நம்பாதே. நீயே மனந்திரும்பி கர்த்தரைப் பற்றிக் கொள். அவன் தர்ஷீஸ் பட்டணம் வரையிலும் கட்டணம் செலுத்தியிருந்த போதிலும் பாதிப் பிரயாணத்திலே அவன் தூக்கியெறியப்பட வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார். அவன் கட்டிய கட்டணமும் அவன் பிரயாணத்துக்கு உத்தரவாதம் அளிக்கவில்லை. இப்படி பாதியில் முடிந்து போய்விடும் என்று அவன் எண்ணியிருக்கவே மாட்டான். கல்வாரியில் தேவன் சிந்திய கட்டணமாகிய அவருடைய பரிசுத்த இரத்தத்தை நீ ஏற்றுக் கொள்ளாவிட்டால் நீ செலுத்தும் எந்தக் கட்டணமும் உன்னைக் கரை சேர்க்காது. உன் பாவக்கடல் கொந்தளிக்குமே தவிரஅமைதலாய் இராது. இனி யோனாவை தங்களால் காப்பாற்ற முடியாது என்று அறிந்த அவர்கள் யோனாவை எடுத்து சமுத்திரத்தின் ஆழத்தில் போட்டார்கள். சமுத்திரம் தன் மும்முரத்தைவிட்டு அமர்ந்தது. வாழ்க்கைப் பிரயாணத்தில் இருக்கும் அருமையான சகோதரனே! சகோதரியே! நீ நாடின துறைமுகத்தை அடைய வேண்டுமெனில் கர்த்தர் தான் உன்னைக் கொண்டு போய் சேர்க்க வேண்டும்.

**உன் சரீர முயற்சியை விட்டு விட்டு;**
**உன்னைக் கரை சேர்க்க வல்லவரின் கரத்தைப் பற்றிக்கொள்.**

7
அக்டோபர்

# யோனாவின் பணிவு

"என்னிமித்தம் இந்தப் பெரிய கொந்தளிப்பு உங்கள்மேல் வந்ததென்பதை நான் அறிவேன் என்றான்." (யோனா 1:12)

யோனா தன்னைக் கடலிலே தூக்கியெறிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டது ஒரு தற்கொலை முயற்சியல்ல அல்லது எலியாவைப் போன்ற மன விரக்தியினால் உண்டானதல்ல. தன் நாட்டின் மீது அவன் கொண்டிருந்த தேசப்பற்றுதான். கடந்த வருஷங்களில் அசீரியர்கள் இஸ்ரவேலருக்குப் பெருந் தீங்கை செய்திருந்தனர். பகைவர்களைப் பிடித்து இரக்கமில்லாமல் அவர்களுடைய தோலை உரித்து, சித்திரவதை செய்வது நினிவேக்கு ஒரு பெரும் மகிழ்ச்சி. இந்த நினிவே பட்டணம் அழிந்தால்தான் தன்னுடைய இனத்துக்கு ஒரு நிரந்தரமான விடுதலை கிடைக்கும். ஆகவே தேவ கோபம் நினிவே மீது பற்றியெரிய வேண்டும். ஆனதால் தன் இனத்தினுடைய விரோதி முற்றிலுமாய் ஒழிய வேண்டும். இந்த எண்ணத்தினாலும் யோனா நினிவேக்கு பிரசங்கம் பண்ண போகவில்லை. இப்பொழுதும் தான் மரிப்பதினால் நினிவேயை எச்சரிக்க ஆள் இல்லாது போய்விடும். ஆகவே மரிப்பதற்கும் துணிந்தான். உலகம் முழுவதுக்கும் இயேசு மரித்தது போல, தன் இஸ்ரவேல் இனத்திற்காக யோனா மரிக்க சித்தங்கொண்டதினால் அவன் கிறிஸ்துவுக்கு அடையாளமாக இருக்கிறான் என்றும் சில வேதப் பண்டிதர்கள் கருதுகின்றனர்.

ஆனாலும் இத்தகைய துணிவு பாராட்டிற்குரியதல்ல. "மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவை விட்டு சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புகிறேன்." (ரோமர் 9:2) என்பது அப்போஸ்தலனாகிய பவுல் தன் இனத்தாருடைய இரட்சிப்பை எவ்வளவாய் வாஞ்சித்தார் என்பதைத்தான் சொல்லுகிறதே தவிர அவர் நரகத்துக்குப் போக விரும்பினார் என்பதை இவ்வசனம் சொல்லவில்லை. மேலும் நாம் பாதாள வாசலுக்குள் நுழைந்து, மற்றவர்களுக்காகப் பரலோக வாசலைத் திறக்க முடியாது. உலக முழுவதிலுள்ள ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் ஒருவனுக்கு லாபமென்ன?

"என்னிமித்தம் இந்தப் பெரிய கொந்தளிப்பு உங்கள் மேல் வந்ததென்பதை நான் அறிவேன்" என்ற யோனாவின் அறிக்கையும், "இந்த இரத்தப்பழியை எங்கள் மேல் சுமத்தாதிரும்" என்ற மற்றவர்களின் ஜெபமும் கடல் கொந்தளிப்பை அமர்த்தின. இந்த அற்புதம் மற்றவர்களை, தேவனை மகிமைப்படுத்தத் தூண்டியது. எப்படியெனில், "அப்பொழுது அந்த மனுஷர் கர்த்தருக்கு மிகவும் பயந்து கர்த்தருக்கு பலியிட்டு, பொருத்தனைகளைப் பண்ணினார்கள்." (யோனா 1:16) என்று வேதம் சொல்கிறது. முற்றிலும் கீழ்ப்படியாத நிலைமையிலும் யோனாவின் அறிக்கையும் மற்றவர்களை ஜெபம் பண்ண, தேவனை மகிமைப்படுத்த தூண்டியது. நம்முடைய வாழ்க்கையும் அறிக்கையும் சுற்றிலுமாய் இருக்கிற ஜனங்களை தேவனை மகிமைப்படுத்தத் தூண்ட வேண்டும். நம்முடைய வாழ்க்கையில் நேரும் நெருக்கடிகளில் நாம் செயற்படுகிற விதம் அநேகரைக் கிறிஸ்துவுக்குள்ளே அழைக்கிறதாய் இருக்க வேண்டும்.

**கர்த்தருக்கு முன்பான உன்னுடைய பணிவு,
அநேகர் தேவனை மகிமைப்படுத்தத் தூண்டும்.**

# 8 அக்டோபர்

# தேவனுடைய இரட்சிப்பு

"நானோவெனில் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன்; நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன்; இரட்சிப்பு கர்த்தருடையது என்றான்." (யோனா 2:9)

இதுவரையிலும் துதியாமல் மௌனமாய் இருந்த யோனாவின் உதடுகள் இப்பொழுது துதிக்க ஆரம்பித்தன. யோனா இரண்டு உண்மைகளை அறிந்து கொண்டான். எந்தச் சூழ்நிலையிலும் தன்னைத் தேவன் தான் இரட்சிக்க வேண்டுமென்றும், தனக்குச் சித்தமான எவரையும் அவர் இரட்சிப்பார் என்பதையும் அவன் அறிந்து கொண்டான். நினிவே பட்டணத்தைத் தேவன் இரட்சிக்க விரும்பினால், தான் அதற்குக் குறுக்கே நிற்க முடியாது என்பதை அவன் அறிந்துக் கொண்டான். இந்த அறிவினாலே அவன் வாயிலிருந்து பிறந்த அறிக்கை 'இரட்சிப்பு கர்த்தருடையது.' யோனா இரட்சிப்பின் ஒரு உண்மையை அறிந்துக் கொண்டான்.

புதிய ஏற்பாட்டு விசுவாசிகளான நாம் இரட்சிப்பைப் பற்றி சரியாய் அறிந்திருக்கிறோமா? இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று சொல்லுகிற அனேகருடைய வாழ்க்கை சாட்சியுள்ளதாய் இல்லாதபடியினால் பலர் இரட்சிப்புக்குள் வர தடையாகிறது. இரட்சிக்கப்பட்டவர்கள் பரிசுத்தமாய் ஜீவிக்காதது இரட்சிக்கப்படாதவர்கள் மத்தியில் ஒரு பெரிய கேள்விக்குறியை எழுப்புகிறது.

இரட்சிப்பில் 4 பகுதிகள் இருக்கின்றன. அவையாவன:

1. இயேசுவின் இரத்தத்தால் இரட்சிப்பு
2. இயேசுவின் சிலுவையால் இரட்சிப்பு
3. இயேசுவின் ஜீவனாலே இரட்சிப்பு
4. இயேசுவின் ஆவியினாலே இரட்சிப்பு

ஒருவன் இரட்சிப்பின் இந்த நான்கு பகுதிகளையும் பெற்றிருப்பானெனில் அவன் எளிதில் பாவஞ்செய்ய மாட்டான். ஏனெனில் தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான் என்று வேதம் திட்டவட்டமாயச் சொல்லுகிறது. ஆகவே பாவஞ் செய்யாமல் ஒரு மனிதன் வாழ முடியும் என்பதை நாம் அறிந்துக் கொள்கிறோம். ஆனால் பொதுவாக விசுவாசிகள் இந்த உயர்ந்த நிலையை அடைவதில்லை. ஏனெனில் அவர்களுடைய இரட்சிப்பு பூரணமாகாமல் இருக்கிறது. நாம் இரட்சிக்கப்பட்டபோதிலும் நமக்குள் இன்னும் பாவ சுபாவம் இருக்கிறது. இந்தப் பாவ சுபாவம் நம் சரீரத்தைப் பாவஞ் செய்யத் தூண்டிக் கொண்டேயிருக்கிறது. இந்தப் பாவ சுபாவம் நம்முடைய மரணத்தோடு தான் ஒழியும். இயேசு கிறிஸ்துவின் இரத்தம், நாம் செய்த பாவத்தை தொலைக்குமே தவிர பாவ சுபாவத்தை தொலைக்காது. செய்த பாவங்களிலிருந்து விடுதலை பெறுவது மாத்திரம் போதாது. சிலர் இந்த அனுபவத்தை மாத்திரம் பெற்றிருக்கிறார்கள்.

சகோதரனே! சகோதரியே உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சந்திக்க வேண்டிய முக்கியமான கேள்வி, "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" (அப்.16:30) இரட்சிப்பின் திட்டத்தில் மனதின் யோசனைக்கோ, அபிப்பிராயத்துக்கோ இடமேயில்லை. தேவனுக்குக் கீழ்ப்படிவதைத் தவிர வேறு வழியே இல்லை. ஆகவே யோனா அறிக்கையிட்டான். "இரட்சிப்பு கர்த்தருடையது" என்று.

**தேவனால் மட்டுமே கொடுக்கக் கூடியதுதான் இரட்சிப்பு;**
**இதை வேறு எங்கும் பெற்றுக்கொள்ளவே முடியாது.**

**9**
**அக்டோபர்**

# பொருத்தனையைச் செலுத்து

"நானோவெனில் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன்; நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன்." (யோ. 1:9)

தன் தவறை உணர்ந்த யோனா நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன் என்ற தீர்மானத்திற்கு வந்தான். பொதுவாக வாக்குத்தத்தங்களைச் சுதந்தரிக்க விரும்புகிற நாம் அந்த வாக்குத்தத்தத்துக்கு உரிய நிபந்தனைகளை வெகு எளிதில் மறந்து விடுகிறோம். உதாரணமாக நம்முடைய ஆபத்துக் காலத்தில் நாம் வெகு எளிதில் பற்றிக் கொள்ளும் வாக்குத்தத்தம், "ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன்." (சங்.50:15) ஆனால் தேவன் ஒரு நிபந்தனையும் விதித்திருக்கிறார். அந்த நிபந்தனையை நிறைவேற்றிய பின்தான் நாம் தேவனை நோக்கிக் கூப்பிட வேண்டும். அந்த நிபந்தனை என்ன? "நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்து" என்பதே அந்த நிபந்தனை. பொருத்தனை பண்ணினவர்கள் தங்கள் பொருத்தனையைச் செலுத்தாமல் போனால் அவர்கள் தேவனுக்கு முன்பு உண்மையற்றவர்கள். வாக்குத்தவறுபவர்களை தேவன் கனப்படுத்தவே மாட்டார். "ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் அவன் தவறாதிருக்கிறான்."

யோனா தான் நினிவேக்குப் போவேன் என்று பொருத்தனைப் பண்ணியிருப்பான். யோனா அப்படிப் பொருத்தனைப் பண்ணியிருந்தும் அதை நிறைவேற்றுவதில் அவ்வளவு கருத்துள்ளவனாக இல்லை என்று அறிந்துக் கொள்கிறோம். பொருத்தனையைச் செலுத்துவதில் நாம் யெப்தாவைப் போல கருத்துள்ளவர்களாய் இருக்க வேண்டும். "நான் கர்த்தருடைய சமுகத்தில் சொல்லிவிட்டேன், அதை மாற்றக் கூடாது" என்று யெப்தா தன் பொருத்தனையில் உறுதியாய் இருந்தான். பொருத்தனையைக் குறித்து வேதம் நமக்குத் திட்டமாய் போதிப்பது என்னவெனில், "ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொண்டாலும், அவன் சொல் தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக்கடவன்." (எண்.30:2)

"என் இக்கட்டில் நான் என் உதடுகளைத் திறந்து என் வாயினால் சொல்லிய என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன்" என்பதே தாவீதின் வாஞ்சை. (சங்.66:14) அநேகர் பொருத்தனைகளைச் செலுத்த முடியாததற்குக் காரணம் நன்றியில்லா இருதயமே. வேதம் சொல்லுகிறது, "நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு.... உன் பொருத்தனைகளைச் செலுத்து" (சங்.50:14) நன்றியுள்ள இருதயமே கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளைச் செலுத்த முடியும். செத்த கிரியைகளற நல்மனசாட்சி உடையவரே ஸ்தோத்திர பலிகளைச் செலுத்த முடியும். சுத்திகரிக்கப்பட்ட அதாவது பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றவனே ஸ்தோத்திர பலியிடுவான்.

ஆபேல் காணிக்கை செலுத்தும்பொழுது முதலாவது தன் பாவங்கள் கழுவப்படுவதற்காக ஒரு ஆட்டை குற்ற நிவாரண பலியாகச் செலுத்தினான். ஆனால் காயீனோ எடுத்தவுடனே ஸ்தோத்திர பலிகளைச் செலுத்தினான். இந்த பலி தேவனால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. நாம் பொருத்தனையைச் செலுத்துவதற்கு முன்பு இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும். பின்பு நம்முடைய ஸ்தோத்திர காணிக்கைகளைச் செலுத்த வேண்டும்.

**கர்த்தருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்த மறந்துவிடாதே!**

**10**
**அக்டோபர்**

# இரண்டாம் சந்தர்ப்பம்

"இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாகி..." (யோனா 3:1, 2)

யோனா தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனதினால் தேவன் அவனைத் தூக்கி எறிந்து விடவில்லை. இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாகி அவர், நினிவேக்குப் போய் அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி என்றார். தேவனது அழைப்பு அல்லது கட்டளை அவனுக்குத் திரும்பவும் கிடைத்தது. ஊழிய அழைப்பை விட்டு விலகிச் செல்லும் சகோதரனே! சகோதரியே! தேவனது இரண்டாம் சத்தத்தைக் கேட்கிறாயா? இப்பொழுதாவது கீழ்ப்படிந்து விடு. சகோதரனே! சகோதரியே! நீ பரிசுத்த ஜீவியத்தை விட்டே விலகியிருப்பாயானால், பழைய ஏற்பாட்டில் கிடாரியின் சாம்பல் காத்திருப்பது போல இப்பொழுது உனக்காக இயேசுவின் இரத்தம் காத்திருக்கிறது.

முதல் சந்தர்ப்பத்தில் தேவனது கட்டளை, "Arise, go to the Nineveh that great city and CRY against it." (யோனா 1:2) இரண்டாம் சந்தர்ப்பத்தில் தேவனது கட்டளை, "Arise, go unto Nineveh that great city and PREACH unto it." (யோனா 3:2) ஆங்கில வேதாகமத்தின் முதல் கட்டளையில் "நினிவேயை எதிர்த்துக் கூக்குரலிடு" என்று எச்சரிக்கப்பட்ட யோனா, இரண்டாவது கட்டளையில் "நினிவேக்குப் பிரசங்கம் பண்ணு" என்ற அழைப்பைப் பெற்றிருக்கிறான். முன்பு போல யோனா பாவத்தை எதிர்த்து கூக்குரலிட முடியாது என்று அறிந்த தேவன் பாவத்தைக் குறித்து பிரசங்கம் பண்ணு என்று தன் கட்டளையை எளிதாக்கி விட்டார். அதாவது யோனாவின் தரம் தாழ்ந்து விட்டது. "பாவத்துக்கு விரோதமாக இரத்தஞ் சிந்தப்படத்தக்கதாக போராடவில்லையே" என்ற புதிய ஏற்பாட்டுக் கேள்விக்கு நாம் என்ன பதில் சொல்லுவோம்? எப்படியோ உன் அழைப்பை தவறவிட்டிருப்பின் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடி விடாதே. மனச் சோர்வு பள்ளத்தாக்கில் வீழ்ந்து கிடக்காதே. தேவன் இன்னும் உன்னை பிரகாசிப்பார். இப்பொழுதே பரிசுத்த ஆவியானவர் உன் மீது அசைவாடுகிறார். வரலாற்றிலிருந்து உனக்கு ஓர் உதாரணத்தை சொல்லுகிறேன்.

ஆர்ச் பிஷப் கிராண்மெர், ரிட்லி, பிஷப் லேட்றிமெர் இம்மூவரும் சத்தியத்தைப் பிரசங்கித்ததினால் சிறைபிடிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டனர். ஆக்ஸ்ஃபோர்டில் அவர்களுடைய வழக்கு மறு விசாரணைக்கு வந்தது. பிஷப்கள் ரிட்லியும், லேட்றிமெரும் 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 18ல் உயிரோடு எரிக்கப்பட்டனர். ஆர்ச் பிஷப் கிராண்மெர் சத்தியத்தை மறுதலித்துவிட்டார். கிராண்மெரின் இச்செயல் ரோமன் கத்தோலிக்க சபையை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. ஆனால் சீக்கிரத்தில் அவர் மீண்டும் சத்தியத்துக்காக நின்றார். பின்பு தான் மறுதலித்ததுக்காக வருந்தினார். ஆகவே மீண்டும் அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. அவரை எரிப்பதற்காக கட்டையில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. அவரை கட்டி நெருப்பில் போடுவதற்கு முன்பு அவர் தனது வலது கரத்தை அந்த நெருப்பில் நீட்டினார். "எந்த கை அந்த சத்தியத்தை மறுதலித்து எழுதியதோ அந்தக் கை முதலாவது எரியட்டும்" என்று தனது வலது கரத்தை எரித்தார். அந்த வலது கரத்தினால் எழுதப்பட்ட சத்தியத்தை வாசித்து கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களைவிட அவரது எரிந்த கரத்தைக் கண்டு இரட்சிக்கப்பட்டவர்கள் அநேகர்.

**மனந்திரும்புகிற எந்தப் பாவிக்கும் தேவன்**
**இன்னொரு சந்தர்ப்பம் கொடுக்கிறார்.**

11
அக்டோபர்

# தேவனின் இரண்டாம் தொடுதலுக்குப் பின்

"யோனா எழுந்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே நினிவேக்குப் போனான்; நினிவே மூன்றுநாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரமாயிருந்தது." (யோனா 3:3)

யோனா தனது இரண்டாவது அழைப்பைப் பெற்ற பின் மிகவும் ஜாக்கிரதையுள்ளவனானான். யோனா எழுந்து கர்த்தருடைய வார்த்தையின்படியே நினிவேக்குப் போனான். யோனா தன் தவறை உணர்ந்தான். உடனே எழுந்தான். நினிவேயை நோக்கி நடந்தான். சகோதரனே! சகோதரியே! நீ உன் மனக்கிலேசத்தைவிட்டு எழுந்து, அடுத்து செய்ய வேண்டிய பெரிய காரியத்தைச் செய். இதுதான் இரண்டாம் அழைப்பை நிறைவேற்றும் முறை.

இப்பொழுது யோனாவின் பயணம் நெடும் பயணமாயிற்று அது கீழ்ப்படியாமைக்கு கிடைத்த தண்டனை தான். இப்பொழுது எண்ணூறு மைல்கள் அவன் கால்கள் நடக்க வேண்டியதாயிற்று. இந்த வழிநடை வருத்தமும் தேவையற்ற இன்னல்களும் தேவனது முதல் அழைப்பை அசட்டை செய்து விட்டதின் விளைவுகளே என்றாலும் அவன் இரண்டாவது முறை தேவனுக்குக் கீழ்ப்படிந்து விட்டான். தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டுமென்று அவன் இருதயம் இப்போது நிச்சயித்துக் கொண்டதால் அவன் தன் பிரயாணக் களைப்புகளை எல்லாம் மறந்தான். தேவன் மீதுள்ள அன்பு, குன்றுகளையும், மலைகளையும், ஆறுகளையும், கடலையும் கடக்கச் செய்யும். ஆவிக்குரிய ஜீவியத்தில் தோல்வியினால் விரக்தியடைந்த சிலர் இனிக் கர்த்தரை துதித்து என்ன பயன் என்று ஒருநாள் தேவனை நோக்கி ஏறெடுத்த கரங்களை கீழே விட்டு விட்டனர். இப்படி தளர்ந்து போனவர்களை மீண்டும் கைகளையும் முழங்கால்களையும் நிமிர்த்தச் சொல்லுகிறார். அதாவது அவர்கள் மீண்டும் துதிக்கவும் ஜெபிக்கவும் உற்சாகப்படுத்துகிறார். இப்படி இவர்கள் மீண்டும் ஆவிக்குரிய உற்சாகமடையும் போது சபையில் ஒரு காரியம் நடைபெறுகிறது. "முடமாயிருக்கிறது பிசகிப் போகாமல் சொஸ்தமாகும்படிக்கு உங்கள் பாதங்களுக்கு வழிகளை செவ்வைப்படுத்துங்கள்." (எபி.12:13)

நடப்பதற்கு முன்பு நீ எழுந்திருக்க வேண்டுமே! எத்தனை நாள்தான் நீ இப்படியே சோர்ந்து கிடப்பாய் சகோதரனே? வெற்றி இல்லையே என்று தோல்விப் புழுதியில் படுத்துக் கிடக்கும் பரிதாப கிறிஸ்தவனே, நீ எழுந்திரு! எரிகோ கோட்டையை தரைமட்டமாக்கிய தளபதி யோசுவா தலை குப்புற விழுந்து கிடந்தான். ஆயி பட்டணத்தின் தோல்விப் புழுதியை தலையில் போட்டுக்கொண்டு, "ஆ ஆண்டவரே, இப்பொழுது நான் என்ன செய்வேன்" என்று அரற்றினான், புலம்பினான். அப்பொழுது தேவன் அவனுக்கு அளித்த பதில், "எழுந்திரு! நீ இப்படி முகங்குப்புற விழுந்து கிடக்கிறதென்ன?" (யோசு.7:10) யோசுவா எழுந்தான்; இஸ்ரவேல் தேசமே எழுந்தது. ஜான் நான்க்ஸ் எழுந்தார், ஸ்காட்லாந்து தேசமே எழுந்தது, ஜான் வெஸ்லி எழுந்தார் இங்கிலாந்து எழுந்தது. டி.எல். மூடி எழுந்தார். அமெரிக்கா எழுந்தது. சகோதரனே! சகோதரியே! நீ எழுந்தால்தான் இந்திய தேசம் எழும்பும்.

**கிறிஸ்துவின் பலத்தில் நீ மீண்டும் எழுந்துவிட்டால்,**
**மாமலையும் உனக்குக் கடுகாகும்.**

12
அக்டோபர்

# தேவசத்தம்

"யோனா எழுந்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே நினிவேக்குப் போனான்; நினிவே மூன்றுநாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரமாயிருந்தது." (யோனா 3:4)

யோனா நகரத்தில் பிரவேசித்து ஒரு நாள் பிரயாணம் பண்ணி, தேவன் யோனாவுக்கு தந்த எச்சரிப்பின் செய்தியை அப்படியே பிரசங்கித்தான். யோனா இரண்டு காரியங்களை பிரசங்கித்தான். இன்னும் நாற்பது நாள் உண்டு என்று கூறி தேவனது இரக்கத்தை அறிவித்தான். நினிவே கவிழ்க்கப்பட்டுப் போகும் என்று தேவனது நீதியை அறிவித்தான். இப்படி தேவ நீதியையும், தேவ இரக்கத்தையும் பிரசங்கிப்பவனே தேவ மனிதன். இரக்கமும் நீதியுமே தேவ சித்தம். யோனா இவ்விரண்டையும் பிரசங்கித்தான். சகோதரனே! சகோதரியே! நீ வாழும் நகரத்தில் அல்லது கிராமத்தில் தேவ சத்தத்தை தொனிக்கப் பண்ணுகிறாயா?

தேவ செய்தி ஒரு மனிதனையோ, சமூகத்தையோ கலங்கப் பண்ணாது. யோனாவின் செய்தியைக் கேட்ட நினிவேயின் இராஜா தன் சிங்காசனத்தை விட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பை கழற்றிப் போட்டு, இரட்டை உடுத்திக் கொண்டு சாம்பலிலே உட்கார்ந்தான். இப்படி மனிதனை, தேவனை நோக்கி மனம் திரும்பச் செய்வதே தேவ செய்தியின் வல்லமை. தேவ செய்தியைக் கேட்டு மனச் சமாதானத்தை ஒருவரும் இழந்து போகவே மாட்டார்கள். இந்த வல்லமையுள்ள சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் தேவ தூதர்களை அதிகாரப்படுத்தவில்லை. இந்த அதிகாரத்தை தன் சபைக்கே கொடுக்க விரும்பினார். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பே, சபை உண்டாவதற்கு முன்பே, சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் அதிகாரத்தைச் சீஷர்களுக்கு (சபையின் பிரதிநிதிகளுக்கு) கொடுக்க விரும்பிய கர்த்தர், அவர்கள் மேல் ஊதி, பரிசுத்த ஆவியை கொடுப்பதினால் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் அதிகாரத்தை அவர்களுக்கு அளித்தார். சுவிசேஷத்தின் மூலமாகவே அவர்கள் பாவ உணர்வடைகின்றார்கள்; பாவ மன்னிப்பையும் பெறுகிறார்கள். இந்த அதிகாரமே அல்லாமல் மற்றப்படி தனிப்பட்ட முறையில் அவர்களுக்குப் பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தைத் தேவன் கொடுக்கவில்லை, கொடுக்கவும் மாட்டார்.

ஆகையால் நான் உங்கள் பாவத்தை மன்னிக்கிறேன் என்று எந்த ஊழியக்காரரின் சத்தம் கேட்டாலும், அது தேவ சத்தமல்ல, தேவ செய்தியுமல்ல. யோனாவின் பிரசங்கம் நினிவேயின் மக்களை பாவத்தை விட்டு மனந்திரும்பச் செய்தது. தேவ வல்லமையை அந்த மக்கள் உணர ஆரம்பித்தனர். பிரிவினைகளையும், சபை வைராக்கியங்களையும் உண்டாக்குவது தேவ செய்தியே அல்ல. ஆவிக்குரிய பெருமைகளையும் சில சபைகள் மீது துவேஷங்களையும் வளர்ப்பது ஆவியானவருடைய கிரியையல்ல, ஆகவே தேவ சத்தத்தைத் தெளிவாய் அறிந்துக் கொள்ளுங்கள். தேவன் தாமே உங்களுக்கு விருத்தசேதனமுள்ள செவிகளை தருவாராக.

**தேவ செய்தி மனிதனை தேவனை நோக்கி மனந்திரும்பச் செய்யும்; மனித செய்தி மனிதனை தேவனை விட்டு பின்வாங்கச் செய்யும்.**

13
அக்டோபர்

# தேவ செய்தியின் வல்லமை

"அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள்; பெரியோர்முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக்கொண்டார்கள்." (யோனா 3:5)

யோனா மூலம் தேவ செய்தியைக் கேட்ட நினிவே மக்கள் தேவனை நோக்கி கதறினர். பாவ உணர்வடைந்து புலம்பினர். ஆடம்பர உடைகளை அகற்றிப் போட்டு, இரட்டுடுத்தி, சாம்பலிலே விழுந்தனர். சிங்காசனத்தில் வீற்றிருந்த நினிவே ராஜாவும் தன் ராஜ உடையைத் தூக்கியெறிந்து விட்டு, துக்க உடை உடுத்தி சாம்பலிலே உட்கார்ந்தான். களியாட்டும், நடனமும், ஆடலும், பாடலும் நிறைந்த அரண்மனை, தேவ செய்தி கேட்டு நடுங்கி, துக்கத்தில் மூழ்கியது. பசியையும், தாகத்தையும் மறந்து மன்னனும் மக்களும், மாடுகளும் ஆடுகளும் சோகத்தில் வீழ்ந்தனர். நினிவேயில் பிறந்த அரசக் கட்டளை என்னவெனில் "மனுஷரும், மிருகங்களும் இரட்டினால் மூடிக் கொண்டு தேவனை நோக்கி உரத்த சத்தமாய் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும், தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள்." (யோனா 3:8) இப்படி கொலு மண்டபத்தையே அதிர வைத்தது யோனாவின் தேவ செய்தி. அவனது செய்தி மூன்று விளைவுகளை ஏற்படுத்தியது.

(1). அவர்கள் தேவனை விசுவாசித்தார்கள். (2). அவர்கள் தங்களைத் தாழ்த்தினார்கள். (3). தேவனை நோக்கி அழுதார்கள்.

ஒரு தேவ செய்தி இம்மூன்று விளைவுகளை உண்டு பண்ணாவிட்டால் அது தேவ செய்தியே அல்ல. பாவத்தைக் கண்டிக்காத பிரசங்கங்கள், தேவனது நியாயத்தீர்ப்பைக் குறித்து ஜனங்களை எச்சரிக்காத செய்திகள் கூர் மழுங்கின பட்டயங்கள். இவைகளை கொண்டு வல்லமையாக ஊழியம் செய்ய முடியாது. இப்படிப்பட்ட பயனற்ற ஆயுதங்களினால் ஆவிக்குரிய விளையாட்டுகள் நடக்கிறதே தவிர போராட்டங்கள் நடப்பதில்லை. இந்தியா எரிந்து கொண்டிருக்கும் போது சகோதரனே! சகோதரியே! நீ ஆடுகிறாயா அல்லது போராடுகிறாயா? யோனா நினிவே நகரத்தின் மீது போர் தொடுத்தான்; நகரத்தை வென்றான். ஜனங்கள் கர்த்தரை நோக்கிக் கதறி அழுதார்கள். பாவிகள் பிரசங்கத்தைக் கேட்கும் பொழுது சிரித்துக் கொண்டிருப்பார்களானால் அச்செய்தி வல்லமையில்லாத செய்தி. புதிதாய் பிறந்த குழந்தை நிச்சயமாய் அழ வேண்டும். நினிவே தேவனை நோக்கி அழுதது. ஜனங்கள் தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினார்கள். இதுவே யோனாவின் பிரசங்கத்தின் வல்லமை. பரலோகமும் நினிவேயை அழிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மாற்றியது. தேவ செய்தி தெளிவான மனந்திரும்புதலை உருவாக்கும். இன்றைக்கு இரட்சிக்கப்படாத கூட்டத்தார் சபையில் பெருகி வரக் காரணம் வல்லமையற்ற ஊழியங்களே.

ஒரு பெயர் கிறிஸ்தவர் தன் கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றி சாட்சியிடுவதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். "நான் மதுபானம் குடிக்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் ஒழுங்காய் ஜெபிக்கிறேன்." இவரிடத்தில் இரண்டு பிசாசுகள் இருக்கின்றன. ஒன்று குடிப்பழக்கம்; மற்றொன்று ஜெபிக்கிறேன் என்ற சுயநீதி. இவ்விரண்டு பிசாசுகளோடு அவர் ஆலயத்துக்குச் செல்ல காரணம், அவர் செல்லும் ஆலயத்தின் பிரசங்க பீடம் பாவத்துக்கு விரோதமாய் எரிமலையாய் மாறாததுதான். யோனா தேவனது நியாயத்தீர்ப்பை கக்குகிற எரிமலையானான். நீயும் ஒரு எரிமலையாய் மாறுவாயா?

**தேவனாலே தொடப்படாத செய்தி மக்கள் இதயத்தைத் தொடாது.**

# ஊழியத்தில் மாம்சீகம்

14
அக்டோபர்

"யோனாவுக்கு இது மிகவும் விசனமாயிருந்தது; அவன் கடுங்கோபங்கொண்டு" (யோனா 4:1)

நினிவே மனந்திரும்பியது, ஆனால் யோனா கடுங்கோபங்கொண்டான். கடமை உணர்வினாலே அவன் பிரசங்கித்தான். அவன் இதயத்திலே ஆத்தும பாரம் இல்லை. அவன் செய்தியில் தேவ வல்லமை இருந்தும் அவன் இதயத்தில் தேவ அன்பு இல்லை. ஒரு பாவி மனந்திரும்புவதினால் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது. இரத்தம் சிந்திய கர்த்தரும், அவரைச் சுற்றி நிற்கிற தூதர்களும் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றனர். பிரசங்கித்த யோனாவோ மன சஞ்சலத்தில் இருக்கிறான். மூத்த குமாரன் சந்தோஷமடைவதற்குப் பதிலாக கோபமடைந்தான். நினிவே மனந்திரும்ப வேண்டும் என்ற வாஞ்சையில் யோனா பிரசங்கிக்கவில்லை. கடுமையான கடமை உணர்வு அவனை பிரசங்கிக்க வைத்தது.

இரக்கத்தையும், நியாயத்தீர்ப்பையும் குறித்து அவன் பிரசங்கித்தாலும் இரக்கத்தையல்ல, நியாயத்தீர்ப்பையே அவன் விரும்பினான். யோனாவின் உதடுகள் தேவ அன்பையும் தேவ தண்டனையையும் பிரசங்கித்தாலும் அவன் உள்ளமோ நினிவேயின் மேல் தேவ கோபத்தையே வாஞ்சித்தது. தன் பிரசங்கத்தை நினிவே மக்கள் கேட்க மாட்டார்கள். ஆகவே அவர்கள் மீது தேவ கோபம் அதிகமாகும், இஸ்ரவேலின் எதிரிகளான அசீரியர்கள் அழிந்து போவார்கள் என்ற சுயநலத்தோடு அவன் பிரசங்கித்தான். காலமெல்லாம் தங்களுக்கு சத்துருவாயிருந்த ஒரு இனம் அழிய வேண்டும் என்ற நோக்கத்தோடு பிரசங்கித்தான். பார்வைக்கு அவன் ஒரு (Balanced Preacher) "நடுநிலையுள்ள பிரசங்கியார்". இப்படிப்பட்ட சுயநல பிரசங்கிமார்களைக் குறித்துப் பவுலும் குறிப்பிடுகிறார். "சிலர் பொறாமையினாலும், விரோதத்தினாலும் சிலர் நல்மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள்." சிலர் தன் கட்டுகளோடே உபத்திரவத்தையும் கூட்ட நினைத்து, சுத்த மனதோடே கிறிஸ்துவை அறிவியாமல் விரோதத்தினால் பிரசங்கிப்பதையும் அதில் மாம்சீகம் கிரியை செய்வதையும் படம் பிடித்து காட்டுகிறார் பவுல்.

பிற சபைகள் தேவனுக்குள் வளர்ந்து பெருகுவதைக் கண்டு சந்தோஷமடைவதற்குப் பதிலாக பொறாமையும், எரிச்சலும் ஒருவன் அடைவானானால் அவன் பாரபட்சமுள்ளவன்தானே! ஏறுக்குறைய யோனாவை போலத் தானே இருக்கிறார்கள். இஸ்ரவேலருக்கு மா்த்திரம் தான் இரட்சிப்பு என்பது அவனது கொள்கை. மற்றவர்களைவிட தங்களை விசேஷித்தவர்கள் என்று பெருமைப்படுத்திக் கொள்வது யோனாவின் குணமே. இத்தகைய சுபாவம் இன்றைய கிறிஸ்தவ உலகில் பல நூதன உபதேசங்களாக உருவெடுத்திருக்கின்றது. நினிவே மக்களை யோனா அற்பமாய் எண்ணியது போல இந்நூதன உபதேசங்களும் பிற சபைகளை அற்பமாய் எண்ணத் தூண்டுகின்றன. சகோதரனே! சகோதரியே! நம்முடைய தேவனாகிய கர்த்தர் துன்மார்க்கன் துன்மார்க்கத்தில் சாவதை விரும்பாதவர். துன்மார்க்கனை துன்மார்க்கதத்தினின்று விடுவிப்பதே அவரது நோக்கம். ஆகவே நீங்கள் ஆத்ம பாரத்தோடேதான் பிரசங்கிம் பண்ணுங்கள். அப்பொழுது ஜனங்கள் இரட்சிக்கப்படுவார்கள். சபைகள் வளர்ந்து பெருகும். கர்த்தர் நாமம் மகிமைப்படும்.

**பாரமற்ற இருதயத்திலிருந்து புறப்படும் செய்திகள் சாரமற்றவைகள்.**

15
அக்டோபர்

# கோபத்தில் ஜெபம்

"கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: ஆ கர்த்தாவே, நான் என் தேசத்தில் இருக்கும்போதே நான் இதைச் சொல்லவில்லையா? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன்." (யோனா 4:2)

ஜெபம் ஒரு ஆவிக்குரிய செயல்; அதனையே கோபத்தில் செய்வது எத்தனை பரிதாபமானது! பொதுவாக ஜனங்கள் கவலையினால் தூண்டப்பட்டு ஜெபிக்கிறதை நாமறிவோம். ஆனால் கவலையோடு ஜெபிப்பது சரியல்ல. "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல்.... தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று வேதம் சொல்லியிருக்க, கவலையோடு ஜெபிக்கும் போது விசுவாசத்தோடு ஜெபிக்க முடியாது. அது போலவே கோபத்திலும் ஜெபிக்கக்கூடாது.

தேவனை எண்ணி மகிழ்வது தியான ஜெபம். தனிப்பட்ட பிரச்சனைகளை தேவ சமூகத்தில் கொண்டு வருவது தனி ஜெபம். தேவனது காரியங்களுக்காக தேவ பிள்ளைகள் சேர்ந்து ஜெபிப்பது சபை ஜெபம். இதில் மூன்றாவது வகை ஜெபத்தை ஜெப ஊழியம் என்று அழைக்கிறோம். சபை ஜெபம் (The Ministry of Prayer) ஜெப ஊழியத்தை செய்யும் பங்காளர்கள் ஒரு மனதோடு இருக்க வேண்டும். கசப்பு, வெறுப்பு, கோபம் இப்படிப்பட்ட உணர்வுகளினால் நிறைந்து ஜெபத்தைச் செய்ய முடியாது.

நினிவே மக்களோடு சேர்ந்து தேவனை ஸ்தோத்தரித்து மகிழ வேண்டிய யோனா தனியே பிரிந்து சென்று ஆத்திரத்தில் ஜெபிக்க முற்படுகிறான். மனந்திரும்பிய நினிவே மக்களோடு சேர்ந்து ஜெப ஊழியத்தை செய்ய மனமற்ற யோனா தனி ஜெபம் செய்வதையே நாடி தனி ஜெபத்தில் எரிமலையாய் குமுறுகிறான். இப்படி இவனைத் தனிமைப்படுத்தியது தேவ சமூகத்திலுள்ள வாஞ்சையல்ல. நினிவே மக்கள் மீதுள்ள வெறுப்பு. தேவ அன்பிலே நிறைந்து ஜெபிக்க வேண்டிய யோனா, முன் கோபத்தில் நிறைந்து ஜெபித்துக் கொண்டிருக்கிறான். குடும்பத்தில் சில கோப ஜெபங்கள் ஏறெக்கப்படுகின்றன. "இயேசுவே எனக்கு நீர் தந்த பாரச் சிலுவையான என் கணவரைச் சந்தியும்" என்பது ஆத்திரமான ஜெபமே.

நினிவே மக்கள் மீது யோனா கொண்ட கோபம் தேவன் மேல் திரும்பியது. வளர்ந்த ஊழியக்காரனாகிய, தீர்க்கதரிசியாகிய யோனாவின் வாழ்க்கையில் இப்படிப்பட்ட கோபதாபங்கள் ஏற்படவே கூடாது. விசுவாசிகள் கோபத்தில், ஆத்திரத்தில், ஜெபிப்பது ஊழியம் செய்வது இவைகளெல்லாம் தெய்வப் பணிகளில் கடுமையான பிரச்சனைகளை உருவாக்கிவிடும். இன்று புதிது புதிதாக ஏற்படும் சபை பிரிவுகள், சண்டைகள் எல்லாம் ஊழியத்தில் ஏற்பட்ட கோபத்தினால் உருவானவைகள் தான். சகோதரனே! சகோதரியே! நீயும் கோபத்தில் ஜெபிக்கும் யோனாவாக மாறிவிடாதே. தேவன் இதை விரும்ப மாட்டார்.

**ஜெப உணர்வுகளை ஆவியானவர் துண்ட வேண்டுமேயன்றி மாம்சீகமான கோபம் ஜெபத்தைத் தூண்டக் கூடாது.**

# தவறான ஜெபம்

**16**
**அக்டோபர்**

"இப்போதும் கர்த்தாவே, என் பிராணனை என்னைவிட்டு எடுத்துக்கொள்ளும்; நான் உயிரோடிருக்கிறதைப்பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான்." (யோனா 4:2,3)

தேவனது மனதை அறிந்து, அதற்கேற்ப ஜெபிப்பதுதான் தேவசித்தமான ஜெபம். "நீர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிவேன்." (யோனா 4:2) என்று தேவனது சித்தத்தை அறிந்த யோனா, முற்றிலும் விரோதமாகவே ஜெபிக்கிறான். தேவ சித்தமே மாற வேண்டும் என்றுதான் யோனா விரும்புகிறான். இது எத்தனை அறியாமை? "ஒருவரும் கெட்டு போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்." (2 பேதுரு 3:9) என்ற உண்மையை யோனா அறிந்திருந்தும், அந்த உண்மை அவனுக்கு கசப்பாகவே இருந்தது. ஒருவனுக்கு வேதம் கசப்பாக இருந்தால் அவன் ஜெபமும் தவறாகவே இருக்கும். யோனாவின் ஜெபமும் தவறுகிறது.

இப்படிப்பட்ட ஜெபம் மிகவும் தவறான ஜெபம், உண்டாக்கிய தேவனைப் பார்த்து, நீ ஏன் என்னை உண்டாக்கினாய் என்று ஜெபிப்பது. இந்த ஜெபத்திற்குப் பின்னால் தற்கொலை ஆவி கிரியைச் செய்துக் கொண்டிருக்கிறது. இந்த ஆவி ஒருவனில் பலம் பெறுமெனில், முடிவில் அவன் தற்கொலை செய்துக் கொள்வான். கோபம், எரிச்சல் இந்த உணர்வுகள் மனிதனைத் தற்கொலைக்குத் தூண்டும். ஆகையால் இத்தகைய உணர்வுகள் உங்களில் கிரியைச் செய்யாமற் பார்த்துக் கொள்ளுங்கள்.

இதே தவறை பெரிய தீர்க்கதரிசியான எலியாகூட செய்திருக்கிறான். தான் சாக வேண்டும் என்று கோரி, போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்; "நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல" (1இரா.19:4) என்ற எலியாவின் ஜெபத்தில் பெரிய ஏமாற்றத்தின் எதிரொலியைக் கேட்கிறோம். அவன் உண்மையில் சாக விரும்பியிருந்தால், அவன் வனாந்தரத்திற்கு ஓடிப் போக அவசியமே இல்லை. பட்டணத்தின் வாசலிலே இருந்திருந்தால் போதும், யேசபேலின் பட்டயம் அவனைக் கொன்று போட்டிருக்கும். எலியாவின் ஜெபத்திலிருந்து இரண்டு காரியங்களை விளங்கிக் கொள்கிறோம்.

1. எலியா யேசபேலுக்கு பயந்து சாக விரும்பவில்லை.
2. எலியா தன் ஊழியத்தை தோல்வியாக எண்ணி மனச்சோர்வில், சாக வேண்டுமென்று விரும்பினான்.

எலியாவை மரணத்திற்கு துரத்தியது யேசபேலின் வார்த்தைகள்தான். "நாளை நான் இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதே போனால் தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள்" (1இரா.19:2) என்ற வார்த்தைகள் இன்னும் இஸ்ரவேலில் விக்கிரகங்களாகிய தேவர்கள் ஒழிந்து போவில்லை என்கிற கசப்பான உண்மையைப் புலப்படுத்துகிறபடியால், எலியா மிகவும் வேதனை அடைந்தான். தன்னுடைய முற்பிதாக்களால்கூட விக்கிரக ஆராதனையை ஒழிக்க முடியாத நிலையில், தான் எவ்விதத்திலும் தன் முற்பிதாக்களைவிட நல்லவனில்லை, ஆகவே தன்னாலும் இனி விக்கிரக ஆராதனையை ஒழிக்க முடியாது என்று மனச்சோர்வில் விழுந்து, "போதும் கர்த்தாவே" என்ற புலம்பல் ஜெபத்தை ஏறெடுத்தான். இது சரியான ஜெபமல்ல.

**உன் ஜெபம் மனச் சோர்வின் எதிரொலியாக, தோல்வியின் இசையாக இருப்பின், அது முற்றிலும் தவறான ஜெபமே!**

17
அக்டோபர்

# தவறான எதிர்பார்ப்பு

"பின்பு யோனா நகரத்திலிருந்து புறப்பட்டு, நகரத்துக்குக் கிழக்கேபோய், அங்கே தனக்கு ஒரு குடிசையைப் போட்டு, நகரத்துக்குச் சம்பவிக்கப்போகிறதைத் தான் பார்க்குமட்டும் அதின் கீழ் நிழலில் உட்கார்ந்திருந்தான்." (யோனா 4:5)

கர்த்தர் தாம் சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதை செய்யாதிருந்திருக்கும் வேளையில் மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்க வேண்டிய யோனா, எப்படியாவது தேவனது நியாயத்தீர்ப்பு அக்கினி நினிவே மீது பற்றியெரிய வேண்டுமென்று தொடர்ந்து விரும்பினான். தேவன் மீண்டும் மனம் மாறி நகரத்தை அழிப்பார் என்றே அவன் எண்ணியிருந்தான். தேவ கோபாக்கினையை அவன் பிரசங்கித்து நாட்டை எச்சரிக்க, நினிவேயும் அதன் மன்னனும் உடனே மனந்திரும்பினார்கள்.

தங்கள் நாட்டிற்கு வரும் தேவ கோபத்தைப் பற்றி முன்னரே எச்சரித்த யோனாவை நிச்சயம் மன்னன் கௌரவித்திருப்பான். தெருவில் நின்ற அவனுக்கு அழகான வசதியான தங்குமிடத்தையும் கொடுத்திருப்பான். ஆனால் யோனாவோ நகரத்தில் தங்காமல் உடனே வெளியேறிவிட்டான். ஏனென்றால் கர்த்தர் நிச்சயமாய் அந்த நகரத்தை அழிப்பாரென்றும் தான் அந்த அழிவினின்று தப்ப வேண்டுமென்று எண்ணியே அந்த நகரத்தை விட்டுச் சென்று விட்டான். இது மெச்சத் தகுந்த விசுவாசமல்ல. அவனுடைய விசுவாசம் மலையளவு இருந்தாலும் பாவிகள் மீது அன்பில்லா அவனுடைய விசுவாசம் "சத்தமிடுகிற வெண்கலம் போலவும் ஓசையிடுகிற கைத் தாளம் போலவுமிருந்தது."

இஸ்ரவேலுக்கு விரோதமான ஒரு தேசம், தேவனிடத்தில் மனந்திரும்பினாலும் அத்தேசம் அழிக்கப்பட்டு போகும் என்பது யோனாவின் தவறான எதிர்பார்ப்பு. தங்கள் சபைகளைத் தவிர மற்ற சபைகளெல்லாம் அழிந்து போகுமென்று ஒரு மதிகேடான எதிர்பார்ப்பு. யோனா நகரத்துக்கு வெளியிலே ஒரு குடிசையைப் போட்டு நினிவே பட்டணம் சாம்பல் மேடாக மாறுவதைக் காணக் காத்திருந்தான். இன்று ஊர் நடுவே கூடாரம் போட்டு பிற சபைகளெல்லாம் வருகையில் காணப்படாது என்று சவால் விடுவது தேவனைச் சரியாக விளங்கிக் கொள்ளாதத் தன்மை. இஸ்ரவேலருக்கு மாத்திரம் யேகோவா தேவன் என்று யோனா எண்ணியது போல தங்கள் சபைக்கு மாத்திரம் கிறிஸ்து தேவன் என்பது கிணற்றுத் தவளையின் அனுபவம்.

ஒரு கற்பனையான சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு பக்தன் கண்ட தரிசனமே அது. அவருடைய தரிசனத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடலைப் பத்திரமாகக் கடந்து போகின்றனர். அவ்வாறு செய்ய எண்ணித் துணிந்த எகிப்தியரோ கடலில் மாண்டு மூழ்கிவிடுகின்றனர். இதனைக் கண்ட தேவதூதர்கள் மிகுந்த உற்சாகத்தில் துள்ளிக் குதிக்கின்றனர். அப்பொழுது பிதாவாகிய தேவன் கன்னங்களில் கண்ணீர் வடிய தூதர்களை நோக்கி, "ஏன் துள்ளிக் குதிக்கிறீர்கள்; என் எகிப்தின் பிள்ளைகள் இப்படி அழிந்து போய் விட்டார்களே" என்று பாசமுடன் கூறுகிறார். தேவனது மனதை இத்தரிசனம் நன்றாக படம் பிடித்துக் காட்டுகிறது. சகோதரனே, சகோதரியே, இந்தத் தேவனது மனதை அறிந்து, தேவன் எதை எதிர்பார்க்கிறாரோ, அதையே எதிர்பார்த்து ஜீவிப்பது, ஊழியம் செய்வது எத்தனை ஆசீர்வாதமானது! நீங்களும் அப்படியே செய்து தேவனை மகிமைப்படுத்துங்கள்.

**நம் எதிர்பார்ப்புகள் தேவனது எதிர்பார்ப்புகளாக இருக்கட்டும்!**

18
அக்டோபர்

# உண்மையான சந்தோஷம்

"...அந்த ஆமணக்கின்மேல் யோனா மிகவும் சந்தோஷப்பட்டான்." (யோனா 4:6)

எரிச்சல், ஆத்திரம், கோபம் இவைகளின் விளைவாக யோனா விரக்தியாக அமர்ந்திருக்கும் பொழுது, அவனை அழைத்த தேவன் அவன் மீது இரக்கம் கொண்டார். அவனுடைய தவறை மறந்து, அவனுக்கு உதவிச் செய்யும்படி ஒரு ஆமணக்குச் செடியை தேவன் உண்டு பண்ணினார். அவனை கொடுமைப்படுத்தும் வெயிலினின்று அவனை பாதுகாக்க தேவன் ஒரு வழியை உண்டுப் பண்ணினார். உடல் வருந்தும் பொழுது, உள்ளம் உறுதியாக இருக்காது. மனம் சோர்ந்து படுத்த எலியாவிற்கு தேவன் முதலாவது அடையும், தண்ணீரும் கொடுத்தார். நமது சரீரத் தேவைகளை சந்திக்க தேவன் ஆர்வமுடையவராகவே இருக்கிறார். ஆவிக்குரிய காரியங்களுக்கு முதலிடம் கொடுத்த தேவன் பூமிக்குரிய ஆசீர்வாதங்களை அலட்சியப்படுத்துகிறவரல்ல.

தேவனுடைய இராஜ்ஜியத்தை முதலாவது தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூட கொடுக்கப்படும்" என்று உலக ஆசீர்வாதங்களுக்கு தேவன் உத்தரவாதம் அளித்திருக்கிறார். ஆனால் உலக ஆசீர்வாதங்களையே நாம் பிரதானமாக எண்ணக் கூடாது. சொத்து, நிலம், பொருள், பணம் இவைகளெல்லாம் வாழ்க்கைக்கு வேண்டிய உபகரணங்களே தவிர வாழ்க்கையின் இலக்குகளல்ல. "இம்மைக்காக மாத்திரம் கிறிஸ்துவின் மீது நம்பிக்கையுள்ளவர்கள், உலகில் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்கள்" என்று வேதம் சொல்லவில்லையா? யோனாவோ நினிவே மக்களின் மனந்திரும்புதலாகிய ஆவிக்குரிய ஜீவியத்தில் சந்தோஷப்படாமல் ஒரு ஆமணக்கு செடியின் மீது சந்தோஷப்பட்டான்.

எந்த ஆமணக்குச் செடி யோனாவுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்ததோ, அது மறுநாளிலே காய்ந்துப் போயிற்று. அந்த ஆமணக்குச் செடியை அரிக்க தேவன் ஒரு பூச்சிக்குக் கட்டளையிட்டார். இப்படியே உலக சந்தோஷங்கள் உதிர்ந்துப் போகும். இன்றைக்கு உனக்கிருக்கும் செல்வம் "உன்னைவிட்டுச் செல்வோம்" என்று விடைப் பெற்று விடும். தேவனது முகம் ஒரு மனிதனுக்கு மகிழ்ச்சியாயிராமல், மனைவியின் அழகான முகமே அவனுக்கு பிரதான சந்தோஷமாக இருக்குமெனில் அந்த அழகும் ஒரு நாள் மங்கிவிடும். தேவன் அந்த அழகின் மீது ஒரு பூச்சியைக் கட்டளையிடுவார். ஆகவே உன் சந்தோஷத்தைக் குறித்து ஜாக்கிரதையாயிரு.

யோனா சூழ்நிலைகள் மீது சந்தோஷப்பட்டான். சூழ்நிலைகள் மாறும் போது அவன் சந்தோஷம் மாறியது. "அத்திமரம் துளிர்விடாமற் போனாலும்.... நான் என் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன். என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்." (ஆபகூக் 3:17) காய்க்காத அத்திமரம், கனி கொடாத திராட்சை செடி, தரிசன வயல் வெளிகள், மடிந்து விழும் ஆடு, மாடுகள் இவைகளினால் ஒருவனுக்கு நிச்சயம் துக்கம் உண்டாகும். ஆனால் இந்தத் துக்கம் ஒரு விசுவாசியின் இரட்சிப்பின் சந்தோஷத்தை அழித்துவிடவே முடியாது. சகோதரனே, சகோதரியே, இந்தத் துக்கத்திலும் கர்த்தரையே உறுதியாகப் பற்றிக்கொள்ளும்பொழுது தேவன் தரும் பதில், "உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்."

**சூழ்நிலைகளினால் உண்டாகும் துக்கம் உன் இரட்சிப்பின் சந்தோஷத்தை அழித்துப் போடக் கூடாது.**

19
அக்டோபர்

# இன்னும் கற்றுக் கொள்ளாத யோனா

"சூரியன் உதித்தபோது தேவன் உஷ்ணமான கீழ்க்காற்றைக் கட்டளையிட்டார்; அப்பொழுது வெயில் யோனாவுடைய தலையில் படுகிறதினால் அவன் சோர்ந்துபோய், தனக்குள்ளே சாவை விரும்பி: நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான்." (யோனா 4:8)

எத்தனையோ சூழ்நிலைகளை உருவாக்கி யோனாவுக்கு ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுத்தர தேவன் பிரயாசப்பட்டார். அவர் உலகம் முழுவதற்கும் தேவன் என்பதையும் எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே தேவனது சித்தம் என்பதையும் யோனா கற்றுக் கொள்ளத் தவறினான். இஸ்ரவேலருக்கு மாத்திரம் அவர் தேவனென்று எண்ணினான். "மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி பூமி மீதெங்கும் குடியிருக்கச் செய்து அவர்கள் மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் அவர் கட்டளையிடுகிறார்" என்ற பேருண்மையை இன்னும் கற்றுக் கொள்ளவில்லை.

கர்த்தர் உஷ்ணமான கீழ்க்காற்றைக் கட்டளையிட்டதின் நோக்கம் யோனாவை உணர்வடையச் செய்வதே. யோனாவை உணர்வடையச் செய்ய சூழ்நிலைகளை தேவன் தொட்டார். இன்னும் கொஞ்சம் உணர்வடையச் செய்ய அவன் மனசாட்சியைத் தொட்டார். அவன் இன்னும் உணர்வடையாததினாலே அவன் சரீரத்தையே தொடுகிறார். அவன் சரீரத்தில் வெயில் பட்டவுடனே அந்த வெம்மையை அவன் தாங்கக் கூடாததாயிருப்பின் அவன் மனச்சோர்வு அடைவதற்குப் பதிலாக மனந்திருந்தியிருக்க வேண்டும். இந்த வெயிலே இவ்வளவு வேதனையாக இருக்குமெனில், நரகம் எவ்வளவு வெம்மையாக இருக்கக் கூடும் என்பதை அவன் எண்ணியிருக்க வேண்டும். அப்படி எண்ணியிருப்பானானால் அவன் நினிவேயின் இரட்சிப்பைக் குறித்து எவ்வளவாய் சந்தோஷப்பட்டிருப்பான். அந்த இரட்சிப்பின் சந்தோஷத்தினாலே அவன் தேவனை எத்தனையாய் துதித்திருப்பான். தேவனது பாடத்தைக் கற்றுக் கொள்ளாத யோனாவோ எரிச்சலின் ஆவியில் நிறைந்தான். இந்த எரிச்சலின் ஆவி அவனை மீண்டும் சாக வேண்டும் என்ற எண்ணத்திற்கு துரத்தியது. "நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான்" என்று புலம்பத் தொடங்கினான்.

சகோதரனே! சகோதரியே! நீ இந்தப் பாடத்தை முழுமையாய் கற்றிருக்கிறாயா? யோனாவைப் போல் ஒரு நினிவே அழிய வேண்டுமென்று எண்ணாமலிருக்கலாம். ஆனால் மற்றவர்களது இரட்சிப்பைக் குறித்து அக்கறையோடிருக்கிறாயா? அல்லது சபையைக் குறித்து தூற்றித் திரிந்து கொண்டிருக்கிறாயா? ஆத்தும பாரமுள்ளவனாயிரு. எப்பொழுதும் சபைக்கு ஆதரவாயிரு. யோனா நினிவேயின் மீதுள்ள கசப்பினால் தேவனுக்கு எதிரே எரிச்சலின் கொடியை ஏற்றியது போல், நீயும் ஊழியத்திற்கு எதிரே உன் கலகக் கொடியை ஏற்றாதே. நான் சாகும் வரை எரிச்சலாயிருப்பது நல்லது என்று யோனா புத்தியீனமாய் சொன்ன வார்த்தைகளை நீயும் சொல்லி விடாதே! ஜீவனுள்ள நாட்களில் ஆத்துமாக்களை சம்பாதிப்பதில் செலவிடு. பரலோகில் உனக்குப் பலன் உண்டு.

**உலகில் மகிவும் வலுவுள்ளது ஐக்கிய நாட்டு சபையல்ல, தேவனது சபையே.**

20
அக்டோபர்

# தேவனது எதிர் நடவடிக்கை

"வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம்பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ என்றார்."
(யோனா 4:11)

இந்த வார்த்தைகள் தேவனது அன்பை வெளிப்படுத்துகின்றன. இந்த அன்பின் தேவனிடம் யோனா எத்தனை புத்தியீனமாகத் தர்க்கம் செய்கிறான். கடைசி மட்டிலும் யோனா தன் தவறை உணர்ந்ததாகத் தெரியவில்லையே. இது எத்தனை பரிதாபம்! அவனுக்கு உணர்வுண்டாகும்படி தேவன் தான் எத்தனை அன்பாகப் பேசுகிறார். "யோனாவே! நீ பிரயாசப்படாததும் நீ வளர்க்காததுமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே.... நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ?" என்ற வார்த்தைகள் யோனாவின் இதயத்தை உடைத்திருக்க வேண்டும்.

நினிவே உயிர்மீட்சிப் பெறும் பொழுது அதற்குக் காரணமான தீர்க்கதரிசி தரிசனம் இழந்து நிற்பது தேவனுக்கு எத்தனை துக்கமாக இருந்திருக்கும். அவன் இழந்த தரிசனத்தைத் திரும்பப் பெறுமாறு, தேவன் எத்தனையோ முயற்சிகளை எடுத்தார். அவன் மேல் விழுந்த சீட்டு, கடலின் கொந்தளிப்பு. விழுங்கும் மீன், ஆமணக்குச் செடி, தகிக்கும் வெயில் இப்படி பல சூழ்நிலைகளைக் கொண்டு, தேவன் தன் அன்பினால், பரிதாபத்தால் அவனோடு இடைப்பட்டார். அவனோ அசைந்து கொடுக்கவேயில்லை. யோனா மனந்திரும்பியிருப்பான்; ஆனால் எவ்வளவு காலத்திற்குப் பிறகு என்று நமக்குத் தெரியாது. ஒருவேளை யோனா தன் கோபத்திலே தன் வாழ்வை முடித்திருக்கலாம். அது நம் தேவனுக்கு மிகவும் துக்கமாக இருந்திருக்கும். அவர் எடுக்காத முயற்சி இல்லை. அவர் யோனா மீது எத்தனை பரிதாபங் கொண்டிருந்தார். யோனாவுக்கு மாத்திரமல்ல, நம்மெல்லார் மீதும் தேவன் எத்தனையோ பரிதாபம் கொண்டிருக்கிறார்.

"நான் எப்பிராயீமுக்குப் பொட்டரிப்பைப் போலவும் யூதாவின் வீட்டுக்கு உளுப்பைப் போலவும் இருப்பேன்." (ஓசி.5:12) பொட்டரிப்பு, உளுப்பு என்பவைகள் உள்ளூர நடக்கும் கிரியைகள். மரம், மூங்கில் போன்றவைகள் வெளியே நன்றாகக் காட்சியளிக்கும். ஆனால் உள்ளேயோ உளுத்துப் போயிருக்கும். அதுபோல வெளிப் பார்வைக்கு நன்றாகக் காணப்பட்டாலும், தேவனது நடவடிக்கைகள் உள்ளேயிருக்கும் சமாதானம், சந்தோஷம் இவைகளைத் தொடும். இந்தத் தொடுதலை உணர்ந்து உடனே நாம் திருந்திவிட வேண்டும். இவைகளை நாம் அலட்சியப்படுத்தினால், அடுத்து தேவன் எடுக்கும் நடவடிக்கை மிகப் பயங்கரமாயிருக்கும்.

"அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்ந்து, என் முகத்தைத் தேடுமட்டும் நான் என் ஸ்தானத்துக்குத் திரும்பிப் போய்விடுவேன்." (ஓசி.5:15) நீங்கள் இன்னும் உங்கள் பிழைகளை உணர்ந்து திருந்தாவிட்டால், இனி நான் உங்களோடு இருக்க மாட்டேன்; நான் வெளியே சென்று விடுகிறேன். நீங்கள் திருந்தினால் நான் திரும்பி வருவேன் என்று கர்த்தர் சொல்கிறார். சகோதரனே! சகோதரியே! நீங்கள் பாதை தவறியிருப்பீர்களானால், இன்றே சரியான பாதைக்குத் திரும்புங்கள். தேவன் நியமித்த பாதையில் இயேசுவை நோக்கிப் பொறுமையுடன் ஓடக்கடவோம்.

**தேவனது பாதையில் நடப்பவர்களுக்கு நித்திய வாழ்வு நிச்சயம்.**

21

அக்டோபர்

# தேவையற்ற கவலை

"ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?" (மத்.6:25) என்று இயேசு நம்மிடம் கேட்கிறார்.

இயற்கை நமக்குக் கற்றுக் கொடுக்கும் பாடமே "கவலைப்படாதே" என்பதே. ஜீவன், சரீரம் இவையிரண்டும் நாம் உருவாக்கியவையல்ல, கடவுள் உருவாக்கியவை. இவையிரண்டையும் கூட்டவோ குறைக்கவோ நமக்கு அதிகாரம் இல்லை. ஜீவனைத்தந்தது கடவுள், அப்படியிருக்க அந்த ஜீவனைத் தக்கவைத்துக் கொள்ள உணவு தரமாட்டாரா? சரீரம் கடவுள் தந்தது; சரீரத்தைத் தந்த கடவுள், அதைப் பாதுகாக்கும் உடைகளைத் தரமாட்டாரா? நம்மால் செய்ய முடியாததை நமக்குக் கர்த்தர் தரும்பொழுது, நம்மால் செய்யக் கூடியவைகளைத் தரமாட்டாரா?

எகிப்திய மந்திரவாதி மோசே செய்த எல்லா அற்புதங்களையும் செய்தான். ஆனால் பேனை உண்டாக்க முடியவில்லை. பேன் ஓர் சிறிய, அற்பமான ஜீவன் அதைக்கூட சாத்தானால் உருவாக்க முடியாது. நம்முடைய ஜீவன் மேலானது; ஆச்சரியமானது அதை உண்டு பண்ணின தேவன் ஜீவனைக் காக்காமல் போவாரா? ஆகவே எதை உண்போம் எதைக் குடிப்போம் என்று கவலைப்படாதீர்கள். ஏனெனில் நமது கர்த்தர் மாத்திரம்தான் ஜீவன் மீது அதிகாரமுள்ளவர்.

கர்த்தரின் அன்பையும் வல்லமையையும் மறந்த மக்கள் கவலையினால் பாரமுள்ள இதயத்தையும் தூக்கமில்லா சஞ்சல இரவுகளையும் பெற்றிருக்கின்றனர். ஆனால் 'நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாதீர்கள்' என்று வேதம் நமக்குச் சொல்கிறது. கவலை நம் இதயத்தை ஆளுகைச் செய்தால், அதிகாலையில் கண்விழித்து என்ன பயன்? பொழுது புலர்வதற்குள் வேலையில் ஈடுபட்டாலும், கவலையை காலையிலேயே அணைத்துக் கொள்ளும் இருதயம் ஒரு சமாதானத்தையும் அடையாது. கண்ணீரின் அப்பத்தை கவலையின் பாரத்தில் சாப்பிடுவதால் என்ன பயன்? இராத்தூக்கமும் நம்மை விட்டு விடைபெற்றுக் கொள்ளுமே! (சங்.127:3) கவலைப்படாதீர்கள்.

சில நாள்கள் மட்டுமே வாழப்போகும் பறவைகளுக்கும் பூக்களுக்கும் இத்தகைய மேன்மைகள் என்றால், நித்தியமாய்க் கர்த்தரோடு வாழப்போகும் நமக்கு எத்தனை மேன்மைகளைச் செய்வார்! அல்லேலூயா! சொற்ப வாழ்வுக்கு இத்தனை மகிமை என்றால், நித்திய வாழ்வுடைய உனக்கு எத்தனை மகிமை? இரத்தம் சிந்தி மீட்டெடுத்த உன்னைக் கண்மணி போல், அவர் காப்பார். ஆகவே கவலைப்படாதீர்கள்.

**பறவைகளின் இறக்கைகள் உதிரும்! பூக்களின் இதழ்கள் உலரும்!**
**உன் ஆத்துமாவோ நித்தியமாய் நிலை நிற்குமே!**

# தேவதண்டனை

**22**
**அக்டோபர்**

தாவீதும் அவன் மனுஷரும் மூன்றாம் நாளிலே சிக்லாகுக்கு வந்து சேருகிறதற்குள்ளே, அமலேக்கியர் தென்புறத்துச் சீமையின் மேலும் சிலாகின் மேலும் வழுந்து சிக்லாகைக் கொளளையடித்து அதை அக்கினியால் சுட்டெரித்தார்கள. (1 சாமு. 30:1)

"கூடா நட்பு குடியைக் கெடுக்கும்" என்ற பழமொழிக்கேற்ப, பெலிஸ்தியனோடுள்ள கூடா நட்பு, சிக்லாகை சாம்பற் மேடாக்கியது. மேலும் தாவீதை அன்னிய இடத்திலிருந்துப் புறப்படப்பண்ண இந்த அக்கினி தண்டனை அவசிய தண்டனையாயிற்று.

சிக்லாக்கைவிட்டு தாவீது எளிதிற் புறப்படமாட்டான். அவன் தன் முழுமையான உலகத்தோடு ஐக்கியமாகிவிட்டானே. ஆகவே கர்த்தர் அந்தப் பட்டணத்தை அழித்து, அவனுடைய உறவுகளைச் சிறைப்பட்டுப் போகப்பண்ணினார். ஆம் தாவீது மிகவும் நெருக்கப்பட்டான். (1சாமு 30:6) இந்த நெருக்கத்தை உருவாக்கியவர் கர்த்தர். அவனை சிக்லாக் என்ற மாயையிலிருந்து வெளியே இழுக்கவே இந்த அக்கினியும், சிறையிருப்பும். சகோதரனே! சகோதரியே! நீயும் தேவனில்லா இடத்தில் இளைப்பாறிக் கொண்டிருப்பாயானால் திடீரென்று அக்கினி பற்றி எரியும். பொருளாதாரச் சிறை, சுகவீனச் சிறை என்று பிள்ளைகள் அகப்பட்டுக் கொள்வார்கள். தாவீதுக்கு எப்பக்கமும் நெருக்கம்! பெலிஸ்தியர் ஓர் பக்கம், அமலேக்கியர் ஓர் பக்கம், சவுல் ஓர் பக்கம். இப்பொழுதோ அவனுடைய சொந்த ஜனங்ளே அவன்மீது கல்லெறியத் துணிந்தனர்.

நிலைதடுமாறிப் போனான் தாவீது. கண்களில் கண்ணீர் தாரை தாரையாக ஊற்றுகிறது. அழுவதற்குப் பெலன் இல்லாமற் போகுமட்டும் தாவீது அழுதான். பதினாறு மாதங்கள் கடந்துவிட்டன. தாவீது இதுவரைக்கும் கர்த்தரைத் தேடவேயில்லை. ஆனால் முதல்முதலாக தாவீது கர்த்தரை நோக்கி (1சாமு 30:8) ஜெபம் பண்ணினான். தாவீது மேலே பார்க்கும்படி, அவனைச் சுற்றிலும் அக்கினி பட்சித்தது. தேவ தரிசனம் தாவீதை ஆளுகை செய்தன.

எதிராளியின் வெற்றிக் கொண்டாட்டத்தில் தாவீது புலியனெப் பாய்ந்தான். எதிராளியை முறியடித்தான். விளைவு? ஒன்றும் குறைவுபடாமல் எல்லாவற்றையும் தாவீது திருப்பிக் கொண்டான் என்று வெற்றி முழக்கத்தோடு தாவீதின் இந்த அத்தியாயம் முடிந்தது. (1சாமு 30:19) தாவீது சொத்து, சுகம், பலம் எல்லாவற்றையும் இழந்தான், ஆனால் அவன் இழக்காத ஒன்று உண்டு. அதுதான் கர்த்தரோடு உள்ள உறவு! இந்த உறவு இழந்ததை மீட்க எப்பொழுதும் கரம் நீட்டும். ஊழியம் செய்யமலிருக்கலாம், ஊழிய அழைப்பை இழந்துவிடாதே. தேவசித்தத்திற்கு உன் கண்களை மூடிக் கொண்டிருக்கலாம். ஆனால் உன் தரிசனத்தை இழந்து விடாதே.

**உலகைச் சம்பாதித்து**
**பரலோகத்தோடுள்ள உறவை இழந்துவிடாதே**

23
அக்டோபர்

# கவலை கடவுளின் சுபாவத்திற்கு அவமானம்

"...நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத் தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்." (மத்.6:34)

மனிதனின் மிகப் பெரிய ஆற்றல் சிந்தனை. உலகப்பிரகாரமான காரியங்கள், ஆவிக்குரிய காரியங்கள் இவை இரண்டையும் சிந்திப்பதே மனிதனின் முழுமையான சிந்தனை. உலக நோக்கத்தை ஆவிக்குரிய நோக்கத்தைவிட கருத்தாய் எண்ணுவது கவலையை உருவாக்கும். சிந்தனையில் பிறக்கும் வேண்டாத குழந்தையே கவலை! இந்தக் குழந்தையை கருவிலே அழித்து விடு! நாளையத் தினத்திற்காகக் கவலைப்படாதே என்றுதான் இயேசு சொன்னார். நாளையத் தினத்திற்காகத் திட்டமிடாதே என்று கர்த்தர் சொல்லவில்லை. திட்டம் மிகவும் அவசியம். வருங்காலத்திற்காகத் திட்டமிடுவதைக் கர்த்தர் எதிர்க்கவில்லை. மாறாக நாளையத் தினத்திற்காகச் சேர்த்து வையுங்கள் என்றுதான் கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

நாளையத் தினத்திற்காக என்ன செய்யலாம் என்பது நல்ல சிந்தனை. ஐயோ! நாளையத் தினம் என்ன செய்யப் போகிறோம் என்பது கவலை – வீண் சிந்தனை. கவலைப்படும் உள்ளம் உலகிற்கு அறிவிக்கும் செய்தி, "என் பரமபிதா இறந்து விட்டார் என்ற துக்க செய்திதான்." தேவமனிதனாகிய மார்ட்டீன் லூத்தர் ஓர் நாள் கவலையோடு, நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவருடைய மனைவி கறுப்பு உடை போட்டுக் கொண்டு அவர் முன்னே வந்து நின்றார். லூத்தர் திடுக்கிட்டவாறு என்ன... ஏன் கறுப்பு உடையில் இருக்கிறாய் என்றார். உடனே அவருடைய மனைவி சொன்ன பதில், "கடவுள் இறந்துவிட்டார்" கடவுளுக்கு ஏது மரணம்? அவர் நித்தியமானவர். அவர் ஒரு போதும் மரிப்பதில்லை என்று லூத்தர் சப்தமிட்டார்! உடனே அவர் மனைவி, "பிறகு ஏன் நீங்கள் கவலையோடு இருக்கிறீர்கள்" என்றார்.

ஆகவே நம் கவலை, கர்த்தர் இறந்துவிட்டார் என்ற செய்தியையே உலகிற்கு அறிவிக்கிறது. "...நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத் தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்." (மத்.6:34) பொழுது புலர்ந்ததும் மனிதனைச் சந்திப்பது பிரச்சனைதான். காலம் பிரச்சனையைத் தருகிறது. கர்த்தர் அதைச் சந்திக்க கிருபைத் தருகிறார். ஒவ்வொரு நாளுக்குரிய கிருபையைத்தான் பரலோகம் நமக்குத் தரும். நாளுக்குரிய பாடுகளை நீ இன்று வரவழைப்பாயானால் கிருபை இல்லாமல் பிரச்சனையைச் சந்திக்கப் போகிறாய். ஏனெனில் நாளுக்குரிய கிருபை நாளைதான் கிடைக்கும். இரண்டு நாள்களுக்குரிய பாடுகள் ஆனால் ஒரு நாளைக்குரிய கிருபை இவை வாழ்க்கை ஓட்டத்திற்குப் பொருந்தா. நம் கால்கள் சறுக்கும்; நம்மைத் தாங்கி நடத்த எக்கரமும் வராது. இருநாள் பாடுகளை இதயம் சுமப்பதினால் இன்றைய கிருபையும் ஸ்தம்பித்து நிற்கும். வாழ்க்கை வண்டி ஓட வேண்டுமெனில் கூடுதல் பாரமான நாளைய கவலையைத் தூக்கியெறி. நாளைய சமாதானத்திற்காக இன்றைய மகிழ்ச்சியை பலியிடாதே. ஆகவே அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும். கர்த்தர் அனுமதித்தப் பாடுகளுக்கு மேலாக நீ தூக்கிச் சுமப்பதே கவலை. அகவே வீண் கவலையை தூக்கி எறியுங்கள். கர்த்தருக்குள் களிகூருங்கள்.

**கவலை உணவைக் கொண்டு வராது ஜீவனைக் கொன்றுபோடும்.**
**கவலை உடையைத் தராது உடலை உருக்குலைத்துவிடும்.**

**24**
**அக்டோபர்**

# தாமதமான பதில்

"நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்." (ஆதி.15:5)

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் கர்த்தர் ஆபிரகாமுக்கு ஒரு மகனை வாக்களித்தார். அவன் வழியாக ஒரு தேசமே கட்டப்படும் என்று கர்த்தர் ஆபிரகாமுக்கு உரைத்திருந்தார். ஆனால் தேவனது வாக்குத்தத்தத்தின் மகனுடைய பிறப்பு தாமதமானதால், ஆபிரகாம் கர்த்தரின் தாமதத்தை, கர்த்தர் 'இல்லை'யென்று சொல்கிறார் என்று தவறாக எடுத்துக்கொண்டான்.

மனிதன் தான் விரும்புகிற நேரத்தில் கர்த்தரின் வார்த்தைகள் நிறைவேறிவிட வேண்டும் என்று துடிக்கிறானே தவிர, கர்த்தரின் வேளையில் - நேரத்தில் அவை நடக்கட்டுமே என்று காத்திருப்பதில்லை. மாறாக, மாம்சீகத்தில் அவசரமாக செயற்பட ஆரம்பிக்கிறான். ஆபிரகாமும், மாம்சீக வழியில் ஆகாரின் வழியாய் ஒரு குமாரனைப் பெற்று, அவன் வழியாய்க் கர்த்தர் வாக்களித்த தேசமும் ஸ்தாபிக்கப்படும் என்று நம்பினான்.

ஏன் கர்த்தர் தாமதமானார்? கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்களித்தது ஒரு மகனை அல்ல, வாக்குத்தத்தத்தின் மகன். உலகில் பிறக்கும் அத்தனைப் பிள்ளைகளும் வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலினால் அல்ல. ஆபிரகாமுக்குத் தேவன் ஓர் சந்ததியை வாக்களிக்கும்போது சாராளின் கர்ப்பம் அடைபட்டிருந்தது. ஆகவே உலகப்பிரகாரமாக சாராள் வழியாக ஒரு மகன் பிறக்க வழியில்லை. ஆனால் இது கர்த்தருக்குப் பிரச்சனையே இல்லை. சாராளின் கர்ப்பம் ஜீவனை அடையக் கர்த்தர் காத்திருக்கவில்லை. மாறாக ஆபிரகாமின் சரீரம் சாவதற்குக் காத்திருந்தார். ஆபிரகாமும் இனி ஓர் மகனைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை இழந்த பிறகே, தேவன் தனது வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற விரும்பினார். ஏனெனில் மாம்சீகமான, வழக்கமான ஓர் பிறப்பாக ஈசாக்கின் பிறப்பு இருக்கக் கூடாது என்பது கர்த்தரின் சித்தம். ஆகவே கர்த்தர் தாமதப்பட்டார்.

தாமதித்தே எதையும் செய்ய வேண்டும் என்ற மனித பலவீனம் கர்த்தரிடத்தில் இல்லை. சாராளின் கர்ப்பமும், ஆபிரகாமின் சரீரமும் செத்துப் போவதற்கு மாத்திரம் கர்த்தர் காத்திருக்க வில்லை. இந்தக் கடுமையானச் சூழ்நிலையில், இனி கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டியதென்ன என்று இஸ்ரவேல் ராஜா பஞ்சக் காலத்தின் கொடுமையை எண்ணி, அவிசுவாசப் படுகுழியில் விழுந்ததுபோல் ஆபிரகாம் விழவில்லை. மனைவியின் கர்ப்பமும், தன் சரீரமும் செத்துப்போனதை ஆபிரகாம் எண்ணாதிருந்தான் (ரோமர் 4:19). இந்த விசுவாச நிலைக்கு ஆபிரகாம் வருவதற்கே கர்த்தர் தாமதித்து வாக்குத்தத்தத்தின் பிள்ளையைக் கட்டளையிட்டார். ஆகவே நம்முடைய ஜெபங்களுக்குப் பதில் தாமதமாக வருகிறதே என்று ஆத்திரப்படக் கூடாது! பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்.

**தாமதித்தே எதையும் செய்ய வேண்டும் என்ற மனித பலவீனம் கர்த்தரிடத்தில் இல்லை.**

25
அக்டோபர்

# மறைந்திருக்கும் பதில்

"தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும்போது, தேவன் ஆபிரகாமை நினைத்து, லோத்து குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப்போடுகையில், லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து தப்பிப்போகும்படி அனுப்பிவிட்டார்." (ஆதி.19:29)

நம் ஜெபங்களுக்கு நாம் எதிர்பார்க்கும் பதில் கிடைக்காது. ஆனால் நடைபெறும் நிகழ்வுகளில் ஓர் மறைமுகமானப் பதில் நமக்குக் கிடைக்கும்.

சோதோமை அழிக்க வேண்டாம் என்பது ஆபிரகாமின் ஜெபம். ஜெபத்தின் நோக்கம் துன்மார்க்கமான சோதோமை கர்த்தர் அழிக்கும் பொழுது, நீதிமானாகிய லோத்தையும் அழித்துவிடக் கூடாதே என்பதுதான். ஆபிரகாம் கர்த்தருக்குச் சமீபமாய்ச் சேர்ந்து துன்மார்க்கனோடு, நீதிமானையும் அழிப்பீரோ (ஆதி.18:23) என்று கேட்கிறான். லோத்தின் நிமித்தமாக சோதோம் அழிக்கப்படக் கூடாது என்பதுதான் ஆபிரகாமின் விடாப்பிடியான ஜெபம். ஆனால் என்ன நடந்தது?

காலையில் ஆபிரகாம் எழுந்து பார்த்தான் சோதோம் பற்றி எரிந்துக் கொண்டிருந்தது; புகை சூளையின் புகையைப் போல எழும்பிற்று (ஆதி.19:28). ஆபிரகாமின் ஜெபத்திற்கு மாறாக, சோதோம் அழிக்கப்பட்டுவிட்டது. பரிசுத்தவானின் ஜெபம் என்னவாயிற்று. இந்த ஜெபத்தின் நோக்கமே லோத்தின் குடும்பம், இந்த அழிவினின்று தப்ப வேண்டும் என்பதே.

என்ன நடந்தது என்பதைக் கவனியுங்கள். "தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும்போது, தேவன் ஆபிரகாமை நினைத்து, லோத்து குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப்போடுகையில், லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து தப்பிப்போகும்படி அனுப்பிவிட்டார்." (ஆதி.19:29)

ஆகவே நீதிமானாகிய லோத்து அழியவில்லை. சோதோமை அழித்து விடாதேயும் என்ற ஜெபம் கேட்கப்படாவிட்டாலும், அந்த ஜெபத்தில் மறைந்து கிடந்த, ஆபிரகாமின் நோக்கம் நிறைவேறி விட்டது!

அவன் எதிர்பார்த்தது அல்ல, அவனுக்கு வேண்டியது ஜெபத்தினால் கிடைத்தது.

**ஜெபத்திற்கு மாற்றுப் பதில் கிடைக்கும் நிலையும் உள்ளது.**

# மாற்றுப் பதில்

**26**
**அக்டோபர்**

"நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்; நீ யுத்த மனுஷனாயிருந்து, ரத்தத்தைச் சிந்தினாய் என்றார்." (1 நாளா.28:3)

தாவீதின் உள்ளத்தில் ஓர் ஆசை பிறந்தது; அந்த ஆசையே ஜெபமாக மாறியது. தேவ மனிதனாகிய நாத்தானும் தாவீதை நோக்கி, "உம்முடைய இருதயத்தில் இருக்கிறதையெல்லாம் செய்யும்; தேவன் உம்மோடு இருக்கிறார் என்றான்." (1 நாளா.17:2) என்று தாவீதை உற்சாகப்படுத்தினார். "என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் உன் மனதிலே இருந்தது நல்ல காரியந்தான்." (2 நாளா.6:8) என்று கர்த்தரும் அவனது திட்டத்தை மெச்சிக் கொண்டார்.

தாவீதின் ஜெபம் நல்ல ஜெபம், தேவமனிதன் நாத்தான் அங்கிகரித்த ஜெபம். கர்த்தரும் மெச்சிக் கொண்ட ஜெபம். ஆனாலும் தேவன், "நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்; நீ யுத்த மனுஷனாயிருந்து, ரத்தத்தைச் சிந்தினாய் என்றார்." (1 நாளா.28:3) என்று தேவன் அவன் ஆலயம் கட்டுவதைத் தடுத்தார். அவனுடைய மகனாகிய சாலொமோனை ஆலயத்தைக் கட்ட தேவன் தெரிந்தெடுத்தார். தாவீதினால் ஆலயத்தைக் கட்ட முடியும். ஆனால் கர்த்தர் அவன் ஜெபத்தைத் தள்ளி விட்டாரே. ஆனால் ஆலயமே கட்டக் கூடாது என்று கர்த்தர் ஜெபத்தை முழுமையாகத் தள்ளிவிடவில்லை. ஆலயத்தைச் சாலொமோன் கட்ட வேண்டும் என்பது தேவனது கட்டளையே தவிர, ஆலயமே கூடாது என்பதல்ல. தாவீதின் ஜெபத்திற்கு பதிலே கிடைக்காமல் போகவில்லை, மாற்றுப் பதில் கிடைத்தது.

இரத்தத்தைத் தாவீது யுத்தகளத்தில் சிந்தியதால் அவன் கரத்தில் இரத்தக் கறை படிந்து விட்டது என்று கர்த்தர் அவனைக் குற்றப்படுத்தவில்லை. இரத்தம் சிந்துகிற யுத்த மனுஷன் நீ என்று கர்த்தர் அவனைக் குறிப்பிடுவது, யுத்த மனுஷன் என்ற அழைப்பையே. "You are battler" நீ யுத்தம் செய்ய வேண்டியவன், அதுவே உன் அழைப்பு. உனது மகன் builder- கட்டுகிறவன், ஆகவே அவனது அழைப்பின்படி அவன் ஆலயத்தைக் கட்டட்டும் என்று அழைப்பின்படி ஜெபத்திற்குப் பதில் கொடுத்தார்.

"தாவீதே நீ எனக்கு வீடு கட்ட வேண்டாம். நான் உனக்கு ஓர் வீட்டைக் கட்டுவேன்" என்று கர்த்தர் வாக்களித்து அவன் மூலம் ஓர் பக்தியுள்ள சந்ததியாகிய வீட்டை உருவாக்கி அதில் கர்த்தராகிய இயேசுவைப் பிறக்கச் செய்தார். ஆலயம் அழிந்துவிட்டது. ஆலயத்திலும் பெரியவராக இயேசுவானவர் என்றும் நிற்கிறார். தாவீதின் விண்ணப்பம் மறுக்கப்படும்பொழுது அதனைப் பொறுத்துக் கொள்ள, கர்த்தர் அவனுக்குக் கிருபை கொடுத்தார். அவன் விண்ணப்பம் மறுக்கப்பட்ட நிலையில், அவன் கேட்டதைவிட மிகச் சிறந்த ஒன்றினை மாற்றாகக் கர்த்தர் தாவீதுக்கு அளித்தார்.

**சோர்ந்துபோகாதே! நீ கேட்டது கிடைக்காவிட்டால், அதிலும் மேலானது கிடைக்கும்.**

**27 அக்டோபர்**

# இயேசுவின் மானிட பிறப்பு

"பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்ற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமானது" (1 தீமோ.1:15).

இயேசு ஓர் இரட்சகர் என்பதையே வேதம் வலியுறுத்துகிறது. இந்த இரட்சிப்பை தன் மாம்ச சரீரத்தில், தன் சரீர மரணத்தினால் உண்டாக்கினார். இயேசு பிறக்கும் பொழுது, பெத்லகேமில் இதோ உங்களுக்கு கடவுள் பிறந்திருக்கிறார் என்றோ, அவர் சிலுவையில் மரிக்கும் பொழுது, நமக்காக கடவுள் மரித்தாரென்றோ, வேதம் சொல்கிறதா? இல்லையே. கடவுளுக்கு பிறப்பு, இறப்பு இல்லையே. பிறப்பு, இறப்பு இருந்தால் அவர் கடவுளில்லையே.

ஆகவே கடவுள் மாம்சத்திலே நம்மைப் போன்ற பாவமனிதனின் சாயலில் வெளிப்பட்டார். வெளிப்படும் பொழுது கடவுளாக அல்ல மனிதனாக வெளிப்பட்டார். அப்படியென்றால் கடவுள் மனிதரானார் என்று சொல்லலாமா? சொல்லக்கூடாது. கடவுள் மனிதரானார் என்று நாம் சொல்வோமானால், அவர் கடவுளாக இப்பொழுது இல்லை என்று பொருள்படும். இயேசு என்னும் நாமத்தில் அவர் என்றுமே இரட்சகராயிருப்பதுபோல, வார்த்தை என்பதில் அவர் என்றுமே கடவுளாக இருக்கிறார். நம்முடைய பாவங்களை அவர் சுமந்தது கடவுள் தன்மையிலல்ல. வேதம் என்ன சொல்கிறதென்பதைக் கவனியுங்கள்.

"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் (மரணத்தினால்) குணமானீர்கள்.(இரட்சிக்கப்பட்டீர்கள்)" (1பேது.2:24) என்று வேதம் சொல்கிறது. ஆகவே உன்னதமான இரட்சிப்பை நாம் அடையும்படி, வார்த்தை மாம்சத்தைப் போர்த்திக் கொண்டது. "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது." (யோ.1:14)

இயேசு மாம்சத்தில் வெளிப்பட்டார் (1 தீமோ.3:16). இதனை நாம் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த மாம்சத்தை வேதம் ஓர் திரையாக விவரிக்கிறது. அதாவது "ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினார்." (எபி.10:19) என்று வேதம் சொல்லுகிறது. ஆசரிப்புக் கூடாரத்தில் பரிசுத்த ஸ்தலத்திற்கும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையில் ஓர் அழகான, பலமான திரை தொங்கியது. இந்தத் திரை எவ்வளவு பலமாக, அழகாக இருந்ததோ, அவ்வளவு தடையாக இருந்தது! ஆம் எந்த மனிதனும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழையக் கூடாதபடி தடையாக இருந்தது. இயேசு சிலுவையில் மரித்தவுடன், எருசலேம் தேவாலயத் திரை இரண்டாய்க் கிழிந்தது. இந்தத் திரை மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசுவையே குறிக்கும். அந்தத் திரை பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழையத் தடையாக இருந்தது போல, இயேசுவும் தடையாகவே இருந்தார். பாவமனிதனுக்கு இயேசுவின் பரிசுத்தமே தடையாக இருந்தது.

**இயேசுவின் ஜீவன் இல்லாமல் அவருடைய வார்த்தைகளின்படி ஜீவிக்க முடியாது**

28
அக்டோபர்

# மனுஷகுமாரன் என்றால் என்ன?

"அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்" (அப்.7:56)

இயேசுவை வேதம் பலமுறை மனுஷகுமாரன் என்றே சொல்கிறபடியால், அவரது தெய்வீகத்தைவிட, அவருடைய மனிதத்தையே வேதம் மெச்சிக் கொள்கிறதா? உலக சிந்தனையாளர்கள் இயேசுவை சீர்திருத்தவாதி, முற்போக்கு சிந்தனையாளர், சமுக ஆர்வலர், புரட்சிவாதி என்று மனிதனாக மெச்சிக் கொள்ளுகிறார்களே இது சரிதானா? இல்லை இல்லவே இல்லை. இவர்களெல்லாரும் இயேசுவின் தெய்வீகத்தை ஏற்றுக் கொள்ளாமல், அவரை மனிதனாக மட்டும் பார்க்கும் கிட்டப் பார்வையாளர் (short sight).

அப்படியாயின் ஏன் அவரை அன்று மனுஷகுமாரன் என்றே மக்கள் அழைத்தனர்? நான்கு சுவிசேஷங்களிலும் 80-க்கு மேற்பட்ட தடவை இயேசு மனுஷகுமாரன் (Son of Man) என்றே குறிப்பிடப்படுகிறார். யார் அவரை மனுஷகுமாரன் என்று அழைத்தார் என்று கூர்ந்து நோக்கினால், இயேசுதான் தன்னை மனுஷகுமாரன் என்று அழைத்தார். சீஷர்களோ அல்லது வேறு யாருமே அவரை மனுஷகுமாரன் என்று அழைக்கவில்லை. ஸ்தேவான் மட்டும், "அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்" (அப்.7:56) என்று சொல்கிறார்.

இஸ்ரவேலர் கர்த்தரை நம்புகிறவர்கள், மேசியா வருவார் என்ற நம்பிக்கையோடு எதிர்பார்த்தவர்கள், ஆனால் மாம்சத்தில் வந்த இயேசுவை ஏற்றுக் கொள்ளாதவர்கள். ஆகையால் மனுஷகுமாரன் - அதாவது மாம்சத்தில் வெளிப்பட்ட குமாரன் என்றே தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். சபைக்கு மணவாளனாக, நம் எல்லோருக்கும் இரட்சகராக, உலகிற்குத் தேவகுமாரனாக இயேசு வெளிப்படுத்தப்படுகிறார். மனுஷர் குமாரன் வரும் பொழுது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ (லூக்.18:8) என்பது இயேசுவின் கேள்வி.

விசுவாசிகளின் கூட்டமாகிய சபையை எடுத்துக்கொள்ள இயேசு வரும் பொழுது, நிச்சயமாக விசுவாசத்தைக் காண்பார். காணாவிட்டால், யாரை அழைத்துக் கொண்டு போவார். சபைக்காக வரும் பொழுது அவர் நம் சரீர மீட்பிற்காக இரட்சகராக, சபையின் மணவாளனாக வருவார். மனுஷகுமாரனாக அவர் வருவது இஸ்ரவேலருக்காக. அது அவருடைய பகீரங்க வருகை. இந்த வருகை உபத்திரவக் காலத்தின் கடைசியில் இருக்கும். அந்தக் கொடிய நாள்களில் மனுஷகுமாரன் விசுவாசத்தைக் காண்பாரோ என்ற நிலை ஏற்படும்!

**மாம்சத்தில் வெளிப்பட்ட குமாரன் என்றே தன்னை இஸ்ருவேலருக்கு வெளிப்படுத்தினார்.**

29
அக்டோபர்

# மனுஷீகத்தில் இயேசுவின் வெற்றி:

"எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவர்" (எபி.4:15)

தன்னை யாரென்று மற்றவர்கள் சொல்கிறார்கள் என்று இயேசு கேட்ட பொழுது, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு பதிலுரைத்தார்! உடனே இயேசு சீஷர்களைப் பார்த்து, "நீங்கள் எல்லோரும் எல்லோரிடமும் போய் நான்தான் தேவகுமாரன் என்பதை அறிவியுங்கள்" என்று சொல்லவில்லை. மாறாக தாம் கிறிஸ்துவாகிய இயேசு (தேவகுமாரன்) என்று ஒருவருக்கும் சொல்லாதபடிக்குத் தம்முடைய சீஷர்களுக்கே கட்டளையிட்டார். (மத்.16:20)

அது முதல் இயேசு தாம் எருசலேமுக்குப் போய் மூப்பராலும், பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார் (மத்.16:21). ஆம்! தன் மனிதப் பாடுகளையும் சரீரப் பலியையும் குறித்தே அவர் வெளிப்படுத்தத் தொடங்கினார். இயேசுவின் மாம்ச சரீரம் பலியானதால் இரட்சிப்பு. ஆகவே இந்தப் பலியை இப்பொழுது நாம் பிரசித்தம் பண்ண வேண்டும். இயேசுவின் இந்த மனிதத்தை நாம் மறக்கக் கூடாது. இயேசுவின் தெய்வீகம் நம்முடைய பாவத்தைச் சுமக்கவில்லை. இயேசு கிறிஸ்துவின் வெற்றியான வாழ்க்கை அவருடைய மனுஷீகத்தில் இருந்தபடியால் தான் நமக்கு இயேசு முன்மாதிரியானார். தெய்வீகத்தில் அவர் வெற்றி சிறப்பதில் ஆச்சரியம் இல்லையே! "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவர்" (எபி.4:15) என்று இயேசுவை வேதம் சுட்டிக் காட்டுகிறது. தெய்வீகத்தில் அவர் பாவமில்லாதவர் என்பது சோதனையின் வெற்றியில்லை, இறைவனின் இயற்கையான பண்புதானே!

நாம் சோதிக்கப்படுவது போல இயேசுவும் எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டார் என்று வேதம் சொல்கிறது. மனிதன் மண், பொன், பெண் என்று பல விதங்களில் சோதிக்கப்படுகிறான். ஆகாப், நாபோத்தின் திராட்சத் தோட்ட மண் ஆசையில் சோதிக்கப்பட்டான். ஆகான் பாபிலோனிய பொன்பாளத்தை இச்சித்து அழிந்தான். தாவீது மாற்றான் மனைவியின் மேல் கொண்ட மோகத்தில் விழுந்தான். இயேசுவும் எல்லா விதத்திலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டார் என்றால், மேற் சொல்லப்பட்ட எல்லா சோதனைகளும் அவருக்கு ஏற்பட்டனவா? நிச்சயமாக எல்லா சோதனைகளும் அவருக்கு ஏற்பட்டிருக்காது. "என்னிடத்தில் பாவம் உண்டென்று யார் சொல்ல முடியும்?" என்ற கேள்வியை அவர் ஒருவர் மட்டுமே உலகில் கேட்டிருக்கிறார். உள்ளத்தில் இச்சை எண்ண வடிவத்தில் உருவாகும் பொழுதே, அதை செயற் வடிவப் பாவமாகவே கடவுள் பார்ப்பார் என்று சொன்ன இயேசுவின் சிந்தனை பரிசுத்தத்தின் ஊற்றாகவே இருக்கும். அப்படியாயின், "எல்லாவிதத்திலும்" என்ற சொல்லுக்கு அர்த்தம் என்ன? பாவத்திற்கு மூன்றே வழிகள்தான் உண்டு. (There are only THREE AVENUES) இம்மூன்றிலும் அவர் சோதிக்கப்பட்டார். அந்த மூன்று வழிகள் எவை? மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமையாகிய இந்த மூன்று வித சோதனைகளிலும் வெற்றி பெற்றார்.

**இயேசு கிறிஸ்துவின் வெற்றியான வாழ்க்கை அவருடைய மனுஷீகத்தில் இருந்தபடியால் தான் நமக்கு இயேசு முன்மாதிரியானார்.**

**30**
**அக்டோபர்**

# தலைவர் எங்கே?

"நான் தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன். ஒருவனையும் காணேன்." (எசே.22:30)

சாலையோரத்தில் ஓர் கார் நின்றுக் கொண்டிருக்கிறது. அது டிரைவருக்காகக் காத்திருக்கிறது. இந்த நிலையில் இன்றைய உலகம் இல்லை. செயற்படாத, இயங்காத ஒரு நிறுவனத்திற்குத் தலைவன் இல்லாவிட்டால், பெரிய ஆபத்து இல்லை. ஓடாத காருக்கு டிரைவர் தேவையில்லை. ஆனால் எண்பது மைல் வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கும் காரில் இப்பொழுது டிரைவர் இல்லை. இந்த நிலையில்தான் இன்றைய உலகம் இருக்கின்றது. இந்த ஆபத்து நீங்க ஓர் திறமையான தியாகமான தலைவர் தேவை!

ஒரு நிறுவனத்தை இயக்குவதும் அதன் இலக்குகளை அடைவதும் அல்ல ஓர் தலைவனின் வேலை. தனக்குக் கீழேயிருப்போர் தேவ சித்தத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்து, சேவை செய்ய தன் வார்த்தைகளினாலும், வாழ்க்கையினாலும் வழிகாட்டுகிறவனே உண்மையானத் தலைவன். தலைமைத்துவத்தில் இன்று ஓர் நெருக்கடியை உலகில் - நிறுவனத்தில் குடும்பத்தில் காண்கிறோம். வேதசத்தியத்தை அக்கினியாய் இதயத்தில் சுமக்கிறவனே கிறிஸ்தவத்தில் - உலகில் - சமுதாயத்தில் வல்லமையானத் தலைவர்களாக வரமுடியும்.

பிரச்சனைகளின் ஆழங்களையும், ஆபத்துக்களையும் பற்றிப் பேசுகிறவன் அல்ல தலைவன். மிகப் படித்த ஓர் மங்கை கூறுகிறாள், "நானும் என் கணவரும் ஆலயம் செல்வதில் அலுத்துப்போனோம். ஏனெனில், ஒவ்வொரு ஞாயிறும் எங்கள் போதகர் தன் பிரச்சனைகளையும், சோதனைகளையும், பயங்களையும் பற்றியே பேசுகிறார். எங்களுக்கு கடவுளிடமிருந்து ஓர் வார்த்தை வேண்டும். தேவனுடைய அதிகாரம் சபையில் முழக்கமிட வேண்டும்." இதுவே தேவன் விரும்பும் தலைமை!

பிரபலமான ஓர் பத்திரிகை ஆசிரியர் எழுதுகிறார், "ஒவ்வொரு ஞாயிறும் ஆலயத்தில் பிரசங்க மேடையில் நாம் கேட்கும் சத்தம், எங்கள் பத்திரிகையில் வார நாள்களில் நாங்கள் எழுதும் செய்திகளின் எதிரொலியே. எங்களுக்கு என்ன தேவையெனில், புதிய சத்தம்.... உலகப் பிரச்சனைக்கு அப்பாலிருந்து கேட்கும் கடவுளின் குரலே". நாட்டின் ஜனாதிபதி முதல் குடும்பத்தின் தலைவர் வரை, தலைமைத்துவத்தில் நெருக்கடியே நிலவுகிறது. இது திருச்சபைகளிலும் எதிரொலிக்கிறது.

வேதம் சொல்கிறது, "நான் தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன். ஒருவனையும் காணேன்." (எசே.22:30) இன்றைய சமுதாயத்தை, திருச்சபையை அழிவிலிருந்து காக்க ஒரு வல்லமையான தலைவன் எழ வேண்டும். பரலோகம் அந்த தலைவனைத் தேடுகிறது. ஒருவேளை அந்தத் தலைவனாக நீ இருந்தால் தலைமை நாற்காலியில் உட்கார வகைத் தேடாதே. நாற்காலியை நோக்கி ஓடாதே. ஜெப அறைக்குள் பதுங்கி விடு. சுவர்ப்புறமாகத் திரும்பி நமுட்டைப்போலவும், தகைவிலான் குருவியைப்போலவும், புறாவைப்போலவும் கூவி அழு.

**ஜெப அறையில் நீ வடிக்கும் கண்ணீரே**
**உன்னைத் தலைவனாக்கும்.**

31
அக்டோபர்

# மாறுவேடம்

"அக்காலத்தில் யெரொபெயாமின் குமாரனாகிய அபியா வியாதியில் விழுந்தான். அப்பொழுது யெரொபெயாம் தன் மனைவியைப் பார்த்து: நீ எழுந்து, நீ யெரொபெயாமின் மனைவியென்று ஒருவரும் அறியாதபடிக்கு வேஷம்மாறி சீலோவுக்குப் போ; இந்த ஜனத்தின்மேல் நான் ராஜாவாவேன் என்று என்னோடே சொன்ன தீர்க்கதரிசியாகிய அகியா அங்கே இருக்கிறான்." (1இரா.14:1-2)

யெரொபெயாம் தன் பொல்லாத வழிகளில் நடக்கும் காலத்தில் கர்த்தர் அவன் குடும்பத்தில் ஓர் நெருக்கடியை அனுமதித்தார். ஆம்! அவனுடைய குமாரனின் வியாதி, கர்த்தர் அனுமதித்த நெருக்கடி. அவனை மனந்திரும்பச் செய்ய, கர்த்தர் இந்த வியாதியை அனுமதித்தார். கர்த்தர் வியாதியை அனுப்புகிறதில்லை. சாத்தான் இந்த வியாதியைக் கொண்டு வரும் பொழுது, கர்த்தர் அதனை அனுமதித்து விட்டார். பெற்றப் பிள்ளை, பெற்றோருக்கு கண்மணி! ஆனாலும் கர்த்தர் அந்தக் கண்மணியையும் தொடுவார், பெற்றோர்கள் ஜீவன் தப்புவதற்காக! மனசாட்சியில் சுத்தமுள்ளவர்கள், எளிதில் கடவுளைத் தேடுவார்கள்.

அகியா தீர்க்கதரிசி ஒரு குருடன். அவன் யாரையும் பார்க்க முடியாது. அப்படியாயின் யாருக்காக இவள் முக்காடிட்டு தன்னை மறைத்துக் கொள்கிறாள்? மக்களை ஏமாற்ற. ராஜாவின் மனைவியே கர்த்தரின் தீர்க்கதரிசியைத் தேடி போகிறாளே என்று அவளைக் கேலி செய்வார்கள் என்று எண்ணி அவள் மாறுவேடத்தில் போனாள்.

தன் மாம்சீக சுபாவத்தை மறைத்துக் கொண்டு தேவசமுகத்தில் பிரவேசிப்பவன் வேஷக்காரன். கர்த்தர் இயேசுவுக்குப் பிள்ளையாக மாறாமல், பிதாவே என்று ஜெபத்தில் அழைக்கிறவன் வேஷக்காரனாகவே இருக்க வேண்டும். நாங்கள் பிறர் பிழையை மன்னிப்பதுபோல, எங்கள் பாவங்களையும் மன்னியும் என்று வாடிக்கை மன்றாட்டு ஏறெடுப்பவன் வேஷக்காரன். கிறிஸ்துவுக்குள் தேவன் எங்களுக்கு மன்னித்ததுபோல, நாங்களும் ஒருவருக்கொருவர் மன்னிக்க எங்களுக்குக் கிருபை தாரும் என்பது சரியான மன்றாட்டு.

தன்னை யாரென்று தீர்க்கதரிசி கண்டு கொண்டால் அவன் கடுஞ் சொற்களால் தன்னைக் கடிந்துக் கொள்வான் என்று அஞ்சியே அவள் தன்னை மறைத்தாள். ஓர் மாளிகை வாசியைப் போலல்ல, ஓர் விவசாயப் பெண்ணைப் போல வேஷமிட்டு, அகியாவின் வீட்டிற்குள் பிரவேசித்தாள். அகியா முதிர் வயதடைந்து, கண்கள் மங்கலடைந்து பார்க்கக் கூடாதிருந்தான் (1இரா.14:4). அவளுடைய நடையின் சத்தத்தை அகியா கேட்டவுடனே, "யெரொபெயாமின் மனைவியே, உள்ளே வா; உன்னை அந்நிய ஸ்திரீயாகக் காண்பிக்கிறதென்ன?" என்ற இடியோசையை எழுப்பினான். தன் வேஷம் கலைந்து விட்டது என்று அறிந்து அவள் திடுக்கிட்டு நின்றாள்! தேவசமுகத்தில் யெரொபெயாமின் மனைவியின் வேஷம் கலைந்தது. அத்தியிலையில் தங்களை மூடி மறைக்க முடியாது என்ற ஏதேனின் பாடத்தை நாம் இன்னும் கற்றுக் கொள்ளவில்லையே.

**நம் முகத்தை மறைத்துக் கொண்டு தேவனை ஏமாற்ற முடியாது. தேவன் நம் இருதயத்தைப் பார்க்கிறவர்.**

1

நவம்பர்

# சிந்தனை ஓட்டம்

"....அமலேக்கை மடங்கடித்து, அவனுக்குண்டான எல்லாவற்றையும் சங்கரித்துவிடு" ( 1 சாமு 15:3)

நம் வாழ்க்கையின் வெற்றி தோல்விக்கு நமது சிந்தனை முக்கியப் பங்கெடுக்கிறது. மனிதன் தேவக்கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போகக் காரணம், இயலாமையல்ல, மன இயலாமையே. சவுலோ எல்லாவற்றையும் அழித்துப்போட மனதில்லாமல் தேவக் கட்டளைக்கு மாறாக அழிக்கப்பட வேண்டியவைகளை கூட தப்புவித்தான். இதனால் சவுல் ராஜ்ஜியபாரத்தை இழந்தான். நமது வெற்றி நமது மனதில் தொடங்குகிறது. உலக எண்ணங்களைத் தூர எறிந்துவிட்டு, மனதின் எண்ணங்களை மறுருபப்படுத்துங்கள்.

பொதுவாக மணிக்கணக்கில் மற்றவர்களைக் குறை கூறி நேரத்தை வீணாக்குகிறோம். நம்முடையப் பேச்சில் பெரும்பகுதி மற்றவர்களுடைய குறைப்பாட்டைக் குறித்துப் பேசுவதிலேயே செலவழிந்து விடுகிறது. இந்தப் பேச்சினாலே ஆவிக்குரிய சமாதானத்தை இழந்துவிடுகிறோம். ஆகவே பவுல் நமக்கு நல்ல யோசனையைச் சொல்லுகிறார், "உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்." (பிலி 4:8) இப்படி நம்முடைய சிந்தனை ஒட்டம் அமையுமானால் நம்முடைய மனம் மறுருபமாகிவிடும். அந்த மனம் கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளும்.

பொதுவாக மனிதன் தன்னால் எதுவுமே இயலாது என்று இயலாமை பள்ளத்தாக்கில் படுத்துவிடுவது இயற்கை. இதற்குக் காரணம் அவனுடைய பெலவீனமான மனமே. முப்பத்தெட்டு ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டு பெதஸ்தா குளத்தருகே ஒருவன் படுத்துக்கிடந்தான். "நீ சுகமடையவிரும்புகிறாயா" என்று இயேசு அவனிடம் கேட்டப்பொழுது. ஆம்! விரும்புகிறேன் என்று சொல்வதற்கு முன்பு, தன்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுவதற்கு ஒருவரும் இல்லை எனக்குறை கூறினான். தனக்கு மற்றவர்கள் உதவி செய்யவில்லை என்ற மனபாரம் வருகிறதே தவிர குணமடைய தான் எதையாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையில்லை. அண்ணன், அக்காள் தங்கை தனக்கு உதவ வேண்டும் என்று மனிதன் எண்ணுகிறானே தவிர தன் கையே தனக்கு உதவி என்று எண்ணுகிறதில்லை. ஆண்டவர் சுற்றிலும் பார்த்து யாராவது அவனுக்கு உதவி செய்யுங்கள் என்று சொல்லவில்லை. மாறாக எழுந்திரு என்று சொன்னார். ஆம்! எழுந்திருக்கவேண்டும், யாரும் தூக்கிவிடமாட்டார்கள்.

உங்கள் பிரச்சனைகளில் உங்கள் மனம் மற்றவர்கள் உதவியையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. அவனுடைய படுக்கையை சுமப்பதற்கு கூட இன்னொரு மனிதனை ஏற்படுத்தவில்லை. உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்று அவனுக்கே உத்திரவிட்டார். நம்மைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய கர்த்தர் நமக்கு பெலனைத்தருவார்.

**செய்ய முடியும் என்ற மனதை இழந்துவிடாதீர்கள்.**

2
நவம்பர்

# நாசரேத் ஜெப ஆலயத்தில் இயேசு

"தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெப ஆலயத்திலே பிரவேசித்து வாசிக்க எழுந்து நின்றார்."
(லூக்.4:16)

பல இடங்களுக்குச் சுற்றித் திரிந்த நம் இயேசு ஓய்வு நாளில் தவறாது ஜெப ஆலயத்திற்குச் சென்றார். எத்தனையோ ஆவிக்குரிய பணிகள் அவரை எதிர் நோக்கியிருந்த போதிலும் அவைகளைத் தள்ளிவிட்டு அவர் ஜெப ஆலயத்திற்குச் சென்றார். அவர் ஜெப ஆலயத்திற்குச் செல்லாதிருந்தால் அவருக்கு எந்தக் குறையும் ஏற்படப்போவதில்லை. என்றாலும் ஜெப ஆலயத்திற்குச் செல்வது அவர் வழக்கமாயிருந்தது. கடவுள் குறித்த நாளில், கடவுள் குறித்த இடத்தில் இயேசு இருந்தார்.

சகோதரனே! சகோதரியே, ஆராதனைக்குச் செல்வதில் தவறிவிடாதே. நமது கர்த்தர் நினைத்திருந்தால் நாசரேத்தூரில் சுகமளிக்கும் கூட்டம் என்று ஒரு சிறப்பு முகாமையே நடத்தி இருக்க முடியும். நமது கர்த்தரோ தமது விருப்பப்படி நடக்காது, பிதாவின் சித்தப்படி ஆராதனைக்குச் சென்றார்.

தேவபிள்ளையே, ஞாயிற்றுக்கிழமை ஆராதனையைத் தவறவிட்டு ஆராதனைக்குப் போகாமல் எந்த ஊழியக்காரர் நடத்துகிற முகாமிற்கோ, ஜெபக்கூட்டத்திற்கோ, கருத்தரங்கிற்கோ செல்லாதே. தன்னால் பெரிய ஊழியத்தைச் செய்ய முடியும்; எனினும் இயேசு ஆராதனைக்குச் சென்றார். சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டு விடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ, அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும் (எபி.11:25) என்று வேதம் வற்புறுத்துகிறது.

ஆராதனைக்கு ஆவலாய் வாருங்கள். நாளானது நெருங்கி வருகிறது. ஆம்! மத்திய வானில் இயேசு தோன்றும் நாளானது நெருங்கி வருகிறது. இயேசுவை நடுவானில் சந்திக்கும் அதே மகிழ்ச்சியில், ஆராதனையில் இயேசுவைக்காண நாமும் ஆவலாயிருக்கிறோமா?

கர்த்தர் எங்கும் இருக்கிறார்; ஆகவே என் வீட்டு தாழ்வாரத்தையே நான் ஆலயமாகக் காண்கிறேன் என்று சொல்லாதே. அவருடைய பிரசன்னத்தை நீ சரியாக உணர்வது பரிசுத்தவான்களின் கூடுகையில்தான். ஸ்தல சபையை இன்றைய ஊழியர்கள் மிகவும் அற்பமாக எண்ணும்பொழுது இயேசு நாசரேத் ஜெப வீட்டை அருமையாக எண்ணினார்.

**கர்த்தர் உனக்குக் குறித்த நாளில், சபையில் ஆராதனைக்குச் செல்வதில் தவறிவிடாதே!**

3
நவம்பர்

# நம்பிக்கையின் அடித்தளம்

"தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்" (ரோமர் 4:21)

உண்மையான நம்பிக்கையின் அடித்தளம் கடவுளின் வார்த்தையே. கடவுளின் வார்த்தையின் மேலுள்ள நம்பிக்கை, விசுவாசமாக மறுரூபமாகிறது. இந்த விசுவாசத்திற்கு வேத வசனமே அஸ்திபாரம். விசுவாசிகளின் தகப்பனான ஆபிரகாமைப்பற்றி வேதம் அருமையாக வர்ணிக்கிறது. அதாவது தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான் என்று வேதம் சொல்கிறது. ஆபிரகாம் தான் ஓர் பெரிய ஜாதிக்குத் தகப்பனாவேன் என்று விசுவாசித்தது வெறும் மனநிலையில் எழுந்த ஆர்வமும், ஆசையும் இல்லை. அப்படி இருந்திருந்தால் அது மனோவாஞ்சை. அந்த மனோவாஞ்சை, மனதிற்குக் கொஞ்சநேரம் சாமாதானத்தையும், சந்தோஷத்தையும் தரும். POSTIVE சிந்தனை அல்ல, ஆபிரகாமின் நம்பிக்கையும், எதிர்பார்ப்பும். அது கடவுளின் வார்த்தை மீது கட்டப்பட்ட விசுவாசம்.

"வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி, உன் சந்ததி இவ்வண்ணமாயிருக்கும்" என்றார் (ஆதி 15:5) இந்த வார்த்தைகளே ஆபிரகாமின் விசுவாச வாழ்க்கையின் அஸ்திபாரம்.

சகோதரியே! சகோதரனே! உன் விசுவாசத்தின் அஸ்திபாரம் என்ன? பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில், பல நம்பிக்கைகளின் நடுவில் வாழும் உங்கள் மனம் வசனத்தைப் பற்றிப்பிடித்திருக்கிறதா?

கடவுளின் வார்த்தை நமக்கு அவருடைய மனம், நோக்கம், வாஞ்சை இவற்றை வெளிப்படுத்துகிறது. அவருடைய வார்த்தைகளோடு நம் இருதயம் இடைபடாவிட்டால் (Interact) நம்மில் விசுவாசம் வேரூன்றாது. வேதத்தை நாம் வாசிக்கும் பொழுது; வேதத்தின் மீது, ஆவியானவர் அசைவாட வேண்டும் நம் இருதயம் கொழுந்துவிட்டு எரிய வேண்டும். வேதம் நம்மோடு பேச வேண்டும்.

ஜெபித்து தேவ சித்தத்தை அறியுங்கள். இந்த சித்தத்தின் மீது மேலும் தொடர்ந்து கட்டுங்கள். தேவன் வாக்களித்ததை நிச்சயம் பெற்றக் கொள்வீர்கள்.

**தேவன் தம் வார்த்தையினால் சொன்னதை**
**தம் கரத்தினால் நிறைவேற்றுகிறவர்.**

4
நவம்பர்

# சூழ்நிலைகளை வென்ற சந்தோஷம்

"நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்" (பிலி.4:11b)

பவுல் தன் மனமகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார். வாழ்வோ, தாழ்வோ, ஜீவனோ, மரணமோ எந்தச் சூழ்நிலையிலும், மனதிருப்தியாய், மனமகிழ்ச்சியாகவே பவுல் இருக்கிறார். பவுலின் சூழ்நிலைகள் மிகவும் எதிரிடையாக இருந்த போதிலும், அவரால் மனரம்மியமாயிருக்க முடிந்தது. ஏனெனில் அவருடைய நம்பிக்கை சூழ்நிலைகள்மேல் அல்ல, கர்த்தரின்மேலே இருந்தது.

ஆதாம் மிகவும் அழகான சூழ்நிலையில் ஆரம்பத்தில் இருந்தாலும் ஆதாமே எங்கே இருக்கிறாய் என்று கர்த்தர் கேட்ட பொழுது, "நான் பயத்திலும், திகிலிலும் இருக்கிறேன்" என்றே அவனால் பதில் சொல்ல முடிந்தது. வேதனை, தனிமை, இருள் என்று எதிரிடையான சூழ்நிலையில் பவுலே நீ எப்படி இருக்கிறாய் என்று கர்த்தர் கேட்டால், "நான் மனரம்மியமாய் இருக்கிறேன்" என்றே பவுல் பதிலளிப்பார். ஏனெனில் அவர் எப்பொழுதும் கர்த்தருக்குள் இருந்ததால்.

இந்த மனரம்மியத்தை – திருப்தியை – சந்தோஷத்தைப் பவுல் பெற்றுக்கொண்டார் என்று வேதம் சொல்லவில்லை, கற்றுக்கொண்டார் என்றே சொல்கிறது. வாழ்க்கையில் பவுல் சந்தித்த சோதனைகள், பாடுகள், தோல்விகள், எதிர்ப்புகள் அவருக்கு மனரம்மியத்தைக் கற்றுக்கொடுத்தன! தவறாக விளங்கிக்கொள்ளாதீர்கள். பவுல் பட்ட அடிகளும் அனுபவித்த பாடுகளும் அவருக்கு மனரம்மியத்தைக் கற்றுக்கொடுக்கவில்லை. கற்றுக்கொடுக்கவும் முடியாது. பாடுகள், உபத்திரவங்களுக்கு மத்தியில் அவர் தக்கவைத்துக் கொண்ட தேவசமுகமே அவருக்கு மனரம்மியத்தைக் கற்றுக்கொடுத்தது.

"அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்கும்" (2 கொரி.4:17) என்பதே பவுலின் நம்பிக்கை! கிறிஸ்துவினிமித்தம் நாம் அனுபவிக்கும் பாடுகள், உபத்திரவங்கள் முடிவிலே மகிமையாக மாறும். ஆகவே இந்த நம்பிக்கையினால், நம்முடைய பாடுகள், உபத்திரவங்களின் மத்தியில் மகிழ்ந்திருப்போம். மறுமையைக் குறித்த நம்பிக்கையின் ஆழத்தை நாம் பெறுவதெப்படி? அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. நாம் நம் கர்த்தரோடு நெருங்கிப் பழகவேண்டும். இந்த நெருக்கமான உறவுதான் நித்திய நம்பிக்கையை நமக்கு அனுபவமாக மாற்றித்தரும். இந்த அனுபவத்தால் எந்தச் சூழ்நிலையிலும் ஒருவன் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாகவே இருப்பான்.

சகோதரனே! சகோதரியே! உன் வியாதியின் கொடுமையைப் பற்றி டாக்டர் உன்னிடம் சொன்னவுடன், ஸ்தேவானைப் போல வானத்தை அண்ணாந்துப் பார்த்தாயா? அல்லது எசேக்கியாவைப் போல சுவர்ப்புறமாக உன்முகத்தைத் திருப்பிக் கொண்டாயா? சூழ்நிலைகளில் மனமகிழ்ச்சியாயிரு.

எதிரிடையான சூழ்நிலையிலும் கர்த்தர் மேல் வைக்கும்
விசுவாசமே சூழ்நிலைகளை வென்ற சந்தோஷம்.

**5**
**நவம்பர்**

# தகப்பனின் சந்தோஷம்

"என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கில்லை" (3 யோவான் 4)

பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம், அவர்களின் வெற்றிச் சரித்திரம், முதன்மையாக விளங்குதல் இவையெல்லாமே ஒரு தகப்பனுக்கு மிகுந்த மகிழ்ச்சிதான் எனினும், மிகப் பெரிய சந்தோஷம் அவன் பிள்ளைகள் சத்தியத்தில் நடப்பதே. இவ்வசனம் மூன்று காரியங்களைப் பேசுகிறது. அவையாவன...

1. பிள்ளைகள் சத்தியத்தைக் கேட்க வேண்டும்.
2. கேட்ட சத்தியத்தை வாழ்க்கையில் பயிற்சிக்க வேண்டும்.
3. அப்படி பிள்ளைகள் சத்தியத்தைப் பயிற்சிப்பதை சாட்சியாக பிறர் காண வேண்டும்.

பிள்ளைகளின் இந்த ஆவிக்குரிய வளர்ச்சியே தகப்பனுக்கு மிகப் பெரிய மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சி தகப்பனின் ஆசையினால், விருப்பத்தினால் மட்டும் வந்துவிடாது. ஜெபத்தினால் மாத்திரமே இந்த இலக்கை எட்டிவிட முடியாது. தகப்பன் அதிக நேரத்தை பிள்ளைகளோடு செலவளிக்க வேண்டும். நம்முடைய பரம தகப்பனும், அவரது பிள்ளைகளாகிய நாம் அவரோடு அதிக நேரம் செலவளிக்க விரும்புகிறார்.

ஆய்வின்படி பெற்றோர்கள் சராசரியாக ஒருநாளில் 4 மணிநேரம் T.V. முன் அமர்ந்து செலவழிக்கின்றனர். தகப்பன் 2 மணிநேரம் கடைகளில் செலவழிக்கிறான். ஆனால் தன் பிள்ளைகளோடு அவன் செவழிக்கும் நேரம் 6 நிமிடங்கள் மாத்திரமே! இவ்வளவு சொற்ப நேரத்தை மட்டுமே தகப்பன் தன் பிள்ளைகளோடு செலவழித்தால், பிள்ளைகள் தன் தகப்பன் வழியாக எப்படி சத்தியத்தைக் கற்றுக்கொள்வான்? அப்படியே பிள்ளைகளாகிய நாம், நமது பரம தகப்பனோடு நேரத்தைச் செலவழிக்காவிட்டால், பரம சந்தோஷத்தைக் கற்றுக்கொள்வது எப்படி? ஆகவே கர்த்தருக்காய் நேரத்தை செலவளிப்பது போல், கர்த்தரோடும் நேரத்தை செலவழி.

God is more interested in things alone with Him rather than for Him – கடவுள் தனக்காக காரியங்கள் நடைபெறுவதைவிட, தன்னோடு காரியங்கள் நடைபெறுவதையே அதிகம் விரும்புகிறார். சகோதரனே! சகோதரியே! நீ கர்த்தருக்காக அனேக காரியங்களைச் செய்கிறாய் நல்லதுதான். ஆனால் கர்த்தரோடு எவ்வளவு நேரம் செலவழிக்கிறாய்? கர்த்தரோடு நீ நேரம் செலவழிக்காமல், அதாவது வேதவாசிப்பு, ஜெபம், தியானம் இவைகளைச் செய்யாமல் கர்த்தருக்காக மாத்திரம் நீ ஓடி ஆடி ஊழியஞ் செய்வாயானால், உன் ஊழியத்தில் மனச்சோர்வடைந்துவிடுவாய். ஊழியம் செய்தும் நீ மகிழ்ச்சியற்றவனாகவே இருப்பாய்.

**பரம தகப்பனோடு நேரத்தை செலவிட்டால் மட்டுமே பரம சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

6
நவம்பர்

# உபத்திரவங்களில் சந்தோஷம்

"முள்ளுகளுக்குள்ளே லீலிபுஷ்பம் எப்படியிருக்கிறதோ, அப்படியே குமாரத்திகளுக்குள்ளே எனக்குப் பிரியமானவளும் இருக்கிறாள்." (உன்.2:2)

பாடுகள், வேதனைகள் இவை ஒரு மனிதனுக்கு மகிழ்ச்சியைத் தராது. வியாதி, பணப் பிரச்சனை, எதிர்ப்பு, ஏமாற்றம் இவற்றைக் குறித்து ஒரு மனிதன் மகிழ்ச்சியடையவே முடியாது. ஆனால் இவைகளுக்கு மத்தியில் ஒரு மனிதன் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கிறான். லீலி மலர் தன்னைச் சுற்றியிருக்கும் முள்களின்மேல் சாயாமல் மேலே சூரியனையே பார்த்திருக்கும்போது முள்களால் கிழிக்கப்படாமல் பத்திரமாயிருக்கிறது. அதுபோல தைக்கும் முள்களைப் போன்ற கொடிய பிரச்சனைகளுக்கு மத்தியில் மனம் அங்கும் இங்கும் அலையாமல் கர்த்தரையே பற்றிக் கொண்டிருந்தால், அவனுக்குள்ளிலிருக்கும் விசுவாச மலர் பத்திரமாயிருக்கும். ஆகவே எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரை நோக்கிப் பார்க்க இதயம் பழக வேண்டும். கொடிய சூறாவளிக் காற்றில் பேதுரு கர்த்தரைப் பார்த்தான், அலைகள்மேல் நடந்தான். கொடியக் காற்றையும் கொந்தளிக்கும் கடலையும் பேதுரு பார்த்தபொழுது தண்ணீரில் அமிழ்ந்தான். ஆகவே எப்பொழுதும் கர்த்தரையே நோக்கியிரு. கர்த்தரையே நோக்கியிரு என்றால் என்ன பொருள்? வானத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பதல்ல, வசனத்தை உறுதியாய்ப் பிடித்திருப்பது.

பொதுவாக நம் சரீரம் நலிவுற்ற வேளையில் சந்தோஷம் நம்மிடத்திலிருந்து விடைபெற்றுக் கொள்கிறது. துக்கம் இதயத்தை ஆக்கிரமிக்கிறது. ஜெபமும் தியானமும் தூரமாய் நிற்கின்றன. ஆத்துமா தன் சந்தோஷத்தை இழந்துவிடுகிறது. இது ஒரு சராசரி கிறிஸ்தவனுடைய நிலைமை. ஆனால் பரிசுத்த பவுலைப் போன்றவரின் வாழ்க்கை மிகவும் வித்தியாசமானது. "மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது.... அது என்னைக் குட்டும் சாத்தானின் தூதனாயிருக்கிறது." (2 கொரி.12:7) என்று பவுல் தன் சரீரத்திலுள்ள பிரச்சனையைக் குறிப்பிடுகிறார். சுதந்தரமாய் ஊழியம் செய்ய முடியாதபடி பவுலைத் தடைச் செய்தது இந்த முள். இந்த முள் நிச்சயம் அவருடைய மகிழ்ச்சியைப் பறித்திருக்கும். இந்த முள் என்னவென்று தெரியாவிட்டாலும், இது ஒரு சரீர உபாதை என்று அறிவோம். இந்த முள்ளைக் கொடுத்தது கர்த்தரல்ல, இந்த முள் சாத்தானுடைய தூதன். இந்த முள்ளைக் கர்த்தர் பவுலுடைய வாழ்க்கையில் அனுமதித்தார்.

தேவனுக்குள்ளிருக்கும் நமது மகிழ்ச்சியை, கர்த்தருக்குள்ளாயிருக்கும் நமது பணிவிடை ஓட்டத்தைத் தடைசெய்யக் கர்த்தர் ஒருபோதும் சாத்தானை அனுமதிக்க மாட்டார். சாத்தான் ஒரு முள்ளைப் பவுலுக்குக் கொடுத்தாலும், கர்த்தர் அதை வேறுவிதமாய்ப் பயன்படுத்தினார். சாத்தானின் நோக்கம் நிறைவேறாமல் கர்த்தரின் நோக்கம் நிறைவேறவே அந்த முள்ளைப் பயன்படுத்தினார். உன்னுடைய எதிரிடையானச் சூழ்நிலையைக் கர்த்தர் உனக்கு நன்மையாக மாற்றுவார். ஆகோரின் பள்ளத்தாக்கு நம்பிக்கையின் வாசலாகத் திறக்கிற கர்த்தர், உன் பிரச்சனைகளைப் பதில்களாக மாற்றுவார். உன் தடைகளை வழிகளாக உருவாக்குவார்.

**கர்த்தரை நோக்கிப் பார்க்கும் உன் விசுவாசம்**
**எச்சூழ்நிலையிலும் உன்னை நிலைகுலைய வைக்காது.**

# 7 நவம்பர்

# பொறுமையாய் ஓடக்கடவோம்

"... விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபி 12:1)

நம்முடைய வாழ்க்கையில் அடிக்கடி இது ஏன் எனக்கு நடக்க வேண்டும்? இது ஏன் எனக்கு நடக்கவில்லை. ஏன் இப்படி சம்பவிக்கிறது என்று நாம் வருத்தப்படுகிறோம், புலம்புகிறோம். அதாவது நடக்கிற சம்பவங்கள் நமக்கு நடக்கக் கூடாது. இது ஏதோ தவறுதலாக என் வாழ்க்கையிலே நடக்கிறது. கர்த்தர் ஏன் இப்படிச் செய்கிறார் என்று மறைமுகமாகக் கர்த்தரைக குற்றப்படுத்துகிறோம். அதாவது இதெல்லாம் எனக்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை இது எனக்கு நேரிடவே கூடாது. என்று நாம் தர்க்கம் செய்கிறோம். ஆனால் வேதவசனம் சொல்லுகிறது நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையாய் ஓடக்கடவோம் என்று.

பொறுமையாய் ஓடக்கடவோம் என்று சொன்னதினாலே நாம் பொறுமையை இழக்கக் கூடிய நிலையில் சம்பவம் நடக்கும். நம்மை ஆத்திரப்படக்கூடிய கவலைக்குள்ளாக்ககூடிய பல சம்பவங்கள் நடக்கும். ஆனால் அவைகளைக் கர்த்தர் எனக்கு நியமித்திருக்கிறார் என்று நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். நடக்கிற எல்லாச் சம்பவங்களுமே கர்த்தர் நமக்கு அனுமதித்தவைகளல்ல. ஆனால் சில காரியங்கள் சில நிகழ்வுகள் நமக்கு பிடிக்காமல் போகலாம். நாம் அவைகளை ஒருபோதும் விரும்பமாட்டோம். ஆனால் கர்த்தர் அவைகளை நியமித்திருக்கிறார். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிறதை நாம் அறிவோமானால் பொறுமையோடு நாம் அந்தப் பாதையில் ஓடவேண்டியிருக்கும் ஆகவே எனக்கு ஏற்படுகிற இந்த சம்பவம் தேவன் நியமித்ததா? தேவன் நியமித்ததென்றால் எனக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ நான் பொறுமையோடு ஓட வேண்டும். அப்படியானால் விதி என்று ஏற்றுக்கொள்வதா? எல்லாவற்றையும் இது தலைவிதி இதன்படிதான் நடக்க வேண்டும், இல்லை பிரியமானவர்களே! தலைவிதி என்றவுடன் ஒரு மனிதன் பிறந்தவுடனே கடவுள் எழுதி இதுதான் உன் வாழ்க்கை இதில் நீ யோசிக்கவோ ஜெபிக்கவோ எந்த அவசியமுமில்லை. இது இப்படியேதான் நடக்கும். அப்படி நம்முடைய வாழ்க்கையைக் கர்த்தர் வைக்கவேயில்லை.

மன்றாட்டுகள், கர்த்தருடைய பாதத்திலே இருந்து கேட்பது, தியானிப்பது இவைகளுக்கு தக்கபடியே கர்த்தர் நம் வாழ்க்கையில் செய்வதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. இப்படிதான் நடக்கும் என்று தேவன் எழுதி வைத்திருந்தால் விசுவாசத்திற்கு அவசியமேயில்லை. எல்லாம் காரியங்களும் விசுவாசத்தின்படிதான் நடக்கும் என்பதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. ஆண்டவர் நமக்கென்று ஒரு பாதையை வைத்திருக்கிறார். அந்தப்பாதை தேவன் வைத்ததுதான் என அறிந்தோமானால் நாம் பொறுமையோடு ஓட வேண்டும். நிச்சயமாக அந்த ஓட்டம் நமக்கு ஆசீர்வாதமாகயிருக்கும் என்று வேதம் நமக்கு சொல்லுகிறது.

**கர்த்தர் மேலுள்ள நம்முடைய விசுவாசம் நமது எதிர்காலத்தையே மாற்றியமைக்கும் வல்லமையுள்ளது.**

**8**
**நவம்பர்**

# ஆத்துமாவின் கதறல்

"மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது"

(சங் 42:1)

கடவுளைச் சந்திக்கும் வரை ஆத்துமா அமைதியடையாது. உலகின் எல்லா ஆன்மாக்களும் கடவுளைத் தேடியே அலைகின்றன. சில சமயங்களில் கடற்கரை, மலைப்பிரதேசம், ஆகாயம், அழகிய மலர்த்தோட்டம், கனிதரும் மரங்கள் இப்படி இயற்கையின் மகிமையில் மனிதன் கடவுளின் சாயலைக் கண்டு சமாதானமடைகிறான், என்றாலும் இது தெய்வத்தின் பூரண சாயலாய் இல்லாததினால், இயற்கை தரும் சமாதானம் மனித ஆத்துமாவில் நிலைத்து இருப்பதில்லை. கடவுளின் நேரடி சமுகமே மனித ஆன்மாவின் தாகத்தைத் தீர்க்கிறது.

கடவுள் கொடுக்கின்ற எதிலும் ஆத்துமா பூரணத் திருப்தியடைகிறது. சகோதரனே இன்றைக்கு நீங்கள் திருப்தியாயிருக்கிறீர்களா? உங்களுக்கு வாழ்க்கையில் திருப்தியில்லையெனில் தேவ சமுகம் உங்களுக்குள் குறைவுப்படுகிறது என்று அர்த்தம். நம்மைச் சுற்றிலும் ஏராளமான ஆத்துமாக்கள் தேவ சமுகத்தை வாஞ்சித்துக் கதறிக் கொண்டிருக்கின்றன. அந்தக் கதறல் ஒலிகள் உங்கள் காதுகளில் விழுகின்றனவா?

இளைப்பாறுதல் இல்லாத ஆத்துமா எங்கெல்லாமோ அலைகிறது. இன ஜனங்களிடத்தில் ஆத்துமா ஆறுதலைத் தேடுகிறது. சந்தர்ப்ப பறவைகளின் கூடுகளாகவே சொந்தப்பந்தங்கள் இருக்கின்றன. ஆத்துமா அமைதியின்ற கதறி அலைகின்றது. மனிதன் தேடும் ஆத்தும சமாதானம் இயேசு கிறிஸ்துவினிடத்தில் மாத்திரமே உண்டு.

கிறிஸ்துவைக் கண்ட ஆத்துமா கதறுவதை நிறுத்திவிட்டு அவருக்குள் இளைப்பாற ஆரம்பிக்கிறது.

**இயற்கைத் தரும் சமாதானத்தைவிட தேவசமுகம் தரும் சமாதானம் நம் ஆன்மாவின் தாகத்தை தீர்க்கிறது.**

9
நவம்பர்

# எது விசுவாசம்?

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது". (எபி 11:1)

கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும் என்று, நிறைவேறுதலில் நம்பிக்கை வைப்பது விசுவாசமல்ல. கர்த்தர் நிறைவேற்றிக் கொடுப்பார் என்று கர்த்தர் பேரில் நம்பிக்கை வேறு; விசுவாசம் வேறு. விசுவாசத்திற்கு வேதம் பல இலக்கணங்களைக் கூறுகிறது.

உலகத்தில் நாம் காணுகிற அன்றாடக சம்பவங்கள் மூலம், கர்த்தர் காரியத்தை வாய்க்கப்பண்ணுவார் என்ற நம்பிக்கை, உறுதி ஏற்படுகிறது. ஆனால், கர்த்தரின் வார்த்தைகளோ, நாம் காணாதவைகளையும் நடப்பிப்பார் என்ற நிச்சயத்தை ஏற்படுத்துகிறது. நீங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையிலும் விசுவாசத்திலும் வளருகிறீர்களா? விசுவாசம் நாம் எதிர்பார்த்திருக்கிற நன்மையை மாத்திரம் கொண்டுவருவதல்ல நம்மையே மாற்றியமைக்கிறது. பிள்ளை இல்லாத ஆபிரகாம் எதிர்காலத்தைக் குறித்த ஒரு நம்பிக்கையில்லாதவனாக இருந்தான். ஒரு நாள் ஆண்டவர் ஆபிரகாமை அழைத்து, நட்சத்திரக் கூட்டத்தைக் காட்டி அவனுடைய சந்ததி அவ்வண்ணமாய் இருக்கும் என்றார். "அவன் கர்த்தரை விசுவாசித்தான்".

விசுவாசம் பரலோகத்தின் பொக்கிஷத்தைத் திறக்கிறது. வேதப்புத்தகம் விசுவாசத்தின் பாடப் புத்தகம். விசுவாசத்தின் அஸ்திபாரம் வேதப் புத்தகமே. கடவுளுடைய வார்த்தை வெளி உலகமாகிய மரம்செடி, கொடி, நடப்பன, ஊர்வன, பறப்பன, கடல், அருவி இவற்றையெல்லாம் உருவாக்கிற்று. அதே வார்த்தை மனிதனின் உள் உலகமாகிய குடும்பம், நம்பிக்கை, மகிழ்ச்சி, சமாதானம், இவற்றையெல்லாம் உருவாக்குகிறது. வெளி உலகத்தை கடவுளுடைய வார்த்தை எப்படி ஆளுகை செய்கிறதோ, அப்படியே மனிதனுடைய உள் உலகத்தையும் ஆளுகை செய்ய வேண்டும். அதுவே விசுவாசத்தின் ஆளுகை. சூழ்நிலைகள் மனிதனுடைய வாழ்க்கையை ஆளுகை செய்யக் கூடாது. ஆபிரகாமின் வாழ்க்கையில் எதிர்சூழ்நிலைகள் தங்கள் ஆளுகையை இழந்துவிட்டன. அவரது விசுவாசமே சூழ்நிலைகளைக் கடந்து மேலோங்கி நின்றது. நமது வாழ்க்கை எப்படி இருக்கிறது?

விசுவாசம் என்பது அமைதியான நீரோடையல்ல; அது பொங்கியெழும் எரிமலை. இயேசு வாக்களித்த அனைத்து ஆசீர்வாதங்களையும் எதிர் சூழ்நிலைகளின் கரங்களிலிருந்து தட்டிப்பறித்துக் கொள்ளும். விசுவாசம் வாக்குத்தத்தத்தில் ஒன்றினையும் இழக்க விரும்பாது. ஆகவே விசுவாசத்தோடு ஒவ்வொரு நிமிடத்தையும் சந்தித்துவிடு.

**சூழ்நிலைகளைக் கடந்து நம்மையே
மாற்றியமைப்பதுதான் விசுவாசம்**

**10**
**நவம்பர்**

# கிறிஸ்தவ வீடு

"நீங்கள் தேவனுடைய மாளிகையாய் இருக்கிறீர்கள்" (I கொரி 3:9)

வீடு கட்ட முதலாவது வீட்டுமனையைத் தெரிந்தெடுக்க வேண்டும். நல்ல அனுகூலமான சூழ்நிலை நிலவும் இடத்தையே ஒரு மனிதன் வீடு கட்டத் தெரிந்தெடுப்பான். நம்முடைய பரிசுத்தம், விசுவாசம் இவை கெட்டுப்போகாத சூழ்நிலையே ஆவிக்குரிய வீட்டுமனை. இந்த மனையில் நாம் கட்டுகிற கிறிஸ்தவ வாழ்க்கை எனும் வீடு ஒரு மாளிகையாக இருக்க வேண்டும்.

நீங்கள் தேவனுடைய மாளிகையாய் இருக்கிறீர்கள் என்று வேதம் நம் வாழ்க்கையெனும் வீட்டை விவரிக்கிறது. இந்த மாளிகையை பொன், வெள்ளி விலையேறப்பெற்ற கற்கள் இவற்றினால் கட்ட வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கையெனும் மாளிகையைக் கட்ட சிந்தவேண்டிய வேர்வை, இரத்தம், கண்ணீர் இவற்றைச் சிந்த மனதுள்ளவர்களாயிருங்கள். படிக்கட்டுகள் வீட்டின் ஆரம்பம். வாசலில் பாவம் படுத்திருந்தால் இயேசு இந்த வீட்டிற்குள் நுழையமாட்டார். காயீன் வாழ்க்கையின் வாசற்படியில் பாவம் படுத்திருந்தது. (ஆதி 4:7). அருமையானவர்களே! வாழ்க்கையின் தொடக்க நிலையில் இருக்கும் தவறுகளை உடனே சரி செய்யுங்கள்.

"நாணம் அடையாமல் ஒலிமுகவாசலின் சத்துருக்களோடே பேசுவார்கள்" (சங் 127:6). உங்கள் வாழ்க்கையெனும் மாளிகையில் வாசல் எப்படி இருக்கிறது? சங்கீதக்காரன் சொல்லுகிறபடி வீட்டு வாசல், சத்துருக்கள் ஒருவருக்கொருவர் பேசி சமாதானமடையும் இடமாக இருக்கிறதா? கண்டவரையெல்லாம் வரவேற்பு அறையில் உட்காரவைக்க மாட்டோம். வரவேற்கத் தகுதியுள்ளவர்களை மட்டுமே அந்த அறையில் தங்க வைப்போம். வழிப்போக்கனை நிச்சயமாய் அங்கு தங்க வைக்கவே மாட்டோம். சிந்தனை ஓர் வழிப்போக்கன், அவனிடம் அதிகம் பேசாமல், அவனுக்கு தன் வீட்டில் தங்க இடமில்லை என்று உறுதியாய்ச் சொல்லி, கதவை இழுத்து அடைக்க வேண்டும்.

வீட்டில் ஓர் முக்கிய இடம் சாப்பிடும் அறை (Dining room) பசிக்கு சாப்பிடுவது விருந்தல்ல, பல்வேறு சுவையோடு சாப்பிடுவதுதான் விருந்து. நமது கர்த்தரும் நமக்கு இரட்சிப்பை ஓர் விருந்தாகவே தருகிறார். சமாதானம், சந்தோஷம், அமைதி, திருப்தி, இவையெல்லாம் நிறைந்த ஓர் விருந்துதான் இரட்சிப்பு. என் நேசர் என்னை விருந்து சாலைக்குள் அழைத்து சென்றார் என்று மகிழ்ச்சியுடன் சூலமித்தியாள் கூறுகிறாள் (உன் 2:4). பிதாவின் சித்தம் செய்வதே, தன்னுடைய போஜனம் என்று இயேசுவும் சொல்கிறார் (யோ 4:34) இப்படி ஓர் அருமையான விருந்துசாலை உங்கள் வாழ்க்கை எனும் மாளிகையில் உண்டா? உங்கள் வீடு எப்படி இருக்கிறது? உங்கள் வீட்டை இயேசு தனது முகவரியாக பயன்படுத்த முடியுமா? அப்படியெனில் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

**உங்கள் வீடு விருந்தாளிகளை வரவேற்கும் மாளிகையாக இருக்கட்டும்.**

11
நவம்பர்

# கடவுளின் நோக்கம்

"ஆண்டவரே! நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" (அப் 9:6)

நோக்கங்கள் மனிதனை இயக்குகின்றன. நோக்கமில்லா மனிதன் வெறும் இயந்திரமே. நம்மைக்குறித்து நமக்கு நோக்கங்கள் உண்டு. பெற்றோர், உறவினர், நண்பர் இப்படி நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களுக்கும் நம்மைக் குறித்து நோக்கமுண்டு. இவையெல்லாவற்றிற்கும் மேலாக கடவுளுக்கும் நம்மைக்குறித்த ஒரு நோக்கமுண்டு. இந்த நோக்கம் உங்களுக்குத் தெரியுமா?

அப்போஸ்தலனாகிய பவுல் கர்த்தராலே பிடிபட்ட உடனேயே தம்மைக் குறித்து கர்த்தரின் நோக்கம் என்ன என்பதையே முதலாவது அறிந்துக்கொள்ள பவுல் ஆசைப்பட்டார். கர்த்தரின் நோக்கங்கள் அவருடைய வாக்குத்தத்தங்களில் மறைந்து கிடக்கின்றன. அவற்றின் மீது கருத்து வைக்காமல் வாக்குத்தத்தத்தின் இம்மைக்கான ஆசீர்வாதங்களை மட்டுமே சுதந்தரிப்பது நல்ல ஆவிக்குரிய செயலல்ல.

காலம் பிந்திவிடுவதால், கர்த்தரின் வார்த்தையில் வைத்த நம்பிக்கை தளர்ந்து விடுகிறது. காலம் கர்த்தரின் வார்த்தைகளுக்கு கல்லறைகளில்லை. கடந்த காலத்தில் பிறந்த வாக்குத்தத்தம், காலத்தின் தொட்டிலில் வளர்ந்து, வருங்காலத்தில் நிறைவடையும். ஆகவே காலதாமதத்தினால் சோர்ந்து போகவேண்டாம்.

நம்மில் தேவ நோக்கம் நிறைவேற வேண்டுமெனில், நாம் தேவ சித்தத்தோடு இணையவேண்டும். மோசே தேவ நோக்கத்தை அறிந்தபோதிலும், தேவசித்தத்தோடு இணையாமல் தன் மாம்சீக வழியில், ஓர் எகிப்தியனைக் கொன்றதினால், அவன் தோல்வியையும் தன் இனத்தின் எதிர்ப்பையுமே சந்தித்தான். ஆகவே மாம்சீக வழியை, ஆலோசனையைத் தள்ளிவிட்டு, தேவநடத்தலுக்கு நாம் காத்திருக்க வேண்டும். நம்மில் தேவ நோக்கம் நிறைவேற சில அனுபவங்களை நாம் கடந்துப்போக வேண்டும்.

தேவ நோக்கம் நிறைவேற தேவசித்தம் முதலாவது நம்மில் நிறைவேற வேண்டும். "பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே" என்று யோசுவாவை விசுவாசித்தில் முன்னேறி நிற்கச் சொல்கிறார். கர்த்தர் வாக்குத்தத்த தேசத்தை சுதந்திரமாக தங்களுக்கு தரபோகிறார் என்ற தேவசித்தத்தின் நிச்சயத்தை யோசுவா அறிந்தான். அதற்குத் தன்னை ஒப்புக்கொடுத்தான். நம்மைக் குறித்த தேவசித்தத்தை அறிந்து நாம் நிச்சயித்திருப்போமானால் தேவனுடைய நடத்துதலுக்கு நாம் முற்றிலும் கீழ்ப்படிய வேண்டும். நம்முடைய சுயசித்தத்தை நாம் அடக்க வேண்டும். உலகில் கனம் பொருந்தினவனாயிருந்தும் தேவநோக்கம் எனும் அறிவில்லாத அவர்கள் அழிந்துபோகின்ற மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். (சங் 49:20)

**எவ்விதத்திலும் தேவநோக்கத்தைக் காத்துக்கொள்.**

12
நவம்பர்

# கிறிஸ்தவனின் நடை

"கர்த்தாவே, உமது பிரமாணங்களின் வழியை எனக்குப் போதியும், முடிவுபரியந்தம் நான் அதைக் காத்துக் கொள்வேன். எனக்கு உணர்வைத் தாரும். அப்பொழுது நான் உமது வேதத்தைப் பற்றிக்கொண்டு, என் முழு இருதயத்தோடும் அதைக் கைக்கொள்ளுவேன்." (சங் 119:33,34)

உமது கற்பனைகளின் பாதையில் என்னை நடத்தும், நான் அதில் பிரியமாயிருக்கிறேன். என் இருதயம் பொருளாசையைச் சாராமல், உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும். மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கி, உம.ு வழிகளில் என்னை உயிர்ப்பியும்.

சங்கீதக்காரன் தான் ஆவிக்குரிய வழியில் நடப்பதற்கு தேவனே தனக்கு கற்றுக்கொடுக்க வேண்டுமென்று விரும்புகின்றான். அவன் கற்றுக்கொள்ள விரும்பினதெல்லாம் கற்பனைகளையே! கற்றுக்கொண்ட கற்பனையின்படி ஜீவிய காலம் முழுவதும் நடக்க, உணர்வுள்ள இருதயத்தையும் தேவனிடத்தில் கேட்கிறான். ஒரு கிறிஸ்தவனின் ஜீவியமே அவன் நடை. ஆகவே ஒருவனது ஜீவிய நடை நேர்த்தியாய் இருக்க வேண்டுமெனில் முதலாவது அவன் தேவனது பிரமாணங்களைக் கற்றிருக்க வேண்டும்.

இரண்டாவதாக, அவற்றை கைக்கொள்ள உணர்வுள்ள இருதயம் வேண்டும். ஆதி காலத்தில் தேவ கோபத்தினால் ஜலப் பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் ஜனங்கள் உணராதிருந்தார்கள். அப்படியே மனுஷ குமாரன் வருங்காலத்திலும் நடக்கும் (மத் 24:39) என்று வேதம் எச்சரிக்கிறது. தேவனது வருங்கோபாக்கினைக்கு நாம் தப்ப வேண்டுமெனில் நமது வழிகளைக் குறித்து நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

இவ்வுலகில் நாம் தங்கியிருக்கும் நாளெல்லாம் நாம் பரதேசி என்பதை மறந்து விடக்கூடாது. "இங்கே பரதேசிகளாய் சஞ்சரிக்கும் காலமளவும் பயத்துடனே நடந்து கொள்ளுங்கள்" (1பேதுரு 1:17) என்று வேதமும் நமக்கு ஆலோசனை கூறுகிறது. நம்முடைய சொத்து, சுகம், இவைகள் மீது நாம் அதிகமாய் சார்ந்திருப்போமானால் நாம் பரதேசி என்பதை மறந்து விடுகிறோம். அதனாலேயே ஆவிக்குரிய வாழ்க்கையில் தடுமாற நேரிடம்.

கானானை நோக்கி நடந்த லோத்தின் கண்கள் சோதோமின் நீர் வளம், நில வளம் இவைகளால் தடுமாற்றம் அடைந்தன. ஆகவே சோதோமுக்குள் அவன் நுழைந்தான், எல்லாவற்றையும் இழந்தான். சோதோம் அவனுக்கு கை கொடுக்கவில்லை, வெறும் கையனாய் சோதோம் அவனை விரட்டி அடித்தது. உலகையும், உலகத்தின் பொருளையும் நம்புகிறவன் நஷ்டமடைவான். உலகத்தையும், உலகத்திலுள்ள பொருள்களிலும் அன்பு கூராதே, பரதேசியினுடைய வழியிலே உன் ஜீவ ஓட்டம் முடிகிற வரையிலும் நட.

**உலக மேன்மையாகிய மண்ணுக்காக கிறிஸ்து என்னும் மாணிக்கத்தை இழந்துவிடாதே.**

13
நவம்பர்

# சுய வெறுப்பின் நடை

"ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தானே வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்"(மத் 10:34)

ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவனுக்கு உலகிலுள்ள எல்லாவற்றையும் அனுபவிக்க உரிமையிருக்கலாம். ஆனால் அது அவனுக்கு தகுதியாயிராது. தனக்குத் தகுதியில்லாதவைகளை ஒருவன் வெறுத்து விடவேண்டும். இயேசு செல்வந்தனான ஒரு வாலிபனிடத்தில் "நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்குண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு" என்றார் (மத் 19: 21) ஆனால் இந்த சுய வெறுப்பின் பாதையில் நடக்க அவனுக்கு மனமில்லை. ஆகவே துக்க முகமாய் வீடு திரும்பி விட்டான், இப்படிப்பட்டவர்களை விட ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவது எளிதாயிருக்கும்.

"ஊசியின் காது" என்று சொல்லப்படுவது எருசலேமின் பிரதான வாசலருகே உள்ள ஒரு சிறிய நுழைவுதான். இது ஊசியின் காது போன்ற வடிவமுடையது. இது வழியாக ஒட்டகம் கடந்து செல்ல வேண்டுமென்றால் அது மிகக் கடினமான ஒன்று. ஒட்டகம் தன் சுமைகளை இறக்கி, கால்களை மடக்கி (முழங்காலிடுவது போல) கடந்தாலொழிய அவ்வழியாய் பிரவேசிக்க முடியாது.

அதுபோல விசுவாசிகளும் உலக ஆசாபாசங்களை இறக்கி வைத்துவிட்டு, முழங்கால் ஊன்றி ஜெபித்தால் மாத்திரமே இந்த சுய வெறுப்புப் பாதையில் நடக்க முடியும். இப்பாதையின் முடிவு நித்திய ஜீவன். அநேக விசுவாச சகோதரிகள், ஆடம்பர வாழ்க்கையை விட மறுப்பதினால் சுக போகத்திலேயே மரித்தவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் மேலான உயிர்த்தெழுதலின் பங்கை அடைய முடியாது.

தேவ ஊழியர்கள் தங்கள் கையில் கிடைக்கும் காசுக்குப் பின்னால் மறைந்து கிடக்கும் தியாகம், கண்ணீர், வேர்வை, இரத்தம் இவைகளை எண்ணிப்பார்ப்பார்களானால், கிறிஸ்தவ வாழ்க்கைக்குப் பொருத்தமற்ற மிக விலை உயர்ந்த கார், மிக விலை உயர்ந்த கடிகாரம், பங்களா இப்படி பணத்தை வீணாக்க மாட்டார்கள்.

தேவமனிதர்கள் சி.டி.ஸ்டட், ஜான்வெஸ்லி போன்றவர்கள் தேவனுக்காய்த் தங்களைத் தரித்திரராக ஆக்கிக் கொண்டனர். ஆகவே அவர்களை தேவன் அவர்கள் ஊழியத்தில் ஐசுவரியவான்களாக மாற்றினார். தங்கள் உயிரைப் பணயம் வைத்து தன் வீரர்கள் கொண்டு வந்த பெத்லகேம் கிணற்றுத் தண்ணீரை, தாவீது குடிக்க மறுத்தான். ஊழியம் செய்யும் சகோதரனே! சகோதரியே, உனக்கு கிடைக்கும் காசை உன் சுக போகத்திற்காக செலவழிப்பாயானால் நீ விசுவாசிகளின் இரத்தத்தைக் குடிக்கிறாய் அல்லவா? இன்று முதல் சுய வெறுப்பு பாதையில் நட.

**சுய வெறுப்பை உடையவன் கிறிஸ்துவைப் பின்பற்றும் சீஷன்;**
**சுயநலம் உள்ளவன் உலகைப் பின்பற்றும் பித்தன்.**

**14**
**நவம்பர்**

# துன்பத்தின் நடையும்; முன்னேற்றத்தின் நடையும்.

"அன்றியும் தேவ பக்தியாய் நடக்க மனதாயுள்ளவர்கள் யாவரும் துன்பப்படுவார்கள்" (2தீமோ.3:12)

"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவங்கள் உண்டு" என்று சொல்லியே நம் தேவன் அழைத்திருக்கிறார். ஆகவே துன்பத்தைக் கண்டு கிறிஸ்தவன் மருள வேண்டியதே இல்லை. "நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது, பொறுமையோடு சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாக பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்" ( 1 பேதுரு 2:20,21)

இந்த துன்ப அடிச்சுவடுகளை நாம் பின்பற்றினால்தான் பரம ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க முடியும். சங்கீதக்காரனும் நான் உபத்திரவப்பட்டது நல்லது என்றே சொல்கிறான். அதனால் நான் பிரமாணங்களைக் கற்றுக் கொள்கிறேன் என்று சாட்சி சொல்கிறான். "நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன், இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்." (சங் 119: 67) இந்த வார்த்தை நம்மை துன்பத்தின் நடையில் சரியாய் நடத்தட்டும். பத்மு தீவில் யோவான், இந்த துன்ப நடையில் நடந்து அத்தீவை விட்டு வெளியேறும்போது, "தெய்வீக வெளிப்பாடு" என்ற ஏடோடு வந்தார்.

முன்னேற்ற நடை : ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறி இருக்க வேண்டும். குழந்தை நிலையிலிருந்து, பூரண புருஷராகும் நிலையை நோக்கி முன்னேற வேண்டும். "நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போல் இருக்கும்." (நீதி 4:18)

நமது வாழ்க்கையில் ஏற்படும் தெய்வீக வெளிச்சமே நமது முன்னேற்றம். கிறிஸ்து நமக்குத் தரும் வெளிப்பாடும், நாம் அவருக்குள் பெறும் அனுபவங்களுமே இவ்வெளிச்சமாகும். சகோதரனே! சகோதரியே! உன் ஆவிக்குரிய வாழ்க்கையின் முன்னேற்றமென்ன? இரட்சிக்கப்பட்ட நாளுக்கும் இன்றைக்குமுள்ள வித்தியாசமென்ன? அனுதினமும் நீ பெறுகிற தெய்வீக வெளிப்பாடுகள் என்ன? கடந்த வாரத்தின் உன் ஆவிக்குரிய அனுபவமென்ன?

இப்படி ஆவிக்குரிய வெளிச்சத்தையும், அனுபவத்தையும் பெறுகிறவர்கள் முன்னேற்றப் பாதையில் ஓடுகிறார்கள். இவர்கள் புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போல் செட்டைகளை அடித்து உயரே எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள். நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.

**துன்பங்களும் பாடுகளும் நம்மைப் பூரணப்படுத்துவதற்கே ஒழிய, நம்மைச் சிதைப்பதற்கு அல்ல.**

**15**
**நவம்பர்**

# விசுவாசத்தில் நடை

"நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்"
(2கொரி 5:6)

சூழ்நிலைகள், மனநிலைகள் ஒரு விசுவாசியை வழி நடத்தாது. ஆவியினாலே நடத்தப்படுகிறவனே உண்மை விசுவாசி. விசுவாசத்தினாலே பேசப்படும் தேவ வார்த்தைகளே உயிர்ப்பிக்கிற ஆவியும் ஜீவனும் உடையது. பழக்கத்தினாலோ, ஞாபக சக்தியினாலோ நம்மிலிருந்து புறப்படும் வேத எழுத்துக்கள் செயலற்றவைகளாய்ப் போய்விடும். வசனம் நம் மூலமாய் பரிசுத்த ஆவியானவர் அனுப்பியதாய் இருக்க வேண்டும். அதுவே வல்லமையுள்ள தேவ வார்த்தை. இந்த வார்த்தைகள் ஒருபோதும் வெறுமையாய் திரும்பாது.

"அவர் நமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்." (சங் 107: 20) அனுப்பப்படும் வார்த்தையே வியாதியை குணமாக்கும் வல்லமையுடையது. விசுவாசமே நம் மூலமாய் வேத வார்த்தைகள் புறப்பட்டுச் செல்ல வழிகளைத் திறக்கிறது. வானத்திலிருந்து தேவன் வார்த்தையை அனுப்புகிறதில்லை. தேவதூதர்களும் இன்று பிரசங்கம் செய்கிறதில்லை. புதிய ஏற்பாட்டு விசுவாசியே! உன் மூலமாய்த்தான் வேத வசனம் புறப்பட வேண்டும். நீ விசுவாசிக்காவிட்டால் நீ வேத வசனத்துக்கு தடைக் கல்லாய் இருக்கிறாய்.

"என் வார்த்தையை தீவிரமாய் நிறைவேற்றுவேன்" என்று தேவன் எடுக்கும் தீர்மானங்களுக்கு உன் விசுவாசம் அனுகூலமான கதவைத் திறக்கிறது. தேவனை நம்பி நீ விசுவாசத்தில் நடக்கும்போது நீ இருளில் நடக்க வேண்டியதாய் இருந்தாலும், கர்த்தருடைய நாமத்தை நம்பி தேவனைச் சார்ந்துகொள். இருளாய் இருக்கிறதே என்று உன் மாம்ச முயற்சியால் விசுவாச வழிகளுக்குப் புறம்பாக நெருப்பைக் கொளுத்தினால் நீங்கள் அனைவரும் வேதனையில் கிடப்பீர்கள். (ஏசாயா 50:10,11). ஆகையால் விசுவாசபாதையில் நடங்கள்.

புதிய ஜீவியத்தில் நடை : "நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்"(ரோமர் 6:4) ஞானஸ்நானம் பெற்ற சகோதரனே! சகோதரியே! ஞானஸ்நானம் பெற்று எழுந்திருக்கும்போது அவருடைய உயிர்த்தெழுந்த வல்லமையில் எழுந்திருக்கிறாய். இதுவே புதிய ஜீவன், இந்த ஜீவன் நம் இரட்சிப்பை பூரணப்படுத்துகிறது.

"அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோமர் 5:10) என்று வேதம் சொல்லவில்லையா? ஞானஸ்தானம் பெற்ற உன்னிடத்திலே இந்தப் புதிய ஜீவன் உண்டா? இந்த அனுபவத்தின்படி உனக்கு சதையான இருதயம் இருந்தால்தான் தேவன் தன் ஆவியை உனக்குத் தருவார். (எசே 36:26) கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள் என்று வேதம் சொல்கிறது. (ஏசாயா 42:10) ஆவிக்குரிய புதிய அனுபவங்களைப் பெற்றவர்களே புதுப்பாட்டைப் பாடமுடியும். புது அனுபவங்களை உடையவர்களை தேவன் புது நாமத்தால் அழைப்பார். அதாவது புதிய ஆசீர்வாதங்களினால் நிரப்புவார். இந்த அனுபவம் உனக்குண்டா சகோதரனே! சிந்தனை செய்து பார்.

**விசுவாச பாதை, இடறலற்ற கெம்பீரமான பாதை.**

16
நவம்பர்

# கர்த்தரின் பதில்

"அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்." (2 கொரி.12:9)

பவுலுடைய மூன்றாம் ஜெபத்திற்குக் கர்த்தருடைய பதில் கிடைத்தது. நீ விரும்புகிறபடி இந்த முள்ளை நான் எடுக்க மாட்டேன் என்பதே கர்த்தருடைய பதில். கெத்செமனே தோட்டத்தில் தன்னுடைய பாத்திரம் நீங்கும்படியாக நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிதாவை நோக்கி மூன்றுமுறை ஜெபம் பண்ணினார். அந்தப் பாத்திரம் நீக்கப்படவில்லை. அதுபோல பவுலின் முள்ளும் நீக்கப்படவில்லை.

சகோதரனே! சகோதரியே! கர்த்தர் உனக்கு இல்லை என்ற பதிலையும் தருவார். ஆகவே உன் எதிர்பார்ப்பையே இலக்காக வைத்து ஜெபம் பண்ணாதே. தேவ சித்தத்தையே இலக்காக வைத்து ஜெபம் பண்ணுங்கள். இல்லை என்ற பதிலோடு கர்த்தர் நின்றுவிடவில்லை. அவர் வேறு ஒரு பதிலையும் கொடுத்தார். "என் கிருபை உனக்குப் போதும்" என்பதே அந்த வேறொரு பதில். இந்தப் பதிலைப் பெற்றவுடன் பவுல் தனது ஜெபத்தை நிறுத்தினார். ஜெபத்தில் நம் விருப்பத்தையே வலியுறுத்திக் கொண்டிராதபடி, தேவ நோக்கம் என்ன என்பதை உன்னிப்பாய்க் கவனிக்க வேண்டும்.

சாத்தான் பவுலைக் குட்ட வேண்டும் என்பது தேவனது நோக்கமல்ல. அது சாத்தானின் நோக்கம். அந்த நோக்கம் நிறைவேற தேவன் இடங்கொடுக்கவேயில்லை. பவுலுக்குக் கர்த்தர் உன்னதமான அனுபவத்தைக் கொடுத்தார். அதாவது பரதீசுக்குள் அவர் எடுத்துக்கொள்ளப்பட்டு மேன்மையானக் காரியங்களை அவர் பார்த்தார், கேட்டார். இந்த மேன்மையைக் குறித்து பவுல் மகிழ்ச்சியடையாதபடி சாத்தான் பவுலுடைய சரீரத்தில் ஒரு முள்ளைக் கொடுத்தான். இந்தப் பரம அனுபவத்தைக் குறித்து பவுல் பெருமையடையாதபடிக்குக் கர்த்தர் இந்த முள்ளைப் பயன்படுத்தினார். பரதீசைக் குறித்த அழகு, மேன்மை, சிறப்பு இவைகளைக் குறித்து அல்ல, பரலோகத்துக்குப் போகிற வழியையே பிரசங்கம் பண்ண வேண்டும் என்பதே தேவசித்தம். இந்த முள் பவுலின் சந்தோஷத்தைக் கெடுத்ததா? இல்லை. அவருடைய சந்தோஷம் கெடாதபடிக்குத் தேவன் பவுலுக்கு அவருடைய கிருபையைக் கொடுத்தார்.

பவுலே, உன் துன்பத்தைச் சகிக்க போதுமான கிருபையை நான் உனக்குத் தருவேன் என்று கர்த்தர் சொல்லவில்லை. சரீரத்தில் முள்ளிருக்கும்போதே கர்த்தர் அவருக்குக் கிருபையைக் கொடுத்திருக்கிறார். அதாவது இந்த ஜெபத்துக்குப் பதிலாக கிருபையைத் தரவில்லை. கிருபையைத் தந்திருக்கிறேன் என்பதையே பதிலாகத் தந்தார். அதாவது அந்த முள்ளினாலே அவருக்கு எந்தப் பாதிப்பையும் உணராதிருப்பதற்கே கிருபையைத் தந்தார். இந்த மூன்றாம் ஜெபத்திற்கும் பிறகு தன் சரீரத்தில் முள் இருந்ததாகவே பவுல் உணரவேயில்லை. இதுதான் கிருபை. ஆகவே எந்தச் சூழ்நிலையிலும் பவுல் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருந்தார். கண்ணீர், வேதனை, பாடுகள் நிறைந்த பவுலின் வாழ்க்கை நமக்குத் தரும் செய்தி, "கடைசியாக சகோதரரே, சந்தோஷமாயிருங்கள்" என்பதே! (2 கொரி.13:11) பவுலின் சந்தோஷத்தின் இரகசியம் அவர் தேவனோடு நேரத்தைச் செலவழித்ததே.

**நீ தேவனோடு நேரத்தை செலவழித்தால்,**
**உன் பாடுகளை உணராத கிருபை உனக்குக் கிடைக்கும்.**

**17**
**நவம்பர்**

# சிந்தனைச் சிறை

"கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்." (நியா.6:12)

மனம் ஓர் இலட்சியப் பறவை. எப்பொழுதும் சிந்தனை வானில் பறந்துக் கொண்டேயிருக்கும். செய்து முடிப்பேன், அடைந்தே தீருவேன் என்ற ஆக்கப் பூர்வமான சிந்தனைகள், மனிதனுக்கு வெற்றியைத் தருகின்றன. ஆனால் தன்னால் முடியாது, கூடாது என்ற எதிர் சிந்தனைகள் மனிதனின் மனதைச் சிறைப்பிடித்து மனச்சோர்வு என்ற கூட்டில் மனம் எனும் பறவையை அடைத்துப் போட்டுவிடுகின்றன. சிந்தனைச் சிறை மனிதனை நடை பிணமாக்கிவிடுகிறது. ஒரு வீட்டின் தோட்டத்தில் ஓர் கல் கிடந்தது. அந்தக் கல்லைக் கண்ட ஒருவர் வீட்டின் சொந்தக்காரரிடம் சென்று, "ஐயா! இந்தக் கல்லை நான் எடுத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டார். வீட்டின் உரிமையாளர், "இந்தக் கல்லையா? அது சும்மாதானே கிடக்கிறது. தாராளமாய் எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

வீணாய்க்கிடந்த அந்தக் கல்லை எடுத்துவந்து, அந்தக் கல்லை வெட்டியும், திருத்தியும் ஓர் அற்புதமான தேவதூதனுடைய சிலையை அவர் வடித்தெடுத்தார். அந்த மனிதர்தான் மைக்கேல் ஆஞ்சலோ. அந்த வீட்டுக்காரர் அந்தக் கல்லைப் பற்றி வினாவவே, இவர் சொன்னார், "அந்தக் கல்லுக்குள் ஓர் தேவதூதன் சிறைப்பட்டுக் கிடக்க கண்டேன். அவனை விடுதலையாக்கவே அந்தக் கல்லை எடுத்துச் சென்றேன்." ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தேவ நோக்கம், தேவ சித்தம், தேவ சாயல் சிறைப்பட்டுக் கிடக்கின்றன. இவற்றை விடுவிக்கவே கர்த்தரும் மனிதனைக் கரத்தில் எடுக்கிறார். உனக்குள் சிறைப்பட்டுக் கிடக்கும் தேவமனிதனை விடுதலையாக்குவதே தேவனின் மாபெரும் மீட்புபணி.

எதிரிடையானச் சிந்தனைச் சிறையில் கிதியோன் அகப்பட்டிருந்தான். கர்த்தர் தன்னோடு இல்லை, அற்புதங்கள் நடக்காது, கர்த்தர் தன்னைக் கைவிட்டார் என்று அவிசுவாச சிந்தனைகளில் கிதியோன் சிக்கிக் கொண்டான். உண்மையில் அவனுக்குள் ஓர் பராக்கிரமசாலி இருக்கிறான்; அவன் சிறைப்பட்டுக் கிடக்கிறான். இதைக் கண்ட கர்த்தர், அவனுக்குள் சிறைப்பட்டுக் கிடந்த பராக்கிரமசாலியை விடுவிக்க அவன் அருகே வருகிறார். "பராக்கிரமசாலியே! கர்த்தர் உன்னோடு இருக்கிறார்." (நியா.6:12) என்று அவனுக்குள் சிறைப்பட்டுக் கிடந்த பராக்கிரமசாலியிடம் கர்த்தர் பேசினார்.

சகோதரனே! சகோதரியே! கிதியோனைப் போல நீங்கள் ஒருவேளை அவிசுவாச சிந்தனைகளில் சிக்கிக் கொண்டிருக்கலாம். கர்த்தர் எப்படி கிதியோனுக்குள்ளிருந்த ஓர் பராக்கிரமசாலியைப் பார்த்தாரோ, அவ்வண்ணமே உங்களுக்குள் இருக்கும் பாராக்கிரமசாலியையும் கர்த்தர் பார்க்கிறார். உங்களுக்குள் சிறைப்பட்டுக்கிடக்கும் பராக்கிரமசாலியைக் கர்த்தர் விடுவிக்க விரும்புகிறார். ஆகவே, தேவ நோக்கத்தை அறிந்து சிந்தனைச் சிறையிலிருந்து வெளியே வாருங்கள். உங்களைக் கர்த்தர் கிதியோனைப் போல பயன்படுத்த வல்லவராயிருக்கிறார். கிதியோனோடு பேசின ஆண்டவர் உங்களோடும் பேசுகிறார். இன்றே உங்களை அர்ப்பணியுங்கள்.

**சிறைப்பட்டுக் கிடக்கும் தேவபிள்ளையை விடுதலையாக்குவதே தேவனின் மாபெரும் மீட்புப்பணி!**

18
நவம்பர்

# புதிய பிரச்சனை

"அவர்கள் தங்கள் மிருகஜீவன்களோடும், தங்கள் கூடாரங்களோடும், வெட்டுக்கிளிகளைப்போல் திரளாய் வருவார்கள்; அவர்களும் அவர்கள் ஒட்டகங்களும் எண்ணிமுடியாததாயிருக்கும்; இந்தப்பிரகாரமாக தேசத்தைக் கெடுத்துவிட அதிலே வருவார்கள்." (நியா.6:5)

வாழ்க்கையில் இதுவரை நாம் சந்தித்திராத புதிய பிரச்சனையை சில சமயங்களில் சந்தித்துவிடுகிறோம். ஆம்! மருத்துவரின் கணிப்புக்கு அப்பாற்பட்ட நூதனமான ஓர் நோய் அல்லது திடீரென்று முறிந்து விட்ட உறவு - இப்படி பல புதிய பிரச்சனைகள் நம் வாழ்வில் எழுந்து விடலாம்.

இஸ்ரவேலரும் புதிய பிரச்சனையைச் சந்தித்தனர். "மீதியானியர்... வெட்டுக்கிளிகளைப்போல் திரளாய் வருவார்கள்; அவர்களும் அவர்கள் ஒட்டகங்களும் எண்ணிமுடியாததாயிருக்கும்;" (நியா.6:5) இன்றைய நவீன யுத்தமுறையில் குண்டுகள், லேசர் கதிர் வீச்சுகள் எப்படி அறிமுகப்படுத்தப்படுகிறதோ அதுபோன்று மீதியானியரின் போர்ப்படையில் ஒட்டகங்கள் வந்தன. ஒட்டகம் இஸ்ரவேலருக்கு அதிர்ச்சியான மிருகம். வேகமாக, நீண்ட தூரம் செல்லும் மிருகம் ஒட்டகம். மூன்று அல்லது நான்கு நாள்களில் முதுகில் பெரும் பாரத்தோடு முன்னூறு மைல்கள் ஒட்டகங்களால் நடக்க முடியும். வெறும் காலாட்படையினரான இஸ்ரவேலர் ஒட்டகத்தைக் கண்டு திகைத்தனர். இதுவரைக்கும் யுத்த களத்தில் ஒட்டகத்தை அவர்கள் சந்தித்தது இல்லை.

சகோதரனே! சகோதரியே! பிரச்சனை உனக்கு நூதனமாக இருக்கலாம். கர்த்தருக்கு ஏதேனும் நூதனமாக இருக்க முடியுமா? ஆகவே கலங்காதே! தைரியமாயிரு ஆண்டவருக்குள். நீ சந்திக்கும் இந்தக் கொடிய நோய் மருத்துவத்திற்கு ஓர் சவால். ஆண்டவரின் வல்லமைக்கு எம்மாத்திரம்.

வேதம் சொல்வதைக் கவனியுங்கள், "பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்; தலைக்கல்லை அவன் கொண்டுவருவான்; அதற்குக் கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள் என்றார்." (சகரி.4:7) நீங்கள் சந்திக்கும் பெரிய பிரச்சனைகள் உங்களுக்கு முன்பாக சமமாகும். தலைக்கு மூலைக்கல்லாகிய கிறிஸ்து உன்னோடுகூட இருக்கிறார்.

"இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை." (மத்.16:18) என்ற வாக்குத்தத்தத்தின்படி உங்களுக்கு எதிரான சத்துருவின் கிரியைகளைக் கர்த்தர் நிர்மூலமாக்குவார்.

**இந்த உலகத்தில் நூதனமானது**
**கர்த்தருக்கு முன்பாக அது சாதாரணமானது.**

19
நவம்பர்

## வேத வசனம்

"உமது வசனத்தைத் தியானிக்கும்படி குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக் கொள்ளும்." (சங் 119:148)

நீங்களும் தேவ வசனங்களை நினைவாற்றலில் மட்டும் வைத்துக்கொண்டு இருப்பீர்களானால் காலத்தின் அலைகள் அந்த வசனங்களை வாரிக்கொண்டு போய்விடும். ஆகையினால் உங்கள் இருதயத்தின் ஆழத்திலே வேத வசனத்தைப் பதித்துக்கொள்ளுங்கள். நான்கு மணிக்கு ஜெபிக்க விரும்புகிற தேவ பிள்ளைகளுடைய கண்கள் 3.50 மணிக்கே விழித்துக் கொள்ளுகின்றன. பாக்கியமுள்ள கண்கள். ஜெபம் பண்ணாமல் காலத்தை வீணாக்காதீர்கள். அதிகாலை தூக்கம் உங்களுக்கு நஷ்டம். "உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்; ஆதலால் என் நாவு உம்முடைய வசனத்தை விவரித்துச் சொல்லும்" (சங் 119:172)

உங்கள் கண்கள் விழித்து வேத வசனத்தை தியானிப்பதாக உங்கள் உதடுகள் பிரிந்து வேத வசனத்தை மற்றவர்களுக்கு சொல்லுவதாக. உங்கள் வீட்டில் வேலை பார்ப்பவர்களிடம் சத்தியத்தை சொல்லியிருக்கிறீர்களா? உங்கள் அலுவலகத்தில் உங்களோடு வேலை பார்ப்பவர்களிடம் தேவ அன்பைப்பற்றி சொல்லியிருக்கிறீர்களா? வசனத்தில் பழக்கமில்லாதவர்கள் யூதாசைப்போல வழிவிலகிப் போய்விடுவார்கள்.

வேதம் சொல்கிறது, "ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்." (யோ 14:23) பிரியமானவர்களே, காணிக்கை கொடுப்பதினாலே தேவனுக்கு நம்முடைய அன்பைக் காட்டமுடியாது. ஏழைகளுக்கு நாம் உதவி செய்கிறதினால் மாத்திரம் தேவ அன்பைக் கட்ட முடியாது. தேவ அன்பைக்காட்டுகிற முக்கியமான வழி, வேத வசத்தின்படி ஜீவியத்தைக் காத்துக் கொள்கிறது மாத்திரமே. நாம் பரிசுத்தமாக நம்மைக் காத்துக்கொண்டால்தான் நாம் தேவன் மீது அன்புள்ளவர்களாக இருக்கிறோம். அப்படி அன்புள்ளவர்களாக இருந்தால் என் பிதா அவனில் அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வாசம்பண்ணுவோம். எத்தனைப் பெரிய சிலாக்கியம்! வேதவசனத்தை கைக்கொள்ளுகிறவனோடு கர்த்தர் தங்கியிருப்பார்.

ஆகவே கர்த்தர் என்னோடு இல்லை என்று நீங்கள் சொல்வீர்களானால் கர்த்தர் சொல்வார், "என் வசனம் உன்னோடு இல்லை, ஆகவே நானும் உன்னோடு இல்லை." வேதமும் இயேசுவும் ஒன்றாயிருக்கிறார்கள். ஆகவே யூதாஸோடு கர்த்தர் இல்லை. ஏனென்றால் வசனம் அவனுக்குள் தங்கியிருக்கவில்லை. மூன்று வருஷங்களாக யூதாஸ் இயேசுவோடு இருந்தான். வேத வசனங்கள் அவன் மூலமாய் கடந்து போயிற்று. ஆனால் அவனுக்குள் கடந்து போகவில்லை.

**காலமே எழுந்து தேவனைத் தேடு.**

# 20 நவம்பர்

## பாலகன், குமாரன்

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்" (ஏசா.9:6)

நம்மை மீட்கும்படியாக ஓர் பாலகனாக பெத்லகேமில் அவர் பிறந்தார். "இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்." (லூக்.2:11) என்று தேவதூதன் அறிவித்தான். இந்த இரட்சகருக்கு, மனிதன் என்ற நிலையில் இறப்பும், பிறப்பும் உண்டு; பசி, தாகம், களைப்பு எல்லாமே உண்டு.

இந்தப் பாடுள்ள சரீரத்தையே நம் பாவநிவிர்த்திக்காக பலி செலுத்தினார். ஆகவே மரணம் வரையிலும் அவர் மனிதனாகவே செயற்பட்டார். இந்த மீட்பின் பணியை முடிக்கவே அவர் பாலகனாய்ப் பிறந்தார். "அவர் மரித்த மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தபடியால் தேவகுமாரன் (கடவுள்) என்று பலமாய் நிரூபிக்கப்பட்டார்." (ரோ.1:5)

மரணத்திலிருந்து உயிரோடு எழுந்ததினால், அவர் தேவகுமாரனானார் என்று வேதம் சொல்லவில்லை. உயிர்த்தெழுதல் அவரைத் தேவகுமாரன் என்று வெளிப்படுத்தியது. அப்படியாயின் அவர் ஏற்கெனவே தேவகுமாரன்தான். ஆனால் அது வெளிப்படாமல் இருந்தது. உயிர்த்தெழுதலில் அது வெளிப்பட்டது. வெளிப்பட்ட தேவகுமாரன் உலகில் குமாரனாக நமக்குக் கொடுக்கப்பட்டார். தேவகுமாரனாக பிறக்கவில்லை. ஆனால் இரட்சகராகப் பிறந்தார். அவர் நமக்காகப் பிறந்த பாலகன்; கொடுக்கப்பட்ட குமாரன்.

பாலகனாக அவருடைய மனுஷிகத்தையும், குமாரனாக அவருடைய தெய்வீகத்தையும் பெற்றிருந்தார். ஆகவே தான் இயேசு பாலகனாய் இருக்கும் பொழுதே, "சாஸ்திரிகள் வீட்டுக்குள் பிரவேசித்து பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டங்கமாய் விழுந்து (பாலகனை) அதைப் பணிந்தனர்." (மத்.2:11) ஆகவே இயேசு மனுஷவுருவத்தில் இருந்தபோதிலும் தொழுதுகொள்ளப்பட வேண்டிய கடவுளாகவே இருந்தார். இயேசுவை நாம் தொழக்கூடாது என்று சாத்தான் எத்தனையோ தடைகளை நம் வாழ்வில் கொண்டு வருகிறான். தன்னையே மக்கள் தொழ வேண்டும் என்பது சாத்தானின் பேராசை. மண், கல், மரம், செடி கொடி, மிருகம், மனிதன் என்று எதை மனிதன் வணங்கினாலும் சாத்தானுக்குத் திருப்தியே. ஆனால் இயேசுவை மட்டும் வணங்கக் கூடாது என்பது சாத்தானின் இலட்சியமும், வைராக்கியமும்.

ஆகவே, தேவ பிள்ளையே, நம்மை மீட்கும்படி நமக்காக வந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நாம் தொழுதுகொள்ள வேண்டும். சாஸ்திரிகள் பல மைல் தூரம் பிரயாணம் செய்து இயேசுவைத் தேடிவந்து தொழுது கொண்டனர். அவர்கள் சந்தோஷத்தோடே திரும்பிச் சென்றனர். நமக்கு விடுதலையும் மீட்பையும் இரட்சிப்பையும் கொடுத்த இரட்சகரைத் தொழுது கொள்ளுங்கள். உங்களுக்குள்ளும் தெய்வீக சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும். இந்த மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் நாம் பெற்றுக் கொள்ளக்கூடாது என்பதே சாத்தானின் சதி. இந்தச் சதியை முறியடியுங்கள். குமாரனும் இரட்சகருமாகிய கிறிஸ்துவை தொழுதுகொள்ளுங்கள். தேவன் உங்களில் மகிமைப்படுவாராக. அவர் ஒருவரே ஆராதனைக்குரியவர். அவர் ஒருவரே துதிக்குப் பாத்திரர்.

**நமக்காக ஜீவனைக் கொடுத்தவருக்கு**
**நம்மையே ஜீவபலியாக அபர்ப்பணிப்பதே**

**21**
**நவம்பர்**

# படைப்பின் நோக்கம்

"தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்." (ஆதி.1:27)

படைப்பு தேவனை வெளிப்படுத்த வேண்டும் என்பதே தேவனின் நோக்கம். "காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்" (ரோ.1:20) இயற்கை தேவ வல்லமையை, மகத்துவத்தைக் காட்ட முடியும். ஆனால் இயற்கையினால் தேவசாயலைக் காட்ட முடியாது.

கணவனும், மனைவியும் இணைந்த வாழ்க்கையே தேவசாயலைக் காட்ட முடியும். ஆகவே குடும்ப வாழ்க்கையும் ஒரு தொழுகையே! சண்டையும், சச்சரவும் பிரிவினையும் நிறைந்த வீட்டில் நடைபெறும் குடும்ப ஜெபங்கள் வெறும் சடங்காச்சாரமே. அது ஓர் கிறிஸ்தவ நாடகமே அன்றி உண்மை வாழ்க்கை அல்ல. கிறிஸ்துவுக்குள்ளான குடும்ப வாழ்க்கையே ஆராதனை. நன்றாக இருக்கிறீர்களா? உங்களுக்கு என்ன வேண்டும் ஏன் உங்கள் முகம் வாடிப்போயிருக்கிறது? இப்படிப்பட்ட இன்சொற்கள் தொழுகையின் மொழியாகும்.

ஓர் சம்பவத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இயேசுவுக்குப் பிரயாணக் களைப்பு. நேரம் பகல் 12 மணி, பசியும் அவரை வாட்டியது. ஓர் கிணற்றருகே அமர்ந்திருந்த அவரை நோக்கி, தண்ணீர் எடுக்க ஓர் பெண் வந்தாள் நடத்தைக் கெட்டவள் என்று ஓர் முத்திரை குத்தி, அவள் வாழ்வில் நடந்து முடிந்தவைகளையெல்லாம் தொகுத்து ஓர் தொடர்கதையாக ஊரார் பேசி வந்தனர். அந்தப் பெண்ணோடு அவர் பேசினார். பேச்சின் நடுவில் அவர், "நீ போய் உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டு வா" (யோ.4:16) என்றார். இந்த வார்த்தைகள் அந்தப் பெண்ணின் மனசாட்சியைத் தொட்டன. "எனக்குப் புருஷன் இல்லை என்றாள்." "ஆம், இப்பொழுதிருக்கிறவன் உனக்குப் புருஷன் இல்லை. ஏற்கெனவே உனக்கு ஐந்து புருஷர்கள் உண்டு."

"அப்பொழுது அவள் அவரை நோக்கி நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன் என்றாள்." (யோ.4:19) இப்படி இதயத்தின் ஆழத்தை அவரின் பாதத்தில் ஊற்றினாள். கடவுளை எங்கே தொழுதுகொள்ள வேண்டும்.... மலையிலா அல்லது எருசலேமின் ஆலயத்திலா? இதுவே அவள் இதயத்தின் ஆழத்தில் பிறந்த கேள்வி.

இயேசு அவளுக்குப் பதில் சொல்கிறார், பெண்ணே! கவனி தொழுகை எங்கே... எந்த இடம் என்பது முக்கியமல்ல தொழுகை எப்படி என்பதே முக்கியம். "ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்." என்பதே இயேசுவின் கட்டளை. சத்திய வசன வெளிச்சத்தில், ஆவியானவரின் ஒத்தாசையோடு தொழுது கொள். இதுவே நம்மைக் குறித்த தேவனது நோக்கம்.

**உலகிற்கு தேவசாயலைக் காட்டுவதே**
**உண்மையான தொழுகை. மெய்யான தொழுகை.**

22
நவம்பர்

# வாழ்க்கையே தொழுகை

"வெகுமனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும்... நான் கர்த்தரைச் சேவித்தேன்." (அப்.20:19)

இந்தத் தாழ்மையும், கண்ணீரின் வாழ்க்கையும் ஆழமான அர்ப்பணிப்பு. இந்த அர்ப்பணிப்பும் தேவசமுகத்தில் ஓர் உன்னத தொழுகையாகும். மற்றவர்களின் வேதனை, பாடு இவைகளையும் இரட்சிக்கப்படாதோரின் அவல முடிவையும் எண்ணி, தேவசமுகத்தில் நீங்கள் வடிக்கும் கண்ணீர்கள் கர்த்தரைத் தொழுகின்றன.

உலகை விட்டுப் பிரியும் வேளை வந்தது. நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன் என்ற நிலைக்குப் பவுல் வந்தவுடன், தீமோத்தேயுவைப் பார்த்து, "நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கனுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று" (2 தீமோ.4:5) என்று அர்ப்பணித்ததும் தொழுகைதான். இப்படி வாழ்க்கையே ஆராதனையாக இருந்தது.

கானானியப் பெண் வாழ்க்கையின் நெருக்கத்தில் இயேசுவை நோக்கி, "ஆண்டவரே, தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்." (மத்.15:22) என்று அழைப்பு விடுத்தது அறியாமையில். தாவீதின் வம்சத்திற்கும், கானானியருக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. இயேசு சுகமாக்குவார் என்ற நம்பிக்கையைத் தவிர, இயேசுவைப் பற்றி அவளுக்கு ஒன்றுமே தெரியாது. ஆனாலும் "எனக்கு உதவி செய்யும்" என்று அவரைப் பணிந்து கொண்டாள். இன்றைக்கும் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைப் பிரசங்கிக்காமல், வியாதியை குணமாக்கும் இயேசுவை மட்டும் அறிவிப்பது அறியாமையின் தொழுகை. சிலுவையைப் பற்றிய உபதேசமே உண்மையானத் தொழுகையின் அஸ்திபாரம்.

அக்காலத்தில் இந்தக் கானானியப் பெண் கர்த்தரைத் தேடியதே ஓர் தொழுகைதான். பெண் இப்படி பொதுவிடத்திற்கு வரக்கூடாது, இனத்தினாலோ அவள் எந்த உரிமையும் இல்லாத கானானியப் பெண். அவளைத் துரத்துகின்ற சீஷர்கள் என்ற எதிர் சூழ்நிலையில் இயேசுவை நோக்கி அவள் நடந்த விசுவாச நடைகளே தொழுகைதான்.

"உண்மைதான்! இயேசுவே நான் ஓர் நாய்தான், ஆனாலும் உமது மேஜையினின்று விழும் துணிக்கை எனக்குப் போதும்" என்றாள். ஆம்! ஆத்ம ரட்சிப்பு மேஜை மீதிருக்கும் முழு அப்பம். சரீர சுகம் அப்பத்தின் துணிக்கைகள். இந்தத் துணிக்கைகளைப் பெற தகுதியுள்ள ஓர் நாய்தான் நான் என்பதை அவள் ஒத்துக் கொண்டது, தாழ்மையின் தொழுகை! நாம் எப்படி தொழுகிறோம்!

தேவ பிள்ளையே, அப்போஸ்தலன் பவுலைப் போல வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும் கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் வாழ்க்கையே தேவன் விரும்பும் தொழுகையாக மாறும்.

**தாழ்மையும் கண்ணீரும் சேர்ந்த வாழ்க்கையே**
**உன்னத தொழுகை.**

23
நவம்பர்

# ஆறு வற்றிப்போயிற்று

"தேசத்தில் மழை பெய்யாதபடியினால், சிலநாளுக்குப்பின்பு அந்த ஆறு வற்றிப்போயிற்று." (1 இரா.17:7)

கர்த்தரை நம்பி, அவர் வார்த்தைகளின்படி நடக்கும் பொழுதும் நம் வாழ்வில் பிரச்சனைகள் குறுக்கிடுகின்றன. தேவ ஆலோசனையின்படி பயணித்த தேவ மனிதன் பவுல் பட்டணம் தோறும் கட்டுகளையும், உபத்திரவங்களையும் சந்தித்தான். எலியா தீர்க்கனும் "கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக் கொண்டிரு" என்ற தேவகட்டளை பெற்றுத்தான் அங்கே போனான். ஆனாலும் அந்த ஆறு வற்றிப்போயிற்று. இது நமக்கு விளங்கவில்லை. சற்று திகைத்து நிற்கிறோம். எந்தச் சூழ்நிலையிலும் தேவனது வார்த்தை வற்றிப்போகாது.

"கர்த்தரின் வார்த்தையின்படியே எலியா கேரீத் ஆற்றண்டையில் தங்கினான்." (1 இரா. 17:5) இனஜனங்களின் ஆலோசனையின்படியல்ல, அல்லது தன் மனவிருப்பத்தின்படி அல்ல, தேவ நடத்துதலின்பேரில் அவன் கேரீத் ஆற்றிற்குப் போனான். நம்பிக்கையோடு, விசுவாசத்தோடு, எதிர்பார்ப்போடு, அந்த ஆற்றை நோக்கி நடந்தான். தேசமெங்கும் மழைத் தாழ்ச்சியினால் நீர் ஆதாரங்கள் வற்றிக் கொண்டிருந்தன. இந்தச் சூழ்நிலையில் கேரீத் நம்பிக்கையின் கேந்திரமாக விளங்கியது. ஆனாலும் சில நாட்களுக்குப் பின்பு அந்த ஆறு வற்றிப்போயிற்று. ஏன்? காலமெல்லாம் அதில் நீர் ஓடும் என்று கர்த்தர் சொல்லவில்லை. நீருக்கு கேரீத்தும், இறைச்சிக்கும், அப்பத்திற்கும் காகமும் ஆதாரங்கள் என்று கர்த்தர் சொல்லவில்லை. ஆகவே நமது நம்பிக்கை வற்றிப் போகாத கேரீத்தும் அல்ல, வரத் தவறாத காகமும் அல்ல.

"ஆற்றின் தண்ணீரைக் குடிப்பாய், அங்கே உன்னைப் போஷிக்க காகங்களுக்குக் கட்டளையிடுவேன்" (1 இரா.17:4) என்ற கர்த்தர் சொல்லியிருந்தார். ஆறு வற்றிப்போனாலும் தேவனது வாக்குத்தத்தம் வற்றிப் போகாது. இதனை உணர்ந்த எலியா ஆறு வற்றிப்போயிற்றே என்று பதறவில்லை. "நீ எழுந்திரு" (1 இரா.17:9) என்று கர்த்தர் எலியாவிற்கு சொன்னதினால், அவன் அதுவரை அந்த வறண்ட ஆற்றினருகே அமைதியாய் அமர்ந்திருந்தான் என்று அறிகிறோம். உன் பணம் என்னும் ஆறு வற்றிப்போயிற்றோ? சுகம் என்னும் நீரோடை வெறுமையாயிற்றோ? வாழ்க்கையில் நட்பு, சுற்றம், உறவு எல்லாமே வற்றிப்போகும் நீரோடைகளாக மாறிவிட்டனவா? உடனே நீங்களாகவே ஓர் முடிவிற்கு வராதீர்கள். ஜெப அறைக்குள் போங்கள். கர்த்தர் என்ன சொல்கிறார் என்று கவனித்து, செயற்படுங்கள்.

சகோதரனே, சகோதரியே, பிரச்சனை நிமித்தம் இப்பொழுதிருக்கும் வேலையை விட்டு விட்டு, அலுவலக எல்லையை விட்டு வெளியே வந்து விடாதே. வாலிபனே! மனஉளைச்சலினால் வீட்டை விட்டு வெளியே போய்விடாதே! தேவ உத்தரவின்றி வாசற்படியைத் தாண்டினால், அடுத்து கால் மிதிக்கும் இடம் யுத்தகளமாயிருக்கும்! கர்த்தரின் உத்தரவிற்காக உள்ளேயே காத்திரு.

**குடிக்க தண்ணீருக்கும், புசிக்க அப்பத்திற்கும்**
**தேவனது கட்டளையே ஆதாரம்.**

24
நவம்பர்

# வற்றிப்போன ஆறும், தவறான உபதேசமும்

"தேசத்தில் மழை பெய்யாதபடியினால், சிலநாளுக்குப்பின்பு அந்த ஆறு வற்றிப்போயிற்று." (1 இரா.17:7)

கர்த்தர் அனுப்பினால், பாடுகளோ எதிர்ப்போ இருக்கவே கூடாது என்று தவறான உபதேசம் இன்று நிலவுகிறது. எலியாவே கேரீத் ஆறு வற்றிப் போகவே செய்யாது என்று கர்த்தர் சொல்லவில்லையே! சகோதரனே! சகோதரியே! உனக்கு உபத்திரமே வராது என்று பிரசங்கம் பண்ணுகிறார்களா? உலகத்தில் உங்களுக்கு உபத்திரம் உண்டு என்று இயேசு சொல்லியிருக்கிறாரே? வியாதியே வராது.. உன் ஆறு வற்றிப் போகாது என்று பிரசங்கம் பண்ணுகிறார்களா? எலிசா வியாதிப்படவில்லையா? எசேக்கியா ராஜா நோய்வாய்ப்படவில்லையா? தொற்காள் வியாதியாயிருக்கவில்லையா? எப்பாப்பிராதீத்து வியாதிப்பட்டு மரணத்தறுவாயில் இல்லையா? ஆகவே ஆறு வற்றிப் போவது நடக்கக் கூடாத செயலல்ல.

தாகத்தோடு எலியா வற்றிப்போன ஆற்றினருகே அமர்ந்திருக்கிறான். எலியாவே என்ன எண்ணுகிறாய் என்று அவனிடமே கேளுங்கள். அவனுடைய பதில் இப்படித்தான் இருக்கும். "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்." (ரோ.8:18) ஆகவே உன் வற்றிப்போன நீரோடைகளை நித்திய வெளிச்சத்தில் பார். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கண்முன், அவரைச் சூழ்ந்திருந்த கூட்டம் வற்றிப்போயிற்று. மக்கள் மனதில் அவரைக் குறித்த நம்பிக்கை வற்றிப்போயிற்று, மரியாதை வறண்டு போயிற்று. ஆனால் அவரோ தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து (இப்பொழுது அதன் பலனாக) தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். (எபி.12:2) இந்த நித்திய நம்பிக்கை எனும் ஜீவ நீரோடை நமக்குள் வற்றாது ஓடுமெனில் வாழ்வில் வற்றிப் போகும் ஆறுகளைக் குறித்து கவலைப்படோம்.

சரீரத்தின் சுகம் வற்றிப் போய்விட்டதா... அதாவது நோய் கடுமையாகப் பற்றிக் கொண்டதா? இனி பிழைப்பது அரிது என்ற நிலையில் நம்பிக்கை முழுவதும் வற்றிப் போய்விட்டதா? குழியில் இறங்கப் போகிறோம் என்று எண்ணாதீர்கள். உன்னதத்திற்கு ஏறிப்போகிறோம் என்ற நம்பிக்கை நீரோடை ஆத்துமாவில் பாயட்டும்! எல்லோரின் முகங்களையும் மறந்து துக்கத்தோடு கண்களை மூடப் போகிறேன் என்று எண்ணாதீர்கள். கர்த்தரின் சாயலைக் கண்டு திருப்தியடையும்படி, மறுமையில் கண்களைத் திறக்கப் போகிறேன் என்ற நம்பிக்கை நதியில் ஆத்துமா தாகம் தீரட்டும். ஆம்! நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து தவிக்கிறோம் (ரோ.8:23) என்ற வார்த்தைகள் நினைவிலிருக்கட்டும். ஆகவே வற்றிப்போன ஆற்றை நினைத்து வருத்தப்படாதீர்கள். இம்மை வற்றிப் போகிறது; மறுமை நம்மை நிரந்தரமாகப் பற்றிக் கொள்ளட்டும். எல்லாமே எனக்கு வற்றிப் போனாலும், வற்றிப்போன என் வாழ்க்கை எனும் ஆற்றின் கரையில் என்னோடு இருப்பது வெறுமை அல்ல என் அருமையான ஆண்டவரின் சமுகமே! ஆகவே ஆறு வற்றிப்போனாலும், என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

**ஆறு வற்றிப் போகாது என்ற பொய்யுரைக்கு**
**செவிசாய்க்காது இவ்வுலகச் சரித்திரத்தை முடித்து...**
**இங்கிருந்து எழுந்துபோக ஆயத்தமாவோம்.**

25
நவம்பர்

# ஆறு வற்றிப்போனாலும், காகங்கள் வரத் தவறவில்லை

"காகங்கள் அவனுக்கு விடியற்காலத்தில் அப்பமும் இறைச்சியும், சாயங்காலத்தில் அப்பமும் இறைச்சியும் கொண்டுவந்தது" (1 இரா.17:6)

ஆறு ஏன் வற்றிப்போயிற்று? கர்த்தரின் கட்டளையால். "என் வாக்கின்படியே அன்றி பனியும், மழையும் பெய்யாதிருக்கும்" (1இரா.17:1) என்ற வார்த்தையின்படியே. தேசத்தில் மழை பெய்யவில்லை. ஆகவே கேரீத் ஆறு வற்றிப்போயிற்று. ஆகவே கர்த்தரின் கட்டளையால் ஆறு வற்றிப்போயிற்று. காகங்கள் அப்பதையும், இறைச்சியையும் மாத்திரமல்ல, "எலியாவை போஷி" என்ற கட்டளையையும் சுமந்து வந்தன. ஆகவே தினமும் அவை எலியாவை நோக்கிப் பறந்து வந்தன. கர்த்தரின் வார்த்தை வற்றிப் போகவில்லை. சகோதரனே! சகோதரியே! உடல் நலம் என்ற நீரோடை வற்றிப்போயிற்றோ? உங்களை அன்புடன் விசாரிக்க உறவு என்ற காகம் வருகிறதே! செல்வம் என்ற ஆறு வற்றிப் போய்விட்டது. ஆனால் உதவி என்ற காகத்தைக் கர்த்தர் அனுப்பியிருக்கிறாரே. தேவ உத்தரவுகள் என்ற காகங்கள் வற்றிப்போன வாழ்க்கை ஆற்றின் மேல் பறக்கின்றன! அவை உனக்கு நம்பிக்கையும், ஆதரவும்.

ஆறு வற்றிப்போயிற்று! "இந்த ஆற்றங்கரைதான் உன் வாழ்க்கையின் கடைசி அத்தியாயம். உயிர் பிழைக்க ஓடிவந்த நீ, இந்த ஆற்றங்கரை மண்ணில் புதையுண்டு போகப் போகிறாய்" என்று எதிர் சூழ்நிலை ஆரவாரம் செய்யலாம். கர்த்தரோ நீ எழுந்து சாறிபாத்துக்குப் போ என்றார்! வற்றாத வல்லமையுள்ள தேவ வார்த்தை அவனை 100 கல் தொலைவு நடக்கப் பெலன் கொடுத்தது. சாறிபாத்துக்கு அவன் சென்றது உயிர் பிழைக்க அல்ல, மற்றவரிகளின் உயிரைப் பிழைக்க வைக்க. ஆம்! உயிர் பிழைக்கச் சென்றது போல் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் ஓர் குடும்பத்தைப் பிழைக்க வைக்க!

"இதோ நானும், என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப் போகப் போகிறோம்" (1 இரா.17:14) என்று வாழ்க்கையின் ஓரத்திற்கே வந்துவிட்ட தாயும், பிள்ளையும் பிழைக்கும்படி, எலியா புறப்படும்படி ஆறு வற்றிப்போயிற்று! சாறிபாத்திலும் மழையில்லை. ஆனால் அந்த ஏழை விதவை வீட்டில் எண்ணெயும், மாவும் குறைவுபடவேயில்லை. ஆம்! தேவ வல்லமை வற்றிப்போகவில்லை.

"நானும் என் குமாரனும்" என்று உறவுகள் மிகவும் சுருங்கி, உறவு வற்றிப் போயிற்று. ஆனால் எலியா வந்தபின், "அவளும், அவனும், அவள் வீட்டாரும்" (1இரா.17:15) என்ற உறவு எல்லை பெருகிற்று. மழையினால், மேகத்தினாலல்ல, அவற்றை உண்டாக்கிய கர்த்தராலே மாத்திரம் ஆகும் என்று நாம் உணரும்படி கர்த்தர் வானத்து மதகுகளை அடைத்தார்! ஆறுகளை வற்றிப் போகப் பண்ணினார். ஆனாலும் அவருடைய இரக்கம் என்ற காகம் பறந்து கொண்டே இருக்கிறது.

உன் வாழ்க்கையில் பல அனுகூல நதிகள் வற்றிப்போகலாம். நட்பு என்ற நதி, உறவு என்ற நீரோடை வற்றிப்போகலாம். ஆனால் தேவனது வாக்குத்தத்த காகங்கள் உன்னை வட்டமிடுகின்றன.

**வட்டமிடும் காகங்களை அல்ல கட்டளையிடும் கர்த்தரை நம்பு.**

26
நவம்பர்

# ஐக்கியத்தைக் குறித்து ஜாக்கிரதைப்படு

"அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?" (2 கொரி.6:14)

ஆவிக்குரிய மக்களின் ஐக்கியத்தைக் குறித்து தேவன் மிகவும் கண்டிப்பாக இருக்கிறார். அவிசுவாசிகளுடன் நட்பு பாராட்டலாம். நட்பிருந்தால்தான் கிறிஸ்துவின் அன்பைக் காட்ட முடியும், சுவிசேஷம் அறிவிக்க முடியும். ஆனால் ஐக்கியம் (அதாவது நெருங்கிய உறவு கொள்ளுதல், ஆலோசனை கேட்டல் போன்றவை) கூடாது. தேவனுக்குத் தூரமாயிருப்பவர்களோடு நீங்கள் சமீபமாயிருந்தால், வாழ்வில் பல சிக்கல்கள் உருவாகும்; இன்னல்கள் உங்களைத் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

நான் காண்பிக்கும் தேசத்திற்குப் போ என்று ஆபிரகாமை அழைத்த தேவன் வழியில் அவனோடு பேசவும் இல்லை; அந்த நாட்டை அவனுக்குக் காண்பிக்கவும் இல்லை. ஏனென்றால் ஆபிரகாம் முழுமையாகத் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை. தேசத்தை விட்டு வெளியே வா என்றார், ஆனால் வழியில் அவன் தங்கிய இடமாகிய ஆரான், பாபிலோனிய நாட்டின் ஓர் பகுதியே! ஆபிராம் வழியில் தங்க காரணம் அவன் சகோதரன். "ஆரான் தன் ஜன்ம பூமியாகிய ஊர் என்கிற கல்தேயர் தேசத்துப் பட்டணத்திலே தன் தகப்பனாகிய தேராகு மரிக்கும் முன்னே மரித்தான்" (ஆதி.11:28). இதனால் பயணம் தடைப்பட்டது. அவன் நினைவாகத்தான் அந்தப் பட்டணத்திற்கு ஆரான் என்று பெயரிடப்பட்டது.

தகப்பன் வீட்டை விட்டு தனித்து வா என்றார், ஆபிராம் தன் தகப்பனையே கூட அழைத்துச் சென்றான். இனத்தை விட்டு வெளியே வா என்றார், தன் இனத்தானாகிய லோத்தை அழைத்துச் சென்றான்! ஆரான் மரித்துப் போன துயரத்தில் தேராகுவினால் பயணத்தைத் தொடர முடியவில்லை. அவன் அங்கேயே மரித்துப் போனான். பின்னர் ஆபிராம் ஆரானை விட்டுப் புறப்பட்டு கானான் தேசத்தைச் சேர்ந்தான். அதன் பின்பு "கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி; உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்றார்." (ஆதி.12:7) நீண்ட கால மௌனத்திற்குப்பின் கர்த்தர் பேசினார்.

எலிமலேக்கும், நகோமியும் தங்கள் ஆண் பிள்ளைகளுக்கு மோவாப் தேசத்திலே பெண் கொண்டார்கள். சாபத்தின் பிள்ளைகளோடு தேவப் பிள்ளைகள் உறவு வைத்துக் கொண்டார்கள். அப்பத்திற்காக இந்தத் தகாத உறவை அவர்கள் உண்டு பண்ணினார்கள்; தேவனோ அவர்களுடைய அப்பத்தின் ஆதரவு கோலையே முறித்துப் போட்டார். ஆம் நகோமியின் இரு ஆண் பிள்ளைகளும் அவன் கணவனும் மோவாபிலே மரித்துவிட்டார்கள்.

**தகாத ஐக்கியத்திற்கு உன் மனம் இரத்தின கம்பளம் விரிக்கலாம் முடிவோ இரத்தக் கண்ணீராகிவிடும்.**

27
நவம்பர்

# பிள்ளைக்குத் தன்னைக் காட்டும் தகப்பன்

அவனைச் சுற்றிலுமாய் காரிருள்! பரம தகப்பனைக் காணாத அவன் ஆத்துமாவில் அதைவிட அதிகக் காரிருள். அவன் தோளில் சுமையிருந்ததோ இல்லையோ அவன் இதயத்தில் பெரும் சுமையிருந்தது. தள்ளாடி நடந்த அவனுக்கு, மறைவாய் நின்ற பரம தகப்பன் "நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்த தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை" (ஆதி 28:15) என்ற அன்பு வார்த்தைகளினால் தன்னை வெளிப்படுத்தினார். பரம தகப்பனைக் கண்ட யாக்கோபின் ஆத்துமா மிகுந்த மகிழ்ச்சியில் "இது வானத்தின் வாசல்" என்று அறிக்கையிட்டது! இருண்ட பாதையில் அலைந்த அவன் ஆத்துமாவிற்கு பிதா தன்னை வெளிப்படுத்தினார். மறைந்திருந்த தேவன் அவனுக்கு வெளிப்பட்டபடியால் அவன் ஆவிக்குரிய வாழ்க்கை மலர்ந்தது.

பயந்து நடுங்கி நடந்த யாக்கோபு கர்த்தரின் வார்த்தைகளில் திடப்பட்டான். தேவனைத் தேடாத யாக்கோபுக்கு பிதா தாமாகவே தம்மை வெளிப்படுத்தினார். "கர்த்தர் இந்த ஸ்தலத்தில்தான் இருக்கிறார். இதை நான் அறியாதிருந்தேன்" என்று தன் தவறை உணர்ந்தான். (ஆதி 28:16) பரம தகப்பனைத் தேடாத உள்ளம் வேதத்தின் உண்மைகளையும் தேடுவதில்லை. விண்வெளியை ஆராய்கின்றவன் விண்ணுக்குரிய தேவனைக் காண்பதில்லை. தத்துவஞானி தன் சிந்தனை வழிகளில் கடவுளைத் தேடுகிறான். ஆனால் சத்திய வேதத்தில் மறைந்திருக்கும் ஞானத்தின் பிறப்பிடமாகிய தெய்வத்தைக் காண்பதில்லை. வேதப் புத்தக பக்கங்களிலிருந்து செய்திகளைத் தேடி எடுக்கிற ஊழியக்காரன் வேதத்தில் மறைந்துகிடக்கும் தேவனைக் காண்கிறான்.

சகோதரனே, சகோதரியே! நீ அப்பாவைக் கண்டு பிடித்துவிட்டாயா? அன்றன்று வேண்டிய அப்பத்தைத் தருவது மாத்திரம் தேவனது வேலையில்லை. என்றென்றும் நீ அவரோடு ஐக்கியம் வைத்திப்பதையே அவர் விரும்புகிறார். தன்னை அப்பா, அப்பா என்று சுற்றிவரும் குழந்தையைத் தாவியணைக்கும் தகப்பனைப் போல் தன் வார்த்தைகளால் உன்னை எட்டிப்பிடிக்கவே விரும்புகிறார். அப்பா என்ன தருவார் என்று அவர் கரத்தைப் பார்க்கும் குழந்தைகளை அல்ல, அவர் எப்பொழுது வருவார் என்று அவர் முகத்தைத் தேடும் குழந்தைகளிலேயே அவர் உள்ளம் மகிழ்கிறது. "இம்மைக்காக மாத்திரமே நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாய் இருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்" (1 கொரி 15:19) என்று வேதம் சொல்லவில்லையா? ஆம் தேவபிள்ளையே! நீ எதைக்கொடுத்தாலும் நம் அப்பாவிற்கு வேண்டியது நீதான். உன்னையே அவருக்கு அர்ப்பணிப்பாயா? அதற்கு முன்பு அவரைக் கண்டுக்கொள்வாயா? அப்பா உன்னோடு இருந்தால் நீ தைரியமாய் உலகைப் பார்த்து சொல்லலாம், "கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்" என்று. (எபி 13:6)

**வேத வசனம் உங்களில் கடந்து போகட்டும்.**

28
நவம்பர்

# சிட்சையின் கடுமை

"மீதியானியரின் கை இஸ்ரவேலின்மேல் பலத்துக்கொண்டபடியால், இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரின் நிமித்தம் தங்களுக்கு மலைகளிலுள்ள கெபிகளையும் குகைகளையும் அரணான ஸ்தலங்களையும் அடைக்கலங்களாக்கிக் கொண்டார்கள்."

(நியா.6:2)

இஸ்ரவேலர் விட்டை விட்டு அகதிகளாக ஓட வேண்டியதாயிற்று. காடு, மலை, குன்று என்று திசையெங்கும் சிதறி ஓடினார்கள். விக்கிரக ஆராதனை தேவ மக்களின் வாழ்க்கையை வனாந்தரமாக்கிற்று. நம் பிரச்சனைகளுக்கு அடிப்படையானக் காரணமே விசுவாசத் துரோகமாயிருக்கலாமே? சிந்தியுங்கள்.

கெட்ட குமாரனுக்கு பன்றி தின்னும் தவிடுகூட கிடைக்காமற்போனது மிகவும் நல்ல காரியம். தவிடு கிடைத்தால் தூரதேசத்தில் தகப்பனை நிரந்தரமாக மறந்து பன்றிகளின் தோழமையில் அவன் மகிழ்ந்திருப்பான். வேதம் சொல்வதைக் கவனியுங்கள், "பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான். ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை." (லூக்.15:16) அவனுக்குப் பசி அதிகரித்தபொழுது என்று அடுத்த வசனம் ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால் வசனம் அப்படி ஆரம்பிக்கவில்லை. மாறாக "அவனுக்குப் புத்தி தெளிந்தபோது" (லூக்.15:17) என்று ஆரம்பிக்கிறது. பசியும், தாகமும் சிட்சைகள். அவை அவனது புத்தியைத் தெளிய வைத்தன. அவன் தகப்பன் வீட்டை நினைத்தான்.

God would touch the purse to change the person. இஸ்ரவேலரின் வீடு, சொத்து, சுகம் இவற்றைக் கர்த்தர் தொட்டார் அவர்கள் கர்த்தரை நினைத்தார்கள். இந்த மாதம் வருமானம் அதிகமாக வரும் என்று எதிர்பார்த்தீர்கள் "இரட்டிப்பான நன்மையைத் தருவேன்" என்ற வாக்குத்தத்த வசனத்தைப் போதகர் சொன்னவுடன் நீங்கள் அல்லேலூயா என்று ஆர்ப்பரித்தீர்கள். "அதிகமாய் வருமென்று நீங்கள் எதிர்பார்த்திருந்தும் இதோ கொஞ்சம் கிடைத்தது.. எதினிமித்தம் என்றால் என் வீடு (ஊழியம்) பாழ்க்கிடக்கும் பொழுது நீங்கள் எல்லாரும் அவனவன் தன்தன் வீட்டிற்கு ஓடிப்போகிறீர்களே, இதினிமித்தமே" என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (ஆகாய் 1:9)

பாவங்கள் இரண்டு வகை: Sin of commission and Sin of omission. செய்ய வேண்டாததை செய்வது ஒரு பாவம், செய்ய வேண்டியதை செய்யாமலிருப்பது இன்னொரு பாவம். இஸ்ரவேலர் வணங்கக்கூடாத விக்கிரகத்தை வணங்கி பாவம் செய்தார்கள். இன்றையக் கிறிஸ்தவர் சபைக்குச் செய்ய வேண்டியதைச் செய்யாமல் வீட்டிற்கு ஓடிப்போகிறார்கள். அதனால் வீட்டில் வறுமை, நோய், தோல்வி, ஏமாற்றம். தேவபிள்ளையே! ஏன் நஷ்டம்? ஏன் கஷ்டம்? ஆழமாக வேத வெளிச்சத்தில் அமர்ந்து யோசிப்போம்.

**செய்ய வேண்டியவற்றை செய்து**
**தேவ கோபத்திற்குத் தப்புவதே ஞானம்.**

# தாழ்மையின் நடை

**29**
நவம்பர்

"உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதே அல்லாமல் வேற என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில கேட்கிறார்"( மீகா 6:8).

தேவன் நம்மிடத்தில் விரும்பும் முதல் காரியம் தாழ்மையே. தாழ்மையையே தேவன் பெரிதும் விரும்புகின்றார். "தாழ்மைக்கும், கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும், மகிமையும், ஜீவனுமாம்." (நீதி 22:4) உலகப் பிரகாரமாய் உயர்த்தப்படுவதற்கு ஒரே வழி தேவனுக்கு முன்பு தாழ்மைப்படுவதே.

மேன்மை பாரட்ட அறிவு, ஆற்றல், செல்வம், செல்வாக்கு இவைகளை எல்லாம் பவுல் பெற்றிருந்தும் அவர் மேன்மை பாராட்டியது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே. நமக்கு உலகப்பிரகாரமாய் எத்தனை மேன்மைகள் இருந்தாலும் உண்மையான மேன்மை நாம் அவருடைய பரிசுத்த இரத்தத்தினால் கழுவப்பட்டிருப்பதே. இந்த இரத்தத்தைக் குறிந்து நாம் உண்மையில் மேன்மை பாராட்டுகிறோமா? அப்படியாயின் வீண் பெருமை, மனமேட்டிமை, இவைகளில் நாம் நடப்பது எப்படி?

ஆனால் பல கிறிஸ்தவர்கள் தங்கள் உலக சிலாக்கியங்களை முன்னிட்டு, கர்வமாய் இருப்பதைக் காண்கிறோம். பணம், படிப்பு, குலம் இவைகளில் மேன்மை பாரட்டுகிறவர்கள் சோதோமின் புத்திரர்கள். நாமோ பரம எருசலேமுக்கு அழைக்கப்பட்டவர்கள். இந்த அழைப்பை மறவாது நடப்போம். "கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள் அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (யாக் 4:10) என்ற வேத வாக்குத்தத்ங்களை மறவாதே.

ஒரு தேசத்தில் கடவுளற்றோர், துன்மார்க்கர், விக்கிரக ஆராதனைக்காரர் இப்படி பல கூட்டங்கள் வாழ்ந்தாலும் அத்தேசத்தில் வாழும் தேவ மக்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, தேவனது முகத்தைத் தேடி தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால் ... அந்தத் தேசத்துக்கு கர்த்தர் ஷேமத்தைக் கொடுப்பார். நம் தேசத்தின் செழுமையும் வளமையும் கிறிஸ்தவனின் தாழ்மையைப் பொறுத்தது.

நீ முழங்காலை முடக்கினால், தேவன் உன் தேசத்தை ஆசீர்வதிப்பார். உன்னத தேவன் பூமியில் மனிதனிடையே வாசம் பண்ணும் நோக்கமென்னவெனில் பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிப்பதும், நொறுங்குண்ட இருதயத்தை உயிர்ப்பிப்பதுமே. உன்னை நீ தாழ்த்தினால் அவர் உன்னை உயர்த்திடுவார்.

**பரலோகம் உன்னைத் தொட வேண்டுமெனில் பணிந்துவிடு. தேவனுடைய கரத்தில் தாழ்ந்துவிடு.**

**30**
**நவம்பர்**

# கர்த்தரின் வார்த்தையில் மகிழ்ந்திரு.

"இரவும் பகலும் கர்த்தருடைய வார்த்தையை தியானித்துக் கொண்டிருப்பாயாக"(யோசு 1:8)

கர்த்தர் யோசுவாவை இப்படி அறிவுறுத்துகிறார். மனமகிழ்ச்சியில்லாமல் வேதத்தைத் தியானிக்க முடியாது. சங்கீதக்காரனும் நமக்கு ஆலோவனை சொல்லும்போது, "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாய் இருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங் 1:2) என்று கூறுகிறான்.

இதில் மிக முக்கியமான ஒன்று "பிரியமாயிருந்து" என்பதே. பிரியமில்லாமல் வேதத்தை வாசிக்கிறவன் மந்திரம்போல் வாசிக்கிறவன். நாவு வேத வசனத்தை உச்சரித்து கொண்டிருந்தாலும் மனம் ஊரைச் சுற்றிக் கொண்டிருக்கும். பிரியமாய் வேதத்தை வாசிக்கிறவனின் இதயம் வேத வசனத்தின் நடத்துதலுக்கு அலைய வேண்டியதில்லை. மகிழ்ச்சியின் ஊற்றுகள் நமக்குள்ளே இருக்கின்றன. அவற்றை நாம் கண்டு பிடிக்க வேண்டும். பரிசுத்த ஆவியின் நிறைவு வேத தியானம், துதி ஸ்தோதிதிரங்கள் இவையெல்லாம் நமக்குள் இருக்கும் மகிழ்ச்சியின் ஊற்றுகள். இந்த ஊற்றுத் தண்ணீரைப் பருகாதவன் உலக ஊற்றுத்தண்ணீரைப்பருகி உணர்வின்றி உறங்கிக்கிடக்கிறான்.

உன் வாயைவிட்டு வேதம் பிரியாமலிருப்பதாக என்றும் கர்த்தர் யோசுவாவிற்கு ஆலோசனை சொன்னார். இதற்கு என்ன அர்த்தம்? வேதத்தோடு நமக்கு ஒரு பேச்சுத்தொடர்பு இருக்க வேண்டும். வேதத்தை சத்தமாய் வாசிக்கும்பொழுது நமக்கும் வேதத்திற்கும் இடையே பேச்சுத்தொடப்பு உண்டாகிறது.

ஓர் நண்பரோடு உரையாடுவது போல் நீங்களும் உங்கள் வேத புத்தகமும் உரையாடுவீர்களாக. இப்படிச் செய்தால் தேவ சமூகம் உங்களில் நிலைத்திருக்கும். தேவ நோக்கமும் நிறைவேறியிருக்கும்.

**உபதேசங்கள் நம்மை உணர்வுள்ளவனாக்கும், சத்தியத்தில் நடப்பது நம்மை கிறிஸ்துவின் ஜீவனுள்ளவனாக்கும்.**

**1**
**டிசம்பர்**

# இருண்ட இடம்

"தானியேல் தன் தேவன் மேல் விசுவாசம் வைத்திருந்தபடியால் அவனில் ஒரு சேதமும் காணப்படவில்லை" (தானி 6:23).

தானியேலின் கெபிக்குள் தேவ தூதன் சென்றான். சீறிப்பாயும் சிங்கங்கள் ஆடுகளைப்போன்று அமைதியாகிவிட்டன. ஏன் இந்த மாற்றம்? ஆம்! இந்தச் சிங்கங்கள் எனக்கு ஒரு சேதமும் உண்டாக்க என் தேவன் சம்மதிக்கமாட்டார் என்று அவன் கர்த்தரை விசுவாசித்தான். இதுதான் அவனால் முடியக்கூடிய செயல். அதைத் தானியேல் செய்தான். அவனால் முடியாததைத் தேவன் செய்தார். ஐயோ என் வாழ்க்கை, என் எதிர்காலம், என் ஜீவன் என்று உரிமைப் பாராட்டாமல் என் தேவன் என்று தேவன் பேரில் விசுவாச உரிமை பாராட்டினான். அந்தச் சிங்கங்கள் பலவீனமான சிங்கங்கள் அல்ல. வேறு சிலரை அந்தக் கெபியில் தூக்கி எறிந்ததும் அவர்கள் கெபியின் அடியிலே சேருமுன்னே சிங்கங்கள் அவர்கள் மேல் பாய்ந்து அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கிப்போட்டன. (தானி 6:21) இப்படிப்பட்ட கொடிய சிங்கங்களின் வாயைத் தேவன் கட்டிப்போட்டார்!.

உன்னை இரும்புக்கரம் அழுத்தலாம். கர்த்தருக்கு முன் அந்த இரும்பு, ஒரு துரும்பு. அவ்வாறு எண்ணியே தானியேல் மிகவும் நம்பிக்கையுடன் கெபியில் நின்றான். ஓநாய் மந்தைக்குள் ஆட்டை அனுப்புவதுபோல் உன்னை இந்தப் பொல்லா உலகிற்குள் தேவன் அனுப்புகிறார். ஆனாலும் நீ பத்திரமாக இருப்பாய். தானியேல் மரணம் சூழும் வேளையில் தனித்திருந்தான். அவன் ஜீவனைத்தப்புவிக்க அவனுக்குப் பாதுகாப்பாக கர்த்தர் தேவதூதனை அனுப்பினார். அரசாணை கெபியின் வாசலை அடைத்தது. தேவனது ஆணை சிங்கத்தின் வாயை அடைத்தது. ஆகவே உன் தனிமையை, இருண்ட சூழ்நிலையை எண்ணி நீ கலங்காதே. கர்த்தர்மேல் தானியேலுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை. The authority may be formidable but his faith in God was more formidable.

அந்தச் சிங்கக் கெபிக்குள் சென்ற தூதன் தானியேலைப் பத்திரமாகத் தூக்கி வெளியே கொண்டு வந்திருந்தால் நலமாக இருந்திருக்குமே என்று நீ எண்ணலாம். தேவன் செய்த மகத்தான காரியத்தைப்பார். தானியேலுக்கு எதிரான அரசாணை அமுலில் இருக்கும்பொழுதே ராஜா தானியேலைக் கெபியிலிருந்து தூக்கிவிடச் சொன்னான். அவனைத் தூக்கி எறிந்த கரமே அவனைத் தூக்கி எடுத்தது. கெபியை மூடியகரமே கெபியைத் திறந்தது. ஏன்? தானியேல் தன்னால் முடிந்ததைச் செய்தான். "தேவன் என்னை எல்லா ஆபத்துக்கும் தப்புவிப்பார்" என்று விசுவாசிப்பதே அவனால் முடியக்கூடிய செயல். உன்மேல் வரும் உத்தரவை தேவ ஆணை விழுங்கிவிடும். நீ பத்திரமாகக் கடந்துபோவாய். நீ செய்யவேண்டியதெல்லாம் தேவன் மீது விசுவாசமாயிருப்பதே. ஆமென்.

**"தேவன் உன்னை எல்லா ஆபத்துக்கும் தப்புவிப்பார்"**

2
டிசம்பர்

# மலரைக் காணும் வழி

"வாழ்வுக்காலத்தில் நன்மையை அனுபவித்திரு; தாழ்வுகாலத்தில் சிந்தனை செய்... இவ்விரண்டையும் ஒன்றுக்கொன்று எதிரிடையாக வைத்திருக்கிறார்."(பிரசங்கி 7:14)

வாழ்வும், தாழ்வும் எதிரிடையானக் காரியங்கள். ஆனால் இவ்விரண்டு காலங்களும் தேவனது கரத்தில்தான் இருக்கின்றன! உன் வாழ்வின் காலம் தேவனுடைய கரத்திலென்றும், உன் தாழ்வின் காலம் சாத்தானின் கரத்திலென்றும் எண்ணாதே. வாழ்வோ, தாழ்வோ உன் இரண்டு காலங்களும் கர்த்தர் இயேசுவின் கரத்திலிருக்கின்றன. ஆகவே "வாழ்வின் காலத்தில் மகிழ்ந்திரு; தாழ்வின் காலத்தில் துக்கித்திரு" என்று கர்த்தர் சொல்லவில்லை. "வாழ்வின் காலத்தில் மகிழ்ந்திரு; தாழ்வின் காலத்தில் சிந்தனை செய்" கவலை, பயம், திகில் - இவைகள் உன் ஆத்துமாவை ஆள சம்மதித்துவிடாதே! சம்பவங்கள் நேரெதிரிடையாக நடக்கும்பொழுது, அவையனைத்தும் முள்ளாகத்தைக்கும்பொழுது, கவலையில், சோகத்தில் மூழ்கிவிடாதே! இவைகள் ஏன் சம்பவிக்கின்றன என்று சிந்தனைசெய். அந்தச் சிந்தனையில் தேவ நோக்கம் என்ற மலரைக காண்பாய்! அந்த மலரைக் காணுமட்டும், உன் முட்களைத் தாங்கிக்கொள்ள தேவன் கிருபையைக் கட்டளையிடுவார்.

இயேசுவின் அன்புத் தாயாருக்கு ஆவியானவர் அனுப்பிய வார்த்தைகள் "உன் ஆத்துமாவையும் பட்டயம் உடுருவிப்போகும்." (லூக்கா 2:35) நமது ஆண்டவர் மரியாளின் வயிற்றில் உருவான நாள் முதல் மரியாளின் ஆத்துமாவில் எத்தனையோ முட்கள்! தன் மகனைப் பற்றிய திகில், அந்த ஏழைத்தாயின் இதயத்தை முள்ளாகக் கிழித்து, நாளடைவில் ஒரு பட்டயமே உருவாகி, அந்தத் தாயின் ஆத்துமாவை, மனதை உடுருவிப்போனது! குடுகுடுப்பைக்காரன் போல் ஒரு பட்டயம் உன் மனதை ஊடுருவப்போகிறது என்று ஆண்டவர் சொல்லவில்லை. அந்தப் பட்டயத்தைத் தாங்கிக் கொள்ளும் தேவ பலத்தையும் கர்த்தரின் தாயாருக்கு வாக்களித்தார்.

இந்தப் பட்டயத்தின் வேதனையில், மனச்சோர்வின் படுபாதாளத்தில் விழுந்து விடாமல், அந்தத் தாயாருக்கு ஆண்டவர் கொடுத்த பலம் "கிருபை" ஆம்! கிருபை பெற்றவளே, வாழ்க! என்பதன் பொருள் இதுதான்! தேவன் வீணாக கிருபைகளைத் தருவதில்லை. ஆத்துமாவில் தைக்கும் முட்களையோ, உருவிப்போகும் பட்டயத்தையோ தாங்கிக் கொள்ளும் பலத்தை அளிக்கவே கிருபை கிரியை செய்கிறது. தன் மகனுக்கு எதிராக உருவாகும் சூழ்நிலைகள், சதிகள், நிந்தனைகள், கடைசியில் அவர் சிலுவையில் துடித்த வேதனையான காட்சிகள் - இவைகள்தான் ஆத்துமாவில் தைத்த முட்களும், உருவிப்போன பட்டயமும். "கிருபையினாலேயே நீ வாழப்போகிறாய்" என்று மரியாளை வாழ்த்தியதின் பொருள். "முட்களின் மத்தியில் மலர்ந்திரு" என்பதே.

**"முட்களின் மத்தியில் மலர்ந்திரு"**

3
டிசம்பர்

# சாலொமோனின் செல்வம்

"நான் பெரிய வேலைகளைச் செய்தேன், எனக்காக வீடுகளைக் கட்டினேன், திராட்சத் தோட்டங்களை நாட்டினேன், எனக்காகத் தோட்டங்களையும், சிங்கார வனங்களையும் உண்டாக்கி அவைகளில் சகலவகைக் கனி விருட்சங்களையும் நாட்டினேன்... வெள்ளியையும் பொன்னையும் ராஜ சம்பத்தையும் மாகாணங்களிலுள்ள பொருட்களையும் சேகரித்தேன், சங்கீதக்காரரையும், சங்கீதக்காரிகளையும் மனுபுத்திரருக்கு இன்பமான பலவித வாத்தியங்களையும் சம்பாதித்தேன்." (பிர 2:4,5,8)

இவற்றைச் சம்பாதித்தது தவறல்ல, இந்த சம்பாத்தியத்தினாலே கர்த்தரை மறந்தது தவறு. தன்னுடைய நிலம் நன்றாக விளைந்ததின் பலனாகத் தன் களஞ்சியங்களை இடித்து பெரிதாகக் கட்டித் தனக்கு விளைந்த தானியத்தை, அங்கே சேர்த்து வைப்பேன் (லூக்கா 12:18) என்று ஐசுவரியவான் திட்டமிட்டது தவறல்ல. தன் சரீரத்திற்காக இவைகளைச் சேர்த்து வைத்துவிட்டு, "ஆத்துமாவே, நீ பூரிப்பாயிரு" என்று சொல்வதுதான் தவறு. சாலொமோன் பொன்னைச் சேர்த்தான்; பொன்னிலும் மேலான விசுவாசத்தை விட்டான். நடை மண்டபத்தைக் கட்டினான்; சத்திய நடையில் பாதைத் தவறினான். சாலொமோனுடைய செல்வம் அவனுக்குச் சமாதானத்தைத் தரவில்லை. தேசத்தில் பல்வேறு கட்டடங்களை அவன் கட்டி எழுப்பினான். இதற்காய் ஏராளமான பணத்தைச் செலவிட்டான். பனிரெண்டு கோத்திரங்களுக்கு பதிலாக பனிரெண்டு வருமான மாவட்டங்களை உருவாக்கினான். பனிரெண்டு மணியக்காரரிடம் வருமான பொறுப்பை ஒப்படைத்தான். (1இரா.4:7)

நாள் ஒன்றிற்குச் சாலொமோனுக்குச் செல்லும் சாப்பாட்டுச் செலவு முப்பது மரக்கால் மெல்லிய மாவும், அறுபது மரக்கால் மாவும். கலைமான்களையும், வெளிமான்களையும், வரையாடுகளையும், கொழுமையான பறவைகளையும் தவிர கொழுக்கப்பட்ட பத்து மாடுகளும், மேய்ச்சலிலிருந்து வந்த இருபது மாடுகளும் நூறு ஆடுகளுமாம். (1இரா.4:22,23) ஆனால் இந்தச் செலவெல்லாம் பொதுமக்கள் தலை மேல் பெரிய பழுவாக விழுந்தது. சாலொமோனுக்குப் பிறகு ஜனங்கள் முறையிட்டு அழுதார்கள்.

சகோதரனே, சகோதரியே! சாலொமோனுடைய வீண் செலவு நமக்கு ஒரு பாடமாக இருக்கட்டும். நாளைக்கு கடவுள் ஆசீர்வதிப்பார் என்று இன்று கடன் வாங்காதே. இன்று எத்தனையோ குடும்பத்தில் கடன் தொல்லை சமாதானத்தைப் பட்சித்துப் போட்டது. ஊழியக்காரச் சகோதரனே, கர்த்தருக்காகவும் கடன் வாங்காதே. சக்திக்கு மீறிய ஆலய கட்டடங்கள், பிரமாண்ட நற்செய்திக் கூட்டங்கள் இவற்றால் கடன் பட்டு மனச் சமாதானத்தை இழந்தவர்கள் பலர். சாலொமோனின் பிரமாண்ட திட்டம் தேசத்தை சீர்குலைத்ததை ஊழியக்காரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**ஐசுவரியமும் கனமும் தேவனிடத்திலிருந்து வருகிறது.**

# 4
டிசம்பர்

# பணக்கார தரித்திரன்

"ஒருவன் நூறு பிள்ளைகளைப் பெற்று, அநேகம் வருஷம் ஜீவித்து, தீர்க்காயுசை அடைந்திருந்தாலும், அவன் ஆத்துமா அந்தச் செல்வத்தால் திருப்தியடையாமலும், அவனுக்கு பிரேதக் கல்லறை முதலாய் இல்லாமலும் போகுமானால், அவனைப் பார்க்கிலும் கருவழிந்த பிண்டம் வாசி" என்கிறான் பிரசங்கி (பிர6:3)

இந்த வசனம் ஒரு தரித்திர ஐசுவரியவானை படம் பிடித்துக் காட்டுகிறது. மிகுந்த செல்வமுடைய ஒருவன், அந்தச் செல்வத்தால் திருப்தியடையாமல் போவானானால் அவன் தரித்திரனே. அவன் பல வருடங்கள் வாழ்ந்து, நூறு பிள்ளைகளைப் பெற்றாலும், அவன் மரித்த பிறகு அவன் நூறு பிள்ளைகளில் ஒரு பிள்ளைகூட அவனுக்காக அழாவிட்டால் அவன் எத்தனை பரிதாபமான மனிதன்.

இந்த நிலைமையைத்தான் 'பிரேதக் கல்லறையில்லாமல்' என்று சாலொமோன் குறிப்பிடுகிறான். சாலொமோனின் கற்பனை பாத்திரமான இந்த மனிதன் குடும்பத்தாரின் அன்பை இழந்து போனவன். அவனது திரளான செல்வம் அவனை ஆற்றவும் இல்லை; தேற்றவும் இல்லை. இந்த மனிதனைவிட கருவிலேயே உருவமற்று அழிந்துபோன ஒன்று மேலானது என்று பிரசங்கி கூறுகிறான். ஏன் இந்தக் கருவழிந்த பிண்டம் மேலானது? அதற்கு எந்தப் பெயரும் கிடையாது. அதற்கு எந்த ஆள் தத்துவமும் கிடையாது. (It has no personality) ஆகவே அதன் பெயரை ஜீவ புஸ்தகத்திலிருந்து கிறுக்கப்பட அவசியமே இல்லை. ஏனெனில் ஜீவபுஸ்தகத்தில் அதன் பெயரேயில்லை. ஆனால் இந்த ஐசுவரியவானுடைய பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டும், அவன் தேவனற்று மரித்ததினால் அவன் பெயர் ஜீவ புஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. இது பரிதாபமானது.

"ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாக காணப்படாதவன் எவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்படுவான்" (வெளி 20:15) என்று வேதம் சொல்லுகிறது. ஆகவே இந்த ஐசுவரியவான் எரிநரகத்திற்குப் போனான். கருவழிந்த பிண்டம் பரலோகத்திற்கு வராது. ஆனாலும் அது நரகத்திற்குப் போவதில்லை. ஆகவே இந்த ஐசுவரியவானைவிட கருவழிந்த பிண்டம் மேலானது.

சாலொமோனின் இந்தப் கற்பனைக் பாத்திரம், இரண்டாயிரம் வருஷம் பிழைத்திருந்தாலும் இரட்சிப்பு இல்லையேல் ஒரு நன்மையும் காண்பதில்லை. அவன் பெயர் அந்தகாரத்தால் மூடப்படும். அதாவது நித்தியத்தின் பிரகாசத்தை அவன் ஆத்துமா சந்திப்பதேயில்லை. நீங்களோ களிகூர்ந்து மகிழுங்கள். உங்கள் பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. இரட்சிப்பில்லாத ஒரு ஐசுவரியவான் இரண்டாயிரம் வருடம் வாழ்ந்தாலும் ஒரு வினாடிகூட வாழாத கருவழிந்த பிண்டம் அவனைவிட மேலானது.

**போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.**

5
டிசம்பர்

# கர்த்தரின் முகம்

"உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்" (யாத் 33:18)

கர்த்தரின் மகிமையைக் காண விரும்பிய மோசேக்கு கர்த்தர் கொடுத்த பதில், "நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்றார்." (யாத் 33:20)

தேவனது மகிமை என்பது, தேவனது சமுகமே. கடவுளைத் தரிசிப்பது என்பது மிக அபூர்வமான ஒன்று. கடவுளைப் பார்ப்பது என்பது அவருடைய முகத்தைப் பார்ப்பதே. ஒருவரை நாம் முகமுகமாய் அறிந்திருக்கிறோம் என்பதில் பொருள் நமக்கும் அவருக்குமிடையே உள்ள உறவு மிக நெருக்கமானது என்பதே. தேவனது சித்தம், நோக்கம் இவைகளை அறிந்துக்கொள்வதே தேவனது முகத்தை நாம் காண்பது. நம்மில் எத்தனைப் பேர் இந்தச் சிந்தனையில் கர்த்தரின் முகத்தைக் காண விரும்புகிறோம். உமது மகிமையை காண்பியும் என்றான் மோசே. பிதா கூறுகிறார், என் முகத்தை நீ காணமாட்டாய் என்று. ஆகவே தேவனது மகிமையென்றால் அவரது முகமே. தேவனது மகிமையைக் கண்டு ஒருவரும் உயிரோடிருக்க முடியாது என்று வேதம் சொல்லுகிறது. நாமோ தேவனது முகத்தைக் காண வாஞ்சிக்கிறோம். அப்படியெனில், நாம் மரிக்க ஆயத்தமாயிருக்க வேண்டுமென்பதே வேதத்தின் கட்டளை. நாம் உயிரோடு இருந்து தேவ மகிமையைக் கண்டால் நாம் மரித்து விடுவோம். நாம் மரித்துவிடுவோமானால் தேவ மகிமையைக் காண்போம்.

இந்த மரணம் சரீர மரணம் அல்ல. நம் மாம்சீகம் மரிக்க வேண்டும். நம் மாம்சம் ஜீவனோடுதான் இருக்கும். மாம்சீக பயம், கவலை, இச்சை இவற்றிற்கு நாம் மரித்தால் நாம் தேவ மகிமையைக் காண்போம். நம் மாம்சம் மரிக்க வேண்டியதில்லை. நம் மாம்சம் ஜீவனோடு இருக்கும்பொழுது. நம் மாம்சீகம் அதாவது நம்முடைய பாவ சுபாவங்கள் ஜீவனற்றுப் போக வேண்டும். இப்படி ஒரு மரணம் நமக்கு வந்தால் மட்டும் நாம் இயேசுவின் முகத்தைக் காணமுடியும். கர்த்தரின் மகிமைக்கும் நம் மரணத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. நம்முடைய மாம்சீகத்தில் மரணமடையாமல் நாம் இயேசுவின் முகத்தைக் காண விரும்புவது நஷ்டமாகவே முடியும். நாம் சரீரத்தில் வாழும்போது நம் மாம்சீகம் மரித்திருக்க வேண்டும். அதாவது நாம் உயிரோடு இருந்தாலும், நாம் பலியாக வேண்டும். இது ஒரு ஜீவபலி. வேதம் சொல்வதைக் கவனியுங்கள், "நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும்." (ரோமர் 12:1) இந்த மரணத்தின் அர்த்தமென்ன? கிறிஸ்துவின் நாமத்தின் பொருட்டு நம்முடைய சரீரம் பல சௌகரியங்களை, வசதிகளைத் தியாகம் செய்ய வேண்டும். பலியிடப்படாத சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாய் இருக்க முடியாது.

**தேவனது சித்தம், நோக்கம் இவைகளை அறிந்துக்கொள்வதே தேவனது முகத்தை நாம் காண்பது.**

6
டிசம்பர்

# முட்செடியில் ஜீவபலி

"முட்செடி ஜுவாலித்து எரிந்தும் அது வெந்துப்போகாமல் இருந்தது" (யாத் 3:2)

முட்செடி எரிந்தது பலி. அது வெந்துப்போகாமல் இருந்தது ஜீவன். முட்செடி மோசேக்கு சொல்லும் செய்தி, "பார்வோனின் கோபம் உங்கள் மீது பற்றி எரியும், ஆனால் நீங்களோ அழிந்துப்போக மாட்டீர்கள். "இப்படி மோசே ஒரு ஜீவபலிக்கு அழைக்கப்பட்டார்.

பாதரட்சையைக் கழற்றிப்போட்டு முட்செடியையே உற்று நோக்கிக் கொண்டிருப்பது மாத்திரம் மோசேயின் அழைப்பு அல்ல. பாதரட்சையை கழற்றிப்போட்டு ஜெப அறையிலேயே முடங்கிக்கிடப்பது அல்ல நம்முடைய அழைப்பு. ஆயத்தம் என்னும் பாதரட்சையைத் தொடுத்து வீதிகளில், தெருக்களில் சத்தியத்தை முழங்குவது நம்முடைய அழைப்பு. முட்செடி அருகே கழற்றிப்போட்ட பாதரட்சைகளை மோசே தொடுத்துக் கொண்டான். பார்வோனின் அரண்மனை நோக்கி நடந்தான். கொலுமண்டபத்தின் மத்தியில் நின்று "என் ஜனங்களை ஆராதனை செய்யப்போகவிடு" என்று முழக்கமிட்டான்.

இன்று முட்செடிகள் அருகே கழற்றிப்போடப்பட்ட பாதரட்சைகள் அப்படியே கிடக்கின்றன, பற்றியெறியும் முட்செடியை உற்றுப்பார்த்தே கிடக்கிறது கிறிஸ்தவ உலகம். நம்மிடம் தேவ அக்கினி (வல்லமை) பற்றியெரியவில்லையே. ஆனால் எரிகிற வாசனை வீசுகிறது. கிட்டப்போய்ப் பார்த்தால் இரண்டொரு இலைகள் வாடி வதங்கிக்கிடக்கின்றன. எதுவும் பற்றியெரியவில்லை. நெருப்பில் சுருங்கும் இலைகளைப் பார்த்து பற்றியெரியும் வல்லமை என்று நாம் தவறாக விளங்கிக் கொள்ளக் கூடாது இது வெறும் குற்ற உணர்வு மட்டுமே. சபைக்கு வருவோரிடம் உள்ள குற்ற உணர்வினால் என்ன பிரயோஜனம்? இதனால் மனசாட்சியில் சூடுண்ட பொய்யர்கள்தான் உருவாவார்கள். சபை இந்தப் பொய்யர்களால் நிறைந்திருந்தால் அது வெறும் புகையே தவிர அக்கினி அல்ல!.

நம் மாம்சீகம் மரித்தால் அது தேவனுக்கு சுகந்த வாசனை. நம்முடைய சுபாவம் பலியில் விழுந்தால் நாம் புதிய சிருஷ்டியாக உருமாறுவோம். தியாக நெருப்புக்கு உன்னை அர்ப்பணித்துவிடு. ஜனங்கள் நீ எரிவதைப் பார்க்க வேண்டும். கர்த்தருக்கோ அந்தப் பலி சுகந்தவாசனையாய் இருக்கும். "கர்த்தாவே, என் ஆத்துமாவை ஆசீர்வதியும்" இது பலியாகாத மனிதனின் ஜெபம். "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி". இது பலியான மனிதனின் ஜெபம்.

**நாம் ஜீவபலியாக மாறுவோமெனில் தேவதண்டனைக்குப் பலியாகப் போகும் உலகம் ஜீவன் பெறும்.**

# அவர் உருவாக்குகிறவர்

**7**
**டிசம்பர்**

"இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது; பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்." (ஏசா 43:1)

நம்மைப் பெற்றவர்கள் நம்மைப் பெற்றதோடு நின்றுவிடாமல் எத்தனையோ ஆண்டுகள் தங்களைத் தியாகம் பண்ணி நம்மை உருவாக்குகிறார்கள். கொஞ்ச காலத்திலே மனிதன் வல்லவன் என்று புகழடைந்து விடுகிறான். ஆனால் நல்லவன் என்ற குணம் உருவாக நீண்ட காலம் ஆகும். புத்தியுள்ள சிற்பாசாரியைப் போல கர்த்தர் நம்மை உருவாக்குகிறார். எங்குப் பலமாகத் தட்டவேண்டும்; எங்கு மெதுவாகத் தட்டவேண்டும் என்று நம்முடைய பரம சிற்பக் கலைஞராக ஆண்டவருக்குத் தெரியும். "அப்பாலே போ சாத்தானே" என்ற பலமான அடியும் விழும். "பிள்ளைகளே புசிக்கிறதிற்கு ஏதேனும் உண்டா" என்ற மெதுவானத் தட்டும் விழும்.

நாம் அழகான சிற்பமாக உருவாகுதலில் கடவுளுக்கு என்ன நோக்கம்? சிற்பம் கடவுளின் குமாரனின் சாயலில் அமைய வேண்டும் என்பதே கடவுளின் நோக்கம். "அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" (ரோ8:29) என்று வேதம் சொல்கிறது. அதாவது அவரது தெய்வீகத்திற்கு ஒப்பாவதற்கல்ல, அவரது ஆவிக்குரிய சுபாவத்தில் ஒப்பாவதற்காகவே நம்மை அவர் உருவாக்குகிறார். தனித்தனியே சாப்பிட சுவையற்ற காய்கறிகளை ஓர் தாயின் அன்புக் கரம் ஒன்றாகச் சேர்த்து அருமையான உணவாக உருவாக்குகிறது. அதுபோல தனித்தனியான வாழ்க்கைச் சம்பவங்கள் பாரம், கவலை, வேதனை நிறைந்ததாக இருந்தாலும், அந்த நிகழ்வுகள் அனைத்தையும் தெய்வத் திருக்கரம் ஒன்றாக இணைத்து கிறிஸ்தவ வாழ்க்கையாய் உருவாக்குவதே தெய்வத்தின் நோக்கம்.

பரிசுத்த பவுல் தன் வாழ்க்கையில் நடைபெற்ற எல்லா நிகழ்வுகளும் தனக்கு இரட்சிப்பாகவே முடிந்தது (பிலி 1:12) என்று கூறுகிறார். சகோதரனே, இன்று நீங்கள் சந்திக்கும் பிரியமில்லா நிகழ்வுகள் அனைத்துமே உங்களை உருவாக்கும் கர்த்தரின் கைவிரல்கள் என்று நம்புங்கள். அலுவலகத்தில் திடீர் எதிர்ப்பா? குடும்பத்தில் சூறாவளியா? கர்த்தர் உங்களை உருவாக்குகிறார் என்று நம்புங்கள். "கர்த்தர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார்" (மல்3:3) ஆம்! உங்களை சோதனைத் தீயில் தூக்கி எறிந்துவிட்டு அவர் போய்விட மாட்டார். உன்னருகே அவர் உட்கார்ந்திருப்பார்.

**எந்தக் கொடிய சூழ்நிலையிலும் கர்த்தர் உன்னருகே உட்கார்ந்திருக்கிறார், பட்சமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்.**

8
டிசம்பர்

# அவர் மீட்பர், நான் மீட்கப்படுகிறவன்.

"இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது; பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்செல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். (ஏசா 43:1)

எகிப்திலிருந்து இஸ்ரவேலரை மீட்டது, நாமெல்லோரும் பாவத்தினின்று மீட்கப்பட்டதற்கு ஒப்பாகும். ஆனால் அதே மக்கள் இப்பொழுது அசிரியா, பாபிலோன் என்ற நாடுகளுக்கு சிறைப்பட்டுப் போய்விட்டபடியால் அவர்களை மீண்டும் மீட்பது, விசுவாசிகளின் சிறையிருப்புக்கான பயம், திகில், அவிசுவாசம், வியாதி, வறுமை இவையினின்று விடிவிப்பதற்கு ஒப்பாகும். பாவத்தினின்னு மீட்கப்பட்டு, நித்திய நரகமாகிய மரணத்தினின்று விடுவிக்கப்பட்ட நீங்கள், சரீர மரணத்தினின்று விடுவிக்கப்பட்ட நீங்கள் சரீர மரணத்தின் பயத்தினின்று விடுவிக்கப்பட்டிருக்கிறீர்களா? பாவக்கடனிலிருந்து மீட்கப்பட்ட நீங்கள், கடன் தொல்லைகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறீர்களா?

எகிப்தைவிட்டு சரீரப் பிரகாரமாக வெளியே கொண்டு வரப்பட்ட இஸ்ரவேலர் சிந்தனையில் எகிப்துக்குச் சிறைப்பட்டுப் போய்விட்டார்களே! "நாங்கள் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக் காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப் பூண்டுகளையும் நினைக்கிறோம்" (எண்11:5) என்று தங்கள் சிந்தனையில் அவர்கள் சிறைப்பட்டுப் போனார்களே! இப்பொழுதும் கர்த்தர் உங்களைச் சிந்தனைச் சிறையினின்று மீட்கிறார்.

பூனை குறுக்கே வந்ததும், யானைபோல் நடந்த விசவாசி, வீட்டிற்குத் திரும்பி வந்து, பூனை போல் பதுங்கி விட்டால், அவன் மூடுநம்பிக்கையின் அடிமைதானே. இப்படி மூட நம்பிக்கையின் பயம், திகில் இவற்றிற்கு அடிமையானவன் மீட்கப்பட வேண்டும். ஆலயத்திற்கு வாரம் தோறும் செல்கிறீர்களே, ஏன்? ஞாயிற்றுக் கிழமைக்கு அடிமையாக இருப்பதால் போகிறீர்களா? போதகர் கண்டிப்பார் என்ற பயத்தினால் போகிறீர்களா? சபைக்கு போகாவிட்டால் ஆசிர்வாதத்தைக் கர்த்தர் குறைப்பார் என்று போகிறீர்களா? இந்த அடிமைத்தன ஆராதனையினின்று நீங்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

கூண்டு பறவைகளாக ஆராதனைக்குப் போகாதீர்கள், வானம்பாடியாக சுதந்திரமாக ஆராதனைக்குப் போங்கள். சாபம் வந்துவிடுமே என்று பயந்து வேதம் வாசிப்பது அடிமைத்தனம். கர்த்தர் என்னோடு பேசட்டும் என்று வேதம் வாசிப்பது சுதந்திரம். "கர்த்தருடைய ஆலயத்திற்குச் செல்வோம் என்றதும் மிக மிக மகிழ்ச்சியடைந்தேன்" என்ற தாவீதின் உற்சாகத்தில் சபைக்கு வருவதே மீட்கப்பட்டவர்களின் ஆராதனை, நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?

**தேவனுக்குப் பிரியமான ஆராதனையே சுகந்த வாசனை.**

9
டிசம்பர்

# ஆழமான உறவு – நான் கர்த்தருடையவன்

"நான் உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்". (ஏசா 43:1)

நெருக்கமான உறவில் இருப்பவர்கள் மாத்திரமே பெயர் சொல்லி அழைப்பார்கள். கடவுள் நம்மைப் பெயர் சொல்வி அழைப்பது கடவுளுக்கும் நமக்கும் இடையே நிலவும் அன்பு, பாசம், உறவு இவற்றைக் குறிக்கும். பெயர் சொல்லி கர்த்தர் அழைக்கும்பொழுது அவர் நம்மைச் சொந்தம் பாராட்டுகிறார். கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியம் இல்லாதவர்கள் ஆவிக்குரிய உறவில் நீடிக்க மாட்டார்கள். தினந்தோறும் ஜெபம், வேதவாசிப்பு, தியானம் போன்றவற்றில் இல்லாதவர்கள் கடவுளோடு உறவு இல்லாதவர்கள். இவர்கள் ஆபத்துக் காலத்தில் கர்த்தரைக் கூப்பிடும் சந்தர்ப்பவாதிகள்.

சவுலே, சவுலே என்று இயேசு மதவைராக்கியமான பரிசேயனைக் கூப்பிட்டதும், அவர் அந்த அழைப்பின் வல்லமையில் கர்த்தருக்கு அடிமையானார். யோனாவின் குமாரனாகிய சீமோனே, மார்த்தாளே, மார்த்தாளே இவையெல்லாம் அன்பின் அழைப்புகள். சாமுவேல் என்று கர்த்தர் அழைத்ததும் "இதோ அடியேன்" என்று ஆயத்தமாயிருந்தது போல் அவர் அழைப்பிற்கு ஆயத்தமாயிரு. பெயர் ஓர் மனிதனின் சுபாவத்தை வெளிப்படுத்த வேண்டும். யாக்கோபு என்ற பெயருக்கு அர்த்தம் எத்தன். கர்த்தரோ அவனுக்குப் புதுப்பெயரிட்டு அழைத்தார். பாவி, அக்கிரமக்காரன் இவையெல்லாம் நமது பழைய பெயர்கள். கடவுள் நமக்குத் தரும் புதுப்பெயர் என்ன?

"நீ என்னுடையவன்" என்று கர்த்தர் சொந்தம் பாராட்டுகிறார். உலகில் பெரிய மனிதர்களை, ஐஸ்வர்யவான்களை, சாதனையாளர்களை நமக்குச் சொந்தக்காரர் என்று உரிமைப் பாராட்டி சொல்வது மனித வழக்கம். ஆனால் துன்மார்களை, சமுகத்துரோகிகளை எவரும் சொந்தம் என்று உரிமை பாராட்டமாட்டார்கள். ஆனால் பாவத்திலும், அக்கிரமத்திலும் கிடந்த நம்மையெல்லாம் மீட்டு, நீங்கள் எனக்குச் சொந்தம் என்று கர்த்தர் உரிமை பாராட்டுவது எத்தனை மேன்மையான சிலாக்கியம்!

நீங்கள் கடவுளை, "என் கடவுள், என் ஆண்டவர்" என்று உரிமை பாராட்டினால் அவரும் "நீங்கள் என்னுடையவர்கள்" என்று உங்கள் மீது உரிமைப் பாராட்டுவார். இந்த உரிமை, உறவு உங்களுக்கு மிகுந்த பாதுகாப்பு. நீ என்னுடையவன் என்று கர்த்தர் நம்மை அழைப்பது நமக்கு மிகப் பெரிய பாதுகாப்பு. என் ஆடுகள் என்று கர்த்தர் எப்பொழுது நம்மைச் சொந்தமாக்குகிறாரென்றால், அவர் சத்தத்திற்கு நாம் கீழ்ப்படியும்பொழுது மாத்திரமே. நீ என்னுடையவன் என்று உன்னைக் கர்த்தர் தனக்குச் சொந்தமாக்கினால் எந்த சக்தியும் உன்னை அவர் கையிலிருந்து பறிக்க முடியாது (யோ 10:28)

**கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியம் இல்லாதவர்கள் ஆவிக்குரிய உறவில் நீடிக்க மாட்டார்கள்.**

10

டிசம்பர்

# நான் தேவனது பார்வையில் அருமையானவன்

"நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம்பெற்றாய்; நானும் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் உனக்குப் பதிலாக மனுஷர்களையும், உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும் கொடுப்பேன்" (ஏசா 43:4)

அருமையானவர்களே, சுற்றமும் சூழலும் நம்மை அற்பமாய் எண்ணலாம். ஆனால் கர்த்தரோ நம்மை அருமையாக எண்ணுகிறார். பிறர் நம்மை எள்ளி நகையாடும்போது, கர்த்தர் நம்மைப் பணிவோடு கவனிக்கிறார். வெள்ளைக்கல் பரணியை உடைத்து விலையுயர்ந்த தைலத்தை இயேசுவுக்கு அர்ப்பணித்த தியாகத்தை சீஷர்கள் வீண்செலவு என்று சாடினார்கள். இயேசுவோ இடைமறித்து, "அவளை விட்டுவிடுங்கள', என் அவளைத் தொந்தரவு செய்கிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்" (மாற் 14:6) என்று இயேசு அவளை அருமையாக எண்ணினார். நாம் கர்த்தருக்குள் வாழ்வது மாத்திரமல்ல. அவருக்குள் மரிப்பதும் அருமையாயிருக்கிறது. கற்களால் கிழிக்கப்பட்டு, எலும்புகள் நொறுங்கி, மனிதப் பார்வையில் பரிதாபமாக இறந்தான் ஸ்தேவான். ஆனால் கர்த்தரின் பார்வையிலோ, அவன் இயேசுவைத் தரிசித்து, ஜெபத்தில் மரித்தான். பரிசுத்தவான்களுடைய மரணம் கர்த்தரின் பார்வையில் அருமையானது.

நாம் கர்த்தரின் பார்வையில் அருமையாயிருப்போமானால் அவரிடத்தில் கனம் பெற்றவர்களாயிருக்கிறோம். அருமையாயிருப்பவை-யெல்லாம் கனம் பெறுபவையல்ல. அதாவது நமது பார்வையில் விலை மதிப்புள்ள எல்லாம் கனம் பெற்றவையல்ல. ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள காலணிகளை வாங்குகிறோம். மிகவும் விலை மதிப்புள்ள காலணிகளை வாசற்படியிலே கழற்றிவிடுகிறோம். ஏனெனில் விலைமதிப்புள்ளதா-யிருந்தாலும் அவை கனம் பெற்றவையல்ல. மிகப் குறைவான விலைமதிப்புள்ள பேனாவை மேஜைமீது வைக்கிறோம். ஏனெனில் பேனா கனம் பெற்றது. கர்த்தரோ நம்மை விலை மதிப்புள்ளதாக, அருமையானதாக, அதோடுகூட கனம் பெற்றதாகவும் எண்ணுகிறார்.

ஒருவன் ஒரு போதகரிடம் மிகக் கவலையோடு சொன்னான். "ஐயா, நான் ஒரு சதாரண கொசு. எனக்கு என்ன இருக்கிறது? "ஏன் அப்படிச் சொல்லுகிறாய்" என்று போதகர் கேட்டார். "ஐயா, ஒரு கொசு செத்துப் போனால் யாராவது கவலைப்படுவார்களா? கொசுவைப் பற்றி யாராவது அக்கறை எடுப்பார்களா? அந்த நிலையில் தான் நான் இருக்கிறேன் என்றான். உடனே போதகர் பதில் உரைத்தார். "உலகத்தில் கொசுவிற்காக யாரும் இரத்தம் சிந்தி மரிக்கவில்லை. உனக்காக ஒருவர் தன் பரிசுத்த இரத்தத்தை சிந்தியிருக்கிறார். அந்த இரத்தத்தில் கழுவப்பட்ட நீ அருமையானவன். ஆகவே கனம் பெற்றவன்." தூர தேசத்தில் பன்றி தின்னும் தவிட்டிற்காக காத்துக் கிடந்த இளையகுமாரன் எவர் பார்வையிலும் அருமையானவனுமல்ல, கனம் பெற்றவனுமல்ல. ஆனால் அவன் வீட்டிற்கு வந்ததும் அவன் தகப்பன் பார்வையில் அருமையானவன், கனம் பெற்றவன்.

**கர்த்தரின் பிள்ளைகள்**
**அருமையானவர்கள், கனம் பெற்றவர்கள்.**

11
டிசம்பர்

# இயேசுவின் ஆலோசனை

"இயேசு பிரதியுத்தரமாக, பகலுக்குப் பன்னிரண்டு மணி நேரம் இல்லையா? ஒருவன் பகலிலே நடந்தால், அவன் இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்கிறபடியினால் இடறமாட்டான். ஒருவன் இரவிலே நடந்தால் தன்னிடத்தில் வெளிச்சம் இல்லாதபடியினால் இடறுவான் என்றார்." (யோவான் 11:9,10)

கடவுளுடைய சித்தம் என்ற பகல் காலம் திடீரென்று முடிந்துவிடாது. இந்தப் பகல் காலத்தில் நமக்கு எந்த ஆபத்தும் வராது. ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக சூரியனை நாம் அஸ்தமிக்கச் செய்ய முடியாது. அதாவது நம்முடைய ஜீவியக் காலம் முழுவதும் கர்த்தருடைய கரத்திலேயே இருக்கிறது. வாழ்க்கையில் உள்ள ஒவ்வொரு திருப்பத்தையும் அவர் அறிவார். மாம்சீகத்தின்படி பாதுகாப்பான இடத்தில் ஒளிந்துகிடப்பதைவிட, கர்த்தரின் வார்த்தையின்படி ஆபத்தான இடத்திற்குப் போவதே மேல். சகோதரனே, சகோதரியே! சந்தர்ப்பமோ, சூழ்நிலையோ உனக்குத் தரும் பாதுகாப்பான இடத்தைவிட்டு விலகிவிடு. சூழ்நிலைக்குப் பயந்து, பதுங்கி கிடக்காதே. ஆண்டவர் சொல்லும் இடத்திற்கும், அவர் செல்லும் இடத்திற்கும் நீ போ.

இயேசுவைப் புரிந்துக் கொள்ளாமை; லாசரு நித்திரையாயிருக்கிறான் என்று இயேசு சொன்னதை சீஷர்கள் சரியாகப் புரிந்துக்கொள்ளவில்லை. அவன் இளைப்பாறிக் கொண்டிருக்கிறான் என்று தவறாக எண்ணி விட்டார்கள். பல தருணங்களில் கர்த்தரின் வார்த்தையை நாம் சரியாகப் புரிந்து கொள்ளுகிறதில்லை. நாம் தவறாகவே புரிந்துக் கொள்கிறோம். இஸ்ரவேலுக்கு சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் நமக்கென்று வைத்துக் கொள்ளுகிறோம். நமக்கும் சேர்த்து கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை இஸ்ரவேலுக்கு மட்டும் என்று தள்ளிவிடுகிறோம். ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள் என்பதைத் தவறாக புரிந்துக்கொண்டு ஒருவர் பாவத்தையும் கண்டிக்காமல் விட்டுவிடுகிறோம். அன்பு என்றால் பாவத்தையும் சகித்துக் கொள்வது என்று பொருளல்ல. உன்னை ஆசீர்வதிப்பேன் என்று கர்த்தர் சொல்வதை "பிரச்சனைகளே இல்லாத வாழ்க்கை" என்று தவறாகப் புரிந்துக் கொள்கிறோம்.

பிரச்சனைகளில் ஓர் காரியத்தை விளங்கிக் கொள்வோம். பிரச்சனைகளைத் தீர்ப்பது மாத்திரம் கர்த்தரின் நோக்கமல்ல. அவைகளைத் தீர்ப்பதின் மூலம் அவர் நாமம் மகிமைப்பட வேண்டும் என்பதும் அவரது நோக்கமாகும். ஆகவே தேவ மகிமை வெளிப்பட, அவர் எந்த விதத்திலும் செயற்பட அவருக்கு அதிகாரம் உண்டு இதை ஏற்றுக்கொள்வதே உண்மையான மகிழ்ச்சி.

**மாம்சீகத்தின்படி பாதுகாப்பான இடத்தில் ஒளிந்துகிடப்பதைவிட, கர்த்தரின் வார்த்தையின்படி ஆபத்தான இடத்திற்குப் போவதே மேல்.**

12
டிசம்பர்

# சிட்சையா? சிலுவையா?

"கர்த்தர் சமுத்திரத்தின் மேல் பெருங்காற்றை வரவிட்டார். அதினால் கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று." (யோனா 1:4)

"கொஞ்ச நேரத்துக்குள்ளே யூரோக்கிலிதோன் என்னும் கடுங்காற்று அதில் மோதிற்று. கடல் கொந்தளித்தது, கப்பல் சிக்கிக் கொண்டது. அப்பொழுது தப்பிப் பிழைப்போம் என்ற நம்பிக்கையை இழந்து போனார்கள்."(அப் 27:14,20) பெரிய கொந்தளிப்பிலே இரண்டு கப்பல்கள் சிக்கியிருக்கிறது. ஒரு கப்பலுக்குள்ளே தேவ மனிதனாகிய யோனா இருக்கிறான். மற்றோரு கப்பலுக்குள்ளே தேவ மனிதனாகிய பவுல் இருக்கிறார். இருவரும் தேவ மனிதர்கள், யோனா கீழ்ப்படியாததினாலே அதைச் சந்தித்தான். கர்த்தரே யோனாவைப் பிடிப்பதற்காக அந்தக் கடல் கொந்தளிப்பைக் கட்டளையிட்டார். அந்தக் கடல் கொந்தளிப்பு சிட்சை. பரிசுத்த பவுலை, கட்டி இழுந்துக் கொண்டு போகிறார்கள். தேவ சித்தத்தின்படியே பவுல் போகிறான் கைதியாக ஒரு கப்பலில் அப்பொழுதும் கடல் கொந்தளிக்கிறது, இது சிலுவைப் பாடு.

பவுலுக்கு இது சிலுவை. யோனாவிற்கு இது சிட்சை. இரண்டும் ஒன்று போலத்தான் இருக்கிறது. இரண்டு இடங்களிலும் கடல் கொந்தளிப்புதான். இரண்டிலும் தப்பிப் பிழைக்க முடியாத ஒரு நிலைமைதான். ஒன்று சிட்சை, மற்றொன்று சிலுவை. என்னருமை தேவபிள்ளையே, உங்கள் வாழ்க்கையிலே சிட்சை எது? சிலுவை எது என்பதை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். ஒரு நோயானது சிட்சையாகவும் வரும், சிலுவையாகவும் வரும். ஆகவே வாழ்க்கைப் பிரச்சனையானது சிட்சையா? சிலுவையா என்பதை ஆவியானவர்தான் உங்களுக்குச் சொல்ல வேண்டும்.

எப்படி கண்டுபிடிப்பது? "நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும் போது பொறுமையோடே சகித்தால் அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாக கிரீதியாயிருக்கும்."(1பேதுரு2:20) நாம் குற்றஞ்செய்து அடிப்பட்டால் அதனால் கர்த்தருக்கு என்ன மேன்மை? நாம் உண்மையாய், நீதியாய், நேர்மையாய், சத்தியமாய் நடக்கும்பொழுது நமக்கு அநியாயம் செய்யப்பட்டால் அந்த அநியாயத்தைப் பொறுமையோடே சகித்தால் அதுதான் தேவனுக்குப் பிரியமானது. அதுதான் சிலுவை. உங்களில் எத்தனைபேர் இந்த சிலுவையை சுமக்கிறீர்கள்? கிறிஸ்துவின் நிமித்தமாக அநியாயமாய் குற்றஞ்சாட்டப்படுகிறீர்களா? பாடுகள் உண்டாகிறதா? துன்பப்படுகிறீர்களா? அப்படியானால் நீங்கள் சிலுவைப்பாதையின் வழியாய் போய்க் கொண்டிருக்கிறீர்கள்.

சிலுவையை எடுத்துக் கொண்டு இஷ்டம் போலவோ, வசதியின் பாதையிலோ போவதல்ல. சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றிவா. நமது ஆண்டவர் மரணத்தை நோக்கிப் போகிறார். நாமும் அப்படியேத்தான் போக வேண்டும். நம்முடைய வாழ்க்கை கிறிஸ்துவைப் பின்பற்றுவது தானா? ஆம்! அவருடைய பெரிய கட்டளையே என்னைப் பின்பற்று என்பதுதான். ஆகவே என்னுடைய சிலுவைப் பாதை என்ன? என் சிலுவையை நான் சுமக்கிறேனா? அவர் பாதையில் நான் போகிறேனா என்று சற்று சிந்தித்துபார்.

சிலுவை உயர்த்தும், சிட்சை உருவாக்கும்.

# 13 டிசம்பர்

# கடவுளின் ராஜ்ஜியத்தை ஸ்தாபித்தல்

"ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன் இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைத் தேடினான்." (லூ19:2,3)

சகேயு இஸ்ரவேலரிடம் வரி வசூலித்து ரோமர் அரசுக்கு கட்டிவந்தான். வரி வசூலிக்கும்பொழுது தனக்கென்றும் கூடுதலாக அவன் வரி வசூலிப்பான். ஆகவே இஸ்ரவேலரின் பகையையும், பெறுப்பையும் இவன் சம்பாதித்து வாழ்ந்து வந்தான். எவ்வளவு பணம் சம்பாதிக்கலாம் என்று வகைப் பார்த்துக்கொண்டிருந்த அவன், இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகை தேடினான்.

வரி வசூலிப்பவர்களுக்கு இவன் தலைவனாயிருந்தான். ஆகவே ரோமர் ஆட்சியில் இவன் செல்வமும் செல்வாக்கும் உள்ள ஓர் பெரிய அதிகாரி. ஆனால் பரலோகம் செல்ல வழி தெரியாத ஒருவனாக இருந்தான். ஊசியின் காதில் ஒட்டகம் எப்படி நுழைய முடியாதோ அதுபோல இவனும் பரலோக ராஜ்ஜியத்திற்குள் நுழைய முடியாதபடி நின்றான். ஒட்டகத்தினால் ஏன் நுழைய முடியவில்லை? மிகுதியான பாரம், குனிய முடியாத நிலை - இவை ஒட்டகத்தை வாசலில் நுழைய முடியாதபடி தடுத்து நிறுத்தி விட்டன.

இந்த சகேயு என்ற ஒட்டகம் கீழே இறக்க வேண்டிய சுமைகள் பண ஆசை, அடிமைத்தனம், பாவம் இவைகளே. இவற்றைக் கீழே இறக்காமல் இந்த ஒட்டகம் வாசலுக்குள் நுழைய முடியாது. முன்னாள் ஆயக்காரரான மத்தேயு மூலமாக சகேயு இயேசுவை அறிந்திருப்பான். இப்பொழுது தன் கண்ணால் இயேசுவைக் காண வேண்டும் என்று ஆவலாய் வகை தேடுகிறான். இயேசுவை இரட்சகராக அல்லது தேவ குமாரனாக சகேயு தேடவில்லை. வேடிக்கைப் பார்க்கிறவனாக, பொழுது போக்குகிறவனாக் சகேயு இயேசுவை மாம்சீகமாகத் தேடினான்.

சகேயு ஓடிப்போய் ஓர் காட்டத்தி மரத்தில் ஏறி உட்கார்ந்தான். பாவ உணர்வு இதயத்தை தேளாய்க் கொட்டி அவன் இயேசுவை நாடி ஓடவில்லை. "எப்படித்தான் இருக்கிறார் என்று பார்ப்போமே" என்ற மனநிலையில் தான் சகேயு இருந்தான். இயேசுவை ஆவியின் வெளிச்சத்தில் தான் காண முடியும். மாம்சீகக் கண்ணால் இயேசுவைக் காண முடியாது. கண்முன்னால் இயேசு நடமாடிக் கொண்டிருந்த காலம் சகேயுவின் காலம். ஆனால் அந்த இயேசுவை இரட்சகராகக் காண மனக்கண் திறக்கப்பட வேண்டும். இயேசுவைக் கண்ட பிலிப்பு, "சுருள் சுருளான தலைமுடியைக் கொண்டவரும், சிவப்பு நிறமானவருமான ஒருவரைக் கண்டேன்" என்று சொல்லாமல், "நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்" (யோ 1:45) என்று கூறுகிறான். "மாம்சத்தின்படி இயேசுவை அறியேன்" என்ற பவுலின் வார்த்தைகள் நல்ல இதயத்தில் ஆழமாகப் பதிவதாக.

**கர்த்தரைக் கண்டடையத்தக்கதாக அவரைத் தேடுங்கள்.**

**14**
**டிசம்பர்**

# நேசக்கரம் நீட்டப்பட்ட இரவு

எல்லோராலும் தான் கைவிடப்படுவோம் என்பதை இயேசு முன்னரே அறிந்திருந்தார். ஜெபிப்பதற்காக மூன்று பேரைத் தனனோடு அழைத்துச் சென்றிருந்தார் (மாற்14:32)

இவர்களுடைய ஜெபத்தை நம்பித்தான், தான் சிலுவைக்குப் போக வேண்டும் என்ற நிலையில் இயேசு இல்லை. கெத்செமனேயில் இயேசு ஜெபிக்கும் பொழுது உண்டாகும் வல்லமையை சீஷர்கள் அறிந்துக் கொள்வதற்கு அழைத்துச் சென்றார். இந்த இருண்ட கெத்செமனேயில் இயேசு இன்னுங் கொஞ்சம் முன்னேறி சென்றார். பாடுகளோ, வருத்தங்களோ, சஞ்சலங்களோ இயேசு நம்மையிட ஒரு படி முன்னேறி செல்லுகிறார். எந்தச் சூழ்நிலையிலும் ஒரு விசுவாசி உணர வேண்டிய சத்தியம், இந்த சூழ்நிலையை என் இயேசு ஒரு நாள் கடந்திருந்தார். ஜெபம் பண்ணும்பொழுது சாத்தானின் வேளை வந்துவிட்டதை தன் ஆவியில் உணர்ந்தார். அந்த வேளை நீங்கும்படி ஜெபித்தார். அதாவது அப்படி ஒரு சம்பவம் நடக்கவே கூடாது என்று ஜெபித்தார். கொஞ்ச நேரத்தில் தன் ஜெபத்தை மாற்றிக் கொண்டார். தனக்கு மரணம் சம்பவிக்கும் என்பதை நிச்சயமாய் அறிந்த இயேசு இந்த பாத்திரம் நீங்கும்படி ஜெபித்தார்.

சிலுவையில் தான் பாடுபடும்பொழுது பாவமாக்கப்படுதல் என்ற பாத்திரம் நீங்கும்படி ஜெபித்தார். பாவமாக்கப்படுதலை எதிர்த்து பரிசுத்த தேவன் ஜெபிக்கும்பொழுது அவர் அடைந்த மனோவியாகுலம் மரணத்தின் மடிக்கு இழுத்தது. உடனே வானத்திலிருந்து ஒரு தேவ தூதன் தோன்றி அவரைப் பலப்படுத்தினான். இதுவே ஜெபத்தின் வல்லமை. இந்த வல்லமையை உணராமல் உறங்கிக் கிடக்கும் சீஷர்களை ஜெபிக்கும்படி தூண்டுகிறார். ஆவர்களோ நித்திரை மயக்கத்திலிருந்தனர். கெத்சமனே துயரத்தின் பாத்திரத்தை நமக்கு காட்டும் வேளையல்ல. ஜெபமாகிய வல்லமையை விளக்கும் இடமே. ஜெப வீரராகிய என் இயேசு பெரியவர். இந்த ஜெபத்தின் வல்லமையை நீ அறிந்திருக்கிறாயா? உன் இராக்காலத்தை பகற்காலமாக்குவது ஜெபமே. இது காரிருள் சூழும் இராக்காலமாய் உன் ஆத்துமாவிற்கு இருக்கும். ஆனால் அனேக மக்களுக்கு விடுதலையின் விடியற்காலமாய் அது முடிந்துவிடும். ஆகவே துன்பத்திலும் என் இயேசு பெரியவரே.

எல்லா நிலைமைகளிலும் இயேசு பெரியவர். நெருக்கடியான நேரத்தில் இயேசுவையே பெரியவராய் மகிமைப்படுத்து. வருத்தம், சஞ்சலம், சந்தோஷம், சங்கடம், விசாலம், நெருக்கம், துன்பம், சோதனை எல்லா நேரத்திலும் நம் இயேசு பெரியவரே!

**இராக்காலத்தை பகற்காலமாக்குவது ஜெப நேரம்.**

15
டிசம்பர்

# வாக்குத்தத்தம் நிறைவேறியது

"எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களில் சிறியது" (மீகா 5:2)

பெத்லகேம் என்றால், அப்பத்தின் வீடு, உன்னில் இயேசு வாழ்ந்தால் உன்னிலிருந்து ஜீவ அப்பமாகிய அவரது வார்த்தைகள் புறப்படும். உன்னிலிருந்து புறப்படும் கிறிஸ்துவின் வார்த்தையே செத்துக்கொண்டிருக்கும் சமுதாயத்திற்கு ஜீவ அப்பம்.

எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேம். ஆம்! கனிகொடுக்கும் பெத்லகேம். எப்பிராத்தா என்றால் கனி கொடுப்பது என்று பொருள்; கிறிஸ்துவுக்குள் கனி கொடுக்கும் உயர்குலத் திராட்சைச் செடி நீ. உலகப் பிறப்பால் உன்னைத் தாழ்ந்தவன் என்று சொல்கிறார்களா? மறுபிறப்பினால் நீ உயர்குலம். இந்தத் தகுதி கிறிஸ்துவினால். கிறிஸ்துவின் வம்சத்தினால் ராகாப், வேசி எனும் இழிமொழி இழந்து, பரிசுத்தவாட்டி என்ற செம்மொழி பெற்றாள். பாவியாய் இருளடைந்த மனசாட்சியோடு தடுமாறி நின்ற நீ இயேவினால் ஒளி பெற்று கம்பீர நடை போடுகிறாய்.

யூதாவிலுள்ள பெத்லகேம். யூதா என்றால் துதி என்று பொருள். ஆம்! கிறிஸ்து பிறந்ததினால் துதிகளுக்கு மத்தியில் வாழும் பெத்லகேம்! உன்னிலிருந்து துதிகள் புறப்படட்டும். யூதத்தலைவர்கள் இயேசுவைத் தள்ளிவிட்டார்கள். வேதத்தை அதிகமாக அறியாத சிறு பாலகர்கள் அவரைப் பற்றிய வெளிப்பாடு கிடைத்ததும் முழுபலத்தோடு அவரைத் துதித்தார்கள் (மத்.21:16). வேண்டாம் என்று யூத இனம் அவரைத் தள்ளும்பொழுது இந்தப் பாலகர்கள் அவரைத் துதிப்பது அவருக்கு எவ்வளவு ஆறுதலாய், ஆனந்தமாய் இருந்திருக்கும். "பாலகர் வாயில் உண்டான துதி நல்ல பெலனாக விளங்கி பகைவனை அடக்கிப்போடும்". (சங்.8:2)

உன் துதியினால் உண்டாகும் பலம் சாத்தானை அடக்கிப்போடும். ஆகவே ஆவிக்கேற்ற நிலையில் நீயும் யூதாவின் எப்பிராத்தா எனப்பட்ட பெத்லகேம். உலகப்பிரகாரமாய் உனக்கு மிகப்பெரிய கல்வித்தகுதி இல்லையா? கிறிஸ்துவுக்குள் நீ ஞானத்தைப் பெற்றிருக்கிறாய். சரீரப் பிரகாரமாக பலவீனமாயிருக்கிறாயா? கிறிஸ்துவுக்குள் எதனையும் செய்யும் பலமுள்ளவனாயிருக்கிறாய். பெத்லகேமில் இயேசு பிறந்தது சாதாரண சரித்திர சம்பவம் அல்ல, தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதல்.

காலம் நீண்டு கொண்டே போனது, நீண்ட அமைதியான காலம் குறுக்கிட்டது. ஆனால் தீர்க்கத்தரிசனம் தேவன் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற பெத்லகேமில் இயேசு பிறந்தார். சகோதரனே, சகோதரியே, தேவன் குறித்த நாளிலே உனக்கு அவர் சொன்ன வார்த்தைகள் நிறைவேறிவிடும்.

**உன் துதியினால் உண்டாகும் பலம் சாத்தானை அடக்கிப்போடும். ஆகவே ஆவிக்கேற்ற நிலையில் நீயும் யூதாவின் எப்பிராத்தா எனப்பட்ட பெத்லகேம்.**

16
டிசம்பர்

# மேய்ப்பர்கள் பயந்தார்கள்

"கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது அவர்கள் மிகவும் பயந்தார்கள்." (லூக்.2:9)

சந்தோஷ செய்தியின் அலைகள் அவர்களை நோக்கி வந்தவேளையில் மேய்ப்பரின் இதயங்கள் பயத்தின் கோரஅலைகளால் அதிர்வுற்றன. நடுக்கம் நெஞ்சைப் பிடித்துக்கொண்டது. இந்தப் பயம் பாவமல்ல. அறியாமையின் விளைவு. அறியாமையினால் இன்று மனிதன் திகிலடைகிறான். கடவுளைப் பற்றிய அறிவின்மையால், இருளைக்கண்டு சிறுபிள்ளைகள் பயப்படுவது போல மனிதனும் கடவுளைப்பற்றி பயப்படுகிறான். இருளில் பூச்சாண்டி என்று குழந்தைகள் அஞ்சுவதுபோல் மனிதனும் பயத்தால் இடியோசை, பொங்கி வரும் வெள்ளம், பட்சிக்கும் அக்கினி, படமெடுக்கும் பாம்பு இவைகளையெல்லாம் தெய்வம் என்று வணங்க ஆரம்பிக்கிறான். வேல், வாள், வெட்டரிவாள், கத்தி இவைகளோடு நிற்பதாகக், கடவுளைப்பற்றிய பயத்தினால், இந்தப் பயங்கர உருவங்களில் உருவமில்லா கடவுளைப் படைத்து, விழுந்து வணங்குகிறான். விசுவாசம் சத்திய தேவனையும், பயம் பொய்த் தோற்றங்களையும் வணங்கும்படி செய்கிறது.

பெத்லகேமில் பயந்த மேய்ப்பர்களை, பயப்படாதிருங்கள் என்று தேவதூதர்கள் தேற்றினார்கள். ஆகவே முதலில் உன் பயத்திலிருந்து நீ விடுதலை பெற வேண்டும். பயத்தினால் புற்று நோய் வர வாய்ப்பு உண்டு என்று உளவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். என்ன பயப்படுகிறீர்களா? பயம் இருதயத்தை ஆளுகை செய்தால், விசுவாசம் இதய வீட்டின் வாசற்படியினைத்தாண்டி வெளியே சென்றுவிடும். நீயாக அழைக்காவிடில் அது மீண்டும் வாசற்படியில் நின்று இதயக்கதவைத் தட்டாது. சீஷர்கள் கொந்தளிக்கும் கடலில் பயத்தினால் அலறி இயேசுவையே ஆவேசம், பிசாசு என்று எண்ணிவிட்டார்கள். (மத்.14:26) மிஞ்சின பயத்தால் சிலர் பிசாசை கடவுள் என்று நம்பி விடுகின்றனர். எத்தனையோ மூட நம்பிக்கைகளை பயத்தினால் மனிதன் தெய்வ நம்பிக்கைகளாக மாற்றி விட்டான்.

வீட்டில் கண்ணாடி உடைந்தால் சாவு ஏற்படும் என்று பயப்படுகின்றனர். கண்ணாடி கடைகளில், தொழிற்சாலைகளில் எவ்வளவு கண்ணாடிகள் உடைகின்றன. திடீரென்று விளக்கு அணைந்துவிட்டால் அபசகுனம் என்கிறார்கள். கோடை காலத்தில் விளக்குகள் அடிக்கடி அனணகின்றன (Power cut). ஆனால் குளிர்காலத்தில்தான் சாவுகள் அதிகமாயிருக்கின்றன. மனிதனின் பயத்தில் 90 சதவீதம் பொய்யான பயங்கள் என்று ஆராய்ச்சியாளர் சொல்கின்றனர். மேய்ப்பர்கள் பெத்லகேமில் பயந்தார்கள். விபரம் புரியாமல், நீயோ பயப்படாதிரு.

**விசுவாசம் இருதயத்தை ஆளுகை செய்தால், பயம் இதய வீட்டின் வாசற்படியினைத் தாண்டி வெளியே சென்றுவிடும்.**

**17**
**டிசம்பர்**

# மேய்ப்பர்கள் தீவிரமாய் வந்து இயேசுவைக் கண்டார்கள்

"செய்தியைக் கேட்ட மேய்ப்பர்கள் தீவிரமாய் வந்து இயேசுவைக் கண்டார்கள்." (லூக்.2:16)

இந்தச் செய்தி அவர்களைத் துரிதப்படுத்தியது! சகோதரனே, சகோதரியே, தேவனது செய்திகள் உன்னைத் துரிதப்படுத்துகின்றனவா? தேவதூதர்கள் சொன்ன செய்தியை அவர்கள் தேவனது செய்தி என்று நம்பினார்கள். தேவன் உன்னோடு பேசுவதை நீ நம்புகிறாயா? சபையில் போதகர் பேசும்பொழுது கர்த்தர் உன்னோடு பேசுகிறார் என்பதை நீ விசுவாசிக்கின்றாயா? சகோதரனே, சகோதரியே, தேவ செய்தி உண்மையென்றும் அது உனக்காகவென்றும் எடுத்துக்கொள்கிறாயா? வாக்குத்தத்தத்தை மட்டும் உங்களுக்கு எடுத்துக்கொண்டு எச்சரிப்பின் சத்தத்தை தனக்கு அல்ல என்று எடுக்கும் குணம் உங்களுக்குத் தூரமாயிருப்பதாக.

சிலரை 'குதிரை விசுவாசிகள்' என்று அழைக்கலாம். ஏனெனில் புல் என்றால் வாயைத்திறப்பதும், கடிவாளம் என்றால் வாயை மூடிக்கொள்வதுவும் குதிரைதானே. ஆனால் இந்த மேய்ப்பர்களோ, இரட்சகர் உங்களுக்கு இன்று பிறந்திருக்கிறார் என்பதை தங்களுக்கென்றே எடுத்துக்கொண்டனர். இரட்சகர், அதாவது தங்களை விடுவிக்கப்போகிறவர் மாட மாளிகையிலோ கூட கோபுரத்திலோ பிறப்பார் என்று அவர்கள் எண்ணாமல் பிள்ளையைத் துணிகளில் சுற்றியிருப்பார்கள் என்ற அடையாளம் காட்டிய உடன் அந்த ஏழ்மைக்கோலத்தை அலட்சியம் செய்யவில்லை, உடனே இயேசுவைக் காணப் புறப்பட்டனர்.

தங்களைச் சந்திக்க தேவதூதர்கள் வந்தார்களே என்று அவர்கள் மகிழ்ந்தார்கள். இன்று எழுத்தின்படி தேவதூதர்கள் வராமலிருக்கலாம். ஆனால் உன்னை நோக்கி வரும் தேவதூதுகளுக்காக மகிழ்ச்சியடைகிறீர்களா? அவர்கள் பரலோகத்தின் பாட்டிலே அப்படியே பரவசப்பட்டுப் போய்விடவில்லை. தேவதூதர்களைக் கண்ட காட்சியிலே தங்களை மறந்துவிடவில்லை. உடனே செயற்பட்டார்கள், இயேசுவைக் கண்டார்கள்; அவரை உடனே பிரசித்தம் பண்ணினார்கள் (லூக்.2:17).

அவர்கள் மந்தையை விட்டு விட்டு வந்தார்கள். அதுவும் நள்ளிரவில் குளிரில் வந்தார்கள். நீ இயேசுவுக்காக எதை விட்டாய்? அவரைக் காண, பிரசித்தம் பண்ண நீ பட்ட பாடுகள் என்ன? இரவில் வீட்டிற்குத் திருடன் வந்துவிடுவான் என்று நள்ளிரவு ஆராதனைக்குப் போகாமல், வீட்டைக் காவல் காக்கும் விசுவாசியே கொஞ்சம் யோசி. சங்கீதம் 127:2-யை வாசி!

**பெத்லகேம் சென்று வந்த மேய்ப்பர்கள் திரும்பக் கொண்டு வந்தது இரட்சிப்பின் செய்தியை. நீ உலகிற்கு என்ன கொண்டு போகிறாய்?**

**18**
**டிசம்பர்**

# பெத்லகேமில் கிழக்கு நாட்டு ஞானிகள்

"ஏரோதுராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து" (மத்.2:1)

பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமை நோக்கி நடந்தனர். ஞானிகள் என்றாலும் வானசாஸ்திரம் அறிந்தாலும் அவர்கள் வானத்தை உண்டாக்கின தேவனுக்கு தூரமானவர்கள். இப்பொழுது ஒரு இராஜாவின் பிறப்பு தங்களுக்கு அறிவிக்கப்பட்டபடியால் அந்த இராஜாவை அறிந்துக்கொள்ள புறப்பட்டனர். தேவனைப்பற்றி, இயேசுவைப்பற்றி தெளிவான வெளிப்பாடு அவர்களுக்கு இல்லை. ஆனாலும் ஒரு மேசியா வருவார் என்ற பரவலான கருத்து அன்று நிலவியது. அந்த மங்கிய வெளிப்பாட்டில் அவர்கள் மேசியாவைத்தேடி நீண்ட பிரயாணம் செய்தனர்.

சகோதரனே, சகோதரியே, திட்டமான வெளிப்பாடுகளைப் பெற்ற நீ எப்படி இருக்கிறாய்? மத்திய வானில் இயேசு நினையாத வேளையில் வருவார் என்பதை நினைவில் வைத்து வாழ்கிறாயா? மேசியாவை அவர்கள் அன்னியக் கடவுள் என்று எண்ணவில்லை. கடவுளுக்கு அன்னிய நாடு, உள் நாடு என்று தேசியம் கற்பிக்கிறவன் அஞ்ஞானிதானே. பல நூறு கல் தொலைவு நடந்து இரட்சகரைக் காணப்புறப்பட்ட அவர்கள் எவ்வளவு தரிசனம் பெற்றவர்கள்? வேதத்தின் மகத்துவங்களை எழுத்துவடிவில் பெற்ற இன்றைய கிறிஸ்தவர்கள் அவைகளை அந்நிய காரியமாக எண்ணுகிறார்கள். (ஓசியா 8:12)

பல மாதங்களாக காடு, மேடு, மலை, ஆறு, வாவிகள் என்று கடந்து, நடந்து இரட்சகரைக் காண வந்தார்களே. தூர இடத்தில் ஆலயம் இருக்கிறது என்று ஆராதனைக்குச் செல்லாமல் கர்த்தரின் நாளில் எத்தனை முறை விசுவாசிகள் முடங்கிக் கிடக்கிறார்கள்? இரட்சகரைக் கண்ட நீ ஊழியத்திற்காக நடந்தது உண்டா? இரட்சிப்பைப் பிரசித்தம் பண்ணி நாடு, நகரங்களில் நடக்கும் கர்த்தரின் பிள்ளைகளின் பாதங்கள் அழகாகயிருக்கின்றன என்று வேதம் சொல்கிறதே. உங்கள் பாதங்கள் எப்படி இருக்கின்றன? ஞானிகளின் அழகான பாதங்கள் இயேசுவை நோக்கி நடந்தன.

எழுதப்பட்ட வேதம் அவர்கள் கையில் இல்லை. ஆனாலும் அவர்களின் மனசாட்சியில் தெய்வீக வெளிப்பாடு என்ற வெளிச்சம் இருந்தது. கர்த்தரின் கட்டளைகள் எல்லாருடைய மனசாட்சியிலும் எழுதப்பட்டிருந்தன. ஆனால் எப்பொழுதுமே மனசாட்சி வேத வார்த்தையைப் போல சரியான வழிகாட்டியாய் இருக்காது. ஆனாலும் அவர்களது மனசாட்சியில் எழுதப்பட்ட செய்தி அவர்களைப் பெத்லகேமிற்கு இழுத்தது. உன்னை எது இழுக்கிறது?

**வேத சத்தியம் உன்னைக் கிறிஸ்துவிடம் இழுக்கட்டும்.**

19
டிசம்பர்

# ஞானிகள் கண்ட நட்சத்திரம்

"யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம் என்றார்கள்." (மத்.2:2)

வானத்தில் கோடி நட்சத்திரங்கள், ஆனாலும் அவைகளில் ஒன்று இயேசுவின் நட்சத்திரம். அதைக்கண்டு கொண்டதால் அவர்கள் ஞானி. எத்தனையோ நம்பிக்கைகள், அவைகளில் இயேசுவை நம்புவது ஞானம். எத்தனையோ நல்வார்த்தைகள், அவைகளில் தேவனது வார்த்தை ஞானம். நட்சத்திரத்தைக் கண்ட அவர்கள் இயேசுவிற்கு ஜாதகம் பார்க்க உட்கார்ந்த புரோகிதர் கூட்டமல்ல. அந்த நட்சத்திரத்தைப் பின்தொடர்ந்தார்கள். கர்த்தரின் வார்த்தையைப் பின்தொடர்கிறீர்களா அல்லது தேவ ஜனங்கள்போல் சபை நடுவே உட்கார்ந்து போதகரின் குரல் இனிமையானது.. சூப்பர் பிரசங்கம்.. என்று அவரில் மகிழ்ந்துக் கொண்டிருக்கிறீர்களா?

அவருடைய நட்சத்திரம் அவர்களை வழி நடத்திற்று. இன்று அவருடைய வார்த்தை உங்களை நடத்துகிறதா? அவருடைய வழியில் நடக்கிறீர்களா? அவருடைய சத்தத்தைத் தெளிவாய்க் கேட்கிறீர்களா? அவருடைய சிந்தையைப் பற்றிக் கொள்கிறீர்களா? கண் திறக்கப்பட்டவன் என்று தன்னை அறிமுகப்படுத்தி, யாக்கோபில் ஒரு நட்சத்திரம் உதிக்கும். அவரை ஒரு நாள் தரிசிப்பேன் என்ற பிலேயாம், துன்மார்க்கத்தில் கண்களை மூடிவிட்டது நமக்கு ஒரு பாடமாக இருக்கட்டும் (எண்.24:17)

எருசலேம் அருகே வந்தவுடன் நட்சத்திரத்தை மறந்து நகரத்துக்குள் ஞானிகள் நுழைந்தனர். இராஜா என்றால் அவர் தலைநகரத்தில்தான் பிறந்திருப்பார் என்ற மூளை அறிவினால் எருசலேமிற்குள் சென்று யூதருக்கு ராஜாவாகப் பிறந்தவர் எங்கே என்று விசாரித்தனர். சிறுகுழந்தைகள் ஏரோதின் பட்டயத்திற்குப் பலியாயினர். ஞானிகள் செய்த தவறினால் விளைந்த பலன் இது. ஏனெனில் ஞானிகளின் மதிகெட்ட செயலினால்தான் ஏரோது கொடிய கட்டளையைப் பிறப்பித்தான்.

கர்த்தரின் பாதையில் நடக்கும் நீ, பாதை மாறி நடந்தால் உன்னைக் காண்பவர்கள் இடறுவார்கள். நீ செய்யும் தவறு அனேகரைப் பாதிக்கும். ஆகவே ஆவியானவர் காட்டும் பாதையில் நட. நட்சத்திரப் பாதையைத் தவறவிட்டதால் எவ்வளவு கஷ்டம், நஷ்டம் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும்.

**பாதைத் தவறி நடக்காதே; பாதி வழியில் நிற்காதே!**

**20**
டிசம்பர்

# ஞானிகள் கிறிஸ்துவைத் தொழுதார்கள்

"அவர்கள் அந்த வீட்டுக்குள்பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்." (மத்.2:11)

இயேசு இருந்த வீட்டின்மேல் நட்சத்திரம் நின்றது. அதற்கு மேல் வழியும் இல்லை. வழி நடத்துதலும் தேவையில்லை. இயேசுவைக் கண்ட பின்பு இரட்சிப்புக்கு மேற்கொண்டு நடக்க வேண்டாம். இரட்சிப்பில் நீண்ட தூரம் நீ நடக்க வேண்டும். ஆனால் இனி இரட்சிப்பிற்காக நீ நடக்க வேண்டாம். கடைசியில் ஞானிகள் இயேசு இருந்த இடத்திற்கு வந்து சிறுபாலகனாக அவர் இருந்தபோதிலும் தாங்கள் பெற்ற வெளிப்பாட்டினால் அவர்கள் இயேசுவைத் தொழுதுகொண்டனர்.

ஞானம் வார்த்தையான கிறிஸ்துவைத் தொழுதது. ஞானிகள் மட்டுமே பெத்லகேமிற்குச் சென்றார்கள். வேதம் படித்தோர், சத்தியம் தெரிந்தோர் பாரம்பரியத்தில் சுருண்டுவிட்டனர். ஞானிகள் பெத்லகேமில் இயேசுவோடு; உலக ஞானிகள் இயேசு இல்லா உலகத்தோடு. அவர்களது தொழுகை உலகிற்கு இயேசுவை வெளிப்படுத்தியது. அவர்கள் அர்ப்பணித்தவைகள் வெள்ளைப்போளம், தூபவர்க்கம், பொன்.

தூபவர்க்கம் : இயேசுவைத் தொழுதுகொள்ள வேண்டுமென்று காட்டியது. ஆகையால் கர்த்தர் என்று வெளிப்படுத்தியது.

வெள்ளப்போளம்: மரித்த சரீரங்களைப் பாதுகாக்கப் பயன்படுகிறது. ஆகையால் பலியான இரட்சகராகிய இயேசுவை வெள்ளைப்போளம் காட்டுகிறது.

பொன் : இராஜரீகத்தைக் குறிக்கிறது. ஆகையால் இயேசு வரப்போகிற இராஜா, கிறிஸ்து என்று அறிவிக்கிறது. ஆகவே பெத்லகேமில் ஞானிகள் இயேசுவோடு இருக்கும்கொழுது உலகிற்கு அவர்களது தொழுகையும் அர்ப்பணிப்பும் வெளிப்படுத்தின சத்தியம்: அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

உங்கள் தொழுகையும் அர்ப்பணிப்பும் இயேசுவை சிங்காசனத்தில் வீற்றிருக்கும் மாபெரும் மன்னனாகக் காட்டுகிறதா?

**கிறிஸ்துவைக் கண்டடையும் ஞானமே மெய்ஞானம்.**

**21**
**டிசம்பர்**

# தேவ நீதியை நிறைவேற்ற வேண்டும்

"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்." (மத்.3:15)

இயேசு ஞானஸ்நானம் எடுத்தது, நமக்கு முன் மாதிரிக்காக அல்ல. நமக்கு ஞானஸ்நானம் அவசியமாயிருக்கிறதுபோல இயேசு கிறிஸ்துவுக்கு அது அவசியமில்லை. ஞானஸ்நானம் எடுப்பவர்கள் பாவத்திற்கு மரித்து நீதிக்கு உயிர்த்தெழ வேண்டும். இந்த அனுபவம் இயேசுவுக்கு அவசியமில்லை; அவரிடம் இந்த அனுபவம் இருக்கவுமில்லை. பிறகு ஏன் அவர் ஞானஸ்நானம் எடுக்கவேண்டும்? ஏன் எடுத்தார்? ஞானஸ்நானம் என்பது மரணம், உயிர்த்தெழுதல் என்ற அடிப்படையில் உள்ளது. அதாவது ஒருவன் பாவத்திற்கு மரித்து, நீதிக்கு பிழைத்திருப்பதே அந்த அனுபவம். பாவமேயில்லாத இயேசு கிறிஸ்து, தன்னிடம் இல்லாத பாவத்திற்கு மரிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைப்பதே தேவனது நீதி. அப்படியாயின், அவர் எப்படி தேவநீதியை நிறைவேற்றினார்?

இயேசுவினிடத்தில் பாவமில்லாவிட்டாலும் சுயசித்தமுண்டு. இந்த சுயசித்தம் பரிசுத்த சித்தமாக இருந்தபோதிலும், இந்த சுயசித்தத்திற்கு அவர் மரித்து பிதாவின் சித்தத்திற்கே பிழைத்தார். "ஆயினும் என் சித்தமல்ல, உம் சித்தமே" என்று கெத்சமனே தோட்டத்தில் ஜெபித்து சிலுவையில் தேவ நீதியைப் பரிபூரணமாய் முடித்தார். இந்த தேவ நீதியின் துவக்கமே இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானம்.

நம்முடைய முயற்சியினால் கிறிஸ்துவின் வாழ்க்கையை நாம் வாழ முடியாது. பின்பற்றுவதற்கு பத்து கட்டளைகளைவிட இயேசுவின் வாழ்க்கை கடினமானது. நியாயப்பிரமாணத்தின்படி வாழ முடியாத மனிதன் கிறிஸ்துவின் வாழ்க்கையையும் பின்பற்ற முடியாது. அப்படியாயின் கிறிஸ்துவினாலே நாம் எப்படி தேவநீதியை நிறைவேற்றுகிறோம்?

யோர்தான் நதி தொடங்கி கல்வாரி வரையிலுமான கிறிஸ்துவின் மானிட வாழ்க்கையே நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதல். இந்த நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாகிய தேவநீதியை விசுவாசிகளாகிய நாம் ஞானஸ்நானத்தினாலே பெற்றுக்கொள்கிறோம். அதாவது ஞானஸ்நானத்தில் முதலாவது அவரது மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டு, பின்பு அவரது உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்படுகிறோம். இதனால் அவருடைய ஜீவனை நாம் நமக்குள் பெற்றுக்கொள்கிறோம்.

**தேவ நீதியை நிறைவேற்றுகிறவர்கள்**
**தேவ சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறவர்கள்.**

**22**
**டிசம்பர்**

# அறியாமையினால் யோவான் தடை செய்தான்

"யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான்." (மத்.3:14)

ஞானஸ்நானம் பெற வந்த இயேசுவை யோவான் தடை செய்தான். கடவுள் தந்த தகுதியை அறியாததினாலே யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்கத் தடை பண்ணினான். நல்ல எண்ணத்தினாலே இதைச் செய்தபோதிலும் தேவ சித்தத்திற்கு மாறாகவே அவன் செயலிருந்தது. நம்முடைய சிந்தனையின்படி அனேக காரியங்கள் நன்மையாகக் காணப்பட்டாலும் தேவனது பார்வையில் அவை தவறாகவே காணப்படும்.

யோவான் சீக்கிரம் தன் அறியாமையினின்று விடுபட்டான். சகோதரனே, சகோதரியே! உன் அறியாமையின் காலத்தில் தேவன் காணாதவர் போலிருந்தது உனக்கு ஆவிக்குரிய பாதுகாப்பல்ல. 'இப்பொழுது இடங்கொடு' என்று யோவானுக்குச் சொன்ன கர்த்தர், இப்பொழுதோ எல்லா மனுஷரும் மனந்திரும்ப வேண்டும் என்று கட்டளையிடுகிறார். உன் அறியாமையில் அடைக்கலம் தேடிக் கொண்டிராமல் சத்தியத்தைத் தேடு. அது உன்னை விடுதலையாக்கும். அறியாமை இதயத்தை ஆளும்போது போலியான நீதி இதயக் கொலு மண்டபத்தில் அமர்ந்திருக்கும்.

இயேசுவே இரட்சகர் என்று அறியாத பவுல் இதயத்தில், அறியாமை ஆளுகை செய்தபடியால் சபையைப் பாழாக்குவதை அவர் நீதி என்று எண்ணினார். திடீரென்று ஒருநாள் பரலோகத்தின் ஒளி அவர் ஆத்துமாவில் வீசவே, அந்த அறியாமை இருள் அகன்றது. கிறிஸ்தவர்களைச் சிறைபிடித்த அவர், கிறிஸ்துவுக்காய்ச் சிறைபட்டார். எத்தனையோ படித்தும், கற்றும் வல்லுனராய் விளங்கிய பவுல் கிறிஸ்துவைப்பற்றி அறியாமையின் காலத்தில் வாழ்ந்ததால் தன்னை பாவிகளில் பிரதான பாவியென்று அழைத்தார். சகோதரனே! சகோதரியே, உன் அறியாமையில் தொடர்ந்து நடக்காதே.

இயேசுவின் உயர்த்தெழும் வல்லமையை அறியாத பேதுரு "இயேசுவை நான் அறியேன்" என்று தன் அறியாமையை அறிக்கையிட்டு அவரைச் சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான். ஆனால் அறியாமை நீங்கினவுடனே அதே பேதுரு தான் மறுதலித்த இயேசுவையே ஆண்டவரும் கிறிஸ்துவும் என்று அறிக்கையிட்டான்; பிரசங்கம் பண்ணினான். ஆகவே அறியாமை உனக்குப் பாதுகாப்பல்ல. சீக்கிரமாய் அதைவிட்டு வெளியேறு. முழுக்கு ஞானஸ்நானம் எனக்கு தெரியாது... பரிசுத்த ஆவியின் அபிஷேகமா? எனக்குத் தெரியாது... அன்னிய பாஷையா? எனக்குத் தெரியாது... என்று உன் அறியாமையை பறைசாற்றிக் கொண்டிராதே.

**அறியாமை உனக்கு மட்டுமல்ல மற்றவர்களுக்கும் ஆபத்தை உருவாக்கிவிடும்.**

23

டிசம்பர்

# ஆவியானவர் இறங்கினார்

"இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்." (மத்.3:16)

பூமியில் இயேசு தெய்வமாக உருவெடுக்கவில்லை. அவர் மனிதனாக மாறிவிடவில்லை. அவர் மாம்சத்தில் வெளிப்பட்டார். அதே சமயத்தில் அவருடைய தெய்வீகம் அவரைவிட்டு விடைபெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவருடைய ஊழியத்தில் இயல்பாகவே தன்னிடம் அமைந்திருந்த தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தாமல் பரிசுத்த ஆவியானவரால் செயற்படவே தொடங்கினார். இதற்காகவே அவர் மீது ஆவியானவர் இறங்கினார்.

"பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின் மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்." (ஆதி.1:2) ஒழுங்கின்மையும் வெறுமையுமான உலகைச் சீர்படுத்த ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருந்தார். இன்றும் பாவியான மனிதனின் மனசாட்சியில் மனம்திரும்பு என்ற சத்தத்தோடு ஆவியானவர் அசைவாடுகிறார். ஆனால், இயேசுவின் மீது ஆவியானவர் அசைவாடவில்லை. அவர் மீது புறாவைப்போல அமைதியாய் அமர்ந்தார். இயேசுவோடு ஆவியானவர் போராட அவசியமே இல்லை. (He was resting upon Jesus)

இயேசுவின் மீது அமர்ந்த ஆவியானவர் என்ன செய்தார்? "ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர் மேல் தங்கியிருப்பார்" என்று வேதம் சொல்கிறது (ஏசா.11:2) இதன் பொருள் என்ன? இயேசு தனது இயல்பான தெய்வீக ஞானத்தினால், உணர்வினால் செயற்படாமல் பரிசுத்த ஆவியானவர் தரும் ஞானத்தினால், உணர்வினால், ஆலோசனையால் செயற்பட்டார். அவரின் வார்த்தைகளைக் கேட்பவர்களும், பரிசுத்த ஆவியானவர் அருளும் தெய்வ பயத்தினால் தேவ அறிவினால் செயற்படவும் சித்தம் கொண்டார். ஆகவே மனுவுருவில் வெளிப்பட்ட இயேசு பரிசுத்த ஆவியானவரால் தீர்க்கதரிசியாய் செயற்பட்டார். அவர் தனது ஜீவனைக் கொடுத்து சபையின் தலையானார். இப்படி ஜீவனைக் கொடுக்கும் பாடுகளில் பங்கு பெற, ஆவியானவர் அவருக்கு உதவி செய்தார். மாம்சத்தில் வெளிப்பட்டு ஆவியானவரின் அபிஷேகத்தால் இயேசு பலத்த செய்கைகளைச் செய்ததுபோல, தேவபிள்ளையான நீயும் அவரைப் போலவும் அவர் சொன்னபடி அவரிலும் பெரிய கிரியைகளையும் செய்ய முடியும். ஆகவே யோர்தான் நதிக்கரையில் நீ கேட்கும் சத்தம் "ஆவியில் பலப்படு".

**ஆவியில் பலப்படுகிறவர்களே கர்த்தருக்காக பெரிய காரியங்களை செய்ய முடியும்.**

24

டிசம்பர்

# ஆவியானவர் புறாவைப்போல இறங்கினார்

"தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்." (மத்.3:17)

வேதம் கழுகைப் பலத்திற்கு அடையாளமாகக் கூறுகிறது. ஆனால் கழுகு பட்சிக்கிற பறவை. ஆவியானவர் முரட்டுத்தனம் உடையவர் அல்ல. இயேசு சர்வவல்லவர், ஆனால் உலகிலுள்ள முரட்டு சர்வாதிகாரி அல்ல. அவர் மேல் தங்கியிருந்த ஆவியானவர் பணிந்து விடு என்று பலாத்காரம் செய்கிறவர் அல்ல. அடைபட்ட கதவை மெல்லத்தட்டும் அன்புக்கரமே ஆவியானவர். அந்த அன்பின் வல்லமையின் அபிஷேகமே புறா வடிவமாகத் தோன்றியது.

கிறிஸ்துவின் ஆவி கபடற்றது. ஆகவே அவர் மீது ஆவியானவர் புறாவைப்போல இறங்கினார். தேவபிள்ளையே, நீயும் புறாவைப்போல கபடு, வஞ்சகம் இல்லாமல் இரு. புறா ஒரு நேரத்தில் ஒரு பொருளைத்தான் பார்க்கும். இயேசுவும் தன் ஜீவிய காலம் முழுவதும் ஒன்றினையே நோக்கினார் அதாவது பிதாவின் சித்தத்தை மாத்திரமே. சகோதரனே! சகோதரியே, உன் வாழ்நாள் முழுவதும் தேவசித்தத்தையே உன் இலக்காக வைத்திரு. அதனை விட்டு ஒரு நொடிப்பொழுதும் விலகிவிடாதே. ஆனால் பேதையான புறாவைப்போல இருக்காதே. (ஓசி.7:11) தேவ ஞானத்தினால் நிறைந்திரு.

புறாவின் கண்கள் நீர் நிறைந்தவைகள். உன் கண்கள் ஆத்ம பாரத்தால் கலங்கியிருப்பதாக. "உம்முடைய வேதத்தை மனுஷர் காத்து நடவாதபடியால் என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகின்றன" (சங்.119:136) என்கிற வார்த்தைகள் நமது அனுபவங்களாக மாறட்டும். புறாவைப்போல பாவத்தை எண்ணி புலம்பு. "எழுந்திரு, இராத்திரியிலே முதற் சாமத்திலே கூப்பிடு. ஆண்டவரின் சமூகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு." (புல.2:19)

பறவைகளிலேயே பலிப்பொருளாக விளங்குவது புறா மாத்திரமே. (லேவி.1:14) தேவனது பரிசுத்த பிள்ளையே, உன் வாழ்க்கை அவரது பணியில் பலியாகட்டும். "நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது" (2 தீமோ.4:6) என்ற பவுலின் வார்த்தைகள் நம் பரிசுத்த வாழ்க்கையை அர்ப்பணிப்பிற்கு ஆயத்தமாக்கட்டும்.

நோவாவின் காலத்துப் பெருவெள்ள நேரத்தில் "தேவ தண்டனையின் காலம் முடிந்துவிட்டது, புது உலகம் உதயமாகிவிட்டது" என்ற நற்செய்தியை ஒலிவ இலை வழியாய் கொண்டு வந்தது ஒரு புறாவே. நீயும் கிறிஸ்துவின் நற்செய்தியை சிற்றூர், பேரூர், குடிசைகள், மாளிகைகள் இங்கெல்லாம் எடுத்துச் செல்.

**அன்பின் வல்லமையான அபிஷேக வடிவமே புறா.**

| | |
|---|---|
| **25** டிசம்பர் | |

# இம்மானுவேல் என்று பெயரிடுவாயாக

"ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார், இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவான்....." (ஏசாயா 7:14-16)

இம்மானுவேல் என்று இயேசுவுக்கு எப்பொழுது பெயரிட்டார்கள், இயேசு என்று பேரிடுவாயாக என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. இம்மானுவேல் என்று அவருக்குப் பெயரிட்டதாக எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. அப்படியிருக்கும்போது இது இயேசுதான் என்று எப்படி சொல்வது. வேதத்தின் தீர்க்கதரிசனத்தைக் குறித்து ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். சில தீர்க்கதரிசனங்கள் முழுமையாக ஒரே சமயத்தில் நிறைவேறாது. ஒருபகுதி முதலாவதும் இன்னொரு பகுதி பின்னாலும் நடைபெற இருக்கும். (Double occurrence of the prophecy.) இரண்டுமுறை நடைபெறுகிற, நிறைவேறுகிற தீர்க்கத்தரிசனம் என்பது பொருள். இது ஏசாயா தீர்க்கத்தரிசி சொல்லுகிற காலத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை சொல்கிறது.

அதாவது திருமணமாகாத ஒரு பெண் இருக்கிறாள். அந்தப் பெண்ணைச் சுட்டிக்காட்டி இவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொல்கிறார். உலகத்தில் கன்னியின் வயிற்றில் பிறந்தது இயேசுகிறிஸ்து மாத்திரமே அப்படியானால் இந்தக் கன்னிகை யார்? இந்தக் கன்னிகையின் வயிற்றில் பிறந்தது யார்? சற்று கவனியுங்கள். கன்னிப்பெண்ணைப் பார்த்து இந்தப் பெண் திருமணமாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார்கள் என்றார். அவன் வளர்ந்து நன்மை தீமை அறிகிறதற்கு முன்பு இரண்டு இராஜ்ஜியங்கள் விழுந்துபோகும் என்று சொல்லுகிறார். அது இயேசு கிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசனம் அல்ல. அது ஏசாயா காலத்திலே சொல்லப்பட்ட மற்றொரு தீர்க்கதரிசனம். அதன் பிற்பகுதி ஒன்று இருக்கிறது. கன்னிகையாகவே ஒரு பெண், ஒரு குமாரனைப் பெறுவாள். அது மரியாளைக் குறித்த தீர்க்கதரிசனம். அப்போது பிறந்த இயேசு இம்மானுவேல் என்ற அர்த்தத்தைத் தாங்கி வருகிறார். எப்போதும் நம்மோடு இருக்கிறவர் நமது கர்த்தர் என்கிற பொருள்படும்படி அவர் இம்மானுவேலராய் இருக்கிறார்.

அவர் என்னோடு இருக்கிறார். எல்லா சூழ்நிலைகளிலும் எல்லா நெருக்கங்களிலும் எல்லா வெற்றிகளிலும் எல்லாப் பாடுகளிலும் அவர் என்னோடுகூட இருக்கிறார் என்பதுதான் நமக்குப் பெரிய ஆறுதல். இந்த நாட்களில் கிறிஸ்துமஸ்ஸைக் கொண்டாடும்போது எதை அதிகமாக நினைத்து சந்தோஷப்படுகிறீர்கள். உடுத்தியிருக்கிற புத்தாடையா? நல்ல உணவா? வீட்டிற்கு வந்துபோகிற விருந்தாளிகளா? புதிப்பித்துக் கொள்ளும் உறவுகளா? நம்மை ஆவலாயத் தேடிவருகிற நண்பர்களா? இல்லை என்றைக்கும் என்னோடு கூட இருக்கிற இம்மானுவேலாகிய என் கர்த்தரே எனது மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சி எனக்குக் கிடைத்தது அவருடைய பிறப்பின் நிமித்தமே. பெத்லகேமிலே அவர் பிறந்தது நமக்கு மகிழ்ச்சிதான் அந்த மகிழ்ச்சியிலே நீடித்திருப்போமாக.

**இம்மானுவேல் - எப்போதும் நம்மோடிருக்கிறவர்**

**26**
**டிசம்பர்**

# நானே ஜீவ அப்பம்

"நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்." (யோ.6:51)

உலகப் பிரகாரமான ஆசீர்வாதங்களைத் தரும் இயேசுவை மாத்திரம் பிரசங்கித்தால் சபையில் எதிர்ப்புமில்லை, மறுப்புமில்லை. ஆனால் உலகை விட்டுப் பிரிக்கும் தெய்வீக உன்னதங்களைப் பிரசங்க மேடை அறிவித்தால், சபை மக்கள் சபையை விட்டு வெளியேறுகிறார்கள் அல்லது இயேசுவை சபையை விட்டு வெளியே தள்ளுகிறார்கள். அப்பத்தை அள்ளி அள்ளிக் கொடுத்த இயேசுவைச் சுற்றி ஆயிரக்கணக்கான மக்கள். கையில் அப்பங்களோடிருந்த இயேசுவை சிங்காசனத்தில் அமர வைத்து இராஜாவாக்க விரும்பினார்கள். ஆனால், அழிந்துபோகிற அப்பத்திற்காக அல்ல, 'நித்திய வாழ்விற்காக' பிரயாசப்படுங்கள் என்று சொன்ன இயேசுவை, 'நானே ஜீவ அப்பம்' என்று உபதேசித்த அவரை மலை சிகரத்தில் ஏற்றி கீழே தள்ளிவிட எண்ணினார்கள். (லூக்.4:29)

ஆழமான வேத சத்தியங்களுக்குத் தங்கள் இருதயங்களை அடைத்துக்கொண்டார்கள். இம்மைக்காக மாத்திரம் நீ கிறிஸ்துவை விசுவாசித்தால் உலகத்தின் எல்லா மனுஷரைப்பார்க்கிலும் நீ பரிதாபமான மனிதனாய் இருப்பாய். சத்தியம் சில சமயங்களில் உனக்கு விளங்காமலிருக்கலாம். ஆனால் நீ கேட்ட சத்தியத்தை தூக்கி எறிந்துவிடாதே. "உம் தாய்க்கும் தகப்பனுக்கும் ஏன் இப்படிச் செய்தீர்" என்று இயேசுவின் பெற்றோர் அவரைக் கேட்டபொழுது, "நான் என் பிதாவுக்கடுத்தவைகளில் இருக்க வேண்டாமா" என்று கேட்டது விளங்கவில்லை. விளங்காததினாலே மரியாள் தன் மகனின் பதிலைத் தூக்கி எறியவில்லை. அவருடைய தாயார் இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக் கொண்டாள். (லூக்.2:51)

இன்று நீ கேட்கும் சத்தியம் விளங்காமலிருந்கலாம். அதனால் அதை இதயத்திலிருந்து தூக்கி எறிந்துவிடாதே. நீ கேட்ட சத்தியத்தின் மேல் கடவுள் ஒருநாள் வெளிச்சத்தைத் தருவார். அந்த வெளிச்சத்தைப் பெறும்வரை சத்தியத்தை இருதயத்தில் வைத்துவை. சத்தியத்தை நீ தூக்கியெறிந்தால் சத்தியத்திற்கு வெளியே நீ நின்றுவிடுவாய். சத்தியமாகிய இயேசுவையும் வெளியே நிறுத்திவிடுவாய்.

**அப்பத்தினாலே அல்ல,**
**தேவனுடைய வார்த்தையினாலே பிழைப்பாய்.**

**27**
**டிசம்பர்**

# கற்றுக்கொள்ள இயேசு ஆலயம் செல்லவில்லை

"தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெபஆலயத்திலே பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார்." (லூக்.4:16)

புதிதான எந்தச் சத்தியத்தைக் கற்றுக்கொள்ள இயேசு ஜெபாலயத்திற்கு சென்றிருப்பார்? இயேசுவே சத்தியம். எந்தப் புதிய சத்தியத்தையும் கேட்க அவர் ஜெப ஆலயத்திற்குச் செல்லவில்லை. அவர் அறியாதது எதுவுமில்லை. அவருக்கு ஒன்றை அறிவிக்க எந்தவொரு பிரசங்கியும் அங்கு இல்லை. ஆனாலும் இயேசு ஜெப ஆலயத்திற்குச் சென்றார். புதிதாக எதையும் சபையில் சொல்லவில்லை, ஆகவே ஆலயம் செல்ல பிரியமில்லை என்று சொல்லுகிற விசுவாசியே, இயேசு எதையும் புதிதாக அறிய வேண்டாத நிலையிலும் ஆலயம் சென்றது உனக்கொரு முன்மாதிரி இல்லையா? ஆதாமின் வீழ்ச்சி, நோவாவின் மீட்பு, ஆபிரகாமின் அழைப்பு, எலியாவின் எழுச்சி இவைகளையே கேட்டு கேட்டு சலித்து விட்டோம் என்று சொல்லுகிறாயா? எத்தனை முறை கேட்டாலும் இயேசு இவைகளில் சலித்துப் போகவில்லையே!

உன்னிடமிருக்கும் ஆவிக்குரிய தாலந்தை உன் போதகர் பயன்படுத்துவதே இல்லையென்று வருத்தத்தோடு ஆலயம் செல்லாமல் நின்றுவிட்டாயா? தன்னைப்போல பேச எவரும் இல்லாதிருந்தும் இயேசு பிரசங்கம்பண்ண மாத்திரம் ஜெப ஆலயத்திற்குச் செல்லவில்லை. எழுந்து நின்று வேதத்தை வாசித்ததும் அவர் செய்த வேலைதானே. எவரும் செய்யக்கூடிய இந்த எளிய வேலையைத்தான் இயேசு செய்தார். ஞானத்தின் எல்லா பொக்கிஷங்களையும் தனக்குள்ளே பெற்றிருந்த இயேசு இந்த எளிய வேலையைச் செய்ய அங்கு போனார். அவர் கேட்ட பிரசங்கம் எல்லாம் ஏற்கனவே அவர் அறிந்தவைகள்தான். கேட்டவைகளையே திரும்பக் கேட்பதில் நீ அலுத்துப்போகாதே. நீ கேட்ட செய்திகள் பழையவைகளாய் இருப்பினும் பேசுகின்றவர் பழமையாய்ப் போகாத கர்த்தரே.

நீ வேதத்தை ஒவ்வொரு முறை வாசிக்கும் போதும் நீ நாளைய பத்திரிகையை வாசிக்கிறாய் என்பதை நினைவில் வை. நீ சனிக்கிழமைக் கேட்ட செய்தி ஞாயிற்றுக் கிழமையைப் பற்றி உன்னிடம் பேசுகிறது. நீ ஞாயிற்றுக் கிழமை கேட்கும் அதே செய்தி சனிக்கிழமையின் எதிரொலி அல்ல. திங்கட்கிழமையின் முன்னொலி. ஆகவே எல்லா செய்திகளும் உனக்குப் புதுமைதான்.

**கொஞ்சத்திலும் உண்மையாயிரு, கர்த்தரே உயர்த்துவார்.**

**28**
**டிசம்பர்**

# சபை உனக்குப் பாதுகாப்பல்ல

"அவன் ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான்." (லூக்.2:27)

எந்தவொரு மனச்சோர்வினாலோ, பிரச்சனையின் நெருக்கத்திற்காகவோ இயேசு ஜெபாலயத்திற்குச் செல்லவில்லை. ஜெபாலயத்திற்குச் செல்வது அவரது வழக்கம். அது ஆவியின் தூண்டுதலினால் உண்டான பழக்கம். எட்டாம் நாளில் இயேசு சிறு பாலகனாய் ஆலயத்திற்குக் கொண்டுவரப்படும்போது சிமியோன் ஆவியின் ஏவுதலினால் ஆலயத்திற்கு வந்திருந்தான். ஆகையால் அவன் கண்கள் இரட்சண்யத்தைக் கண்டன.

பாரம்பரிய வழக்கத்திற்காக ஆலயத்திற்குச் செல்லாதே. பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலின்படி ஆலயத்திற்குச் செல். ஆலயத்திற்குப் போகாவிட்டால் தேவ தண்டனை வந்துவிடும் என்று ஆலயத்திற்குப் போகாதே. நமது ஆண்டவர் கொடூர சர்வாதிகாரி அல்ல. கர்த்தரின் சமூகத்திற்கு ஒருமுறை வரத்தவறிய தோமாவை ஆண்டவர் தூக்கியெறிந்துவிடவில்லை. அவனை ஆற்றியும், தேற்றியும், கண்டித்தும் தமது சமூகத்தில் சேர்த்துக்கொண்டார்.

சபை அங்கத்தினர் என்பது உனக்கு கௌரவப்பட்டமல்ல. ஆவிக்குரிய யுத்தத்திற்கு அது அழைப்புச்சீட்டு. சாத்தான் சபைக்கு விரோதமாக எழும்பும்போது நீயும் பாதிக்கப்படுவாய். ஏரோது சபைக்கு விரோதமாக எழும்பும்போது யாக்கோபு பட்டயத்தால் வீழ்த்தப்பட்டான். பேதுரு சிறைபிடிக்கப்பட்டான். ஆகவே சபை உனக்குப் பாதுகாப்பு அல்ல.

சமுதாயம் சந்திக்க முடியாத தேவைகளையெல்லாம் சபை சந்திக்க வேண்டும். ஜாதி ஒழிப்பு, ஏற்றத்தாழ்வு இல்லாமை, பொருளாதார சமத்துவம், சமூக ஒற்றுமை, சமூக நீதி இவைகளையெல்லாம் ஒரு சபை தர வேண்டும். அக்கம் பக்கத்து குடிசைகள் பற்றியெரியும்போது சபை தன் உதவும் கரங்களை நீட்ட வேண்டும். பிற வீடுகள் பற்றியெரியும்போதும் நாம் ஆலயத்திற்குள் பத்திரமாய் இருந்து கொண்டு "அக்கினி ஊடாய் நடந்தாலும்" என்று கைத்தட்டிப் பாடிக்கொண்டிருக்கக் கூடாது.

சபை நற்கிரியைகளில், சமூகப்பணிகளில் ஈடுபட வேண்டும். அழகான படிக்கட்டுகளோடு ஆலயம் கம்பீரமாய் அமைந்திருப்பதைப் பார்த்து, படிக்கட்டின் இருமருங்கிலும் அழகான பூச்செடிகளைக் கண்டு மகிழ்ந்திருக்கின்றாயா? ஆலய வளாகத்தில், அங்கே சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கிற சப்பாணி எப்படி உள்ளே வருவான்? அலங்கார வாசலிலேயே அவனை நிறுத்திவிடுகிறாயே? "இயேசுவின் நாமத்தில் எழுந்து நட" என்று பேதுருவைப்போல, யோவானைப் போல சொல்ல முடியாவிட்டாலும் அந்தச் சக்கர நாற்காலியை உள்ளே தள்ளிக்கொண்டு வருவதற்கு வழியாவது செய்கிறாயா?

**சபைக்குத் தூணாயிரு, சபையில் சேர்த்தவர் கர்த்தர் என்பதை மறந்துபோகாதே.**

29
டிசம்பர்

# இயேசு சபைக்கு வெளியே நிற்கிறார்

"இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன்." (வெளி.3:20)

இப்படி இயேசு வாசற்படியிலே நிற்பது இரட்சிக்கப்படாதவனின் இதய வாசற்படியில் அல்ல. சபை வாசலில் இயேசு நிற்கிறார். கூட்டம் நிரம்பியிருக்கும் சபை! வாசலில் இயேசு நிற்கிறார். ஏன்? நாளடைவில் விசுவாசிகளுக்கிடையிலும் பின்மாற்றம் ஏற்பட்டு விசுவாசத்தைவிட்டு விலகிப்போனதினால் கர்த்தரும் சபையை விட்டு வெளியேறிவிட்டார். ஒரு சபையை விட்டு இயேசு வெளியேறி வாசற்படியில் நிற்பது, அந்தச் சபை எவ்வளவு பரிதாபமானது என்பதைக் காட்டுகிறது.

மூத்த குமாரன் வயலில் இருக்க வேண்டிய நேரத்தில் வயலில் இருந்தான்; ஆனால் வீட்டிற்குள் இருக்கவேண்டிய நேரத்தில் வெளியே நின்றான். உள்ளே போக (அவன்) மனதில்லாதிருந்தான். (லூக்.15:28) இன்றும் அனேகர் ஊழிய வயல்களில் இருக்கிறார்கள்; ஆனால் அவர்களுக்கு ஆராதிக்கும் ஸ்தல சபைகள் இல்லை. அவர்கள் வயலில் இருந்தாலும் கடவுளின் வீட்டில் இல்லை. சகோதரனே, நீயும் அனேக ஊழியங்களில் ஈடுபடலாம். ஆனால் ஞாயிற்றுக்கிழமை உன் ஆராதனை ஸ்தலத்தில் நீ இல்லாவிட்டால் நீ வீட்டிற்கு வெளியே நிற்கிறாய். (நான் முழு நேர சுவிசேஷகர்களைச் சொல்லவில்லை) இது நல்லதல்ல.

உன் ஆராதனை ஸ்தலத்தைவிட்டு நீ எங்கேயும் சென்று பிரசங்கம் பண்ணவோ, ஆராதிக்கவோ கூடாது என்று வேதம் சொல்லவில்லை. ஆனால் உன் போதகருக்குத் தெரியாமல், சபை ஒழுங்கை மதியாமல் நீ இரகசியமாய் ஊழிய வயல்களுக்குச் சென்றால் நாளடைவில் ஸ்தல சபைக்கு வெளியே நிரந்தரமாய் நின்று விடுவாய். மூத்த குமாரன் ஏன் வெளியே நிற்கிறான்? வயலில் வேலை செய்ய மிகுதியும் ஆசை உண்டு. ஆனால் வீட்டில் தகப்பனுக்குப் பிரியமாய் வாழ அவனுக்கு மனமில்லையே! வயலில் பயிர்கள் செழித்து வளர்வதில் அவனுக்கு இருந்த அக்கறை, தன் வீட்டில் இரட்சிப்பின் தோட்டத்தில் தன் தம்பி இரட்சண்ய மலராக மலர்ந்ததைப்பற்றி அக்கறையில்லையே!

கொழுத்த கன்றின் மீதுள்ள ஆர்வம் மெலிந்த தம்பியின் மீது இல்லையே! சினேகிதரோடு இருக்க வேண்டும் என்ற ஆர்வம் சகோதரனோடு இருக்க வேண்டும் என்று இல்லையே! ஆகவே அவன் வீட்டிற்கு வெளியே நின்று விட்டான். அவன் மாத்திரமல்ல, அவன் தகப்பனையும் வெளியே கொண்டுவந்து நிறுத்திவிட்டானே. நம்முடைய மாம்சீகமான கிரியைகள் நமது பரமபிதாவை வெளியே நிறுத்திவிடுமே. ஆகையால் எச்சரிக்கையாயிருப்போம்.

**ஏன் இயேசு வெளியே நிற்கிறார்?**

30

டிசம்பர்

# இயேசு இருந்த இடத்தில் வல்லமை வெளிப்படும்

"இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள்." (அப்.2:37)

இயேசு இருந்த ஜெப ஆலயத்தில் ஆவிக்குரிய வல்லமை வெளிப்படும். அவர் இருக்கும் இடத்தில் மனிதனின் மறைவான சிந்தனைகள் வெளிப்படுத்தப்படும். சிமியோன் ஏற்கனவே சொல்லியிருக்கிறார், "அனேகருடைய இதய சிந்தனைகள் வெளிப்படும்படியாக இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்." (லூக்.2:34) இயேசுவை ஏற்றுக்கொள்வதும் தள்ளுவதும் ஒரு மனிதனின் மறைவான சிந்தனைகள் என்ன என்பதை வெளியரங்கமாக்கும்.

"எலியாவின் நாட்களிலே கொடிய பஞ்சம் ஏற்பட்டபொழுது இஸ்ரவேலில் எந்த விதவையிடத்திலுமல்ல, சரெப்தா ஊரிலிருந்த விதவையிடமே அவன் அனுப்பப்பட்டான். உங்களில் ஒருவர் வீட்டிற்கும் இஸ்ரவேலின் தீர்க்கத்தரிசி அனுப்பப்படவில்லை. உங்களில் அனேக தொழு நோயாளிகள் அன்று இருந்தும் சீரியா தேசத்து நாகமானே கர்த்தரால் சுகமாக்கப்பட்டான். ஆகையால் இஸ்ரவேலர் என்ற மாம்சீகப் பெருமையில் இருக்காதீர்கள்" என்று அவர் சொன்னதும் அவர்களது சிந்தனைகள் கோப வெறிகொண்டு எழுந்தன.

பேதுரு இயேசுவைப்பற்றி பிரசங்கம் பண்ணும்பொழுது கேட்டவர்கள் இருதயத்தில் குத்துண்டவர்களாக அவரை ஏற்றுக்கொண்டனர். ஒன்றில் கிறிஸ்துவுக்காக எழுவார்கள் அல்லது அவருக்கு எதிராக எழுவார்கள். பவுல் பிரசங்கம் பண்ணும்பொழுது கலகம் ஏற்பட்டது. ஸ்தேவான் பிரசங்கம் பண்ணும்பொழுது கற்கள் எறியப்பட்டன.

இன்று மக்கள் அமைதியாயிருக்கிறார்களா? கண்ணீர்விட்டு கதறி கர்த்தரே தெய்வம் என்று ஓடிவருகிறார்களா? ஒன்றுமே நடக்காவிட்டால் இயேசு அங்கே இல்லவே இல்லை!

**உன்னைக் குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சிரிக்கையாயிரு.**

31
டிசம்பர்

# சூறாவளியின் வாடா மலர்

"நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்" (யோபு 1:21)

ஒரே நாளில் அவனது பத்துபிள்ளைகளும் செத்து மடிந்தனர். விருந்து சாலை மரணப்பள்ளத்தாக்காக மாறிவிட்டது. கால்நடைச் செல்வங்கள் அனைத்தும் கொள்ளையாயின. வேலைக்காரர்கள் அக்கினிக்கு இரையாயினர். இப்படி யோபு எல்லாவற்றையும் இழந்தான். மரணம் தன் கோரக்கரத்தால் யோபுவின் வீட்டை அசைத்துவிட்டது. யோபுவின் இதயம் உடைந்தது.

விசுவாசம் என்பது உணர்ச்சியற்ற வாழ்க்கை அல்ல. யோபு தன் ஆடைகளைக் கிழித்தான் தலையைச் சிரைத்தான். தரையிலே வீழ்ந்தான். அவனது சஞ்சலமும் ஒரு அளவுக்குத்தான். அவன் துக்கம் தரையில் அவனை விழச்செய்தது. அது மிகவும் மிதமிஞ்சி அவனைத தரைக்குக் கிழே கொண்டு போகவில்லை. அவன் ஆவி கலங்கவில்லை. "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்" என்று கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்தினான்.

கடவுள் ஒன்றினைத் தரும்பொழுது இதனைத் திரும்ப எடுத்துக்கொள்ள எனக்கு உரிமை உண்டு என்று சொல்லித்தான் தருகிறார். இவ்வுலகத்திலே "நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும் நாம் அனுபவிக்கிறதற்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள கடவுள் மேல் நம்பிக்கை வையுங்கள்" (1தீமோ 6:17) என்ற அறிவுரை மங்காத விளக்காக எரியட்டும். அழிவு, மரணம், திகில் அவைகளுக்கு மத்தியில் ஸ்தோத்திரம் என்ற நறுமணத்தோடு கர்த்தரின் தோட்டத்தில் வாடாத மலர். காரணம் அவனது அஸ்திபாரம் கர்த்தர் பேரில் உள்ள விசுவாசமே.

ஒரு வரலாற்றுச் சம்பவத்தைச் சுட்டிகாட்ட விரும்புகிறேன் அமெரிக்காவில் உலக வர்த்தகக் கட்டிடங்கள் தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டு நூற்றுக்காணக்கான மக்கள் மரணத்தைத் தழுவினர். பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள செல்வங்கள் எரிந்து அழிந்தன. உலகைப்பிரமிக்க வைத்த வர்த்தக மாளிகைகள் தரைமட்டமாயின அப்பொழுது அஞ்சாத விரரான அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் கூறிய வார்த்தைகள்

"The structure is gone; we have the foundation;
Let us build it again – Yes! The foundation is Christ Jesus."


யோபு வாழ்க்கைக் கட்டடத்தை இழந்தான்; ஆனால் அஸ்திபாரமாக கடவுள் நம்பிக்கையை அவன் இழக்கவில்லை. ஆகவே அவன் வாடாத மலராக விளங்கினான்.

**கர்த்தர் எனது வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால்
நான் அசைக்கப்படுவதில்லை.**

# Notes

# Notes

## நூலைப்பற்றி



கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாய் இருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு. தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வது எல்லாம் வாய்க்கும் (சங்கீதம் 1:2,3) ஒருவன் செய்தெல்லாம் வாய்க்க வேண்டுமென்றால் அவன் வேதத்தை தியானிக்க வேண்டும்.

இந்த நூல் நம்முடைய தியானத்துக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும்.....

உதாரணமாக...

"மிகவும் கொள்ளையுடைமையைக் கண்டுபிடிக்கிறவன் மகிழுகிறதுபோல, நான் உமது வார்த்தையின் பேரின் மகிழுவேன்." (சங். 119:162) குப்பையும், கூளமுமாக சிதறிக்கிடக்கும் ஓர் சாதாரண தரையைத் தோண்டும்போது விலையேறப்பெற்ற ஓர் பொக்கிஷத்தை ஒருவன் கண்டெடுத்தால் அவன் மிகவும் சந்தோஷம் அடைவான் அல்லவா! அதுபோல வேதப் புத்தகத்தில் சிதறிக்கிடக்கும் வேத எழுத்துக்களை ஆவியானவர் துணை கொண்டு தியானித்தால் ஆவிக்குரிய பெரும் பொக்கிஷத்தைக் கண்டுப்பிடிக்கலாம். இப்படி கண்டுபிடித்தவர்களின் சந்தோஷமே உண்மையான சந்தோஷம்.

இந்தப் பொக்கிஷங்களாகிய ஐஸ்வர்யத்தை நாம் அனுதின வேத தியானத்தில் பெறுகிறோமா? அல்லது கடற்கரையில் ஓர் சிப்பியையும் ஓர் கூழாங்கல்லையும் எடுத்து விளையாடும் குழந்தையைப்போல மேலோட்டமாக ஓர் வசனத்தை வாக்குத்தத்தமாக எடுத்து மகிழ்கிறோமா? ஆவியானவர்தான் வசனத்தைத் தரவேண்டும். மனோவாஞ்சை நமக்கு ஓர் வசனத்தைத் தரக்கூடாது. மனோவாஞ்சையின் வசனங்கள் நமக்கு ஏமாற்றத்தையே தரும்; நம் மகிழ்ச்சியை பறித்துவிடும்.


**சத்திய முழக்கம் ஊழியங்கள்**

நெ.22, முதலாம் மேற்கு குறுக்குச்சாலை,
மேற்கு காந்தி நகர், வேலூர் - 6.
**0416 - 2243554, 98430 43554.**